ஶ்ரீ

பின்பழகியபெருமாள்ஜீயர்

அருளிச் செய்த

# ஆ று யி ர ப் ப டி

# குருபரம்பராப்ரபாவம்.

## குருபரம்பராவிவரண மென்கிற

அருமையான கிரந்தத்துடன்

சே. கிருஷ்ணமாசாரியர் பதிப்பு

விலை ரூ. 2—8—0.

திருவல்லிக்கேணி

நோபில் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

1927



## விஷயசூசிகை.

### குருபரம்பராப்ரபாவம்.

## க்ரந்தாக்ஷரங்கள்.

𑌅 𑌆 𑌇 𑌈 𑌉 𑌊 𑌋 𑍠 𑌏 𑌐 𑌓 𑌔 𑌅𑌂 𑌅𑌃


𑌕 𑌖 𑌗 𑌘 𑌙 𑌚 𑌛 𑌜 𑌝 𑌞 𑌟 𑌠 𑌡 𑌢 𑌣 𑌤 𑌥 𑌦 𑌧 𑌨

𑌪 𑌫 𑌬 𑌭 𑌮 𑌯 𑌰 𑌲 𑌵 𑌶 𑌷 𑌸 𑌹 𑌳 𑌕𑍍𑌷

𑌕 𑌕𑌾 𑌕𑌿 𑌕𑍀 𑌕𑍁 𑌕𑍂 𑌕𑍃 𑌕𑍄 𑌕𑍇 𑌕𑍈 𑌕𑍋 𑌕𑍌 𑌕𑌂 𑌕𑌃

𑍁 𑍁 𑍂 𑍃 𑍄 𑍈

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# குருபரம்பராப்ரபாவத்தனியன்கள்.

---

### ஸ்ரீ நம்பெருமா ளருளிச்செய்தது.

𑌶𑍍𑌰𑍀𑌶𑍈𑌲𑍇𑌶𑌦𑌯𑌾𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌧𑍀𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌗𑍁𑌣𑌾𑌰𑍍𑌣𑌵𑌮𑍍 ।
𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌪𑍍𑌰𑌵𑌣𑌂𑌵𑌨𑍍𑌦𑍇 𑌰𑌮𑍍𑌯𑌜𑌾𑌮𑌾𑌤𑌰𑌂 𑌮𑍁𑌨𑌿𑌮𑍍 ॥

ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம் -
யதீந்த்ரப்ரவணம்வந்தே ரம்யஜாமாதரம்முநிம்.

### ஸ்ரீகூரத்தாழ்வா னருளிச்செய்தது.

𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑌾𑌥𑌸𑌮𑌾𑌰𑌮𑍍𑌭𑌾𑌂 𑌨𑌾𑌥𑌯𑌾𑌮𑍁𑌨𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌮𑍍 ।
𑌅𑌸𑍍𑌮𑌦𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌾𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇𑌗𑍁𑌰𑍁𑌪𑌰𑌮𑍍𑌪𑌰𑌾𑌮𑍍 ॥

லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம் -
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தேகுருபரம்பராம்.

𑌯𑍋𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌚𑍍𑌯𑍁𑌤 𑌪𑌦𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌯𑍁𑌗𑍍𑌮𑌰𑍁𑌕𑍍𑌮
𑌵𑍍𑌯𑌾𑌮𑍋𑌹𑌤𑌸𑍍𑌤 𑌦𑌿𑌤𑌰𑌾𑌣𑌿 𑌤𑍃𑌣𑌾𑌯𑌮𑍇𑌨𑍇 ।
𑌅𑌸𑍍𑌮𑌦𑍍𑌗𑍁𑌰𑍋𑌰𑍍𑌭𑌗𑌵𑌤𑍋𑌽𑌸𑍍𑌯𑌦𑌯𑍈𑌕𑌸𑌿𑌨𑍍𑌧𑍋𑌃
𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌸𑍍𑌯 𑌚𑌰𑌣𑍌𑌶𑌰𑌣𑌂𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥

யோநித்யமச்யுதபதாம்புஜயுக்மருக்ம
வ்யாமோஹதஸ்ததிதராணித்ருணயமேநே -
அஸ்மத்குரோர்பகவதோऽஸ்யதயைகஸிந்தோ
ராமாநுஜஸ்யசரணௌசரணம்ப்ரபத்யே.

ஸ்ரீயாளவந்தாரருளிச்செய்தது.

[illegible]

மாதாபிதாயுவதயஸ்தநயாவிபூதிஸ்
ஸர்வம்யதேவநியமேநமதந்வயாநாம் -
ஆத்யஸ்யந꞉குலபதேர்வகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரியுகளம்ப்ரணமாமிமூர்த்நா.

ஸ்ரீதிருக்குருகைப்பிரான் பிள்ளானருளிச்செய்தது.

[illegible]

பூதம்†ஸரஶ்சமஹதாஹ்வயபட்டநாத
ஸ்ரீபக்திஸாரகுலஶேகரயோகிவாஹாந் -
பக்தாங்க்ரிரேணுபரகாலயதீந்த்ரமிஶ்ராந்
ஸ்ரீமத்பராங்குஶமுநிம்ப்ரணதோ஽ஸ்மிநித்யம்.

[illegible]

காதம்பங்கஜநேத்ரராமயமுநாவாஸ்தவ்யமாலாதராந்
யோகீந்த்ரம்குருகேஶசந்த்ரஜலதிம்கோவிந்தசூராதிபௌ -
பட்டார்யம்நிகமாந்தயோகிஜநகதாசார்யௌலக்ருஷ்ணத்வயௌ
வந்தேமாதவபத்மநாபஸௌமந꞉கோலேஶதேவாதிபாந்.

---

† ஸரஸ்ய என்றும் பாடம்.



[illegible]

நமோவேதாந்தவேத்யாய ஜகந்மங்களஹேதவே -
யஸ்யவாகம்ருததாஸார பூரிதம்புவநத்ரயம்.

[illegible]

வேதாந்தவேத்யாம்ருதவாரிராஶே꞉
வேதார்த்தஸாராம்ருதபூரமக்ர்யம் -
ஆதாயவர்ஷந்தமஹம்ப்ரபத்யே
காருண்யபூர்ணம்கலிவைரிதாஸம்.

[illegible]

ஸ்ரீமத்க்ருஷ்ணஸமாஹ்வாய நமோயாமுநஸூநவே -
யத்கடாக்ஷைகலக்ஷ்யாணாம் ஸுலப꞉ஶ்ரீதரஸ்ஸதா.
ஸ்ரீக்ருஷ்ணபாதபாதாப்ஜே நமாமிஶிரஸாஸதா -
யத்ப்ரஸாதப்ரபாவேந ஸர்வஸித்திரபூந்மம.

[illegible]

லோகாசார்யாயகுரவே க்ருஷ்ணபாதஸ்யஸூநவே -
ஸம்ஸாரபோகிஸந்தஷ்ட ஜீவஜீவாதவேநம꞉.

[illegible]

நமஶ்ஶ்ரீஶைலநாதாய குந்தீநகரஜந்மநே -
ப்ரஸாதலப்தபரம ப்ராப்யகைங்கர்யஶாலிநே.

𑌶𑍍𑌰𑍀𑌶𑍈𑌲𑍇𑌶𑌦𑌯𑌾𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌧𑍀𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌗𑍁𑌣𑌾𑌰𑍍𑌣𑌵𑌮𑍍 ।
𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌪𑍍𑌰𑌵𑌣𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌰𑌮𑍍𑌯𑌜𑌾𑌮𑌾𑌤𑌰𑌂 𑌮𑍁𑌨𑌿𑌮𑍍 ॥

ஸ்ரீஶைலேஶதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம்-
யதீந்த்ரப்ரவணம்வந்தே ரம்யஜாமாதரம்முநிம்.

---

𑌵𑌾𑌤𑍍𑌸𑌲𑍍𑌯𑌸𑍌𑌶𑍀𑌲𑍍𑌯𑌗𑍁𑌣𑌾𑌮𑍍𑌬𑍁𑌰𑌾𑌶𑌿𑌂
𑌵𑌕𑍍𑌤𑌾𑌰𑌮𑌰𑍍𑌥𑌂 𑌦𑍍𑌰𑌵𑌿𑌡𑌶𑍍𑌰𑍁𑌤𑍀𑌨𑌾𑌂 ।
𑌶𑍍𑌰𑍀𑌦𑍇𑌵𑌰𑌾𑌟𑍍𑌪𑍁𑌤𑍍𑌰𑌪𑌦𑍈𑌕𑌨𑌿𑌷𑍍𑌠𑌂
𑌯𑌜𑍍𑌞𑍇𑌶𑌸𑍂𑌰𑌿𑌂 𑌮𑍁𑌨𑌿𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌮𑌃 ॥

வாத்ஸல்யஸௌஶீல்யகுணாம்புராஶிம்
வக்தாரமர்த்தந்த்ரவிடஶ்ருதீநாம் -
ஸ்ரீதேவராட்புத்ரபதைகநிஷ்டம்
யஜ்ஞேஶஸூரிம்முநிமாஶ்ரயாம:.

𑌕𑌵𑌿𑌤𑍍𑌵𑌂𑌸𑌿𑌦𑌯𑌾𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌕𑌂 ।
𑌅𑌜𑍍𑌞𑌾𑌤𑌜𑍍𑌞𑌾𑌪𑌕𑌂 𑌪𑍁𑌂𑌸𑌾𑌂 𑌅𑌸𑍍𑌮𑌦𑍍𑌦𑍇𑌶𑌿𑌕𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑍇 ॥

கவித்வம்ஸிதயாபாத்ரம் பஶ்சாத்ஸுந்தரஸம்ஜ்ஞிகம்-
அஜ்ஞாதஜ்ஞாபகம்பும்ஸாம் அஸ்மத்தேஶிகமாஶ்ரயே.

𑌶𑌠𑌾𑌰𑌿𑌮𑍁𑌖𑌨𑌿𑌸𑍍𑌸𑍃𑌤 𑌦𑍍𑌰𑌵𑌿𑌡𑌵𑍇𑌦𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌹𑌕𑌂
𑌸𑍍𑌵𑌪𑌕𑍍𑌷𑌜𑌨𑌰𑌕𑍍𑌷𑌣 𑌕𑍍𑌷𑌮𑌕𑍃𑌪𑌾𑌰𑍍𑌦𑍍𑌰𑌸𑌦𑍍𑌵𑍀𑌕𑍍𑌷𑌣𑌂 ।
𑌸𑍍𑌵𑌸𑍂𑌕𑍍𑌤𑌿𑌰𑌚𑌨𑍋𑌜𑍍𑌜𑍍𑌵𑌲 𑌗𑍁𑌰𑍂𑌪𑌰𑌮𑍍𑌪𑌰𑌾𑌵𑍈𑌭𑌵𑌂
𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌪𑌦𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌂 𑌤𑌮𑌵𑌰𑌜𑌾𑌰𑍍𑌯𑌂 𑌭𑌜𑍇 ॥

ஶடாரிமுகநிஸ்ஸ்ருதத்ரவிடவேதநிர்வாஹகம்
ஸ்வபக்தஜநரக்ஷணக்ஷம†க்ருபாத்தஸத்வீக்ஷணம் -
ஸ்வஸூக்திரசநோஜ்ஜ்வலத்குருபரம்பராவைபவம்
யதீந்த்ரபதஸம்ஶ்ரயந்தமவராங்கரம்யம்பஜே.

---

† 'க்ருபாலஸத்வீக்ஷணம்' என்றும் பாடம்.

ஸ்ரீ

பின்பழகராம்பெருமாள்சீயர் †

அருளிச்செய்த

# குருபரம்பரா ப்ரபாவம்.

## ப்ரவேஶம்.

ஸ்ரீய:பதியாய், ஸ்ரீவைகுண்டநிகேதநனாய், ஸ்ரீமதநந்தமுகநித்யஸூரிபரிஷந்நிஷேவ்யமாணனாய், அவாப்தஸமஸ்தகாமனாய், அகில மங்கள குணஸ்வரூபனான ஸர்வேஶ்வரன், (க) "க்ஷயந்தமஸ்ய ரஜஸ: பராகே" என்றும், (உ) "த்ரிபாதஸ்யாம்ருதந்திவி" என்றும், (ங) "ததக்ஷரே பரமே வ்யோமந்" என்றும், (ச) "யோ அஸ்யாத்யக்ஷ: பரமே வ்யோமந்" என்றும், (ரு) "தத்விஷ்ணோ: பரமம்பதம் ஸதா பஶ்யந்தி ஸூரய:" என்றும் ஸகலஜகத்திதாநுஶாஸந ப்ரவ்ருத்தங்களான நிகிலநிகமாந்தஸஹஸ்ரங்களிலும்; (சா) "வைகுண்டே து பரே லோகே ஶ்ரியா ஸார்த்தஞ்ஜகத்பதி: - ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா பக்தைர்ப்பாகவதைஸ்ஸஹ" என்றும், (எ) "வைகுண்டே து பரே லோகே ஸ்ரீஸஹாயோ ஜநார்த்தந: - உபாப்யாம் பூமிநீளாப்யாம் ஸேவித: பரமேஶ்வர:" என்றும், (அ) "அத்யர்க்காநலதீப்தந்தத் ஸ்தாநம் விஷ்ணோர்மஹாத்மந: - ஸ்வயைவப்ரபயா ராஜந் துஷ்ப்ரேக்ஷந்தேவ

---

(க) "𑌕𑍍𑌷𑌯𑌨𑍍𑌤𑌮𑌸𑍍𑌯 𑌰𑌜𑌸𑌃 𑌪𑌰𑌾𑌕𑍇" (உ) "𑌤𑍍𑌰𑌿𑌪𑌾𑌦𑌸𑍍𑌯𑌾𑌮𑍃𑌤𑌂 𑌦𑌿𑌵𑌿" (ங) "𑌤𑌦𑌕𑍍𑌷𑌰𑍇 𑌪𑌰𑌮𑍇 𑌵𑍍𑌯𑍋𑌮𑌨𑍍" (ச) "𑌯𑍋 𑌅𑌸𑍍𑌯𑌾𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌃 𑌪𑌰𑌮𑍇 𑌵𑍍𑌯𑍋𑌮𑌨𑍍" (ரு) "𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌪𑌦𑌂 𑌸𑌦𑌾 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑍂𑌰𑌯𑌃" (சா) "𑌵𑍈𑌕𑍁𑌣𑍍𑌠𑍇 𑌤𑍁 𑌪𑌰𑍇 𑌲𑍋𑌕𑍇 𑌶𑍍𑌰𑌿𑌯𑌾 𑌸𑌾𑌰𑍍𑌧𑌂 𑌜𑌗𑌤𑍍𑌪𑌤𑌿𑌃 । 𑌆𑌸𑍍𑌤𑍇 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌭𑌕𑍍𑌤𑍈𑌰𑍍𑌭𑌾𑌗𑌵𑌤𑍈𑌸𑍍𑌸𑌹 ॥" (எ) "𑌵𑍈𑌕𑍁𑌣𑍍𑌠𑍇 𑌤𑍁 𑌪𑌰𑍇 𑌲𑍋𑌕𑍇 𑌶𑍍𑌰𑍀𑌸𑌹𑌾𑌯𑍋 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨𑌃 । 𑌉𑌭𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌭𑍂𑌮𑌿𑌨𑍀𑌲𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌸𑍇𑌵𑌿𑌤𑌃 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 ॥" (அ) "𑌅𑌤𑍍𑌯𑌰𑍍𑌕𑌾𑌨𑌲𑌦𑍀𑌪𑍍𑌤𑌂 𑌤𑌤𑍍 𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑍍𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 । 𑌸𑍍𑌵𑌯𑍈𑌵 𑌪𑍍𑌰𑌭𑌯𑌾 𑌰𑌾𑌜𑌨𑍍 𑌦𑍁𑌷𑍍𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑌂 𑌦𑍇𑌵𑌦𑌾𑌨𑌵𑍈𑌃 ॥"

† 'பின்பழகிய பெருமாள் சீயர்' என்றும் வழங்குவர்.

தாகவை:'' என்றும், (க) "ஆக்ரீடாவிவிதாராஜந் பத்மிந்யச்சாமலோதகா: - ஏதேவைநியாஸ்தாத ஸ்தாநஸ்யபரமாத்மந:'' என்றும், (உ) "காலம்ஸபசதேயத்ர நகாலஸ்தத்ரவைப்ரபு:'' என்றும், (௩) "கலாமுஹூர்த்தாதிமயச்சகாலோநயத்விபூதே:பரிணாமஹேது:'' என்றும், (௪) "அண்டகோஶாத்ஸாவரணாத் அமுஷ்மாத்பரதப்ரபோ - ஸ்திதோऽஹம்பரமேவ்யோமந்யப்ராக்ருதஶரீரவாந்'' என்றும், (௫) "யத்தத்புராணமாகாஶம் ஸர்வஸ்மாத்பரமந்த்ருவம் - யத்பதம்ப்ராப்யதத்வஜ்ஞா: முச்யந்தேஸர்வகில்பிஷை:'' என்றும், (௬) "அண்டேப்ய: பரதோநித்யம் த்ரிபாதேநவிராஜதே - இதரேணதுபாதேந ப்ராக்ருதேऽண்டேவிராஜதே'' என்றும், இத்யாதியான யோகயாஜ்ஞவல்க்ய பஞ்சமவேத புராணரத்ந ஸமுதஞ்சித ப்ராமாண்ய பாஞ்சராத்ராதி வசநஸஞ்சயங்களிலும்; *மயர்வறமதிநலமருளப்பெற்ற ஆழ்வார்களாலே "நலமந்தமில்லதோர்நாடு'' என்றும், "சுடரொளியாய் நின்ற தன்னுடைச்சோதி'' என்றும், "தெளிவிசும்புதிருநாடு'' என்றும், "மாகவைகுந்தம்'' என்றும், "தெளிதாகிய சேண்விசும்பு'' என்றும் இத்யாதி வாக்யசதங்களிலும் அறுதியிடப்பட்ட அளவிறந்த ஏற்றத்தையுடைத்தாய், (எ) "குணை:ப்ரதாநம்புருஷ:பரம்பதம் பராத்பரம் ப்ரஹ்மசதேவிபூதய:'' என்றும், (அ) "பரமயோகிவாங்மநஸாऽபரிச்சேத்யஸ்வரூபஸ்வபாவ'' என்றுதொடங்கி (௯) "நிரதிஶயவைகுண்டநாத'' என்றும், (௧௦) "காலாதிகாதவபராமஹதீவிபூதி:'' என்றும்,

(க) [illegible] (உ) [illegible] (௩) [illegible] (௪) [illegible] (௫) [illegible] (௬) [illegible] (எ) [illegible] (அ) [illegible] (௯) [illegible] (௧௦) [illegible]



(க) "யத்தூரேமநஸோயதேவதமஸ:பாரே யதத்யத்புதம்'' என்றும் ஸர்வபூர்வதேசிகஸ்தோமப்ரஶஸ்தமாய், இப்படி வேதாந்தங்களாலும் ருஷிகளாலும்ஆழ்வார்களாலும் ஆசார்யர்களாலும் ஏககண்டமாக ப்ரதிபாதிக்கப்பட்ட ப்ரபாவாதிஶயத்தையுடைய பரமபதத்திலே,— (உ) "ப்ராகாரைச்ச விமாநைச்ச ஸௌதைரத்நமயைர்வ்ருதா'' என்றும், (௩) "மணிதோரணசித்ராட்யாவிசித்ரத்வஜ † ஶாலிநீ'' என்றும்; (௪) "சோடிவைச்வாநரப்ரக்யக்ருஹபங்க்திபிராவ்ருதா'' என்றுஞ் சொல்லுகிறபடியே *கொடியணிநெடுமதிள்களையும் கோபுரங்களையுமுடைத்தான திருப்படைவீட்டிலே; மணிமாடமாளிகைகளாலே சூழப்பட்ட *செம்பொன்செய்கோயிலிலே; (௫) "ஸஹஸ்ரஸ்தூணேவிசித்ரேத்ருட உக்ரேயத்ரதேவாநாமதிதேவஆஸ்தே'' என்றும், (௬) "மத்யேதுமண்டபேதிவ்யே ராஜாஸ்தாநம் மஹாச்ரயம் - மாணிக்யஸ்தம்பஸாஹஸ்ரஜுஷ்டம் ரத்நமயம்ஶுபம் - நித்யமுக்தைஸ்ஸமாகீர்ணம் ஸாமகாநோபஶோபிதம் - ‡ அதீவதத்ஸதாபூர்ணம்'' என்றும், "மாமணிமண்டபத்தந்தமில்பேரின்பத்து'' என்றுஞ் சொல்லப்பட்ட ஆநந்தைகார்ணவமான திருமாமணி மண்டபத்திலே; பர்யங்கவித்யாதிப்ரத்யோதித அநவத்ய மாஹாத்ம்யத்தையுடைய திவ்யாஸ்தாநமண்டபத்திலே; உபயவிபூதியுந் தொழிலாக வகுப்புண்டு * கோப்புடைய சீரிய சிங்காசநத்திலே, (எ) "ஹிரண்மயே பரேகோஶே விரஜம் ப்ரஹ்மநிஷ்களம் - தச்சுப்ரம் ஜ்யோதிஷாஞ் ஜ்யோதிஸ் தத்யதாத்மவிதோவிது:'' ‡ என்றும்

(க) [illegible] (உ) [illegible] (௩) [illegible] (௪) [illegible] (௫) [illegible] (௬) [illegible] (எ) [illegible]

† 'மாலுநீ' என்றும் பாடம். ‡ 'அதீவதத்பதம்புண்யம்' என்றும் பாடம்.

(க) "நதத்ரஸூர்யோபாதி நசந்த்ரதாரகம்நேமாவித்யுதோபாந்திகுதோऽயமக்நி:-தமேவபாந்தமநுபாதிஸர்வம் தஸ்யபாஸாஸர்வமிதம்விபாதி" என்றும்(உ) "திவிஸூர்யஸஹஸ்ரஸ்யபவேத்யுகபதுத்திதா-யதிபாஸ்ஸத்ருஶீஸாஸ்யாத்பாஸஸ்தஸ்ய மஹாத்மந:" என்றும், (ந) "ஸ்ரக்வஸ்த்ராபரணைர்யுக்தம்ஸ்வாநுரூபைரநுபமை:-சிந்மயைஸ்ஸ்வப்ரகாஶைஶ்சாந்யோந்யருசிரஞ்ஜிதை:"என்றும்,"சுழிபட்டோடுஞ் சுடர்ச்சோதி வெள்ளம்" என்றும், "சோதிவெள்ளத்தினுள்ளே எழுவதோருரு" என்றும் சொல்லுகிறபடியே நிரவதிகதேஜோரூபமாய் ஸைதகரூபமாய் நித்யஸித்தபரமேஷ்ட்யாதி பஞ்சோபநிஷந்மயமாய் ஸ்வாநுரூபமாய்ச் சிந்மயமாய் விளங்குகிற கிரீடாதிநூபுராந்தமான திவ்யஸ்ரக்வஸ்த்ராபரணபூஷிதனாய், ஆபரணகோடியிலும் ஆயுதகோடியிலும்மெய்க்காட்டுகிற திவ்யாயுதங்களாலே தீப்யமானனாய்,நிரதிஶயஸௌந்தர்யஸௌகந்த்ய ஸௌகுமார்ய லாவண்யயௌவநாத்யபரிமிதோதாரகுணகணநிதியான திவ்யமங்கள விக்ரஹவிஶிஷ்டனாய்,இவ்வடிவழகடங்கக்காட்டி லெரித்தநிலாவாகாமே(ச)"ப்ருஹச்சரீரோபிவிமாநதேஹோயுவாகுமாரத்வமுபேயிவாந்ஹரி:- ரேமேஶ்ரியாऽஸௌஜகதாஞ்ஜநந்யாஸூஜ்யோத்ஸ்நயாசந்த்ர இவாம்ருதாம்ஶு:" என்றும் "உடனமர்காதல்மகளிர் திருமகள்மண்மகளாயர்மடமகள்" என்றும் சொல்லுகிறபடியே இரண்டட்டத்திலுமிருந்து அநுபவிக்கிற * கூந்தல்மலர்மங்கைக்கும் மண்மடந்தைக்குங் குலவாயர்கொழுந்துக்கும் கேள்வனுக்கொண்டு ஸ்ரீபூமிநீளைகளோடே வீற்றிருந்து; இப்படி * கண்ணன்விண்ணூரான *வைகுந்தமாநகரிலே திவ்யபோகம்நடவாநிற்க; அச்சேர்த்தியழகைத் தலைநீர்ப்பாட்டிலேகண்டநுபவித்துநிர்ப்பரஸ்துதிபண்ணி (ரு) "நம:" என்பது (சா)"ஜிதம்"என்பது "பல்லாண்டு"

---

(க) [illegible]
(உ) [illegible]
(ந) [illegible]
(ச) [illegible]
(ரு) [illegible] (சா) [illegible]



என்பதாய் அக்ரமமாகப்*பிணங்கியமரர்பிதற்றுமதுகண்டு, "ஆங்காரவாரமதுகேட்டழுலுமிழும் பூங்காரரவணை" என்கிறபடியே அஸ்தாநரக்ஷாவ்யஸநிகளாய், தாஸ்யத்ருஷ்ணாகலிதபரிகரராய், (க) "ஸூரயோநித்யஸம்ஸித்தாஸ் ஸர்வதாஸர்வதர்ஶிந:" என்கிறபடியே * முடியுடைவானவரான * அயர்வறுமமரர்களாலும், (உ) "ஸூர்யகோடிப்ரதீகாஶா: பூர்ணோத்வயுதஸங்கிா: - யஸ்மிந்பதேவிராஜந்தே முக்தாஸ்ஸம்ஸாரபந்தநாத்" என்னும்படி * கரைகண்டோராய் அநந்தவைநதேயாதிவத் அத்யந்தரங்கரான அநந்தமுக்தப்ருந்தங்களாலும் அநவரதபரிசர்யமாணசரண நளிநனுக்கொண்டு, (ந) "ராஜாதிராஜஸ்ஸர்வேஷாம் விஷ்ணுர்ப்ரஹ்மமயோமஹாந் - ஈஶ்வரந் தம் விஜாநீமஸ்ஸஶம்புஸ் ஸப்ராஜாபதி:" என்கிறவேண்டற்பாடு தோன்ற "ஏழுலகுந்தனிக்கோல்செல்ல - வீற்றிருந்து" என்றும், "பொங்கோதஞ்சூழ்ந்த புவனியும் விண்ணுலகும், அங்காதுஞ் சோராமேயாள்கின்ற-செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார்" என்றும் சொல்லுகிறபடியே உபயவிபூதிநிர்வாஹகனாய், "கண்டவாற்றாற் றனதேயுலகெனநின்றான்" என்கிறபடியே கண்டகாட்சியிலேதான் உபயவிபூதி நிர்வாஹகனமை தோற்ற எழுந்தருளியிருந்து; (ச) "ஶ்வேதாஸமஸ்தவஸ்து விலக்ஷணாநந்தஜ்ஞாநாநந்தைகஸ்வரூப" என்கிறபடியே தானும் நிரதிஶயாநந்தயுக்தனாய், "அயர்வறுமமரர்கள்" என்கிறபடியே நித்யாऽஸங்குசித ஜ்ஞாநராயிருந்துள்ள அநந்தகருட விஷ்வக்ஸேநப்ரமுகரான நித்யஸூரிகளையும், "இயக்கெலாமறுத்து" என்கிறபடியே நிவ்ருத்தஸம்ஸாரருமாய் அஸங்குசிதஜ்ஞாநருமாய் அந்த நித்யரோபாதி-லப்தகைங்கர்யருமான முக்தரையும்"அந்தமில்பேரின்பத்து அடியர்" என்னும்படி ஆநந்திப்பித்துக்கொண்டு போராநிற்க; 'இவர்களோபாதி ஸம்ஸாரிகளும் நம்மையநுபவித்து அநுபவஜநிதப்ரீதிகாரிதா ஶேஷாவஸ்தோசிதா ஶேஷஶேஷதைக ரதிரூப நித்ய நிரவத்ய நிரதிஶயாநந்தரூபமத்கைங்கர்யமாகிற மஹாஸம்பத்தைப் பெற்றுவாழுகைக்கு ப்ராப்தியுண்டாயிருக்க, இவர்கள் இத்தை யிழந்திருப்

---

(க) [illegible]
(உ) [illegible]
(ந) [illegible]
(ச) [illegible]

பதே!' என்று மிகவும் வ்யாகுலாந்த:கரணனாய், அங்குத்தை யநுபவங்களொன்றும் உண்டதுநுக்காட்டாதே (௧) "ஸஏகாகீநரமேத" என்கிறபடியே அவன் தனியரைப்போலே போரநொந்து, இவர்கள் கரணகளேபரசூந்யராய் (௨) "லூநபக்ஷ இவாண்டஜ:"என்கிறபடியே இறகொடிந்த பக்ஷிபோலே யிருக்கிறபடியைக் கண்டு, (௩) "கரணகளேபரைர்கடயிதுந்தயமாநமநா:" என்றும், "பல்லுயிர்க்குமாக்கை கொடுத்தளித்தகோனே" என்றுஞ் சொல்லுகிறபடியே பரமதயாளுவாய்க்கொண்டு அகிலாத்மாக்களுக்கும் கரணகளேபர ப்ரதாநம்பண்ணியருள; இவர்களும் (௪) "விசித்ராதேஹஸம்பத்திரீஶ்வராயநிவேதிதும் - பூர்வமேவ க்ருதாப்ரஹ்மந்ஹஸ்தபாதாதிஸம்யுதா" என்றும், "நாடாதமலர்நாடி நாடோறும் நாரணன்றன், வாடாதமலரடிக்கீழ் வைக்கவே வகுக்கின்று" என்றும், "மாயவன்றன்னை வணங்கவைத்த கரணமிவை" என்றும், "தேனேய்மலருந்திருப்பாதம்" என்றும், "துயரறுசுடரடி" என்றும் சொல்லுகிறபடியே ஸ்வசரண கமலஸமாஶ்ரயணத்துக்கு உறுப்பாகக்கொடுத்த கரசரணாத்யவயவஸங்காதாத்மகமான சரீரத்தைக்கொண்டுஅவன் நினைவின்படிசெய்யாதே, ஸமித்தைதறிக்கக்கொடுத்த கத்தியைக்கொண்டு பசுவின்வாலைத் தறிப்பாரைப்போலேயும் களையெடுக்கக்கொடுத்த கோலைக்கொண்டு கண்ணைக் கலக்கிக்கொள்வாரைப்போலேயும் ஆறுநீந்தக்கொடுத்த தெப்பத்தைக்கொண்டு அக்கரையேறலாயிருக்க அதுசெய்யாதேநீர்வாக்காலேயொழுகிக் கடலிலேபுகுவாரைப்போலேயும் * ஆக்கையின்வழி யுழன்று ஶப்தாதி விஷயப்ராவண்யத்துக்கு உறுப்பாக்கிக் கர்மப்ரவாஹத்தாலே * பிறவியென்னும் பெருங்கடலிலே, புக்கு அநர்த்தப்படுகிறபடியைக் கண்டு; நல்வழிகண்டு நடக்கைக்கு உடலாக (௫) "ஶாஸநாச் சாஸ்த்ரம்" என்றும், (௬) "ஹர்த்துந்தமஸ்ஸதஸதீச விவேக்துமீஶோமாநம்ப்ரதீபமிவகாருணிகோததாதி" என்றும், "கலைகளும் வேதமும்நீதிநூலும் கற்பமுஞ் சொற்பொருள்தானும்மற்றை, நிலைகளும் வானவர்க்கும்பிறர்க்கும் நீர்மையினலருள்செய்து" என்றும், "தொ

(௧) "𑌸 𑌏𑌕𑌾𑌕𑍀 𑌨 𑌰𑌮𑌤𑍇" (௨) "𑌲𑍂𑌨𑌪𑌕𑍍𑌷 𑌇𑌵𑌾𑌣𑍍𑌡𑌜𑌃" (௩) "𑌕𑌰𑌣𑌕𑌲𑍇𑌬𑌰𑍈𑌰𑍍𑌘𑌟𑌯𑌿𑌤𑍁𑌂 𑌦𑌯𑌮𑌾𑌨𑌮𑌨𑌾𑌃" (௪) "𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌾 𑌦𑍇𑌹𑌸𑌮𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌰𑍀𑌶𑍍𑌵𑌰𑌾𑌯 𑌨𑌿𑌵𑍇𑌦𑌿𑌤𑍁𑌮𑍍 । 𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑍇𑌵 𑌕𑍃𑌤𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑍍 𑌹𑌸𑍍𑌤𑌪𑌾𑌦𑌾𑌦𑌿𑌸𑌂𑌯𑍁𑌤𑌾" (௫) "𑌶𑌾𑌸𑌨𑌾𑌚𑍍𑌛𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑍍" (௬) "𑌹𑌰𑍍𑌤𑍁𑌂 𑌤𑌮𑌸𑍍𑌸𑌦𑌸𑌤𑍀 𑌚 𑌵𑌿𑌵𑍇𑌕𑍍𑌤𑍁𑌮𑍀𑌶𑍋 𑌮𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌦𑍀𑌪𑌮𑌿𑌵 𑌕𑌾𑌰𑍁𑌣𑌿𑌕𑍋 𑌦𑌦𑌾𑌤𑌿"



ண்டேசெய்தென்றுந்தொழுது வழியொழுகப், பண்டேபரமன்பணித்தபணிவகை" என்றுஞ் சொல்லுகிறபடியே தன்க்ருபையாலே சாஸ்த்ரப்ரதாநம் பண்ணினவிடத்திலும்; அதன்படிசெய்யாதே (௧) "ஈஶ்வரோऽஹமஹம்போகீ ஸித்தோऽஹம்பலவாந்ஸுகீ - ஆட்யோऽபிஜநவாநஸ்மிகோऽந்யோऽஸ்திஸத்ருஶோமயா" என்றும், (௨) "யோऽந்யதாஸந்தமாத்மாநமந்யதாப்ரதிபத்யதே - கிந்தேநநக்ருதம்பாபம் சோரேணாத்மாபஹாரிணா" என்றும், "கொல்வன முதலாவல்லன முயலும்" என்றும் சொல்லுகிறபடியே அகிலபாபஹேதுவாய் ஸ்வஸ்வாதந்த்ர்யரூபமான ஆத்மாபஹாரத்தைப்பண்ணி அநாதிகர்மவாஸநாதோஷதூஷிதாந்த:கரணராய் அபதேப்ரவ்ருத்தராயிருக்கிறபடியைக்கண்டு; ஓலைப்புறத்துச்செல்லாதநாட்டைஎடுத்துவிட்டுக் குறும்பறுக்கும் ராஜாக்களைப்போலே ஸர்வேஶ்வரனும் 'நாமேபோய் இவர்களைவாரிப் பிடியாகப்பிடித்துக்கொண்டு வரவேணும்' என்று ராமக்ருஷ்ணாத்யவதாரமாக அவதரித்துப் * படாதனபட்டுத் திருத்தப்பார்த்தவிடத்திலும்; (௩) "ஆஸுரீம்யோநிமாபந்நா மூடாஜந்மநிஜந்மநி -மாமப்ராப்யதுகௌந்தேய ததோயாந்த்யதமாங்கதிம்" என்றும், (௪) "அவஜாநந்திமாம்மூடாமாநுஷீந்தநுமாஶ்ரிதம் - பரம்பாவமஜாநந்தோ மமபூதமஹேஶ்வரம்" என்றும் சொல்லுகிறபடியே ஸஜாதீயப்ரதிபத்தியாலே அவிஜ்ஞைபண்ணி எதிரம்புகோப்பாராய்ப் * பலபல நாழஞ்சொல்லிக் * கேட்பார்செவிசுடுகீழ்மை வசவுகளேவைது * வல்லவாபழித்து வாக்துருக்தங்கள் பண்ணுவாராய் ஆஸுரப்ராக்ருதிகளாய்த் தன்னைவந்து கிட்டாமையன்றிக்கே (௫) "அஹம்மே" என்று எதிரிட்டுக்கொண்டு அதமமானகதிகளிலே விழுகிறபடியைக் கண்டு, * மனிசரும் மற்றும் முற்றுமாய்மாயப்பிறவிபிறந்த தனியனைகையாலே விஸஜாதீயரான நமக்கு இதுஸாத்யமன்றென்று பார்த்து, பார்வைவைத்து ம்ருகம்பிடிப்பாரைப்போலே மநுஷ்ய ஸஜாதீயரான

(௧) "𑌈𑌶𑍍𑌵𑌰𑍋𑌽𑌹𑌮𑌹𑌂 𑌭𑍋𑌗𑍀 𑌸𑌿𑌦𑍍𑌧𑍋𑌽𑌹𑌂 𑌬𑌲𑌵𑌾𑌨𑍍𑌸𑍁𑌖𑍀 । 𑌆𑌢𑍍𑌯𑍋𑌽𑌭𑌿𑌜𑌨𑌵𑌾𑌨𑌸𑍍𑌮𑌿 𑌕𑍋𑌽𑌨𑍍𑌯𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌸𑌦𑍃𑌶𑍋 𑌮𑌯𑌾" (௨) "𑌯𑍋𑌽𑌨𑍍𑌯𑌥𑌾 𑌸𑌨𑍍𑌤𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌨𑍍𑌯𑌥𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 । 𑌕𑌿𑌂 𑌤𑍇𑌨 𑌨 𑌕𑍃𑌤𑌂 𑌪𑌾𑌪𑌂 𑌚𑍋𑌰𑍇𑌣𑌾𑌤𑍍𑌮𑌾𑌪𑌹𑌾𑌰𑌿𑌣𑌾" (௩) "𑌆𑌸𑍁𑌰𑍀𑌂 𑌯𑍋𑌨𑌿𑌮𑌾𑌪𑌨𑍍𑌨𑌾 𑌮𑍂𑌢𑌾 𑌜𑌨𑍍𑌮𑌨𑌿 𑌜𑌨𑍍𑌮𑌨𑌿 । 𑌮𑌾𑌮𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑍈𑌵 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌤𑌤𑍋 𑌯𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌧𑌮𑌾𑌂 𑌗𑌤𑌿𑌮𑍍" (௪) "𑌅𑌵𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌿 𑌮𑌾𑌂 𑌮𑍂𑌢𑌾 𑌮𑌾𑌨𑍁𑌷𑍀𑌂 𑌤𑌨𑍁𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌮𑍍 । 𑌪𑌰𑌂 𑌭𑌾𑌵𑌮𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑍋 𑌮𑌮 𑌭𑍂𑌤𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍" (௫) "𑌅𑌹𑌂 𑌮𑍇"

ஆழ்வார்களையிடுவித்து ஜகத்தைத் திருத்தியருளவேணுமென்று பார்த்தருளி, ஸ்ரீவத்ஸ கௌஸ்துபவைஜயந்திவநமாலைகளையும், ஸ்ரீ பூமி நீளைகளையும், ஸ்ரீ பஞ்சாயுதாழ்வார்களையும், அநந்தகருடவிஷ்வக்ஸேநப்ரப்ருதிகளையும் பார்த்து, 'நீங்கள்போய் லீலாவிபூதியிலே நாநா வர்ணங்களிலும் அவதரித்து, அகிலாத்மோத்தாரணம்பண்ணுங்கோள்' என்று நியமித்தருள, அவர்களும் (க) "கலௌகலு பவிஷ்யந்தி நாராயணபராயணாஃ - க்வசித்க்வசிந்மஹாபாகா த்ரமிடேஷு ச பூரிஶஃ" என்றும், (உ) "தாம்ரபர்ணீநதீயத்ரக்ருதமாலாபயஸ்விநீ - காவேரீச மஹாபாகாப்ரதீசீசஸரஸ்வதீ" என்றும்சொல்லுகிறபடியே இந்நதிகளின்ஸமீபங்களான த்ரமிடபூபாகத்திலே நிமக்நரை உயர்த்த நாநா வர்ணங்களிலே வந்தவதரிக்க, ஸர்வேஶ்வரனும்அவர்களுக்கு * மயர்வறமதிநலமருளி, அவர்கள்முகேந ஸர்வாதிகாரயான த்ரவிடவேதரூப திவ்யப்ரபந்தங்களை ப்ரகாசிப்பித்தருளினன்.

எங்ஙனேயென்னில்:—

ப்ரவேஶம் முற்றிற்று.

---

(க) [illegible]

(உ) [illegible]

# பொய்கையாழ்வார் வைபவம்.

(க) "காஞ்ச்யாம்ஸரஸிஹேமாப்ஜே ஜாதங்காஸாரயோகிநம் -
கலயேயஶ்ஶ்ரியஃபத்யே ரவிந்தீபமகல்பயத்".

(உ) "முகுந்தஸ்யமுகோல்லாஸமூலவாக்ஜாலமூர்ச்சிதம் -
முநிமுக்யம்ஸரோஜாதம் முக்திமூலமுபாஸ்மஹே".

(ங)† "ஆஜ்ஞாதிஸ்ரீசந்தநேத்வாபராக்யே ஸித்தார்த்பாக்யேவத்ஸரேமாஸிசேஷே - ஶுக்லாஷ்டம்யாம்பௌமவாரேஶ்ரவர்க்ஷே விஷ்ணோர்ஜந்மப்ராபகாஸாரயோகீ."

முதலாழ்வார்கள்மூவரிலும்வைத்துக்கொண்டு ப்ரதமம் பொய்கையாழ்வார், (ச) "க இதிப்ரஹ்மணோநாமதேநதத்ராஞ்சிதோஹரிஃ- ததஃகாஞ்சீதிவிக்யாதாபுரீபுண்யவிவர்த்தநீ" என்கிறபடியே ககாரவாச்யனானப்ரஹ்மாவினாலே ஸர்வேஶ்வரன் அஶ்வமேதத்தாலே ஆராதிதனான ஸ்தலமாகையாலே காஞ்சீபுரமென்று ப்ரக்யாதமாய்ப்புண்யவிவர்த்தகமுமான * கல்லுயர்ந்தநெடுமதிள்சூழ் கச்சியிலே * கால்நிலந்தோய்ந்துவிண்ணோர்தொழுங் கண்ணன்வெஃகாவில் பொற்றாமரைப்பொய்கையிலே காஞ்சநபத்மகர்ப்பத்திலே ஐப்பசிமாஸத்திலே விஷ்ணுநக்ஷத்ரமான ஶ்ரவணநக்ஷத்திரத்திலே ஸ்ரீபாஞ்சஜந்யாம்ஶராய்அவதரித்தருளினார். (ரு) "ஹேமாப்ஜிநீஹேமஸரோஜகர்பாத் ஸ்ரீ பாஞ்சஜந்யோऽஜநி ‡ தத்ரயோகீ - தாரேஹரோராஶ்வயுஜாக்யமாஸே ஸமஸ்தஜீவாவநகர்மஹேதோஃ" என்று திவ்யஸூரிசரிதத்திலே சொல்லிற்றிறே.

---

(க) [illegible]

(உ) [illegible]

(ங) [illegible]

(ச) [illegible]

(ரு) [illegible]

† இந்தச்சுலோகம் சில ஸ்ரீகோசங்களில் இல்லை.

‡ 'திவ்யயோகீ' என்றும்பாடம்.

## பூதத்தாழ்வார் வைபவம்.

(க) "மல்லாபுரவராதீஶம் மாதவீகுஸுமோத்பவம் -
பூதந்நமாமியோவிஷ்ணோ: ஜ்ஞாநதீபமகல்பயத்"

(உ) "வந்தேபூதாக்யயோகீந்த்ரம் வரேண்யகுணஸம்பதம் -
லக்ஷ்மீஸஹாயகருணாப்ராப்தப்ரமிதிவைபவம்"

அநந்தரம் "மாதவன்பூதங்கள்" என்று சொல்லலாம்படியான பூதத்தாழ்வார், "கச்சிக்கிடந்தவனூர் கடல்மல்லைத்தலசயநம்"என்று அநுஸந்தேயமான திருக்கடல்மல்லையிலே பரிமளப்ரசுரமாய் திவ்யமாயிருப்பதொரு மாதவிப்பூவிலே அந்த ஐப்பசிமாஸத்திலே அவிட்டநக்ஷத்ரத்திலே ஸ்ரீகௌமோதகீகதாம்ஶராய் அவதரித்தருளினார் (ங) "மாஸேத்ஸ்மிந்வஸுபேஜநிஷ்ட பாரேஸமுத்ரம்புரிமல்லநாம்ந்யாம் - லதாக்ருஹாந்தாத்புவிபூதநாமா கௌமோதகீஶக்திமயோமுநீந்த்ர:" என்று திவ்யஸூரிசரிதத்திலே சொல்லப்பட்டதிறே.

## பேயாழ்வார் வைபவம்.

(ச) "தந்மாஸிஜாதம்ஶததாரகாயாம் மயூரபுர்யாம்மணிகைரவாந்தாத்-பக்த்யாமஹாந்தம்மஹதாஹ்வயந்தம்ஸ்ரீநந்தகாம்ஶம்ஶ்ரிதபக்திரூபம்"

(ரு)†"த்ருஷ்ட்வாஹ்ருஷ்டம்ததாவிஷ்ணும் ரமயாமயிலாதிபம் -
கூபேரக்தோத்பலேஜாதம் மஹதாஹ்வயமாஶ்ரயே."

---

(க) "𑌮𑌲𑍍𑌲𑌾𑌪𑍁𑌰𑌵𑌰𑌾𑌧𑍀𑌶𑌂 𑌮𑌾𑌧𑌵𑍀𑌕𑍁𑌸𑍁𑌮𑍋𑌦𑍍𑌭𑌵𑌮𑍍 । 𑌭𑍂𑌤𑌂 𑌨𑌮𑌾𑌮𑌿 𑌯𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌦𑍀𑌪𑌮𑌕𑌲𑍍𑌪𑌯𑌤𑍍 ॥" (உ) "𑌵𑌨𑍍𑌦𑍇 𑌭𑍂𑌤𑌾𑌹𑍍𑌵𑌯𑌯𑍋𑌗𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌵𑌰𑍇𑌣𑍍𑌯𑌗𑍁𑌣𑌸𑌂𑌪𑌦𑌮𑍍 । 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌸𑌹𑌾𑌯𑌕𑌰𑍁𑌣𑌾𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌪𑍍𑌰𑌮𑌿𑌤𑌿𑌵𑍈𑌭𑌵𑌮𑍍 ॥" (ங) "𑌮𑌾𑌸𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌵𑌸𑍁𑌭𑍇𑌽𑌜𑌨𑌿𑌷𑍍𑌟 𑌪𑌾𑌰𑍇 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌂 𑌪𑍁𑌰𑌿 𑌮𑌲𑍍𑌲𑌨𑌾𑌮𑍍𑌨𑍍𑌯𑌾𑌮𑍍 । 𑌲𑌤𑌾𑌗𑍃𑌹𑌾𑌨𑍍𑌤𑌾𑌤𑍍 𑌭𑍁𑌵𑌿 𑌭𑍂𑌤𑌨𑌾𑌮𑌾 𑌕𑍌𑌮𑍋𑌦𑌕𑍀𑌶𑌕𑍍𑌤𑌿𑌮𑌯𑍋 𑌮𑍁𑌨𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 ॥" (ச) "𑌤𑌨𑍍𑌮𑌾𑌸𑌿 𑌜𑌾𑌤𑌂 𑌶𑌤𑌤𑌾𑌰𑌕𑌾𑌯𑌾𑌂 𑌮𑌯𑍂𑌰𑌪𑍁𑌰𑍍𑌯𑌾𑌂 𑌮𑌣𑌿𑌕𑍈𑌰𑌵𑌾𑌨𑍍𑌤𑌾𑌤𑍍 । 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌮𑌹𑌾𑌨𑍍𑌤𑌂 𑌮𑌹𑌦𑌾𑌹𑍍𑌵𑌯𑌂 𑌤𑌂 𑌶𑍍𑌰𑍀𑌨𑌨𑍍𑌦𑌕𑌾𑌂𑌶𑌂 𑌶𑍍𑌰𑌿𑌤𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑍂𑌪𑌮𑍍 ॥" (ரு) "𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌹𑍃𑌷𑍍𑌟𑌂 𑌤𑌦𑌾 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌂 𑌰𑌮𑌯𑌾 𑌮𑌯𑌿𑌲𑌾𑌧𑌿𑌪𑌮𑍍 । 𑌕𑍂𑌪𑍇 𑌰𑌕𑍍𑌤𑍋𑌤𑍍𑌪𑌲𑍇 𑌜𑌾𑌤𑌂 𑌮𑌹𑌦𑌾𑌹𑍍𑌵𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑍇 ॥"

† 'த்ருஷ்டவாநிதிஹோவாச' என்றும் பாடம்.



(க) "பத்மாரமணபாதாப்ஜ ப்ரேமப்ராந்த்யாமநோஜ்ஞயா -
ப்ராந்தயோகீதிவிக்யாதம் முநிம்வந்தேகுணாம்புதிம்."

அநந்தரம் பேயாழ்வார், *தேனமர்சோலைமாடமாமயிலையிலே ஆதிகேசவப்பெருமாள்கோயில் திருக்கிணற்றிலே யுண்டானதொரு செவ்வல்லிப்பூவிலே அந்த ஐப்பசிமாஸத்தில் சதயநக்ஷத்ரத்திலே ஸ்ரீநந்தகாம்ஶராய் அவதரித்தருளி, (உ) "நியதபுலகிதாங்காநிர்ப்பராநந்தபாஷ்பா களிதநிகிலஸங்கா கத்கதஸ்தோத்ரகீதி:-அம்ருதலஹரிவர்ண ஹர்ஷந்ருத்தோபபந்நாவிகதநரகபீதிர்விஷ்ணுபக்திர்விபாதி" என்கிறபடியே விஷ்ணுபக்தியையுடையராய், "பேயனேயொழிந்தேனெம்பிரானுக்கே" என்கிறபடியே பகவதநுபவாதிஶயத்தாலே "அழுவன் தொழுவன் ஆடிக்காண்பன் பாடியலற்றுவன்" என்றும், "காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்" என்றும் சொல்லுகிறபடியே பகவதநுபவபாரவஶ்யம் அல்லாத ஆழ்வார்களைக்காட்டில் இவர்க்கு மிக்கிருக்கையாலே பேயாழ்வார் என்றத்தையே நிரூபகமாகவுடையராயிருப்பர். (ங) "தந்மாஸஏவாவிரபூத் விபஶ்சித் ப்ராசேதஸர்க்ஷேऽத மயூரபுர்யாம்-மஹாபிதாகோமணிகைரவாந்தாத் ஸ்ரீநந்தகாத்மாஶ்ரித பக்திரூப:" என்று திவ்யஸூரிசரிதத்திலே சொல்லிற்றிறே.

## முதலாழ்வார்கள் வைபவம்.

இப்படி இம்மூவரும் யோநிஜாதரன்றிக்கே புஷ்பஜாதராய் வந்தவதரித்து, எம்பெருமானுடைய நிர்ஹேதுககடாக்ஷத்தாலே "முக்குணத்திரண்டவைஅகற்றி" என்கிறபடியே ராஜஸ தாமஸ ரஹிதராய் (ச) "ப்ரவ்ருத்திஞ்சநிவ்ருத்திஞ்சகார்யாகார்யேபயாபயே - பந்தம் மோக்ஷஞ்சயாவேத்தி புத்திஸ்ஸாபார்த்தஸாத்விகீ" என்று சொல்லு

---

(க) "𑌪𑌦𑍍𑌮𑌾𑌰𑌮𑌣𑌪𑌾𑌦𑌾𑌬𑍍𑌜𑌪𑍍𑌰𑍇𑌮𑌪𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌮𑌨𑍋𑌜𑍍𑌞𑌯𑌾 । 𑌪𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌯𑍋𑌗𑍀𑌤𑌿 𑌵𑌿𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌮𑍁𑌨𑌿𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌗𑍁𑌣𑌾𑌮𑍍𑌬𑍁𑌧𑌿𑌮𑍍 ॥" (உ) "𑌨𑌿𑌯𑌤𑌪𑍁𑌲𑌕𑌿𑌤𑌾𑌙𑍍𑌗𑍋 𑌨𑌿𑌰𑍍𑌭𑌰𑌾𑌨𑌨𑍍𑌦𑌬𑌾𑌷𑍍𑌪𑌃 𑌗𑌲𑌿𑌤𑌨𑌿𑌖𑌿𑌲𑌶𑌙𑍍𑌕𑌃 𑌗𑌦𑍍𑌗𑌦𑌸𑍍𑌤𑍋𑌤𑍍𑌰𑌗𑍀𑌤𑌿𑌃 । 𑌅𑌮𑍃𑌤𑌲𑌹𑌰𑌿𑌵𑌰𑍍𑌣𑌃 𑌹𑌰𑍍𑌷𑌨𑍃𑌤𑍍𑌤𑍋𑌪𑌹𑌰𑍍𑌷𑌃 𑌨𑌿𑌗𑌦𑌿𑌤𑌨𑌰𑌕𑌭𑍀𑌤𑌿𑌰𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌵𑌿𑌭𑌾𑌤𑌿 ॥" (ங) "𑌤𑌨𑍍𑌮𑌾𑌸 𑌏𑌵𑌾𑌵𑌿𑌰𑌭𑍂𑌦𑍍𑌵𑌿𑌪𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌚𑍇𑌤𑌸𑌰𑍍𑌕𑍍𑌷𑍇𑌽𑌤𑍍𑌰 𑌮𑌯𑍂𑌰𑌪𑍁𑌰𑍍𑌯𑌾𑌮𑍍 । 𑌮𑌹𑍋𑌤𑍍𑌪𑌲𑌾𑌤𑍍 𑌮𑌣𑌿𑌕𑍈𑌰𑌵𑌾𑌨𑍍𑌤𑌾𑌤𑍍 𑌶𑍍𑌰𑍀𑌨𑌨𑍍𑌦𑌕𑌾𑌤𑍍𑌮𑌾 𑌶𑍍𑌰𑌿𑌤𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑍂𑌪𑌃 ॥" (ச) "𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂 𑌚 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂 𑌚 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌕𑌾𑌰𑍍𑌯𑍇 𑌭𑌯𑌾𑌭𑌯𑍇 । 𑌬𑌨𑍍𑌧𑌂 𑌮𑍋𑌕𑍍𑌷𑌂 𑌚 𑌯𑌾 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌸𑌾 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑍀 ॥"

கிற சுத்தஸத்வகுணமான * ஒன்றினில் ஒன்றி நின்று, (௧) "தாஸாவயமிதிப்ரஹ்மந் மாநிநோலோகவர்ஜிதா:" என்றும், (௨) "தாஸபூதாஸ்ஸ்வதஸ்ஸர்வேஹ்யாத்மாந:பரமாத்மந: - நாந்யதாலக்ஷணந்தேஷாம்பந்தேமோக்ஷேததைவச" என்றும், (௩) "ஸ்வத்வமாத்மநிஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரஹ்மணிஸ்திதம்" என்றும், (௪) "ஆத்மதாஸ்யம்ஹரேஸ்ஸ்வாம்யம் ஸ்வபாவஞ்சஸதாஸ்மர" என்றும், (௫) "ஜ்ஞாநாநந்தமயஸ்த்வாத்மா சேஷோஹிபரமாத்மந:" என்றும் சொல்லுகிறபடியே ஸ்வதஸ்ஸித்தபகவத்தாஸ்யரஸத்தை யுடையராய், அத்தாலேயுண்டான ஸம்யக்ஜ்ஞாந பக்திவைராக்யங்களை யுடையராய், "புலன்களைந்துபொறிகளா லேதமொன்றுமில்லாத" என்கிறபடியே அந்நபாநாதி வர்ஜிதராய், "உனது பாலேபோல் சீரில் பழுத்தொழிந்தேன்" என்று பால்யாத்ப்ரப்ருதி பகவத்குணைகதாரகராயிருக்கிற இவர்கள், ஸம்ஸாரிகள் தங்களைப்போலன்றிக்கே *உண்டியேயுடையேயுகந்து சப்தாதிவிஷயங்களிலே அதிப்ரவணராய்த் *தீதில் நன்னெறிநிற்கவல்லாத செய்து பகவத்விமுகரா யிருக்கையாலே "நாட்டுமானிடத்தோடெனக்கரிது" என்கிறபடியே அவர்களோட்டை ஸஹவாஸம் தங்களுக்கு துஸ்ஸஹமாய் ஒருநாளிருந்தவிடத்திலே யொருநாளிராமே க்ராமைகராத்ரராய், இவர்கள் ஒருவரையொருவர் அறியாதே தனித்தனியே வர்த்திக்கிறகாலத்திலே; ஸர்வேஶ்வரனும் (௬) "மமாத்மாஜ்ஞாநிநாம்வர:" என்றும், (௭) "ஜ்ஞாநீத்வாத்மைவமேமதம்" என்றுஞ் சொல்லுகிற திருமுகப்படியே தனக்கு ஆத்மபூதரான இவ்வாழ்வார்களைக்கொண்டு ஜகத்தைத்திருத்த வேணுமென்று நினைத்து, (௮) "அநாதிமாயயாஸுப்த:" என்கிறபடியே அநாதயவித்யாபிபூதராய்ப் போருகிற ஸம்ஸாரிசேதநருக்கு, அஜ்ஞாநாந்தகாரத்தைப் போக்கி ஸ்வவிஷயேஜ்ஞாநபக்திகளை யுண்டாக்குகைக்காக, ஒருநாள் ராத்ரியிலே இம்மூவரையும் *சீரேறுமறையாளர் நிறைந்த செல்வத்

(௧) "𑌦𑌾𑌸𑌾 𑌵𑌯𑌮𑌿𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑍍 𑌮𑌾𑌨𑌿𑌨𑍋 𑌲𑍋𑌕𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌃 ॥"
(௨) "𑌦𑌾𑌸𑌭𑍂𑌤𑌾𑌃 𑌸𑍍𑌵𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌹𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌃 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 । 𑌨𑌾𑌨𑍍𑌯𑌥𑌾 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌬𑌨𑍍𑌧𑍇 𑌮𑍋𑌕𑍍𑌷𑍇 𑌤𑌥𑍈𑌵 𑌚 ॥" (௩) "𑌸𑍍𑌵𑌤𑍍𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌸𑌂𑌜𑌾𑌤𑌂 𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌵𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿 𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍" (௪) "𑌆𑌤𑍍𑌮𑌦𑌾𑌸𑍍𑌯𑌂 𑌹𑌰𑍇𑌃 𑌸𑍍𑌵𑌾𑌮𑍍𑌯𑌂 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌂 𑌚 𑌸𑌦𑌾 𑌸𑍍𑌮𑌰 ।" (௫) "𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑌨𑍍𑌦𑌮𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾 𑌶𑍇𑌷𑍋 𑌹𑌿 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ।" (௬) "𑌮𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌨𑌾𑌂 𑌵𑌰𑌃" (௭) "𑌜𑍍𑌞𑌾𑌨𑍀 𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑍈𑌵 𑌮𑍇 𑌮𑌤𑌮𑍍" (௮) "𑌅𑌨𑌾𑌦𑌿𑌮𑌾𑌯𑌯𑌾 𑌸𑍁𑌪𑍍𑌤𑌃"



திருக்கோவலூரிலே ஒரு திருவிடைகழியிலே யாத்ருச்சிகமாக ஸங்கதராக்க, இவர்களும் (௧) "வைஷ்ணவோவைஷ்ணவந்த்ருஷ்ட்வா தண்டவத்ப்ரணமேத்புவி" என்கிறபடியே அந்யோந்யவந்தநபரராய்க் கொண்டு, 'நீரார்?', 'நீரார்?' என்று ஒருவரை யொருவர் கேட்க, (௨) "பகவச்சேஷபூதோ஽ஹம் அநந்யார்ஹோ஽சிதஃபர:" என்றும், (௩) "தாஸோ஽ஹம்வாஸுதேவஸ்ய" என்றும், (௪) "தாஸோ஽ஹம்கோஸலேந்த்ரஸ்ய" என்றும், (௫) "ஜ்ஞாநாநந்தமயஸ்த்வாத்மாசேஷோஹிபரமாத்மந:" என்றும் இத்யாதிகளாலே தந்தாமுடைய ஸ்வரூபநிர்த்தேச ப்ரஸங்க வ்யாஜேந போதயந்த:பரஸ்பரம் பண்ணிக்கொண்டிராநிற்கச்செய்தே, அவ்வளவிலே எம்பெருமான் (௬) "அநந்யாஹிமயாஸீதா பாஸ்கரேணப்ரபாயதா" என்றிருக்குமவளாகையாலே * இறையும் அகலகில்லாத பிராட்டி ஸஹிதனாய்க்கொண்டு * கூராராழி வெண்சங்கேந்தி (௭) "துளஸீகாநநம்யத்ர யத்ரபத்மவநாநிச - வஸந்திவைஷ்ணவாயத்ர தத்ரஸந்நிஹிதோஹரி:" என்கிறபடியே * செநதமிழ்பாடுவாராகிற இவர்களருகே * தழுவி முழுசிப் புகுந்து நெருக்கிநிற்க, இவர்களும் 'நம்மையொழியவும் * காமர்பூங்கோவலிடைகழியைப் பற்றிநிற்கிறார்களுண்டோ?' என்று பார்க்கைக்காக * வெய்யகதிரோன்விளக்கேற்றியும் * ஞானச்சுடர்விளக்கேற்றியும் *உணர்வென்னுமொளிகொள்விளக்கேற்றியும் பார்த்தருளி, "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" என்றும், "நீயும் திருமகளும நின்றாயால" என்றும் ஸ்ரீமந்நாராயணனுடைய * மைப்படிமேனியையும் * செந்தாமரைக்கண்ணையும் பரமவைதிகரான இவர்கள் * நெஞ்சென்னும் உட்கண்ணாலே கண்டநுபவித்து, அநுபவஜநித ப்ரீதயதிசயம் உள்ளடங்காமல், "பாலேய்தமிழா" என்று

(௧) "𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑍋 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌦𑌣𑍍𑌡𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌣𑌮𑍇𑌦𑍍𑌭𑍁𑌵𑌿", (௨) 𑌭𑌗𑌵𑌚𑍍𑌛𑍇𑌷𑌭𑍂𑌤𑍋𑌽𑌹𑌮𑌨𑌨𑍍𑌯𑌾𑌰𑍍𑌹𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌤𑌤𑍍𑌪𑌰𑌃" (௩) "𑌦𑌾𑌸𑍋𑌽𑌹𑌂 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌸𑍍𑌯" (௪) "𑌦𑌾𑌸𑍋𑌽𑌹𑌂 𑌕𑍋𑌸𑌲𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌯" (௫) "𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑌨𑍍𑌦𑌮𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾 𑌶𑍇𑌷𑍋 𑌹𑌿 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃" (௬) "𑌅𑌨𑌨𑍍𑌯𑌾 𑌹𑌿 𑌮𑌯𑌾 𑌸𑍀𑌤𑌾 𑌭𑌾𑌸𑍍𑌕𑌰𑍇𑌣 𑌪𑍍𑌰𑌭𑌾 𑌯𑌥𑌾" (௭) "𑌤𑍁𑌲𑌸𑍀𑌕𑌾𑌨𑌨𑌂 𑌯𑌤𑍍𑌰 𑌯𑌤𑍍𑌰 𑌪𑌦𑍍𑌮𑌵𑌨𑌾𑌨𑌿 𑌚 । 𑌵𑌸𑌨𑍍𑌤𑌿 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌾 𑌯𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌰 𑌸𑌨𑍍𑌨𑌿𑌹𑌿𑌤𑍋 𑌹𑌰𑌿𑌃 ॥"

சொல்லுகிற நற்றமிழ ராகையாலே "வையந்தகளி," "அன்பேதகளி" "திருக்கண்டேன்" என்கிற திவ்யப்ரபந்தங்களை ஸம்ஸாரிகள் அதிகரித்து அஜ்ஞாநாந்தகாரம் நீங்கி உஜ்ஜீவிக்கும்படி * ஞானத்தமிழாக அருளிச்செய்து ப்ரபந்தீகரித்து உபகரித்தருளி ஜகத்தை வாழ்வித்தருளினர்கள்.

## திருமழிசைப்பிரான் வைபவம்.

(க) "ஶக்திபஞ்சமயவிக்ரஹாத்மனே †ஶார்ங்ககாரஜிதசித்தஹாரிணே -
முக்திதாயகமுராரிபாதயோர் பக்திஸாரமுநயேநமோநம:."

(உ) ‡"ஸித்தார்த்திந்யுஷ்ணரஶ்மௌமகரமதிகதேத்வாபரேஜ்ஞாநதாரா
க்ஷேத்ரேஸம்வத்ஸரௌகேகதவதிசதிநேஸப்தவிம்ஶேமகாக்யே-
நக்ஷத்ரேபாநுவாரேமுனிவரதநயோபக்திஸாரோமுநீந்த்ர:
ஶ்ரீமாந்ப்ராபாவதாரம்ஜகதுபக்ருதயேபார்கவேணோऽந்யேத்யுரத்ர."

ஆழ்வார் திருமழிசைப்பிரானுகிறர், * ஒருத்திமகனாய்ப்பிறந்து ஓரிரவி லொருத்திமகனாயொளித்து வளர்ந்தருளின க்ருஷ்ணனைப் போலே யாய்த்து, அவதரித்தருளினபடியும், வளர்ந்தருளினபடியும். எங்ஙனேயென்னில்:— (௩) "ததோऽகிலஜகத்பத்ம போதாயாச்யுத பாநுநா - தேவகீபூர்வஸந்த்யாயாமாவிர்பூதம்மஹாத்மநா" என்கிறபடியே யதுகுலத்திலே பிறந்து (௪) "அகார்த்ரமார்த்ரம் விரஸம்ர ஸாட்ய மபல்லவம்பல்லவிதந்ததாऽऽஸீத் - மாலோபஹாரக்ஷீரதகாப பூர்வ் நாராயணே நந்தகுலம்ப்ரவிஷ்டே,, என்கிற படியே *நந்தன் குலமதலையாய் கோபகுலத்திலே வளர்ந்தருளினற்போலே இவ்வாழ்வாருடைய திருவவதாரமும் ஒருபிறவியிலே இருபிறவியாயிறே யிருப்பது.



அதுஎங்ஙனேயென்னில்;— அத்ரி ப்ருகு வஸிஷ்ட பார்க்கவ ஆங்கிரஸாதிகளான மஹர்ஷிகளெல்லாரும் ப்ரஹ்மாவின்பக்கலிலே சென்று, 'பூலோகத்திலே உத்க்ருஷ்டதமமான க்ஷேத்ரத்திலே எங்களுக்கு நித்யவாஸம்பண்ணவேணும்: அத்தை நிஶ்சயித்துச் சொல்லவேணும்' என்று கேட்க, ப்ரஹ்மாவும் உலகும் மழிசையும் உள்ளுணர்ந்து விஶ்வகர்மாவைக்கொண்டு பஞ்சாஶத்கோடிவிஸ்தீர்ணையாய் ஸஶைலாம்புதிகாநநையான பூமியெல்லாம் ஒருதட்டும் விதேஹபவநக்ஷேத்ரமான திருமழிசையொன்றும் ஒருதட்டுமாகத் துலையிலே வைத்துநிறுக்க, (க) "தாத்ரா துலிதாச லகுர் மஹீ" என்கிறபடியே பூமியைவைத்தபக்கம் நொய்தாய், * மாநீர்மழிசையை வைத்தெடுத்த பக்கம் கனத்திருக்கக் கண்டு, அதற்கு 'மஹீஸாரக்ஷேத்ரம்' என்று பேரிட்டு நிரூபிக்கையாலே, அந்தரிஷிகளும் அவ்விடத்தைவிடாதே நித்யவாஸம்பண்ணிக்கொண்டிராநிற்க;

அவர்களிலே பார்க்கவமஹர்ஷியானவர், (உ) "பஶ்சிமேயோஜநார்த்தேச விதேஹாதிஷ்டிதம்வநம் - பார்க்கவோதீர்க்கஸத்ரேண வாஸுதேவம் ஸநாதநம் - அபிபூஜ்யயதாந்யாய மிதிநித்யமகல்பயத்" என்று ப்ரஹ்மாண்ட புராணத்திலே சொல்லுகிறபடியே, தீர்க்கஸத்ரமென்கிற யாகத்தாலே ஸர்வாந்தர்யாமியான ஸ்ரீமந்நாராயணனை ஸக்ரமமாக யஜித்துக்கொண்டுபோருகிற காலத்திலே, பார்க்கவருடைய பத்நி கர்ப்பிணியாய், "பன்னிருதிங்கள் வயிறிற்கொண்ட" என்கிறபடியே பன்னிரண்டுமாஸத்துக்குப் பின்பு தைமாஸத்தில் மகாநக்ஷத்ரத்தில் பிண்டாக்ருதியாக ப்ரஸவிக்க, ஸுதர்ஶநாம்ஶரான திருமழிசைப்பிரான் அவதரித்தார். (௩) "ஸாகர்ப்பமாத்தம்முநேஶ்ச

---

(க) "𑌶𑌕𑍍𑌤𑌿𑌪𑌞𑍍𑌚𑌮𑌯𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑍇 𑌶𑌾𑌰𑍍𑌙𑍍𑌗𑌕𑌾𑌰𑌜𑌿𑌤𑌚𑌿𑌤𑍍𑌤𑌹𑌾𑌰𑌿𑌣𑍇। 𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌦𑌾𑌯𑌕𑌮𑍁𑌰𑌾𑌰𑌿𑌪𑌾𑌦𑌯𑍋𑌰𑍍𑌭𑌕𑍍𑌤𑌿𑌸𑌾𑌰 𑌮𑍁𑌨𑌯𑍇 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃॥"
(உ) "𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌰𑍍𑌥𑌿𑌨𑍍𑌯𑍁𑌷𑍍𑌣𑌰𑌶𑍍𑌮𑍌 𑌮𑌕𑌰𑌮𑌧𑌿𑌗𑌤𑍇 𑌦𑍍𑌵𑌾𑌪𑌰𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑌧𑌾𑌰𑌾 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍇 𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑍌𑌘𑍇 𑌗𑌤𑌵𑌤𑌿 𑌶𑌤𑌿𑌨𑍇 𑌸𑌪𑍍𑌤𑌵𑌿𑌂𑌶𑍇 𑌮𑌘𑌾𑌖𑍍𑌯𑍇। 𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑍇 𑌭𑌾𑌨𑍁𑌵𑌾𑌰𑍇 𑌮𑍁𑌨𑌿𑌵𑌰𑌤𑌨𑌯𑍋 𑌭𑌕𑍍𑌤𑌿𑌸𑌾𑌰𑍋 𑌮𑍁𑌨𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 𑌶𑍍𑌰𑍀 𑌮𑌾𑌨𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑌾𑌵𑌤𑌾𑌰𑌂 𑌜𑌗𑌦𑍁𑌪𑌕𑍃𑌤𑌯𑍇 𑌭𑌾𑌰𑍍𑌗𑌵𑍇𑌣𑍋𑌽𑌨𑍍𑌯𑍇𑌦𑍍𑌯𑍁𑌰𑌤𑍍𑌰॥" (௩) "𑌤𑌤𑍋𑌽𑌖𑌿𑌲𑌜𑌗𑌤𑍍𑌪𑌦𑍍𑌮𑌬𑍋𑌧𑌾𑌯𑌾𑌚𑍍𑌯𑍁𑌤𑌭𑌾𑌨𑍁𑌨𑌾। 𑌦𑍇𑌵𑌕𑍀𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌯𑌾𑌮𑌾𑌵𑌿𑌰𑍍𑌭𑍂𑌤𑌂 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌾" (௪) "𑌅𑌕𑌾𑌰𑍍𑌦𑍍𑌰𑌮𑌾𑌰𑍍𑌦𑍍𑌰𑌂 𑌵𑌿𑌰𑌸𑌂 𑌰𑌸𑌾𑌢𑍍𑌯𑌮𑌪𑌲𑍍𑌲𑌵𑌂 𑌪𑌲𑍍𑌲𑌵𑌿𑌤𑌂 𑌤𑌦𑌾𑌽𑌽𑌸𑍀𑌤𑍍। 𑌮𑌾𑌲𑍋𑌪𑌹𑌾𑌰𑌕𑍍𑌷𑍀𑌰𑌦𑌨𑍋𑌪𑌹𑍂𑌤 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑍇 𑌨𑌨𑍍𑌦𑌕𑍁𑌲𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑍇"

† 'ஶார்ங்கிஹாரஜிதசித்தஹாரிணே' என்றும்பாடம்.
‡ இதுசில ஸ்ரீகோசங்களில் இல்லை.

(க) "𑌧𑌾𑌤𑍍𑌰𑌾 𑌤𑍁𑌲𑌿𑌤𑌾 𑌚 𑌲𑌘𑍁𑌰𑍍𑌮𑌹𑍀" (உ) "𑌪𑌶𑍍𑌚𑌿𑌮𑍇 𑌯𑍋𑌜𑌨𑌾𑌰𑍍𑌧𑍇 𑌚 𑌵𑌿𑌦𑍇𑌹𑌾𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌂 𑌵𑌨𑌮𑍍। 𑌭𑌾𑌰𑍍𑌗𑌵𑍋 𑌦𑍀𑌰𑍍𑌘𑌸𑌤𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌂 𑌸𑌨𑌾𑌤𑌨𑌮𑍍। 𑌅𑌭𑌿𑌪𑍂𑌜𑍍𑌯 𑌯𑌥𑌾𑌨𑍍𑌯𑌾𑌯𑌮𑌿𑌤𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌕𑌲𑍍𑌪𑌯𑌤𑍍॥" (௩) "𑌸𑌾 𑌗𑌰𑍍𑌭𑌮𑌾𑌤𑍍𑌤𑌂 𑌮𑍁𑌨𑍇𑌶𑍍𑌚 𑌪𑌤𑍍𑌨𑍀 [illegible] 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌂𑌶𑌂 [illegible]"

பத்நீ ஸுதர்ஶநாம்ஶேநததாநுவிஷ்டம் - பபாதகர்ப்போபுவிதைஷ்யமாஸே மகாபிதாநே மஹநீயதாரே" என்று திவ்யஸூரிசரிதத்திலே சொல்லிற்றிறே.

அநந்தரம், உல்பஸம்வேஷ்டிதமாய் ஒன்றும்ரூபீகரியாமல் அவதரிக்கையாலே பார்க்கவரும் தத்பத்நியும் அநாதரித்து ஒருபிரப்பந்தூற்றின்கீழே வைத்துப்போக, அந்த உல்பாவ்ருத பிண்டாக்ருதியானது, அகில ஜகந்மாதாவான பெரியபிராட்டியாரநுக்ரகத்தாலே பூமிப்பிராட்டி ஸுரக்ஷிதமாக வைத்துக்கொண்டிருக்கச்செய்தே "சிக்கென்று சென்னிக்கால் சீரிடைப்பின் கண்ணுயிராய், ஒக்கவுருப்பாய்ந் தறிவாலுள்நிறைந்து" என்கிறபடியே ஸர்வாவயவங்களும் பரிபூர்ணமாய் அதிலே ஜீவன் ஸ்புரித்துத்தோற்றி, "பேதைக்குழவி" என்கிறபடியே அத்யந்தம்சிசுவாய்ப் பசுங்குழந்தையான ஆழ்வார், பசிதாஹங்களாலேநொந்து ஸ்தந்யார்த்தியாய் விஜநமானவநத்திலே ஒருபிரப்பந்தூற்றிலே ரோதநம்பண்ண, அவ்வளவிலே மஹீஸாரக்ஷேத்ராதிபதியான பெருமாள் அங்கே எழுந்தருளிக் கருணைரு தௌ கவிஷ்யந்தியான கடாக்ஷபாதங்களாலே இவர்பசிதாஹம்தீரும்படி குளிரக்கடாக்ஷித்து ஆராவமுதமான ஸ்வவிக்ரஹத்தைக் காட்டி ஆஶ்வாஸிப்பித்து மறைய, இவரும், தத்விரஹாஸஹிஷ்ணுவாய் மீளவும் அழத்தொடங்கினர்.

அங்கே திருவாளன் என்கிற ஒருத்தன் பிரம்பறுக்கப்போனவிடத்திலே இவருடைய ஆர்த்தநாதங் கேட்டுக் கூடவந்தவர்களுடன் சோதித்து இவரைக் கண்டு ஹர்ஷப்ரகர்ஷத்துடனே எடுத்துக் கொண்டுவந்து, தன்னுடைய பத்நியான பங்கயச்செல்வியார்கையிலே கொடுக்க, அவளும் வந்த்யையாகையாலே மிகவும் ப்ரீதையாய் "உத்தானஞ்செய்து" என்கிறபடியே எடுத்துக்கொண்டு, புத்ரப்ரதிபத்தியைப்பண்ணி, * தத்துக்கொண்டாள் கொலோ தானே பெற்றாள் கொலோ என்று விகல்பிக்கலாம்படி ஆதரத்துடனே ஸ்நேஹபூர்வகமாக வளர்க்க வளர்ந்தருளுகிற வளவிலே, "வனமுலைகள்சோர்ந்துபாய" என்கிறபடியே முலைப்பால்சுரக்க, இவளும் நந்தகோபனணிசிறுவாநான்சுரந்தமுலையுணாய்" என்னும்படியே முலைகொடுக்கத்தேட, இவரும் ஸ்தந்யாதிபோஜ்யங்களிலே நிராஶராய்ப் பகவத்குணாநுபவதாரகராய் வாக்வ்யவஹார ரோதநாதிகளொன்றுமின்றியே மலமூத்ரரஹிதராய்ப் பரிபூர்ணமாக ஸர்வாவயவங்களும் வர்த்திக்க எழுந்தருளியிருக்க,



இந்த ஆஶ்சர்யத்தை, அபுத்ரவானுமாய், திருமழிசையிலே வாஸம்பண்ணும் சதுர்த்தவர்ணத்திலே ஜாதனுமாய், மஹாப்ராஜ்ஞனுமான ஒருவ்ருத்தன், கேட்டு, பாங்காகப் பாலமுதுகாய்ச்சிக் கொண்டு ஸ்வபார்யாஸஹிதனாய் இவரிருக்கிறவிடத்திலே விடியற்காலத்தே வந்து, பஞ்சஶக்திமயமான சிசுவினுடைய அப்ராக்ருத திவ்யதேஜஸ்ஸைக் கண்டு அத்யாஶ்சர்யப்பட்டு, தான் கொண்டுவந்த பாலமுதை ஸமர்ப்பித்து ப்ரார்த்தித்து 'அமுதுசெய்யப்பண்ணவேணுமென்று இத்தைக்கொண்டுவந்தேன்: அமுதுசெய்தருளவேணும்' என்று பஹுஶ: வேண்டிக்கொள்ள, ஆழ்வாரும் அவனிடத்தில் க்ருபாதிஶயத்தாலே அவன்கொண்டுவந்த பாலமுதை அமுதுசெய்துபோகவிட, அவர்களும் அப்படியே பலநாளும் போரப்ரீதியுடனே பாலமுதை அமுதுசெய்வியாநிற்க, ஒருநாள், ஆழ்வார், வ்ருத்ததம்பதிகளுடைய மநோபாவமறிந்து, அற்றைக்கு அவர்கள் கொண்டுவந்த பாலமுதை அமுதுசெய்து, சேஷித்த பாலை 'நீங்கள் ஸ்வீகரியுங்கோள்: உங்களுக்கு நல்லபுத்ர னுண்டாவன்' என்று ப்ரஸாதிக்க, அவர்களும் அப்படியே ஸ்வீகரித்து யௌவநாவஸ்தையையடைந்து, தத்பத்நியும் கர்ப்பவதியாய் ஒன்பதுமாஸம் சென்று பத்தாம்மாஸம் நிறைந்தவாறே, * கேசவன்றமராய் * நாக்கொண்டு மானிடம் பாடாத மஹாப்ராஜ்ஞரான ஒருகுமாரனை ப்ரஸவிக்க, ஸ்ரீவிதுரரைப்போலே விளங்குகிற அந்தப் புத்ரனைக் கண்டு, * பத்துநாளுங்கடந்த இரண்டாநாள் அவருக்கு 'கணிகண்ணன்' என்று திருநாமம்சாத்தி, அகிலவித்யைகளையும் அதிகரிப்பித்தார்கள்.

பின்பு பகவத்யாஸுதாஸ்வாதநத்ருப்தசேதநராய், விடப்பட்ட அந்நபாநபயோபிலாஷையை யுடையராய், பைத்ருகவேஶ்மத்திலே வளர்ந்தருளுகிற ஆழ்வாரும், ருஷிபுத்ரராகையாலே ஏழுதிருநக்ஷத்ரத்துக்குப் பின்பு "இளைப்பினையியக்கம்நீக்கி யிருந்துமுன்னிமையைக்கூட்டி, அளப்பிலைம்புலனடக்கி" என்கிறபடியே யமநியமாதியான அஷ்டாங்க யோகாப்யாஸத்திலே திருவுள்ளமாய், அதுக்கு ஜகத்காரணவஸ்துவை த்யாநத்துக்கு விஷயமாகச் சொல்லுகையாலே அந்த வஸ்துவை அறியவென்றால் * பிணங்குஞ்சமயம் பலபலவாகையாலே அவையவைதோறும் புக்கு ஆராய்வோமென்று கொண்டு, சாக்யோலூக்யாக்ஷபாதக்ஷபணகபிலபதஞ்சலிகளாகிற பாஹ்யஸமயங்களை, ஶைவ மாயாவாத ந்யாய வைஶேஷிக பாட்ட ப்ராபாகராதிகளாகிற குத்ருஷ்டிஸமயங்களையும் புக்கு * உணர்ந்துணர்ந்துரைத்துரைத்து ஆராய்ந்துபார்த்தவிடத்தில், "இறைநிலையுணர்வரிது" என்கிறபடியே

அவற்றிலேஒருபசையில்லாமையாலே அங்கு நசையற்று "அறியார்சமணர் அயர்த்தார்பவுத்தர்,சிறியார்சிவப்பட்டார்" என்றுகொண்டு ஈனமான* இடங்கொள்சமயத்தையெல்லாம் எடுத்துக்களைந்து, "கலையறக்கற்றமாந்தர் காண்பரோ கேட்பரோதான்" என்று இதரஸித்தாந்தங்களை நஶ்வரமென்று கைவிட்டு, இப்படி எழு நூறு திருநக்ஷத்ரம் சென்றவாறே;

ஸ்ரீவைஷ்ணவராய், பரமவைதிகஸித்தாந்த நிஷ்டராய், "இனியறிந்தேன் ஈசற்கும் நான்முகற்குந் தெய்வம்" என்று அறுதியிட்டுக் கொண்டு *வேதாந்தவிழுப்பொருளின் மேலிருந்த விளக்கை அறிந்து தத்ப்ரவணராக, ஸர்வேஶ்வரனும் அதுவே பற்றாசாக இவர்க்கு *மயர்வறமதிநலமருளித்தன்னுடைய திவ்யாத்மஸ்வரூபத்தையும், ததாஶ்ரயமான ஜ்ஞாநஶக்த்யாதி கல்யாணகுணங்களையும், உபயத்தையும் ப்ரகாசிப்பிக்கிற திவ்யமங்களவிக்ரஹத்தையும், ததாதாரமான கிரீடாதிநூபுராந்தமான திவ்யபூஷணவர்க்கத்தையும், அவற்றோடே விகல்பிக்கலாம்படியான ஶங்கசக்ராதி திவ்யாயுதங்களையும், இதடங்கக் காட்டிலெரித்தநிலாவாகாமே அநுபவிக்கிற லக்ஷ்மீப்ரப்ருதி மஹிஷீவர்க்கத்தையும், (க) "பவாம்ஸ்துஸஹவைதேஹ்யா" என்றும், "அடிமைசெய்வார்திருமாலுக்கு" என்றும், "சூழ்ந்திருந்தேத்துவர்" என்றும், "ஏவமற்றமராட்செய்வார்" என்றும் சொல்லுகிறபடியே அச்சேர்த்தியிலே அடிமைசெய்கையே தங்களுக்கு தாரகாதிகளாகவுடையரான திவ்யபரிஜநவர்க்கத்தையும், அந்தப்போகத்துக்கு வர்த்தகமாய் *நலமந்தமில்லதோர் நாடாய்ப் போகவிபூதியான பரமபதத்தையும் ஸாக்ஷாத்கரிப்பித்து, பின்னையும் ப்ரக்ருதிபுருஷகாலாத்மகமான லீலாவிபூதியினுடைய ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களை ஸத்வாரகமாகவும் அத்வாரகமாகவும்நின்று "இன்புறு மிவ்விளையாட்டுடையான்" என்கிறபடியே தனக்கு லீலையாக வுடையனுயிருக்கிற படியையும் காட்டிக்கொடுக்க;

இப்படி உபயவிபூதிநாதனான தான், (உ) "யந்நாபிபத்மாதபவந்மஹாத்மாப்ரஜாபதிர்விஶ்வஸ்ருக்" என்கிறபடியே சூழ்ந்தநீருலகெல்லாம்படைக்கும்படி முதலிலே தனக்கு ஜ்யேஷ்டபுத்ரனாக ப்ரஹ்மாவைத் தன்திருநாபீகமலத்திலே (ந) "யோப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்" என்னும்படி மூன்றுற உத்பந்நனாக்கின படியையும் (க) "ப்ரஹ்மணஃபுத்ராய ஜ்யேஷ்டாய ஶ்ரேஷ்டாய" என்கிறபடியே அந்த ப்ரஹ்மாவுக்கு ஜ்யேஷ்டபுத்ரனான ருத்ரன் உத்பந்நனான படியையும் ப்ரகாசிப்பித்தருள, இவரும் "நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனுந், தான்முகமாய்ச் சங்கரனைத்தான் படைத்தான்" என்று தம் வாக்காலே சொல்லும்படி இவற்றையெல்லாம் இவர் ஸம்ஶயவிபர்யயமற அறிந்து, "சாக்கியங் கற்றோஞ் சமண்கற்றோஞ் சங்கரனார், ஆக்கிய ஆகமநூ லாராய்ந்தோம் - பாக்கியத்தாற், செங்கட்கரியானைச் சேர்ந்தோம் யாந் தீதிலமே, எங்கட் கரியதொன்றில்" என்று அநுஸந்தித்தருளி, இதரஸித்தாந்த நிவ்ருத்திபூர்வகமாக, + திருநின்றபக்கம் திறவிதென்றோர்ந்து, (உ) "ஆலோட்யஸர்வஶாஸ்த்ராணி விசார்யசபுநஃபுநஃ - இதமேகம்ஸுநிஷ்பந்நம் த்யேயோ நாராயணஸ்ஸதா" என்றும், (ந) "யோமேஶ்வரம் ஜகந்நாதம் விஷ்ணும் ஜிஷ்ணும் ஶ்ரியஃபதிம்- பத்மநாபம் விஶாலாக்ஷம் சிந்தயாமி ஜகத்பதிம்" என்றும் சொல்லுகிறபடியே ஜகத்காரணபூதனாய் ஸர்வாந்தர்யாமியாய்ப் புண்டரீகாக்ஷனாய் ஜகந்நாதனான ஶ்ரியஃபதியை த்யாநம்பண்ணிக்கொண்டு க்ருதார்த்தராய்த்† திருவல்லிக்கேணியிலே கஜேந்த்ரஸரஸ்ஸின் கரையிலே எழு நூறு ஸம்வத்ஸரம் பகவதநுபவம் பண்ணிக்கொண்டு யோகத்திலே எழுந்தருளியிருக்கிறநாளையிலே, ஒருநாள் இவர் நிரந்தரபகவதநுபவத்துடனே கந்தாஸீவநஞ்செய்யாநிற்க, அவ்வளவிலே ருத்ரனும் அத்ரிகந்யாஸஹிதனாய் ருஷபாரூடனாய் த்ரிஶூலபாணியாய் வ்யோம மார்க்கத்திலே செல்லாநிற்க, ஆழ்வாரும் அவர்களைக் கண்டு அவன்நிழல் தன்மேற்படாமல் ஒதுங்க, இதைத் தம்பதிகளிருவரும் கண்டுநிற்க, அவ்வளவிலே ருத்ரனைக் குறித்துப் பார்வதி 'இவராரோவென்று அறிந்துபோவோம்' என்ன, ருத்ரனும் தத்பத்நியுடனே 'இவர் மஹாநுபாவர்: நம்மைக்கணிசியார்' என்ன, 'ஆகிலும், அவரைக்கண்டுபோவோம்' என்ன, அவனும் ஸம்மதித்து இவரண்டையிலே வந்துநிற்க, இவரும் அவனைக் கண்ணெடு

(க) "𑌭𑌵𑌾𑌂𑌸𑍍𑌤𑍁𑌸𑌹𑌵𑍈𑌦𑍇𑌹𑍍𑌯𑌾" (உ) "𑌯𑌨𑍍𑌨𑌾𑌭𑌿𑌪𑌦𑍍𑌮𑌾𑌦𑌭𑌵𑌨𑍍𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍃𑌕𑍍" (ந) "𑌯𑍋𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌂𑌵𑌿𑌦𑌧𑌾𑌤𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑍍"

(க) "𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌯𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌾𑌯𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌾𑌯" (உ) "𑌆𑌲𑍋𑌡𑍍𑌯𑌸𑌰𑍍𑌵𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌿𑌵𑌿𑌚𑌾𑌰𑍍𑌯𑌚𑌪𑍁𑌨𑌃𑌪𑍁𑌨𑌃 । 𑌇𑌦𑌮𑍇𑌕𑌂𑌸𑍁𑌨𑌿𑌷𑍍𑌪𑌨𑍍𑌨𑌂𑌧𑍍𑌯𑍇𑌯𑍋𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌸𑍍𑌸𑌦𑌾" (ந) "𑌯𑍋𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌂𑌜𑌗𑌨𑍍𑌨𑌾𑌥𑌂𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌂𑌜𑌿𑌷𑍍𑌣𑍁𑌂𑌶𑍍𑌰𑌿𑌯𑌃𑌪𑌤𑌿𑌮𑍍 । 𑌪𑌦𑍍𑌮𑌨𑌾𑌭𑌂𑌵𑌿𑌶𑌾𑌲𑌾𑌕𑍍𑌷𑌂𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌾𑌮𑌿𑌜𑌗𑌤𑍍𑌪𑌤𑌿𑌮𑍍 ।"

† 'திருமழிசையிலே' என்றும் பாடபேதம்.

த்துப்பாராமல் உதாஸீநித்திருக்க, அவனும் 'நாம்வந்துநிற்க நீர் அலக்ஷ்யம்பண்ணலாமோ?' என்ன, இவரும் 'உன்னைக்கொண்டு என்னப்ரயோஜநமுண்டெனக்கு?' என்ன, அவனும் 'நாம் உமக்கு ஒன்றுதரக்கடவதாக வந்தோம்'என்ன, இவரும் 'நமக்கு ஒன்றும் வேண்டாம்'என்ன,அவனும்'நம்வரவு வ்யர்த்தமாகாமல் உம் அபீஷ்டத்தைக் கேட்டுக்கொள்ளீர்'என்ன,ஆழ்வாரும் புன்முறுவல்செய்து 'ஆகில்,மோக்ஷந்தரவல்லையாகில்தா'என்ன,'அதுஎன்னால்தரக்கடவதன்று ஸ்ரீமந்நாராயணனாலே'என்ன,'ஆனால்,இன்றுசாவாரைநாளைச்சாகும்படிபண்ணவல்லையோ?'என்ன,'அதுவும் கர்மாநுகுணமன்றோ?' என்ன, 'ஆனால்,இவ்வூசியின்பின்னே நூல்வரும்படிவரப்ரதாநம்பண்ணாய்'என்று அபஹஸித்துச்சொல்ல, அவனும் இவ்வார்த்தையைக்கேட்டு மிகவும்குபிதனாய், 'இவரை அநங்கனைப்போலே யாக்கக்கடவேன்'என்று, பொறியும் புகையும் கிளம்புகிற தன்நெற்றிக்கண்ணைத் திறந்துவிட, அக்கண்ணில்நின்றும் ஜ்வாலாஜாஜ்வல்யமாநமாய் ஸம்வர்த்தாக்நிபோலேசுட்டுக்கொண்டெரிகிற ஜ்வலநப்ரரோஹத்தைக் கண்டு ஆழ்வாரும் தம்முடைய வலத்திருவடியின் பெருவிரலிலே ஒருகண்ணைத் திறந்துவிட, அக்கண்ணில்நின்றும் அக்நி ப்ரளயஹுதவஹகோடிகல்பமாய் ஜ்வலித்துக்கொண்டுகிளம்ப, கோடிவைஶ்வாநரப்ரக்யமாய் அத்யர்க்ககோடிநிப தீர்க்கஜ்வாலா ஜாஜ்வல்யமாநாக்நியில் ஶம்புவின்லோசநாக்நி கத்யோதப்ராயமாய் அடங்க, †(பின்னும அந்தமஹதக்நியானது உலகங்களை ஆக்ரமித்து ம்ருத்யுஞ்ஜயனைச் சுற்றிக்கொள்ள), ஶம்புவும் அந்த அங்குஷ்டலோசநாக்நிஜ்வாலையைப் பொறுக்கமாட்டாமல்†(மிகவும்பரிதபித்து "அந்யதாஶரணம்நாஸ்தி த்வமேவஶரணம்மம-தஸ்மாத்காருண்யபாவேந ரக்ஷரக்ஷஜநார்த்தந" என்று முறையிட, அப்போதுமுப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ருஷிகளும் சதுர்முகப்ரஹ்மாவும் ஸ்ரீவைகுண்டத்திலேசென்று ப்ரபத்திபண்ணிமுறையிட, எம்பெருமானும்)புஷ்கலாவர்த்தகமென்கிற ப்ரளயகாலமேகங்களை அக்நி ஶமிக்கும்படி ஆஜ்ஞாபிக்க,†(மேகங்கள் தண்டன் ஸமர்ப்பித்து 'ஸ்வாமி! ஸுதர்ஶநாம்ஶஜரான பார்க்கவமஹர்ஷிபாதாங்குஷ்டநேத்ராக்நியை ஶமிப்பிக்கவும் பார்க்கவும் எங்களுக்கு ஶக்தியும் உண்டோ?' என்ன, ஸ்வாமியும் 'என்னுடைய க்ருபையாலே உங்களுக்குப் பலமுண்டாம்' என்ன,) அம்மேகங்களும் மின்னி முழங்கி வில்லிட்டு அகிலதாபங்களும் அடங்கும்படி ஆகாசாவகாசமடைய நிறைந்து அபிவர்ஷிக்க, அவ்வர்ஷத்தாலே எரி

† குண்டலித க்ரந்தங்கள் சிலப்ரதிகளிற் காணப்படுகின்றன.



கிற அக்நியும் அணைந்து பெருவெள்ளங்கோக்க, ஆழ்வாரும் (க) "கிரயோவர்ஷதாராபிர்ஹந்யமாநாநவிவ்யது:"என்கிறபடியே அத்ரிராஜனைப்போலே வர்ஷதாரைக்கு இறாயாமல் பகவதநுபவ தத்பரராயிருக்கிறபடியைக்கண்டு அவனும் விஸ்மயப்பட்டு இவருக்கு'பக்திஸாரர்' என்று திருநாமத்தையும் சாத்தி இவர்வைபவத்தைக்கொண்டாடி ஶிர:கம்பநம்பண்ணி, 'அம்பரீஷனாலே துர்வாஸா அவமாநப்பட்டானிறே: ஆகையாலே, பாகவதர்கள் ஸுதுர்ஜயர்' என்று ஸ்வபத்நிக்கு உரைத்துக்கொண்டு யதாஸ்தாநமே போந்தான்.

பின்னையும் ஆழ்வார் பூர்வம்போலே யோகத்திலேயெழுந்தருளியிருக்க, யாத்ருச்சிகமாக வ்யாக்ராரூடனாய் சுக்திஹார னென்பானொரு கேசரன் ஆகாசமார்க்கத்திலே செல்லாநிற்க, ஆழ்வாருடைய யோகப்ரபாவத்தாலே இவர்மேலேபோக க்ஷமமன்றிக்கே வ்யாக்ரமும் திமிர்த்துநிற்க, அவனும் இதேதேதென்று பார்த்துக்கொண்டு வருமளவில், கீழே மௌநியாய் யோகத்திலே யெழுந்தருளியிருக்கிற ஆழ்வாரைக் கண்டு விஸ்மயப்பட்டுத் தத்க்ஷணத்திலே ஆகாசத்தினின்றும் பூமியில் வந்து வ்யாக்ரவாஹநத்தினின்றும் இறங்கி இவரண்டையிலேவந்து 'பார்க்கவமுநீந்த்ரரே! இக்கந்தாவரணத்தைப் போகட்டு நான் தருகிற திவ்யபடநிர்மிதமான இந்தக்கவசத்தைத் தரியும்' என்று ஒருகவசத்தைக்கொடுக்க, இவரும் அத்தை நிஷேதித்து ஸ்வஸங்கல்பத்தாலே மணிஸ்வரூபமாய் த்யுமணிப்ரபோபமமான கவசத்தை அவனுக்குக்காட்ட, அவனும் லஜ்ஜாவிஷ்டனாய், தன் கழுத்தில் ஹாரத்தை வாங்கி 'இத்தை அக்ஷமாலையாகத்தரியும்'என்று கொடுக்கத்தேட, இவரும் தம கழுத்தில் துளஸீபத்மாக்ஷமாலையை வாங்கி 'இத்தை பாராய்' என்ன, அது நவரத்நஹாரமாய்விளங்கக் கண்டு, அவனும் 'இவர் மஹாநுபாவர், மஹாபரிபூர்ணர்' என்று தண்டனிட்டு, இவர்வைபவத்தைக் கொண்டாடி யதாஸ்தாநமே போந்தான்.

பின்னையும் அங்கே இவர் யோகநிஷ்டராயெழுந்தருளியிருக்கச்செய்தே, 'கொங்கணஸித்தன்' என்கிற பெயரையுடையனாய் ரஸவாதியாயிருப்பானொருவன் வந்து, இவ்வாழ்வாருடைய வைபவத்தைக் கண்டு இவருக்குக் காணிக்கோடியைப் பேதிப்பதான ரஸகுளிகையை ஸமர்ப்பிக்க, இவரும் அத்தை அநாதரித்து 'நமக்குவேண்டாம்' என்று அவனுக்குத் தம்முடைய பொன்னொத்த மேனியின்

(க) "கிரயோவர்ஷதாராபிர்ஹந்யமாநா நவிவ்யது:"

புழுதியோடே தம்காதிற் குறும்பியை யுருட்டி 'இந்தக் காணி குளிகை கோடாகோடியைப் பேதிக்கும்' என்று கொடுத்தருள, அவனும் அப்படியே பரீக்ஷிக்க, அது சொன்னபடிக்கு ஒத்திருக்கையாலே அதிப்ரீதியுடனே ஆழ்வாரைத் தண்டனிட்டு, 'தந்யோஸ்ஹம்' என்று க்ருதார்த்தனாய்ப் போந்தான்.

அநந்தரம் திருமழிசைப்பிரானும், ஒரு குஹாந்தராவிஷ்டராய், நிப்ருதாக்ஷவ்ருத்தியையுடையராய் யோகத்திலே யெழுந்தருளியிருக்க, அவ்வளவிலே பொய்கை பூதன் பேயாழ்வாராகிற முதலாழ்வார்கள் மூவரும் * எங்குந்திரிந் தரங்கனெம்மானுக்கே காதல்செய் தொண்டராய் ஸஞ்சரித்து வருகிறவர்கள், ஸுதூரத்திலே அப்ராக்ருததிவ்யதேஜஸ்ஸைக் கண்டு ஆஶ்சர்யப்பட்டு, 'இத்தை ஆராயக்கடவோம்' என்று எங்கும் திரிந்து சோதித்துவந்து, குஹாந்தராவிஷ்டரான பக்திஸாரரை 'இம்மஹாநுபாவ ராரோ?' என்று திவ்யமான * நெஞ்சென்னும் உட்கண்ணாலே கண்டு, 'பார்க்கவமுநீந்த்ரரே! ஸுகமேயிருக்கிறீரோ?' என்று குஶலப்ரஶ்நம்பண்ண, அவரும் 'பத்மமாதவீகுஸுமகைரவோத்பவ முனிகாள்! நன்றாயிருக்கிறீர்களோ?' என்று வினவியருளி, அந்யோந்ய வந்தந பரராய் ஆஹ்லாதஶீதநேத்ராம்புக்கள் பனிப்பப் புளகீக்ருதகாத்ரராய் ஒருவரையொருவர் ஆலிங்கித்துக்கொண்டு மிகவும் ப்ரீதியுடனே எல்லாரும் ஸதாபரகுணாவிஷ்டராய் யோகத்திலே எழுந்தருளியிருந்தார்.

இவர்கள் ஒருவர்க்கொருவர் பாலும்பாலும் சேர்ந்தாற்போலவும், தேனுந்தேனுங் கூடினாற்போலவும், பகவச்சரணாரவிந்தத்யாநாம்ருதாஸ்வாதநம் *தேனூறியெப்பொழுதும் தித்திதது ஐகரஸ்யத்தாலே எல்லாருக்கும் ப்ரணயரஸம் உந்மஸ்தகமாம்படி பகவதநுபவம் பண்ணியிருந்தார்கள். பின்பு எல்லாரும் உகந்ததிருவுள்ளத்தை யுடையராய் மயிலைநகரி யேற வெழுந்தருளி, அங்கே பேயாழ்வார் திருவவதரித்தருளின கைரவதீர்த்தத்தையும் ப்ரீதியுடன் ஆலோகித்துக்கொண்டு தத்தீரத்திலே சிலகாலம் யோகத்திலெயெழுந்தருளியிருந்து பின்பு "ஓடித்திரியும் யோகிகள்" என்னும்படியே பூர்வம்போலே பார்க்கவமுநீந்த்ரரை அநுவர்த்தித்து அநுமதிகொண்டு பூஸஞ்சாரார்த்தமாக முதலாழ்வார்கள்மூவரும் எழுந்தருளினார்கள்.

அநந்தரம், பார்க்கவமுநீந்த்ரரும், தம்முடைய திருவவதாரஸ்தலமான திருமழிசையிலே எழுந்தருளி, சாத்துகைக்குத் திருமண்வேண்டிக் கல்லிஶோதித்தவிடத்தில் திருமண் அகப்படாமல்



முசித்துக்கிடக்க, அப்போது * திருவேங்கடத்தெந்தை இவர்ஸ்வப்நத்திலே யெழுந்தருளித் திருமண் இருக்குமிடம் அடையாளமாகக் காட்டியருள, அங்கே திருமண்கண்டெடுத்து அத்திருமண்கொண்டு பன்னிரண்டுதிருநாமஞ் சாத்தியருளிப் பெரியப்ரீதியுடனே "சிந்தை மற்றொன்றின் திறத்ததல்லாத் தன்மை" என்கிறபடியே க்ஷுத்ரபுருஷார்த்தங்களில் நசையற்றுப் பகவதநுபவம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருக்கிற இவரும், பொய்கைப்பிரானவதரித்தருளின பொய்கைப்ரதேசத்திலே சிலகாலம் ஸேவித்திருக்கத் திருவுள்ளமாய், (க) "யத்துஸத்யவ்ரதம்நாம க்ஷேத்ரம்பாபவிநாஶநம் - புண்யக்ஷேத்ரேஷு ஸர்வேஷு தஸ்யைவஶ்ரைஷ்ட்யமீரிதம்" என்று சொல்லுகிறபடியே புண்யக்ஷேத்ரங்களில்வைத்துக்கொண்டு ஶ்ரேஷ்டமுமாய்ப் பாபஹரமுமாய் ஸத்ய வ்ரதக்ஷேத்ரமென்று பேரையுடையதுமான கச்சிவெஃகாவிலே எழுந்தருளி, (உ) "ஶயாநஶ்ஶேஷபர்யங்கே குந்தேந்துதவளப்ரபே - பணாரத்நஸஹஸ்ராம்ஶுநவாஸ்தரணவிஸ்த்ருதே - நீலஜீமூதஸங்காஶ: பத்மபத்ரநிபேக்ஷண: - ஸேவ்யமாநோ விஶாலாக்ஷ்யா ஶ்ரியாகமலஹஸ்தயா - தரண்யா சாநுரக்தாத்ம்யா தாதா விஶ்வஸ்யவிஶ்வபுக்" என்றும், "தேவிமாராவார் திருமகள்பூமி" என்றும் சொல்லுகிறபடியே ஸ்ரீபூமிநீளைகளாலே ஸேவ்யமாநனாய்க்கொண்டு "பணங்களாயிரமுடையநல்லரவணைப்பள்ளிகொள்பரமா" என்கிறபடியே பெரியதிருவநந்தாழ்வானை திருவணையிலே *வெஃகாவில் துயிலமர்ந்தவேந்தை ஸேவித்து, பொய்கையாழ்வாரவதரித்தருளின அந்தத்திருப்பொய்கைக்கரையிலே அவரை த்யாநம்பண்ணிக்கொண்டு யோகத்திலே எழுநூறு ஸம்வத்ஸரம் எழுந்தருளியிருக்கிற காலத்திலே,

இவர் திருவடிகளிலே கணிகண்ணர் வந்து ஆஶ்ரயித்துப் பகவத்ப்ரவணராயிருக்க, அவ்வளவிலே அங்குள்ள ஒருஸ்த்ரீயானவள் வந்து ஆழ்வாரை ஸேவித்து அவர் திருவடிகளிலே பக்தியுக்தையாய் அவர் எழுந்தருளியிருக்கிறவிடத்தை "கடைத்தலை சீக்கப்பெற்

---

(க) "யத்தத்ஸத்யவ்ரதம் நாம க்ஷேத்ரம் பாபவிநாஶநம் ।
புண்யக்ஷேத்ரேஷு ஸர்வேஷு தஸ்ய ஶ்ரைஷ்ட்யமுதீரிதம் ॥"

(உ) "ஶயாநஶ்ஶேஷபர்யங்கே குந்தேந்துதவளப்ரபே । பணாரத்நஸஹஸ்ராம்ஶுநவாஸ்தரணவிஸ்த்ருதே ॥ நீலஜீமூதஸங்காஶ: பத்மபத்ரநிபேக்ஷண: । ஸேவ்யமாநோ விஶாலாக்ஷ்யா ஶ்ரியா கமலஹஸ்தயா ॥ தரண்யா சாநுரக்தாத்ம்யா தாதா விஶ்வஸ்ய விஶ்வபுக் ॥"

றால் கடுவினைகளையலாம்'' என்கிறபடியே ஸம்மார்ஜநகோமயாநுலேப
நரங்கவல்யாத்யலங்காரங்களாலே அநுதிநம் சுச்ரூஷிக்க, யோகத்
திலே யெழுந்தருளியிருக்கிற இவ்வாழ்வார் ஒருநாள் திருக்கண்களை
விழித்துப்பார்த்து, இவள்செய்கிற கிங்கரவ்ருத்திக்கு மிகவும் உகந்த
வுள்ளத்தராய், அந்த வ்ருத்தையைப் பார்த்து 'உன் அபீஷ்டத்தைச்
சொல்லிக்காணாய், உனக்கு ஒருவரப்ரதாநம் பண்ணுகிறோம்' என்று
அருளிச்செய்ய, அவளும் அப்படியே ஆழ்வாரைக்குறித்து 'அடி
யேனிடத்தில் க்ருபாதிசயமுண்டாகில் அடியேனுக்கு இந்த வார்த்
தகம்போம்படி கடாக்ஷித்தருளவேணும்' என்ன ஆழ்வாரும் 'அப்
படியே ஆகக்கடவது' என்று அவளைக் குளிரக்கடாக்ஷித்தருள,
அவளும் இவர்கடாக்ஷத்தாலே ப்ராப்தயௌவனையாய்த் தேவஸ்
த்ரீயைப்போலே அதிஸுந்தரையாக, அவ்வளவிலே, தத்ராஜ்யாதி
பதியான பல்லவராயனும் இவளைக்கண்டு, மந்மதபாணபாதிதனாய்த்
தனக்குப் பத்நியாகவேணுமென்று ப்ரார்த்திக்க, அவளும் அநுகூ
லித்து அவனுடனே அதிமாநுஷமானபோகங்களை அநுபவியாநிற்க,

ஒருநாள், பல்லவராயன், தனக்கு ஒருநாளைக்கொருநாள் ஶரீ
ரம் ஜரித்துவரக் கண்டு, அவளைக்குறித்து 'உனக்கு அதிமாநுஷ
மான இந்த யௌவநம் எங்ஙனேயுண்டாயிற்று?' என்று கேட்க,
அவளும் அவனைக்குறித்து ஆழ்வார்கடாக்ஷத்தாலே தனக்கு உண்
டானபடியைச் சொல்லி, 'நீயும் உன்னகத்திலே அநுதிநம் உபாதா
நம்பண்ணவருகிற கணிகண்ணரை அநுவர்த்தித்து அவர்புருஷகார
மாகத் தத்தேசிகரான பக்திஸாரரை அநுவர்த்தித்தாயாகில், உனக்
கும் இப்படிப்பட்ட யௌவநம் உண்டாம்' என்றுசொல்ல, அப்
போது ராஜாவும் கணிகண்ணரையழைத்து, உம்முடைய ஆசார்
யரை நாம் ஸேவிக்கவேணும்: அவரை நம்பக்கல் அழைத்துக்
கொண்டு வரவேணும்' என்று சொல்ல, கணிகண்ணரும், 'நம்ஆசார்
யர் ஒருவரகத்துக்கும் எழுந்தருளார், ஒருராஜாவையும் கணிசித்துப்
பாரார்' என்ன, பின்னையும் ராஜாவான பல்லவராயன் தன்னைக்கவி
பாடவேணு மென்று கணிகண்ணரை அபேக்ஷிக்க, *வைகுந்தச்செல்
வனார்சேவடியைப் பாடுகையொழிய, * "நாக்கொண்டுமானிடம்பா
டேன்' என்றும, "வாய்கொண்டு மானிடம்பாடவந்த கவியேனல்
லேன்'' என்றும் இப்படி தம்முடைய அத்யவஸாயஹேதுவான
சிஷ்டாசாரவசநங்களைச்சொல்லி 'பகவத்பாகவதவிஷயமொழிய நான்
நரஸ்துதிபண்ணுவதில்லை' என்ன, 'ஆகிலும், நீர் நம்மைப்பாடவே
ணும்' என்று அவன் இவரை நிர்ப்பந்திக்க, கணிகண்ணரும்



† "ஆடவர்க ளெங்ஙனகல்வா ரருள்சுரந்து, பாடகமு மூரகமும்
பாம்பணையும் - நீடியமால், நின்று மிருந்தான் கிடந்தானிதுவன்றோ,
மன்றூர் ‡ பொழிற்கச்சி மாண்பு'' என்று சொல்ல, அவனும் 'நம்
மைப்பாடென்றால் இங்ஙனே சொல்லலாமோ?' என்று மிகவும் குபி
தனாய்க் கொண்டு 'ஆகில், நம்முடைய ராஜ்யத்தினின்றும் போம்'
என்ன, (க) "ஆஜ்ஞாமநுஜ்ஞா-ஏர்த்தேந'' என்கிறபடியே சடக்கென
ஸ்வாசார்யரான பக்திஸாரமுனிகள் திருமுன்பே வந்து தண்டன்
ஸமர்ப்பித்து அச்செய்தியை விண்ணப்பஞ்செய்து 'அடியேன் இவ்
விடத்தில்நின்றும் விடைகொள்ளுகிறேன்' என்ன, ஆழ்வாரும் 'நீர்
போகிறீராகில், நாம் இங்கிருக்கப்போகிறோமோ? நாம் புறப்பட்
டால், எம்பெருமான் இங்குக் கண்வளரப்போகிறானோ? அவனெழுந்
தருளும்போது, தத்பரிகரபூதரான ப்ரஹ்மாதிகள் இங்கிருக்கப்போ
கிறார்களோ?' என்று அருளிச்செய்து, '*வெஃகாவிலுன்னிய யோகத்
துறக்கமானவனையும் எழுப்பிக்கொண்டு வருகிறோம்' என்றுசொல்லி,
திருவெஃகாநாயனார் திருமுன்பே எழுந்தருளி அவரைப்பார்த்து
"கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி,மணிவண்ணா நீகிடக்க
வேண்டா - துணிவுடைய, செந்நாப்புலவனும்போகின்றேன் நீயுமுன்
றன், பைந்நாகப்பாய் சுருட்டிக்கொள்'' என்று ஆழ்வார் விண்ணப்
பஞ்செய்ய, அவர் சொன்னவண்ணஞ் செய்து இவருடையபின்னே
எழுந்தருள, "சுடர்கொள்சோதியைத் தேவரும் முனிவருந்தொடர''
என்கிறபடியே மற்றும் அத்தேசத்தில் ஆலயங்களில் தேவதைகளும்
பின்தொடர எழுந்தருளுகையாலே, (உ) "அபிவ்ருக்ஷா꞉பரிம்லா
நா꞉ ஸபுஷ்பாங்குரகோரகா꞉ - உபதப்தோதகாநத்ய꞉ பல்வலாநிஸ
ராம்ஸிச'' என்று சொல்லுகிறபடியே திருவயோத்யை ராமவிஶ்லே
ஷத்தாலே பொலிவழிந்தாப்போலே காஞ்சீநகரத்திலே தரு குல்ம
லதாதிகளும் நதீதடாகங்களும் மிகவும்வாடி அழகழிந்து தத்ராஜ
யத்தில் கோயில்களில் எம்பெருமான்களுமில்லாதே ஆலயங்களிலே
தேவதைகள் ஒருவருமின்றியே அந்தகாரம்கவிந்து உதயாஸ்தமயந்
தெரியாதே "நீளிரவாய் நீண்டதால்'' என்கிறபடியே கநதிமிரபூயிஷ்ட
மானபடியை ராஜாவும் மந்த்ரிகளுங் கண்டு, போர க்லேசித்து இவர்

---

(க) "ஆஜ்ஞாமநுஜ்ஞா-ஏர்த்தேந'' (உ) "அபிவ்ருக்ஷா꞉பரிம்லா
நா꞉ ஸபுஷ்பாங்குரகோரகா꞉ | உபதப்தோதகா நத்ய꞉ பல்வலாநி
ஸராம்ஸிச ||''

† 'எவ்வா றகன்றொழிவார் வெஃகாவும், பாடகமு மூரகமும் பஞ்ச
ரமா' என்றும் பாடம். ‡ 'மதிற்கச்சி' என்றும்பாடம்.

களைப் பின்தொடர்ந்துசென்று, † 'ஓரிரவிருக்கை' என்கிற ஊரிலே இவர்களைக் கண்டு கப்படத்தைக்கட்டிக் காலிலேவிழுந்து கணிகண்ணரை வேண்டிக்கொள்ள, கணிகண்ணரும் மீண்டெழுந்தருளும்படி ஆழ்வாரை வேண்டிக்கொள்ள, ஆழ்வாரும் மீண்டெழுந்தருளத் திருவுள்ளமாய் ஆஶ்ரிதபரதந்த்ரரான சொன்னவண்ணஞ்செய்த பெருமாளைப்பார்த்து, "கணிகண்ணன்போக்கொழிந்தான் காமரு பூங் கச்சி, மணிவண்ணா நீகிடக்கவேண்டும் - துணிவுடைய, செந்நாப்புலவனும் போக்கொழிந்தேன் நீயுமுன்றன், பைந்நாகப் பாய்படுத்துக்கொள்" என்று விண்ணப்பஞ்செய்ய, எம்பெருமானும் மீண்டெழுந்தருளி, ஆழ்வார்சொன்னவண்ணஞ்செய்தது எல்லார்க்கும் ப்ரத்யக்ஷமாகவேணுமென்று இடத்திருக்கை கீழ்படக் கண்வளர்ந்தருளினர். இப்படி "விருப்புடையவெஃகாவேசேர்ந்தானை" என்கிறபடியே சேர்ந்து * நாகத்தணையைப் படுக்கையாகப்படுத்துக்கொண்டு கண்வளர்ந்தருளின இந்தஸௌலப்யத்தை அநுஸந்தித்திறே "வெஃகணைக்கிடந்த தென்னநீர்மையே!" என்று ப்ரீதராயருளினர். அந்த நகரிதானும் "நிறைந்தசீர்நீள்கச்சி" என்னும்படி பொலிவையுடைத்தாயிருக்கையாலே, அவ்விடத்திலே * வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை உள்ளத்துக்கொண்டு யோகத்திலே பின்னையும் சிலகாலம் எழுந்தருளியிருந்து,

அநந்தரம், கும்பகோணயாத்ராபேக்ஷையை யுடையராய் (க) "யோநர:கும்பகோணேஸ்மிந்க்ஷணார்த்தமபிதிஷ்டதி - கரஸ்த்தந்தஸ்யவைகுண்டங்கிமுதாந்யாவிபூதய:" என்கிறபடியே * வைகுந்தமாநகர்மற்றதுகையதுவாகத்தக்க ப்ரபாவாதிஶயத்தையுடைத்தான திருக்குடந்தையிலே நித்யவாஸம்பண்ணி ஆராவமுதாழ்வாருடைய * ஏரார்கோலத்தை யோகத்திலேகொண்டு எழுந்தருளியிருக்கத் திருவுள்ளமாய், "நலத்தால்மிக்கார் குடந்தைக்கிடந்தா யுன்னைக்காண்பான் நானலப்பாய்" என்கிறபடியே அதித்வரையோடே எழுந்தருளாநிற்கச்செய்தே, பெரும்புலியூரென்கிற க்ராமத்திலே சென்று ஒரு திண்ணையிலே அவஸரித் தெழுந்தருளியிருக்க, அத்திண்ணையிலேயிருந்து அத்யயநம்பண்ணுகிற ப்ராஹ்மணர்கள் இவரைக்கண்டு விப்ரதிபத்திபண்ணி வேதாத்யயநத்தைத் தவிர்ந்திருக்க, பின்னை அவர்களுக்குவிட்டதறுவாய்தோன்றாமல் தடுமாற, ஆழ்வாரும் அத்தைக்

(க) "யோ நர: கும்பகோணேஸ்மிந் க்ஷணார்த்தமபி திஷ்டதி । கரஸ்தம் தஸ்ய வைகுண்டம் கிமுதாந்யா விபூதய: ॥"

† 'ஓரிருக்கை' என்றும், 'ஓரிக்கை' என்றும் வழங்குவர்.



கண்டு கறுப்புநெல்லை உகிராலேயிடந்து ஸம்ஜ்ஞையாலே அந்த வாக்யத்தை ஸூசிப்பித்தருள, பின்பு அவர்களுக்கு (க) "க்ருஷ்ணாநாம் வ்ரீஹீணாம்நகநிர்ப்பிந்நம்" என்கிற வாக்யம்தோற்ற, (உ) "நஶூத்ராபகவத்பக்தா விப்ராபாகவதாஸ்ஸ்ம்ருதா:" இத்யாதிப்படியே அவர்கள் தெளிந்துவந்து தண்டன்ஸமர்ப்பித்து க்ருதார்த்தரானார்கள்.

பின்னையும் அந்தக்ராமார்ச்சையான எம்பெருமானும் இவ்வாழ்வார் உபாதாநார்த்தமாக ஸஞ்சரித்தருளுகிற திருவீதிகள்தோறும் அபிமுகமாய்த் திரும்பியருள, இந்த ஆஶ்சர்யத்தை நம்பியார் கண்டு, சில ப்ராஹ்மணர்க்குக் காட்ட, அவர்கள் அந்தக்ராமத்திலே யாகம் பண்ணுகிற பெரும்புலியூரடிகளுடைய யாகசாலையிலே சென்று "கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியன கண்டோம்" என்று இவருடைய ப்ரபாவத்தைச் சொல்ல, தீக்ஷிதரும் கேட்டு "மெய்யடியார்கள்தம் ஈட்டங் கண்டிடக்கூடுமேல் அதுகாணுங்கண்பயனாவதே" என்றுகொண்டு (ங) "அக்ஷ்ணோ:பலம் த்வாத்ருஶதர்ஶநம்" என்று சொல்லுகிறபடியே அதிஹர்ஷத்துடன் யாகசாலையினின்றும் புறப்பட்டு ஆழ்வாரெழுந்தருளி யிருக்குமிடத்தேறவந்து இவருடைய சக்தி பஞ்சமயமான விக்ரஹத்தைக் கண்டு ஸேவித்து, "போதுமினமதிடம் புகுதுக" என்கிறபடியே நம்முடைய யாகசாலைக்கு எழுந்தருளவேணுமென்று விண்ணப்பஞ் செய்து எழுந்தருளுவித்துக்கொண்டுபோய் இவ்வாழ்வாருக்கு அக்ரபூஜைபண்ண, அத்தைக் கண்டு அங்குள்ள அத்வர்யுதொடக்கமான சடங்கிகளடைய 'இவரைக் கொண்டுபுகுந்து யாகத்தை உபஹதியாக்கிற்றே!' என்று தர்மபுத்ரன் ராஜஸூயயாகத்திலே க்ருஷ்ணனுக்கு அக்ரபூஜை பண்ணினபோது சிசுபாலன் பஹுமுகமாகப் பருஷோக்திகளைப் பண்ணினாப்போலே இவர்களும் ஆழ்வாரைப் * பொறுப்பரியனகள்பேசி அதிக்ஷேபிக்க, தீக்ஷிதரும் வ்யாகுலாந்த:கரணராய் ஆழ்வாரைப்பார்த்து, 'இவர்கள் * ஏதேனும்பேச நான் கேட்கமாட்டேன்' என்று விண்ணப்பஞ் செய்ய, ஆழ்வாரும் இனி நம்மை வெளியிடாதிருக்க வொண்ணாதென்று பார்த்து, (ச) "அஷ்டாங்கயோகஸித்தாநாம் ஹ்ருத்யாக

(க) "க்ருஷ்ணாநாம் வ்ரீஹீணாம் நகநிர்பிந்நம்" (உ) "நஶூத்ரா பகவத்பக்தா விப்ரா பாகவதா: ஸ்ம்ருதா:" (ங) "அக்ஷ்ணோ: பலம் த்வாத்ருஶதர்ஶநம்" (ச) "அஷ்டாங்கயோகஸித்தாநாம் ஹ்ருத்யாகமித ... தாத்மநாம் । யோ விபாதி ஸதா ... ஹ்ருதயே ஸோ(அ)யம் ॥"

நிரதாத்மநாம் - யோகிநாமதிகாரஸ்ஸ்யா தேகஸ்மிந்ஹ்ருதயேயயே' என்கிறபடியே தமக்கு அந்தர்யாமியாய் * அற்புதனை அநந்த சயநனைக்குறித்து "அக்கரங்களக்கரங்களென்று மாவதென்கொலோ, இக்குறும்பைநீக்கி,யென்னையீசனுக்கவல்லையேல், சக்கரங்கொள்கையனே சடங்கர்வாயடங்கிட, உட்கிடந்தவண்ணமே புறம்பொசிந்து காட்டிடே" என்று விண்ணப்பஞ்செய்தருள, * ஒண்சங்கதைவாளாழியானும் "தம்மையேநாளும் வணங்கித் தொழுவார்க்குத், தம்மையேயொக்கவருள்செய்வர்" என்கிறபடியே * அரவத்தமளியினேடும் அழகியபாற்கடலோடும் அரவிந்தப்பாவையுந்தானுமாய்ப் பெரியதிருவனந்தாழ்வான்மேலே * வடிவிணையில்லாமலர்மகள் மற்றைநிலமகள் மெல்லடிபிடிக்கும்படி கண்வளர்ந் தருளும்படியை அனைவருங் கண்டநுபவிக்கும்படி ஆழ்வாருடைய திருமேனியிலே ப்ரத்யக்ஷமாக்கி இவருக்கு ஸாரூப்யப்ரதாநம்பண்ணியருள, இவரும் ஸாரூப்யத்தைப் பெற்று எல்லாருங்காணலாம்படி எழுந்தருளியிருக்க, முன்பு கர்ஹித்த சடங்கிகளுடைய ஆழ்வாருடைய ஹ்ருதயத்தில் ப்ரகாசிக்கிற எம்பெருமானுடைய திவ்யமங்களவிக்ரஹத்தை இவர் உரஸ்ஸிலே ப்ரத்யக்ஷமாக ஸேவித்துத் திருவடிகளிலே ஸாதரமாக ஸாஷ்டாங்க ப்ராணாமத்தைப்பண்ணி க்ஷமைகொண்டு ஆழ்வாரை ப்ரஹ்மரதம் பண்ணி உபலாளித்து "நக்ஷமாமி"க்கு லக்ஷ்யமாகாமல் * திருமாலடியார்களைப் பூசிக்கநோற்று க்ருதார்த்தரானார்கள். ததநந்தரம் இவரும் அவர்களுக்கு பஹுப்ரகாரமாக ஜ்ஞாநப்ரதாநம்பண்ணி பஹுவிதக்ருபைசெய்தருளி வாழ்வித்து, * செழுமாமணிகள் சேருந் திருக்குடந்தையை நோக்கி எழுந்தருளினார்.

அநந்தரம் நிஜஸம்புடயதங்களைத் திருக்காவேரீபயப்ரவாஹத்திலே ப்ரக்ஷேபிக்க, நிரவக்ரஹப்ரவாஹத்தாலே நிஜஸம்புடயதங்கள் நீயமாநங்களாயுள்ளவளவில், நான்முகன் திருவந்தாதியும் திருச்சந்த விருத்தமும் என்கிற திவ்யப்ரபந்தங்கள் எதிர்த்துவந்து ஆழ்வார் திருவடிகளண்டையிலே யிருக்க, அவற்றையெடுத்துக்கொண்டு ஆராவமுதாழ்வாருடைய * ஏரார்கோலத்தையுங்கண்டு அவ்வநுபவஜநித ப்ரீத்யதிசயத்தாலே "காவிரிக்கரைக்குடந்தையுள் கிடந்தவா றெழுந்திருந்துபேசு" என்று விண்ணப்பஞ்செய்ய, ஆராவமுதாழ்வாரும் அப்படியே உத்யோகிக்க, அந்த ஸௌலப்யகுணத்துக்குத் தோற்று "வாழி கேசனே" என்று மங்களாசாஸநம்பண்ண, எம்பெருமானும் அப்படியே உத்தாநசாயியாயருள, அப்படியான விக்ரஹத்தை த்யாநம்பண்ணிக்கொண்டு யோகத்திலே இரண்டாயிரத்து முந்நூறு ஸம்



வத்ஸரம் எழுந்தருளியிருந்தார். = இப்படி திருமேனியுடனே அந்நாஹாரவர்ஜிதராய் க்ஷீராஹாரதாரகராய் நாலாயிரத்தெழுநூறு ஸம்வத்ஸரம் பகவதநுபவம்பண்ணிக்கொண்டு, எழுந்தருளியிருந்து "ஆழ்பொருளைச் சிந்தாமற்கொண்மின் நீர் தேர்ந்து" என்று நான்முகன் திருவந்தாதி, திருச்சந்தவிருத்தம் என்கிற திவ்யப்ரபந்தங்களைப் பரமஸாத்விகராய் நாராயணைகபரரான முமுக்ஷுக்களுக்குத் தம்முடைய பரமக்ருபையாலே உபகரித்தருளி லோகத்தை வாழ்வித்தருளினார்.

## குலசேகரப்பெருமாள் வைபவம்.

(க) "குஷ்யதேயஸ்யநகரே ரங்கயாத்ராதிநேதிநே -
தமஹம்ஶிரஸாவந்தே ராஜாநங்குலஶேகரம்."

(உ) † "கல்யப்தேஷு கஸங்க்யபாவ்யபகதேமாஸேசமாகாபிதே
வர்ஷேசாபிபராபவேஸுரகுரோர்வாரேசபக்ஷேயுசௌ -
த்வாதஶ்யாக்யதிதௌபுநர்வஸுதிநேப்ரீத்யாக்யயோ ஶாங்விதே
த்ராதுந்ந꞉குலஶேகர꞉க்ஷிதிபதிஶ்ஸ்ரீகௌஸ்துபாத்மா ஸ்ஹவத்"

இங்கே அவதாரக்ரமம்பார்க்கில் நம்மாழ்வார் திருவவதார வைபவம் சொல்லலாயிருக்க, ஸ்ரீகுலசேகராழ்வார் திருவவதாரவைபவம் சொல்லுகிறது, அவயவநிரூபணம்பண்ணியே அவயவியை நிரூபிக்க வேண்டுகையாலே.

ஸ்ரீகுலசேகரப்பெருமாள், கொல்லிநகரென்கிற திருப்படைவீட்டிலே, * சேரன் குலசேகரராய்க்கொண்டு க்ஷத்ரியவர்ணத்திலே மாசிமாஸத்தில் புநர்பூசநக்ஷத்ரத்தில் ஸ்ரீகௌஸ்துபாம்சராய் அவதரித்தருளினார். (ங) "தஸ்யாமபூச்சேரகுலப்ரதீபஶ்ஸ்ரீகௌஸ்துபாத்

(க) "஘ுஷ்யதே யஸ்ய நகரே ரங்கயாத்ரா தினே தினே । தமஹம் ஶிரஸா வந்தே ராஜானம் குலஶேகரம் ॥" (உ) "கல்யப்தே ஷு கஸங்க்யயா வ்யபகதே மாஸே ச மாகாபிதே வர்ஷே சாபி பராபவே ஸுரகுரோர் வாரே ச பக்ஷே ஶுசௌ । த்வாதஶ்யாக்ய திதௌ புனர்வஸு தினே ப்ரீத்யாக்யயோகான்விதே த்ராதும் ந꞉ குலஶேகர꞉ க்ஷிதிபதி꞉ ஶ்ரீகௌஸ்துபாத்மாऽபவத் ॥" (ங) "தஸ்யாமபூச்சேரகுலப்ரதீப꞉ ஶ்ரீகௌஸ்துபாம்ஶாத் குலஶேகராக்ய꞉ । ஶ்ரீவத்ஸசிஹ்னஸ்ய புனர்வஸுஸ்தே ஸ்வம்ஶேந மாஸே ஸுபநக்ஷத்ரஸ்ய꞉ ॥"

† இந்தச்சுலோகம் சில ஏட்டுப்பிரதிகளில் இல்லை.

மாகுலஶேகராக்ய: - யஹீபதிர்மாகபுநர்வஸூத்பத்திநேஹஶ்ரேः பூர்ணகடாக்ஷலக்ஷ்ய:" என்று திவ்யஸூரிசரிதத்திலே சொல்லிற்றிறே.

"மாற்றலரை, வீரங்கெடுத்த செங்கோற் கொல்லிகாவலன் வில்லவர்கோன், சேரன் குலசேகரன் முடிவேந்தர்சிகாமணி" என்று சொல்லப்படுகிற இவர், ரதகஜதுரகபதாதி என்கிற சதுரங்கபலத்தையுடையராய், ப்ரதிபக்ஷங்களையெல்லாம் காந்திஶீகராம்படி காடேறவோட்டி, "கொல்லிகாவலன் கூடல்நாயகன் கோழிக்கோன் குலசேகரன்" என்றும், "கூரார்ந்த வேல்வலவன் கோழியர்கோன் குடைக் குலசேகரன்" என்றுஞ் சொல்லுகிறபடியே தம்முடைய செங்கோலே செங்கோலாகப் படைவீடுகளிலேயிருந்து சிறியதைப்பெரியது நலியாதபடியும் துர்ப்பலரைப் பலவான்கள் பாதியாதபடியும், (க) "கோஸஹஸ்ரப்ரதாதாரம்" என்கிற பெருமாளைப்போலே ஸ்ரீகுலசேகரப் பெருமாளும் அத்யுதாரராய் ஸவிநயராய் ராஜ்யம் பண்ணிக்கொண்டு போராநிற்க,

தம்மை ஸ்வதந்த்ரராகவும் நியந்தாவாகவும் அபிமாநித்துக் கொண்டிருக்கிற இவரை, உபயவிபூதிநிர்வாஹகனாய் ஸர்வநியந்தாவான ஸர்வேஶ்வரன் தன் நிர்ஹேதுகபரமக்ருபையாலே ராஜஸதாமஸரஹிதராய் ஸத்வகுணப்ரசுரராம்படி கடாக்ஷித்து, இவர்க்கு* மயர்வறமதிநலமருளித் தம்முடைய ஸ்வரூபரூபகுணவிபூதிசேஷ்டிதங்களையெல்லாம் விஶததமமாகக் காட்டிக்கொடுக்க, அவற்றையெல்லாம் பகவத்பக்திரூபாபந்நஜ்ஞாநத்தையுடையவராய்க்கொண்டு இவ்வாழ்வார் கண்டவநந்தரம் ஸம்ஸாரிகளான இத்தேசியர் தேஹாத்மாபிமாநத்தைப்பண்ணி, (உ) "அக்ருத்யகரணாதாவப்யத்யந்தோத்பட வ்ருத்திகः - அர்த்தகாமாபிபூதோய முந்மத்தஇவ வர்த்ததே" என்கிறபடியே தேஹவஶ்யராய் தேஹபோகத்தை அநுபவித்து பகவத்விமுகராய் தேஹாத்மாபிமாநிகளாய் ஶப்தாதிவிஷய ப்ரவணரான இஸ்ஸம்ஸாரிகள் நடுவே தாமிருக்கிறஇருப்பு உயிர்க்கழுவிலேயிருந்தாற்போலேயும், "கொள்ளென்றுகிளர்ந்தெழுந்த பெருஞ்செல்வம் நெருப்பு" என்கிறபடியே யானைக்கழுத்திலே தாமிருந்து ராஜ்யம் பண்ணி ஸுகரூபமாக ராஜபோகத்தைப்புஜிக்கிற ராஜத்வமும் "அல்லலெனத் தோற்றி யெரிதீயிற்சுடும்" என்கிறபடியே அக்நிகல்ப

---

(க) "𑌗𑍋𑌸𑌹𑌸𑍍𑌰𑌪𑍍𑌰𑌦𑌾𑌤𑌾𑌰𑌮𑍍" (உ) "𑌅𑌕𑍃𑌤𑍍𑌯𑌕𑌰𑌣𑌾𑌦𑌾𑌵𑌪𑍍𑌯𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑍋𑌤𑍍𑌭𑌟𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌕𑌃 । 𑌅𑌰𑍍𑌥𑌕𑌾𑌮𑌾𑌭𑌿𑌭𑍂𑌤𑍋𑌽𑌯𑌮𑍍𑌉𑌨𑍍𑌮𑌤𑍍𑌤 𑌇𑌵 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ॥"



மாயுமிருக்கையாலே, மிகவும் அஸஹ்யமாய், (க) "பரித்யக்தாமயா லங்கா மித்ராணிசதநாநிச" என்றும், (உ) "த்யக்த்வாபுத்ராம்ஶ்ச தாராம்ஶ்ச ராகவம்ஶரணங்கத:" என்றும் சொல்லுகிறபடியே ஸ்ரீவிபீஷணாழ்வான் ஸகலபோகங்களையும் ஸவாஸநமாக த்யஜித்து ஸர்வலோகஶரண்யரான பெருமாளை ஆஶ்ரயித்தாப்போலே இவரும் "இன்பமருஞ்செல்வமும் இவ்வரசும் யான்வேண்டேன்" என்று ப்ரதிகூலங்களான ப்ராக்ருதபோகங்களில் நசையற்று,

* திருவரங்கத்தரவணையிற்பள்ளிகொள்ளும் கடல்விளங்கு கருமேனியம்மான்றன்னைக் கண்ணாரக்கண்டு உகக்குங் காதலையுடையராய், * அற்றபற்றர்சுற்றிவாழு மந்தணீரரங்கத்திலே தாமும் அற்றபற்றராய் அவ்விடத்திலே நித்யவாஸம்பண்ணி * விண்ணுளாரிலும் சீரியராய் "அணியரங்கன் திருமுற்றத்து அடியார்" என்கிறவிதுவே நிரூபகமாகவுடையராய் '*சாதுகோட்டியரான ஸ்ரீவைஷ்ணவர்களுடைய *இன்பமிகுபெருங்குழுவுகண்டு அநுபவிப்பதெப்போதோ? என்று (ந) "ஸ்ரீரங்கயாத்ராஸ்ரீரங்கயியாஸாசைவநாரத - உத்தாரயதிஸம்ஸாரம் நித்யவாஸஸ்துகிம்புந:" என்கிறபடியே'ஸ்ரீரங்கயாத்ரையும் ஸ்ரீரங்கயியாஸையும் * விடியாவெந்நகரைப்போக்கி வைகுந்தந்தர வற்றாயிருக்க அங்கே நித்யவாஸம்பண்ணில் சொல்லவேண்டாவிறே' என்கிற அர்த்தத்தை அறிந்தவராகையாலே ஸ்ரீரங்கயாத்ரையிலே நித்யபத்தசரத்தராய், (ச) "த்ரைலோக்யவிஶ்ருதாபுண்யா ஸ்வாமிபுஷ்கரிணீத்வியம் - கங்காத்யைஸ் ஸகலைஸ்தீர்த்தைஸ்ஸேவிதா விமலோதகா - தத்ரதேவர்ஷிகந்தர்வாஸ் வஸித்தாஶ்சபரமர்ஷய: - வஸந்திநியதாஹாரா வேங்கடாஹ்வயபூதரே" என்று கங்காதிஸகல தீர்த்தங்களிலும் உத்க்ருஷ்டதமமாகச்சொல்லப்பட்ட ஸ்வாமிபுஷ்கரிணியையுடைத்தாய் "வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்" என்று சொல்லுகிறபடியே பரமர்ஷிகள்தொடக்கமான மஹாத்மாக்களாலே நித்யவாஸம் பண்ணப்படுகிற * திருவேங்கடமாமலையிலே

---

(க) "𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌾 𑌮𑌯𑌾 𑌲𑌙𑍍𑌕𑌾 𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌚 𑌧𑌨𑌾𑌨𑌿 𑌚 ।" (உ) "𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌂𑌶𑍍𑌚 𑌦𑌾𑌰𑌾𑌂𑌶𑍍𑌚 𑌰𑌾𑌘𑌵𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌗𑌤𑌃" (ந) 𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑌯𑌾𑌤𑍍𑌰𑌾 𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑌶𑌯𑍍𑌯𑌾 𑌸𑌾 𑌚𑍈𑌵 𑌨𑌾𑌰𑌦 । 𑌉𑌤𑍍𑌤𑌾𑌰𑌯𑌤𑌿 𑌸𑌂𑌸𑌾𑌰𑌾𑌨𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌵𑌾𑌸𑌸𑍍𑌤𑍁 𑌕𑌿𑌂 𑌪𑍁𑌨𑌃 ॥" (ச) "𑌤𑍍𑌰𑍈𑌲𑍋𑌕𑍍𑌯𑌵𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌾 𑌪𑍁𑌣𑍍𑌯𑌾 𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌪𑍁𑌷𑍍𑌕𑌰𑌿𑌣𑍀 𑌤𑍍𑌵𑌿𑌯𑌮𑍍 । 𑌗𑌙𑍍𑌗𑌾𑌦𑍍𑌯𑍈𑌃 𑌸𑌕𑌲𑍈𑌸𑍍𑌤𑍀𑌰𑍍𑌥𑍈𑌃 𑌸𑍇𑌵𑌿𑌤𑌾 𑌵𑌿𑌮𑌲𑍋𑌦𑌕𑌾 ॥ 𑌤𑌤𑍍𑌰 𑌦𑍇𑌵𑌰𑍍𑌷𑌿𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌾𑌃 𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌶𑍍𑌚 𑌪𑌰𑌮𑌰𑍍𑌷𑌯𑌃 । 𑌵𑌸𑌨𑍍𑌤𑌿 𑌨𑌿𑌯𑌤𑌾𑌹𑌾𑌰𑌾 𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑌾𑌹𑍍𑌵𑌯𑌭𑍂𑌧𑌰𑍇"

இவரும் திர்யக்ஸ்தாவரஜந்மங்களைப் பரிக்ரஹித்து நித்யவாஸம்பண்ண ஆசைப்பட்டும், இப்படி மற்றுமுண்டான திவ்ய தேஸங்களெங்குஞ்சென்று அங்குள்ள எம்பெருமான்களையும் ஸேவித்து அங்கே நித்யவாஸம் பண்ணவேணுமென்னும் ஆசையையுடையராயும், அஷ்டாதஸபுராண உபபுராண இதிஹாஸாதிகளை நிரீக்ஷித்துத் தத்ஸாரபூதமான முகுந்தமாலையை அருளிச்செய்து, காலக்ஷேபார்த்தமாக, (க) "வேதவேத்யேபரேபும்ஸிஜாதே தஸரதாத்மஜே - வேதஃப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத்ராமாயணாத்மநா" என்கிறபடியே வேதவேத்யனான பரமபுருஷன் தஸரதாத்மஜனாய் வந்து அவதரித்தருளினாப்போலே அந்த வேதங்கள் தாமும் ஸ்ரீவால்மீகி பகவாந்முகேந இதிஹாஸஸ்ரேஷ்டமான ஸ்ரீராமாயணமாய்க்கொண்டு ப்ரகாசித்ததாகையாலே அதுவே தமக்கு * செவிக்கினிய செஞ்சொல்லாக "இன்னமுதம் மதியோம்" என்கிறபடியே ஸ்ரவித்துக்கொண்டு போராநிற்க, (உ) "சதுர்த்தஸஸஹஸ்ராணி ரக்ஷஸாம்பீமகர்மணாம் - ஏகஸ்சராமோ தர்மாத்மா கதம்யுத்தம்பவிஷ்யதி" என்கிற ச்லோகார்த்தத்தைக் கேட்டருளுகிற தறுவாயிலே, 'பெருமாளும் இளையபெருமாளைப் பிராட்டிக்குத் திருமேனிக்காவலாக வைத்து, கரத்ரி ஸிரோதூஷணாதிகளாகிற பதினாலாயிரம் துஷ்டராக்ஷஸருடனே தர்மாத்மாவான பெருமாளொருவரே யுத்தோந்முகரானார்: எங்கு இளைக்கிறாரோ என்று ரிஷி வயிறுபிடிக்கிறான்' என்று கேட்கையாலே, இவ்வாழ்வாரும், ப்ரேமபரவசராய்க்கொண்டு, * அவத்தங்கள் விளையுமென்னும் அதிஸங்கையாலே "வாளும்வில்லுங்கொண்டு பின்செல்வார் மற்றில்லை" என்றும் "உருவார்சக்கரம் சங்குசுமந்திங்கும்மோடு, ஒருபாடுழல்வானோரடியானு முளன்" என்றும் சொல்லுகிறபடியே சதுரங்கபலத்தோடே பெருமாளுக்குப் படைத்துணையாகப் புறப்பட்டு எழுந்தருளாநிற்க, இவருடைய அதிப்ரவ்ருத்தமான இந்த யாத்ரையைக்கண்டு இத்தைத் தவிர்க்கைக்காக மந்த்ரிகள் உபாயேந சிலரை எதிரேவாவிட்டு, அந்தப் பதினாலாயிரம் ராக்ஷஸர்களையும் பெருமாளொருவருமே நிரஸித்து மீண்டெழுந்தருளாநிற்கச்செய்தே (ங) "தம்த்ருஷ்ட்வாஸத்ருஹந்தாரம் மஹர்ஷீணாம்ஸுகாவஹம்-பபூவஹ்ருஷ்டா வைதேஹீ பர்த்தாரம்பரிஷஸ்வஜே" என்கிறபடியே பிராட்டி பெருமாள் திருமேனியில் வ்ரணங்களெல்லாம் ஆறும்படி திருமுலைத்தடங்களாலே வெதுகொண்டணைத்து ஆஸ்வாஸிப்பித்த ஸோக நிவர்த்தகமான இந்த ஸ்லோகத்தைச் சொல்லுவிக்கையாலே இவரும் அத்தைக்கேட்டு ஸந்துஷ்டராய் மீண்டெழுந்தருளினவளவிலே,

மந்த்ரிகள், 'நம்முடையராஜாவான இவர்க்கு ஸ்ரீவைஷ்ணவஸஹவாஸத்தாலே இத்தனை கலக்கங்களும் தேற்றங்களும் வந்தன' என்று அவர்களுடைய ஸஹவாஸத்தைத் தவிர்ப்பிக்கவேணுமென்று இவருடைய க்ருஹார்ச்சனையெம்பெருமானுடைய திருவாபரணப் பெட்டியிலே நவரத்ந ஸோபிதமாயிருப்பதொரு ஹாரத்தையெடுப்பித்து மறையவைத்து, 'இவருக்கு அந்தரங்கராய் உத்தேஸ்யரான ஸ்ரீவைஷ்ணவர்கள் எடுத்தார்கள்' என்று ஆரோபிக்க, அதுக்கு அவரும் "பரனன்பர் கொள்ளார்" என்று அவர்களுக்காகத் தாம் பாம்புக் குடத்திலே கையிட்டருளி ஜயிக்க, இத்தைக்கண்டு மந்த்ரிகள் தாங்கள்செய்த அக்ருத்யத்தை விண்ணப்பஞ்செய்து அந்தஹாரத்தை இவர் திருமுன்பே வைத்துத் தண்டன் ஸமர்ப்பித்தார்கள்.

பின்பு ஆழ்வாருக்கு இவர்கள்நடுவே ராஜ்யம்பண்ணியிருக்குமிருப்பு, (க) "நஸௌரிசிந்தாவிமுகஜநஸம்வாஸவைஸஸம் - வரம் ஹுதவஹஜ்வாலா பஞ்ஜராந்தர்வ்யவஸ்திதிஃ" என்கிறபடியே பகவத்வைபவஞ்சொல்லப்பொருதார்நடுவில் இருக்குமிருப்பைக்காட்டில் அக்நிஜ்வாலாபஞ்ஜராந்தர்வ்யவஸ்திதி பகவத்பரர்க்கு உத்க்ருஷ்டதமம் ஆகையால் இவர்க்கு அக்நிஜ்வாலையிலே அகப்பட்டாற்போலே அதிதுஸ்ஸஹமாயிருக்கையாலே, தம்குமாரருக்கு யுவராஜ்யாபிஷேகம்பண்ணி ராஜ்யபாரத்தை அவரிடத்திலே வைத்து, "ஆனாத செல்வத் தரம்பையர்கள் தற்சூழ, வானாளுஞ் செல்வமும் மண்ணரசும்யான் வேண்டேன்" என்றுகொண்டு ஐஹிக ஆமுஷ்மிக திவ்யமாநுஷபோகங்களில் நசையற்று, தமக்கு அந்தரங்கரான ஸ்ரீவைஷ்ணவ ஸஹவாஸத்துடனே * நல்லார்கள்வாழும் நளிரரங்கத்தை நோக்கி எழுந்தருளி, தகட்டிலழுத்தின மாணிக்கம்போலே * உறங்குவான்போல் யோகுசெய்கிற* அணியரங்கத் தம்மானை நித்யதரித்ரன் நிதியைக் கண்டாற்போலே கண்ணாரக்கண்டு வாயாரவாழ்த்தி அநுபவித்து, அவ்வ

(க) "𑌵𑍇𑌦𑌵𑍇𑌦𑍍𑌯𑍇 𑌪𑌰𑍇 𑌪𑍁𑌂𑌸𑌿 𑌜𑌾𑌤𑍇 𑌦𑌶𑌰𑌥𑌾𑌤𑍍𑌮𑌜𑍇 । 𑌵𑍇𑌦𑌃 𑌪𑍍𑌰𑌾𑌚𑍇𑌤𑌸𑌾𑌦𑌾𑌸𑍀𑌤𑍍 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑍍𑌰𑌾𑌮𑌾𑌯𑌣𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 ॥" (உ) "𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑌿 𑌰𑌕𑍍𑌷𑌸𑌾𑌂 𑌭𑍀𑌮𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌮𑍍 । 𑌏𑌕𑌶𑍍𑌚 𑌰𑌾𑌮𑍋 𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌕𑌥𑌂 𑌯𑍁𑌦𑍍𑌧𑌂 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥" (ங) "𑌤𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌶𑌤𑍍𑌰𑍁𑌹𑌨𑍍𑌤𑌾𑌰𑌂 𑌮𑌹𑌰𑍍𑌷𑍀𑌣𑌾𑌂 𑌸𑍁𑌖𑌾𑌵𑌹𑌮𑍍 । 𑌬𑌭𑍂𑌵 𑌹𑍃𑌷𑍍𑌟𑌾 𑌵𑍈𑌦𑍇𑌹𑍀 𑌭𑌰𑍍𑌤𑌾𑌰𑌂 𑌪𑌰𑌿𑌷𑌸𑍍𑌵𑌜𑍇 ॥"

(க) "𑌨𑌶𑍌𑌰𑌿𑌚𑌿𑌨𑍍𑌤𑌾𑌵𑌿𑌮𑍁𑌖𑌜𑌨𑌸𑌂𑌵𑌾𑌸𑌵𑍈𑌶𑌸𑌮𑍍 । 𑌵𑌰𑌂 𑌹𑍁𑌤𑌵𑌹𑌜𑍍𑌵𑌾𑌲𑌾𑌪𑌞𑍍𑌜𑌰𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 ॥"

நுபவஜநிதப்ரீத்யதிஶயத்தாலே, பகவத்பாகவதவைபவத்தை எல்லாரும் அறிந்து உஜ்ஜீவிக்கும்படி 'பெருமாள் திருமொழி' என்கிற திவ்யப்ரபந்தத்தை அருளிச்செய்து, ஸஜ்ஜநங்களுக்கு உபகரித்தருளி லோகத்தை வாழ்வித்தருளினர்.

## பெரியாழ்வார் வைபவம்.

(க) "தாதாத்விக † ப்ரதிபலத்பகவத்பரத்வம் விஸ்தீர்யபாண்ட்யகதகேந்த்ரஜயீகஜேந - கச்சந்ப்ரியாதுபகதேகருடேநாதே ப்ரேம்ணாऽऽஶிஷம்ரசயதிஸ்மநமோऽஸ்துதஸ்மை."

(உ) ‡ "தத்வாப்தாபகமேகலௌயுஶவரேஸம்வத்ஸரேக்ரோதநே
சண்டாம்ஶௌமிதுநங்கதேऽஹ்நிவமேபக்ஷேவளர்க்ஷேऽபிச -
ஸ்வாத்யாம்பாஸ்கரவாஸரேஶுபதிதாவேகாதஶீநாமநி
ஸ்ரீமாநாவிரபூதசிந்த்யமஹிமாஸ்ரீவிஷ்ணுசித்தோऽநகஃ."

பெரியாழ்வார், "வேதவாய்த்தொழிலார்கள்வாழ் வில்லிபுத்தூர்" என்கிறபடியே * செய்தவேள்வியரான * வையத்தேவர் நித்யவாஸம்பண்ணிவாழாநிற்கிற ஸ்ரீவில்லிபுத்தூரிலே ப்ராஹ்மணோத்தமரான * வேயர்தங்கள்குலத்திலே ஆனிமாஸத்திலே திருச்சோதியிலே கருத்மதம்ஶரா யவதரித்து, 'விஷ்ணுசித்தர்'என்கிற திருநாமத்தையுடையராயிருப்பர். (௩) "ஜ்யேஷ்டே ऽதமாஸே பவமாநதாரே ஶ்ரேஷ்டோகுணேநாஜநிபட்டநாதஃ - தத்ரத்ரயீரூபகருத்மதாத்மா கடாக்ஷலக்ஷ்யங்கமலாபதேர்யஃ" என்று திவ்யஸூரிசரிதத்திலே சொல்லிற்றிறே.

(க) [illegible]

(உ) [illegible]

(௩) [illegible]

† 'ப்ரதி பயாபகவத்பரத்வம்' என்றும் பாடம்.

‡ இந்தச்சுலோகம் சிலபிரதிகளில் இல்லை.



பின்பு வடபெருங்கோயிலுடையானுடைய நிர்ஹேதுககடாக்ஷத்தாலே (க) "ப்ரஹ்லாதோ ஜந்மவைஷ்ணவஃ" என்னும்படி ஸஹஜதாஸ்யத்தை யுடையரா யிருக்கு மிவர், (உ) "நாகிஞ்சித்குர்வதஶ்ஶேஷத்வம்" என்கிறபடியே ஶேஷத்வமுறையையுணர்ந்து பகவத்விஷயத்திலே கிஞ்சித்கரித்து ஸ்வரூபம் நிறம்பெறவேணுமென்று பார்த்து, அதுசெய்யுமிடத்து "தனக்கேயாகவெனைக் கொள்ளுமீதே" என்கிறபடியே அவனுகந்த அடிமை செய்கையே நமக்குக் கர்த்தவ்யமென்று அநுஸந்தித்து, அதறிகைக்காக அவதாரங்களை ஆராய்ந்துபார்த்தவிடத்தில் ஸர்வேஶ்வரன் "மண்ணின்பாரம் நீக்குதற்கேவடமதுரைப்பிறந்தான்"என்றும்,(௩)"ஏஷநாராயணஶ்ஸ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதநஃ - நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோமதுராம் புரீம்" என்றும், (௪) "புண்யாத்வாரவதீயத்ர தத்ராஸ்தேமதுஸூதநஃ - ஸாக்ஷாத்தேவஃபுராணோऽஸௌ ஸஹிதர்மஸ்ஸநாதநஃ" என்றும் சொல்லுகிறபடியே ஸாதுபரித்ராணாதி த்ரயத்துக்காகத் * திருவின்வடிவொக்கும்தேவகி பெறப் பிறந்து * மைத்தடங்கண்ணியசோதை வளர்க்க வளர்ந்தருளுகிற * உருவுகரியவொளிமணிவண்ணனை க்ருஷ்ணன், * சூட்டுநன்மாலைகள் தூயனவேந்தி விண்ணோர்கள்நன்னீராட்டி யந்தூபந்தராநிற்கவே அங்கு ஓர்மாயையினா லீட்டியவெண்ணெய் தொடுவுண்ணப்போந்தவனாகையாலே அந்தவாஸனையின்னாடிக் கம்ஸனுக்குப் பணிசெய்துபோந்த ஸ்ரீமாலாகாரர் திருமாளிகையிலே எழுந்தருளிப் பூஇரக்க, அவரும் (௫) "ப்ரஸாதபரமௌநாதௌமமகேஹமுபாகதௌ-தந்யோऽஹமர்ச்சயிஷ்யாமி" என்று உகந்துசூட்டினபடியைக்கண்டு, இவ்விஷயத்துக்குப் பூவிடுகையே உகப்பென்று அறுதியிட்டு, வடதளபுடசாயியாகிய வடபெருங்கோயிலுடையானுக்கு * நாட்கமழ்பூம்பொழிலாகத் திருநந்தவனஞ்செய்து திருமாலைகட்டிச் சாத்திப்போருகிற காலத்திலே;

* பருப்பதத்துக் கயல்பொறித்த பாண்டியர் குலத்திலே ஸ்ரீவல்லபதேவனென்கிற ராஜா தார்மிகனாகையாலே சிறியதைப் பெரியது

(க) [illegible] (உ) [illegible] (௩) [illegible] (௪) [illegible] (௫) [illegible]

நலியாதபடி கூடலென்கிற தென்மதுரையிலே யிருந்து ராஜ்யம்பண்ணிக்கொண்டுபோருகிற காலத்திலே, அந்தராஜா ஒருநாள் ராத்ரியிலே நகரசோதநார்த்தமாக வருகிறவளவிலே, ஒருப்ராஹ்மணன் அங்கேஒருதிண்ணையிலேகிடக்கக்கண்டு ராஜா அவனை எழுப்பி 'நீ யார்?' என்றுகேட்க, அவனும் 'நான் ஒருப்ராஹ்மணன், கங்கையாடி வருகிறேன்' என்ன, 'ஆனால், உனக்குப்போமதுண்டாகில் ஒரு ஶ்லோகம் சொல்லிக்காணாய்' என்ன, அந்தப்ராஹ்மணனும் (க) "வர்ஷார்த்தமஷ்டௌப்ரயதேதமாஸாந் நிஶார்த்தமர்த்தந்திவஸம்யதேத - வார்த்தக்யஹேதோர்வயஸாநவேந பரத்ரஹேதோரிஹஜந்மநாச" என்கிற ஶ்லோகத்தைச்சொல்ல, ராஜாவும் இதைக்கேட்டு வ்யுத்பந்நனுகையாலே 'த்ருஷ்டத்தில் நமக்கு ஒருகுறைவுமில்லை: இனி அத்ருஷ்டயத்நம் பண்ணும்படி எங்ஙனே?' என்று வ்யாகுலாந்தக்கரணனாய், தன்னுடைய புரோஹிதரான செல்வநம்பியைப் பார்த்து 'புருஷார்த்தநிர்ணயபூர்வகமாக அத்ருஷ்டஸித்திக்கு விரகென்?' என்றுகேட்க, அவரும் (உ) "தர்மஜ்ஞஸமய: ப்ரமாணம்வேதாஶ்ச" என்கையாலே, வித்வான்களைத் திரட்டி, வேதாந்தஸித்தாந்தமான பரதத்வநிர்ணயம்பண்ணுவித்து, அவ்வழியாலே பெறவேணும் என்று அருளிச்செய்ய, ராஜாவும் 'அப்படியேயாகிறது' என்று பஹுத்ரவ்யத்தைக் கிழிச்சீரையிலே வித்யாஶுல்கமாக ஒருதோரணத்திலேகட்டுவித்து, வித்வான்களை ஆஹ்வாநம்பண்ணச்சொல்லுகிறவளவிலே;

வடபெருங்கோயிலுடையான், ஸம்ஸாரிகள் * பூண்டவத்தம் பிறர்க்கடைந்து தொண்டுபட்டுப் பொய்ந்நூலை மெய்ந்நூலென்றென்றும் ஓதி மாண்டு அவத்தம்போகாமே இவ்வாழ்வாரைக்கொண்டு லோகத்திலே வேதாந்த ஸித்தாந்தமான பரதத்வத்தை ப்ரகாசிப்பிக்கைக்காக, * மெய்யடியாரான இவ்வாழ்வாருடைய ஸ்வப்நத்திலே எழுந்தருளி 'நீர் போய்க் கிழியை அறுத்துக்கொண்டுவாரும்' என்று அருளிச்செய்ய, 'அது வித்யாஶுல்கமாக நிர்மித்ததொன்றன்றோ? * நலங்களாய நற்கலைகள் நாவினும் நவின்றிலாத நான் என் 'கையில் கொட்டுத்தழும்பைக் காட்டிக் கிழியை யறுக்கலாமோ?' என்ன, 'அது உமக்கு பரமோ? நாமன்றோ வேதார்த்தப்ரதிபாதநத்துக்குக்கடவோம்' என்று ஆழ்வாரை நிர்ப்பந்தித்தருள, ஆழ்வாரும்

(க) "𑌵𑌰𑍍𑌷𑌾𑌰𑍍𑌥𑌮𑌷𑍍𑌟𑍌 𑌪𑍍𑌰𑌯𑌤𑍇𑌤 𑌮𑌾𑌸𑌾𑌨𑍍𑌨𑌿𑌶𑌾𑌰𑍍𑌥𑌮𑌰𑍍𑌧𑌂 𑌦𑌿𑌵𑌸𑌂 𑌯𑌤𑍇𑌤 । 𑌵𑌾𑌰𑍍𑌧𑌕𑍍𑌯𑌹𑍇𑌤𑍋𑌰𑍍𑌵𑌯𑌸𑌾 𑌨𑌵𑍇𑌨 𑌪𑌰𑌤𑍍𑌰𑌹𑍇𑌤𑍋𑌰𑌿𑌹 𑌜𑌨𑍍𑌮𑌨𑌾 𑌚 ॥" (உ) "𑌧𑌰𑍍𑌮𑌜𑍍𑌞𑌸𑌮𑌯𑌃 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌵𑍇𑌦𑌾𑌶𑍍𑌚"



(க) "ப்ராஹ்மேமுஹூர்த்தேசோத்தாய" என்கிறபடியே *சிற்றஞ்சிறுகாலே எழுந்திருந்து, 'இதொரு ஸ்வப்ந மிருந்தபடியென்!' என்று விஸ்மிதராய் விஶ்வஸித்து, பாண்டியனுடைய வித்வத்கோஷ்டியேற எழுந்தருளினவளவிலே, செல்வநம்பியும் ராஜாவும் த்விஜகுலதிலகரான இவ்வாழ்வாரைக் கண்டு அவ்வளவிலே அப்யுத்தாநப்ரணாமபூர்வகமாக மிகவும் ஆதரிக்க, இத்தைக் கண்ட வித்வான்கள் இவர்க்கு வித்யாப்யாஸம் சிறிதுமில்லை யென்னும் புத்தியாலே ராஜாவை அதிக்ஷேபிக்க, அவ்வளவிலே* அபிமாநதுங்கனான செல்வநம்பி, ஆழ்வாரைத் தண்டனிட்டு வேதாந்தப்ரதிபாத்யமான பரதத்வத்தை நிஶ்சயித்தருளிச்செய்யவேணும்' என்று விஜ்ஞாபித்தவளவிலே, (உ) "ஹஸிதம்பாஷிதஞ்சைவ கதிர்யாயச்சசேஷ்டிதம் - தத்ஸர்வந்தர்மவீர்யேண யதாவத்ஸம்ப்ரபஶ்யதி" என்கிறபடியே ஶ்ரீவால்மீகிபகவான் ப்ரஹ்மாவின்ப்ரஸாதத்தாலே ஸகலார்த்தங்களையும் ஸாக்ஷாத்கரித்தாப்போலேயும் (ங) "ஶங்கப்ராந்தேநகோவிந்தஸ் தம்பஸ்பர்ஶக்ருதாஞ்ஜலிம் - உத்தாநபாததநயம் முநிவர்யம் ஜகத்பதி: - தத: ப்ரஸந்நவதநஸ் தத்க்ஷணாந்ந்ருபநந்தந:-துஷ்டாவப்ரணதோ பூத்வா பூததாதாரமச்யுதம்" என்கிறபடியே ராஜகுமாரனைத்ருவன் ஶ்ரீபாஞ்சஜந்யஸ்பர்ஶத்தாலே ஸர்வஜ்ஞனைப்போலேயும் இவ்வாழ்வார் நிர்ஹேதுக பகவத்ப்ரஸாதத்தாலே ஸகலவேத ஸாரார்த்தங்களையும் ததுபப்ரும்ஹணங்களான இதிஹாஸ புராணங்களையும் ஸாக்ஷாத்கரித்து, (ச) "ஸமஸ்தஶப்தமூலத்வாத் அகாரஸ்யஸ்வபாவத:" என்று ஸர்வஶப்தமூலமாயிருந்துள்ள அகாரத்தை (ரு) "அக்ஷராணாமகாரோऽஸ்மி" என்று கீதோபநிஷதாசார்யன்தானே அருளிச்செய்கையாலே (சா) "அகாரோ விஷ்ணுவாசக:" என்கிறபடியே அகாரவாச்யனான ஶ்ரீமந்நாராயணனே ஸர்வஸ்மாத்பரனென்றுகொண்டு, பரத்வசிஹ்நங்களான ஜகஜ்ஜந்ம ஸ்திதி லய வாசகங்களான

(க) "𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍇 𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑍇 𑌚𑍋𑌤𑍍𑌥𑌾𑌯" (உ) "𑌹𑌸𑌿𑌤𑌂 𑌭𑌾𑌷𑌿𑌤𑌂 𑌚𑍈𑌵 𑌗𑌤𑌿𑌰𑍍𑌯𑌾 𑌯𑌚𑍍𑌚 𑌚𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑌮𑍍 । 𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌧𑌰𑍍𑌮𑌵𑍀𑌰𑍍𑌯𑍇𑌣 𑌯𑌥𑌾𑌵𑌤𑍍𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 ॥" (ங) "𑌶𑌙𑍍𑌖𑌪𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍇𑌨 𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦𑌸𑍍𑌤𑌂 𑌪𑌸𑍍𑌪𑌰𑍍𑌶 𑌕𑍃𑌤𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌮𑍍 । 𑌉𑌤𑍍𑌤𑌾𑌨𑌪𑌾𑌦𑌤𑌨𑌯𑌂 𑌮𑍁𑌨𑌿𑌵𑌰𑍍𑌯𑌂 𑌜𑌗𑌤𑍍𑌪𑌤𑌿𑌃 𑌤𑌤𑌃 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌵𑌦𑌨𑌸𑍍𑌤𑌤𑍍𑌕𑍍𑌷𑌣𑌾𑌨𑍍𑌨𑍃𑌪𑌨𑌨𑍍𑌦𑌨𑌃 । 𑌤𑍁𑌷𑍍𑌟𑌾𑌵 𑌪𑍍𑌰𑌣𑌤𑍋 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌭𑍂𑌤𑌧𑌾𑌤𑌾𑌰𑌮𑌚𑍍𑌯𑍁𑌤𑌮𑍍 ॥" (ச) "𑌸𑌮𑌸𑍍𑌤𑌶𑌬𑍍𑌦𑌮𑍂𑌲𑌤𑍍𑌵𑌾𑌦𑌕𑌾𑌰𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌤𑌃" (ரு) "𑌅𑌕𑍍𑌷𑌰𑌾𑌣𑌾𑌮𑌕𑌾𑌰𑍋𑌽𑌸𑍍𑌮𑌿" (சா) "𑌅𑌕𑌾𑌰𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌵𑌾𑌚𑌕𑌃"

(௧)"யதோவா இமாநிபூதாநிஜாயந்தே, யேநஜாதாநிஜீவந்தி, யத்ப்ரயந்த்யபிஸம்விஶந்தி, தத்விஜிஜ்ஞாஸஸ்வ, தத்ப்ரஹ்மேதி" இத்யாதி வாக்யங்களை, ஜகத்காரணத்வ முமுக்ஷூபாஸ்யத்வ மோக்ஷப்ரதத்வ ப்ரதிபாதகங்களான நாராயணாநுவாகஶ்ருதிகளாலும் (௨) "விஷ்ணோஸ்ஸகாஶாதுத்பூதம்ஜகத்தத்ரைவச ஸ்திதம் - ஸ்திதிஸம்யமகர்த்தாஸௌ ஜகதோ஽ஸ்யஜகச்சஸ:" என்றும், (௩) "நாராயணாத்பரோ தேவோ நபூதோநபவிஷ்யதி-ஏதத்ரஹஸ்யம்வேதாநாம் புராணாநாஞ்சஸம்மதம்" என்றும், (௪) "ஸத்யம்ஸத்யம்புநஸ்ஸத்ய முத்த்ருத்யபுஜமுச்யதே - வேதஶாஸ்த்ராத்பரம்நாஸ்தி நதைவம்கேஶவாத்பரம்" என்றும் இத்யாதிகளான ஸ்ம்ருதீதிஹாஸபுராணாதி வசநஸஹஸ்ரங்களாலும் பஹுமுகமாக ப்ரதிபாதித்தருளிச்செய்கையாலே, வித்யாஶுல்கமாகத் தோரணத்திலே கிழியாகக் கட்டிவைத்த தநம் இவர் முன்னே தானே தாழவளைய, ஆழ்வாரும் அதிப்ரீதியோடே "விரைந்து கிழியறுத்தான்" என்கிறபடியே அக்கிழியை அறுத்தருளினார்.

இத்தைக்கண்டு அதிக்ஷேபித்த வித்வான்களோடு அநுவர்த்தித்த ராஜாவோடுவாசியற ஸர்வரும் விஸ்மிதராய்க்கொண்டு ஆழ்வார்திருவடிகளிலே தண்டன்ஸமர்ப்பித்து, * வேதாந்தவிழுப்பொருளின்மேலிருந்தவிளக்கை விட்டுசித்தன் விரித்தனனென்று மிகவும் ப்ரீதியோடே அவரை யானைக்கழுத்தின்மேலே ஏறியருளப்பண்ணி அந்தவித்வான்கள் சத்ரசாமரதாலவ்ருந்தாதிகள் தரித்து ஸேவிக்க, '*வேதப்பயன் கொள்ளவல்லனை மெய்ந்நாவன் வந்தான்' என்று விருதூதித் திருச்சின்னம்பணிமாற, ஈண்டியசங்கமெடுத்தூத, ராஜா இவர்க்கு 'பட்டர்பிரான்' என்று திருநாமஞ்சாத்தித் தானும்ஸபரிகரனாய் ஸேவித்துக்கொண்டு நகரிவலம்வருகிற மஹோத்ஸவத்தைக்

(௧) "யதோவா இமாநி பூதாநி ஜாயந்தே | யேந ஜாதாநி ஜீவந்தி | யத்ப்ரயந்த்யபிஸம்விஶந்தி| தத்விஜிஜ்ஞாஸஸ்வ | தத்ப்ரஹ்மேதி॥" (௨) "விஷ்ணோஸ்ஸகாஶாதுத்பூதம் ஜகத்தத்ரைவச ஸ்திதம் | ஸ்திதிஸம்யமகர்த்தாஸௌ ஜகதோ஽ஸ்ய ஜகச்ச ஸ:॥" (௩) "நாராயணாத்பரோ தேவோ நபூதோ நபவிஷ்யதி | ஏதத்ரஹஸ்யம் வேதாநாம் புராணாநாஞ்ச ஸம்மதம்॥" (௪) "ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்ய முத்த்ருத்ய புஜமுச்யதே | வேதஶாஸ்த்ராத்பரம் நாஸ்தி நதைவம் கேஶவாத்பரம்॥"



காண்கைக்காக, புத்ரர்களை ப்ரஹ்மரதம் பண்ணும் ஸமயத்தில் மாதாபிதாக்கள் காண ஆதரித்து வருமாபோலே ஸர்வேஶ்வரனும் தனக்கு நிரூபக பூதையான பிராட்டிஸஹிதனாய்க் கொண்டு * மஞ்சுயர்பொன்மலைமே லெழுந்தமாமுகில்போன்ற வடிவுடனே பெரிய திருவடிமேற்கொண்டு "திருச்சக்கரஞ் சங்கினொடும்" என்கிறபடியே திவ்யாயுததரனாய் "கிளர்ந்த பிரமன் சிவனிந்திரன் விண்ணவர்சூழ, விளங்க வொருநாள் காணவாராய் விண்மீதே" என்கிறபடியே ஆகாசத்திலே ஸ்வபரிகரபூதரான ப்ரஹ்மருத்ராதிகளாலே ஸேவ்யமானனாய்த் திவ்யமங்களவிக்ரஹவிஶிஷ்டனாய்க் கொண்டு நெருங்கிநிற்கிற இத்திரளோடு ஸந்நிஹிதனாக, இத்தை ஸாக்ஷாத்கரித்தருளின ஆழ்வார், பகவத்ப்ரஸாதத்தாலே நிரவதிகபக்தியைப் பெற்றவராகையாலே, ஸ்வஸம்ருத்தியைக்கண்டு இறுமாவாதே, அவனுடைய ஸர்வஜ்ஞத்வ ஸர்வஶக்தித்வ ஸர்வரக்ஷகத்வாதிகளை அநுஸந்திப்பதற்குமுன்னே முகப்பிலே * நீலமுண்ட மின்னன்னமேனியிலுண்டான ஸௌந்தர்ய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாதிகளைக்கண்டு, (௧) ""அப்ராக்ருதஸுந்தரைர்வந்த்ய மயுதார்க்கஸமப்ரபம்" என்றும், (௨) "ஸ்வயைவப்ரபயாராஜந் துஷ்ப்ரேக்ஷந்தேவதாநவை:" என்றும், "சுழிபட்டோடுஞ்சுடர்ச்சோதி" என்றும் சொல்லப்பட்டிருப்பதாய்க் காலக்ருதபரிணாமமின்றிக்கே ஸதைகரூபமாய் நித்யஸித்தமாய்ப் பஞ்சோபநிஷந்மயமான பரமபதத்திலே (௩) "ஸதாபஶ்யந்திஸூரய:" என்கிறபடியே நித்யஸூரிகளாலே ஸதாதர்ஶநம் பண்ணப்படுகிற வஸ்து காலக்ருதபரிணாமமாய்க் க்ஷணக்ஷரணஸ்வபாவமாய்ப் பரமாத்மஸ்தாநமான பரமபதத்தைப் பற்ற நரகோபமமாய் அரக்கரசுரர்க்கு ஆவாஸபூமியாய்த் துர்விதக்தர் துரபிஸந்திபண்ணும் ஸ்தலமாய்க் கலிஸாம்ராஜ்யம்பண்ணுகிற *இருள்தருமாஞாலமான இத்தேசத்திலே வந்து சக்ஷுர்விஷயமாவதே! இவ்வஸ்துவுக்கு என்னதீங்குவருகிறதோ! என்னும் அதிஶங்கையாலே, யானைக்கழுத்தில் கிடக்கிற மணிகளைத் தாளமாகக் கொண்டு 'இந்த ஸௌந்தர்யாதிகளுக்கு ஒருதீங்கும் வாராதே நித்யமாய்ச் செல்லவேணும்' என்று தம்ஸ்வரூபத்தை மறந்து ப்ரேமபரவஶராய்க்கொண்டு மங்களாஶாஸநம் பண்ணியருளி இவ்விஷயத்துக்

(௧) "அப்ராக்ருதஸுந்தரைர் வந்த்ய மயுதார்க்கஸமப்ரபம்" (௨) "ஸ்வயைவ ப்ரபயா ராஜந் துஷ்ப்ரேக்ஷந் தேவதாநவை:" (௩) "ஸதா பஶ்யந்தி ஸூரய:"

குத் தாமொருவரும் மங்களாஶாஸநம்பண்ணுகை போதாதென்று தமக்குத் தோள்தீண்டிகளான ஐஶ்வர்யகைவல்யபகவச்சரணார்த்திகளையும் மங்களாசாஸநயோக்யராம்படி திருத்திச்சேர்த்துக்கொண்டு, *பல்வகையாலும் திருப்பல்லாண்டுபாடியருளினார்.

அநந்தரம், அந்த ராஜாவையும் விசேஷகடாக்ஷம் செய்தருளி, அவனாலே ஸத்க்ருதராய் * வில்லிபுத்தூருறைவான்றன் பொன்னடி காண்பதோராசையினால் மீண்டு ஸ்ரீவில்லிபுத்தூரிலே எழுந்தருளி அக்கிழியில்தநத்தை (க) “யஸ்யைதே தஸ்யதத்தநம்” என்கிறபடியே வடபெருங்கோயிலுடையான் திருமுன்பே வைத்து ‘தேவரீராலேயுண்டான தநம் தேவரீருக்கே’ என்று தண்டன் ஸமர்ப்பித்து, (உ) “ப்ராஸங்கிகம்பரிஸமாப்ய ப்ரக்ருதமநுஸரதி” என்கிற ந்யாயத்தாலே தாம் முதலில் உபக்ரமித்தருளின * காணார்நறுந்துழாய்க்கை செய்த கண்ணியும் * செண்பக மல்லிகையோடு செங்கழுநீ ரிருவாட்சியுமான திருமாலை கட்டி வடபெருங்கோயி லுடையானுக்கு நித்யமாகச்சாத்தி ஸேவித்துக்கொண்டிருக்கிற இவ்வாழ்வார்தாம், அவதாரங்களை முன்னிட்டுக்கொண்டு க்ருஷ்ணாவதாரத்தில் ஸ்ரீமாலாகாரர் திருமாளிகையிலே எழுந்தருளிப் பூஇரக்க அவர் உகந்து சாத்தினாரென்றிறே முந்துறத் திருநந்தவநஞ்செய்து திருமாலைஸமர்ப்பிக்கத் தொடங்கிற்று: ஸ்ரீமாலாகாரர் திருமாலைசாத்தின அநந்தரம் மல்லரோடு பொருது வெற்றிகொண்டதோளுக்குப் பல்லாண்டு பாடுகையாலே க்ருஷ்ணவ்ருத்தாந்தத்திலே ப்ரவணராய், “கண்ணன்கேசவநம்பிபிறந்தினில்” என்று க்ருஷ்ணன் அவதரித்ததுமுதலாக “வென்றிசேர்பிள்ளை நல்விளையாட்டம்” என்கிற அதிமாநுஷசேஷ்டிதமான க்ருஷ்ணவ்ருத்தாந்தத்தை இவரும் கோபஜந்மத்தை ஆஸ்தாநம் பண்ணி அநுகரித்து, அவனுடைய ஸௌஶீல்ய ஸௌலப்யாதி குணங்களிலே ஆழங்கால்பட்டுக் குமிழிநீருண்ணாமல் நன்றாக அநுபவித்து, அவ்வநுபவஜநிதப்ரீத்யதிஶயத்தாலே ‘பெரியாழ்வார்திருமொழி’ என்கிற திவ்யப்ரபந்தத்தையும் அருளிச்செய்து; *சித்தம் நனகொருங்கித் திருமால்மேல்சென்றசிந்தையராய்க்கொண்டு, *சாயைபோலப்பாடவல்ல ஸஜ்ஜநங்களுக்கு உபகரித்தருளி லோகத்தை வாழ்வித்தருளினார்.

---

(க) “𑌯𑌸𑍍𑌯𑍈𑌤𑌤𑍍 𑌤𑌸𑍍𑌯 𑌤𑌦𑍍𑌧𑌨𑌮𑍍” (உ) “𑌪𑍍𑌰𑌾𑌸𑌙𑍍𑌗𑌿𑌕𑌂 𑌪𑌰𑌿𑌸𑌮𑌾𑌪𑍍𑌯 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌮𑌨𑍁𑌸𑌰𑌤𑌿”

## ஆண்டாள் வைபவம்

(க) “தேவஸ்யமஹிஷீந்திவ்யா மாதௌகோதாமுபாஸ்மஹே - யந்மௌலிமாலிகாம்ப்ரீத்யா ஸ்வீகரோதிஸ்வயம்ப்ரபு:”.

(உ) “ஶஶிமாலிபாண்ட்யபுரிபூர்வபல்குநீ கநபேநவீந துளஸீவநாந்தராத் - உதிதாமுதாரகுணரங்கநாயகப்ரியவல்லபாம்வஸுமதீமுபாஸ்மஹே.”

(ங) † “ஸித்தாநாம்ஶரதாம்கலாவபமேவர்ஷேநளாக்யேரவௌ யாதேகர்க்கடகம்விதாவுபசிதேஷஷ்டேऽஹநிஶ்ரீமதி - நக்ஷத்ரேயமதைவதேக்ஷிதிபுவோவாரேசதுர்த்யாந்திதௌ கோதாப்ராதுரபூதசிந்த்யமஹிமா ஸ்ரீவிஷ்ணுசித்தாத்மஜா.”

*அன்னவயற்புதுவை யாண்டாளுடைய திருவவதாரக்ரமம் இருக்கும்படி எங்ஙனேயென்னில்; (ச) ‘அதமேக்ருஷத:க்ஷேத்ரம் லாங்கலாதுத்திதாமயா - க்ஷேத்ரம்ஶோதயதாலப்தா நாம்நாஸீதேதிவிஶ்ருதா - பூதலாதுத்தி தாஸாது வ்யவர்த்தத மமாத்மஜா” என்கிறபடியே ஸ்ரீஜநகராஜன் யாகசாலைக்கு ஸ்தலம் உழுதுபண்ணாநிற்க அந்தப்படைச்சாலிலே பிராட்டி ப்ராதுர்ப்பவித்தருள (ரு) ‘ஸீதாலாங்கலபத்ததி:” என்கிறதுதானே நிரூபகமாக ஸீதையென்று திருநாமஞ்சாத்தி உவப்போடே ஸ்ரீஜநகராஜன் புத்ரியாக வளர்த்துக்கொண்டாப்போலே, * மெய்யடியாரான விஷ்ணுசித்தர், தம்

---

(க) “𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌮𑌹𑌿𑌷𑍀𑌂 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌮𑌾𑌦𑍌 𑌗𑍋𑌦𑌾𑌮𑍁𑌪𑌾𑌸𑍍𑌮𑌹𑍇 | 𑌯𑌨𑍍𑌮𑍌𑌲𑌿𑌮𑌾𑌲𑌿𑌕𑌾𑌂 𑌪𑍍𑌰𑍀𑌤𑍍𑌯𑌾 𑌸𑍍𑌵𑍀𑌕𑌰𑍋𑌤𑌿 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 ||” (உ) “𑌶𑌶𑌿𑌮𑌾𑌲𑌿𑌪𑌾𑌣𑍍𑌡𑍍𑌯𑌪𑍁𑌰𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌫𑌲𑍍𑌗𑍁𑌨𑍀𑌭𑌵𑍇 𑌨𑌵𑍀𑌨𑌤𑍁𑌲𑌸𑍀𑌵𑌨𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍 | 𑌉𑌦𑌿𑌤𑌾𑌮𑍁𑌦𑌾𑌰𑌗𑍁𑌣𑌰𑌙𑍍𑌗𑌨𑌾𑌯𑌕𑌪𑍍𑌰𑌿𑌯𑌵𑌲𑍍𑌲𑌭𑌾𑌂 𑌵𑌸𑍁𑌮𑌤𑍀𑌮𑍁𑌪𑌾𑌸𑍍𑌮𑌹𑍇 ||” (ங) “𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑌾𑌂 𑌶𑌰𑌦𑌾𑌂 𑌕𑌲𑌾𑌵𑌭𑌮𑍇 𑌵𑌰𑍍𑌷𑍇 𑌨𑌳𑌾𑌖𑍍𑌯𑍇 𑌰𑌵𑍌 𑌯𑌾𑌤𑍇 𑌕𑌰𑍍𑌕𑌟𑌕𑌂 𑌵𑌿𑌧𑌾𑌵𑍁𑌪𑌚𑌿𑌤𑍇 𑌷𑌷𑍍𑌠𑍇𑌽𑌹𑌨𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑌿 | 𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑍇 𑌯𑌮𑌦𑍈𑌵𑌤𑍇 𑌕𑍍𑌷𑌿𑌤𑌿𑌭𑍁𑌵𑍋 𑌵𑌾𑌰𑍇 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍍𑌯𑌾𑌂 𑌤𑌿𑌥𑍌 𑌗𑍋𑌦𑌾 𑌪𑍍𑌰𑌾𑌦𑍁𑌰𑌭𑍂𑌦𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌮𑌹𑌿𑌮𑌾 𑌶𑍍𑌰𑍀𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌜𑌾 ||’ (ச) “𑌅𑌥 𑌮𑍇 𑌕𑍃𑌷𑌤𑌃 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌲𑌾𑌙𑍍𑌗𑌲𑌾𑌦𑍁𑌤𑍍𑌥𑌿𑌤𑌾 𑌮𑌯𑌾 | 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌶𑍋𑌧𑌯𑌤𑌾 𑌲𑌬𑍍𑌧𑌾 𑌨𑌾𑌮𑍍𑌨𑌾 𑌸𑍀𑌤𑍇𑌤𑌿 𑌵𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌾 | 𑌭𑍂𑌤𑌲𑌾𑌦𑍁𑌤𑍍𑌥𑌿𑌤𑌾 𑌸𑌾 𑌤𑍁 𑌵𑍍𑌯𑌵𑌰𑍍𑌧𑌤 𑌮𑌮𑌾𑌤𑍍𑌮𑌜𑌾 ||’ (ரு) “𑌸𑍀𑌤𑌾𑌲𑌾𑌙𑍍𑌗𑌲𑌪𑌦𑍍𑌧𑌤𑌿𑌃”

† இந்தச்சுலோகம் சில பிரதிகளில் இல்லை.

திருநந்தவநத்தில் திருத்துழாய்க்குக் கொத்தாநிற்க, அத்திருத்துழாய் மண்ணின்கீழே, திருவாடிப்பூரத்திலே, "பார்வண்ணமடமங்கை" என்கிற ஸ்ரீபூமிப்பிராட்டி ஆவிர்ப்பவித்தருள, அநந்தரம் * வில்லிபுதுவைநகர்நம்பிவிஷ்ணுசித்தர் கண்டு, விஸ்மிதராய், * மின்னனையநுண்ணிடையாளான இக்கந்யகையை யெடுத்து ப்ரீதியோடே "சுருப்பார்குழற்கோதை" என்று திருநாமஞ்சாத்தித் * திருமகள்போல வளர்த்தருளினார். (க) "ஸ விஷ்ணுசித்தஸ் துளஸீவநாவநிம் கநித்ரவக்த்ரேண நிகாதயந்கலௌ - ஸம்பேமுஹூர்த்தே ஸஹஸிம் வஸிபல்குநீப்ரதீதநாமே துளஸீவநாந்தரே - புவோZபவத்காசநபாலகந்யகா † பூர்யம்ஸகாம்வீக்ஷ்யவிஸிஷ்மியேமுதா" என்று திவ்யஸூரி சரிதத்திலே சொல்லிற்றிறே.

இங்ஙனம் போருகிறகாலத்திலே, * விட்டுசித்தர் தங்கள்தேவரான வடபெருங்கோயிலுடையானுக்குச் சாத்தக் கட்டிவைத்த திருமாலையை ஆழ்வாரில்லாத அவஸரத்திலே இப்பெண்பிள்ளை தான் சூட்டிக்கொண்டு 'அவனுக்குநேரொவ்வாதிருக்கிறேனோ? ஒத்திருக்கிறேனோ?' என்று * காறை பூண்டு கூறையுடுத்துக் கைவளைகுலுக்கிக் கோவைச்செவ்வாய்திருத்தி அவ்வொப்பனையழகைக் கண்ணாடியிலே கண்டு இப்படி பலநாளும் பந்துபந்தாகச் சுருட்டிவைக்க, இத்தை ஆழ்வார் ஒருநாள்கண்டருளி 'பெண்ணே! எப்போதும் இப்படியோ செய்கிறாய்?' என்று மிகவும் கோபித்து அந்தத்திருமாலையை அற்றைக்கு வடபெருங்கோயிலுடையானுக்குச் சாத்தாமலிருக்க, அன்று ராத்திரியிலே ஆழ்வார்ஸ்வப்நத்திலே எம்பெருமான் எழுந்தருளி 'இற்றைக்கு நமக்கு மாலைகொண்டுவராதிருப்பானென்?' என்ன, தம் புத்ரி கோதைகுழலிலேமுடித்த க்ருத்யத்தை விண்ணப்பஞ்செய்ய, எம்பெருமானும் 'அப்போதுகாணும் வாஸனையாய் ப்ரியமாயிருப்பது' என்று அருளிச்செய்ய, ஆழ்வாரும் அன்றுமுதல் இவ்வாண்டாளை "பின்னைகொல் நிலமாமகள்கொல் திருமகள்கொல் பிறந்திட்டாள்" என்று விசேஷப்ரதிபத்திபண்ணிப் போருவர். * தொடுத்த துழாய்மலர் சூடிக்களைந்தன சூடுந் தொண்டரான ஆழ்வார் திருமகளார், தாம் சூடிக்கொடுத்ததுவே நிரூபகமாகச் சூடிக்கொடுத்த நாச்சியாராயிருப்பர்.

(க) "ஸவிஷ்ணுசித்தஸ்துளஸீவநாவநிம் கநித்ரவக்த்ரேண நிகாதயந்கலௌ | ஸம்பேமுஹூர்த்தே ஸஹஸிம்வஸிபல்குநீப்ரதீதநாமே துளஸீவநாந்தரே || புவோZபவத்காசநபாலகந்யகா ஸஹஸ்ரம்ஸகாம்வீக்ஷ்யவிஸிஷ்மியேமுதா ||'

† 'ஸதாம்ததாப்ரேக்ஷ்ய' என்றும் பாடம்.



திருத்துழாய் பரிமளத்தோடேகூடியே முளைக்குமாபோலே இந்நாச்சியாரும் ஆஜந்மபால்யயௌவநாவஸ்தைகள்தோறும் வளருகிற பரபக்தி பரஜ்ஞான பரமபக்திகளை யுடையளாகையாலே, பகவத்விஷய ப்ராவண்யம், அல்லாத ஆழ்வார்களைக்காட்டில் இவளுக்கு அதிஸயித்திருக்கும். புருஷனைப் புருஷன் காமிக்குமதும், ஸ்த்ரீயை ஸ்திரீ காமிக்குமதும் மேட்டுமடையாயிருக்கும்; புருஷன் ஸ்த்ரீயைக் காமிக்குமதும், ஸ்த்ரீ புருஷனைக் காமிக்குமதும் பள்ளமடையாகையாலே, இது சேர்ந்திருக்குமிறே; ஆகையாலே, அதிஸயித்திருக்கும். அந்தப்ராவண்யமடியாக "அவனைவிட்டகன்றுயிராற்றகில்லா" என்னும் நிலையையுடையளாய், (க) "துஷ்டகாளியதிஷ்டாத்ர க்ருஷ்ணோZஹமிதிசாபரா" என்று க்ருஷ்ணவிரஹத்தை ஸஹிக்கமாட்டாத கோபகன்னிகைகள் க்ருஷ்ணனையநுகரித்துத் தரித்தாப்போலே இவளும் மார்கழிநீராடி நோன்புநோற்றுக் காமபஜநாதிகளைப்பண்ணித் தரிப்போமென்று பார்த்து, *சங்கத்தமிழ்மாலையாக 'திருப்பாவை,' 'நாச்சியார்திருமொழி, என்கிற திவ்யப்ரபந்தங்களையும் அருளிச்செய்து ஜகத்துக்கு உபகரித்தருளி வாழுங்காலத்திலே;

(உ) "பதிஸம்யோகஸுலபம் வயோத்ருஷ்ட்வாசமேபிதா - சிந்தார்ணவகத꞉பாரம் நாஸஸாதாப்லவோயதா" என்கிறபடியே ஸ்ரீஜநகராஜன் பிராட்டி பருவங்கண்டு * சிந்தார்ணவகதனானாற்போலே இவ்வாழ்வாரும் இந்நாச்சியாருடைய விவாஹயோக்யமான பருவத்தைக்கண்டு வ்யாகுலாந்த꞉கரணராக, இவ்வாண்டாளும் "மானிடவர்க்கென்றுபேச்சுப்படில் வாழகில்லேன்" என்ன, ஆழ்வாரும் 'பின்னை எங்ஙனே?' என்ன, இவரும் "மற்றொருவர்க்கென்னைப்பேசலொட்டேன் மாலிருஞ்சோலையெம்மாயற்கல்லால்" என்கிறபடியே '* அவன்முகத்தன்றி விழியேன்' என்ன, ஆழ்வாரும் 'ஆகில் நூற்றெட்டுத் திருப்பதியிலெம்பெருமான்களில் ஆருக்கு வாழ்க்கைப்படுகிறாய்?' என்ன, ஆண்டாளும் ஆழ்வாரைக் குறித்து 'அவ்வவருடைய குணபதாநங்களைக் கீர்த்தித்தருளவேணும்' என்ன, ஆழ்வாரும் வடபெருங்கோயிலுடையான் வைபவமடி

(க) "துஷ்டகாளியதிஷ்டாத்ர க்ருஷ்ணோZஹமிதிசாபரா"

(உ) பதிஸம்யோகஸுலபம்வயோத்ருஷ்ட்வாசமேபிதா | சிந்தார்ணவகத꞉பாரம்நாஸஸாதாப்லவோயதா ||"

யாகப் பாண்டிமண்டலத்திலெம்பெருமான்கள் வைபவமும், மலைநாட்டுத்திருப்பதியிலெம்பெருமான்கள் வைபவமும், வடதிசைத்திருப்பதியிலெம்பெருமான்கள் வைபவமும், வடதிருவேங்கடவன்வைபவந் தொடங்கித் தொண்டைமண்டலத்திலெம்பெருமான்கள்வைபவமும், அழகியமணவாளன்முதலான சோழமண்டலத்திலெம்பெருமான்கள் வைபவமும், அழகர் வைபவமும் அருளிச்செய்ய, ஆண்டாளும் அதுகேட்டு ஆநந்தாஸ்ருக்கள் துளிக்கப் புளகீக்ருதகாத்ரையாய் * என்னரங்கத்தின்னமுதருடைய குழலழகுவாயழகு கண்ணழகுகளைக் கேட்டு அதிவ்யாமுக்தையாய் மோஹித்து, "வந்தாளே திருவரங்கன் வாராளே வென்றென்றே வளையுஞ்சோரும்" என்கிறபடியே * மனமுருகி மலர்க்கண்கள் பனிப்ப அழகியமணவாளரையே காமித்து, * மந்திரக்கோடியுடுத்து மணமாலைசூட்டி *மைத்துனன்நம்பி மதுசூதன் வந்து கைத்தலம்பற்றி * மத்தளங்கொட்டவரிசங்கம்நின்றாத முத்துடைத்தாமநிரைதாழ்ந்தபந்தற்கீழ்ப் * பெருப்பெருத்தகண்ணாலங்கள் செய்யக் கனக்கண்டு * திருவரங்கத்துள்ளோங்குமொளியுளாரான * அணிபரங்கத்தம்மானுக்கே அற்றுத் தீர்ந்தகாதலையுடையளாக, அவ்வளவில் ஆழ்வாரும் 'கோதைக்குத் தக்க வரன் கோயில்பிள்ளை' என்றுகருதி 'இதுகூடும்படி யெங்ஙனே' என்று வ்யாகுலாந்தக்கரணராய்க் கண்வளர்ந்தருள, * திருவரங்கச்செல்வனார் ஆழ்வார்ஸ்வப்நத்திலே எழுந்தருளி 'உம்புத்ரி கோதையைக்கொண்டு * அணியரங்கன் திருமுற்றத்தேற வாரீர்: அவளுக்குத் தகுதியாக நாமே பாணிக்ரஹணம்பண்ணுகிறோம்' என்று அருளிச்செய்ய, ஆழ்வாரும்உகந்து நிர்ப்பராயிருக்கிறவளவிலே, திருவரங்கச்செல்வனார் 'நம் சத்ர சாமரதாலவ்ருந்தாதி ஸகலபரிஜநபரிச்சதங்களோடே ஸ்ரீவில்லிபுத்தூரேறப்போய் ஆண்டாளை அழைத்துக்கொண்டுவாருங்கோள்' என்று * திருப்பவளச்செவ்வாய்திறந்து அருளிச்செய்துவிட, அனைத்துப்பரிகரத்தாரும் ஸ்ரீவில்லிபுத்தூரேறச்சென்றுஆழ்வாரைக்கண்டு நம்பெருமாள் அருள்பாடிட்டருளினபடியை விண்ணப்பஞ்செய்ய, ஆழ்வாரும் ப்ரீதராய் ஆஸ்சர்யப்பட்டு வடபெருங்கோயிலுடையானுக்கு விண்ணப்பஞ்செய்து அவருடைய அநுமதிகொண்டு ஆண்டாளை மணிப்பல்லக்கிலே எழுந்தருளுவித்துக்கொண்டு, அழகியமணவாளரல்லதறியாத பாதிவ்ரத்யமுடைய ஆண்டாளைப் பிறர்கண்படாமல் தட்டுப்பாயிட்டு மூடிக்கொண்டு அகிலவாத்யத்துடனே அனைவரும் ஸேவிக்க எழுந்தருளப்பண்ணிக்கொண்டு திருவரங்கந்திருப்பதியேறச்சென்று 'ஆண்டாள் வந்தாள்



சூடிக்கொடுத்தாள் வந்தாள், சுரும்பார்குழற்கோதைவந்தாள், திருப்பாவைபாடிய செல்வி வந்தாள், தென்னரங்கந்தொழுந்தேசியள் வந்தாள் என்று பலசின்னங்கள் பணிமாற வந்து அழகியமணவாளன் திருமண்டபத்தே சென்று தட்டுப்பாயை வாங்க,

சூடிக்கொடுத்தநாச்சியாரும், அகிலருங் காணும்படி உதறியுடுத்தபட்டுச்சேலையும், சுற்றிய செங்கழுநீர்மாலையும், திருநுதற்கஸ்தூரித்திருநாமமும், காதளவும்ஓடிக்கயல்போல் மிளிருங்கடைக்கண்விழியும்' *கொடியேரிடையும் கோகநகத்த கொங்கைகுலுங்கச் * சிலம்பார்க்கச் *சீரார்வளையொலிப்ப அன்னமென்னடைகொண்டு அழகியமணவாளன் திருமுன்பே சென்று உள்ளேபுகுந்து* கண்களாரக்கண்டு, *கேசவநம்பியைக் கால்பிடிப்பாளென்றும் பேறுபெற்று, நாகபர்யங்கத்தை மிதித்தேறித் * தீமுகத்துநாகணைமேற் சேருந் திருவரங்கரைச் சேர்ந்து திருவரங்கன்றிருவடிவருடும்படி அந்தர்ப்பவித்தருள, இத்தைக் கண்ட ஆழ்வார்சிஷ்யரான வல்லபதேவனுள்ளிட்டார் அகிலரும்விஸ்மயப்பட, * திருவரங்கச்செல்வனார் ஆழ்வாருக்கு அருள்பாடிட்டருளி 'க்ஷீரஸமுத்ரராஜனைப்போலே நீரும் நமக்கு ஸ்வஸுரராய்விட்டீர்' என்று மிகவும்உகந்தருளி இவருக்குத் தீர்த்தம் திருமாலை திருப்பரியட்டத்துடனே ஸ்ரீசடகோபனும் ப்ரஸாதித்து, '*வில்லிபுத்தூருறைவான்றன் பொன்னடி பூண்டுகொண்டு வாழும்' என்று விடைகொடுத்தருள, ஆழ்வாரும் ப்ரீதி விஷாதத்துடனே ஸ்ரீவில்லிபுத்தூரேறச்சென்று பூர்வம்போலே வடபெருங்கோயிலுடையான்கைங்கர்யநிரதராய் வாழ்ந்தருளினர்.

---

## தொண்டரடிப்பொடியாழ்வார் வைபவம்

(க) "சோளக்ஷிதௌ தநுஷிமாஸிமஹேந்த்ரதாரே
† யஃப்ராதுராஸமுராஜித்வநமாலிகாம்ஸ:-
‡ ரங்கேஸகேளிஸகமூர்த்வஸிகந்த்விஜேந்த்ரம்
பக்தாங்க்ரிரேணுமநகாத்மகுணம்ப்ரபத்யே."

---

(க) [illegible]

† 'ப்ராதுர்பபூவ' என்றும் பாடம்.
‡ 'ரங்கேஸகேளிரதம்' என்றும் பாடம்.

(க) †"தேஹஸ்ரீஸாதுத்தரேப்ரபவநாம்ந்யப்தேகலௌபாஸ்கரே சாபக்ராஹிணிபூமிஸூநுதிவஸேஜ்யேஷ்டாபிதேஶ்ரீமதி - ருக்ஷேக்ருஷ்ணசதுர்த்தஶீதிதியுதேபக்தாங்க்ரிரேணுஸ்ஸூ [ஸ்ரீ
ரங்கேஶாங்க்ரிஸரோருஹைகஹ்ருதய:ப்ராபாவதாரம்புவி."

ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வார், திருமண்டங்குடி யென்கிற க்ராமத்திலே (உ) "மாஸாநாம்மார்க்கஶீர்ஷோऽஹம்" என்று எம்பெருமான் தானுகச் சொல்லப்பட்ட மார்கழிமாஸத்தில் கேட்டை நக்ஷத்ரத்தில் ஸ்ரீவைஜயந்தீவநமாலிகாம்ஶராய் ப்ராஹ்மணவர்ணத்திலே அவதரித்தருளினர். (ங) "தத்ரோதபூத்‡பாகவதராத்விஜேந்த்ராத் மாஹேந்த்ரபேமாவலிசமார்க்கஶீர்ஷே - ஸ்ரீவிப்ரநாராயணநாமதேய: ‡ முராரிவக்ஷோவநமாலிகாம்ஶ:" என்று திவ்யஸூரிசரிதத்திலே சொல்லிற்றிறே.

நம்பெருமாள் அவரை ஜாயமாநகாலத்திலே* அமலங்களாகவிழித்துக் கடாக்ஷித்தருள, அத்தாலே சுத்தஸத்வநிஷ்டரான இவர்க்கு 'விப்ரநாராயணர்' என்று திருநாமஞ்சாத்திக் காலந்தப்பாமல் சௌளோபநயநாதிகளையும் பண்ணுவித்து நால்வேதம்ஆறங்கம்முதலான அகில வித்யைகளையும் அதிகரிப்பிக்க, அகில வித்யாபாரங்கதராய் அதிவிரக்தராய் அக்ருதோத்வாஹருமான இவர், (ச) "மருத்வ்ருதாயாமத்பஸ்தம்சந்த்ரபுஷ்கரிணீதடே - ஸ்ரீரங்கமதுலம்க்ஷேத்ரம்ஶ்ரியாஜுஷ்டம்ஶுபாஸ்பதம்" என்கிறபடியே ஸமாப்பதிகரஹிதமாக

---

(க) [illegible]

(உ) [illegible] (ங) [illegible] (ச) [illegible]

† இந்தச்சுலோகம் சில பிரதிகளில் இல்லை.

‡ 'பாகவதோத்விஜேந்த்ர:' என்பதும், 'ஸ்ரீரங்கபக்தோ' என்பதும் பாடாந்தரங்கள்.



ஶ்லாகிக்கப்படுகிற ஸ்ரீரங்கக்ஷேத்ரத்திலே புகுந்து, (க) "விமாநமப்யேத்யசது:ப்ரதக்ஷிணஞ் சதுர்த்திஶம்தஸ்யக்ருதப்ரணாம: - ததந்தராவிஶ்யவிதிர்ததர்ஶதமிந்த்ரநீலாசலஸந்நிகாஶம் - ப்ரஸந்நவக்த்ரம்நளிநாயதேக்ஷணம்க்ருபாமயம் காந்திநிகேதரூபம்" என்கிற விக்ரஹத்தைச் சதுராநநன் ஸேவித்தாப்போலே சதுரரில் அக்ரகண்யரான இவரும் * அரவாசப்பெருஞ்சோதியநந்தனென்னும் அணிவிளங்குமுயர்வெள்ளையணையின்மேலே பள்ளிகொண்டருளும் பரவாஸுதேவரான அழகியமணவாளரை ஸேவிக்க, இவர்விஷயவாசியறிந்துபற்றுகிறதேபற்றுசாகப் பெரியபெருமாளும் தம்முடைய க்ருபையாலே "குழலழகர் வாயழகர் கண்ணழகர்" என்று சொல்லப்பட்டிருப்பதாய் (உ) "பும்ஸாந்த்ருஷ்டிசித்தாபஹாரிணம்" என்கிற தம்முடைய வடிவழகைக் காட்டி இவரைத் தம்பக்கலிலே நிரதிஶய பக்தியுக்தராம்படி கடாக்ஷித்தருள,

ஸ்ரீவிப்ரநாராயணரும், அபாரகாருணிகரான *அரங்கனுர்க்காட்செய்யவேணுமென்று * துளபத்தொண்டிலே தத்பரராய், (ங) "புண்டரீகஶ்சபுண்யக்ருத்" என்று புண்யக்ருத்தாகச் சொல்லப்பட்ட ஸ்ரீபுண்டரீகரைப்போலேயும், (ச) "தந்யோऽஹம்" என்று*நன்மாலைகள்சாத்தி ஸந்துஷ்டரான ஸ்ரீமாலாகாரரைப்போலேயும், (ரு) "ஸதுநாகவரஶ்ஸ்ரீமாந் நாராயணபராயண:" என்கிற கைங்கர்ய ஸ்ரீயையுடையராகையாலே 'ஸ்ரீமாந்' என்றுசொல்லப்பட்ட ஸ்ரீகஜேந்த்ராழ்வானைப்போலேயும், "எண்பகர்பூவுங் கொணர்ந்தேன்" என்று அஷ்டவிதபுஷ்பமயமான * அலங்கலந்தொடையல்கொண்டு அடியிணைபணிகிற பெரியாழ்வாரைப்போலேயும் இவரும் தம்மை *ஏமாற்றந்தவிர்த்துத் *திருவரங்கத்தேகிடந்த *திருவுடையாள்மணவாளர்க்குத் திருநந்தவநஞ்செய்து நித்யம் திருமாலைகட்டி ஸமர்ப்பித்துப் போருகிற காலத்திலே;

திருக்கரம்பனூரிலே திவ்யாங்கநாம்ஶையாய் அதிஸுந்தரையாய் வர்த்திக்கிற 'தேவதேவி' என்கிற வேஶ்யை ஒருகால் நிசளா

---

(க) [illegible]

(உ) [illegible]

(ங) [illegible] (ச) [illegible] (ரு) [illegible]

புரீசனான சோளனை ஸேவித்து மீண்டுவருகிறபோது ஸ்வஸகிகளோடேகூட மார்க்ககேதவ்யபநோதநார்த்தமாக ஸ்ரீவிப்ரநாராயணர் செய்கிற திருநந்தவனத்தின் திருச்சோலை நிழலிலே ஒருமரத்தடியிலே இருந்து அத்திருச்சோலையின் ஸ்ரீயைச் சுற்றிச் சுழன்றுபார்த்துப் பரவஶையாய், பநஸ ஆம்ர பாடல நாளிகேர நாரங்க ஜம்பீர லிகுச கதளீ குரவக வகுள அசோக புந்நாக பூகீ ப்ரப்ருதி வ்ருக்ஷ ஷண்ட விடபாரூட சுகபிகஸாரிகாதிஶகுனைர்மதுரகூஜிதமாய், நிரந்தரவஸந்தமாய், மதுஸ்ரவகுஸுமாந்தராளத்திலே மஞ்ஜுகூஜந்மதுவ்ரதயுக்தமாய், கேதகீ மாலதீ ஜாதி மல்லிகா அரவிந்த கல்ஹார இந்தீவர சம்பகாமோத பந்துர கந்தவஹோபஸேவிதமா யிருக்கக் கண்டு, ஸ்வாக்ரஜையைக்குறித்து 'இப்பொழிலின்நிழல் ஶ்ரமஹரமாய் நந்தவனத்தையும் சைத்ரரதத்தையும் பரிஹஸியாநின்றதீ!' என்ன, அவளும் ஸ்மேராநநாப்ஜையான தேவதேவியைக்குறித்து 'ஸ்வப்ரஸூநப்ரகர்ஷத்தாலே நம்பெருமாள் திருமுடியைப்பூஷித்துவருமதாய் அவர் ம்ருகயாவிஹாரஶ்ராந்திப்ரஶமநம் பண்ணுமது, அஸ்மதாதிகளுக்கு அத்வகேதஹரணம் பண்ணுதொழியுமோ?' என்று ப்ரியாலாபம்பண்ணிக்கொண்டு ஆராமலக்ஷ்மீ நிரீக்ஷணரானவர்கள், அங்கே ஸ்ரீவிப்ரநாராயணரைக் கண்டார்கள்.

இவரும், வளர்ந்த கேஶஶ்மஶ்ருக்களையுடையராய், ப்ரவ்ருத்தரோமப்ரகாசிதாங்கராய், பரிதௌததந்தவஸ்த்ரோர்த்வபுண்ட்ராங்களையுமுடையராய், தரிக்கப்பட்ட துளஸீபத்மாக்ஷமாலையையும் த்வாதஶோர்த்வபுண்ட்ரங்களையுமுடையராய், திவ்யோத்யாநஸ்ததருகுல்மலதாதிகளுக்கு ஆலவாலகரண ஜலஸேசநாதி கைங்கர்யநிரதராயிராநிற்க, அத்தை அவர்களிருவரும் விஸ்மயத்துடன் ஆலோகித்துக்கொண்டிருக்க, இவரும் தம்கைங்கர்யாஸக்தசித்தராய் அவர்களைக்கண்ணெடுத்துப்பாராமல் திரஸ்கரித்திருக்க அவ்வளவிலே தேவதேவியும் தன்தமக்கையுடனே 'இவன் க்லீபனே? உந்மத்தனே? நாம் வந்து முன்னேநிற்க நிரீக்ஷியாதிருக்கிறான்' என்ன, ததக்ரஜையும் அவளைக்குறித்து 'இவர் க்லீபருமன்று, உந்மத்தருமன்று; ரங்கேஶகைங்கர்யாஸக்தசித்தராய் மஹாவிரக்தரான இவர் த்வத்ரூபஸம்பத்தியைக்காறியுமிழ்ந்திருப்பர்; இவரை உன் விப்ரமவிலாஸஹாஸேக்ஷணாதிகளாலே மோஹிப்பித்தாயாகில், நீயே வாரஸ்த்ரீஜநமுக்யை; உனக்கு நான் ஆறுமாஸம் தாஸியாயிருப்பேன்' என்ன, தேவதேவியும் அத்தைக்கேட்டு 'இவரை நான் வஶீகரியாவிட்டால் உனக்கு ஆறுமாஸம் வெள்ளாட்டியாவேன்' என்று ப்ரதிஜ்ஞை பண்ணி ஸ்வா-



லங்காரத்தையும் கழற்றிக்கொடுத்து ஸ்வஸகிகளோடேகூட ஸ்வாக்ரஜையையும் அனுப்பி, ஸாத்விகவேஷயுக்தையாய் இவர்திருவடிகளிலேவிழுந்து ஸேவிக்க, இவரும் 'இதுவென்? பெண்ணே!' என்று கேட்டருள, அவளும் 'ஸ்வாமிந்! அடியேன் வாரஸ்த்ரீவம்ஶத்திலே பாபவஶாத்பிறந்தேன்; என்னை என் தாயானவள் 'ஸர்வரையும்பஜித்து அர்த்தார்ஜநம் பண்' என்ன, அடியேன், 'பூர்வம் பாபங்களைப்பண்ணி இஜ்ஜந்மத்திலே பிறந்ததுமன்றியே இன்னம் பாபார்ஜநம்பண்ணிப் படுகுழியிலே விழவேணுமோ?' என்றுசொல்லி அர்த்தலுப்தையான அவளைப் பரித்யஜித்துப் பெருமாளுக்கு அந்தரங்ககைங்கர்யநிரதரான தேவரீர்திருவடிகளை ஆஶ்ரயித்து உஜ்ஜீவிக்கவேணுமென்று வந்தேன்; ஆகிஞ்சந்யாநந்யகதித்வமுடைய அடியேனை இரங்கியருளி ஆராமரக்ஷணக்ருத்யே நியோகித்தால் தேவரீர் பெருமாளுக்குத் திருமாலைஸமர்ப்பித்து மாதுகரம்பண்ணி எழுந்தருளுந்தனையும் காத்திருக்கிறேன்' என்ன, இவரும் இரங்கியருளித் தம்முடைய திருவாராதநமான எம்பெருமானுக்குப் பைக்ஷத்தை அமுதுசெய்யப்பண்ணித் தாமும் அமுதுசெய்து நிஜபுக்தஶேஷத்தையும் இரங்கியருளினார்.

பின்பு அவளும், திருநந்தவநத்தில் திருத்துழாய் முதலான பூஞ்செடிகளுக்குக் குழிகட்டிச் சோதித்துக் கொத்தித் திருமஞ்சநம் பரிமாறிக்கொண்டு இப்படியே ஆறுமாஸம் அநுவர்த்தித்திருந்தாள். பின்னையும் குழிகட்டிச் சோதித்துத் திருமஞ்சநம் பரிமாறிக்கொண்டிருக்கச்செய்தே வர்ஷாகாலமானவாறே ஒருநாள் பெருவர்ஷம் வர்ஷிக்க, ஸ்ரீவிப்ரநாராயணரும் பர்ணசாலையில் ப்ரவேசித்திருக்க, அவளும் அப்பாலேயிருந்து நனையாநிற்கக் கண்டு 'உள்ளே வா' என்றழைக்க, அவளும் உள்ளேபுகுந்தவளவிலே ஈரப்புடவையுடனேயிருக்கிறதைக்கண்டு தம்முடைய உத்தரீயத்தைப்ரஸாதிக்க, அவளும் தரித்துக்கொண்டு அவரைப்பார்த்து 'திருவடிகளைப்பிடிக்கிறேன்' என்ன, இவரும் அநுகூலிக்க, அவளும் திருவடிகளைப் பிடியாநிற்கச் செய்தே, (க) "அங்காரஸத்ருஶீநாரீக்ருதகும்பஸமஃ புமாந்" என்கிறபடியே நெருப்பைச்சேர்ந்த நெய்யைப்போலே இவர்மனமுருகச் செய்தே, அவளும் 'ஸ்வாமி! அடியேனுக்கு ஹிதமாயிருப்பதொரு வார்த்தை அருளிச்செய்யவேணும்' என்று மந்தஸ்மிதஞ்செய்து அபாங்கவீக்ஷணம்பண்ண, இவரும் விகரித்து அவள்கையைப்பிடிக்க, அவளும் 'தந்யையானேன்' என்று இவரைக் காடாலிங்கநம் பண்-

(க) "𑌅𑌙𑍍𑌗𑌾𑌰𑌸𑌦𑍃𑌶𑍀 𑌨𑌾𑌰𑍀 𑌘𑍃𑌤𑌕𑍁𑌮𑍍𑌭𑌸𑌮𑌃 𑌪𑍁𑌮𑌾𑌨𑍍"

ணிக்கொண்டு ரமித்து, ஒருகாலும் காந்தா விஷயாநபிஜ்ஞரான இவரை மநோபவாயோதநவைபவத்தாலே ஸ்வவிஷயே மக்நமநாவாக்கினாள். அதன் மற்றைநாள் ஸ்வக்ருஹத்தினின்றும் ஸ்வாபரணத்தையும் அழைப்பித்துக்கொண்டு ஸர்வாபரணபூஷிதையாய் இவரைத் தன் ஆபிரூப்யத்தாலே மயக்கி, அவயவைகதேஸத்திலே ஆழங்கால்படுத்தி, திருநந்தவநத்திலே மல்லிகா லதாக்ருஹத்தையும் மாதவீகுஸுமோத்கர குஞ்சத்தையும் விசித்ரநிர்ப்பர மங்கதோத்ஸவரஸத்தையும் அநுபவிப்பித்து, த்ருடாநுராகத்தாலே ஒருவரையொருவர் ஒருக்ஷணமும் பிரியக்ஷமரன்றியேயிருந்து, இவரை ஸ்வவஸவர்த்தியாம்படிபண்ணி ஸ்வஸம்பந்தத்தை ஸஹிப்பிக்க, தன்ஸகிகளும் தமக்கையும் கண்டு ஸ்லாகிக்க, தீர்ணப்ரதிஜ்ஞையாய் ஸ்வக்ருஹமே வந்து இவருடைய வர்ணாஸ்ரமதர்மங்களையும் குலைத்துக் காமுகவேஷயுக்தராம்படிபண்ணி ப்ரக்ருதிபரவஸராக்கி அதிஸ்நிக்தைபோலே சிலகாலம் ரமியாநிற்க, இவரும் "சிலம்படியுருவிற் கருநெடுங்கண்ணார் திறத்தனாயறத்தையே மறந்து" என்கிறபடியே மிகவும் விஷயப்ரவணராய் ஸ்வதர்மாநுஷ்டாந ஸந்த்யாஸாவித்ர்யாதிகளையும் மறந்து ஸ்த்ரீபோகமே காலக்ஷேபமாக வர்த்திக்க, இவரை ஸர்வஸ்வாபஹரணம்பண்ணி ஸூந்யதநரானவாறே தானும் அநுராகஸூந்யையாய்த் தள்ளிவிட, இவரும் அவள்க்ருஹத்வாரத்திலே கிங்கராய் முசித்துக்கொண்டு கிடக்க, அவ்வளவிலே பெருமாளும் பிராட்டியும் அவ்வீதியிலே ஸவிலாஸஸஞ்சாரம் பண்ணிக்கொண்டு எழுந்தருளாநிற்க, அவ்வளவிலேபிராட்டி இவரைக்கண்டு மந்தஹாஸம்பண்ணி 'வேஸ்யாக்ருஹத்வாரத்திலே முசித்துக்கொண்டுகிடக்கிறார்?' என்று கேட்க, பெருமாளும் 'நமக்குப் பூமாலைதரும் விப்ரநாராயணன் வேஸ்யாஸக்தனாய் அவளாலே அர்த்தலோபத்தாலே நிராக்ருதனாய் து:கிதனாய் தத்வாரி முசித்துக்கொண்டு கிடக்கிறான்' என்று அருளிச்செய்ய, பிராட்டியும் பெருமாளுடனே 'நமக்கு அந்தரங்கரானவர் இங்ஙனே விஷயாஸக்தரானாலும் விஸ்வமோஹநஹேதுவான தேவரீர் மாயைக்கு விஷயமாக்கலாமோ? இவரை விஷயாஸக்தியிலுண்டான பாபத்தை நிஸ்ஸேஷமாக நிவர்த்திப்பித்துத் தேவரீர்திருவடிகளுக்கு அந்தரங்கராம்படி கடாக்ஷித்தருளவேணும்' என்ன, பெருமாளும் பிராட்டிவார்த்தைக்கு இசைந்து தம் பஞ்சபாத்ரத்திலே ஒரு தபநீயமான ஸுத்தோதகபாத்ரத்தை எடுத்துக்கொண்டுவந்து வேஸ்யாக்ருஹத்வாரி நின்று 'தேவதேவி! கவாடோத்காடநம்பண்ணு' என்ன, அவளும் 'நீர் ஆர்?' என்றுகேட்க, 'நான் அழகியமண



வாளனென்பவன்: விப்ரநாராயணருடைய தூதன்: அவர் அனுப்ப வந்தேன்' என்ன அவளும் சடக்கெனக் கதவைத்திறந்து என்னென்றுவினவ, பெருமாளும் 'ஸ்ரீவிப்ரநாராயணன் உனக்கு இந்த ஸ்வர்ணபாத்ரத்தைத் தந்தான்' என்ன, அவளும் ப்ரஹ்ருஷ்டையாய்த் தபநீயபாத்ரத்தை வாங்கிக்கொண்டு 'அவரை உள்ளே வரச்சொல்லும்' என்ன, அழகியமணவாளனும் விப்ரநாராயணரண்டையிலே சென்று 'தேவதேவி உம்மை உள்ளேவரச்சொன்னாள்' என்ன, இவரும் கர்ணாம்ருதமான வார்த்தையைக் கேட்டு ஸந்துஷ்டராய் உள்ளேபுகுந்து அவளுடனே க்ரீடாபரராக, அவ்வளவிலே பெருமாளும் கோயிலிலே போந்து * உரகமெல்லணையிலே சாய்ந்தருளினார்.

அநந்தரம் பொழுதுவிடிந்தவாறே திருக்காப்பை நீக்கினவளவிலே, ஸந்நிதியிலிருந்த தபநீயஸுத்தோதகபாத்ரத்தைக் காணாமல் கோயில்பரிகரத்தாரடைப்புபப்பட்டு ராஜகர்த்தருக்கு அறிவிக்க, நிசுளாபுரீந்த்ரனான ராஜாவும் கேட்டு நம்பிமார் பரிசாரகர் முதலானாரைப் பிடித்துத்தண்டிக்க, அவ்வளவிலே ஜலாஹரணார்த்தமாக வந்த தேவதேவியகத்துக்கடசேடி, தன்னோடுஸம்பந்தமுடையாரொருவனைப் பாதிக்கக் கண்டு இதுவென்னென்று கேட்க, அந்தப் பாதைப்படாநிற்கிறவர்கள் தபநீயபாத்ரம்காணாமற்போனத்தை அவளுக்குச் சொல்ல, அவளும் கேட்டு 'ஸ்ரீவிப்ரநாராயணன் எங்கள்தேவதேவிக்குஒரு ஸ்வர்ணபாத்ரம்கொடுத்திருக்கிறான்; அவள்மெத்தைத்தலையணையின்கீழே வைத்திருக்கிறது' என்ன, அவர்களும் கர்ணாம்ருதமான இவ்வார்த்தையைக் கேட்டு ராஜகர்த்தருக்குச் சொல்ல, அவர்களும் வந்து இவர்களைப்பிடித்துக்கொண்டு அவள்க்ருஹத்தைச் சோதித்து அந்தவட்டிலையும் எடுத்துக்கொண்டு தேவதேவியையும் விப்ரநாராயணரையும் பிடித்துக்கொண்டுவந்து ராஜாவின்முன்னே விட, அரசனும்வேஸ்யையைக்குறித்து 'இப்படி பெருமாளுடைய பாத்ரத்தை நீ வாங்கலாமோ?' என்ன, 'நாயன், தே! நான் பெருமாளதென்று அறியேன்: இவன் தன்வட்டிலென்று தன்தூதன் அழகியமணவாளனென்பானொருவன் கையிலே வரவிட்டான்: அறியாமல்வாங்கினேன்' என்ன, இவரும் 'நமக்குஒருதூதனுமில்லை, நான் வட்டிலையும் அறியேன்' என்ன, அவளும் 'உண்டு' என்ன, இவரும் 'இல்லை' என்ன, இப்படி உபயருடைய விவாதமும் கேட்டு, அரசனும் அந்த வேஸ்யையை அபராததண்டம்வாங்கி வட்டிலையும் பெருமாளுக்குஸமர்ப்பித்து, இவரையும் ஸ்வர்ணஸ்தேயயுக்த தண்டம் பரீக்ஷித்துப்பண்ணக்கடவோம்' என்று காவலிலே வைத்து ஸ்வக்ருஹமேபோந்தான்.

அவ்வளவிலே பிராட்டியும், பெருமாளுடனே 'ஸ்ரீவிப்ரநாராயணரை இனி லீலைக்குவிஷயமாக்காதே இரக்கத்துக்கு விஷயமாக்கிக்கொள்ளவேணும்' என்ன, பெருமாளும் ராஜாவின் ஸ்வப்நத்திலே எழுந்தருளி 'ஸ்ரீவிப்ரநாராயணர்க்கு ப்ராரப்தகர்மத்தை இங்கேகழிக்கைக்காக நாமே தபநீயபாத்ரத்தைக்கொடுத்துத் தண்டிப்பித்தோமித்தனை யல்லது அவர் தண்ட்யரன்று நிர்த்தோஷர்; அந்த வேஸ்யாதநமும் நமக்கு வேண்டா; அவரைவிட்டுப் பூர்வம்போலே திருமாலைகைங்கர்யத்திலே நிறுத்தவேணும்' என்று நியமித்தருள, சோளபூபதியும் விடியற்காலத்திலே எழுந்திருந்து நம்பெருமாள் தனக்கு ஸ்வப்நத்திலே நியமித்தருளினபடியைச் சொல்லி விஸ்மயப்பட்டு ஸ்ரீவிப்ரநாராயணரை அழைப்பித்து அநேகமாக ஸத்கரித்துத் தண்டனிட்டு விட, இவரும் தம்நிஹீநக்ருத்யத்தை நினைத்துநினைத்து அநுதபித்து "அன்னமென்னடையினார்கலவியை யருவருத்தஞ்சினேயல்" என்கிறபடியே விஷயாஸக்திருசியைக் காறியுமிழ்ந்து அகம்பாகமநப்ராயஸ்சித்தார்த்தமாக, (க) "ஏதத்ஸமஸ்தபாபாநாம் ப்ராயஸ்சித்தம்மநீஷிபி: - நிர்ணீதம்பகவத்பக்தபாதோதகநிஷேவணம்" என்று சொல்லுகிறபடியே ஸர்வபாபப்ராயஸ்சித்தமான பகவத்பக்தபாதோதகநிஷேவணம்பண்ணிப் பூதராயருளினார்.

அநந்தரம் இவருக்கு க்ராமகுலாதிகளால் வரும் அநர்த்தப்பேரன்றிக்கே நிலைநின்ற திருநாமமாவது, (உ) "யஸ்யமூர்த்நிஸ்திதம்யாவத்வைஷ்ணவாங்க்ரிரஜஸ்ஸதா - கங்காதிஸர்வதீர்த்தாநி தாவத்திஷ்டந்த்யஸம்ஸயம்" என்றும்,(ங) "நிரபேக்ஷம்முநிம்ஸாந்தம் நிர்வைரம்ஸமதர்ஸிநம் - அநுவ்ரஜாம்யஹம்நித்யம் பூயேயேத்யங்க்ரிரேணுபி:" என்றும், "மாயன்றமரடிநீறுகொண்டணியமுயலில் மற்றில்லைகண்டீ ரிவ்வணங்குக்கே" என்றும், "பாததூளிபடுதலா லிவ்வுலகம் பாக்கியஞ்செய்ததே" என்றும், "தொண்டரடிப்பொடியாடநாம்பெறில் கங்கைநீர் குடைந்தாடும்வேட்கை யென்னாவதே" என்

(க) "ஏதத்ஸமஸ்தபாபாநாம் ப்ராயஸ்சித்தம் மநீஷிபி: | நிர்ணீதம் பகவத்பக்தபாதோதகநிஷேவணம்" (உ) "யஸ்ய மூர்த்நி ஸ்திதம் யாவத் வைஷ்ணவாங்க்ரிரஜஸ்ஸதா | கங்காதிஸர்வதீர்த்தாநி தாவத் திஷ்டந்த்யஸம்ஸயம்" (ங) "நிரபேக்ஷம் முநிம் ஸாந்தம் நிர்வைரம் ஸமதர்ஸிநம் | அநுவ்ரஜாம்யஹம் நித்யம் பூயேயேத்யங்க்ரிரேணுபி:"



றும் இவ்வர்த்தவிஷயம் தத்வவித்துக்கள் பலராலும் உத்தேஸ்யதமமாக ஆதரிக்கப்பட்டிருக்கையாலே * துளவத்தொண்டிலே நிஷ்டராய்ப்போரும் ஸ்ரீவைஷ்ணவர்களுடைய ஸ்ரீபாததூளி யென்றே தமக்கு உஜ்ஜீவநகரமான நிலைநின்ற திருநாமத்தையுடையராய், (க) "ஸாவோநாநுப்ரகச்சதி" என்ற திருவடியைப்போலவும், (உ) "ஐஸ்வர்யம்வாபிலோகாநாம் காமயேநத்வயாவிநா" என்ற இளையபெருமாளைப்போலவும், "மாயாப்பெருவிறலுலகம்மூன்றினொடு நல்வீடுபெறினும், கொள்ளுவதெண்ணுமோ தெள்ளியோர்குறிப்பு" என்ற நம்மாழ்வாரைப்போலவும், இவரும் "இந்திரலோகமாளு மச்சுவைபெறினும் வேண்டேன்" என்று தத்வ்யதிரிக்தமான இதரபுருஷார்த்தங்களில் செல்லாத திருவுள்ளத்தையுடையராய், "என்னைத் தீமனங்கெடுத்தாய்", "மருவித்தொழும்மனமேதந்தாய்"என்கிறபடியே இவரும் "மாதரார்கயற்கணென்னும் வலையுட்பட்டழுந்துவேனைப், போதரேயென்றுசொல்லிப் புந்தியிற்புகுந்து தன்பா, லாதரம்பெருகவைத்த வழகன்" என்று அநுஸந்தித்து க்ருதஜ்ஞராய், அதுவுமன்றிக்கே "நாகத்தணைகுடந்தை வெஃகாத் திருவெவ்வுள், நாகத்தணையரங்கம் பேரன்பில்" என்றும், "கண்டியூ ரரங்கம் மெய்யங்கச்சி பேர் மல்லை" என்றும் இப்படி பலவிடங்களிலும் மண்டித்திரிகிற மற்றையாழ்வார்களைப்போ லன்றிக்கே*யாவரும் வந்தடிவணங்க அரங்கநகர் துயின்ற அழகியமணவாளரல்லதறியாத பாதிவ்ரத்யத்தையுடையராக, அவ்வளவிலே நம்பெருமாளும் இவர்க்கு*மயர்வறமதிநலமருளித் தம்முடைய பரத்வாதி பஞ்சப்ரகார ரூபகுணவிபூதி சேஷ்டிதங்களை யெல்லாம் நிஸ்ஸந்தேஹமாகக் கரதலாமலகமாக்கித் தெளியக் காட்டிக்கொடுக்க, இவரும் தெளிவுற்ற சிந்தையராய் நிரவதிகபக்தியைப்பெற்று வர்த்திக்கும்படியைத் தேவதேவியும் கண்டு, இவரைப்போலே உஜ்ஜீவிக்கவேணுமென்றுநினைத்துத் தன் ஸர்வஸ்வத்தையும் நம்பெருமாளுக்கும் ஸமர்ப்பித்துப் பரமஸாத்விகையாய், "ஸத்ஸங்கதி ஸதாபஸ்யந்தியிலே வைக்கும்" என்னுமாபோலே நம்பெருமாள்கோயிலிலே ஸம்மார்ஜநாதி கைங்கர்யநிரதையாய் உஜ்ஜீவித்தாள்.

இவ்வாழ்வாருக்குப் பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகள் தலைமண்டையிட்டு, (ங) "பிதாபுத்ரஸ்சநாராயண:" என்றும் "தாயாய்த் தந்தையாய் மக்களாய் மற்றுமாய் முற்றுமாய்" என்றும் சொல்லுகிறபடியே ஸர்வவிதோத்தாரகபந்துவாகப் பெரியபெருமாளைத் திருமந்

(க) "ஸாவோநாநுப்ரகச்சதி", (உ) "ஐஸ்வர்யம்வாபிலோகாநாம் காமயேநத்வயாவிநா" (ங) "பிதாபுத்ரஸ்சநாராயண:"

ராநுஸந்தாநத்தாலே அநுபவித்தருளி, அத்திருநாமோச்சாரணத்தால் தமக்கு உண்டான ராஜகுலமஹாத்ம்யத்தாலே "திருவடிதன்னுமம் மறந்தும் புறந்தொழா மாந்தரை - திறம்பேன்மின் கண்டீர்" என்று யமன் பாஶஹஸ்தரான ஸ்வபுருஷரைப் பார்த்துக் கர்ணமூலத்திலே யுபதேசிக்கத்தக்கதாக "நமன்றமர் தலைகள்மீதே - நாவலிட்டுழிதருகின்றோம்" என்று அம்மந்த்ரவைபவத்தைச் சொல்லி ஆநந்திதனு, யமாதிகள் தலையிலே அடியிட்டு ஸ்ரீவைஷ்ணவர்களடியிலே முடியிட்டுத் திருமாலைகட்டிச் சாத்த நினைத்துத் திருமாலைசொல்லுகிற இவர், ஸ்ரீஶௌநகபகவான் வக்தாவாக ஸ்ரீஶதாநந்தர் ஶ்ரோதாவாகத் திருநாமங்களைக் கேட்டாப்போலே பெரியபெருமாள் ஶ்ரோதாவாகத் தாம் வக்தாவாய்க்கொண்டு ப்ரகாசிப்பித்தருளி, (க) "பூதாநிசகவர்க்கேண சவர்க்கேணேந்த்ரியாணிச - டவர்க்கேண தவர்க்கேண ஜ்ஞாநகந்தாதயஸ்ததா - மநஃபகாரேணவோக்தம் பகாரேணத்வஹங்க்ருதிஃ - பகாரேண ஸகாரேண மஹாந்ப்ரக்ருதிருச்யதே" என்றும்; "பொங்கைம்புலனும் பொறியைந்தும் கருமேந்திரியமைம்பூதம், இங்கிவ்வுயிரேய் பிரகிருதி மானாங்கார மனங்கள்" என்றும் சொல்லப்படுகிற சதுர்விம்ஶதி தத்வாத்மகமான இஶ்ஶரீரத்தில் ஆத்மபுத்தியை "புறஞ்சுவரோட்டைமாடம்" என்று நிவர்த்திப்பித்தும், (உ) "ஆத்மாதுஸமகாரேண பஞ்சவிம்ஶஃப்ரகீர்த்திதஃ" என்று சொல்லுகிறபடியே இருபத்தைந்தாம் அக்ஷரமான மகார வாச்யனுகையாலே ப்ரக்ருதேஃபரனுன ஆத்மஸ்வரூபத்தை "அடியரோர்க்கு" என்று ஸ்வரூபநிர்த்தேஶம் பண்ணியும், திருமந்த்ரநிஷ்டராய் * 'மெய்ம்மையை மிகவுணர்ந்து * உன்கடைத்தலையிருந்து வாழும் சோம்பர் பெரியபெருமாளுக்கு அபிமதர்' என்று அவர்கள்தமக்கு உத்தேஶ்யராகையாலே "உன்னடியார்க்காட்படுத்தாய்" என்று தமக்குப் பெருமானுண்டாக்கின ததீயஶேஷத்வத்தைப்பேசியும், இப்படி இவ்வர்த்தவிசேஷங்களை அகிலரும் அறிந்து உஜ்ஜீவிக்கும்படி 'திருமாலை,' 'திருப்பள்ளியெழுச்சி' என்கிற திவ்யப்ரபந்தங்களிலே விஶததமமாக அருளிச்செய்து லோகத்தை வாழ்வித்தருளினர்.

---

(க) "[illegible]"
(உ) "[illegible]"

# திருப்பாணாழ்வார் வைபவம்.

(க) "ஸ்ரீலோகஸாரங்கமஹாமுநீந்த்ர ஸ்கந்தாதிரூடங்கலயாமிநித்யம் களங்கஹீநங்கமநீயபக்தம் கவீஶ்வரம்காயகஸார்வபௌமம்."

(உ) †"ஸ்ரீவேலாப்தவிநிர்க்கமே கலியுகே ஸம்வத்ஸரே துர்மதௌ
பாநௌவ்ருஶ்சிகபாஜி பஞ்சமதிநே வாரேபுதஸ்யோத்தமே-
ரோஹிண்யாஸஹிதேலஸத்யுடுபதௌக்ருஷ்ணேத்விதீயேதிதௌ
ஸஞ்ஜஜ்ஞேமுநிவாஹநஶ்சரணயோர்யோரங்கிணோந்தர்த்ததே."

திருப்பாணாழ்வார் திருவவதாரக்ரமம் இருக்கும்படி எங்ஙனேயென்னில்:—(ங) "காவேரீதோயமாஸ்ரித்யவாதோயத்ரப்ரவர்த்ததே-. தத்தேஶவாஸிநாம்முக்திஃ கிமுதத்தீரவாஸிநாம்" என்றுசொல்லுகிறபடியே ஸ்வப்ரவாஹஸ்பர்ஶ மருத் ஸம்பந்தத்தாலே முக்திதரவல்ல சீர்மையையுடைத்தான திருக்காவேரிக்கரையிலே நிசுளாபுரியென்று சொல்லப்பட்டிருப்பதாய், மாடகூடப்ராஸாதோபஶோபிதமான உறையூரிலே, ஸூர்யவம்ஶப்ரதீபனுனசோளபூபதி தர்மமாக ப்ருதிவீபரிபாலநம் பண்ணுநிற்கச்செய்தே, க்ஷீரார்ணவராஜனிடத்தே பிராட்டி ப்ராதுர்ப்பவித்தருளினுப்போலே, நம்பெருமாளிடத்தே ஏகாக்ரசித்தனுன தர்மவர்மாவாகிற சோளனுக்குக் கந்யகையாய் நீளாம்ஶஜையான உறையூர்நாச்சியார் திருவவதரித்தருள, சோளராஜாவும், ஸ்ரீஜநகராஜன் பிராட்டியை ப்ரீதியோடே எடுத்து வளர்த்தாப்போலே உவப்போடே வளர்க்கவளர்ந்தருளுகிற நாச்சியார், பாலக்ரீடையிலும் நம்பெருமாளையல்லது வேறொரு விளையாட்டறியாதவளாய் ஸகிகளோடேகூடிவிஹரித்து வளர்ந்தவள், ப்ராப்தயௌவநையானபின்பு, ஒருநாள் உத்யாநவநத்திலேஸகிகளோடேகூட டோலாலீலையாய் விஹரியாநிற்க, "வேட்டையாடிவருவானைவிருந்தா வனத்தே கண்

---

(க) "[illegible]"
(உ) "[illegible]"
(ங) "[illegible]"

†இந்தச்சுலோகம் சிலபிரதிகளில் இல்லை.

டோமே'' என்கிறபடியே நம்பெருமாள் அங்கே ம்ருகயாவிஹாரபரராயெழுந்தருள, கண்டு மையலேறிமோஹித்து ஊரேவந்து,ஸ்வபிதாவான சோளராஜாவைக்குறித்து 'நம்பெருமாளையல்லது வேறொருபுருஷனுக்கு வாழ்க்கைப்படேன்; என்னை அவருக்கே உதகம்பண்ணிக்கொடும்' என்ன, சோளராஜாவும் அதிஸந்துஷ்டனாய் நம்பெருமாள்ஸந்நிதியிலே சென்று அச்செய்தியைவிண்ணப்பஞ்செய்ய, பெருமாளும் 'நாமே பாணிக்ரஹணம்பண்ணுகிறோம்: நமக்கே உதகம்பண்ணிக்கொடும்' என்று நியமிக்க, ராஜாவும் ஸந்துஷ்டனாய்த் * தமிலெழப் பறைகொட்டித் தோரணம்நாட்டி அரங்கமாநகரை அலங்கரித்துப் பெரியப்ரீதியுடனே * பெருப்பெருத்த கண்ணாலஞ்செய்து நாச்சியாரை உதகம்பண்ணிக்கொடுக்க, பெருமாளும் ஜநகராஜன் திருமகளை உத்வாஹம் பண்ணினாப்போலே உவப்போடே திருமணம் புணர, ராஜாவும் பொன்னரிசிமுந்நூற்றறுபது பாரமும், அதுக்குத் தக்க முத்துமாணிக்கமயமான நவரத்நோபஹாரமும், நிரவதிகவஸ்த்ராபரணங்களும், ரோமஜாஸ்வ தாஸீவர்க்கங்களும் குறைவறக் கொடுத்தும், ஸர்வத்திலும் பர்யாப்திபிறவாமையாலே, தன்ஸர்வஸ்வத்தையும்நம்பெருமாளுக்கே ஸமர்ப்பித்து வாழுங்காலத்திலே, 'உறந்தை' என்கிற அந்த உறையூரிலே கார்த்திகைமாஸத்தில் ரோஹிணீநக்ஷத்ரத்திலே "குலந்தாங்குசாதிகள் நாலிலுங் கீழிழிந்து" என்றுசொல்லப்பட்ட பஞ்சமவர்ணத்திலே ப்ராஹ்மணவேள்விக் குறை முடித்த பாகவதரைப்போலே ஸ்ரீவத்ஸாம்ஸராகத் திருப்பாணாழ்வார் அவதரித்தருளினார். (க) "அததத்ரகுலே<ந்திமேரமாரமஞோஸ்ஸ்திதலாஞ்சநாம்ஸஜ: - ஸமஜாயதபாணஸம்ஜ்ஞகஸ் ஸௌகவி:கார்த்திகமாஸிவைதபே" என்று திவ்யஸூரிசரிதத்திலே சொல்லிற்றிறே.

(உ) "ஜாயமாநம்ஹிபுருஷம் யம்பஸ்யேந்மதுஸூதந: - ஸாத்விகஸ்ஸது விஜ்ஞேயஸ் ஸவைமோக்ஷார்த்தசிந்தக:" என்கிறபடியே எம்பெருமான் இவர்க்கு ஜாயமாநகடாக்ஷத்தைப் பண்ணுகையாலே கேவலஸத்வகுண ப்ரசுரராய், *சேமமுடைநாரதரைப்போலவும்,(ங) "நிக்ரஹாத்தாரயாஸ்மாத் வைதேநகீதபலேநமாம் - ஏவமுக்த்வாது

(க) [illegible]

(உ) [illegible]

(ங) [illegible]



சண்டாளம்ராக்ஷஸஸ்ஸரணங்கத:'' என்கிறபடியே ஸரணாகதனான ப்ரஹ்மரக்ஷஸ்ஸைக் குறித்து (க) "யந்மயாபஸ்சிமங்கீதம் ஸ்வரம் † கைஸிகமுத்தமம்-பலேநதஸ்யபத்ரந்தேமோக்ஷயிஷ்யாமிகில்பிஷாத்" என்று கைஸிகபுராணத்தில் யாமதோஷம் பரிஹரித்த பாகவதரைப் போலவும் பகவத்ஞாநவித்யைக்கு ஸார்வபௌமராய், *பரமாத்மனைச் சூழ்ந்திருந்து ஸாமகாநம்பண்ணும் நித்யஸூரிகளிலே யொருவர் வந்தவதரித்தாரோ வென்று சொல்லலாம்படியான திவ்யசரித்ரங்களையுடையராய் மோக்ஷார்த்தியான இப்பாண்பெருமாள், ஸ்வவர்ணாநுகூலமாக இரண்டாற்றுக்கும் நடுவே தாம் மிதியாமே தென்னாற்றின் தென்கரையிலே திருமுகத்துறைக் கெதிரே "தொழு மத்திசையுற்று நோக்கியே" என்கிறபடியே * திருவரங்கமேயான்திசையை நோக்கித் தூரநின்று * வலந்தாங்கு சக்கரத்தண்ணல் மணிவண்ணற்காளென்றுள் கலந்து வீணையும் கையுமாய்த் * திருப்புகழ்கள் பலவும் பாடிக்கொண்டு "சிந்திக்கும் திசைக்கும் தேறும் கைகூப்பும்" என்கிறபடியே பெரியபெருமாளை அநவரதஸேவைபண்ணிப் போருகையாலே, (உ) "ததோ மேதத்கதம்மந:" என்கிற படியே பெரியபெருமாளும் இவர்பக்கல் * உவந்த திருவுள்ளத்தராக, அவ்வளவிலே ‡[இப்பாண்பெருமாள் திருமுகத்துறைக்கு அருகேபெரிய பெருமாளிடத்தே பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளை யுடையராய் மிகவும் பரவஸராய்க் கண்களை மூடிக்கொண்டு * திருப்புகழ்கள் பலவும் பாடிக்கொண்டிருக்கச்செய்தே ஸ்ரீலோக ஸாரங்கமஹாமுநீந்த்ரரும் விடிவுகாலத்தே பெருமாளுக்குத் திருமஞ்சனக்குடம் எடுத்துக்கொண்டுபோய் நின்று இவரைக்கண்டு 'தூரப்போ' என்று சொல்ல, இவரும் திருமேனி தெரியாமலிருக்க, அவரும் ஒருகல்லை யெடுத்து வீசியெறிய, இவருடைய முகத்திலே பட்டு ருதிரவர்ஷ

(க) [illegible] (உ) [illegible]

† கைஸிகஸம்ஜ்ஞகம்' என்றும் பாடம்.

‡ 'நாச்சியாரும் பெருமாளுடனே 'நமக்கு அந்தரங்கரான இப்பாண் பெருமாள் புறம்பேநிற்கப் பெறுமோ?' என்று விண்ணப்பஞ்செய்ய, பெரிய பெருமாளும் இவரைப் பலகால் அருள்பாடிட்டுப் போகவிட்டவிடத்திலும் இவர் ஸ்வரூபத்தால்வந்த நைச்யத்தாலும் ஸ்வவர்ணத்தால் வந்த நைச்யத்தாலும் பிற்காலித்துக் கடுநடையிட்டு அகல்கிறவளவிலே, பெரியபெருமாள் பின்னையும் இவர்பக்கலுள்ள க்ருபாதிஸயத்தாலும்' என்று [ ] இக்குறியிட்ட இடத்தில் சிலபிரதிகளின் பாடம்,

மாக வர்ஷிக்க, இவரும் கண்களை விழித்துப்பார்த்துக் கலங்கி 'மஹாபாகவதாபசாரப்பட்டோம்' என்று தூரப்போய்நிற்க, அவரும் நீராடி நித்யகர்மாநுஷ்டாநங்கள் செய்து, திருமஞ்சனமெடுத்துக்கொண்டு சத்ர சாமர தாலவ்ருந்தாதிகளோடு ஸகலவாத்ய கோஷத்துடனே பெருமாள் ஸந்நிதியிலே செல்லாநிற்க, பெருமாளும், திருவுள்ளங் கலங்கி 'நம்முடைய பக்தனை இவர் இப்படி செய்பவோ?' என்று கனக்கவொநந்திருக்க, அவ்வளவிலே நாச்சியாரும் பெரிய பெருமாளுடனே 'நமக்கு அந்தரங்கரான இப்பாண்பெருமாள் புறம்பே நிற்கலாமோ?' என்று விண்ணப்பஞ்செய்ய, பெரியபெருமாளும் திருக்காப்புச்சேர்த்துக்கொண்டு லோகஸாரங்கமுநீந்த்ரரைக் கனக்கக்கோபித்து 'நம்முடைய பக்தரை நீர் இப்படி செய்யலாமோ?' என்று இவருக்குத் திருக்காப்புநீக்காமலிருக்க இவரும் வ்யாகுலாக்தஃகரணராய் 'அடியேன் மஹாபாகவதாபசாரப்பட்டுவிட்டேன், அடியேனுக்கு இனி ஈடேற வழியேது?' என்று கேட்க, பெருமாள் பின்னையும் இப்பாண்பெருமாள் பக்கலுள்ள க்ருபாதிஶயத்தாலும்], தன் நிரங்குஶஸ்வாதந்த்ர்யத்தாலும் ஸ்ரீலோகஸாரங்க மஹாமுநீந்த்ரரைப் பார்த்து 'நமக்கு அந்தரங்கரான பாண்பெருமாளை நீர் நெகிழ நினையாதே அவரை உம்முடையதோளிலே கொண்டு நம்பக்கல் அழைத்துக்கொண்டுவாரும்' என்று ஸ்வப்நமுகேந நியமித்தருள, அவரும் விடிவோரை எழுந்திருந்து, (க) "அத்யமேஸபலஞ்ஜன்மஸுப்ரபாதாசமேநிஶா" என்கிறபடியே இற்றைவிடிவு எனக்குநல்விடிவாச்சுதென்று ஸ்வப்நத்தை நிஶ்சயித்துமிகவும் ஹ்ருஷ்டராய், * தோதவத்தித்தூய்மறையோருடனே திருமுகத்துறையிலே * நாட்காலே நீராடி நித்யாநுஷ்டாநம் செய்தருளி, (உ) "ஸதீர்த்தமதிகந்தஸ்மாத் யத்ரபாகவதஸ்ஸ்திதஃ" என்கையாலே, இவ்வாழ்வார் அதிதூரத்திலே நின்று * யாழினிசை வண்டினங்களாளம்வைக்கு மரங்கத்தைநோக்கி நித்யமாக ஸேவித்து ஸ்தோத்ரம்பண்ணிக்கொண்டு நிற்கிறவிடத்தேற எழுந்தருளி, இப்பாண்பெருமாள் திருவடிகளிலே தாளும் தடக்கையும் கூப்பித் தண்டன்ஸமர்ப்பித்து, 'நம்பெருமாள் தேவரீரை எழுந்தருளப்பண்ணுவித்துக்கொண்டு வரவேணுமென்று அடியேனை நியமித்தருளினார்' என்று விண்ணப்பஞ்செய்ய, ஆழ்வாரும், "குலந்தாங்குசாதிகள் நாலிலுங் கீழிழிந்து" என்றும், "குலங்களாய

(க) "அத்யமேஸபலஞ்ஜந்மஸுப்ரபாதாசமேநிஶா" (உ) "ஸதீர்த்தமதிகந்தஸ்மாத் யத்ரபாகவதஸ்ஸ்திதஃ"



ஈரிரண்டி லொன்றிலும் பிறந்திலேன்" என்றும், "நீசனேன் நிறைவொன்றுமிலேன்" என்றும் சொல்லுகிறபடியே ஸ்வநைச்யத்தை முன்னிட்டுப் பிற்காலித்து * 'திருவரங்கப் பெருநகரை நான் மிதிப்பேனோ?' என்ன, ஸ்ரீலோகஸாரங்கமஹாமுனிகளும் 'ஆகில், அடியேனுடைய தோளின்மேலே எழுந்தருளும்; பெருமாள் அருள்பாடிட்டருளினபடியே எழுந்தருள்வித்துக்கொண்டு போகிறேன்' என்ன, ஆழ்வாரும் "செய்த்தலையெழுநாற்றுப்போல் அவன் செய்வனசெய்து கொள்ள" என்கிறபடியே * அவன்செய்யுஞ்சேமத்தை யெண்ணித் தெளிவுற்று ந்யஸ்தபரராய்நிற்க, ஸ்ரீலோகஸாரங்கமஹாமுநீந்த்ரரும், முக்தனைப் போமவனை ஆதிவாஹிகர் எழுந்தருளுவித்துக்கொண்டு திருமாமணிமண்டபத்தேறப் போமாபோலே ஆழ்வாரைத் தம் திருத்தோளின்மேலே எழுந்தருளுவித்துக்கொண்டு அழகியமணவாளன் திருமண்டபத்துக்கு அவ்வருகே புகுர, பெரியபெருமாளும் தம்முடைய திவ்யமங்களவிக்ரஹத்தை நித்யஸூரிகளுக்கு நிதிகாட்டுவாரைப் போலே இவருக்குக் காட்டிக்கொடுக்க, (க) "கிரீடகேயூரக ரத்நகுண்டல ப்ரலம்பமுக்தாமணிஹாரபூஷிதம் - விஶாலவக்ஷஸ்ஸ்தலஶோபிகௌஸ்துபம் ஶ்ரியாசதேவ்யாத்யுஷிதோருவக்ஷஸம் - ப்ரதப்தசாமீகரசாருவாஸஸம் ஸுமேகலம் நூபுரஶோபிதாங்க்ரிகம் - ஸுவர்த்துநீஜாதம்ருணாளகோமளம் ததாநமச்சசவியஜ்ஞஸூத்ரகம்-புஜோபதாநம்ப்ரஸ்ருதாங்யஹஸ்தம் நிகுஞ்சிதோத்தாநிதபாதயுக்மம் - ஸுதீர்க்கமுத்பாஹுமுதக்ரவேஷம் புஜங்கதல்பம்புருஷந்ததர்ஶ" என்று சொல்லுகிறபடியே ப்ரஹ்மாதி ஸகலசேதநராலும் ஸேவ்யமாநரான * அரங்கத் தரவணைப் பள்ளியானை ஸேவிக்கப் புகுந்த ஆழ்வார், மாதாவினுடைய ஸர்வாவயவங்களும் கிடக்கச்செய்தே ஸதநந்தயப்ரஜை முலையிலே வாய்வைக்குமாபோலே சேஷிபக்கல் சேஷபூதன் இழியுந்துறை திருவடிகளாகையாலே "அரங்கத்தம்மான்

(க) "கிரீடகேயூரகரத்நகுண்டலப்ரலம்பமுக்தாமணிஹாரபூஷிதம் | விஶாலவக்ஷஸ்ஸ்தலஶோபிகௌஸ்துபம் ஶ்ரியாசதேவ்யாத்யுஷிதோருவக்ஷஸம் || ப்ரதப்தசாமீகரசாருவாஸஸம் ஸுமேகலம் நூபுரஶோபிதாங்க்ரிகம் | ஸுவர்த்துநீஜாதம்ருணாளகோமளம் ததாநமச்சச்சவியஜ்ஞஸூத்ரகம் || புஜோபதாநம் ப்ரஸ்ருதாந்யஹஸ்தம் நிகுஞ்சிதோத்தாநிதபாதயுக்மம் | ஸுதீர்க்கமுத்பாஹுமுதக்ரவேஷம் புஜங்கதல்பம் புருஷந்ததர்ஶ ||"

திருக்கமலபாதம் வந்தென்கண்ணினுள்ளன வொக்கின்றனவே" என்கிறபடியே ஶேஷித்வபோக்யத்வோபாயத்வங்கள் குறைவற்ற திருவடிகளையிறே முந்துறப்பற்றிற்று:— "அரங்கத்தம்மான்" என்கையாலே ஶேஷித்வமும், "கமலம்" என்கையாலே போக்யத்வமும், "பாதம்" என்கையாலே உபாயத்வமும் சொல்லிற்று:—பெரியாழ்வாரும் இப்படியிருந்துள்ள திருவடித்தாமரைகள் முதலாகத் * திருப்பாதகேசத்தை விருப்பாலுரைத்தநுபவித்தாப்போலே இவரும் * இருளகற்றுமெறிகதிரோன் மண்டலத்தூடேற்றிவைத் தேணிவாங்கி அருள்கொடுத்திட்டடியவரை யாட்கொள்வானான பெரியபெருமாளுடைய திவ்யமங்களவிக்ரஹத்தைப் பாதாதிகேஶாந்தமாக அநுபவித்து, அவ்வநுபவஜநித ப்ரீத்யதிஶயத்தாலே தாம் பத்தும்பத்தாக அநுபவித்தபடிக்கு "அமலனாதிபிரான்" என்கிற திவ்யப்ரபந்தத்தைப் பிற்பாடரும் அநுஸந்தித்து உஜ்ஜீவிக்கும்படி உபகரித்தருளி லோகத்தை வாழ்வித்தருளி மிகவும் உகப்போடேயிற்க, பெரிய பெருமாளும் வேர் சூடுமவர்கள் மண்பற்றுக் கழற்றாதாப்போலே அத்திருமேனியோடே அங்கீகரித்தருள, ஆழ்வாரும், அகிலரும் காணும்படி *அணியரங்கன் திருவடிகளிலே அந்தர்ப்பவித்தருளினார்.

## திருமங்கையாழ்வார் வைபவம்.

(க) "பரகாலஹரிம்வந்தே ஹரிபாதகுஹாஶயம் -
உந்நதப்ரதிகூலேபகும்பஸம்பேதவிப்ரமம்.
நாதப்ரஸபஸந்த்ரஸ்த ஶைவஶாக்யாதிதுர்த்விபம் -
பரகாலம்ருகேந்த்ரந்த்வாம் ப்ரபத்யேऽச்யுதவந்திதம்."

(உ) † "ஸத்தாராநாப்தராங்கலியுகஹவாநாமபகமே
நளேவர்ஷேமாஸேஶரதிசரமேதைவதகுரோ: -
த்ரிநேதாரேவஹ்நேஶ்ஶிஶிரகிரணேபூர்ணிமஜுஷி
க்ஷிதாவாவிர்ப்பூத: கலிரிபுரமேயாத்மமஹிமா."

---

(க) "𑌪𑌰𑌕𑌾𑌲𑌹𑌰𑌿𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌹𑌰𑌿𑌪𑌾𑌦𑌗𑍁𑌹𑌾𑌶𑌯𑌮𑍍 । 𑌉𑌨𑍍𑌨𑌤𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑍂𑌲𑍇𑌭𑌕𑍁𑌮𑍍𑌭𑌸𑌮𑍍𑌭𑍇𑌦𑌵𑌿𑌭𑍍𑌰𑌮𑌮𑍍 ॥ 𑌨𑌾𑌦𑌪𑍍𑌰𑌸𑌭𑌸𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌤𑌶𑍈𑌵𑌶𑌾𑌕𑍍𑌯𑌾𑌦𑌿𑌦𑍁𑌰𑍍𑌦𑍍𑌵𑌿𑌪𑌮𑍍 । 𑌪𑌰𑌕𑌾𑌲𑌮𑍃𑌗𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇𑌽𑌚𑍍𑌯𑍁𑌤𑌵𑌨𑍍𑌦𑌿𑌤𑌮𑍍 ॥" (உ) "𑌸𑌤𑍍𑌤𑌾𑌰𑌾𑌨𑌾𑌪𑍍𑌤𑌾𑌰𑌾𑌙𑍍𑌕𑌲𑌿𑌯𑍁𑌗𑌹𑌵𑌾𑌨𑌾𑌮𑌪𑌗𑌮𑍇 𑌨𑌲𑍇 𑌵𑌰𑍍𑌷𑍇 𑌮𑌾𑌸𑍇 𑌶𑌰𑌦𑌿 𑌚𑌰𑌮𑍇 𑌦𑍈𑌵𑌤𑌗𑍁𑌰𑍋𑌃 । 𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑌾𑌰𑍇 𑌵𑌹𑍍𑌨𑍇𑌃 𑌶𑌿𑌶𑌿𑌰𑌕𑌿𑌰𑌣𑍇 𑌪𑍂𑌰𑍍𑌣𑌿𑌮𑌜𑍁𑌷𑌿 𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌵𑌾𑌵𑌿𑌰𑍍𑌭𑍂𑌤𑌃 𑌕𑌲𑌿𑌰𑌿𑌪𑍁𑌰𑌮𑍇𑌯𑌾𑌤𑍍𑌮𑌮𑌹𑌿𑌮𑌾 ॥"

† இந்தச்சுலோகம் சிலபிரதிகளில் இல்லை.



திருமங்கையாழ்வார், திருவாலிதிருநகரியிலே திருக்குறையலூரிலே நளவருஷம் கார்த்திகைமாஸம் க்ருத்திகாநக்ஷத்திரத்திலே ஶ்ரீகார்முகாம்ஶராய் அவதரித்தருளினார். ம்லேச்சவம்ஶத்திலே அவதரிக்கையாலே, இவருக்கு 'நீலநிறத்தர்' என்று திருநாமஞ் சாத்தினார்கள். (க) "ஸமஜாயத தத்ர † ஶாபப்ரமுக:கஶ்சநீலநாமக: - புருஷோத்தமகார்முகாம்ஶஜஸ் ஸ்புரிதே கார்த்திகக்ருத்திகோடுநி" என்று திவ்யஸூரிசரிதத்திலே சொல்லிற்றிறே.

"தெரியேன் பாலகனாய்" என்கிறபடியே பால்யாவஸ்தாநந்தரம் ப்ராப்த யௌவநராய், * மாரனார்வரிவெஞ்சிலைக்காட்செய்து * தெரிவைமாருருவமேமருவி மிகவும் விஷயப்ரவணராய், ஸ்வகரத்ருதஶஸ்த்ரப்ரகாண்டராய், சோளபூபதியைஸேவித்து யுத்தேபராக்ராந்தராய், ‡ (ப்ரவீரராய், தமக்கு ஸஹாயபூதராக நீர்மேல்நடப்பான் நிழலொதுங்குவான் தாளூதுவான் தோலாவழக்கன் என்ற நாலுமந்த்ரிகளும், "ஆடல்மா" என்கிற குதிரைநம்பிரானும், "அமரிற்கடமாகளியானை" என்கிற யானைநம்பிரானுமாக) இப்படியிருக்கிற இவரை, அவனும் ஒருதேஶாதிபதியுமாய் ஸேநாநாயகனு மாக்கிவைத்துப் போருகிறகாலத்திலே;

திருவாலிநாட்டிலே நன்றாயிருப்பதொரு * தடத்தவிழ் தாமரைப்பொய்கையிலே, "சிலம்பார்க்கவந்து தெய்வமகளிர்களாடுஞ்சீர்" என்கிறபடியே சில அப்ஸரஸ்ஸுக்கள்வந்து நாளும் ஜலக்ரீடைபண்ணிப்போக, அவர்களிலேதிருமாமகளென்பாளொரு அப்ஸரஸ்ஸு குமுதமலர்கொய்யப் பிற்படுகையாலே அவர்களும் இவளைவிட்டுப் போக, இவளும் மாநுஷமானசரீரத்தைப் பரிக்ரஹித்துத் தனித்து நிற்க அவ்வளவிலே திருநாங்கூரில் எம்பெருமானை ஸேவித்திருப்பானொரு பிஷக்வரனான பாகவதோத்தமன் அநுஷ்டாநார்த்தமாகவந்தவளவிலே இப்பெண்பிள்ளையைக்கண்டு 'நீயார்? தனித்திருப்பானென்?' என்றுகேட்க, அவளும் 'கூடவந்த பெண்பிள்ளைகள் என்னைவிட்டுப் போனார்கள்; ‡ (ஸ்ரீமந்நாராயணாம்ஶஜரான கபிலாசார்யருடைய கோபோக்தியாலே மாநுஷவேஷத்தைத் தரித்து பாலகையாய் ஸ்வர்க்

---

(க) "𑌸𑌮𑌜𑌾𑌯𑌤 𑌤𑌤𑍍𑌰 𑌶𑌾𑌪𑌪𑍍𑌰𑌮𑍁𑌖𑌃 𑌕𑌶𑍍𑌚𑌨𑍀𑌲𑌨𑌾𑌮𑌕𑌃 । 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑌕𑌾𑌰𑍍𑌮𑍁𑌕𑌾𑌂𑌶𑌜𑌃 𑌸𑍍𑌫𑍁𑌰𑌿𑌤𑍇 𑌕𑌾𑌰𑍍𑌤𑌿𑌕𑌕𑍃𑌤𑍍𑌤𑌿𑌕𑍋𑌡𑍁𑌨𑌿 ॥"

† 'பாதஜப்ரமுக:' என்றும் பாடம்.

‡ குண்டலிதக்ரந்தங்கள் சில ஸ்ரீகோசங்களில் இல்லை.

கத்துக்குப்போக ஶக்தியில்லாமலிருக்கிறேன்' என்ன, 'அந்தவ்ருத்தாந்தத்தைச் சொல்' என்று வைத்யர் கேட்க, 'ஸ்வாமீ! அடியேன் ஸுமங்களையென்கிற நாமமுடையளாய் ஸ்வஸகிகளான அப்ஸரஸ்ஸுக்களோடேகூட அவர்களுக்கெல்லாம் நாயகியாய்த் திவ்யரூபத்தோடே ஸஞ்சரிக்கும்போது ஒருநாள் ஹிமவத்கிரியிலுள்ள வைபவங்களெல்லாம் பார்த்துக்கொண்டுவருமளவில், ஒருஸித்தாஶ்ரமத்தில் கபிலாசார்யர் மஹர்ஷிகளுக்கு பகவத்வைபவஞ்சொல்ல, நான் அதில் ஒருகுரூபியான ஸித்தபுருஷனைக் கண்டு பரிஹாஸம்பண்ண, கபிலர் 'நீ மநுஷ்யையாய் நீசனுக்கு பார்யையாகக்கடவாய்' என்று ஶபிக்க, நான் அதிஶோகத்தோடே ப்ரார்த்திக்க, அவரும் ப்ரஸந்நராய் 'பெண்ணே! ஜகத்ரக்ஷணார்த்தமாக என்னுடைய ஶார்ங்காம்ஶஜராய்ப் பரகாலன் அவதரித்து ராஜ்யாதிபதியாயிருக்கிறார்: அவருக்குப் பத்நியாய் அவரை பாகவதோத்தமராகப்பண்ணினால், உன்குறைவு அற்றுப்போம்' என்றுசொல்ல, இப்படி வந்தேன்') என்று தான் வந்த க்ரமத்தை அவருக்குச்சொல்ல, அவரும் புத்ரஹீநராகையாலே மிகவும் உகந்து 'நம்மூரேவா' என்று அழைத்துக்கொண்டுபோய் ஸ்வபத்நிகையிலே குமாரிவந்தவரத்தைச் சொல்லிப் போஷிக்கும்படிகாட்டிக்கொடுக்க, அவளும் வந்த்யையாகையாலே அதிஸந்தோஷத்துடன் அங்கீகரித்து, இவள் குமுதமலர்கொண்டுநின்றதுவே நிரூபகமாக 'குமுதவல்லியார்' என்று திருநாமஞ்சாத்தி, தம்பதிகளிருவரும் தங்களுக்குப்புத்ரியாக வளர்த்துக்கொண்டுபோருகிறகாலத்திலே, சிலர் போய் இவருக்கு இப்பெண்பிள்ளையினுடைய ரூபலாவண்யாதிகளை மிகவும் ஶ்லாகித்துச்சொல்ல, இவரும் அத்தைக்கேட்டு * நின்றவாநில்லாநெஞ்சினராய் * அவர்தருங் கலவியே கருதி யோடித் திருநாங்கூரிலே சென்று மருத்துவனை பாகவத னகத்திற் புகுந்து அவனுடனே ஸம்பாஷணம்பண்ணிக்கொண் டிருக்கச்செய்தே, இப்பெண்பிள்ளை புறப்படக்கண்டு விஸ்மயப்பட்டுப் பாகவதபிஷக்வரரைக்குறித்து, 'ஸுரஸுந்தோபமையான ஸுதை அநபத்யரான உமக்கு எங்ஙனே உண்டாய்த்து?' என்று கேட்க, அவரும் இவருடனே அப்பெண்ணின் வார்த்தைச் சொல்லி, 'இப்பெண்ணினாலே அநபத்யதாஶோகம் தீர்ந்தேன்: விவாஹோசிதவயஸ்கையாய் அஜ்ஞாதகுலகோத்ரையான இவளை யாருக்கு வாழ்க்கைப்படுத்துவேனென்று வ்யாகுலாந்தஃகரணனாகாநின்றேன்', என்ன, இவரும் 'இப்பெண்ணை நமக்குப்பத்நியாகத் தரவேணும்' என்று வஸ்த்ரபூஷணாதித்ரவ்யங்களை ஸங்கோச மறக் கொடுத்து மிகவும் அநுவர்த்தித்து விரும்பிக்கேட்க, தம்பதிகளும் அப்பெண்பிள்ளையை இவருக்குக்கொடுப்பதாக உத்யோகிக்க, அப்



பெண்பிள்ளையும் (௧) "தாபஃபுண்ட்ரஸ்ததாநாம மந்த்ரோயாகஶ்ச பஞ்சமஃ" என்று சொல்லப்பட்ட திருவிலச்சினை திருநாமம் முன்னாகப் பஞ்சஸம்ஸ்கார முள்ளவர்க் கொழிய * மற்றொருவர்க் கென்னைப் பேசலொட்டேன், என்று தன்னெஞ்சில் அத்யவஸாயத்தைச் சொல்ல, இவரும் அவ்வசநத்தைக்கேட்டு (௨) "ஶுபஸ்ய ஶீக்ரம்" என்கிறபடியே அதித்வரையோடே திருநறையூரிலே சென்று "பொன்னியலுமாடக்கவாடங்கடந்துபுக்கு" என்கிறபடியே நம்பிதிருமுன்பே வந்து [† (௩) "அக்நிதப்தேநசக்ரேண பாஹுமூலேது லாஞ்சிதஃ" என்றும், "தீயிற்பொலிகின்ற செஞ்சுடராழி திகழ்திருச்சக்கரத்தின் கோயிற்பொறியாலேயொற்றுண்டுநின்று" என்றும்சொல்லுகிறபடியே திருவிலச்சினையும் தரித்து (௪) "ஸர்வைஶ்ஶ்வேதம்ருதாதார்யம் ஊர்த்வபுண்ட்ரம் யதாவிதி - ருஜவோநிஸாந்தராளாநி ஹ்யங்கேஷு த்வாதஶஸ்வபி" என்று சொல்லுகிறபடியேகேஶவாதித்வாதஶோர்த்வபுண்ட்ரங்களையுடையராய் வர, குமுதவல்லியாரும் ஆழ்வாரைப்பார்த்து, 'ஒருஸம்வத்ஸரம்] நித்யமாக ஆயிரத்தெட்டு ஸ்ரீவைஷ்ணவர்களை அமுதுசெய்வித்து அவர்களுடைய ஸ்ரீபாததீர்த்தமும் தளிகைப்ரஸாதமும் ஸ்வீகரித்து நிறைவேறினாலொழிய, உம்மை நான் பர்த்தாவாக அங்கீகரிப்பதில்லை, என்று ஒருநியமம்பண்ண, அவரும் அதுக்கு

(௧) "தாபஃ புண்ட்ரஃ ததா நாம மந்த்ரோ யாகஶ்ச பஞ்சமஃ" (௨) "ஶுபஸ்ய ஶீக்ரம்" (௩) "அக்நிதப்தேந சக்ரேண பாஹுமூலே து லாஞ்சிதஃ" (௪) "ஸர்வைஶ்ஶ்வேதம்ருதா தார்யம் ஊர்த்வபுண்ட்ரம் யதாவிதி | ருஜவோ ஸாந்தராளாநி ஹ்யங்கேஷு த்வாதஶஸ்வபி ||"

† "திருநறையூர்நம்பிதிருவடிகளிலே தாளுந்தடக்கையுங்கூப்பி தண்டன்ஸமர்ப்பித்து 'தேவரீர் அடியேனை இரங்கியருளி க்ருபைபண்ணவேணுமென்று ஒருகாரணத்தினாலே தேவரீர்திருவடிகளிலே ஆஶ்ரயிக்கவேணுமென்று வந்தேன்' என்ன, நம்பியும்இவருக்கு"அக்நி ......லாஞ்சிதஃ" என்கிறபடியே * தீயிற்பொலிகின்ற செஞ்சுடராழிதிகழ்திருச்சக்கரத்தின்கோயிற்பொறியையும் தரிப்பித்து, "ஸர்வைஶ்..........த்வாதஶஸ்வபி" என்று சொல்லுகிறபடியே திருவிலச்சினையையும் கேஶவாதி ஶோர்த்வபுண்ட்ரங்களையும் ப்ரஸாதித்தருளி, 'திருமங்கையாழ்வார், என்றதிருநாமமும் ப்ரஸாதித்து விடைகொடுத்து அனுப்ப, இவரும் எழுந்தருளிநின்றவளவிலே, குமுதவல்லியாரும் இவரைக்கண்டு 'மஹாஸந்தோஷமாய்த்து; இன்னம் ஒருவ்ரதம் எனக்கு உண்டு' என்று 'ஒருஸம்வத்ஸரம்', என்று [] இக்குறியிட்ட இடத்தில் சிலபிரதிகளிற் பாடம்காண்கிறது.

இசைந்து ப்ராவண்யாதிஶயத்தாலே ப்ரதிஜ்ஞை பண்ணிக்கொடுக்க அதின்பின்பு குமுதவல்லியாரை நீலநிறத்தார்க்கு * நாடும் ஊரும் அறிய * நல்லதோர் கண்ணாலஞ்செய்து உதகபூர்வகமாக ஸமர்ப்பித்தார்கள்.

அநந்தரம், ஆழ்வாரும்(க)"ஆராதநாநாம்ஸர்வேஷாம்விஷ்ணோராராதநம்பரம் - தஸ்மாத்பரதரம்ப்ரோக்தம்ததீயாராதநம்ந்ருப" என்கிறபடியே அதிப்ரீதியுடனே * திருமாலடியார்களைப் பூசிக்க ஒருப்பட்டு அதுக்குத்தம்முடைய ஸர்வஸ்வத்தையுமிட்டுத் ததீயாராதநம்செய்து கொண்டு போருகிறகாலத்திலே, 'பரகாலன் பகுதித்ரவ்யத்தையெல்லாம் வ்யயம்பண்ணி ப்ரதிதிநம் ததீயாராதநம்பண்ணுகிறான்' என்று சிலர் போய்ச் சோழராஜாவுக்குச்சொல்ல அவனும்கேட்டுக் குபிதனாய்ப்பகுதிக்கு இவர்பக்கல் தரவுவரக்காட்ட, இவரும் அந்தத்தரவுக்கு வந்த ராஜமநுஷ்யர்க்கு (உ)"தத்யாமேவநிஶாமுகேநிஶமுகேமத்யாஹ்நஸாயாஹ்நயோஃ பஶ்சாதாவ்ரஜகம்பதாமவஸரோநைவாஸ்தி" என்னுமாபோலே சிலபர்யாயங்களைச் சொல்ல, கேட்டுச் சலித்து ராஜமநுஷ்யர் 'பகுதித்ரவ்யம் தரவேணும்' என்று நிர்ப்பந்தித்துக் கேட்க, இவரும் குபிதராய் அவர்களைத்தள்ளிவிட, அவர்களும் போய் இவ்விசேஷத்தைச் சோழராஜாவுக்கு அறிவிக்க, அவனும் குபிதனாய், இவர் ஆஜ்ஞாபங்கம்பண்ணினத்துக்கு மிகவும் சீறித் தன்ஸேநாதிபதியை யழைத்து 'பரகாலனை இங்கே பிடித்துக்கொண்டுவா' என்று ஆஜ்ஞாபிக்க, அவனும் ரதகஜதுரகபதாதிகளோடே சென்று இவரைவளைத்துப்பிடிக்கத்தேட, இவரும் துரகாரூடராய் ஸ்வபலஸஹிதராய் வந்து ஆலித்துக்கொண்டு அவன்படைமேலே விழுந்து ரதகஜதுரகபதாதிகளைக் கண்டித்துப் பராஜிதனாக்கி ஓட்டிவிட, ஸேநாதிபதியும் காந்திஹீநனாய் ஓடிவந்து பராஜயத்தைச்சோளனுக்கு அறிவிக்க, சோளபூபன் கேட்டு கோபாத்ஸம்ரக்தலோசநனாய் அப்போதே தன் சதுரங்கபலத்தோடே புறப்பட்டு வர, அவனுடைய ஸேநாஸமுத்ரம் இவரைவளைய, இவரும் பூர்வம்போலேத்ருடகரவாளபயங்கரஹஸ்தராய் ஆலித்துக்கொண்டு வந்து அவன் ஸேநாஸமுத்ரத்தை மந்தராத்ரிபோலே மதிக்க, ஸர்வரும் பராஜித

(க) "ஆராதநாநாம்ஸர்வேஷாம்விஷ்ணோராராதநம்பரம் - தஸ்மாத்பரதரம்ப்ரோக்தம்ததீயாராதநம்ந்ருப ॥" (உ) "தத்யாமேவநிஶாமுகேநிஶமுகேமத்யாஹ்நஸாயாஹ்நயோஃபஶ்சாதாவ்ரஜகம்பதாமவஸரோநைவாஸ்தி"

ராய் ஓடிவந்து ராஜாவின்மேலேவிழ, ராஜாவும், அதிரௌத்ரத்துடனே, ஓடுகிறபலத்தை நிறுத்தி, ஜகதேகதநுர்த்தரனை பெருமையோடே இவரை ஸேநாஸமுத்ரமத்யஸ்தராம்படி வளைய, இவரும் அதிவீரராய், ஸ்வகரத்ருதஶஸ்த்ரபலத்தாலே ஸேனையை மதியாமல் ஸம்ஹரிக்குமது கண்டு அதிஸந்துஷ்டனாய், இவரை 'நீர் ஒன்றுக்கும் பயப்படவேண்டா: உம்முடைய தைர்ய ஶௌர்ய பராக்ரமங்களைக் கண்டு மிகவும் ஸந்தோஷித்தோம்; நீர்செய்த அபகாரங்களையெல்லாம் மறந்தோம்; அஞ்சாதே நம்மை நம்பிவருவது' என்று தன் குருநைதவங்களைத்தொட்டு ஶபதம்பண்ணிக்கொடுக்க, இவரும் நம்பி அவனண்டையிலே சென்றவளவிலே, இவருடைய பராக்ரமத்தை மிகவும் ஶ்லாகித்து, 'நீர்செய்த த்ரோஹமெல்லாம் பொறுத்தோம்; நம்பகுதித்ரவ்யங்களைமாத்ரம் தந்துவிடும்' என்று இவரைத் தன் மந்த்ரிவசமாக்கி ஊரேமீண்டான். அந்த ஸசிவனும் படைவீட்டிலே சென்று இவரைப் பிடித்துக்கொண்டுவந்து † ஒரு தேவாலயத்திலே சிறைவைக்க, இவரும் அந்தக் கோயிலிலே மூன்றுநாள் அமுதுசெய்யாமல் உபவஸித்திருக்க, ‡ (நம்பியுடனே நாச்சியாரும் 'நம்முடைய புத்ரன் உபவாஸமாயிருக்கலாமோ?' என்ன, பெருமாளும், நாச்சியார் வார்த்தைக்கு இசைய, திருவுற்ற ப்ரஸாதமும் குழம்புப்பாலும் நாச்சியார் கொண்டுபோய் ப்ரஸாதிக்க, இப்படி பலநாளும் ஆனபின்பு ஆழ்வாரும் முசித்து 'பெரியபெருமாளையும் திருவேங்கடமுடையானையும் பேரருளாளரையும் ப்ரபத்திபண்ணிக்கொண்டு காவலுடன்கிடப்போம்' என்று வ்யாகுலாந்தஃகரணராய் நிற்க,) இப்படி ஆர்த்தராயிருக்கிற இவர் ஸ்வப்நத்திலே பேரருளாளர் எழுந்தருளி 'உமக்குப் பகுதிக்குவேண்டிய த்ரவ்யம் தருகிறோம்; காஞ்சீபுரத்தேற வாரும்' என்று அருளிச்செய்ய, இவரும் நிஶ்சிதார்த்தராயிருக்க, பொழுதுவிடிந்தவளவிலே, தநம் தரவேணுமென்று வந்த அமாத்யனுடனே 'காஞ்சீபுரத்தே ஆபத்தநமாகச் சிலதநம் சேமித்துக்கிடக்கிறது; அங்கே வந்தால் உங்கள் தநம் தருகிறோம்' என்ன, அவனும் ராஜாவுக்கு அறிவிக்க, அவன் 'அத்தையும் பார்ப்போம்: ஜாகரூகராய்க்காவலிட்டுக்கொண்டுபோங்கோள்' என்று ஆஜ்ஞாபிக்க, இவரும் காவலுடனே காஞ்சீநகரியேறச்சென்று, நிக்ஷேபதநம்ஶோதித்துக் காணாமையாலே முசித்துக் கிடக்க, அவ்வளவிலே கருணாகரராய் அர்த்திதார்த்தபரிதாநதீக்ஷிதரான வரதராஜரும் 'அஞ்சாதே கொள்ளும்'

† 'திருநறையூர்நம்பிகோயிலிலே' என்று பிரதிபேதம்.

‡ குண்டலிதக்ரந்தங்கள் சிலபிரதிகளில்மாத்திரம் உள்ளன.

என்று வேகவதீதீரத்திலே தநமிருக்கிற இடத்தை அடையாளத்துடனே ஸ்வப்நமுகேந அருளிச்செய்ய, இவரும் அங்கே தநம் கண்டெடுத்து, ந்ருபதநம்கொடுத்து, ஶேஷித்ததநத்தைத் ததீயாராதநார்த்தமாக வைத்துக்கொள்ள, † (மீளவும் ராஜமநுஷ்யர் ‘சில தாநயாதிகள் தரவேணும்’ என்று நிர்ப்பந்திக்க, இவரும் முசித்துக் கண்வளர்ந்தருள, முன்புபோலே வரதராஜரும் ‘வேகவதிமணலைத் திரட்டியளவும்’ என்ன, இவரும் அப்படியே கூட்டியளக்க அவர்கள் கண்ணுக்கு அநர்கஶ்லாக்யநெல்லாயிருந்தபடியால் அவர்களும் அளந்துகொண்டுபோக,) அமாத்யனும் அந்தத்தநத்தை ந்ருபதிமுன்னே வைத்து, வரதராஜர் ப்ரஸந்நராய் த்ரவ்யம் தந்தபடி சொல்ல, கேட்டு விஸ்மிதனாய், ‘இவர் ஸாமாந்யரன்று, மஹாபாகவதர்; இது த்ரௌபதிக்குப்புடவைசுரந்தாப்போலே யிருந்தது; இந்த தநத்தை நம் கோஶத்திலே வைக்கவொண்ணாது’ என்று பார்த்து ஆழ்வாரை அழைத்து அபராதக்ஷாமணம் பண்ணிக்கொண்டு, பஹுமுகமாக பஹுமாநம்பண்ணிப் போகவிட்டு, இவரை உபவஸிப்பித்ததோஷம் போம்படி அந்தத்ரவ்யத்தைத் தேவ ப்ராஹ்மண ஸந்தர்ப்பணம்பண்ணித் தோஷந்தீர்த்துக்கொண்டான்.

பின்பு இவரும் ஶேஷித்த த்ரவ்யங்கொண்டு ததீயாராதநம் நடத்தித் தநமெல்லாம் தீர்ந்து கையில் ஒன்றுமில்லாமையாலே ‘வழிபறித்தாகிலும் தநார்ஜநம்பண்ணித் ததீயாராதநம் அவிச்சிந்நமாக நடத்தவேணும்’ என்று வழிபறித்துத் தநங்கொண்டுவந்து ததீயாராதநம் பக்திபுரஸ்ஸரமாக நடத்திக்கொண்டு போராநிற்க, † (பின்னையும், ததீயாராதநநிமித்தமாக தநார்ஜநம்பண்ணவேணுமென்று, நீர்மேல் நடப்பான் நிழலொதுங்குவான் தாளூதுவான் தோலாவழக்கன் என்ற இந்நாலுமந்த்ரிகளையும் ‘ராத்ரிகாலத்திலே சிலவழியிலே திரட்டிக்கொண்டுவாருங்கோள்’ என்று ஆஜ்ஞாபித்து, இப்படி ததீயாராதநம் பண்ணிக்கொண்டுபோராநிற்க,) ஸர்வேஶ்வரனும், ‘வழிபறித்ததும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்காகையாலே இவர் சரமபுருஷார்த்தத்திலே நிஷ்ணாதர்’ என்றுகொண்டு அந்தஸுக்ருதமேபற்றாசாக இவரை விஶேஷகடாக்ஷம்பண்ணி அங்கீகரிக்கவேணுமென்று திருவுள்ளம்பற்றி, இவர்வழிபறிக்கைக்கு உசிதமான பரிகரத்தையுங் கூட்டிக்கொண்டு, திருமணங்கொல்லையில் திருவரசின்மேலே கொடிவைத்துப் பதுங்கி

† குண்டலிதக்ரந்தம் சிலபிரதிகளில்மாத்திரம் உள்ளது.



யிருக்கிற வழியிலே (க) “ஸாக்ஷாந்நாராயணோதேவ꞉ க்ருத்வாமர்த்யமயீந்தநும் - மக்நாநுத்தரதேலோகாந் காருண்யாச்சாஸ்த்ரபாணிநா” என்றும், “பீதகவாடைப்பிரானார் பிரமகுருவாகிவந்து” என்றும் சொல்லுகிறபடியே * வயலாலிமணவாளன் திருமணம்புணர்ந்துவருகிற மணவாளக்கோலமும் தாமுமாய் ப்ராஹ்மணவேஷத்தைப் பரிக்ரஹித்துப் பத்நீஸஹிதனாய் ஸர்வாபரணபூஷிதனாய் பஹுத்ரவ்யங்கொண்டு அநேகந்திரளோடு வந்துதோற்ற, இத்திரளைக்கண்டு ஆலித்துக்கொண்டு ஸாயுதராய் ஸபரிகரராய்ப் பெரியஆரவாரம்பண்ணிக்கொண்டு அவர்களை வளைந்து சூழ்ந்து வஸ்த்ராபரணங்களையும் அபஹரித்துக்கொண்டு அறுகாழியையும் திருமுத்தாலே கடித்து வாங்க எம்பெருமானும் இத்தைக்கண்டு ‘நம் கலியனோ’ என்று அருளிச்செய்தார்.

பின்பு இவையித்தனையையும் சுமைசுமையாகக் கட்டி எடுக்கப் பார்க்க, அவை பேர்க்கவும் பேராதபடியாலே, மணவாளனை ப்ராஹ்மணனைப் பார்த்து ‘நீ மந்த்ரவாதம் பண்ணினாய்’ என்றுநெருக்க, எம்பெருமானும் ‘அம்மந்த்ரத்தை உமக்குச் சொல்லுகிறோம், வாரும்’ என்று கழுத்தையணைக்க, இவரும் ஓமறைந்து ஹடாத்கரித்து வாள் வலியாற் கேட்க, “நீ யென் செவியின் வழி புகுந்து” என்கிறபடியே * செவிக்கினிய செஞ்சொல்லாய், (உ) “ருசோயஜூம்ஷிஸாமாநி ததைவாதர்வணாநிச - ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்ஸ்தம் யச்சாந்யதபிவாங்மயம்” என்றும் (ங) “ஸர்வவேதாந்தஸாரார்த்தஸ் ஸம்ஸாரார்ணவதாரக꞉ - கதிரஷ்டாக்ஷரோந்ருணா மபுநர்பவகாங்க்ஷிணாம்” என்றும், (ச) “ஐஹலௌகிகமைஶ்வர்யம் ஸ்வர்க்காத்யம்பாரலௌகிகம் - கைவல்யம்பகவந்தஞ்ச மந்த்ரோऽயம்ஸாதயிஷ்யதி” என்றும் சொல்லுகிறபடியே ஸகலவேதஸங்க்ரஹமாய்,

(க) “ஸாக்ஷாந்நாராயணோ தேவ꞉ க்ருத்வா மர்த்யமயீம் தநும் । மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாச்சாஸ்த்ரபாணிநா ॥”
(உ) “ருசோ யஜூம்ஷி ஸாமாநி ததைவாதர்வணாநி ச । ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்ஸ்தம் யச்சாந்யதபி வாங்மயம் ॥” (ங) “ஸர்வவேதாந்தஸாரார்த்த꞉ ஸம்ஸாரார்ணவதாரக꞉ । கதிரஷ்டாக்ஷரோ ந்ருணாமபுநர்பவகாங்க்ஷிணாம் ॥” (ச) “ஐஹலௌகிகமைஶ்வர்யம் ஸ்வர்க்காத்யம் பாரலௌகிகம் । கைவல்யம் பகவந்தஞ்ச மந்த்ரோऽயம் ஸாதயிஷ்யதி ॥”

அநந்தக்லேஶபாஜநமான ஸம்ஸாரார்ணவத்தினின்றும் கரையேற்றவற்றாய், ஐஹிகாமுஷ்மிகஐஶ்வர்யகைவல்ய அபுநராவ்ருத்திலக்ஷண பரமபுருஷார்த்தம் முதலான அகிலார்த்த ப்ரதமாய், (க) “ஓமித்யக்ரேவ்யாஹரேத், நம இதிபஶ்சாத், நாராயணாயேத்யுபரிஷ்டாத், ஓமித்யேகாக்ஷரம், நமஇதித்வே அக்ஷரே,நாராயணாயேதிபஞ்சாக்ஷராணி” என்கிறபடியே “அவன்பெயரெட்டெழுத்தும்” என்று எட்டுத் திருவக்ஷரமாய், உபநிஷத்திற்படியே பதத்ரயாத்மகமாய், அவற்றாலே ஸ்வரூபோபாயபுருஷார்த்தப்ரகாஶகமுமாய், மற்றை வ்யாபகமந்த்ரத்வயம்போலன்றிக்கே இதிலே நாரஶப்த முண்டாகையாலே ஶப்தபூர்த்தியு முடைத்தாய், “பேராளன் பேரோதும் பெரியோர்” என்கிறபடியே ஶிஷ்டபரிக்ரஹயுக்தமாய், (உ) “மந்த்ராணாம்பரமோமந்த்ரோ குஹ்யாநாங்குஹ்யமுத்தமம் - பவித்ரஞ்சபவித்ராணாம் மூலமந்த்ரஸ்ஸநாதந:” என்கிறபடியே உத்க்ருஷ்டதமமாகச் சொல்லப்படுகிற மூலமந்த்ரமான பெரிய திருமந்த்ரத்தை நரநாராயணனாய்த் தனக்குத்தானே உபதேசித்துக்கொண்ட இழவு தீரக் கிழிச்சீரையோடே தநந்தைக்கொடுப்பாரைப்போலே “பெற்ற தாயினுமாயின செய்யும் நலந்தருஞ்சொல்லை நான்கண்டுகொண்டேன்” என்று தம் வாயாரச்சொல்லும்படி ஆழ்வாருடைய வலத்திருச்செவியிலே உபதேசித்தருள, அநந்தரம் (ங) “லக்ஷ்ம்யாஸஹஹ்ருஷீகேஶோ தேவ்யாகாருண்யரூபயா” என்கிறபடியே க்ருபைதான் ஒருவடிவுகொண்டாப்போலே காருண்யரூபையான ஸ்ரீஸஹாயனைக்கொண்டு, “காய்சினப்பறவையூர்ந்து பொன்மலையின்மீமிசைக் கார்முகில்போல” என்றும், (ச) ‘ஸுபர்ணப்ருஷ்டேப்ரபபௌ ஶ்யாமஃபீதாம்பரோஹரி:- காஞ்சநஸ்யகிரேஶ்ஶ்ருங்கே ஸதடித்தோயதோயதா” என்றும் சொல்லுகிறபடியே ஸ்வர்ணமயமான பெரியதிருவடி மேற்கொண்டு வந்து நீலமேகநிபமாய், கநககிரிமீதிற் கார்முகில்படிந்து உலாவுமா

(க) “𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑌗𑍍𑌰𑍇 𑌵𑍍𑌯𑌾𑌹𑌰𑍇𑌤𑍍, 𑌨𑌮 𑌇𑌤𑌿 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍, 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌯𑍇𑌤𑍍𑌯𑍁𑌪𑌰𑌿𑌷𑍍𑌟𑌾𑌤𑍍, 𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌕𑌾𑌕𑍍𑌷𑌰𑌮𑍍, 𑌨𑌮 𑌇𑌤𑌿 𑌦𑍍𑌵𑍇 𑌅𑌕𑍍𑌷𑌰𑍇, 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌯𑍇𑌤𑌿 𑌪𑌞𑍍𑌚𑌾𑌕𑍍𑌷𑌰𑌾𑌣𑌿” (உ) “𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌪𑌰𑌮𑍋 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍋 𑌗𑍁𑌹𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌗𑍁𑌹𑍍𑌯𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 | 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌞𑍍𑌚 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌮𑍂𑌲𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌸𑌨𑌾𑌤𑌨𑌃” (ங) “𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾 𑌸𑌹 𑌹𑍃𑌷𑍀𑌕𑍇𑌶𑍋 𑌦𑍇𑌵𑍍𑌯𑌾 𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌰𑍂𑌪𑌯𑌾” (ச) “𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑌪𑍃𑌷𑍍𑌠𑍇 𑌪𑍍𑌰𑌬𑌭𑍌 𑌶𑍍𑌯𑌾𑌮𑌃 𑌪𑍀𑌤𑌾𑌮𑍍𑌬𑌰𑍋 𑌹𑌰𑌿𑌃 | 𑌕𑌾𑌞𑍍𑌚𑌨𑌸𑍍𑌯 𑌗𑌿𑌰𑍇𑌶𑍍𑌶𑍃𑌙𑍍𑌗𑍇 𑌸𑌤𑌟𑌿𑌤𑍍𑌤𑍋𑌯𑌦𑍋 𑌯𑌥𑌾”



போலே விளங்குகிற திவ்யமங்களவிக்ரஹத்தை இவ்வாழ்வாருக்கு *மயர்வறமதிநலமருளி ஸாக்ஷாத்கரிப்பித்தருள, இவ்வாழ்வாரும் தமக்கு நிர்ஹேதுகலப்தமான திருமந்த்ரத்தையும், அதுக்குள்ளீடான ஸ்ரீமந்நாராயணனுடைய ஸ்வரூபரூபகுண விபூதிசேஷ்டிதங்களையுமெல்லாம், “திருமாமகளாலருள்மாரி” என்னும்படி பெரியபிராட்டியாரருளாலே யுண்டான * தக்க ஞானக்கண்களாலே கண்டு அநுபவித்து, அநுபவஜநிதப்ரீதி உள்ளடங்காமல் வாக்ப்ரவாஹரூபேண பெருவெள்ளமிட்டு ‘பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறியதிருமடல், பெரியதிருமடல்’ என்கிற இவ்வாறு ப்ரபந்தங்களையும் ஸ்ரீஶடகோபவாங்மயமான த்ராமிடவேதசதுஷ்டயத்துக்கு ஷடங்கமாக ஆசு மதுரம் சித்ரம் விஸ்தாரம் என்கிற சதுர்விதகவிகளாலே அருளிச்செய்து, லோகத்திலே ‘நாலு கவிப்பெருமாள்’ என்று ப்ரஸித்தமாம்படி உபகரித்தருளினார்.

முன்பு † (பெருமாளும், பரகாலனைப்பார்த்து கலியனே! நீர் உம்முடையபரிவாரத்துடனே திவ்யதேசங்களுக்கெல்லாம் போய் மங்களாஶாஸநம்பண்ணும்’ என்று, ப்ரஹ்மருத்ரேந்த்ராதிகளுடன் கருடவாஹநாரூடனாய்த்தோன்றி அந்தர்த்தாநனாய்ப்போக, பின்பு திருமங்கையாழ்வாரும் பத்நீஸஹிதராய் மந்த்ரிகளோடே புறப்பட்டு, பிநாகிநீ க்ருஷ்ணா கோதாவரீநதிகளிலே தீர்த்தமாடி, ஸ்ரீபத்ராசலத்தையும் ஸிம்ஹாசலத்தையும் ஸ்ரீகூர்மநாதனையும் ஸ்ரீபுருஷோத்தமனையும் ஸேவித்து, கயையிலேதீர்த்தமாடி ஸ்ரீவிஷ்ணுபாதத்தையும் தொழுது, கோவர்த்தநம் கோகுலப்ருந்தாவநம் மதுரை த்வாரவதீ திருவயோத்யை பதரிகாஶ்ரமம் ஸாளக்ராமம் நைமிஶாரண்யம் முதலிய திவ்யதேசங்களை மங்களாஶாஸநம்செய்து, காஞ்சீபுரத்துக்கேகி ஹஸ்திகிரீஶ்வரனையும் மங்களாஶாஸநஞ்செய்து, திருமலைக்கு எழுந்தருளி ஸஹஸ்ரபணங்களோடேவர்த்திக்கிற சேஷாசலத்தை ஸேவித்து ஸ்ரீநிவாஸ னநுமதிகொண்டு புறப்பட்டு இப்படி) திருமொழியருளிச் செய்துகொண்டு திவ்யதேசங்கள்தோறும் ஸேவித்துக் கொண்டெழுந்தருளா நிற்கச்செய்தே சோழமண்டலத்திலே எழுந்தருளினவளவிலே, ‘நாலுகவிப்பெருமாள்வந்தார், நம்கலியர் வந்தார், ஆலிநாடர் வந்தார், அருள்மாரி வந்தார், கொங்குமலர்க்குழலியர்வேள் வந்தார், மங்கைவேந்தர் வந்தார், பரகாலர் வந்தார், பரவாதிமத்தகஜகண்டீரவர் வந்தார்’ என்று விருதூதிச்செல்லாநிற்க,

† குண்டலிதக்ரந்தம் சிலபிரதிகளில்மாத்திரமே உள்ளது.

அங்கே சம்பந்தன்சிஷ்யர்கள் வந்து ஆழ்வாரை 'எங்கள் சம்பந்தப்பெருமா ளிருக்கிற இடத்திலே நீர் நாலுகவிப்பெருமாளென்று விருதூதிச்செல்லத்தகாது' என்று தடுக்க, ஆழ்வாரும் 'உங்கள் சம்பந்தப்பெருமாளுடனே தர்க்கிக்கக்கடவோம்', என்றருளிச்செய்ய, 'ஆகில், நம்மூரே வாரும்' என்றழைத்துக்கொண்டுபோய் இவ்விசேஷத்தைச் சம்பந்தனுக்கு அறிவிக்க அவனும் 'இவருடனே தர்க்கிக்கக்கடவோம்' என்று வர, ஊரடைய சைவராய் அவ்வூரில் ஒருதிருமுற்றமுமின்றியே ஸ்ரீவைஷ்ணவர்களுமின்றியே வீரபாஷண்டபூயிஷ்டமாயிருக்கக் கண்ட இவ்வாழ்வார்க்கு பகவத்விக்ரஹமின்றியே வாக்குக்கிளம்பாதிருக்க, 'இதுக்கு என்செய்யக்கடவோம்?' என்று சிந்தித்திருக்கச்செய்தே, வைஷ்ணவியாயிருப்பாளொரு அம்மையாரைக்கண்டு 'இப்படியிருக்கிறது: ஆகையால் உன்திருவாராதநமான எம்பெருமானை எனக்கு ஒருக்ஷணம் தரவேணும்' என்றுகேட்க, அவளும் ஆழ்வாருக்குத்தன்திருவாராதநமான *வெண்ணெயுண்ட தாடாளனை எழுந்தருளுவித்துக் கொடுக்க, ஆழ்வாரும் அவரைக்கொண்டு சம்பந்தனிருந்தவிடத்தேறச் சென்றிருக்க, அவனும் இவரைக்குறித்து ஒரு கவி சொல்ல, இவரும் அத்தைக்கேட்டு அந்தக்கவியைக் தூஷிக்க, ஆகில், நீர் † ஒருகவி சொல்லும், என்ன, ஆழ்வாரும் "ஒருகுறளாயிருநிலம்" என்கிற திருமொழியை அருளிச்செய்து, தம்பெருமையெல்லாந் தோன்ற "ஆலிநாடனருள்மாரி யரட்டமுக்கி யடையார்சீயங், கொங்குமலர்க்குழலியர்வேள் மங்கைவேந்தன் கொற்றவேற்பரகாலன் கலியன் சொன்ன, சங்கமுகத்தமிழ்மாலை" என்ன, அவனும் இத்தைக்கேட்டு ப்ரத்யுத்தரம்சொல்லிக் கவிசொல்ல க்ஷமனன்றியே 'இப்படியும் ஒருவர் உண்டோ!' என்று ஆஶ்சர்யப்பட்டு "நாலுகவிப்பெருமாள்' என்னும் விருது உமக்குச் செல்லும்: விருதூதிக்கொண்டு செல்லீர்' என்று கும்பிட்டுப் போனான்.

அநந்தரம் (க) " விமாநம்ப்ரணவாகாரம் வேதஶ்ருங்கம் மஹாத்புதம் - ஸ்ரீரங்கஶாயீபகவாந் ப்ரணவார்த்த ப்ரகாஶக:" என்கிறபடியே * மன்னுடைய விபீடணற்காய் மதிளிலங்கைத் திசைநோக்கி மலர்க்கண் வைத்தவராய் ப்ரணவாகார விமாநமத்யஸ்தரான பெரியபெருமாளுக்கும் * திருவரங்கச்செல்வனாரான அழகியமணவாளர்க்கும் விமாந மண்டப கோபுர ப்ராஸாத ப்ரா

(க) "விமாநம் ப்ரணவாகாரம் வேதஶ்ருங்கம் மஹாத்புதம் | ஸ்ரீரங்கஶாயீ பகவாந் ப்ரணவார்த்த ப்ரகாஶக: ||"

† 'ஒருகுறள்சொல்லும்' என்று பிரதிபேதம்.



காராதிரூபமான கைங்கர்யங்கள் செய்தருளவேணும் மென்று திருவுள்ளமாய், அதுக்குத் தம்முடைய பரிஜநங்களையழைத்து 'நம்பெருமாளுக்குத் திருமதிள்முதலான கைங்கர்யம்பண்ணுகைக்குத் தநார்ஜநஞ்செய்யும் விரகுஎன்?', என்று கேட்டருள, அவர்களும் 'நாகபட்டணத்திலே * புலையறமாயிருப்பதொரு புத்தப்ரதிமை ஹிரண்யஸ்வரூபமாயிருக்கும்; அத்தைக் கொண்டுவந்து சிங்கபிங்கமாக்கி * அறப்பதே கருமங்கண்டாய், என்று விண்ணப்பஞ்செய்ய, ஆழ்வாரும் ஸம்மதித்து நாகபட்டணத்திலேபோய் ‡ (பரமபாகவதையான ஓர் அம்மையார்க்ருஹமே எழுந்தருளி 'இங்குநடக்கும் தேவரஹஸ்யம் ஏது என்ன, அவளும் 'எங்கள்மாமியார், கோயில்விமாநத்துக்குள்ளே ஹிரண்மயமான புத்தவிக்ரஹம்உண்டு: இந்த விக்ரஹமும் விமாநமும் உண்டாக்கின கம்மாளன் த்வீபாந்தரத்திலே யிருக்கிறானென்றுசொல்வர்' என்ன, ஆழ்வாரும், "ஶாஹஸ்யஶீக்ரம்" என்று பரிஜநங்களையுங் கூட்டிக்கொண்டு அதித்வரையோடே த்வீபாந்தரத்திலே எழுந்தருளித் தெருவிலே நின்று 'விஶ்வகர்மாவுக்கு ஸமனான கம்மாளனுடைய க்ருஹம் எது? என்று கேட்க, அவர்களும் 'மாடகூடப்ராஸாதமான க்ருஹம் அது' என்ன, இவர்களும் அந்தக்ருஹத்தின் இடைகழியிலே எழுந்தருளி ஒருவர்க்கொருவர் ஸம்பாஷணம் பண்ணிக்கொண்டிருக்க, அவ்வளவிலே அந்தக்கம்மாளனும் வெளியிலேயிருந்து வந்து ஸ்நாநம் பண்ணி ப்ரஸாதப்பட்டுப் பாக்குவெற்றிலையும் ப்ரஸாதப்பட்டிருக்கிற வேளையிலே, இவ்வாழ்வார் தம்முடைய பரிஜநங்களைக்குறித்துத் துலைத்தோடே 'நாகபட்டணம் கிலமாய்க் கோயிலையும் விமாநத்தையும் உடைத்து விக்ரஹமும் எடுத்துக்கொண்டு அநேகம்துருஷ்கர் கொண்டுபோனார்கள்; இத்தைக்கண்டும் நாம் சரீரத்தைவிடமாட்டாமற்போனோம்' என்ன, அந்தக்கம்மாளனும் கேட்டு நடுங்கி இவர்கள் முன்னே வந்துநிற்க, இவர்களும் விக்ரஹம்கொண்டுபோனத்தை ஸவிஸ்தரமாகச்சொல்ல, அவனும் முசித்து 'எப்படிப்பட்ட த்ரோஹியான கம்மாளனோ விமாநமகுடஸூத்ரத்தைக் காட்டிக்கொடுத்தான்; நான் மஹாவிசித்ரமாகக் கூடஶிகரத்திலேயிருந்து ஒருவருக்குந்தெரியாதே கோமுகைவிழுகிற ஜலதாரையின்கீழே கல்லுக்குள்ளே ஒருஇரும்பாணியிலே சங்கிலிஸூத்ரம்பண்ணினேன்; இதைஎப்படி அறிந்துகொண்டுபோனார்களோ?' என்று விழுந்து அழத்தொடங்கினான். இவ்வாழ்வாரும் பரிஜநங்களைக்குறித்து 'ஸூத்ரம் வெளியாச்சுது' என்று அங்குநின்றும் புறப்பட்டு ஸமுத்ரக்கரையிலேவந்து

‡ குண்டலிதக்ரந்தம் சிலபிரதிகளில்மாத்திரமே உள்ளது.

தர்மவானான ஒருவர்த்தகன் பாக்குக்கப்பல்கொண்டுவருமவனைக் கண்டு ஆசீர்வாதம்பண்ணி 'நாங்கள் உபவாஸமாயிருக்கிறோம்; எங்களையும் கப்பலிலே கொண்டுபோம்' என்ன, அவனும், ஸம்மதித்து 'வாரும்கோள்' என்று கப்பலிலே ஏற்றிக்கொண்டு போகிற வளவிலே, ஆழ்வாரும் ஒரு கொட்டைப் பாக்கைச் சீவிப் பாதிப்பாக்கை அவனுக்குக்காட்டிப் போகட்டு 'எனக்குப்பாக்கு அவஶ்யம்;'என்கப்பலிலே பாதிப்பாக்கு உமது' என்று சிறுமுறிதாரும்' என்ன, அவனும் ஸம்மதித்துத் தன்கைச்சீட்டுக்கொடுக்க, இவரும் சீட்டுவாங்கிக் கட்டிக்கொண்டு கப்பல் துறைசேர்ந்தவுடனே அவனைக்குறித்து 'பாதிச்சரக்கு எண்ணித்தா' என்ன, வர்த்தகனும் திடுக்கிட்டுக் கப்பலிலே துழாவிப் போட்ட பாக்கை எடுத்து 'இதோகாணும் உமது' என்ன இவரும்அத்தைக்கண்டு'அரைப்பாக்கோ நாம்கொடுத்தது?உன்சிறுமுறியைக்கொண்டுஉன்வர்த்தகரண்டையிலே வழக்குக்குப் போவோம் என்ன, அவனும்ஸம்மதிக்க, இவரும் வர்த்தகர்களநேகம்பேரைக் கூட்டி 'கப்பலிலே பாதிச்சரக்கான பாக்கு என்னது என்று இவன் கைச்சீட்டுக்கொடுத்தான்: இப்போது அரைப்பாக்குக் கொடுக்கிறான்' என்ன, அவர்களும், துர்வழக்கு உண்டோ?' என்று பாதிப்பாக்குக்களையும் எண்ணிக்கொடுக்கச் சொல்லிவிட்டார்கள்; வர்த்தகனும் 'இதுவும் ஒருகடனோ?' என்று பாக்குக்குஉண்டானக்ரயத்ரவ்யங்கள் கொடுத்து அனுப்பிவிட்டான். இவர்களும் அந்தக்கோயிலிலே வந்து ஒருமூலையிலே பதுங்கியிருந்து, மத்பராத்ரியிலே அந்தக்கோமுகையின்கீழே இரும்பாணிச்சங்கிலியைப் பிடுங்கி விமானமேறி ஶிகரமான மகுடத்தை இடம்புரிவலம்புரிதிருப்பிச் ஶிகரத்தைத்திறந்து கோடி ஸூர்யர்உதயமானாப்போலேயிருக்கும் ஸ்வர்ணவிக்ரஹத்தைக் கண்டு) "ஈயத்தாலாகாதோ இரும்பினாலாகாதோ, பூயத்தால்மிக்கதொரு பூதத்தாலாகாதோ, தேயத்தேய் பித்தளைநற் செம்புகளாலாகாதோ, மாயப்பொன் வேணுமோ * மதித்தென்னைப்பண்ணுகைக்கே" என்று தத்பிம்பம் ஊளையிடும்படி, † (தம்முடையமைத்துனரை இறங்கவிட்டு) ‡ அபஹரித்துக்கொண்டுவந்து பங்கப்படுத்தி, † (விக்ரஹத்தை எடுத்துக்கொண்டுபோனார்கள்.

---

* 'மதித்துன்னைப்பண்ணுகைக்கே" என்றுசொல்லி அத்யாஶ்சர்யப்பட்டு' என்று பிரதிபேதம்.

† குண்டலிதக்ரந்தங்கள் சிலபிரதிகளில்மாத்திரம் உள்ளன.

‡ 'அபஹரித்துக்கொண்டுவந்து' என்றவிடத்தில் 'அவர்விக்ரஹமெடுத்துக்கொடுக்க வாங்கி' என்று பிரதிபேதம்,



பின்பு ஆழ்வாரும் மந்திரிகளும் பொழுதுவிடிவுகாலத்திலே ஒரு அக்ரஹாரத்தினுடைய செய் உழுது சேறாயிருக்க, அந்தச்சேற்றுக்குள்ளே விக்ரஹத்தைப்புதைத்து அருகிருந்த உறங்காப்புளியின்கீழ் இருந்தார்கள். செய்யுடையவனும் நாற்றுச்சுமைகொண்டு உழவரகண்டு, இவரும் 'எங்கள்பாட்டன்தேடின செய்' என்ன, அவனும் திடுக்கிட, ஒருவர்க்கொருவர் விவாதமாய் 'நாளைஉதயத்துக்குப் பத்ரங்கொண்டுவருகிறேன்; இல்லாவிடில் நீ உழுதுகொண்டுபோ' என்ன, அவனும் ஸம்மதித்து மீண்டுபோனான். இவர்களும் அஸ்தமநமாய் ராத்ரிகாலத்திலே உத்தமர்கோயிலிலே கொண்டுவந்து நிக்ஷேபம்பண்ணியிருந்தார்கள். அங்கே நாகபட்டணத்திலே விபரீதங்களுண்டாய்த் தலையாரிகளும் மணியகாரரும் கூடி விமானமேறிச்சோதித்து, அங்கமச்சமதிகொண்டுவந்து செய்யினுடையசேறு சோதித்து, உத்தமர்கோயிலிலே யெழுந்தருளியிருக்கிற ஆழ்வார்திருவடிகளின்கீழ்க்கொண்டுவிட, இவரும் 'நாம் விக்ரஹம் அறியோம்' என்ன, அவர்களும் 'ப்ரமாணம்பண்ணும்' என்ன, ஆழ்வாரும் 'ஆகில், மேலைவர்ஷத்தில் பங்குனிமாஸத்தில் ரோஹிணீநக்ஷத்ரத்திலே உங்கள்விக்ரஹம் சிறுவிரலுக்குக்குறையாமல் ஒப்பிக்கக்கடவோம்' என்ன, அவர்களும் கையெழுத்துச்சீட்டு வாங்கிக்கொண்டுபோனார்கள். அநந்தரம் ஆழ்வார் சங்கையில்லாமல் விக்ரஹத்தைத்) திருமதிள்கைங்கர்யத்துக்கு அர்ஹமாம்படி * சுட்டுரைத்த நன்பொன்னாக்கிக்கொண்டு கல்படிக்கேற்க ஒருதுலைப்படுத்திவிற்றுத் தத்த்ரவ்யத்தையிட்டுத் திருமதிள் முதல் ஶிகரபர்யந்தமாகப் பண்ணவேணுமென்று உபக்ரமித்துத் திருமதிள்கட்டுவிக்கிற செவ்வையிலே, ஸ்ரீ தொண்டரடிப்பொடியாழ்வார் பெரியபெருமாளுக்குத் திருமாலைசேர்க்கிற இடம் நேர்பட, அவ்விடத்தைத்தப்பி ஒதுங்கத் திருமதிள் கட்டுவித்தருள, தொண்டரடிப்பொடியாழ்வார் பார்த்தருளித் திருவுள்ளமுகந்தருளி, தாம் திருமாலை கொய்கிற ஆயுதத்துக்கு 'அருள்மாரி' என்று இவருடைய திருநாமஞ்சாத்தி ப்ரீதராயருளினார். திருமங்கையாழ்வாரும், திருமதிள் திருமண்டபம் முதலான கைங்கர்யங்களும் பண்ணுவித்துக்ருதார்த்தராயருளினார்.

† (அநந்தரம் அந்தவர்ஷமாஸத்தவணைக்கு அவர்களும் வர, இவரும் அவர்களைச்சீட்டுவாசிக்கச்சொல்லிச்சிறுவிரலைக்கொடுத்தார். அவர்களும் 'எங்கள் விக்ரஹமுழுதுந் தரவேணும்' என்ன, இவரும், வழக்கிலே போய் அனைவரையும்பார்த்து'சிறுவிரலுக்குக்குறையாமல்

---

† குண்டலிதக்ரந்தங்கள் சிலபிரதிகளில்மாத்திரம் உள்ளன.

ஒப்பிக்கக்கடவேனென்ற இவர்கள்கையிற் சீட்டுப்படி சிறுவிரலைக் கொடுத்தேன்' என்ன, அவர்களும் 'அப்படியே வாங்கிக்கொண்டு போங்கள்' என்ன, இவர்களும் ஒருதோலாவழக்கோவென்று 'சிறுவிரல்வேண்டா' என்று தெளிந்துபோனார்கள். பின்னையும் கோயில் கட்டின நிமந்தக்காரக்கம்மாளர்கட்குச் சிறிதுத்ரவ்யங்கொடுக்கவேண்டி, அவர்களெல்லாரையும் 'ஒருதீவிலே த்ரவ்யம் இருக்கிறது' என்று ஓடமேற்றிக்கொண்டுபோய் நட்டாற்றிலே ஓடக்காரனுக்கு ஸம்ஜ்ஞைபண்ண, அவனும் வேறேதெப்பங்கொண்டுவந்து இவரை எடுத்துத் தெப்பத்திலே வைத்துக்கொண்டு தானும்ஏறி ஓடத்தைக் கவிழ்த்து, அவனும் இவரும் கோயிலிலே வந்துசேர்ந்தார்கள். அந்த நிமந்தக்காரக்கம்மாளருடைய பேரன்மார் கண்டு 'எங்கள் பெரியோர்கள் எங்கே?' என்றுகேட்க, ஆழ்வாரும் 'ஒருதீவிலே நிக்ஷேபதநம் காட்டிவிட்டோம்; அந்தத்தநங்களையெல்லாம் சுமைசுமையாகக் கட்டுகிறார்கள்' என்ன, இவர்களும் 'எங்கள் தகப்பன் பாட்டன் முதலான இத்தனைபேரையும் ஆற்றுக்குள்ளே தள்ளிக் கொன்றுபோட்டீரே; அவரவர்களுக்கு அந்தப்படி சரீரமாகத்தந்தாலொழியப் போகவொட்டோம்' என்று ஆழ்வாரை மறிக்க, ஆழ்வாரும் முசித்துக் கிடக்க, ஆழ்வார் ஸ்வப்நத்திலே ரங்கநாதன் எழுந்தருளி 'நீர் முசிப்பானேன்?' என்று அவரவர்களை அழைத்துக் காவேரீஸ்நாநம்பண்ணச்சொல்லித் திருநாமமும் தரிப்பித்து நம்முடைய அழகியமணவாளன்திருமண்டபத்திலேநின்று அவரவர்கள் பேரைச் சொல்லி அழைக்கச்சொல்ல, அவர்களும் அப்படியே அழைத்தார்கள். அவரவர்களுடைய பித்ருதேவதைகளடையப் பெருமாள்பின்னேயிருந்து அவரவர்களுக்கென்றென்று 'ஆழ்வாருடைய நிர்ஹேதுகபரமக்ருபையுண்டானபடியினாலே பெரியபெருமாள்திருவடிகளை யடைந்தோம்; நீங்களும் ஆழ்வார்திருவடிகளிலே அபசாரப்படாதே சிலகாலம் ஸம்ஸாரத்திலேயிருந்து ஆழ்வாரை முன்னிட்டுக்கொண்டு உஜ்ஜீவியுங்கோள்' என்று அனுப்பித் தாங்களும் மீண்டுபோனார்கள். அநந்தரம் பெரியபெருமாளும் ஆழ்வாரைக்குறித்து 'உம்அபீஷ்டத்தைச் சொல்லுங்காண்' என்ன; ஆழ்வாரும் 'தேவரீர்தஶாவதாரங்களைஸேவிக்கவேணும்' என்ன, 'ஆகில், இனி நீர் அர்ச்சாரூபமான என்தஶாவதாரஸ்வரூபங்களை ஸேவித்துக்கொண்டிரும்' என்ன, அப்போதே ஆழ்வார் அர்ச்சாரூபமாய் எழுந்தருளப்பண்ணினார். அநந்தரம் பெரியபெருமாள் பரகாலன்மைத்துனரைப் பார்த்து 'உமக்கு ஆசார்யரான இவ்வாழ்வாரை விக்ரஹமாக எழுந்தருளப்பண்ணிக்கொண்டு



போய்த் திருவவதார ஸ்தலமான திருக்குறையலூரில் கோபுரப்ராகாரமண்டபாதிகளை நிர்மித்து அதில் பரகாலனை நிறுத்தி மஹோத்ஸவாதிகளைச் செய்துகொண்டு ஸுகமே யிரும்' என்ன, அவரும் ஆழ்வாரைப்போலே அர்ச்சாரூபமாயிருப்பதொரு விக்ரஹத்தைக் குமுதவல்லியாருடனே எழுந்தருளப்பண்ணி, மந்த்ரிகளும் நம்பெருமாள் பரிவாரமும் கூடவர ஆழ்வார்திருவவதார ஸ்தலத்துக்குப்போய் அங்கே கோயில்ப்ராகாரமண்டபாதிகளைக் கட்டுவித்து அதிலே ஆழ்வாரை எழுந்தருளப்பண்ணி மஹோத்ஸவாதிகளை நடப்பித்துக் கொண்டுவந்தார். ஆழ்வாரும் அர்ச்சாரூபமாயிருந்தாலும், குமுதவல்லியார் முதலானவர்களோடே கலந்துபரிமாறிக்கொண்டு ஸமஸ்தாத்மகோடிகளையும் ரக்ஷித்துக்கொண்டு பெரியபெருமாள் திருவடிகளையே உபாயோபேயமாக ஸேவித்துக்கொண்டு வாழ்ந்தருளினார்.)

---

## நம்மாழ்வார் வைபவம்.

(க) "தத꞉கலியுகஸ்யாதௌ வைஶாக்யாம்விஶ்வஹாவந꞉ -
விஷ்ணுபக்திப்ரதிஷ்டார்த்தம் ஸேநேஶோऽவதரிஷ்யதி.

ஸேநேஶகருணாலப்ததிவ்யமந்த்ரத்வயம்முதா -
த்ராவிடாம்நாயவக்தாரம் ஶடகோபகுரும்பஜே.

வகுளாபரணம்வந்தே ஜகதாபரணம்முநிம் -
யஶ்ஶ்ருதேருத்தரம்பாகஞ் சக்ரேத்ராவிடபாஷயா.

வகுளாலங்க்ருதம்ஶ்ரீமச் சடகோபபதத்வயம் -
அஸ்மத்குலதநம்போக்ய மஸ்துமே † மூர்த்நபூஷணம்."

---

(க) "𑌤𑌤𑌃 𑌕𑌲𑌿𑌯𑍁𑌗𑌸𑍍𑌯𑌾𑌦𑍌 𑌵𑍈𑌶𑌾𑌖𑍍𑌯𑌾𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌪𑌾𑌵𑌨𑌃 । 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌭𑌕𑍍𑌤𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌰𑍍𑌥𑌂 𑌸𑍇𑌨𑍇𑌶𑍋𑌽𑌵𑌤𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥ 𑌸𑍇𑌨𑍇𑌶𑌕𑌰𑍁𑌣𑌾𑌲𑌬𑍍𑌧𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌦𑍍𑌵𑌯𑌂 𑌮𑍁𑌦𑌾 । 𑌦𑍍𑌰𑌾𑌵𑌿𑌡𑌾𑌮𑍍𑌨𑌾𑌯𑌵𑌕𑍍𑌤𑌾𑌰𑌂 𑌶𑌠𑌕𑍋𑌪𑌗𑍁𑌰𑍁𑌂 𑌭𑌜𑍇 ॥ 𑌵𑌕𑍁𑌲𑌾𑌭𑌰𑌣𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌜𑌗𑌦𑌾𑌭𑌰𑌣𑌂 𑌮𑍁𑌨𑌿𑌮𑍍 । 𑌯𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌰𑍁𑌤𑍍𑌤𑌰𑌂 𑌭𑌾𑌗𑌂 𑌚𑌕𑍍𑌰𑍇 𑌦𑍍𑌰𑌾𑌵𑌿𑌡𑌭𑌾𑌷𑌯𑌾 ॥ 𑌵𑌕𑍁𑌲𑌾𑌲𑌙𑍍𑌕𑍃𑌤𑌂 𑌶𑍍𑌰𑍀𑌮𑌚𑍍𑌛𑌠𑌕𑍋𑌪𑌪𑌦𑌦𑍍𑌵𑌯𑌮𑍍 । 𑌅𑌸𑍍𑌮𑌤𑍍𑌕𑍁𑌲𑌧𑌨𑌂 𑌭𑍋𑌗𑍍𑌯𑌮𑌸𑍍𑌤𑍁 𑌮𑍇 𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑌿 𑌭𑍂𑌷𑌣𑌮𑍍 ॥"

† 'மூர்த்நிஸந்ததம்' என்றும் பாடம்.

(க) ‡ "லாபேகலேர்வாஸரஏவராதே மாஸேவிஶாகேமஹநீய
தாரே - ஶுக்ரஸ்யவாரேऽஜநிவிஶ்வதித்யாம்புராங்குஶோயம்பகவாங்
குளீரே."

(உ) ‡"ஸ்ரீவிஜ்ஞாநதிநோத்தரேऽஹநிகலௌவர்ஷேப்ரமாத்யாஹ்வயே
மாஸேமாதவநாம்நிபார்க்கவதிநேருக்ஷேவிஶாகாபிதே -
லக்நேஶுத்தசதுர்த்தஶீதிதியுதேஸ்ரீமத்குளீரேऽபிச [ஶாம்."
க்ஷித்யாம்ப்ராதுரபூத்பராங்குஶகவிர்பாக்யோதயோऽஸ்மாத்ரு

ஆழ்வார்களெல்லாரையும் அவயவபூதராகவுடைய நம்மாழ்வார் திருவவதாரக்ரம மிருக்கும்படி எங்ஙனேயென்னில்,—(ங) "அஸ்தி பாண்ட்யேஷுதேஶேஷுகாசிச்சீநகரீதிஹ - தாம்ரபர்ணீநதீதீரே ஸாக்ஷாத்க்ருஷ்டோஹ்யதோக்ஷஜஃ" என்கிறபடியே * வண்டலம் புஞ்சோலைவழுதிவளநாட்டிலே (ச) "கங்காசயமுநாசைவ ததாகோதாஸரஸ்வதீ - நர்மதாஸிந்துகாவேரீ தாம்ரபர்ணீஸரித்வரா" என்று சொல்லுகிறபடியே கங்காதி ஸகலநதிகளும் உத்க்ருஷ்டதமமாகச் சொல்லப்பட்டிருப்பதான தாம்ரபர்ணியென்கிற பொருநையாற்றின் கரையிலே 'ஸ்ரீநகரி' என்று ப்ரக்யாதமான * நல்லார்நவில்குருகூர்நகருக்குநிர்வாஹகரான இவ்வாழ்வார்தாமே "எந்தைதந்தைதந்தைதந்தைக்கும் முந்தை" என்று அருளிச்செய்தபடியே * ஏழாட்காலும் புறந்தொழாமே * குடிகுடிவழிவந் தாட்செய்யும் * தொண்டக்குலத்திலே பிறந்து * ஏழாட்காலும் பழிப்பிலாயிருப்பர். எங்ஙனேயென்னில்;—திருவழுதிவளநாடர் என்றொருவர், அவர்பிள்ளை அறந்தாங்கியார், அவர்பிள்ளை சக்ரபாணியார், அவர்பிள்ளை அச்யுதர், அவர்

(க) [illegible]

(உ) [illegible]

(ங) [illegible]

(ச) [illegible]

‡ இந்தச்சுலோகங்கள் சில பிரதிகளில் இல்லை.



பிள்ளை செந்தாமரைக்கண்ணர், அவர்பிள்ளை செங்கண்ணர், அவர்பிள்ளை பொற்காரியார், அவர்பிள்ளை காரியார், அவர்பிள்ளை மாறன் என்ற இவர்கள்தாம்.

இக்ரமந்தன்னிலே ஸந்தாநபரம்பரையாய்ப் பழையவடியாரான இவர்களுடைய திரு வம்சத்திலே பொற்காரியார் என்கிறவர், உலகெல்லாம் வாழும்படி தம்முடைய புத்ரரான, காரியாருக்கு விவாஹம்பண்ணுவிப்பதாகத் திருவண்பரிசாரத்திலே காரியாரைக்கொண்டுபோய், தாம் ஸம்பந்தஞ்செய்கைக்கு யோக்யராய் வைஷ்ணவஸாந்தாநிகரான திருவாழ்மார்பர் திருமாளிகையிலே எழுந்தருளி, அவரைப்பார்த்து 'உம்முடையபுத்ரியான உடையநங்கையாரை நம்முடைய புத்ரரான காரியாருக்கு விவாஹம்பண்ணித் தரவேணும்' என்று * தமரும் பிறரும் அறிய ப்ரஸங்கித்துக்கேட்க, திருவாழ்மார்பரும்மிகவும்ஸந்துஷ்டராய் ஸம்மதித்து;*கண்ணாலங்கோடித்து "மத்தளங்கொட்ட வரிசங்கம் நின்றூத, முத்துடைத்தாம நிரைதாழ்ந்த பந்தற்கீழ்" என்கிறபடியே உபலாளித்துப் * பெருப்பெருத்த கண்ணாலங்கள் செய்து உதகபூர்வகமாக உடையநங்கையாரைக் காரியாருக்கு ஸமர்ப்பிக்க, காரியாரும் "வெள்ளிவளைக்கைப்பற்ற" என்கிறபடியே பாணிக்ரஹணம்பண்ணி மற்றுமுண்டான க்ரியாவிஶேஷங்களையும் செய்து, திருவண்பரிசாரத்தில் * திருவாழ்மார்பரான எம்பெருமானையும் திருவடிதொழுது மீண்டு * பெரிய வண்குருகூரிலே எழுந்தருளாநிற்க, (க) "பதாகாத்வஜிநீம்ரம்யாம் தூர்யோத்குஷ்டநிநாதிதாம் - ஸிக்தராஜபதாம்ரம்யாம் ப்ரகீர்ணகுஸுமோத்கராம் - பௌரைःப்ரத்யுத்கதோதூரம் த்விஜைஶ்ச புரவாஸிபிः" என்று சொல்லுகிறபடியே பெருமாள் ஸ்ரீமிதிலையிலேயெழுந்தருளித் * திக்குநிறைபுகழாளனை ஸ்ரீஜநகராஜன் மகளைத் திருமணம்புணர்ந்து மீண்டெழுந்தருளும்போது திருவயோத்யையிலுள்ளப்ராஹ்மணதிபௌரஜநங்கள் பட்டணத்தை அலங்கரித்து மங்களவாத்யகோஷத்துடனேவந்து எதிர்கொண்டாப்போலே * செம்பொன்மாடத் திருக்குருகூரிலுள்ளாரும் * பூரணபொற்குடம் வைத்துப் புறமெங்கும் தோரணம்நாட்டித் * துமிலமெழப் பறைகொட்டி உபலாளித்து எதிர்கொள்ள, *குன்றம்போல் மணிமாடநீடு திருக்குருகூரதனுள் புகுந்து,

(க) [illegible]

'இல்லறம்' என்று ச்லாக்யமாகச் சொல்லப்பட்டிருப்பதான க்ருஹஸ்தாஶ்ரமத்திலே நியதரான காரியார், சிலநாளைக்குப்பின்பு தம்முடைய பத்நியாரான உடையநங்கையாரைத் திருக்குருகூரில்நின்றும் பிறந்தகமான திருவண்பரிசாரத்துக்கு அழைத்துக்கொண்டுபோய்மீண்டுவாரா நிற்கச்செய்தே, * தேன்கொள்சோலைத் திருக்குறுங்குடியிலேசென்று * நம்பியைத் தென்குறுங்குடி நின்றவச்செம்பொனே திகழும்திருமூர்த்தியையும் ஸேவித்து 'அடியோங்களுக்கு ஒருஸந்தாநம் தந்தருளவேணும்' என்று ப்ரார்த்திக்க, நம்பியும் 'நாமே வந்து பிறக்கிறோம்' என்று அர்ச்சகமுகேந வரப்ரதாநம் பண்ணியருள, அவ்வசநங் கேட்டு ப்ரீதராய் நிற்கச்செய்தே, நம்பியும் * பூந்தண்மாலைத் தண்டுழாயை க்ருபையுடனே ப்ரஸாதித்தருள, * தன்மன்னுநீள்கழல்மேல் தண்டுழாய் நமக்கன்றி நல்கானென்றுகொண்டு * துணையோடும்பிரியாதே ஸ்வீகரித்து மிகவும் உகப்போடே தங்களுக்கு ஆவாஸஸ்தாநமான * நல்லார்பலர்வாழ் குருகூரிலே வந்து புகுந்து நித்யவாஸம் பண்ணிக்கொண்டு போருகிற வளவிலே, உடையநங்கையார் கர்ப்பவதியாக, "திருமாலாலருளப்பட்ட சடகோபன்" என்னலாம்படிஎம்பெருமான் * பாரெல்லாமுய்யும்படி ஸேனைமுதலியாரை நம்மாழ்வாராக அவதரிக்கும்படி நியோகிக்க, கலியுகம் பிறந்த † நாற்பத்து மூன்றாநாளான வர்த்தமாந ‡ பஹுதாந்யவர்ஷத்தில் வஸந்தருதுவில் வைகாசிமாஸம் சுக்லபக்ஷம் பௌர்ணமிகூடின திருவைஶாக நக்ஷத்ரத்தில், காவ்யவாஸரகர்க்கடகலக்நத்திலே திவ்யயோக திவ்யகர

† 'நாலாயிரத்து முந்நூற்றிரண்டோள் சென்ற' என்று சிலபிரதிகளிற் பாடம் காண்கிறது.இப்பாடத்திற்கு உபபத்தி-'நம்மாழ்வாரது திருவவதாரம் கலியுகம்பிறந்த நாற்பத்துமூன்றாநாளானாலும், துவாபரயுகாந்தத்தில் யுகஸந்தியாகப் புராணங்களில் ஏற்பட்டுள்ள நூறுவருஷத்திற்குள்ளாகவே கலிபிரவேசித்துவிடுகிறபடியால், அங்ஙனம்பிரவேசித்தநாளைக் கண்டறிந்து இங்ஙனம் சொல்லப்பட்டுள்ளது' என்று ஆன்றோர் கூறுவர்.

‡ "ப்ரமாத்யாஹ்வயே" என்று ச்லோகத்திலும், "பஹுதாந்யவர்ஷத்தில்" என்று மணிப்ரவாளவசநநடையிலும் மாறுபடும்படியிருப்பதற்கு ஸமாதாநம் - 'மநுஷ்யர்க்கு ஒருவர்ஷம் தேவதைகளுக்கு ஒருநாளாதலாலும், அந்நாள் உத்தராயணம்முடிகிற ஆனிவரைதோறும் முடிவதனாலும், ஆனிமாஸம்முடிகிறவரையில் முன்வர்ஷமே தொடர்ந்திருக்கின்றதெனக்கொண்டு பிரமாதிவருஷமே பஹுதாந்யவென்று சொல்லப்பட்டிருக்கிறது' என்று சிலபெரியோர்களும்; 'பஹுதாந்யவென்றது, ஆழ்வார் கர்ப்பத்துட்புகுந்த வர்ஷத்தை; ப்ரமாதியென்றது, ஆழ்வார்திருவவதரித்த வர்ஷத்தை' என்று வேறுசில பெரியோர்களும்; 'கல்பபேதத்தால் ஸமாதேயம்' என்று மற்றுஞ்சில பெரியோர்களும் கூறுகின்றனர்.



ணங்களிலே,§ ஆதித்யராமதிவாகராச்யுதபாநுக்களுதயத்திலேநீங்காத உள்ளிருள்நீங்கி ஶோஷியாத பிறவிக்கடல் ஶோஷித்து விகஸியாத போதிற்கமலம்மலரும்படி வகுளபூஷண பாஸ்கரோதய முண்டாய்த்து, உடையநங்கையாராகிற பூர்வஸந்த்யையிலே. (க) "ராதேகலிதிநே லாபே வைஶாகேகாவ்யவாஸரே-லக்நேகர்க்கடகேஸஞ்ஜாத தநயம்நாதநாயிகா" என்று திவ்யஸூரிசரிதத்திலே சொல்லிற்றிறே.

திருவநந்தாழ்வானும், வர்ஷாதபநிவாரணார்த்தமாக இவர்க்கு முன்னே திருப்புளியாழ்வாராய் வந்து அவதரித்தருளினார்.

---

## மதுரகவியாழ்வார் வைபவம்.

---

(உ) "பாண்ட்யக்ஷமாயாம்ப்ரதிதாவதாரம் † சைத்ரஸ்தசித்தோடுஜமூர்த்வகூடம் - ஸகாம்ஶபாஜம்மதுரங்கவீந்த்ரம் ஶடாரிபக்தம்ஶரணம்ப்ரபத்யே."

(ங) "ஹஸ்தஸ்ததாளத்விதயம்ப்ரபத்யே ஶடாரிவாக்வ்யாஸமுதாரகீர்த்திம் - மாதுர்யஸம்ஶ்லிஷ்டகவித்வயுக்தம் மஹத்வஸம்பாவிதபுத்திதத்வம்.,,

(க) "ராதேகலிதிநே லாபே வைஶாகே காவ்யவாஸரே | லக்நே கர்க்கடகே ஸஞ்ஜாத தநயம் நாத நாயிகா ||" (உ) "பாண்ட்யக்ஷமாயாம் ப்ரதிதாவதாரம் சைத்ரஸ்ய சித்ரோடுஜஸம்ப்ரஸூதம் | ஸகாம்ஶபாஜம் மதுரம் கவீந்த்ரம் ஶடாரிபக்தம் ஶரணம் ப்ரபத்யே ||" (ங) "ஹஸ்தஸ்ததாளத்விதயம் ப்ரபத்யே ஶடாரிவாக்வ்யாஸமுதாரகீர்த்திம் | மாதுர்யஸம்ஶ்லிஷ்டகவித்வயுக்தம் மஹத்வஸம்பாவிததத்த்வபுத்திம் ||"

§ இவ்வாக்யம் அழகியமணவாளப்பெருமான்நாயனார் அருளிச்செய்த ஆசார்யஹ்ருதயத்திற் காணப்பட்டதேயாகிலும், இவர்க்கு முற்பட்டவரான பின்பழகிய பெருமாள்சீயர்காலத்திலேயே வழங்கிவந்ததெனக் கொள்ளத்தக்கது.

† 'சைத்ரஸ்தசித்தோடுஜமூர்த்நிகூடம்' என்றும் பாடம்.

(க) ‡ "யாதேஸம்வத்ஸரௌகே ஹஸதமதஜநேத்வாபரஸ்யேஶ்வராப்தே சைத்ரேமாஸேத்விஸப்தோத்தரதிவஸவரேஶுப்ரபக்ஷேசருச்யே - சித்ராக்யேபார்க்கவீயேகுணவதி சதிநேப்ராதுராஸீச்சடாரே ரங்கேவாஸீத்விஜேந்த்ரோமதுரகவிரஸௌமாத்ருகுஜ்ஜீவநாய"

மதுரகவிகள், *செல்வம்மல்கி யவன்கிடந்த திருக்கோளூரிலே, (உ)"சைத்ரஶ்ஶ்ரீமாநயம்மாஸஃபுண்யஃ புஷ்பிதகாநநஃ" என்று ஶ்ரீமத்தாகச் சொல்லப்படுகிற சித்திரைமாஸத்தில், சித்ராநக்ஷத்ரத்திலே, ¶ ஶ்ரீகுமுதகணேஶாம்ஶராய்,ஸ்ரீவகுளபூஷண பாஸ்கரோதயத்துக்கு அருணோதயம்போலேமுன்னே திருவவதரித்தருளினர்.(ந)"ஶ்ரேணேஶஃ குமுதோநாம்நா || கவிர்மதுரஸம்ஜ்ஞகஃ - சைத்ரமாஸிஶுபேசித்ததாரகாயாமஜாயத" என்று திவ்யஸூரிசரிதத்திலே சொல்லிற்றிறே.

ஸாமஶாகாத்யயந பூர்வஶிகாவத்ப்ராஹ்மணவர்ணே அவதரிக்கையாலே, இவருக்குத் தத்தத்காலங்களிலே ஜாதகர்ம நாமகரண அந்நப்ராஶந சௌளோபநயநாதிகளையும் செய்து, (ச) "அங்காநிவேதாஶ்சத்வாரோமீமாம்ஸாந்யாயவிஸ்தரஃ - புராணந்தர்மஶாஸ்த்ரஞ்ச வித்யாஹ்யேதாஶ்சதுர்த்தஶ" என்று சொல்லப்பட்ட சதுர்த்தஶ வித்யைகளையும் அதிகரிப்பிக்க, அதிதவேதவேதாங்கருமாய் மஹா

---

(க) [illegible] (உ) [illegible] (ந) [illegible] (ந) [illegible]

‡ இந்தச்சுலோகம் சிலபிரதிகளில் இல்லை.

¶ 'வேதாத்மகமான பெரியதிருவடி யம்ஶமாய்' என்றும் பாடம் காண்கிறது; மேலோர்கள் அருளிச்செய்த சுலோகங்களில் "ககாம்ஶபாஜம்" என்றும், "ஶ்ரேணேஶஃகுமுதோநாம்நா" என்றும் சொல்லப்பட்டிருப்பதனால், இம்மதுரகவிகளை, கருடபகவான். குமுதரென்றகணேசர் ஆகிய இவ்விருவரம்ஶமு முடையவ ரென்பர் பெரியோர்.

|| 'நித்யஸூரிர்மஹாத்யுதிஃ-சைத்ரேமாஸிததஶ்சித்ரா'என்றும் பாடம்.



விரக்தருமான இவர், (க) "அயோத்யாமதுராமாயாகாஶீகாஞ்சிஹ்யவந்திகா-புரீத்வாரவதீசைவ ஸப்தைதேமுக்திதாயகாஃ" என்று முக்திப்ரதமாகச் சொல்லப்பட்ட திருவயோத்யை முதலானதிவ்யதேசங்களை ஸேவிக்க எழுந்தருளினர்.

இப்படி இவர் முன்னாக அவதரித்தருளின ஆழ்வார் *முத்தனையமுறுவல்செய்து மூக்குறிஞ்சிமுலையுணாதேமௌநத்தோடே யெழுந்தருளியிருக்கச்செய்தேயும் வாட்டமின்றிக்கே பரிபூர்ணராயிருக்கிற இந்த ஆஶ்சர்யத்தைக் காரியாரும் * இவரைப்பெற்ற வயிறுடையாளான உடையநங்கையாரும் கண்டு "உன்மனத்தா லென்னினைந்திருந்தாய்" என்கிறபடியே எம்பெருமான்பக்கலிலே ந்யஸ்தபாராய்க்கொண்டிருந்து * பத்துநாளுங் கடந்தவிரண்டாநாள் (உ) "ஶங்கதீர்த்தஸமீபேது தாம்ராயாதக்ஷிணேதடே - ஸுஸ்திதம்புண்டரீகாக்ஷம் ஶங்கசக்ரதரம்ஹரிம் - வரதாபயஹஸ்தஞ்ச ரமயாதரயாஸஹ - நவநீரதநீலாபம் பீதவாஸஸமச்யுதம்" என்று சொல்லுகிறபடியே திருச்சங்கணித்துறையையுடைத்தான பொருநலாற்றின் தென்கரையிலே திவ்யமங்களவிக்ரஹயுக்தனைய் ஶங்கசக்ரதரனைய்ப் புண்டரீகாக்ஷனைய் வரதாபயஹஸ்தனைய் ஸ்ரீபூமிநீளாஸஹிதனைய்க்கொண்டு எழுந்தருளியிருக்கிற பொலிந்துநின்றபிரான் திருமுன்பே எடுத்துக்கொண்டுபோய் அப்படிப்பட்ட விக்ரஹத்தை ஸேவிக்கப்பண்ணி, இவருக்கு 'மாறன்' என்று திருநாமஞ்சாத்தி, திருப்புளியாழ்வாரடியிலே * ஆணிப்பொன்னாற் செய்த வண்ணச்சிறுத்தொட்டிலிலே வளர்த்தி, இவரைப் புத்ரப்ரதிபத்திபண்ணமல் "எங்கள் குடிக்கரசே" என்று விஶேஷப்ரதிபத்திபண்ணி ஸேவித்துக்கொண்டு போர, †(அப்போது பரமபதநாதனும் ஸேநாபதியை அழைத்து 'நீர் போய் நம்மாழ்வாருக்கு மந்த்ரமந்த்ரார்த்தங்களையும் த்ரவிடவேதத்தையும் உபதேசித்துவாரும்' என்ன, விஷ்வக்ஸேநரும் எருந்தருளி ஆழ்வாருக்கு நிகிலபுருஷார்த்தங்களையும் த்ராவிடவேதங்களையும் உபதேசித்துத் திவ்யஜ்ஞாநஸம்பந்நராக்கி எழுந்தளினர்.)

---

(க) [illegible] (உ) [illegible]

† குண்டலிதக்ரந்தம் சிலபிரதிகளிற் காணப்படுகின்றது.

இவ்வாழ்வார்தாம் (க) "ஸஂஜ்ஞாநகநபூர்ணத்வாத் திந்த்ரிணீமூலஸம்ஸ்ரய: - பாலஷோடஶாப்தாத்து மூகபாவங்கமிஷ்யதி" என்று சொல்லுகிறபடியே திருப்புளியாழ்வாரடியிலே பதினாறுதிருநக்ஷத்ரமளவாக * அவன் முகத்தன்றி விழியேனென்று முகுளிதநயநருமாய் * ஆருக்கென்சொல்கேனென்று மௌநியுமாய் எழுந்தருளியிருக்க, இத்தை உடையநங்கையாரும் காரியாரும் கண்டு இவர் தம்மைப்போன்ற அதிகாரிகளைக்காணாமையாலே லௌகிகரோடு வார்த்தைசொல்லாதிருக்கிறாரென்றறியாதே, 'திருக்குறுங்குடிநம்பிக்கு நாம் செய்ததென்?' என்று சிந்தைகலங்கியிருக்க, இப்ரஹாவங்களைத் திருவயோத்யையைஸேவிக்க எழுந்தருளின ஸ்ரீமதுரகவிகளும் கேட்டருளியிருக்கச்செய்தே, ராத்ரி ஜலஶங்காநிவ்ருத்யர்த்தமாகப் புறப்பட்டவர், தென்திசையிலே ஸூர்யோதயமானாற்போலே ஒரு அப்ராக்ருததிவ்யதேஜஸ்ஸைக் கண்டு 'இதுவென்?' என்று திகைத்து நின்று, ஏதேனும் க்ராமநகரங்கள் வேகிறதோ? காட்டுத்தீயோ?' என்று தம்மிலே விசாரித்து அற்றைக்குக் கண்வளர்ந்தருளினார்.

பின்னையும் இரண்டுமூன்றுநாள் இப்படியே கண்டு, 'இது ப்ராக்ருததேஜஸ் அன்று, அப்ராக்ருததிவ்யதேஜஸ்ஸாயிருந்தது; இக்காரணத்தை நாம் பரீக்ஷிப்போம்' என்று பகலெல்லாம் கண்வளர்ந்தருளி, ராத்ரிகளில், அந்தத்தேஜஸ்ஸை குறியாக அதித்வரையுடனே மீண்டெழுந்தருளி, புண்யக்ஷேத்ரம்தோறும் ஶோதித்துக்கொண்டு வந்து (உ) "ஸ்ரீரங்கமதுலம்க்ஷேத்ரம்" என்கிற * திருவரங்கப்பெருநகரிலே ஶோதிக்க, அதுக்கும் அப்பாலே தென்திசையிலேயாயிருக்க, பின்னையும் பூர்வம்போலே த்வரித்தெழுந்தருளி *மாடமாளிகை சூழ்ந்தழகாய திருக்குருகூரிலே சென்று அப்பால் பார்த்துக் காணாமையாலே 'இது இங்கேயாயிருக்கும்' என்று ஶோதித்துப்பார்க்க, (ந) "பத்மாஸநோபவிஷ்டம் பரபதயுகளேநிவிஷ்டசைதந்யம் - பரதத்வபோதமுத்ரம் பரமாசார்யம்பராங்குஶம்வந்தே" என்கிறபடியே ஸஂஜ்ஞாநகநபூர்ணராய் உறங்காப்புளிநிழல் தன்னிலே முகுளிதநயநராய் ஷோடஶவார்ஷிகராய் ஷோடஶகலாபூர்ணனை சந்த்ரனைப்

(க) "𑌸𑌂𑌜𑍍𑌞𑌾𑌨𑌘𑌨𑌪𑍂𑌰𑍍𑌣𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌤𑌿𑌨𑍍𑌤𑍍𑌰𑌿𑌣𑍀𑌮𑍂𑌲𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌃 । 𑌬𑌾𑌲𑌷𑍋𑌡𑌶𑌾𑌬𑍍𑌦𑌾𑌤𑍍𑌤𑍁𑌮𑍂𑌕𑌭𑌾𑌵𑌂𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥" (உ) "𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑌮𑌤𑍁𑌲𑌂𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌮𑍍" (ந) "𑌪𑌦𑍍𑌮𑌾𑌸𑌨𑍋𑌪𑌵𑌿𑌷𑍍𑌟𑌂𑌪𑌦𑌯𑍁𑌗𑌲𑌨𑌿𑌵𑌿𑌷𑍍𑌟𑌚𑍇𑌤𑌨𑌮𑍍 । 𑌪𑌰𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌬𑍋𑌧𑌮𑍁𑌦𑍍𑌰𑌂𑌪𑌰𑌮𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌂 𑌪𑌰𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑌂𑌵𑌨𑍍𑌦𑍇 ॥"



போலே, பத்மாஸநோபவிஷ்டராய், பரதத்வபோதமுத்ராயுக்தராய் பரமாசார்யரான ஸ்ரீபராங்குஶரைப் பார்த்து, †(பகவதநுபவம்பண்ணிக்கொண்டு, தம்மைக்கடாக்ஷித்தல் ஒருஸ்ரீஸூக்தியருளிச் செய்தல் செய்யக் காணாமையாலே) 'இவர்க்குச் சைதந்யமுண்டோ? ‡ செவிகேட்குமோ? என்று பரீக்ஷிக்கைக்காக ஒரு குண்டுக்கல்லையெடுத்து அவர்முன்னே திடீரென்று போட, இவரும் அதுகேட்டுத் திடுக்கென்று திருக்கண்களை மலரவிழித்துப்பார்த்தருள, ஸ்ரீமதுரகவிகளும் 'இவர்க்கு வாக்கு உண்டோ? இல்லையோ? என்று அறியக்கடவோம்' என்று அவரைக்குறித்து § "செத்தத்தின்வயிற்றிலே சிறியதுபிறந்தால் எத்தைத்தின்று எங்கேகிடக்கும்?" என்ன, "அத்தைத்தின்று அங்கேகிடக்கும்" என்று ஆழ்வார் அருளிச்செய்ய, ஸ்ரீமதுரகவிகளும் கேட்டருளி 'இவர் ஸர்வஜ்ஞராயிருந்தார்; இம்மஹாநுபாவரை நாம் அநுவர்த்தித்து உஜ்ஜீவிக்கவேணும்' என்று நினைத்து மிகவும்ஹ்ருஷ்டராய் ஆழ்வார் திருவடிகளிலே ஸாஷ்டாங்கப்ரணாமமாகத் தாளுந் தடக்கையுங்கூப்பி ¶ விழுந்து ஸேவித்து "மேவினேனவன்பொன்னடி மெய்ம்மையே" என்று ஆஶ்ரயித்து க்ருதார்த்த

† குண்டலிதக்ரந்தம் சிலப்ரதிகளில்மாத்திரம் உள்ளது.

‡ 'ஸ்ரவணாதிக ளுண்டோ' என்றும் ப்ரதிபேதம்.

§ செத்தத்தின்வயிற்றிலே சிறியது பிறக்கையாவது,—செத்ததுஎன்று அசித்து; அதுஎங்ஙனேயென்னில், அப்ராணவத்தாய் ஜடமாயிருக்கையாலே அசித்தைச்சொல்லுகிறது. அதின்வயிற்றிலே சிறியது பிறக்கையாவது - சரீரத்தோடே ஆத்மாவுக்கு உண்டான ஸம்பந்தம். சிறியதாவது - அணுபரிமாணமாயிருக்கிற ஆத்மாவைச்சொல்லுகிறது. சரீரத்தோடே ஆத்மாவுக்கு ஸம்பந்தமுண்டானால், அதுக்கு போக்யமும் - அசித்கதமாயிருக்கிற ஸுக துஃகங்கள். அத்தைத்தின்று அங்கே கிடக்கையாவது - சரீரகதமாயிருக்கிற ஸுகதுஃகாதிகளைப் புஜித்துக்கொண்டு சரீரத்தையே ஆஶ்ரயித்துக்கொண்டிருக்கை.

¶ 'விழுந்து ..................எழுந்தருளியிருக்கிறவளவிலே' என்றவிடத்து, "பணிந்து 'அடியேனை அங்கீகரித்தருளவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, ஆழ்வாரும் இவரை விசேஷகடாக்ஷம்பண்ணியருளிப் பஞ்சஸம்ஸ்காரமும்ப்ரஸாதித்தருளி 'நாம் பகவதநுபவத்துக்குப் போக்குவீடாகச் சொல்லும் பாசுரங்களை நீர் பட்டோலைகொள்ளும்' என்று அருளிச்செய்தருளினார். அவ்வளவிலே" என்றுப்ரதிபேதம்.

ராய் (க) "குருபாதாம்புஜம்த்யாயேத் குரோர்நாமஸதாஜபேத்" என்கிறபடியே த்ரிவிதகரணங்களாலுமுண்டான தத்பாதாம்புஜத்யாந தந்நாமகீர்த்தந தத்கிங்கரவ்ருத்திகளுமேயாக ஆழ்வாரை ஸதாநுபவம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருக்கிறவளவிலே, (உ) "ஆதிதேவோ ஜகந்நாதோ'வாஸுதேவோ ஜகத்பதி: - சதுர்ப்புஜஶ்ஶ்யாமளாங்க: பரமே வ்யோம்நிதிஷ்டதி" என்றுசொல்லுகிறபடியே ஸர்வகாரணபூதனுமாய், ஸர்வஸ்வாமியுமாய், ஸர்வநியந்தாவுமாய், ஸர்வாந்தர்யாமியாய், * நீலமேனியும் நான்குதோளு முடையனாய், ஸ்ரீவைகுண்டத்திலே எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமந்நாராயணனானவன் ஆழ்வார்க்கு எதிர்விழிகொடுக்கவேணு மென்று திருவுள்ளமான வளவிலே பெரியதிருவடியும் தம்முடைய பக்ஷபாதம் தோன்ற முன்னே வந்து நிற்க, (ங) "அதாகதங்கருடமமும்புரஸ்ஸ்திதம் மஹாகிரிம்ஜலதஇவாருரோஹஸ:" என்றும் "பொலிந்திருண்ட கார்வானில் மின்னேபோற்றோன்றி, மலிந்த திருவிருந்த மார்பன்-பொலிந்த, கருடன்மேற் கொண்ட கரியான்" என்றும் சொல்லுகிறபடியே, நித்யாநபாயிநியான பிராட்டிஸஹிதனாய்ப் பெரியதிருவடிமேற்கொண்டு தோன்றி, தன்னுடைய ஸ்வரூபரூபகுணவிபூதி சேஷ்டிதங்களையெல்லாம் யுகபதேவ ஸாக்ஷாத்கரித்து அநுபவிக்கலாம்படி ஆழ்வாருக்கு*மயர்வறமதிநலமருள, ஆழ்வாரும் "பொன்னிவர் மேனிமரகதத்தின் பொங்கிளஞ்சோதி" என்கிறபடியே எம்பெருமானுடைய திவ்யாத்மஸ்வரூபத்தையும் தத்ஸ்வரூபப்ரகாஶகமான திவ்யமங்கள விக்ரஹத்தையும் ததாஶ்ரயமான திவ்யகுணங்களையும் அநுபவித்து, அவ்வநுபவஜநித ப்ரீதிஉள்ளடங்காமல் (ச) "ருசோயஜூம்ஷி ஸாமாநிததைவாதர்வணாநிச" என்கிற வேதசதுஷ்டயங்களில் ருக் யஜுஸ் அதர்வணம் என்கிற வேதத்ரயஸாரார்த்தத்தைத் திருவிருத்தம் திருவாசிரியம் பெரியதிருவந்தாதி என்கிற திவ்யப்ரபந்தத்ரயத்தாலே அருளிச்செய்தும், (ரு) "வேதாநாம்ஸாமவேதோऽஸ்மி" என்று கீதோபநிஷதாசார்யன் தானாகச் சொல்லப்பட்ட ஸாமவேதஸாரார்த்தத்தைச் சரமப்ரபந்தமான திருவாய்மொழியாலே அருளிச்செய்தும் "மிக்கவேதியர்வேதத்தினுட் பொருள், நிற்கப்பாடி யென் னெஞ்சுள் நிறுத்தினான்" என்கிறபடியே * தேவுமற்றறியாத ஸ்ரீமதுரகவி ப்ரப்ருதிகளான ஸஜ்ஜநங்கள் * அறியக்கற்று வல்லராம்படி ப்ரதிஷ்டிப்பித்து, * ஊரும் நாடு முலகமுந் தம்மைப்போலே யாக்கி, புஷ்பத்யாக போக மண்டபம் தொடக்கமான திவ்யதேசத்து எம்பெருமான்களும் திருப்புளியாழ்வாரடியிலே எழுந்தருளி இவர்க்குத் திருமுகப்ரதாநம்பண்ணித் தாங்களும் "எம்பெருமானுளனாகவே" என்கிறபடியே ஸத்தைபெற்றுநிற்க, நித்யஸூரிகளும் ஶ்வேதத்வீபவாஸிகளும் இவ்வாழ்வார் வைபவத்தைக்காண்கைக்காக வந்துநிற்க அவர்களை ஸேவித்து "பொலிக பொலிக" என்று மங்களாஶாஸநம்பண்ணி, அவர்கள் வைபவத்தையறிந்து அநுபவித்த தமக்கு "மாறுளதோ விம்மண்ணின்மிசையே" என்றும், "இனியாவர்நிக ரகல்வானத்தே" என்றும், "யான் பெரியன் நீ பெரியை யென்பதனை யா ரறிவார்" என்றும் எம்பெருமானோடே மார்தட்டி உபயவிபூதியிலும் தமக்கு ஸத்ருஶரில்லாதவராய், ஒருவராலும் அறியவரிதான ப்ரபாவத்தை யுடையராய், "உண்ணுஞ் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையு மெல்லாம் கண்ணன்" என்று பால்யாத்ப்ரப்ருதி பகவத்குணைகதாரகராய், (க) "ப்ராப்யஸ்யப்ரஹ்மணோரூபம் ப்ராப்துஶ்சப்ரத்யகாத்மந: - "ப்ராப்த்யுபாயம்பலம்ப்ராப்தேஸ்ததாப்ராப்திவிரோதிச - வதந்தி ஸகலாவேதாஸ் ஸேதிஹாஸபுராணகா:" என்று ஸகலவேதஶாஸ்த்ரங்களிலும் ஸாரதமமாகச்சொல்லப்படுகிற அர்த்தபஞ்சகத்தையும், (உ) "த்வயாத்பரதரம்நாஸ்தி மந்த்ரம்வேதேஷ்வபித்விஜ" என்று மந்த்ரஶ்ரேஷ்டமாகச்சொல்லப்படுகிற ஸர்வவேதஶாஸ்த்ரஸாரபூதஶரணாகதிமந்த்ரார்த்தத்தையும் சரமப்ரபந்தமான திருவாய்மொழியாலே ஸுவ்யக்தமாம்படியருளிச்செய்து, (ங) "தர்ஶநம்பரபக்திஸ்ஸ்யாத் பரஜ்ஞாநந்துஸங்கம:- புநர்விஶ்லேஷபீருத்வம் பரமாபக்திருச்யதே" என்கிறபடியே பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளையுடையராய்க்கொ

(க) "𑌗𑍁𑌰𑍁𑌪𑌾𑌦𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌂 𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌤𑍍 𑌗𑍁𑌰𑍋𑌰𑍍𑌨𑌾𑌮 𑌸𑌦𑌾 𑌜𑌪𑍇𑌤𑍍 ।" (உ) "𑌆𑌦𑌿𑌦𑍇𑌵𑍋 𑌜𑌗𑌨𑍍𑌨𑌾𑌥𑍋 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑍋 𑌜𑌗𑌤𑍍𑌪𑌤𑌿𑌃 । 𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌶𑍍𑌶𑍍𑌯𑌾𑌮𑌲𑌾𑌙𑍍𑌗𑌃 𑌪𑌰𑌮𑍇 𑌵𑍍𑌯𑍋𑌮𑍍𑌨𑌿 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 ॥" (ங) "𑌅𑌥𑌾𑌗𑌤𑌂 𑌗𑌰𑍁𑌡𑌮𑍁𑌪𑍁𑌰𑌸𑍍𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌮𑌹𑌾𑌗𑌿𑌰𑌿𑌂 𑌜𑌲𑌦𑌮𑌿𑌵𑌾𑌰𑍁𑌰𑍋𑌹 𑌸𑌃" (ச) "𑌋𑌚𑍋 𑌯𑌜𑍂𑌂𑌷𑌿 𑌸𑌾𑌮𑌾𑌨𑌿 𑌤𑌥𑍈𑌵𑌾𑌥𑌰𑍍𑌵𑌣𑌾𑌨𑌿 𑌚" (ரு) "𑌵𑍇𑌦𑌾𑌨𑌾𑌂 𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑍋𑌽𑌸𑍍𑌮𑌿"

(க) "𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌰𑍂𑌪𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍁𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 । 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌯𑌂 𑌫𑌲𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇𑌸𑍍𑌤𑌥𑌾 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌵𑌿𑌰𑍋𑌧𑌿 𑌚 ॥ 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌸𑌕𑌲𑌾 𑌵𑍇𑌦𑌾𑌃 𑌸𑍇𑌤𑌿𑌹𑌾𑌸𑌪𑍁𑌰𑌾𑌣𑌕𑌾𑌃 ।" (உ) "𑌦𑍍𑌵𑌯𑌾𑌤𑍍𑌪𑌰𑌤𑌰𑌂 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌂 𑌵𑍇𑌦𑍇𑌷𑍍𑌵𑌪𑌿 𑌦𑍍𑌵𑌿𑌜" (ங) "𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌪𑌰𑌭𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑌰𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌤𑍁 𑌸𑌙𑍍𑌗𑌮𑌃 । 𑌪𑍁𑌨𑌰𑍍𑌵𑌿𑌶𑍍𑌲𑍇𑌷𑌭𑍀𑌰𑍁𑌤𑍍𑌵𑌂 𑌪𑌰𑌮𑌾 𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥"

ண்டு * தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள் சொல்லி * அவா வற்று வீடுபெற்றருளினர்.

---

அநந்தரம், "திருமால்திருப்பேர்வல்லா ரடிக்கண்ணிசூடியமாறன்" என்கிற * திருக்குருகூர்நகர்நம்பிக்கு ப்ரதமஶிஷ்யரான ஸ்ரீமதுரகவிகள் ப்ரபந்நஜநகூடஸ்தரான ஸ்வாசார்யவைபவத்தை "கண்ணிநுண்சிறுத்தாம்பு" என்கிற திவ்யப்ரபந்தத்திலே யருளிச்செய்து பஞ்சமோபாயநிஷ்டரான முமுக்ஷுக்களுக்கு உபகரித்தருளி, அர்ச்சாரூபமான ஆழ்வார்விக்ரஹத்தையும் ஏறியருளப்பண்ணி அவருக்குரித்ய பக்ஷ மாஸ அயந ஸம்வத்ஸரோத்ஸவங்களை யெல்லாம் மஹோத்ஸவமாகத் தாழ்வற நடத்திக்கொண்டு "வேதந்தமிழ்செய்த பெருமாள் வந்தார், திருவாய்மொழிப்பெருமாள் வந்தார், திருநகரிப் பெருமாள்வந்தார், திருவழுதிவளநாடர்வந்தார், திருக்குருகூர்நகர்நம்பிவந்தார், காரிமாறர் வந்தார், சடகோபர்வந்தார், பராங்குசர் வந்தார்" என்றுபல சின்னங்கள்பணிமாற, அவ்வளவிலே சங்கத்தார்சிஷ்யர்கள் வந்து 'எங்கள்சங்கத்தாரோடேதர்க்கித்து ஜயித்துச்சங்கப்பலகையேறினா லொழிய"வேதந்தமிழ்செய்த பெருமாள்" என்று விருதுபிடிக்க வொட்டோம்,என்றுதடுக்க,ஸ்ரீமதுரகவிகளும்'அதுங்யாயமாம்:எங்கள் ஆழ்வார்எங்கும்எழுந்தருளார்; அவர் திவ்யஸூக்திக்குச்சங்கப்பலகை இடங்கொடுத்ததாகில் அவர்க்கு இடங்கொடுத்ததாம், என்றுசொல்லி ஒரு சிறுமுறியிலே' 'கண்ணன்கழலிணை'' என்றுஎழுதி 'இச்சிறுமுறியைச்சங்கப்பலகையின்மேல்வையுங்கோள்' என்று அவர்கள்கையிலே கொடுக்க, அவர்களும் போய் இவ்விஶேஷத்தைச் சங்கத்தாருக்குச் சொல்லி அச்சிறுமுறியைச் சங்கப்பலகையின்மேலே வைக்க, அக்காலத்திலே தென்மதுரையிலே சங்கத்தாரோடுசேர் முந்நூறுதமிழ்ப் புலவர்சங்கப்பலகை யேறியிருக்க, அப்பலகை அவர்களெல்லாரையும் எடுத்துக் கவிழ்த்துப்போட்டு ஆழ்வார்திவ்யஸூக்திச்சிறுமுறியொன்றையுமே தரித்துக்கொண்டு நிற்க, இத்தைக்கண்டு சங்கத்தலைவனும் பயப்பட்டு, "ஈயாடுவதோ கருடற்கெதிரே இரவிக்கெதிர்மின்மினியாடுவதோ நாயோடுவதோ வுறுமிப்புலிமுன் நரிகேசரி முன்நடையாடுவதோ பேயாடுவதோ †வெழிலூர்வசிமுன் †பெருமானடிசேர்வகுளாபரணன், ஓராயிரமாமறையின் தமிழில்லொருசொற்பொறுமோவுலகிற்கவியே"என்று ஆழ்வார்விஷயமாகக் கவிசொல்லி அபராதக்ஷாமணம் பண்ணிக்கொண்டான். பின்னையும் அங்குக்கிடந்ததமிழ்ப் புலவரடைய ப்ரத்யேகம்

† 'அழகூர்வசிமுன்'என்றும்,'பெருமான் வகுளாபரணன் றருசொல்,ஓராயிரமாமறையின்பொருளின்னொருசொற்பொருமோ' என்றும்பாடாந்தரம்.



கவிசொல்லி அபராதக்ஷாமணம்பண்ணிக்கொண்டார்கள். இப்படி (க) "குரும்ப்ரகாஶயேத் தீமாந்" என்கிறபடியே ஸ்வாசார்யரான ஸ்ரீ பராங்குசருடையவைபவத்தை *ஊரும் நாடு முலகமுமெல்லாம் அறியும்படி ப்ரகாசிப்பித்துக்கொண்டு மதுரகவிகள் சிலகாலம் எழுந்தருளியிருந்து லோகத்தை வாழ்வித்தருளினர்.

---

## † திவ்யப்ரபந்த ப்ராமாண்ய ஸமர்த்தநம்.

இப்படி தத்வதர்ஶிகளாக அவதரித்தருளின இவ்வாழ்வார்கள் அருளிச்செய்த திவ்யப்ரபந்தங்கள் முக்யதமமான ப்ரமாணங்களாயிருக்க, தேவதாந்தரவிஷயமாக "தெய்வநான்முகக் கொழுமுளையீன்று, முக்கணீசனொடுதேவுபலநுதலி, மூவுலகும்விளைத்த வுந்தி" என்றும், "பூவில் நான்முகனைப்படைத்த, தேவன்" என்றும், "நான்முகனை, மூழ்த்தநீருலகெல்லாம் படையென்று முதல்படைத்தாய்" என்றும், "நான்முகன்றன்னொடு தேவருலகோடுயிர்படைத்தான்" என்றும், "பிரமன் சிவனிந்திர னாதிக்கெல்லாம், நாபிக்கமல முதற்கிழங்கு" என்றும், "பிரமனைத் தன்னுந்தியிலே தோற்றுவித்து, என்றும், "இருந்தண்கமலத் திருமலரினுள்ளே, திருந்து திசைமுகனைத் தந்தாய்" என்றும், "நின்னுந்திவா, யன்று நான்முகற் பயந்த வாதிதேவன்" என்றும், "நான்முகனை நாராயணன்" படைத்தான்" என்றும் "உந்தியிற்றோற்றினாய் நான்முகனை" என்றும், "உந்தியெழுந்தவுருவமலர்தன்னிற், சந்தச்சதுமுகன்றன்னைப் படைத்தவன்" என்றும், "உநதிமேல் நான்முகனைப்படைததான" என்றும் இப்படி, ஆழ்வார்களெல்லாரும் ப்ரஹ்மருத்ராதிகளை ஸர்வேஶ்வரன்தானே ஸ்ருஷ்டித்தா னென்று அருளிச்செய்தும்;

அங்ஙனன்றிக்கே, "வலத்தனன் திரிபுரமெரித்தவன் இடம்பெறத்துந்தித், தலத்தெழுதிசைமுகன்' என்றும், "ஏறனைப் பூவனைப் பூமகள்தன்னை, வேறின்றிவிண்டொழத்தன்னுள் வைத்து" என்றும, "திருவிடமேமார்வமயனிடமேகொப்பூழ், ஒருவிடமு மெந்தை

(க) "[illegible]"

† 'இதுமுதல் ஆழ்வார்கள்வைபவம் முடிகிறவரையிலும் உள்ள க்ரந்தங்கள்,பிற்காலத்துப்பெரியோர்களாற் சேர்க்கப்பட்டவை;ஆனதுபற்றியே 'ஆசார்யஹ்ருதயத்தில் அழகியமணவாளப் பெருமாள்நாயனாரும் அருளிச்தாரிறே' என்றுஇவற்றினிடையில் வருவதும், இவைசிலபிரதிகளிற் காணப்படாமலிருப்பதும்' என்றுஸம்ப்ரதாயம்வல்லார் கூறுவர்.

பெருமாற் கரன்" என்றும், "ஏறாளுமிறையோனுந் திசைமுகனுந்திரு மகளும், கூறாளுந் தனியுடம்பன்" என்றும், "சிவனொடு பிரமன்வண் திருமடந்தை சேர் திருவாகம்" என்றும் "மலர்மகள் நின்னாகத்தாள் - செய்ய, மறையான் நின்னுந்தியான் மாமதிள்மூன்றெய்த,விறையான் நின்னாகத்திறை" என்றும், "பிறைதங்குசடையானை வலத்தேவைத்துப் பிரமனைத் தன்னுந்தியிலே தோற்றுவித்துக், கறைதங்கு வேல் தடங்கண் திருவைமார்பிற் கலந்தவன்" என்றும்இப்படி , (க) "விஷ்ணோஶ்ஶ்ரீரநபாயிநீ" என்று சொல்லப்படுமவளாய் *இறையுமகலகில்லாத நித்யஸித்த மங்களாவஹையாய்ப் பரமமஹிஷியான பெரிய பிராட்டியுடன் ரஜஸ்தமோ குணமிஶ்ரரானப்ரஹ்மருத்ரர்களுடன் வாசியறத் தன் திருமேனியிலே இடங்கொடுத்துக்கொண்டிருக்கிறானென்று அருளிச்செய்தும்;

அங்ஙனன்றிக்கே, "நிரைமலர்ப்பாதங்கள்சூடிக்கண்ணபிரானைத் தொழுவார், ஒற்றைப்பிறையணிந்தானும் நான்முகனு மிந்திரனும், மற்றையமரருமெல்லாம்" என்றும், "உள்வா யெம்மையு மேழுலகும் நின், னுள்ளேதோற்றிய விறைவ வென்று, வெள்ளேறன் நான்முகனிந்திரன் வானவர், புள்ளூர்திகழல்பணிந்தேத்துவர்" என்றும், "நாடொறும் வானவர் தம்மை யாளுமவனும் நான்முகனும் சடைமுடியண்ணலும், செம்மையா லவன் பாதபங்கயம் சிந்தித்தேத்தித் திரிவர்" என்றும், "நுண்ணுணர்வின், நீலார்கண்டத்தம்மானும் நிறைநான்முகனு மிந்திரனும், சேலேய்கண்ணார் பலர்சூழ விரும்பும் திருவேங்கடத்தானே" என்றும், "அரன்நான்முகனேத்தும், செய்ய நின்றிருப்பாதத்தை" என்றும், "மேவித்தொழும் பிரமன் சிவனிந்திரன்" என்றும், "நெற்றிபெற்றகண்ணன் விண்ணின்நாதனோடு போதின்மேல், நற்றவத்த நாதனோடு மற்றுமுள்ள வானவர், கற்றபெற்றியால்வணங்கு பாத" என்றும், "நீரேறுசெஞ்சடை நீலகண்டனும் நான்முகனும் முறையாற், சீரேறுவாசகஞ் செய்யநின்ற திருமால்" என்றும், "அவரிவரென்றில்லை அரவணையான்பாதம், எவர் வணங்கியேத்தாதா ரெண்ணில் - பவரும், செழுங்கதிரோனொண்மலரோன் கண்ணுதலோ னன்றே, தொழுந்தகையார் நாளுந் தொடர்ந்து" என்றும் இப்படி, ப்ரஹ்மருத்ராதிதேவதைகள் எம்பெருமானைக்கிட்டித் தண்டனிட்டு ஸ்தோத்திரம் பண்ணித்திரிவார்கள் என்று அருளிச்செய்தும்;

(க) 'விஷ்ணோஶ்ஶ்ரீரநபாயிநீ"



அங்ஙனன்றிக்கே, "கேழ்த்தசீரரன் முதலாகக் கிளர்தெய்வமாய்க் கிளர்ந்து, சூழ்த்தமரர் துதித்தா லுன்றொல்புகழ் மாசூணாதே" என்றும், "நினைந்து நைந்துள் கரைந்துருகி யிமையோர்பலரும் முனிவரும், புனைந்த கண்ணி நீர் சாந்தம் புகையோடேந்திவணங்கினால்,...உன் பெருமை மாசூணாதோமாயோனே" என்றும், "மாசூணாவான்கோலத் தமரர்கோன் வழிப்பட்டால், மாசூணாவுன பாதமலர்ச்சோதி மழுங்காதே" என்றும் "பிறையேறுசடையானும் நான்முகனுமிந்திரனு,மிறையாதறிந்தேத்த வீற்றிருத்தலிது வியப்பே" என்றும் இப்படி, ப்ரஹ்மருத்ராதிகள் ஸத்வகுணோத்தரானபோது எம்பெருமானைக்கிட்டி ஸேவித்து ஸ்தோத்ரம்பண்ணினால் எம்பெருமானுக்கு அவத்யாவஹமென்று அருளிச்செய்தும்;

அங்ஙனன்றிக்கே, "நளிர்மதிச்சடையனென்கோ நான்முகக் கடவுளென்கோ" என்றும்,"சிவனா யயனாய்" என்றும் "கடிகமழ்கொன்றைச்சடையனேயென்னும் நான்முகக் கடவுளேயென்னும்" என்றும், "பூத்தண்டுழாய்முடியாய் புனைகொன்றையஞ்செஞ்சடையாய், வாய்த்தவென்னான்முகனே" என்றும், "என்றிருமார்பன்றன்னை யென்மலைமகள்கூறன்றன்னை, என்றுமென்னாமகளையகம்பாற்கொண்ட நான்முகனை" என்றும், "முனியே நான்முகனே முக்கண்ணப்பா" என்றும், "அவாவறச் சூழரியை யயனையரனை யலற்றி, அவாவற்று" என்றும் இப்படி, இத்திவ்யப்ரபந்தங்களிலே ஆதிமத்யாவஸாநமாக ப்ரஹ்மருத்ராதிகளை ஸர்வேஶ்வரன்றானாக அருளிச்செய்தும்; ஆக இப்படி ஒருகால் அருளிச்செய்தது ஒருகால் அருளிச்செய்யாதிருக்கையாலே இவற்றை முக்யதமமான ப்ரமாணமென்று விஶ்வஸிக்கலா யிருந்ததில்லையே யென்னில்;—

விஶ்வஸிக்கக் கூடும்; எங்ஙனேயென்னில்:— இவ்வாழ்வார்கள் தாங்கள் தங்களுக்குத் தேவதாந்தரவிஷய வைராக்யமுண்டென்று தோற்ற "ஓ ஓ உலகினதியல்வே,ஈன்றோளிருக்க மணைநீராட்டிப், படைத்திடந்துண்டுமிழ்ந்தளந்து,தேர்ந்துலகளிக்கும் முதற்பெருங்கடவுள் நிற்பப்,புடைப்பலதானறி தெய்வம்பேணுதல்,தனாதுபுல்லறிவாண்மை பொருந்தக்காட்டி" என்றும், எம்பெருமாமாயனையல்லது, ஒருமா தெய்வம்மற்றுடையமோ யாமே" என்றும், "பிதிருமனமிலேன் பிஞ்ஞகன்றன்னோ, டெதிர்வன் அவன் எனக்கு நேரான்" என்றும்,"மற்றுமோர் தெய்வமுண்டே மதியிலாமானிடங்காள்" என்றும், "மற்றுமோர்தெய்வமுளதென்றிருப்பாரோ டுற்றிலேன்" என்றும், "எம்பெருமானுண்டுமிழ்ந்த வெச்சிற்றேவ, ரல்லாதார்தா முளரே" என்

றும், அவ்வளவுமன்றிக்கே "திடவிசும்பெரிவளிநீர்நிலமிவைமிசை, படர்பொருள்முழுவதுமா யவையவைதொறும், உடன்மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன் சுடர்மிகுசுருதியு ளிவையுண்ட சுரனே" என்றும், "போதின் மங்கை பூதலக்கிழத்தி தேவி அன்றியும், போதுதங்குநான்முகன் மகன் அவன்மகன்சொலின், மாதுதங்கு கூறன் ஏறதூர்தி யென்று வேதநூ, லோதுகின்றதுண்மை" என்றும், "தீர்த்தனுலகளந்த சேவடிமேற் பூந்தாமம், சேர்த்தியவையே சிவன்முடிமேல் தான்கண்டு, பார்த்தன் தெளிந்தொழிந்தபைந்துழாயான்பெருமை, பேர்த்துமொருவராற் பேசக்கிடந்ததே" என்றும், "கபாலநன்மோக்கத்துக் கண்டுகொண்மின்" என்றும், "மார்க்கண்டேயனுங்கரியே, கறுத்தமனமொன்றும்வேண்டா கண்ணனல்லால்தெய்வமில்லை" என்றும், "சத்தியங்காண்மினைய, சிலையினாலிலங்கைசெற்ற தேவனே தேவனாவான்" என்றும் இப்படி, ப்ரமாணத்தாலும் ப்ரத்யக்ஷத்தாலும் ஸாக்ஷியாலும், (க) "யதேதத்பரமம்ப்ரஹ்ம லோகே வேதேஷு பட்யதே - ஸதேவ: புண்டரீகாக்ஷஸ் ஸ்வயம்நாராயண: பர:" என்று சொல்லப்படுகிற ஸ்ரீமந்நாராயணனே ஸர்வஸ்மாத்பரனென்று ஸாதித்தும்: அதுவுமன்றியே, பெரியாழ்வார் (உ) "பர:பராணாம்புருஷோ யஸ்யதுஷ்டோஜநார்த்தந:-ஸப்ராப்நோத்யக்ஷயம்ஸ்தாநமேதத்ஸத்யம்மயோதிதம்" என்றும், (ங) "நாஸ்திநாராயணஸமோ நபூதோநபவிஷ்யதி - ஏதேநஸத்யவாக்யேந ஸர்வார்த்தாந்ஸாதயாம்யஹம்" என்றும் சொல்லுகிற ரிஷிகள்வாக்யங்களையும் அவற்றுக்கு அடியான ஸ்ருதிவாக்யங்களையுங்கொண்டு வித்வத்கோஷ்டியானராஜாஸ்தாநத்திலே பரதத்வநிர்ணயம்பண்ணி விரைந்து கிழியறுத்தும், இப்படி நிஸ்சயம் பண்ணின ஆழ்வார்கள் ஒருகால் அருளிச்செய்தது ஒருகா லருளிச்செய்திலர்களென்னவொண்ணாது; ஆனால், இவற்றுக்குக் கருத்தென்னென்னில்;—அந்தத் தேவதாந்தரங்களினுடைய ஸ்வரூபஸ்வபாவங்களுக்கீடாக அருளிச்செய்தார்களித்தனை.

(க) "யதேதத்பரமம் ப்ரஹ்ம லோகே வேதேஷு பட்யதே। ஸ தேவ: புண்டரீகாக்ஷ: ஸ்வயம் நாராயண: பர:॥" (உ) "பர: பராணாம் புருஷோ யஸ்ய துஷ்டோ ஜநார்த்தந:। ஸ ப்ராப்நோத்யக்ஷயம் ஸ்தாநமேதத் ஸத்யம் மயோதிதம்॥" (ங) "நாஸ்தி நாராயணஸமோ ந பூதோ ந பவிஷ்யதி। ஏதேந ஸத்யவாக்யேந ஸர்வார்த்தாந் ஸாதயாம்யஹம்॥"



எங்ஙனேயென்னில்:—இவர்கள் கர்மவஸ்யரில் ப்ரதாநராகையாலே, (க) "யுககோடிஸ்ஹஸ்ராணிவிஷ்ணுமாராத்யபத்மபூ:-புநஸ்த்ரைலோக்யதாத்ருத்வம் ப்ராப்தவாநிதிஸுஸ்ரும" என்றும், (உ) "மஹாதேவஸ்ஸர்வமேதேமஹாத்மா ஹுத்வாऽऽத்மாநம்தேவதேவோபபூவ" என்றும்சொல்லுகிறபடியே பூர்வஜந்மங்களிலே ப்ரஹ்மபதம் ருத்ரபதம்பெறுகைக்குத் தபஸ்ஸுபண்ணுகையாலே தத்பலபோகார்த்தமாக எம்பெருமானாலே ஸ்ருஷ்டரானார்களென்றும் இவர்கள் எம்பெருமான் திருமேனியைப்பற்றி லப்தஸ்வரூபராயிராதபோது இவர்களுக்கு ஸத்தை குலையுமென்றும், இவர்கள் ஸத்வோத்ரிக்தரானபோது பகவத்ஸ்தோத்ராதிகளுக்கு யோக்யராயிருப்பர்களென்றும், இவர்கள் ராஜஸதாமஸப்ரசுரரானபோது அஹங்காரத்தாலே பண்ணும் துர்மாநம் கநத்திருக்கையாலே இவர்கள் எம்பெருமானைக்கிட்டி ஸ்தோத்ரம் பண்ணி ஸேவிக்கை அவத்யாவஹமென்றும், இவர்களுடைய ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்திநிவ்ருத்திகள் பகவததீநமாய் ஸரீரவச்சேஷமாயிருக்கையாலும் (ங) "ஏகஏவஜகத்ஸ்வாமீ ஸக்திமாநச்யுத:ப்ரபு:-ததம்ஸாஸ்ஸக்திமந்தோऽந்யே ப்ரஹ்மேஸாநாதயோऽமரா:" என்கையாலும் அவன்றானாக அருளிச்செய்தும் போருகையாலே இத்திவ்யப்ரபந்தங்களை முக்யதமமான ப்ரமாணங்களென்னக் குறையில்லை.

இவர்கள் ஸர்வேஸ்வரனுக்கு ஸரீரமானபடியை, (ச) "ஸஏவஸ்ருஜ்யஸ் ஸசஸர்ககர்த்தா ஸஏவபாத்யத்திசபால்யதேச - ப்ரஹ்மாத்யவஸ்தாபிரஸேஷமூர்த்திர்விஷ்ணுர்வரிஷ்டோவரதோவரேண்ய:" என்றும், (ரு) "கல்பாந்தேருத்ரரூபீயோக்ரஸதேஸகலம்ஜகத்-தமாத்

(க) "யுககோடிஸஹஸ்ராணி விஷ்ணுமாராத்ய பத்மபூ:। புநஸ்த்ரைலோக்யதாத்ருத்வம் ப்ராப்தவாநிதி ஶுஶ்ரும॥" (உ) "மஹாதேவஸ்ஸர்வமேதே மஹாத்மா ஹுத்வாऽऽத்மாநம் தேவதேவோ பபூவ" (ங) "ஏக ஏவ ஜகத்ஸ்வாமீ ஶக்திமாநச்யுத: ப்ரபு:। ததம்ஶாஶ்ஶக்திமந்தோऽந்யே ப்ரஹ்மேஶாநாதயோऽமரா:॥" (ச) "ஸ ஏவ ஸ்ருஜ்ய: ஸ ச ஸர்க்ககர்த்தா ஸ ஏவ பாத்யத்தி ச பால்யதே ச। ப்ரஹ்மாத்யவஸ்தாபிரஶேஷமூர்த்திர்விஷ்ணுர்வரிஷ்டோ வரதோ வரேண்ய:॥" (ரு) "கல்பாந்தே ருத்ரரூபீ யோ க்ரஸதே ஸகலம் ஜகத்। தமாத்யம் புருஷம் விஷ்ணும் [illegible] ஜநார்த்தநம்॥"

யம்புருஷம்விஷ்ணும் ப்ரணதோऽஸ்மிஜநார்த்தநம்'' என்றும், (க) "ஸ்ருஷ்டிஸ்தித்யந்தகரணீம் ப்ரஹ்மவிஷ்ணுஶிவாத்மிகாம் - ஸஸம்ஜ்ஞாம்யாதிபகவாநேகஏவஜநார்த்தந:'' என்றும், "தாமோதரனுருவாகிய சிவற்குந் திசைமுகற்கும்'' என்றும், "அரனயனென வுலகழித்தமைத்துளனே'' என்றும் அருளிச்செய்தார்கள். இவர்கள்ஸர்வேஶ்வரனுக்கு ஶரீரபூதராக, அவன்தான் ஆத்மாவாக, இவர்களை அவன்தானாகச் சொல்லும்படி யெங்ஙனேயென்னில்:—ஶரீரவாசிஶப்தம் ஶரீரிபர்யந்த ஸ்வார்த்தாபிதாநம் பண்ணக்கடவதிறே; ஒருஶரீரியானவன், "ஸ்தூலோऽஹம், க்ருஶோऽஹம்'' என்று தானும் சொல்லி, பிறரும் "நீ தடித்தாய் இளைத்தாய்'' என்று சொல்லுமோபாதி இவர்களையும் ஸர்வேஶ்வரன் தானாகச்சொல்லக் குறையில்லை. "நீர் வானம் மண்ணெரி காலாய் நின்ற நேமியான்'' என்றும், "சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த முடிவில்பெரும்பாழேயோ, சூழ்ந்ததனிற்பெரிய பரநன்மலர்ச்சோதீயோ, சூழ்ந்ததனிற்பெரிய சுடர்ஞானவின்பமேயோ'' என்றும், "தேவராய்நிற்குமத்தேவு மத்தேவரின்,மூவராய்நிற்குமுது புணர்ப்பும்-யாவராய், நிற்கின்றதெல்லாம் நெடுமால்'' என்றும், "முதலாவார் மூவரே யம்மூவருள்ளும்,முதலாவான் மூரிநீர்வண்ணன்'' என்றும் இத்யாதிகளாலே அவனையொழிந்த ஸகல சேதநாசேதநங்களும் அவன்தானாக அருளிச்செய்தார்கள். இப்படி அருளிச்செய்கைக்கு அடி:—(உ) "யஸ்யாத்மாஶரீரம் யஸ்யப்ருதிவீஶரீரம்'' என்கிறபடியே ஸர்வேஶ்வரனுக்கு ஆத்மாவும் ஶரீரம் அசித்தும் ஶரீரம் என்று வேதத்திலே சொல்லுகையாலும்,(ங)"விஶ்வரூபஞ்சமாமஜம்'' என்று அவன் தானும் அருளிச்செய்கையாலும், திருத்தேர்த்தட்டிலே அர்ஜுநனுக்கு விஶ்வரூபத்தைக் காட்டுகையாலும், அவன்தானாகச் சொல்லக் குறையில்லையிறே.

(ச) "கஇதிப்ரஹ்மணோநாம ஈஶோऽஹம்ஸர்வதேஹிநாம் - ஆவாந்தவாங்கேஸம்பூதௌ தஸ்மாத்கேஶவநாமவாந்'' என்கிறபடியேநாராயணன் பக்கலிலே ப்ரஹ்மருத்ராதிகள் ஜாதரானார்கள் என்றும், இவர்கள் திருநாபீகமலத்தையும் தக்ஷிணபார்ஶ்வத்தையும்

(க) "ஸ்ருஷ்டிஸ்தித்யந்தகரணீம் ப்ரஹ்மவிஷ்ணுஶிவாத்மிகாம் | ஸ ஸம்ஜ்ஞாம் யாதி பகவாநேக ஏவ ஜநார்த்தந: ||'' (உ) "யஸ்யாத்மா ஶரீரம் யஸ்ய ப்ருதிவீ ஶரீரம்'' (ங) "விஶ்வரூபஞ்ச மாமஜம்'' (ச) "க இதி ப்ரஹ்மணோ நாம ஈஶோऽஹம் ஸர்வதேஹிநாம் | ஆவாம் தவாங்கே ஸம்பூதௌ தஸ்மாத் கேஶவநாமவாந் ||''



பற்றி லப்தஸ்வரூபராயிருப்பர்கள் என்றும், (க) "பாதேநகமலாபேந ப்ரஹ்மருத்ரார்ச்சிதேநச'' என்று இவர்கள் ஶேஷபூதராய் எம்பெருமானை அர்ச்சிப்பர்கள் என்றும், இவர்கள் தததீநமான ஸத்தாஸ்திதிப்ரவ்ருத்திகளை யுடையராகையாலே எம்பெருமான் தானே யென்றும் ஶ்ருதிஇதிஹாஸ புராணங்களும் சொல்லிற்றின.

(உ) "பரமாத்மாபரோயோऽஸௌ நாராயணஸமாஹ்வய: - தஸ்யாநபாயிநீ † ஶக்திர் தேவீதத்தர்மதர்மிணீ'' என்கிறபடியே * எத்தனையேனும் பிரிவாற்றகில்லாத பெரியபிராட்டியாரோபாதி ப்ரஹ்மருத்ராதிகளும் இவன்திருமேனியிலே ஸர்வகாலமு மிருப்பர்களோவென்னில்:—ஆபத்காலத்திலே எம்பெருமான் தன்திருமேனியிலே ஒதுங்க அவர்களுக்கும் இடங்கொடுக்குமத்தனையல்லது எப்போதும் இரார்கள்; இதுதான் ஸர்வேஶ்வரனுக்கு மஹத்தான ஶீலகுணமாகையாலே, ஆழ்வார்கள் எப்போதும் அத்தையே அருளிச்செய்துகொண்டு போருவர்கள்: "தாளதாமரையானுனதுந்தியான், வாள்கொணீண்மழுவாளியுன்னாகத்தான், ஆளராய்த்தொழுவாரு மமரர்கள், நாளுமென்புகழ்கோவுனசீலமே'' என்றும், "அக்கும் புலியினதளுமுடையாரவரொருவர், பக்கம்நிற்க நின்ற பண்பர்'' என்றும் சொல்லக்கடவதிறே. "கலஹங்களானால் அடையவளைந்தானுக்குள்ளே இன்னஜாதியென்னாமல் எல்லாருங் கூடியிருந்து, கலஹம்தெளிந்தவாறே புறப்பட்டாலும் 'இவ்விடம் இன்னான்பற்று, இவ்விடம் இன்னான்பற்று' என்று சொல்லுமாபோலே'' என்று நஞ்சீயருக்குப் பட்டர் அருளிச்செய்தாரிறே.

கீழ்இவர்களுக்குச்சொன்ன இத்தனையும் நமக்குமொக்குமென்று அருளிச்செய்தார்கள், எங்ஙனேயென்னில் :- "வாடாதமலரடிக்கீழ் வைக்கவேவகுக்கின்று'' என்றும், "என்னையாக்கிக்கொண்டு''என்றும் "அந்நாள் நீதந்தவாக்கை'' என்றும், இவ்வளவுமன்றியே "என்னைத்தன்பொன்னடிக்கீழிருத்தி'' என்றும், இங்ஙனன்றிக்கே "குலதொல்லடியேன்'' என்றும், "குடிகுடி வழிவந்தாட்செய்யும்தொண்டர்'' என்றும், 'அடியோம் போற்றி' என்றும், இங்ஙனன்றிக்கே "அருவினையேன், களவேழ்வெண்ணெய் தொடுவுண்டகள்வா வென்பன்'' என்

(க) "பாதேந கமலாபேந ப்ரஹ்மருத்ரார்ச்சிதேந ச'' (உ) "பரமாத்மா பரோ யோऽஸௌ நாராயணஸமாஹ்வய: | தஸ்யாநபாயிநீ ஶக்திர் தேவீ தத்தர்மதர்மிணீ ||''

† 'லக்ஷ்மீர் தேவீ தத்தர்மசாரிணீ' என்றும் பாடம்.

றும், இவ்வளவுமன்றியே 'உயிர்வேறின்றி யொன்றாகவே" என்றும் தமக்குமென்றும்பிறர்க்கு ஒன்றுமாகாமல் அருளிச்செய்தாரிறே.

இனி, அவர்களோடுஸமரோ இவ்வாழ்வார்கள்? என்னில்:- அன்று; கர்மத்தையிட்டு ஸ்ருஷ்டித்தானென்றது அவர்களை; ஸ்வேச்சையாலே அவதரிப்பித்தானென்றது இவர்களை. ஆபத்காலத்திலே ஆபந்நிவாரணார்த்தமாகக்காதாசித்கமாகத் தன்திருமேனியிலே யிடங்கொடுத்துவைத்தானென்றது அவர்களை; "நீக்கமில்லாவடியார்" என்னக்கடவதிறே இவர்களை. ராஜஸதாமஸமிஸ்ர ஸத்வம் தலையெடுத்தபோது பகவத்விஷயப்ரவ்ருத்தி கநத்திருக்கையாலே ஸேஷபூதரென்கிறது அவர்களை; "முக்குணத்திரண்டவையகற்றி ஒன்றினிலொன்றிநின்று" என்றும், "நிலைநின்ற தொண்டரான, அறந்திகழுமனத்தவர்" என்றும் சொல்லுகிற ஶுத்தஸத்வநிஷ்டராகையாலே * தெளிவுற்ற சிந்தையரான ஸேஷபூதரென்கிறது இவர்களை. அவர்கள் ஸத்வகுணந்தலைந்து ராஜஸ தாமஸப் ப்ரசுரரானபோது அஹங்கரித்து "கோऽயம்விஷ்ணு:" என்றும், பரிவின்றி வாணனைக் காத்துமென்றன்று படையோடும் வந்தெதிர்ந்த" என்றும் இப்படி பாணயுத்தாதிகளிலே ஈஶ்வரனோடே எதிரம்புகோக்கையாலே ஈஶ்வரனைக்கிட்டுகை அவத்யமென்றும், பகவத்விஷயீகாரத்துக்குமுன்புஉண்டான ப்ரவ்ருத்திநிவ்ருத்திகளிலே பொல்லாங்குகளை அநுஸந்தித்தும், "பிதிருமனமிலேன் பிஞ்ஞகன்றன்னோடெதிர்வன் அவனெனக்கு நேரான்" என்று தாமே அருளிச்செய்தாரிறே; ஆகையாலே, ஸமர் என்ன வொண்ணாது.

ஆனால், உத்க்ருஷ்டவர்ணஜாதரன்றிக்கே நிக்ருஷ்டவர்ணஜாதரான இவ்வாழ்வார்கள் செய்தருளினதாய் பாஷாகாநரூபமாய்ப்பௌருஷேயமாய் அநித்தியமாயிருக்கிறஇவற்றை, அபௌருஷேயமாய் நித்யமாய் நிர்த்தோஷப்ரமாணமான வேதத்தோடொக்க த்ருடதரப்ரமாண மென்னும்படி யெங்ஙனேயென்னில்:— இவர்கள் உத்க்ருஷ்ட ஜந்மத்திலே அவதரித்தால் உத்க்ருஷ்ட ஜந்மஜாதர்க்கொழிய அபக்ருஷ்டஜந்மஜாதர்க்குஈடேறவழியில்லையென்றதாமாகையாலும், ப்ரபத்தி ஸர்வாதிகாரமாகையாலும், இவர்கள் ஸம்ஸாரநிமக்நரையுபர்த்தத்தாழவிழிந்தார்களிறே. (க) "ஹரிகீர்த்திம்விநைவாந்யத்ப்ராஹ்மணேந நரோத்தம - பாஷாகாநம்நகாதவ்யம் தஸ்மாத்பாபந்த்வயாக்ருதம்" என்கையாலே பகவந்நாமஸங்கீர்த்தனத்துக்கு பாஷாகாநரூபதோஷ

(க) "ஹரிகீர்த்திம் விநைவாந்யத் ப்ராஹ்மணேந நரோத்தம। பாஷாகாநம் ந காதவ்யம் தஸ்மாத் பாபம் த்வயா க்ருதம் ॥"



மில்லாமையாலும், "வடமொழிமறை" என்றதுதென்மொழிமறையை நினைத்தாகையாலும், "செந்திறத்தமிழோசைவடசொல்லாகி" என்றும், 'செந்தமிழும்வடகலையுந்திகழ்ந்தநாவர்" என்றும் "பொய்யில்பாடல் என்றும், "பொய்ம்மொழியொன்றில்லா மெய்ம்மையாளன்" என்றும் "ஆகஸ்த்யமு மகாதி" என்றுபட்டர்வேஷ்டி கவிஜித் வசநவிருத்தமாகையாலும், பாஷாகாநரூபதோஷமேயில்லை. இனி, புருஷபுத்திமூலமான தோஷத்துக்கு, "யானாய்த்தன்னைத்தான்பாடித், தென்னா வென்னுமென்னம்மான்" என்கிறபடியே இவ்வாழ்வார்கள் நாவிலிருந்து* இன்கவிபாடும் பரமகவிகளாக நன்குவந்து பரமசேதநனான பரவாஸுதேவன் தானே நன்றாகப்பாடிப்ரகாசிபித்ததாகையாலும், "அன்னமதாயிருந் தங்கற நூலுரைத்த" என்றும், "அன்னமாயன்றங்கருமறை பயந்தான்" என்றும் சொல்லுகிறபடியே ஹம்ஸாவதாரமாய் ப்ரஹ்மாவுக்குவேதத்தை உ[illegible]தேசித்தாப்போலேயும் வ்யாஸபகவானை ஆவேஶித்து வேதங்களை விஸ்தரிப்பித்தாப்போலேயும் இவர்களைக்கொண்டு ப்ரகாசிப்பித்ததாகையாலே, இப்ரபந்தங்களுக்குப் புருஷபுத்தி ஜநிததோஷமேயில்லை. ஶுப்தப்ரபுத்தரான சிஷ்யர்களை உபாத்யாயர் ஓதுவிக்குமா போலேயும், ப்ரளயாவஸ்தையிலும் தன்திருவுள்ளத்திலே வைத்துக்கொண்டிருந்து ஸ்ருஷ்டிகாலம் வந்தவாறே வேதத்தை ப்ரகாசிப்பித்தாப்போலேயும் ப்ரகாசிப்பித்ததாகையாலே, அநித்யதோஷப்ரஸங்கமே யில்லை. ஆகையாலே, வேதத்துக்கு உண்டான ப்ராமாண்யம் இதுக்கும் ஒக்குமிறே. (க) 'யோவேதவர்ணேஷு துவர்ணபுத்திம் ஸாமாந்யதோவை விததாதிமர்த்ய:—ஸயாதிகோராந்நரகாநஸங்க்யாந்பிஶாசதாமேதிமஹாவநேஷு" என்கிறபடியே (உ) 'த்ரைகுண்யவிஷயாவேதா:" என்று த்ரிகுணாத்மபுருஷர்களை விஷயீகரிக்கும் வேதத்துக்கு இப்படியானால் *மயர்வறமதிநலமருளப்பெற்றஆழ்வார்களருளிச்செய்த த்ரமிடோபநிஷத் ஸாரத்துக்குச் சொல்லவேண்டாவிறே. (ங) "அர்ச்சாவதாரோபாதாந வைஷ்ணவோத்பத்திசிந்தநம் - மாத்ருயோநிபரீக்ஷாயாஸ் துல்யமாஹுர்மநீஷிண:" என்கிற இவ்வர்த்தத்தை * "வீட்டின்பவின்பப் பாக்களில் த்ரவ்யபாஷாநிரூபண

(க) "யோ வேதவர்ணேஷு து வர்ணபுத்திம் ஸாமாந்யதோ வை விததாதி மர்த்ய: । ஸ யாதி கோராந் நரகாநஸங்க்யாந் பிஶாசதாமேதி மஹாவநேஷு ॥" (உ) "த்ரைகுண்யவிஷயா வேதா:" (ங) "அர்ச்சாவதாரோபாதாந வைஷ்ணவோத்பத்திசிந்தநம் । மாத்ருயோநிபரீக்ஷாயாஸ் துல்யமாஹுர்மநீஷிண: ॥"

ஸமம், இன்பமாரியி லாராய்ச்சி" என்று ஆசார்யஹ்ருதயத்திலே அழகியமணவாளப் பெருமாள் நாயனாரும் அருளிச்செய்தாரிறே; ஆகையால், அருளிச்செயலில் அப்ராமாண்யபுத்திமாத்ருகமநதோஷத்தோடொக்குமிறே: ஆனபின்பு இவையேமுக்யதமப்ரமாணங்க ளென்னுநின்றது.

ஆழ்வார்களுக்கு எம்பெருமான் ப்ரத்யக்ஷஸாக்ஷாத்காரமோ? ஜ்ஞாநஸாக்ஷாத்காரமோ வென்னில்:—ஜ்ஞாநஸாக்ஷாத்கார மல்லது ப்ரத்யக்ஷஸாக்ஷாத்கார மில்லை. ஆகில், "கமலக்கண்ணனென் கண்ணினுள்ளான் காண்பன்" என்றும், "நம்பியைநான் கண்டபின்" என்றும் "கண்ணுள் நீங்கா" என்றும் சொல்லுகிறவை சேரும்படி எங்ஙனே யென்னில்,— அவையும் ப்ரத்யக்ஷஸமாநாகாரமான ஜ்ஞாநஸாக்ஷாத்காரமாகக்கடவது. "நள்ளிராவும் நன்பகலும்நானிருந் தோலமிட்டால் கள்ளமாயா வுன்னை யென்கண்காண வந்தீயாயே" என்றும், "பக்கம்நோக்கி நின்றலந்தேன் பாவியேன்காண்கின்றிலேன்" என்றும் மற்றும் இப்படி பாட்டுக்கள்தோறும் பெரிய ஆர்த்தியோடே கூப்பிட்டு, "காணவந் தென்கண்முகப்பே" என்கிற பாட்டின்படியே ப்ரஹ்மருத்ராதிகளுமகப்படக்கூப்பிட்டாலுங்காணவொண்ணாத வஸ்துவை நடையழகு நிலையழகு கண்ணழகுகளை ப்ரத்யக்ஷமாக அநுபவிக்கவேணுமென்று கூப்பிடுகிற இதுக்கு ப்ரயோஜநமில்லை யென்று நிராஶராவது; பின்னையும் அவனைச் சாபலாதிஶயத்தாலே "அப்பனே அடலாழியானே" என்கிற பாட்டின்படியே ப்ராதமபரிஸ்பந்தமே தொடங்கிக் காணவேணுமென்ற அஶோஷ்யமான ஆத்மவஸ்து குருத்துவற்றுகவுலரும்படி பார்த்துக் கண்மறைநது "காண்கின்றிலேன்" என்றும், (க) "நமாம்ஸசக்ஷுரபிவீக்ஷதேதம்" என்றும், ப்ரத்யக்ஷமாக மாம்ஸசக்ஷுஸ்ஸுக்குக் காணவொண்ணாதென்றுநிராஶராய் "*தக்கஞானக்கண்களாலேகண்டுதழுவுவனென்று தர்ஶநஸமமான ஜ்ஞாநஸாக்ஷாத்காரமொழியக்*கட்கண்ணாலேகாணவிரகில்லை' என்றுநிர்த்தரிக்கையாலே, கீழ் "கண்டேன்" என்று பல இடங்களிலும் அருளிச்செய்ததும் ஜ்ஞாநஸாக்ஷாத்காரமா கக்கடவது; "கண்டேன் என்ற பத்தும் உட்கண்ணாலே" என்று ஆசார்யஹ்ருதயத்திலே அழகியமணவாளப்பெருமாள் நாயனாரும் அருளிச்செய்தாரிறே. ஆகையால், இவ்வர்த்தம ஶுத்த ஸம்ப்ரதாயஸித்தம். உள்ளதனைக்காலம் யத்நித்தாலும் மாம்ஸத்ருக்கோசரனன்றென்னு

(க) "நமாம்ஸசக்ஷுரபிவீக்ஷதே தம்"



மிடத்தை "என்றேனுங், கட்கண்ணாற்காணாத வவ்வுரு" என்றும் ஜ்ஞாநசக்ஷுஸ்ஸாலே காணுமத்தனை யென்னுமிடத்தை "நெஞ்சென்னு, முட்கண்ணால் காணுமுணர்ந்து" என்றும் பிறர்க்கும் உபதேசித்தாரிறே. ஜ்ஞாநஸாக்ஷாத்காரமே யுள்ளதென்னுமிடத்தை, "தீயெம்பெருமான் நீரெம்பெருமான் திசையு மிருநிலனும், மாயெம்பெருமானாகிநின்ற லடியோங்காணுமால்" என்றும், "முன்னை வண்ணம் பாலின்வண்ணம் முழுதுநிலைநின்ற, பின்னை வண்ணம் கொண்டல்வண்ணம்வண்ண மெண்ணுங்கால், பொன்னின்வண்ணம்மணியின் வண்ணம் புரையுந்திருமேனி,இன்னவண்ணமென்றுகாட்டீர்"என்றும், "சிறிதுந் திருமேனி யின்னவண்ண மென்றுகாட்டீர்" என்றும் அருளிச்செய்தாரிறே திருமங்கையாழ்வாரும். முதலாழ்வார்களும் * ஞானச்சுடர்விளக்கேற்றியிறே "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" என்று அருளிச்செய்ததும் இனி, ப்ரத்யக்ஷமாக அநுபவிக்கலாவது அர்ச்சாவதார மொன்றுமேயிறே.

ஆகையாலே, அவதார விஶேஷங்களாய் ஶ்ரேஷ்டதம ஜந்மஜாதராய் அகிலரும் உஜ்ஜீவிக்கும்படி அவதரித்தவர்களாய் அகஸ்த்யபாஷாரூபமான த்ராவிடவேதப்ரபந்தங்களைப் பெண்ணும் பேதையும் அதிகரிக்கும்படி உபகரித்தருளின ஆழ்வார்கள்பக்கலினும் அருளிச்செயல்களிலும் விஶ்வாஸபாஹுள்ய முடையவர்கள் ஜீவந்முக்தரென்கிறது. (க)"நஶப்தஶாஸ்த்ராபிரதஸ்யமோக்ஷா நசைவரம்யாவஸதப்ரியஸ்ய-நபோஜநாச்சாதநதத்பரஸ்ய நலோகவ்ருத்திக்ரஹணேரதஸ்ய - ஏகாந்தஶீலஸ்யத்ருடவ்ரதஸ்யபஞ்சேந்த்ரியப்ரீதிநிவர்த்தகஸ்ய- அத்யாத்மவித்யாரதமாநஸஸ்யமோக்ஷோத்ருவோ நித்யமஹிம்ஸகஸ்ய""ஶமதமநியதாத்மாஸர்வபூதாநுகம்பீவிஷயஸுகவிரக்தோஜ்ஞாநத்ருப்தஃப்ரஶாந்தஃ அநியதநியதாங்கோநைவஹ்ருஷ்டோநருஷ்டஃப்ரவஸிதஇவகேஹேவர்த்ததேயஸ்ஸமுக்தஃ"என்கிறபடியே அஸச்சாஸ்

(க) "நஶப்தஶாஸ்த்ராபிரதஸ்ய மோக்ஷோ நசைவரம்யாவஸதப்ரியஸ்ய । நபோஜநாச்சாதநதத்பரஸ்ய நலோகவ்ருத்திக்ரஹணே ரதஸ்ய ॥ ஏகாந்தஶீலஸ்ய த்ருடவ்ரதஸ்ய பஞ்சேந்த்ரியப்ரீதிநிவர்த்தகஸ்ய । அத்யாத்மவித்யாரதமாநஸஸ்ய மோக்ஷோ த்ருவோ நித்யமஹிம்ஸகஸ்ய ॥ ஶமதமநியதாத்மா ஸர்வபூதாநுகம்பீ விஷயஸுகவிரக்தோ ஜ்ஞாநத்ருப்தஃ ப்ரஶாந்தஃ। அநியதநியதாங்கோ நைவஹ்ருஷ்டோ நருஷ்டஃ ப்ரவஸித இவ கேஹே வர்த்ததே யஸ்ஸ முக்தஃ ॥"

த்ராபிருசியையும் லோகயாத்ரையையும் கைவிட்டு ஏகாந்தஶீலராய் ஶிரஸ்சேதபட்டாபிஷேகபர்யந்தமானமஹா ஆபத்ஸம்பத்துக்கள்ஸம்பவித்தாலும்ஸ்வாசாரப்ரச்யுதிவாராதபடி த்ருடாத்யவஸாயயுக்தராய் இந்த்ரியகிங்கரரன்றிக்கே விஷ்ணுகிங்கரராய், ஆத்மயாதாத்ம்யஜ்ஞாநபரிஶீலநபரராய்,பூதஹிம்ஸையைவிட்டுஶமதமாத்யாத்மகுணங்களையுடையராய், ஸர்வபூததயாபரராய், அர்த்தகாமங்களை அருவருத்துவிட்டவராய், ஜ்ஞாநபூர்த்தியையுடையராய், பாஹ்யகரணஶாந்தியுக்தராய், நியதாஹாரராய், அத்யுத்ருதருமன்றியே அதிகோபிகளுமன்றியே பார்யாபுத்ராதிகள்பக்கல் மமதாபுத்திக்ருத ஆஶாபாஶ ரஹிதராய், ஆசார்யவிஸ்வாஸமுடையரானவர்கள், "அறியக்கற்றுவல்லார் ஆழ்கடல் ஞாலத்துள்ளே - வைட்டணவர்" என்கிறபடியே ஜீவந்முக்த ரென்கிறது.

இவ்வாழ்வார்கள் தம் பரமக்ருபையாலே இத்திவ்யப்ரபந்தங்களை * உய்பவர்க்கு உய்யும்வண்ணமாக அருளிச்செய்து லோகத்தை வாழ்வித்தருளித் * தன்னுடைச்சோதிக்கு எழுந்தருளினர்கள்.

ஆழ்வார்கள்வைபவம் முற்றிற்று.

---

## ஸ்ரீமந்நாதமுனிகள் வைபவம்.

இவ்வாழ்வார்கள் * தன்னுடைச்சோதிக்கு எழுந்தருளி நெடுங்காலம்கழிந்தவாறே, வீரநாராயணபுரத்திலேமன்னனார் திருவடிகளிலே ஸர்வவிதகைங்கர்யங்களையும் செய்துகொண்டுபோருகிற ஈஶ்வரபட்டாழ்வாரும், அவர்குமாரர் நாதமுனிகளும், அவர்குமாரர் ஈஶ்வரமுனிகளும், ஒருநாளளவிலே மன்னனார்திருமுன்பேசென்று தண்டன்ஸமர்ப்பித்து, 'தேவரீர் (க) "பரித்ராணாயஸாதூநாம்விநாஶாய சதுஷ்க்ருதாம்-தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமியுகேயுகே" என்கிற திருமுகப்படியே துஷ்டநிக்ரஹ ஶிஷ்டபரிபாலநார்த்தமாக அவதரித்து விளையாடியருளின ஸ்ரீமதுரை திருவாய்ப்பாடி ஸ்ரீப்ருந்தாவநம் யமுநாதீரம் ஸ்ரீகோவர்த்தநகிரி ஸ்ரீமத்த்வாரகை திருவயோத்யை ஸ்ரீஸாளக்ராமம் ஸ்ரீபதரிகாஶ்ரமம் ஸ்ரீநைமிஶாரண்யம் ஸ்ரீநரஸிம்ஹகிரி முதலான வடதிசையிலுள்ள திவ்யதேசங்களெங்கும் திருவடிதொழுதுவரவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, மன்னனாரும்'அப்படியே செய்யுங்கோள்' என்று அர்ச்சகமுகேந விடைகொடுத்தருள,

(க) "𑌪𑌰𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌯 𑌸𑌾𑌧𑍂𑌨𑌾𑌂 𑌵𑌿𑌨𑌾𑌶𑌾𑌯 𑌚 𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌾𑌮𑍍 । 𑌧𑌰𑍍𑌮𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌸𑌂𑌭𑌵𑌾𑌮𑌿 𑌯𑍁𑌗𑍇 𑌯𑍁𑌗𑍇 ॥",



இவர்களும் ஸகுடும்பமாகப்புறப்பட்டுப்போய், உத்தரதேசத்திலுண்டான * வடதிசை மதுரை சாளக்கிராமம் வைகுந்தம் துவரை அயோத்தி இடமுடைவதரி முதலான திவ்யதேசங்களைத் திருவடிதொழுது, (க) "யமுநாஞ்சாதிகம்பீராம் நாநாவர்த்தசஷா குலாம்" என்று ஸ்ரீவிஷ்ணுபுராணத்திற்சொல்லுகிறபடியே அதிகம்பீரமாய்ப் பலசுழிகளையுடைத்தாய்ப் பெருகாநிற்கிற யமுநாதீரத்திலே 'ஸ்ரீகோவர்த்தநபுரம்' என்கிற க்ராமத்திலே "தூயபெருநீர் யமுனைத்துறைவன்" என்கிற எம்பெருமானைத் திருவடிதொழுது மிகவும் ப்ரீதராய் 'இவ்விடத்திலே நித்யவாஸம் பண்ணக் கடவோம்' என்று நிஶ்சயித்துக்கொண்டு அவர் திருவடிகளிலே ஸர்வவித கைங்கர்யங்களும் பண்ணிக்கொண்டு ஸேவித்திருக்கிற காலத்திலே, மன்னனாரும் 'நம்முடைய வீரநாராயணபுரத் தேற வாரும்' என்று நாதமுனிகளுக்கு ஸ்வப்நங் காட்டியருள, 'ஈதொருஸ்வப்நம் இருந்தபடியென்!' என்று இவர்களும் தங்களிலே விசாரித்து, 'இனி நமக்குச் செய்ய அடுப்பதென்?' என்று யமுனைத்துறைவர் திருமுன்பே சென்று தண்டன் ஸமர்ப்பித்து இச்செய்தியை விண்ணப்பஞ்செய்ய, அவரும் அர்ச்சகமுகேந 'அப்படியே செய்யுங்கோள்' என்று தீர்த்தப்ரஸாதமும் ப்ரஸாதித்து விடைகொடுத்தருளினர்.

இவர்களும் அங்குநின்றும் குடும்பஸஹிதமாகப் புறப்பட்டு, வாராணஸீவழியாக எழுந்தருளி,(உ) "ஸப்த ஸப்தஸு லோகேஷு லோகாலோகேசராசரே - நாஸ்திநாஸ்திஸமம்க்ஷேத்ரம் உத்தமம்புருஷோத்தமம்" என்று சதுர்த்தஶபுவநங்களிலும் ஸ்வஸத்ருஶரஹிதமாகச் சொல்லப்படுகிற ஸ்ரீபுருஷோத்தமத்தேற வெழுந்தருளி, ஸ்ரீஜகந்நாதனையும் திருவடிதொழுது, அங்குநின்றும் புறப்பட்டு, ஸிம்ஹாத்ரி யேற வெழுந்தருளி, ஸிம்ஹகிரியப்பனையும் ஸேவித்து, அங்குநின்றும் போந்து (ங) "அஹோவீர்யமஹோஶௌர்யம் அஹோபாஹுபராக்ரமஃ - நாரஸிம்ஹஃபரந்தைவம் அஹோபலமஹோபிலம்" என்றுசொல்லப்பட்ட அஹோபிலநரஸிம்ஹனையும் திருவடிதொழுது, அங்குநின்றும் போந்து "பரன்சென்றுசேர்திருவேங்

(க) "𑌯𑌮𑍁𑌨𑌾𑌂𑌚𑌾𑌤𑌿𑌗𑌮𑍍𑌭𑍀𑌰𑌾𑌂 𑌨𑌾𑌨𑌾𑌵𑌰𑍍𑌤𑌝𑌷𑌾𑌕𑍁𑌲𑌾𑌮𑍍 ॥"

(உ) "𑌸𑌪𑍍𑌤 𑌸𑌪𑍍𑌤𑌸𑍁 𑌲𑍋𑌕𑍇𑌷𑍁 𑌲𑍋𑌕𑌾𑌲𑍋𑌕𑍇 𑌚𑌰𑌾𑌚𑌰𑍇 । 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌸𑌮𑌂 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌉𑌤𑍍𑌤𑌮𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ॥" (ங) "𑌅𑌹𑍋 𑌵𑍀𑌰𑍍𑌯𑌮𑌹𑍋 𑌶𑍌𑌰𑍍𑌯𑌮𑌹𑍋 𑌬𑌾𑌹𑍁𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮𑌃 । 𑌨𑌾𑌰𑌸𑌿𑌂𑌹𑌃 𑌪𑌰𑌂 𑌦𑍈𑌵𑌮𑌹𑍋 𑌬𑌲𑌮𑌹𑍋 𑌬𑌿𑌲𑌮𑍍 ॥"

த்ராபிருசியையும் லோகயாத்ரையையும் கைவிட்டு ஏகாந்தஶீலராய் ஶிரஶ்சேதபட்டாபிஷேகபர்யந்தமான மஹா ஆபத்ஸம்பத்துக்கள்ஸம்பவித்தாலும்ஸ்வாசாரப்ரச்யுதிவாராதபடி த்ருடாத்யவஸாயயுக்தராய் இந்த்ரியகிங்கரரன்றிக்கே விஷ்ணுகிங்கரராய், ஆத்மயாதாத்ம்யஜ்ஞாநபரிஶீலநபரராய்,பூதஹிம்ஸையைவிட்டுஶமதமாத்யாத்மகுணங்களையுடையராய், ஸர்வபூததயாபரராய், அர்த்தகாமங்களை அருவருத்துவிட்டவராய், ஜ்ஞாநபூர்த்தியையுடையராய், பாஹ்யகரணஶாந்தியுக்தராய், நியதாஹாரராய், அத்யுத்க்ருதருமன்றியே அதிகோபிகளுமன்றியே பார்யாபுத்ராதிகள்பக்கல் மமதாபுத்திக்ருத ஆஶாபாஶரஹிதராய், ஆசார்யவிஸ்வாஸமுடையரானவர்கள், "அறியக்கற்றுவல்லார் ஆழ்கடல் ஞாலத்துள்ளே - வைட்டணவர்" என்கிறபடியே ஜீவந்முக்தரென்கிறது.

இவ்வாழ்வார்கள் தம் பரமக்ருபையாலே இத்திவ்யப்ரபந்தங்களை * உய்பவர்க்கு உய்யும்வண்ணமாக அருளிச்செய்து லோகத்தை வாழ்வித்தருளித் * தன்னுடைச்சோதிக்கு எழுந்தருளினார்கள்.

ஆழ்வார்கள்வைபவம் முற்றிற்று.

## ஸ்ரீமந்நாதமுனிகள் வைபவம்.

இவ்வாழ்வார்கள் * தன்னுடைச்சோதிக்கு எழுந்தருளி நெடுங்காலம்கழிந்தவாறே, வீரநாராயணபுரத்திலேமன்னனார் திருவடிகளிலே ஸர்வவிதகைங்கர்யங்களையும் செய்துகொண்டுபோருகிற ஈஶ்வரபட்டாழ்வாரும், அவர்குமாரர் நாதமுனிகளும், அவர்குமாரர் ஈஶ்வரமுனிகளும், ஒருநாளளவிலே மன்னனார்திருமுன்பேசென்று தண்டன்ஸமர்ப்பித்து, 'தேவரீர் (க) "பரித்ராணாயஸாதூநாம்விநாஶாய சதுஷ்க்ருதாம்-தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமியுகேயுகே" என்கிற திருமுகப்படியே துஷ்டநிக்ரஹ ஶிஷ்டபரிபாலநார்த்தமாக அவதரித்து விளையாடியருளின ஸ்ரீமதுரை திருவாய்ப்பாடி ஸ்ரீப்ருந்தாவநம் யமுநாதீரம் ஸ்ரீகோவர்த்தநகிரி ஸ்ரீமத்த்வாரகை திருவயோத்யை ஸ்ரீஸாளக்ராமம் ஸ்ரீபதரிகாஶ்ரமம் ஸ்ரீநைமிஶாரண்யம் ஸ்ரீநரஸிம்ஹகிரி முதலான வடதிசையிலுள்ள திவ்யதேசங்களெங்கும் திருவடிதொழுதுவரவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, மன்னனாரும் 'அப்படியே செய்யுங்கோள்' என்று அர்ச்சகமுகேந விடைகொடுத்தருள,

(க) "𑌪𑌰𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌯 𑌸𑌾𑌧𑍂𑌨𑌾𑌂 𑌵𑌿𑌨𑌾𑌶𑌾𑌯 𑌚 𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌾𑌮𑍍।
𑌧𑌰𑍍𑌮𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌸𑌂𑌭𑌵𑌾𑌮𑌿 𑌯𑍁𑌗𑍇 𑌯𑍁𑌗𑍇॥"



இவர்களும் ஸகுடும்பமாகப்புறப்பட்டுப்போய், உத்தரதேசத்திலுண்டான * வடதிசை மதுரை சாளக்கிராமம் வைகுந்தம் துவரை அயோத்தி இடமுடைவதரி முதலான திவ்யதேசங்களைத் திருவடிதொழுது, (க) "யமுநாஞ்சாதிகம்பீராம் நாநாவர்த்தசஷா குலாம்" என்று ஸ்ரீவிஷ்ணுபுராணத்திற்சொல்லுகிறபடியே அதிகம்பீரமாய்ப் பலசுழிகளையுடைத்தாய்ப் பெருகாநிற்கிற யமுநாதீரத்திலே 'ஸ்ரீகோவர்த்தநபுரம்' என்கிற க்ராமத்திலே "தூயபெருநீர் யமுனைத்துறைவன்" என்கிற எம்பெருமானைத் திருவடிதொழுது மிகவும் ப்ரீதராய் 'இவ்விடத்திலே நித்யவாஸம் பண்ணக் கடவோம்' என்று நிஶ்சயித்துக்கொண்டு அவர் திருவடிகளிலே ஸர்வவித கைங்கர்யங்களும் பண்ணிக்கொண்டு ஸேவித்திருக்கிற காலத்திலே, மன்னனாரும் 'நம்முடைய வீரநாராயணபுரத் தேற வாரும்' என்று நாதமுனிகளுக்கு ஸ்வப்நங் காட்டியருள, 'ஈதொருஸ்வப்நம் இருந்தபடியென்!' என்று இவர்களும் தங்களிலே விசாரித்து, 'இனி நமக்குச் செய்ய அடுப்பதென்?' என்று யமுனைத்துறைவர் திருமுன்பே சென்று தண்டன் ஸமர்ப்பித்து இச்செய்தியை விண்ணப்பஞ்செய்ய, அவரும் அர்ச்சகமுகேந 'அப்படியே செய்யுங்கோள்' என்று தீர்த்தப்ரஸாதமும் ப்ரஸாதித்து விடைகொடுத்தருளினார்.

இவர்களும் அங்குநின்றும் குடும்பஸஹிதமாகப் புறப்பட்டு, வாராணஸீவழியாக எழுந்தருளி,(உ) "ஸப்த ஸப்தஸு லோகேஷு லோகாலோகேசராசரே - நாஸ்திநாஸ்திஸமம்க்ஷேத்ரம் உத்தமம்புருஷோத்தமம்" என்று சதுர்த்தஶபுவநங்களிலும் ஸ்வஸத்ருஶரஹிதமாகச் சொல்லப்படுகிற ஸ்ரீபுருஷோத்தமத்தேற வெழுந்தருளி, ஸ்ரீஜகந்நாதனையும் திருவடிதொழுது, அங்குநின்றும் புறப்பட்டு, ஸிம்ஹாத்ரி யேற வெழுந்தருளி, ஸிம்ஹகிரியப்பனையும் ஸேவித்து, அங்குநின்றும் போந்து (ங) "அஹோவீர்யமஹோஶௌர்யம் அஹோபாஹுபராக்ரமஃ - நாரஸிம்ஹஃபரந்தைவம் அஹோபலமஹோபிலம்" என்றுசொல்லப்பட்ட அஹோபிலநரஸிம்ஹனையும் திருவடிதொழுது, அங்குநின்றும் போந்து "பரன்சென்றுசேர்திருவேங்

(க) "𑌯𑌮𑍁𑌨𑌾𑌞𑍍𑌚𑌾𑌤𑌿𑌗𑌮𑍍𑌭𑍀𑌰𑌾𑌂 𑌨𑌾𑌨𑌾𑌵𑌰𑍍𑌤𑌝𑌷𑌾𑌕𑍁𑌲𑌾𑌮𑍍।"
(உ) "𑌸𑌪𑍍𑌤𑌸𑌪𑍍𑌤𑌸𑍁 𑌲𑍋𑌕𑍇𑌷𑍁 𑌲𑍋𑌕𑌾𑌲𑍋𑌕𑍇 𑌚𑌰𑌾𑌚𑌰𑍇।
𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌸𑌮𑌂 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌉𑌤𑍍𑌤𑌮𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑌾𑌤𑍍॥" (ங) "𑌅𑌹𑍋𑌵𑍀𑌰𑍍𑌯𑌮𑌹𑍋𑌶𑍌𑌰𑍍𑌯𑌮𑌹𑍋𑌬𑌾𑌹𑍁𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮𑌃। 𑌨𑌾𑌰𑌸𑌿𑌂𑌹𑌃 𑌪𑌰𑌂 𑌦𑍈𑌵𑌮𑌹𑍋𑌬𑌲𑌮𑌹𑍋𑌬𑌿𑌲𑌮𑍍॥"

கடமாமலை" என்கிற திருமலையாழ்வாரையும் ஸேவித்து திருமலையேற வெழுந்தருளி (க) "மாயாவீபரமாநந்தந் த்யக்த்வாவைகுண்டமுத்தமம் - ஸ்வாமிபுஷ்கரிணீதீரே ரமயாஸஹமோததே" என்கிறபடியே ஜகந்நாடகஸூத்ரதாரியான ஸ்ரீவைகுண்டநாதன் பரமாகாசமான பரமபதத்தையும் உபேக்ஷித்து இவ்விபூதியிலுள்ளாரை ரக்ஷிக்கையிலுள்ள நசையாலே திருக்கோனேரிக்கரையிலே திருமாமகளுடனே ஸர்வஸுலபனாயெழுந்தருளியிருக்கிற திருவேங்கடத்தப்பனையும்திருவடிதொழுது, அவ்விடத்தே நித்யவாஸம்பண்ணுவோமென்றுபார்க்க மன்னனார் திருவுள்ளமாகாமையாலே அதிசீக்ரமாக அங்குநின்றும் புறப்பட்டுகடிகாசலத்தேற எழுந்தருளிக் *கடிகைத்தடங்குன்றின்மிசையிருந்த அச்சாரக்கனியான அழகியசிங்கரையும்சேவித்து, அங்குநின்றும்போந்து *புட்குழி யெம்போரேற்றுநாயனாரையும் பெரியவுடையாரையும் ஸேவித்து, அங்குநின்றும் போந்து (உ) "நகரீணஞ்சஸர்வாஸாம்புரீகாஞ்சீவிசீஷ்யதே - கிரீணஞ்சாபிஸர்வேஷாம் ஸ்ரேஷ்டோஹஸ்திகிரிஸ்ஸ்ம்ருத: - வேகவத்யுத்தரேதீரே புண்யகோட்யாம்ஹரிஸ்ஸ்வயம் - வரதஸ்ஸர்வபூதாநாம் அத்யாபிபரித்ருஸ்யதே" என்று சொல்லுகிறபடியே வேகவதியின வடகரையிலே உத்தமமான கச்சிமாநகரத்திலே கிரிகளில்வைத்துக்கொண்டு ஸ்ரேஷ்டமான ஹஸ்திகிரியினமேலே புண்யகோடியெனகிற விமாந மத்யத்திலே யெழுந்தருளிநின்று ஸர்வசேதநராலும் ஸேவ்யமாநராய் ஸர்வபலப்ரதரான பேரருளாளரையும் ஸேவித்து, அவ்விடத்தில் மற்றுமுண்டான திருபபதிகளையும் ஸேவித்து, அங்குநின்றும்போந்து திருவயிந்திரபுரத்தில் தெய்வநாயகனையும் திருவடிதொழுது, அங்குநின்றும எழுந்தருளி திருககோவலூரில் ஆழ்வார்கள்நாயனாரையும திருவடிதொழுது, அஙகுநின்றும போந்து (ங) "ரஙகமரஙகமிதிப்ருயாத க்ஷுத்பாஸ்கலநாதிஷு - விஷ்ணுலோகமவாப்நோதி ஸதயபாபக்ஷயாந்நர:" என்று சொல்லுகையாலே தும்மல் இருமல் தொடக்கமான

(க) "𑌮𑌾𑌯𑌾𑌵𑍀 𑌪𑌰𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌵𑍈𑌕𑍁𑌣𑍍𑌠𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 | 𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌪𑍁𑌷𑍍𑌕𑌰𑌿𑌣𑍀𑌤𑍀𑌰𑍇 𑌰𑌮𑌯𑌾 𑌸𑌹 𑌮𑍋𑌦𑌤𑍇 ||" (உ) "𑌨𑌗𑌰𑍀𑌣𑌾𑌞𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑌾𑌂 𑌪𑍁𑌰𑍀 𑌕𑌾𑌞𑍍𑌚𑍀 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 | 𑌗𑌿𑌰𑍀𑌣𑌾𑌞𑍍𑌚𑌾𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑍋 𑌹𑌸𑍍𑌤𑌿𑌗𑌿𑌰𑌿𑌸𑍍𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 || 𑌵𑍇𑌗𑌵𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌤𑌰𑍇 𑌤𑍀𑌰𑍇 𑌪𑍁𑌣𑍍𑌯𑌕𑍋𑌟𑍍𑌯𑌾𑌂 𑌹𑌰𑌿𑌸𑍍𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 | 𑌵𑌰𑌦𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑌦𑍍𑌯𑌾𑌪𑌿 𑌪𑌰𑌿𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 ||" (ங) "𑌰𑌙𑍍𑌗𑌂 𑌰𑌙𑍍𑌗𑍇𑌤𑌿 𑌵𑍈 𑌬𑍍𑌰𑍂𑌯𑌾𑌤𑍍𑌕𑍍𑌷𑍁𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑍍𑌖𑌲𑌨𑌾𑌦𑌿𑌷𑍁 | 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌲𑍋𑌕𑌮𑌵𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌪𑌾𑌪𑌕𑍍𑌷𑌯𑌾𑌨𑍍𑌨𑌰𑌃 ||"



கலக்கங்கள் வந்தால் தத்தோஷ நிவ்ருத்யர்த்தமாக "திருவரங்கம் பெரியகோயில்" என்று அநுஸந்தேயமாய்ப் பாபஹரமாய் மோக்ஷப்ரதமுமான * திருவரங்கப்பெருநகரிலே எழுந்தருளி நம்பெருமாளையும் ஸேவித்து, அங்குநின்றும் எழுந்தருளி திருக்குடந்தையில் ஆராவமுதாழ்வாரையும் ஸேவித்து, அங்குநின்றும் மீண்டு வீரநாராயணபுரத்தில்மன்னனார்கோயிலேற வெழுந்தருள, அங்குஉள்ள ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாரும் எதிர்கொள்ள, புகுந்து மன்னனாரைத் திருவடிதொழுது அதிப்ரீதராய் நிற்க, மன்னனாரும் திருவுள்ளம் போரவுகந்தருளி அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாரையும் அழைத்தருளி 'நமக்குப்ரியமாயிருக்கும் இவர்களைப் போர ஆதரித்துப்போருங்கோள்' என்று அருளிச்செய்ய, அவர்களும் அதுக்கீடாகத் திருமாளிகைகட்டிக்கொடுத்து அமுதுபடி முதல் மற்றும் திருமாளிகைக்கு வேண்டுமவையெல்லாம்நடத்திக்கொண்டுபோருகிறகாலத்திலேஇவர்களும் மன்னனாருக்குத் திருநந்தவனம்செய்து திருமாலைகட்டிச்சாத்தி அமுதுபடி சாத்துப்படி திருவிளக்கு முதலானவைகளெல்லாம் குறைவறநடத்திக்கொண்டு வித்வத்கோஷ்டிகளும் ஸாஸ்த்ரப்ரவர்த்தனங்களுமெல்லாம் பண்ணிக்கொண்டிருக்கச்செய்தே,

மேல்நாட்டில்நின்றும் சிலஸ்ரீவைஷ்ணவர்கள் எழுந்தருளி மன்னனாரை ஸேவித்து, அவர் திருமுன்பே "ஆராவமுதே" என்கிற திருவாய்மொழியை அநுஸந்தித்தருள, அத்தை நாதமுனிகள் கேட்டருளி அதிப்ரீதராய் அவர்களைப்பார்த்து "ஆயிரத்துள் இப்பத்தும்' என்றிருந்தது; இப்ரபந்தம் உங்களுக்கு முற்றப்போமோ? என்று கேட்டருள, அவர்களும் 'இப்பத்துப்பாட்டுமே வருவது' என்று விண்ணப்பஞ்செய்ய, இவரும் 'உங்கள்நாட்டிலே ஸ்ரீகோஸமுண்டோ? பாடம்போவாருண்டோ?' என்று கேட்டருள, 'எங்களுக்கு இவ்வளவுபாடம் வருவது: மற்றோரிடத்து மில்லை' என்று அவர்கள் விண்ணப்பஞ்செய்ய, இவரும் அவர்களுக்கு மன்னனாருடைய தீர்த்தப்ரஸாதமும ப்ரஸாதிப்பித்து ஸத்கரித்துப் போகவிட்டருளி, 'இப்ரபந்தம்சடகோபனவதரித்தருளின திருக்குருகூர்ப்ரதேஸத்திலேயுண்டாகவேணும்' என்று திருநகரிககு எழுந்தருளி ஆழ்வாரையும் பொலிந்துநின்றபிரானையும் ஸேவித்து, அங்கே ஸ்ரீமதுரகவிகளுடைய ஸிஷ்யரான ஸ்ரீபராங்குஸதாஸரை ஸேவித்து, 'இவ்விடத்திலே திருவாய்மொழி யோதினவர்களுண்டோ? ஸ்ரீகோஸங்களுண்டோ?' என்று கேட்டருள, அவரும், 'திருவாய்மொழியும், மற்றுமுண்டான திவ்யப்ரபந்தங்களும் நெடுங்காலமுண்டு ப்ரமுஷிதமாய்த்து; இப்

போது எங்களாசார்யரான ஸ்ரீமதுரகவிகள் அடியேனுக்கு ‘கண்ணி நுண்சிறுத்தாம்பு’ என்கிற திவ்யப்ரபந்தத்தை ப்ரஸாதித்தருளி, இக்கண்ணிநுண் சிறுத்தாம்பை ஆழ்வார்திருமுன்பே ஏகாஸநத்திலேயிருந்து ஏகாக்ரசித்தராய் ஆழ்வார்திருவடிகளை த்யானித்துக்கொண்டு நியமத்துடனே பன்னீராயிரம் உரு அநுஸந்திக்க ஆழ்வார் ப்ரஸந்நராவரென்று அருளிச்செய்தார்’ என்ன, நாதமுனிகளும் ‘அந்தத் திவ்யப்ரபந்தத்தை அடியேனுக்குப்ரஸாதித்தருளவேணும்’ என்று தண்டன்ஸமர்ப்பித்து விநயத்துடனே விண்ணப்பஞ்செய்ய அவரும் மிகவும் உகப்புடனே இவருக்கு அந்தத்திவ்யப்ரபந்தத்தை, ஓதுவித்தருள, நாதமுனிகளும் ஓதித் திருப்புளியாழ்வாரடியிலே ஆழ்வார்திருமுன்பே பன்னீராயிரம்உரு கண்ணிநுண் சிறுத்தாம்பை நியமத்தோடே அநுஸந்திக்க, ஆழ்வாரும் (க) “ஆஸ்திகோதர்மஶீலஶ்ச ஶீலவாந்வைஷ்ணவஶ்ஶுசி: - கம்பீரஶ்சதுரோதீரஶ் ஶிஷ்ய இத்யபிதீயதே” என்று சொல்லப்படுகிற ஶிஷ்யலக்ஷணமான ஆஸ்திக்யாதிகுணங்களையுடையரான நாதமுனிகளுக்குப் பெரியபிராட்டியார் நியோகேந மிகவும் ப்ரஸந்நராயருளி, இந்நாதமுனிகளைக் குறித்து அஶரீரிவாணிசொல்லுமாபோலே திருவாய்மலர்ந்து ‘ஏன் காணும் நம்மைக்குறித்து பஹுஶ: உபாஸியாநின்றீர்?’ என்றுகேட்டருள, நாதமுனிகளும் திருவாய்மொழி முதலான திவ்யப்ரபந்தங்களை அடியேனுக்கு இரங்கியருளவேணும்’ என்று விண்ணப்பஞ்செய்ய, ஆழ்வாரும் ப்ரீதியுடன் ஸர்வேஶ்வரன் தமக்கு *மயர்வறமதிநல மருளினாப்போலே நாதமுனிகளுக்கு (உ) “திவ்யந்ததாமி தேசக்ஷு:” என்கிறபடியே திவ்யஜ்ஞாநசக்ஷுஸ்ஸை ப்ரஸாதித்தருளி, ரஹஸ்யத்ரயத்தையும், திருவாய்மொழியையும், மற்றுமுள்ள மூவாயிரப்ரபந்தங்களையும், அகில தர்ஶநதாத்பர்யங்களையும், அஷ்டாங்கயோக ரஹஸ்யத்தையும் ப்ரஸாதித்தருளினார்.

“மிக்கவேதியர் வேதத்தினுட்பொருள், நிற்கப்பாடியென்னெஞ்சுள் நிறுத்தினான்” என்று சொலலுகிறபடியே நாதமுனிகளும் க்ருதார்த்தராய்ப் பொலிந்துநின்றபிரானையும் ஆழ்வாரையும் ஸேவித்திருக்கிற வளவிலே, மன்னனார் ‘இப்ரபந்தங்களை நம்முடையமுன்பே ஒருஉருச் சொல்ல வாரும்’ என்று நாதமுனிகளுக்கு ஸ்வப்நமுகேந அருளிச்செய்ய இவரும் மற்றை நாள் பொலிந்துநின்றபிரானையும் ஆழ்வாரையும் ஸேவித்து இச்செய்தியை விண்ணப்பஞ்செய்ய, ஆழ்வாரும் அர்ச்சகமுகேந ‘ஆகில், நீர் வீரநாராயணபுரத்தேறப்போய் இப்ரபந்தங்களை ஶமதமாத்யாத்மகுணங்களையுடையரான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அறியக்கற்றுவல்லராம்படி ஓதுவியும்’ என்று நியமித்துத் தீர்த்தப்ரஸாதங்களையும் ப்ரஸாதித்து விடைகொடுத்தருளினார்.

நாதமுனிகளும் மீண்டு வீரநாராயணபுரத்தேற எழுந்தருளும்போது வழியிலுள்ள திருப்பதிகளையும் அந்தத்திருப்பதிவைபவமான திவ்யப்ரபந்தங்களையும் அநுஸந்தாநம்பண்ணிக்கொண்டு ஸேவித்து மீண்டு வீரநாராயணபுரத்தேற வந்து புகுந்து மன்னனாரைத்திருவடி தொழுது நின்று, தம்மை ஆழ்வார் விஶேஷகடாக்ஷம்பண்ணித் திவ்யப்ரபந்தங்களையும் ப்ரஸாதித்தருளின செய்தியை மன்னனாருக்கு விண்ணப்பஞ்செய்ய, மன்னனாரும் மிகவும் உகப்புடனே ஸ்வப்நமுகேந ஒருரு இவருடனே அருளிச்செய்து, ‘ஸம்ஸாரிகளை உஜ்ஜீவிப்பிக்கைக்காக கரணகளேபரங்களைக் கொடுத்தும், ஶாஸ்த்ரங்களைத் தந்தும், நாமேவந்துபிறந்தும் இவையித்தனையும் செய்தவிடத்திலும் கார்யகரமாயிற்றில்லை; ஆனபின்பு ஆழ்வார்களுடைய திவ்யப்ரபந்தமுகேநவாய்த்து, திருந்திற்று; இப்படிப்பட்ட ப்ரபந்தங்கள் ப்ரமுஷிதமாய்க்கிடக்கவொண்ணாது’ என்று பார்த்தருளி, ‘இவரைக்கொண்டு இவற்றைப்ப்ரகாஸிப்பிக்கவேணும்’ என்று நினைத்து, ‘நீர் இவற்றை இயலு மிசையு மாக்கும்’ என்று அர்ச்சகமுகேந நியமித்தருள, நாதமுனிகளும் தம்முடைய மருமக்களான கீழையகத்தாழ்வாரையும் மேலையகத்தாழ்வாரையும் அழைத்தருளி, ஆழ்வார்நம்மை விஶேஷகடாக்ஷம்பண்ணியருளி ப்ரஸாதித்தருளின இத்திவ்யப்ரபந்தங்களை இயலு மிசையு மாக்கவேணும்; அதுசெய்யுமிடத்து *இன்கவிபாடும் பரமகவிகள் அருளிச்செய்ததாய், *செஞ்சொலாலெடுத்த தெய்வநன்மாலையான திவ்யப்ரபந்தங்களாகையாலே இத்தைத்திவ்யகாநத்திலே சேர்த்துப்பாடவேணும்’ என்று அவர்களையும் கூட்டிக்கொண்டு, ஸ்ரீவேதவ்யாஸபகவான் வேதங்களை உதாத்த அநுதாத்த ஸ்வரித ப்ரசயயுக்தங்களாக உச்சரிக்கலாம்படி பண்ணினாப்போலே நாதமுனிகளும் இத்திவ்யப்ரபந்தங்களைத் திவ்யகாநத்திலேயடைத்து இயலுமிசையுமாக்கிப் பாடுவித்தருள, இது லோகத்திலே ப்ரஸித்தமாயிற்று.

அநந்தரம், கங்கைகொண்டசோழபுரத்திலே அந்தராஜ்யத்துக்கு ராஜாவானசோழன்வாசலிலே, தேவகாநம்பாடுவாளொருத்தியும் மநுஷ்யகாநம்பாடுவாளொருத்தியுமாக இரண்டு வாரஸ்திரீகள்

(க) “ஆஸ்திகோ தர்மஶீலஶ்ச ஶீலவாந் வைஷ்ணவஶ்ஶுசி:। கம்பீரஶ்சதுரோ தீரஶ் ஶிஷ்ய இத்யபிதீயதே ॥” (உ) “திவ்யந் ததாமி தே சக்ஷு:”

தங்களில் விவாதமாய் வந்து, ராஜஸந்நிதியிலே வித்வான்களைத்திரட்டிப் பாட, ராஜாவும் அங்குள்ள வித்வான்களும் மனுஷ்யகானம் பண்ணுகிறவளைக் கொண்டாடி அவளுக்கு மணியும் மாலையும் த்யாகமும் கொடுத்துப் போகவிட்டுத் தேவகானம்பாடினவளை அநாதரித்துத் தள்ளிவிட, அவளும் 'நான்படுகிற கானம் தேவதைகளறியுமித்தனை' என்று தேவாலயங்கள்தோறும் புக்குப் பாடிக்கொண்டு வந்து மன்னனார்கோயிலிலே அவர்திருமுன்பே பாட நாதமுனிகளும் அத்தைக் கேட்டு உகந்து கொண்டாடி அவளுக்கு மன்னனாருடைய தீர்த்த ப்ரஸாதமும் திருப்பரியட்டமும் ப்ரஸாதிப்பித்தருள, அவளும் இவரைத் தண்டனிட்டுப்போய் இந்த ராஜாவுடன் 'நான் பாடுகிற தேவகானம் அறிவாராய்,நாதமுனிகளென்னுந் திருநாமமுடையாரொருவர், வீரநாராயணபுரத்தில் மன்னனார்கோயிலிலே இருக்கிறார்' என்ன, ராஜாவும் நாதமுனிகளை 'எழுந்தருளவேணும்' என்று அழைத்துவிட, இவரும் 'திருவாய்மொழி முதலான திவ்யப்ரபந்தங்களைத் திவ்யகானத்திலே யடைத்தோம்;நாட்டார்இதின்வைபவம்அறியார்கள்; இத்தை நாம் அறிவிக்கவேணும்' என்று திருவுள்ளம்பற்றி ராஜகோஷ்டி யேற வெழுந்தருள, ராஜாவும் எழுந்திருந்து தண்டன் ஸமர்ப்பித்து ஆஸநமிட, இவரும் எழுந்தருளியிருந்து ஆசீர்வதிக்க, ராஜாவும் அத்யாதரத்துடனே 'இவள் பாடுகிற தேவகானம் தேவரீர் அறிவீரோ?' என்று கேட்க, இவரும் மநுஷ்யகானம்பாடுகிறவளையும் தேவகானம் பாடுகிறவளையும் பாடச்சொல்லிக் கேட்டருளி, ராஜாவைக் குறித்து 'இவள்பாடுகிற மநுஷ்யகானம் உங்களுக்குத் தெரியும்: இவள்பாடுகிற தேவகானம் தேவர்களுக்குத் தெரியுமதுபோக்கி உங்களுக்குத் தெரியாது' என்ன, ராஜாவும் 'தேவரீர் அறியுமென்னுமிடம் நாங்களறியும்படி யெங்ஙனே?' என்ன, 'நாற்பது நூறு தாளத்தைச் சேரவொற்றச் சொல்லி 'இது இத்தனை யெடை, இது இத்தனை யெடை' என்று நாதமுனிகள் அருளிச்செய்ய, அவற்றை ராஜாவும் தனித்தனியே நிறுத்திச் சோதித்துப் பார்க்க, அவையெல்லாம் முந்திரை ஏறாமல் குறையாமல் இருந்தபடியைக் கண்டு மிகவும் ஆஸ்சர்யப்பட்டு நாதமுனிகளுடைய ஸ்ரீபாதத்திலே தண்டனிட்டுப் பஹுத்ரவ்யத்தை ஸமர்ப்பிக்கத் தேட, இவரும் சதுர்முக பசுபதி ஶதமக ப்ரப்ருதி பதங்களை நிராகரித்திருக்கும் நிஸ்ப்ருஹராகையாலே 'நமக்கு இவையொன்றும் வேண்டா' என்று ராஜாவை ஆசீர்வதித்து, மீண்டு வீரநாராயணபுரத்தே எழுந்தருளி, மன்னனார் திருவடிகளில் கைங்கர்யைகநிரதராய் வாழ்ந்துகொண்டிருக்குங்காலத்திலே, இவர்ஸ்ரீபாதத்தில் ஆஸ்



ரயித்தவர்களாய் (க) "ஶரீரம்வஸுவிஜ்ஞாநம் வாஸ:கர்மகுணாநஸூந் - குர்வர்த்தந்தாரயேத்யஸ்து ஸஶிஷ்யோ நேதரஸ்ஸ்ம்ருத:" என்று சொல்லப்படுகிற குணங்களையுடையரான உய்யக்கொண்டார் குருகைகாவலப்பன் நம்பிகருணாகரதாஸர் ஏறுதிருவுடையார் திருக்கண்ணமங்கையாண்டான் வானமாமலைதெய்வயாண்டான் உருப்பட்டூர் ஆச்சான்பிள்ளை சோகத்தூராழ்வான் என்கிற எண்மர்க்கும் (உ)"அஹோ த்வயஸ்யமாஹாத்ம்யம் அஹோவீர்யமஹோபலம் - மந்த்ரரத்நம்ஶா பகரம் வேதஸாரம்ஸநாதநம்" என்கிறபடியே மந்த்ரரத்நமென்று ஶ்லாகித்துச்சொல்லப்படுகிற த்வயார்த்தத்தையும் ப்ரஸாதித்து, திருவாய்மொழிமுதலான திவ்ய ப்ரபந்தங்களையும் ஓதுவித்து, வேதஶாஸ்த்ரங்களையும் அதிகரிப்பித்து, ரஹஸ்யத்ரயஸாரார்த்தமாய் ஸகலஜகத்காரணபூதனான ஸர்வேஶ்வரன் விஷயமான ஸ்ரீபுருஷநிர்ணயத்தையும் ந்யாஸதத்வத்தையும் அருளிச்செய்து, *கரியகோலத் திருவுருவை த்யாநித்துக்கொண்டு யோகத்திலே யெழுந்தருளியிருந்தார்.

ராஜா இவருடைய யோகவைபவத்தைக் கேட்டு அங்கேறப்போய், மன்னனாரையும் ஸேவித்து, தானும் ஸ்த்ரீகளுமாக, இவர் யோகத்திலே எழுந்தருளி யிருக்கும்படியைக் கண்டு ஆஸ்சரியப்பட்டு மீண்டுபோகிறவளவிலே, "திருவுடைமன்னரைக்காணில் திருமாலைக் கண்டேனே யென்னும்" என்கிறபடியே அவர்களை க்ருஷ்ணனும் கோபிமாருமாக நினைத்து அவர்கள்பின்னே கங்கைகொண்டசோழபுரத்தேற வெழுந்தருளாநிற்க, இதுகேட்டு உய்யக்கொண்டார் குருகைகாவலப்பனுள்ளிட்ட முதலிகளடையப் பின்தொடர்ந்தெழுந்தருளிக் கங்கைகொண்டசோழபுரத்தே சண்டு 'தேவரீர் இப்படி செய்யலாமோ?' என்று விண்ணப்பஞ்செய்ய, நாதமுனிகளும் 'க்ருஷ்ணனும் பெண்டுகளுமாக நினைத்து அவர்களுடனே வந்தேன்' என்று அருளிச்செய்து மீண்டெழுந்தருளினார்.

சிலநாள் கழிந்தவாறே, பின்னையும் ஒருகால் ராஜா வந்து மன்னனாரை ஸேவித்து மீண்டுபோகிறவன், தன் ஸாமந்தன்தலையிலே அடி

---

(க) ஶரீரம் வஸுவிஜ்ஞாநம் வாஸ: கர்ம குணாநஸூந் ।
குர்வர்த்தம் தாரயேத்யஸ்து ஸஶிஷ்யோ நேதர: ஸ்ம்ருத: ॥

(உ) அஹோ த்வயஸ்ய மாஹாத்ம்யம் அஹோ வீர்யமஹோ பலம் ।
மந்த்ரரத்நம் ஶாபஹரம் வேதஸாரம் ஸநாதநம் ॥

யிட்டு யானைக்கழுத்திலேற, இத்தை நாதமுனிகள் கண்டு 'ஸர்வேஶ்வரன் ப்ரஹ்மருத்ராதிகள் தலையிலே அடியிட்டுப் பெரியதிருவடியை மேற்கொள்ளும்படி இதுவாகாதே!' என்று மோஹித்தார் என்று ப்ரஸித்தமிறே.

பின்னையும் சிறிதுகாலம் யோகத்திலே எழுந்தருளியிருந்து குருகைகாவலப்பனைப்பார்த்து 'நீர் யோகரஹஸ்யத்தை அப்யஸியும்' என்று அஷ்டாங்க யோகக்ரமத்தை அவருக்கு அருளிச்செய்தருளினார். உய்யக்கொண்டாரைப் பார்த்து 'நீரும் யோகரஹஸ்யத்தை அப்யஸியும்' என்ன, உய்யக்கொண்டாரும் 'பிணம்கிடக்க மணம்புணரலாமோ? இந்த ஶரீராவஸாநத்திலே அப்யஸிக்க அமையும்' என்று விண்ணப்பஞ்செய்ய, 'ஆகில், நீர் ஶாஸ்த்ரங்களையும் திருவாய்மொழி முதலான திவ்யப்ரபந்தங்களையும் ப்ரவர்த்திப்பியும்' என்று அருளிச்செய்து, தம்புத்ரராகிய ஈஶ்வரமுனிகளைப் பார்த்து 'உமக்கு ஒரு குமாரர் உண்டாகப்போகிறார்; அவருக்கு 'யமுனைத்துறைவர்' என்று திருநாமம் சாத்தும்' என்று அருளிச்செய்து, உய்யக்கொண்டாரையும் குருகைகாவலப்பனையுங் குறித்து 'உங்களுக்கு நாம் சொன்ன தர்ஶநதாத்பர்யங்களையும், யோகரஹஸ்யார்த்தவிஶேஷங்களையும் யமுனைத்துறைவருக்கு உபதேசியுங்கோள்' என்று நியமித்தருளி, முன்புபோலே யோகத்திலே எழுந்தருளியிருந்தார்.

அநந்தரம், அந்தராஜா ஸ்பரிகரனாய் வேட்டைக்குவந்து மீண்டு போகாநிற்கச் செய்தே, இவருடைய பெண்பிள்ளைகள் வந்து 'ஐயா! நம் அகத்திலே ஒருகுரங்கும் இரண்டுவில்லிகளும் ஒருபெண்பிள்ளையுமாக வந்து 'நாதமுனிகள் எங்கே?' என்று தேடிப்போனார்கள்' என்றவாறே, நாதமுனிகளும் 'அவர்கள் (க)"அக்ரத:ப்ரயயௌராமஸ் ஸீதா மத்யேஸுமத்யமா - ப்ருஷ்டதஸ்து தநுஷ்பாணிர்லக்ஷ்மணோऽநுஜகாமஹ" என்று சொல்லப்பட்ட பெருமாளும் பிராட்டியும் இளையபெருமாளும் ஐந்த்ரவ்யாகரணபண்டிதனுமாக அடுக்கும்' என்று திருவுள்ளம் பற்றிப் பின்தொடர்ந்து எழுந்தருளி வழியில் எதிர்ப்பட்ட பலரையும் 'இப்படிபோகிறவர்களைக் கண்டீர்களோ?' என்று கேட்டருள,

(க) 𑌅𑌗𑍍𑌰𑌤𑌃𑌪𑍍𑌰𑌯𑌯𑍌𑌰𑌾𑌮𑌃 𑌸𑍀𑌤𑌾𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑍁𑌮𑌧𑍍𑌯𑌮𑌾 । 𑌪𑍃𑌷𑍍𑌠𑌤𑌸𑍍𑌤𑍁 𑌧𑌨𑍁𑌷𑍍𑌪𑌾𑌣𑌿𑌰𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑍋𑌽𑌨𑍁𑌜𑌗𑌾𑌮𑌹 ॥



அவர்களும் 'போகிறார்கள், போகிறார்கள்' என்றுசொல்ல, கடுநடையிட்டு நெடுந்தூரம் எழுந்தருளிக் கங்கைகொண்டசோழபுரத்தில் கீழ்வாசலளவாக எழுந்தருளி, அங்குள்ளவர்களை 'இப்படி போகிறவர்களைக் கண்டீர்களோ?' என்று கேட்டருள, அவர்களும் 'கண்டிலோம்' என்ன, போகிறவில்லிகளும் காணக்காண மறைந்திட, இவரும் ஏங்கி அடித்துக்கொண்டு விழுந்து மோஹித்து, அதுவே ஹேதுவாக (க) "பரந்துவைஷ்ணவம்லோகம் நித்யாநந்தம் ஸுகாவஹம்-தத்ரஸம்வாஹிநீந்திவ்யாம் விரஜாம்வேத ஸம்பவாம் - ஸர்வேஹிரண்மயாஸ் தத்ர ஸர்வேவேதமயாஶ்ஶுபா: - அப்ராக்ருதமயாநித்யா: புநராவ்ருத்திவர்ஜிதா:", "ஏகாந்திநஸ்ஸதா ப்ரஹ்ம த்யாயிநோயோகிநோ ஹியே, தேஷாந்தத்பரமம்ஸ்தாநம் யத்வைபஶ்யந்திஸூரய:" என்கிறபடியே * பிணைக் கொடுக்கிலும் போகவொட்டாத * அடியார்நிலாநின்ற வைகுந்தமாநகரை ப்ராபித்தருளினார். கலந்துபிரிந்த பிராட்டி பத்துமாஸம் பிரிந்திருந்தாள்; இவர் கண்டுஉகந்துகாண்பதற்குமுன்னே காணப்பெறாத இழவு இருஞ்சிக்கொண்டுபோக எழுந்தருளினார். இச்செய்தியை உய்யக்கொண்டார், குருகைகாவலப்பன், ஈஶ்வரமுனிகள் முதலானார் கேட்டு வ்யாகுலப்பட்டு அங்கேறப் போய் அவருடைய விமலசரமவிக்ரஹத்தை ஸேவித்து, தங்கள் கண்ணிலும் நெஞ்சிலும் தேக்கிக்கொண்டு ஶோகார்த்தராய்க் கிடந்து துடித்துத் தங்களிலே தேறித் தரித்துநின்று சரமகைங்கர்யத்தை ஈஶ்வரமுனிகள் திருக்கையாலே ப்ரஹ்மமேதஸம்ஸ்காரவிதி யடங்கச் செய்வித்துப் பள்ளிபடுத்து, வீரநாராயணபுரத்தேற எழுந்தருளி மற்றும் செய்யவேண்டுங் க்ருத்யங்களெல்லாம் செய்வித்தார்கள். குருகைகாவலப்பனும் நாதமுனிகள் எப்போதும் யோகத்திலே எழுந்தருளியிருக்குமிடத்துக்கு அருகே யோகத்திலே எழுந்தருளியிருந்தார்.

நாதமுனிகள் திருநக்ஷத்ரம், ஆனிமாஸத்தில் அநுராதை.

(க) 𑌪𑌰𑌂𑌤𑍁 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌂 𑌲𑍋𑌕𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑌨𑍍𑌦𑌂 𑌸𑍁𑌖𑌾𑌵𑌹𑌮𑍍 𑌤𑌤𑍍𑌰 𑌸𑌂𑌵𑌾𑌹𑌿𑌨𑍀𑌂 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌂 𑌵𑌿𑌰𑌜𑌾𑌂 𑌵𑍇𑌦𑌸𑌂𑌭𑌵𑌾𑌮𑍍 ॥ 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑌾𑌸𑍍𑌤𑌤𑍍𑌰 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌵𑍇𑌦𑌮𑌯𑌾𑌃 𑌶𑍁𑌭𑌾𑌃 । 𑌅𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑌮𑌯𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌃 𑌪𑍁𑌨𑌰𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌃 ॥ 𑌏𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌨𑌃 𑌸𑌦𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌧𑍍𑌯𑌾𑌯𑌿𑌨𑍋 𑌯𑍋𑌗𑌿𑌨𑍋 𑌹𑌿 𑌯𑍇 । 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌤𑌤𑍍𑌪𑌰𑌮𑌂 𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌯𑌦𑍍𑌵𑍈 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑍂𑌰𑌯𑌃 ॥

அவர் தனியன் (க) "வ்யோம்ந:பரஸ்தாத்ஸவிதுஸ்ஸமேத்ய லக்ஷ்ம்யா நியோகாத்குருநாதிராஜ: - ஸமந்த்ரரத்நந்த்வயமாஹயஸ்மை நாதாயதஸ்மை முநயேநமோऽஸ்து."

---

## உய்யக்கொண்டார் மணக்கால்நம்பி வைபவங்கள்.

அநந்தரம் உய்யக்கொண்டாரும், நாதமுனிகள் ஸ்ரீபாதத்திலே ஆஶ்ரயித்த முதலிகளையுங் கூட்டிக்கொண்டு தர்ஶநார்த்தங்களையும் திருவாய்மொழி முதலான திவ்யப்ரபந்தங்களையும் அருளிச்செய்து கொண்டிருக்குங் காலத்திலே இவர் ஸ்ரீபாதத்திலே ஆஶ்ரயித்த முதலிகள் - மணக்கால்நம்பி, திருவல்லிக்கேணிப்பாண் பெருமாளரையர், † செட்டைப்பூசிச்சண்டலங்காரர், ஸ்ரீ புண்டரீகதாஸர், உலகு பெருமாள்நங்கை என்கிற இவ்வைவர்கள்.

இவர்களில் மணக்கால்நம்பி பன்னிரண்டுஸம்வத்ஸரம் ஸ்வாசார்யரான உய்யக்கொண்டார் திருவடிகளிலே (உ) "அஹம் ஸர்வங்கரிஷ்யாமி" என்ற இளையபெருமாளைப்போல ஸர்வவிதகைங்கர்யங்களையும் பண்ணிக்கொண்டிருக்கையில், உய்யக்கொண்டார்தேவிகளாகிய ஆண்டாள் திருநாட்டுக்கு எழுந்தருள, திருமாளிகைக் கைங்கர்யமெல்லாம் தமக்கே பரமாய் நடத்திக்கொண்டு போகாநிற்கச்செய்தே, உய்யக்கொண்டார் பெண்பிள்ளைகளிருவரையும் நீராட்டி அழைத்துக் கொண்டு வருகிற வழியிலே வாய்க்கால் சேறாயிருக்கக்கண்டு அவர்கள் திகைத்துநிற்க, தாம் படியாய்க்கிடந்து அவர்களைத் தம்முதுகிலேஅடியிட்டெழுந்தருள்வித்துக்கொண்டு போக, உய்யக்கொண்டாரும் இச்செய்தியைக் கேட்டருளி 'இவர் இப்படி செய்வதே!' என்று போர ப்ரீதராய்,இவருத்தமாங்கத்தைத் தந் திருவடித்தாமரைகளாலே அலங்கரித்து, பொன்னடிப்பூமுடிசூட்டி 'உமக்கு நாம் செய்யவேண்டுவதென்?' என்று கேட்டருள, நம்பியும் "'உற்றேன் உகந்துபணிசெய்து உனபாதம், பெற்றேன் ஈதேயின்னம் வேண்டுவது எந்தாய்' என்று தேவரீர் திருவடிகளில்ஸேவையே வேண்டுவது' என்ன, உய்யக்கொண்டாரும் உகந்து அந்தஉகப்பின் மிகுதியாலே (க) "அதீதாநாகதஜ்ஞாநமாத்மதத்த்வ ப்ரகாஶகம் - ஸர்வவேதார்த்த விஜ்ஞாநம் ஸர்வஶாஸ்த்ரார்த்ததர்ஶநம்", "மாநஸம்வாசிகம்பாபம் காயிகந்த்ரிதாக்ருதம் - த்வயஸ்மரணமாத்ரேண நாஶம்யாதிஸுநிஶ்சிதம்" என்கிற வைபவத்தையுடைய பரமார்த்தமான த்வயத்தையே மீளவும் ப்ரஸாதித்தருளினார்.

பின்பு சிலநாள் கழிந்தவாறே உய்யக்கொண்டார் திருநாட்டுக்கு எழுந்தருளுகிறபோது 'இனி தர்ஶநப்ரவர்த்தகராவார் ஆர்?' என்று மணக்கால்நம்பி விண்ணப்பஞ்செய்ய, அவரும், 'இங்குள்ள முதலிகளையுங் கூட்டிக்கொண்டு நீரே தர்ஶநம் நிர்வஹிக்கக் கடவீர்; பின்பு சொட்டைக் குலத்தினரான ஈஶ்வர முனிகள் திருவயிற்றிலே ஸ்ரீமந்நாத முனிகளுக்கு ஒரு திருப் பேரனார் அவதரிப்பர்; அவருக்கு யமுனைத்துறைவரென்று திருநாமஞ் சாத்துவித்துத் தர்ஶந ப்ரவர்த்தகராம்படி ஸகல தர்ஶந ரஹஸ்யார்த்த விஶேஷங்களையும் உபதேசியும்; அவர் தர்ஶநப்ரவர்த்தகராவர்; இந்தக் கைங்கர்யத்தை நாதமுனிகள் தம் அந்திமதசையிலே அடியேனுக்கு நியமித்தருளினார்; நான் செய்யப்பெற்றிலேன்; நீர் அவரை அநுவர்த்தித்தாகிலும் ரஹஸ்யார்த்தங்களையுபதேசியும்' என்று நியமித்தருளி ஸ்ரீமந்நாத முனிகள் திருவடிகளை த்யானித்துக்கொண்டு பத்மாஸநோபவிஷ்டராய் ஆணையிலே சாய்ந்தருளித் திருநாட்டுக்கு எழுந்தருளினார்; இத்தால், ஆசார்யாஜ்ஞாபரிபாலநம் அவஶ்யகரணீயம் என்றபடி. உய்யக்கொண்டார் திருநாட்டுக்கு எழுந்தருளினபடியைக்கண்டு மணக்கால் நம்பியுள்ளிட்ட முதலிகளெல்லாரும் மிகவும் ஶோகார்த்தராய்

---

(க) 𑌵𑍍𑌯𑍋𑌮𑍍𑌨𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍𑌸𑌵𑌿𑌤𑍁𑌃 𑌸𑌮𑍇𑌤𑍍𑌯 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾 𑌨𑌿𑌯𑍋𑌗𑌾𑌤𑍍𑌗𑍁𑌰𑍁𑌨𑌾𑌥𑌿𑌰𑌾𑌜𑌃 । 𑌸𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌰𑌤𑍍𑌨𑌂 𑌦𑍍𑌵𑌯𑌮𑌾𑌹 𑌯𑌸𑍍𑌮𑍈 𑌨𑌾𑌥𑌾𑌯 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌮𑍁𑌨𑌯𑍇 𑌨𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 ॥

(உ) 𑌅𑌹𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿

† "செட்டலூர் செண்டலங்காரர்" என்று பிரதிபேதம்.

(க) 𑌅𑌤𑍀𑌤𑌾𑌨𑌾𑌗𑌤𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌾𑌤𑍍𑌮𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌕𑌮𑍍 । 𑌸𑌰𑍍𑌵𑌵𑍇𑌦𑌾𑌰𑍍𑌥𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍍 ॥ 𑌮𑌾𑌨𑌸𑌂 𑌵𑌾𑌚𑌿𑌕𑌂 𑌪𑌾𑌪𑌂 𑌕𑌾𑌯𑌿𑌕𑌞𑍍𑌚 𑌤𑍍𑌰𑌿𑌧𑌾𑌕𑍃𑌤𑌮𑍍 । 𑌦𑍍𑌵𑌯𑌸𑍍𑌮𑌰𑌣𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌣 𑌨𑌾𑌶𑌂 𑌯𑌾𑌤𑌿 𑌸𑍁𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌮𑍍 ॥

ஆசார்யவிஶ்லேஷாஸஹிஷ்ணுக்களாய்க் கோஷித்துக்கொண்டுவிழுந்து போரக்லேசித்துத் தங்களிலே தேறிநிற்க, நம்பியும் உய்யக்கொண்டாரை ப்ரஹ்மமேதத்தாலே ஸம்ஸ்கரித்துப் பள்ளிபடுத்து, மேலுஞ் செய்ய வேண்டுங் க்ருத்யங்களெல்லாஞ் செய்தருளினார்.

உய்யக்கொண்டார் திருநக்ஷத்ரம், சித்திரையில் கார்த்திகை.

அவர் தனியன் - (க) "நம: பங்கஜநேத்ராய நாத ஸ்ரீபாத பங்கஜே - ந்யஸ்தஸர்வ பராயாஸ்மத் குலநாதாய தீமதே."

---

## யமுனைத்துறைவர் வைபவம்

அநந்தரம் மணக்கால் நம்பி, முதலிகளைக் கூட்டிக்கொண்டு தர்ஶநம்நிர்வஹித்தருளாநிற்கச்செய்தே, பின்பு சிலகாலங் கழிந்தவாறே ஈஶ்வரமுனிகளுக்கு ஆடிமாஸத்தில் உத்ராடத்திலே ஒரு குமாரர் திருவவதரித்தருள, அதுகேட்டு அதிஸந்துஷ்டராய்நம்பியும் அங்கேறவந்து, அவருக்கு (உ) "† ஜாதகர்மண்யலாபேது விஷ்ணோஶ்சங்கஸ்ய தாரணம் - சௌளோபநயநேசாபி தர்மஞ்ராத்யயநே பிவா - விதிநாவைஷ்ணவஞ்சக்ரம் தாரயித்வாத்விஜோத்தம:" என்றும் (ங) "வைஷ்ணவைஶ்சைவ ஸூக்தைஶ்சகுர்யாத்ஸம்மார்ஜநம் ஶிரஸ: - தஸ்யதக்ஷிணகர்ணேது ஜபேதஷ்டாக்ஷரத்வயம் - மூர்த்நி ஹஸ்தம் விநிக்ஷிப்ய ஜபேச்சத்வா தஶாக்ஷரம் - நாமகுர்யாத்தத:பஶ்சாத்வைஷ்ணவம் பாபநாஶநம்" என்றும் சொல்லுகிறபடியே ஈஶ்வர

---

(க) நம: பங்கஜநேத்ராய நாதஶ்ரீபாதபங்கஜே ॥ ந்யஸ்தஸர்வபராயாஸ்மத்குலநாதாய தீமதே ॥

(உ) ஜாதகர்மண்யலாபே து விஷ்ணோஶ்ஶங்கஸ்ய தாரணம் । சௌளோபநயநே வாபி ததாத்யயந ஏவ வா । விதிநா வைஷ்ணவஞ்சக்ரம் தாரயித்வா த்விஜோத்தம: ॥

(ங) வைஷ்ணவைஶ்சைவ ஸூக்தைஶ்ச குர்யாத் ஸம்மார்ஜநம் ஶிரஸ: । தஸ்ய தக்ஷிணகர்ணே து ஜபேதஷ்டாக்ஷரத்வயம் ॥ மூர்த்நி ஹஸ்தம் விநிக்ஷிப்ய ஜபேச்சாபி தஶாக்ஷரம் । நாம குர்யாத் தத: பஶ்சாத் வைஷ்ணவம் பாபநாஶநம் ॥

† 'ஜாதகர்மண்யவாப்தேது' என்றும் பாடம் காண்கிறது.



முனிகளைக்கொண்டு ஜாதகர்மத்தையும் செய்வித்து, *பந்துநாளும் கடந்த விரண்டாநாள் ஸ்ரீமந்நாதமுனிகள் நியமநப்ரகாரத்திலே திருவிலச்சினை முன்னாக 'யமுனைத்துறைவர்' என்று திருநாமத்தையும் சாத்தி ப்ரீதராயருளினார்.

பின்பு ஈஶ்வர முனிகளும், யமுனைத்துறைவருக்கு அந்நப்ராஶந சௌளோபநயநாதிகளையும் தத்தத் காலங்களிலே செய்தருளி அத்யயநம்பண்ணுவிக்கிறகாலத்திலே இரண்டாஞ்சந்தை சொல்லும்போது, இவர், ஸஹாத்யாயிகளைப் பார்த்து 'ஓதின விடத்தையே ஓதுகிறீர்கள்' என்று அருளிச்செய்து சந்தை தவிர்ந்திருப்பர்; ஓதப்போகீரென்றால், ஓதின விடத்தையே ஓதா நின்றார்களென்பர்; இப்படி அதிமேதாவியாயிருக்கிற இவர், அங்கோபாங்கங்களோடே பதக்ரமஸஹிதமாக அத்யயநம்பண்ணித் திருக்கல்யாணமுஞ் செய்தருளினார்.

பின்பு, ஈஶ்வர முனிகளும் திருநாட்டுக்கு எழுந்தருள, யமுனைத்துறைவரும் அவரை ப்ரஹ்மமேதத்தாலே ஸம்ஸ்கரித்துப் பள்ளிபடுத்துச் செய்யவேண்டுங் க்ருத்யங்களெல்லாஞ் செய்தருளினார்.

அநந்தரம் யமுனைத்துறைவரும் மஹாபாஷ்யபட்டருடனே ஶாஸ்த்ராப்யாஸம் பண்ணுகிறகாலத்திலே, அந்த ராஜ்யத்திலே, ராஜ புரோஹிதனாய்ப் பெரிய வித்வானான ஆக்கியாழ்வானுக்கு அந்தத் தேஶத்தில் வித்வான்களெல்லாரும் தஶபந்தமிறுத்துப்போருகையாலே, மஹாபாஷ்யபட்டர்பக்கலிலும் தஶபந்தத்துக் குத்தாவுவர, அத்தைப்பார்த்து மஹாபாஷ்யபட்டரும் முசித்துக்கிடக்க, யமுனைத்துறைவர் அவரை 'நீர் இப்படி முசித்துக்கிடக்கிறதென்?' என்றுகேட்க, அவரும் இச் செய்தியை இவருக்குச் சொல்ல, அத்தைக்கேட்டருளி இவரும் வந்த தரவைக் கிழித்துவிட, ஆக்கியாழ்வானும் இத்தைக்கேட்டு 'வெறுங்கவியோ? தந்த்ரபாரகனோ?' என்று கேட்டு வரவிட, யமுனைத்துறைவரும் (க) "நவயக்கவயஸ்துகேவலம் நவயம் கேவலதந்த்ரபாரகா: - அபிதுப்ரதிவாதி வாரண ப்ரகடாடோப விபாடநக்ஷமா:" என்று

---

(க) ந வயங்கவயஸ்து கேவலம் ந வயங்கேவலதந்த்ரபாரகா: । அபிது ப்ரதிவாதிவாரணப்ரகடாடோபவிபாடநக்ஷமா: ॥

இஶ்லோகத்தை யருளிச்செய்து எழுதிப்போகவிட்டருள, ஆக்கியாழ்வானும் அத்தை வாசித்து 'இப்படி ஒருவித்வானுண்டோ?' என்று ஆஶ்சர்யப்பட்டு இத்தை ராஜாவுக்கு அறிவிக்க, ராஜாவும் யமுனைத்துறைவரை 'சடக்கென வருவது' என்று ஸ்வஶாஸநம் வரவிட, அந்த ராஜஶாஸநத்தையுங் கிழித்துவிட, இச்செய்தியை ராஜாவும் கேட்டு 'ஆகில், அவர் ஸாமாந்யரல்லராயிருந்தது!' என்று இவருக்குத் தண்டிகையும் சிவிகையாரையும் கொடுத்துவரவிட, இவரும் அந்தக்கநக தண்டிகையிலே ராஜாஸ்தாநத்தேற வெழுந்தருளி, (க) "ஆஶைலாதத்ரிகந்யாசரணகிஸலய ந்யாஸதந்யோபகண்டாத் ஆரக்ஷோநீதஸீதாமுககமலஸமுல்லாஸஹேதோஶ்சஸேதோ: ஆசப்ராச்யப்ரதீச்ய க்ஷிதிதரயுகளாதர்க்கசந்த்ராவதம்ஸாந் மீமாம்ஸாஶாஸ்த்ரயுக்ம‡ஶ்ரம விமலமநாம்ருக்யதாம்மாத்ருஶோऽந்ய:" என்கிற ஶ்லோகத்தைஎழுதிப் போகவிட்டருள; ஆக்கியாழ்வானும் இத்தைக்கண்டு மிகவும்குபிதனாய் 'இவருடனே நான் தர்க்கிக்கக்கடவேன்' என்ன, ராஜாவும் யமுனைத்துறைவரைப் பார்த்து 'இவருடனே தர்க்கியும்' என்ன யமுனைத்துறைவரும் ராஜாவைக்குறித்து 'நானும் இவரும் தர்க்கித்தால் வெற்றியுந் தோல்வியும் உங்களுக்குத் தெரியாது ; நாங்களிருவரும் தோற்றோமென்றுஞ் சொல்லுவதில்லை ; ஆகையாலே, ஜயாபஜயம் அறியும்படிக்கு மத்யஸ்தரான வித்வான்களை அழைப்பிக்கவேணும்' என்ன, ராஜாவும் 'அப்படியேயாம்' என்று வித்வான்களை அழைப்பித்துக் கொண்டு வித்யாஸ்தாந மண்டபத்திலே தன்மஹிஷியையுங் கூட்டிக் கொண்டிருக்க, ராஜமஹிஷியும் ராஜாவுடன் யமுனைத்துறைவரைக் காட்டி 'இவர் தோலார்: தோற்றாராகில், நான் நாய்க்கெரித்திடக் கடவேன்' என்ன, ராஜாவும் தன்மஹிஷியுடன் 'ஆக்கியாழ்வான்

---

(க) ஆஶைலாதத்ரிகந்யாசரணகிஸலய ந்யாஸதந்யோபகண்டாத் ஆரக்ஷோநீதஸீதாமுககமலஸமுல்லாஸஹேதோஶ்ச ஸேதோ: । ஆசப்ராச்யப்ரதீச்யக்ஷிதிதரயுகளாதர்க்கசந்த்ராவதம்ஸாந் மீமாம்ஸாஶாஸ்த்ரயுக்மஶ்ரமவிமலமநா ம்ருக்யதாம் மாத்ருஶோऽந்ய: ॥

‡ 'ஶ்ரமமுதித' என்றும், 'ஶ்ரமப்ருதித' என்றும் பாடாந்தரங்கள்.



தோற்றானாகில் இவர்க்கு அர்த்தராஜ்யந் தரக்கடவேன்' என்ன, அவ்வளவிலே ஆக்கியாழ்வானும் யமுனைத்துறைவரைப் பார்த்து 'லௌகிகங்களிலே நீர் அன்றென்றத்தை நான் ஆமென்னக்கடவேன் ; ஆமென்றத்தை அன்றென்னக்கடவேன்: வென்றவன் தோற்றவன் தலையிலே தாடநம்பண்ணக்கடவன்' என்ன, யமுனைத்துறைவரும் அவனைப்பார்த்து "த்வந்மாதா ந வந்த்யா, ராஜா ஸார்வபௌம:, ராஜபத்நீ பதிவ்ரதா" என்று இப்படி லௌகிகத்திலே மூன்று வார்த்தை அருளிச்செய்ய, ஆக்கியாழ்வானும் நிருத்தரனாயிருந்தான் ; பின்பு ஶாஸ்த்ரத்திலே புகுந்தவாறே †('உத்தமம் மத்யமம் அதமம் என்று மூன்று ; இதில் மூன்றுவார்த்தையிலே யாதல், ஐந்துவார்த்தையிலே யாதல், ஏழுவார்த்தையிலேயாதல் ஜயித்தாயாகில், உன்னது ஜயம்' என்று யமுனைத்துறைவர் ப்ரதிஜ்ஞைபண்ணியருள, அவனும் மூன்று வார்த்தையிலும், ஐந்துவார்த்தையிலும், ஏழுவார்த்தையிலும்) அதிலும் முழுக்கத்தோற்றான்: 'வென்றவன் தோற்றவன்தலையிலே தாடநம் பண்ணக்கடவனென்று முன்பே ப்ரதிஜ்ஞைபண்ணின அதுக்கு, 'நீ ராஜபுரோஹிதனுமாய் வயோவ்ருத்தனு மாகையாலே நான் அது செய்யேன்' என்று யமுனைத்துறைவர் அருளிச்செய்ய, இத்தைக் கேட்டிருந்த வித்வான்களெல்லாரும் ஸந்தோஷித்து, இவரை ப்ரஹ்மரதம் பண்ணிக்கொண்டுவர, ராஜமஹிஷியும், 'என்னை ஆளவந்தீரோ!' என்று யமுனைத்துறைவரை எடுத்தணைத்துக்கொண்டு தன்பர்த்தாவுடன் * மணியாடமாளிகைக்குள்ளே புகுந்தாள் ; ராஜாவும் இவர்க்குத் தன் அர்த்தராஜ்யமுங் கொடுத்து இவர் தேவிகளையும் அழைப்பிக்க ஆளவந்தாரும் பத்நீஸஹிதராய்க்கொண்டு ராஜபோகத்திலே ஸுகமே எழுந்தருளியிருந்தார்.

அநந்தரம், மணக்கால்நம்பியும் இதுகேட்டுக் கொண்டைக்கோல் கொண்டு கூத்தாடியருளி ஆளவந்தாரைக் காணவேணுமென்று பேராசையோடே அங்கேறவெழுந்தருள, அவ்விடம் ராஜபதமாய்க் கட்டுங்காவலுமாயிருக்கையாலே ஆளவந்தாரைக் காணப்போகாமல் திருமடைப்பள்ளியிலே புகுந்து அவருக்குத் திருப்போனகம் சமைக்கிற ஸ்ரீவைஷ்ணவர்களைப் பார்த்து 'ஆளவந்தார் விரும்பியமுதுசெய்யுங் கறியமுது என்?' என்றுகேட்டருள, அவர்களும் 'தூதுவேளை' என்று

சொல்ல, நம்பியும் அன்றுமுதல் ஆறுமாசம் மடைப்பள்ளிக்குத் தூதுளையிட்டு நடத்தியருளினார். இப்படி நடத்தினவிடத்திலும் ஒரு விசாரமற்றிருக்கையாலே இவரும் மூசித்து நாலுநாள் தவிர்ந்திருக்க, ஆளவந்தாரும் அமுதுசெய்யும்போது 'நாலுநாளாகத் தூதுளை யின்றிக்கே யிருப்பானென்?' என்று தளிகைக்குச் செய்கிறவர்களைக் கேட்டருள, அவர்களும் 'ஒருவ்ருத்தப்ராஹ்மணர் ஆறுமாஸமுண்டு நாடோறும் நடத்திப்போருகிறது; நாலுமூன்று நாளுண்டு தவிர்ந்தது' என்று விண்ணப்பஞ்செய்ய, ஆளவந்தாரும் கேட்டருளி விஸ்மயப்பட்டு 'இனி அவர் வந்தவாறே நமக்கு அறிவியுங்கோள்' என்று அருளிச்செய்ய, மற்றைநாள் நம்பியும் 'இன்னமும் பார்ப்போம்' என்று தூதுளைகொண்டு எழுந்தருளினவாறே அவர்களும் ஆளவந்தாருக்கு அறிவிக்க, அவரும் 'அழையும்' என்று அருளப்பாடிட்டவாறே இவரையெழுந்தருளப்பண்ணுவித்துக் கொண்டுபோய் அவர்களும் ஆளவந்தாருக்குக் காண்பிக்க, ஆளவந்தாரும் இவரைக்கண்டு ப்ரத்யுத்தாநாபிவாதநபூர்வகமாக ஆஸநமிட்டு 'நீர் இத்தனைநாளும் நமக்கு இந்தத் தூதுளை கொண்டுவந்து இடுகிறது எதுக்காக? உமக்கு அர்த்தம் வேணுமோ? க்ஷேத்ரம் வேணுமோ?' என்று மணக்கால் நம்பியைக் கேட்டருள, நம்பியும் 'நமக்கு இவையொன்றும் வேண்டா; உங்கள் பூர்வர்கள் தேடின அர்த்த மிருக்கிறது; அந்நிதி கிடக்கிற விடமும் நான் அறிவேன்; அத்தை நீர் கைக்கொண்டருளுகைக்கு நித்யமாக நாம் தேவரீர்பக்கல் வந்துபோம்படி வாசலில் தகையாதிருக்க அப்பணையிடவேணும்' என்று அருளிச் செய்ய, ஆளவந்தாரும் அப்படியே வாசல் தகையாதபடி கட்டளையிட, நம்பியும் அன்றுமுதல் * கீதையின் செம்மைப் பொருள் தெரியும்படி பதினெட்டு அத்யாயமும் அருளிச்செய்ய, ஆளவந்தாரும் ஆரணஸாரமான கீதையின் உட்பொருள் கேட்டருளி ஒருநாளைக் கொருநாள் ஆர்த்திபிறந்து 'அவ்வஸ்துவை ஸாக்ஷாத்கரிக்கலாம் உபாயமில்லையோ?' என்று நம்பியைக் கேட்க, நம்பியும் 'ஸாக்ஷாத்கரிக்கலா முபாய முண்டு' என்று ஏகாந்தத்திலே எழுந்தருளியிருந்து * மெய்ம்மைப் பெருவார்த்தையான சரமஶ்லோகார்த்தத்தை ப்ரஸாதித்தருள, அத்தைக்கேட்ட ஆளவந்தாருக்கு நெல்லுக்குப் பால் கட்டக்கட்டத் தலைவணங்குமாபோலே சரணாகதி நெஞ்சிலே பட்டபட ஆநுகூல்யம் மிகுந்து ஶரண்ய விஷயப்ராவண்



யாதிஶயத்தாலே இஸ்ஸம்ஸாரத்தில் அருசிபிறந்தபடி கண்டு அவரைக் கூட்டிக்கொண்டு (க) "நசஜ்ஞாநஸ்யஸம்ஸாரஃ நசைவ யமகோசரஃ-தஸ்மாத் ரங்கம் மஹாபுண்யம் கோநஸேவேத புத்திமாந்" என்கிறபடியே ஜ்ஞாநவர்த்தகமுமாய் *நமன்றமரா லாராயப்பட்டறியாததுமாய்ப் புண்யவர்த்தகமுமான திருவரங்கன் திருப்பதியிலே அழைத்துக் கொண்டுபோய் பெரிய பெருமாளைத் திருவடிதொழப்பண்ணி (உ) "நிதிரவ்யயஃ" என்கிறபடியே 'உங்கள் பூர்வர்கள் தேடிவைத்த மஹாநிதி இதுகாணும்' என்று காட்ட, ஆளவந்தாரும் பெரிய பெருமாளுடைய * முடிவில்ல தோரெழில் நீலமேனியை ஸேவித்து "பழுதே பலபகலும் போயினவென் றஞ்சி, யழுதேனரவணைமேற் கண்டு தொழுதேன்," என்கிறபடியே கீழ் இழந்த நாளைக்குக் கூப்பிட்டுக் கண்ணுங் கண்ணீருமாய் அரங்கத்தம்மானை அநுபவித்து, "பிறந்தார் பிறந்தெய்தும் பேரின்பமெல்லாந் துறந்தார் தொழுதாரத்தோள்" என்றும் (ந) "க்ஷேத்ராணி மித்ராணி தநாநி நாதபுத்ராஶ்சதாராஃபஶவோக்ருஹாணி-த்வத்பாதபத்மப்ரவணாத்மவ்ருத்தேர் பவந்திஸர்வேப்ரதிகூலரூபாஃ" என்றுஞ்சொல்லுகிறப்ரதிகூலங்களையெல்லாம் பரித்யஜித்து, (ச) ", ஸர்வஸங்காந்பரித்யஜ்ய" என்கிறபடியே ஸர்வஸங்கபரித்யாகபூர்வகமாக ஆஶ்ரமப்ராப்தி பண்ணியருளி, 'அண்டர்கோனணியரங்கனென்ன திமுதினைக், கண்டகண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்கிறபடியே வேறொருவிஷயம் அறியாதே (ரு) "பரமாத்மநி யோரக்தோ விரக்தோऽபரமாத்மநி" என்கிறபடியே அபரமாத்மநி வைராக்யமுடையராய்ப் பரமாத்மா ஸக்தசித்த

---

(க) 𑌨 𑌚𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 𑌸𑌂𑌸𑌾𑌰𑌃 𑌨𑍈𑌵 𑌯𑌮𑌗𑍋𑌚𑌰𑌃। 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌰𑌙𑍍𑌗𑌂 𑌮𑌹𑌾𑌪𑍁𑌣𑍍𑌯𑌂 𑌕𑍋 𑌨 𑌸𑍇𑌵𑍇𑌤 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌨𑍍 ॥"

(உ) 𑌨𑌿𑌧𑌿𑌰𑌵𑍍𑌯𑌯𑌃

(ந) 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌧𑌨𑌾𑌨𑌿 𑌨𑌾𑌥 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌶𑍍𑌚 𑌦𑌾𑌰𑌾𑌃 𑌪𑌶𑌵𑍋 𑌗𑍃𑌹𑌾𑌣𑌿 𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑌾𑌦𑌪𑌦𑍍𑌮𑌪𑍍𑌰𑌵𑌣𑌾𑌤𑍍𑌮𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌰𑍍𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑍂𑌲𑌰𑍂𑌪𑌾𑌃 ॥

(ச) 𑌸𑌰𑍍𑌵𑌸𑌙𑍍𑌗𑌾𑌨𑍍 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 (ரு) 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌯𑍋 𑌰𑌕𑍍𑌤𑍋 𑌵𑌿𑌰𑌕𑍍𑌤𑍋𑌽𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 ॥

ராய்ப் பெரியபெருமாளை ஸேவித்துக்கொண்டு எழுந்தருளி யிருக்கிற காலத்திலே, பெரியநம்பி திருக்கோட்டியூர்நம்பி பெரிய திருமலைநம்பி மாறனேரிநம்பி திருக்கச்சி நம்பி ஆளவந்தாராழ்வான் திருமாலையாண்டான் வானமாமலையாண்டான் தெய்வவாரியாண்டான் ஈசனுண்டான் சீயராண்டான் திருக்கூரப்பன் திருமோகூரப்பன் திருமோகூர்நின்றான் தெய்வப்பெருமாள் வகுளாபரணஸோமயாஜியார் திருக்குருகூர்தாஸர் திருமாலிருஞ்சோலைதாஸர் வடமதுரைப்பிறந்தான் ஆட்கொண்டியம்மங்கி என்று இவ்விருபது முதலிகளும் ஆளவந்தார் ஸ்ரீபாதத்திலே ஆஶ்ரயித்தார்கள்.

இவர்களெல்லாரும் வித்வான்களுமாய்த் தர்ஶநப்ரவர்த்தகருமாயிருக்கிறகாலத்திலே, மணக்கால் நம்பி ஆளவந்தாரைப்பார்த்து 'இன்னமொரு ரஹஸ்ய விஶேஷம் குருகைகாவலப்பன் பக்கலிலேயுண்டு; அங்கேபோய்க் கேளும்' என்று அருளிச் செய்ய, ஆளவந்தாரும் 'அதுவென்? தேவரீருக்கு அந்த ரஹஸ்ய விஶேஷம் இன்றிக்கே போவானென்?' என்ன, நம்பியும் 'உங்கள் திருப் பாட்டனாரான நாதமுனிகள், எங்களாசார்யரான உய்யக்கொண்டாருக்கு அந்த ரஹஸ்ய விஶேஷத்தை அருளிச்செய்யத் தேட, அவரும் 'பிணங் கிடக்க மணம் புணரலாமோ? ஶரீராவஸாநதஶையிலே அப்யஸிக்கவமையும்' என்று விண்ணப்பஞ் செய்தார்; ஆகையாலே, அந்த ரஹஸ்ய விஶேஷம் இல்லையாய்த்து' என்ன, 'ஆகில், அங்கே கேட்போம்' என்று கோயிலிலே எழுந்தருளியிருந்து ஆளவந்தார் தர்ஶநம்நிர்வஹிக்க,

கண்டு செய்ததுவாய்த்து ஸ்ரீமானாய் ஹர்ஷப்ரகர்ஷத்துடனே வாழ்கிற காலத்திலே மணக்கால்நம்பி ஸ்ரீபாதத்திலே ஆஶ்ரயித்த முதலிகள்:—ஆளவந்தார், தெய்வத்துக்கரசுநம்பி, கோமடத்துத் திருவிண்ணகரப்பன், † சிறுப்புள்ளூருடைய பிள்ளை, வங்கிப்புரத்தாச்சி என்று இவர்களைவர்.

இவர்களுக்கு நம்பி தர்ஶநதாத்பர்ய விஶேஷங்களை அருளிச் செய்துகொண்டு சிலகாலம் எழுந்தருளியிருந்து, தம் அந்திமதஶையிலே ஆளவந்தாரைப் பார்த்து நாதமுனிகளோடு உபய ஸம்பந்தமுடையவரான நீர் அவர் திருவடிகளை உமக்குப்ராப்யமும் ப்ராபகமுமென்று விஶ்வஸித்து, உம்மைப்போலே ஒரு தர்ஶந ப்ரவர்த்

† 'சிறப்புள்ளூடையபிள்ளை' என்று பிரதிபேதம்.



த்தகரையும் உண்டாக்கியருளிக் கோயிலை விடாதேயிரும்' என்று அருளிச்செய்து உய்யக்கொண்டார் திருவடிகளை த்யாநித்துக்கொண்டு திருநாட்டுக்கு எழுந்தருளினார். இத்தால் ஆசார்ய பரமாசார்யர்களுடைய திவ்யாஜ்ஞாபரிபாலநம்பண்ணி உபயருடைய உத்திஶித்தபடி கண்டு உகந்தார் இவர் ஒருவருமேயிறே. மணக்கால்நம்பி திருநாட்டுக்கெழுந்தருளினபடி கண்டு ஆளவந்தாருள்ளிட்ட முதலிகளெல்லோரும் மிகவும் அவஸந்நராய் ஶோகித்துத்தங்களிலே தரித்துநிற்க, ஆளவந்தாரும் அவரை ப்ரஹ்மமேதத்தாலே ஸம்ஸ்கரித்துப் பள்ளிபடுத்துச் செய்யவேண்டுங் க்ருத்யமெல்லாஞ் செய்தருளினார்.

மணக்கால்நம்பி திருநக்ஷத்ரம், மாசியில் மகம்.

அவர் தனியன் - (க) "அயத்நதோயாமுநமாத்மதாஸ மளர்க்கபத்ரார்ப்பணநிஷ்க்ரயேண - ய: க்ரீதவாநாஸ்திதயௌவராஜ்யம் நமாமிதம் ராமமமேய ஸத்வம்."

அநந்தரம் ஆளவந்தாரும் முதலிகளும், அப்பன் யோகத்திலே எழுந்தருளியிருக்குமிடந்தேற வெழுந்தருளி 'இவரை ஸமாதிபங்கம் பண்ணவொண்ணாது' என்று தும்முதல் இருமுதல் அடியோசைப்படுத்துதல் செய்யாதே மௌனத்தோடே சுவர்ப்புறத்தே பின்னே தெரியாதே நிற்க, அப்பனும் யோகத்திலே எழுந்தருளி யிருக்கிறவர், பின்னே திரும்பிப் பார்த்தருளி 'இங்கே சொட்டைக்குலத்தவர் ஆரேனும் வந்தாருண்டோ?' என்று கேட்டருள, ஆளவந்தாரும் 'அடியேன் யமுனைத்துறைவன் விடைகொண்டிருக்கிறேன்' என்று எழுந்திருந்துவந்து அப்பன் ஸ்ரீபாதத்திலே ஸேவித்திருந்து 'அடியோங்கள் சுவர்ப்புறத்தே பின்னே தெரியாதபடி நிற்கத் தேவரீர் இங்ஙன் அருளிச்செய்கைக்கு ஹேதுவென்?' என்று கேட்டருள, அப்பன் அருளிச்செய்தபடி:—'அடியேனும் தானுமாய் அநுபவியாநின்றால் பெரிய பிராட்டியார் திருமுலைத் தடத்தாலே நெருக்கி யணைத்தாலும் அவள்முகங்கூடப் பாராத ஸர்வேஶ்வரன், என் தோள்களை யமுக்கி நாலுமூன்றுதரம் சுவர்ப்புறத்து எட்டிப்பார்த்தான்; இப்படி அவன்

(க) அயத்நதோ யாமுநமாத்மதாஸமலர்க்கபத்ரார்ப்பணநிஷ்க்ரயேண । ய: க்ரீதவாநாஸ்தி²தயௌவராஜ்யம் நமாமி தம் ராமமமேயஸத்த்வம் ॥

பார்க்கும்போது சொட்டைக்குலத்திலுள்ளாரேனும் வந்தாருண்டாகவேணுமென்று இருந்தேன் காணும்' என்று அருளிச்செய்தார். ஆளவந்தாரும் இதைக்கேட்டுப் போரவித்தராயருளி 'அடியேனுக்கு இந்த யோகரஹஸ்யத்தை அருளிச்செய்ய வேணும்' என்று அப்பன் ஸ்ரீபாதத்திலே தண்டனிட்டுக்கொண்டு விழுந்து கிடக்க, அப்பனும் உகந்து 'அப்படியே செய்கிறோம்; என்றுமுடிபிடித்தெடுத்து நம்முடைய ஶரீராவஸாநத்திலே சொல்லுகிறோம்; வருகிற புஷ்யமாஸத்திலே குருபுஷ்யயோகத்திலே அபிஜிந்முஹூர்த்தத்திலே நமக்கு ஶரீராவஸாநமாயிருக்கும்; அதுக்கு முன்னே எழுந்தருளவேணும்' என்று திருமுகமெழுதிக்கொடுத்தருள, ஆளவந்தாரும் திருமுகத்தைக்கொண்டு கோயிலேற எழுந்தருளினார்.

பின்பு நம்பெருமாள் திருவத்யயநத் திருநாளிலே, திருவத்யயநங்கேட்டருளும்போது ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையர் "கெடுமிடர்" என்கிற திருவாய்மொழியை அபிநயித்துப் பாடியருளுகிறவர், ஆளவந்தார் திருமுகமண்டலத்தைப் பார்த்தருளி "நடமினோ நமர்களுள்ளீர் நாமுமக் கறியச்சொன்னோம்" என்று பலகாலும் பாடியருள ஆளவந்தாரும் இத்தைக் கேட்டருளி 'ஆழ்வாருடைய தமர்களிலே, அந்தர்ப்பூதமாம்போது திருவநந்தபுரம்புக்கு ஸேவிக்கவேண்டியிருந்தது' என்று, அப்போதே திருவோலக்கத்தினின்றும் எழுந்திருந்து பெரிய பெருமாளுக்குத் தண்டன் ஸமர்ப்பித்து அவராநுமதிகொண்டு புறப்பட்டருளி, மடத்துக்குக்காவலாகத் தெய்வவாரியாண்டானை வைத்துத் திருவநந்தபுரத்துக்கு எழுந்தருளிப் * படமுடையரவிற் பள்ளிபயின்ற அநந்தபுரத்தம்மானையும் த்வாரத்ரயேண திருவடி தொழுது அங்கே எழுந்தருளியிருந்தவளவிலே, ஸந்நிதிமுதலிகளைப் பார்த்து 'குருகைகாவலப்பன் நமக்கிட்டுத் தந்த திருமுகத்தைக் கொண்டு வாருங்கோள்' என்று அருளிச்செய்ய, முதலிகளும் கொண்டுவந்து ஸமர்ப்பிக்க, பார்த்தருளி, மாஸமும்திவஸமும் அன்றாயிருந்தபடியாலே 'ஒரு புஷ்பகவிமாநம் பெற்றிலோமே!' என்றுபோர ஶோகார்த்தராய் மீண்டு எழுந்தருளாநிற்க;

தெய்வவாரியாண்டானுக்கு ஆளவந்தார் விஶ்லேஷம் பொறாமல் திருமேனி ஶோஷிக்க, இங்கிருந்த முதலிகள் இவர்க்கு வைத்யர்கள் பலரையும் அழைத்துப் பார்ப்பித்தவிடத்தில் அவர்கள் 'இவர்க்கு விஷயஸ்ப்ருஹையாக்கும் இப்படியாய்த்து' என்ன, 'உமக்கு எந்தவிஷயத்திலே ஸ்ப்ருஹை இருக்கிறது?" என்று முதலிகள் கேட்க அவரும் அடியேனுக்கு ஆளவந்தார்விஷயமொழிய வேறொருவிஷயமுண்டோ?' என்று அருளிச்செய்ய, 'ஆகில், இவரை அங்கேறக் கொண்டுபோங்கோள்' என்று வைத்தியர்கள்பலருஞ் சொல்ல, முதலிகளும் இவரைக் கட்டணத்திலே கொண்டுபோக, ஒருநாளைக்கொருநாள் திருமேனியில் வாட்டந்தீர்ந்து பின்பு நடக்க வல்லவராய் வருகிறவளவிலே, ஆளவந்தாரும் திருவநந்தபுரத்தினின்று மீண்டு எழுந்தருளுகிறவழியிலே திருவநந்தபுரத்துக்கு அரைக்காதவழியிலே கரைமனையாற்றங்கரையிலே விட்டு எழுந்தருளியிருக்க, தெய்வவாரியாண்டானும் ஆளவந்தாரை ஸேவித்து அவர் ஸ்ரீபாதத்திலே தண்டன் ஸமர்ப்பித்துக் கொண்டு விழுந்துகிடக்க ஆளவந்தாரும் இவர் எழுந்திருக்கமாட்டாமற் கிடக்கிறபடியைக்கண்டு 'பெருமாள் ஸ்வதந்த்ரருமாய் ஶேஷருமாயிருக்கையாலே ஸ்ரீபரதாழ்வான் வைத்தவிடத்தே யிருந்தார்; அடியேன் ஸ்வதந்த்ரனுமன்றிக்கே ஶேஷனுமன்றிக்கே யிருக்கையாலேயிறே நீர் வைத்த விடத்தில் இராமல் வந்தது' என்று அருளிச்செய்ய, இத்தைக்கேட்ட தெய்வவாரியாண்டானும் 'வந்து ஸ்வரூபஹாநிபட்டேன்!' என்று மிகவும் ஸத்தை குலைந்துகிடக்க, இவர்எழுந்திராதபடி கண்டு 'என்னை ஸ்வதந்த்ரனும் ஶேஷனுமாக்கினொழிய எழுந்திரோமென்று கிடக்கிறீரோ?' என்று ஆளவந்தார் அருளிச்செய்ய, தெய்வவாரியாண்டானும் இவ் வார்த்தையைக்கேட்டு 'வந்து ஸ்வரூபஹாநிபட்டவோபாதி இதுவும் ஒரு ஸ்வரூபஹாநியாயிற்றோ!' என்று பரபரவென்று எழுந்திருந்து நிற்க, ஸ்ரீபாதத்து முதலிகளும் (க) "ஜலாந்மத்ஸ்யாவிவோத்த்ருதௌ" என்ற இளையபெருமாள் நிலை இவர்க்கு உண்டாய்த்து, என்ன, ஆளவந்தாரும் 'ஈதொரு அதிகார விஶேஷம் இருந்தபடி என்தான்!, என்று போரவுகந்தருளி மிகவும் மெலிந்தீரே!, என்று முதுகு தடவி அநிக்ருபார்த்ரசித்தராய்" 'திருவநந்தபுரத்துத் திருக்கோபுரம் அதோ தோன்றுகிறது; அங்கே போய் * ஆயிரம்பைந்தலை யநந்தசயநனை ஸேவித்துவாரும், என்று அருளிச்செய்ய, இருவரும் 'என்னுடைய திருவநந்தபுரம் எதிரே வந்தது என்று ஸ்வாசார்யரான ஆளவந்தாரைக் காட்டியாள ஆளவந்

(க) ஜலாந்மத்ஸ்யாவிவோத்த்ருதௌ

தாரும் (க) "யேநைவகுருணாயஸ்ய ந்யாஸவித்யாப்ரதீயதே-தஸ்ய வைகுண்டதுக்தாப்தி த்வாரகாஸ்ஸர்வஏவஸ:" என்றும், "வில்லார் மணிகொழிக்கும் வேங்கடப்பொற்குன்றமுதல்'செல்லார் பொழில்சூழ் திருப்பதிக ளெல்லாம், மருளாமிருளோட மத்தகத்துத்தந்தா' ளருளாலே வைத்தவவர்" என்றும், "நின்றவண்கீர்த்தியும்" என்று தொடங்கி உன்னிணைமலர்த்தாள் என்றனக்குமது" என்றும் சொல்லுகிற படியே விசேஷாதிகாரியான தெய்வவாரியாண்டானைக் கூட்டிக்கொண்டுமீண்டு கோயிலேற வெழுந்தருளிப் பெரியபெருமாளையும் ஸேவித்துக்கொண்டு (அங்கே தாமும் ஸ்ரீபாதத்து முதலிகளுமாக விருந்து தர்சநம் நிர்வஹித்தருளுகிறபோது) 'இனிமேல் தர்சநப்ரவர்த்தகராவார் ஆர்?' என்று விசாரமுண்டாய் ஒருவரையுங்காணாதே முசித்துச் சிந்தித்திருக்கிறகாலத்திலே:—

## இளையாழ்வார் வைபவம்.

ஆளவந்தார் ஸ்ரீபாதத்தில் ஆஸ்ரயித்த முதலிகளில் பெரியதிருமலைநம்பி "வேங்கடத்தைப் பதியாகவாழ்வீர்காள்" என்கிறபடியேதிருவேங்கடமுடையானை* அடிக்கீழமர்ந்து புகுந்துஸேவித்துக் கொண்டு எழுந்தருளியிரா நிற்க. அவருடன் பிறந்தபெண்பிள்ளைகளாய் ஸ்ரீபூமிப்பிராட்டியாரென்றும் பெரியபிராட்டியாரென்றும்பெயரையுடைய இருவரிலே,மூத்த ஸ்ரீபூமிப்பிராட்டியார் ஸ்ரீபெரும்பூதூரில் ஆஸுரி கேசவப் பெருமாள் என்கிற ஸர்வக்ரதுதீக்ஷிதர்க்கு வாழ்க்கைப்பட்டாள்; இளைய ஸ்ரீ பெரியபிராட்டியார் மழலைமங்கலத்தில் வட்டமணிக் குலத்திலே கமலநயநபட்டரைத் திருமணம் புணர்ந்தாள். அவர்களும் தந்தம் புக்ககங்களிலே வாழுங்காலத்திலே,— (உ) "அநந்த:ப்ரதமம்ரூபம் லக்ஷ்மணஸ்சததப்பர: - பலபத்ரஸ்த்ருதீயஸ்துகலௌகஸ்சித் பவிஷ்யதி" என்கிற வசநத்தின்படியே திருவநந்தாழ்வானும், கலியுகத்திலே

(க) 𑌯𑍇𑌨𑍈𑌵𑌗𑍁𑌰𑍁𑌣𑌾𑌯𑌸𑍍𑌯𑌨𑍍𑌯𑌾𑌸𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑌦𑍀𑌯𑌤𑍇 ।
𑌤𑌸𑍍𑌯𑌵𑍈𑌕𑍁𑌣𑍍𑌠𑌦𑍁𑌗𑍍𑌧𑌾𑌬𑍍𑌧𑌿𑌦𑍍𑌵𑌾𑌰𑌕𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌏𑌵𑌸𑌃 ॥

(க) 𑌅𑌨𑌨𑍍𑌤𑌃𑌪𑍍𑌰𑌥𑌮𑌂𑌰𑍂𑌪𑌂 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌶𑍍𑌚𑌤𑌤𑌃𑌪𑌰𑌃 । 𑌬𑌲𑌭𑌦𑍍𑌰𑌸𑍍𑌤𑍃𑌤𑍀𑌯𑌸𑍍𑌤𑍁 𑌕𑌲𑍌𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑍍 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥



அகிலாத்மோஜ் ஜீவநார்த்தமாகத் தம்திருவவதாரத்துக்கு இடம் பார்த்து ராமதிவாகராச்யுதபாநுக்கள் கௌஸல்யா தேவகீ தேவிகளுடைய கர்ப்பங்களை விரும்பினாப்போலே ராமாநுஜதிவாகராய் ஸ்ரீ பெரும்பூதூரிலே ஸ்ரீ பூமிப்பிராட்டியார் கர்ப்பத்தை ப்ராபித்தருளி, (க) "ஶ்ருதிர்நஷ்டாஸ்ம்ருதிர்லுப்தா ப்ராயேணபதிதாத்விஜா:- அங்காநிசவிஶீர்ணாநி ஹாவ்ருத்தோவர்த்ததேகலி:" என்கிறபடியே கலி ஸாம்ராஜ்யம் பண்ணுகிற *இருள்தருமா ஞாலத்திலே "கலியுங் கெடுங் கண்டுகொண்மின்" என்கிறபடியே *கலியிருள்நீங்கிப் *பெரிய கிதயுகம்பற்றிப் பேரின்பவெள்ளம் பெருகும்படி "தீர்லப்தா" என்கிற கணக்கின்படியே சகவர்ஷம் தொள்ளாயிரத்து முப்பத்தொன்பது சென்ற வர்த்தமாந பிங்களஸம்வத்ஸரத்தில் ஸ்ரீமத்தான சைத்ர மாஸத்தில் ஶுக்லபக்ஷத்தில் பஞ்சமி குருவாஸரஸஹிதமான திருவாதிரை நக்ஷத்ரத்திலே ஶுபமுஹூர்த்தத்திலே * பாரெல்லாம் உய்யும்படி ப்ராதுர்ப்பவித்தருள, ஆஸுரிகேசவப்பெருமாள் இவர்க்கு ஜாதகர்மம் செய்தருளினார்.

இச்செய்தியைப் பெரிய திருமலைநம்பி கேட்டருளி, ஸ்ரீபெரும்பூதூரேறச் சென்று ஸர்வக்ரது கேசவஸோமயாஜியாரைக் கண்டு ஸத்கரித்து அவர் புத்ரனையும் * முகவொளிதிகழக் கடாக்ஷித்தருளி, 'இவன் ஸர்வலக்ஷணஸம்பந்நன்;ஸகலஶாஸ்த்ரங்களையும்அதிகரிப்பன்; ஆகையாலே, (உ) "லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:" என்கிற இளைய பெருமாள் திருநாமம் சாத்துகைக்குத் தகுதியாயிருந்தான்' என்று பன்னிரண்டாந்திவஸத்திலே (௩) "தக்ஷிணந்து புஜம் பூர்வம் சக்ரேணப்ரதபேச்சிரோ:- வாமம் ஸம்ப்ரதபேத்பஶ்சாத் ஶங்கே நைவ த்விஜோத்தம:" என்கிறபடியே இவர்க்கு நாமகரணத்திலே திருவிலச்சினை முன்னாக 'இளையாழ்வார்' என்று திருநாமஞ்சாத்தியருளிப்பின்பு அந்நப்ராஶநசௌளோபநயநாதிகளையும் தத்தத் காலங்களிலேஶாஸ்

(க) 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌰𑍍𑌨𑌷𑍍𑌟𑌾𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌰𑍍𑌲𑍁𑌪𑍍𑌤𑌾𑌪𑍍𑌰𑌾𑌯𑍇𑌣 𑌪𑌤𑌿𑌤𑌾𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌃 । 𑌅𑌙𑍍𑌗𑌾𑌨𑌿𑌚𑌵𑌿𑌶𑍀𑌰𑍍𑌣𑌾𑌨𑌿𑌹𑌾𑌵𑍃𑌦𑍍𑌧𑍋 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇𑌕𑌲𑌿𑌃 ॥

(உ) 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑍋𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌿𑌸𑌮𑍍𑌪𑌨𑍍𑌨𑌃

(௩) 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂𑌤𑍁 𑌭𑍁𑌜𑌂𑌪𑍂𑌰𑍍𑌵𑌂𑌚𑌕𑍍𑌰𑍇𑌣𑌪𑍍𑌰𑌤𑌪𑍇𑌚𑍍𑌛𑌿𑌰𑍋𑌃 । 𑌵𑌾𑌮𑌂𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌪𑍇𑌤𑍍𑌪𑌶𑍍𑌚𑌾𑌚𑍍𑌛𑌙𑍍𑌖𑍇𑌨𑍈𑌵𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 ॥

த்ரோக்தப்ராகாரத்திலே செய்விக்க, இளையாழ்வாரும் அங்கோபாங்கங்களோடே கூடப் பதக்ரமஸஹிதமாக வேதாத்யயநத்தையும் பண்ணிச் சதுர்த்தஶவித்பாபாரங்கதராய், ஷோடஶகலாபூர்ணனான சந்த்ரனைப் போலே ஷோடஶகர்மஸம்ஸ்க்ருதராய் ஷோடஶவார்ஷிகரானவாறே, ஸர்வோபகாரக்ஷமமான க்ருஹஸ்தாஶ்ரமத்தை அங்கீகரித்தருளி, பெருமாள் கோயிலுக் கருகான திருப்புட்குழியிலே யாதவப்ரகாசனென்பானொரு ஏகதண்டியாயி ஸந்யாஸி பூர்வபக்ஷ வேதாந்தம் வாசிப்பிக்கிறானென்று கேட்டருளி, அங்கே எழுந்தருளி, அவன் பக்கல் ஶ்ரோதாக்களோடே தாமும் ஸஹஶ்ரோதாவாய் வேதாந்தம் வாசித்தருளாநிற்க,

அவ்வளவிலே மழலை மங்கலத்துக் கமலநயநபட்டருக்கு ஒரு புத்ரன் அவர் பத்நி பெரியபிராட்டியாரிடத்திலே க்ரோதந ஸம்வத்ஸரத்தில் தைமாஸமும் பௌர்ணமியும் ஸோமவாரமுங்கூடின புநர்ப்பூச நக்ஷத்ரத்திலே அவதரித்தருள, ஜாதகர்மாநந்தரம் திருமலை நம்பியும் அங்கேற வெழுந்தருளி, கமலநயநபட்டரையுங் கண்டு ஸத்கரித்துப் பெரியபிராட்டியார் புத்ரனையும் தம் *தாமரைக்கண்களால் நோக்கி, ‘இவன் ஸதாத்மகுணங்களையுடையனாய், ஸர்வ வித்யைகளையும் அதிகரித்து வைதிகபக்ஷவானாம்’ என்று திருவுள்ளம் உகந்தருளி, கமலநயநபட்டரைக்கொண்டு ‘கோவிந்தன்’ என்று திருநாமஞ்சாத்துவித்தருளினார். இவரும் சௌளோபநயநாதிஸம்ஸ்காரவிஶிஷ்டராய் க்ருஹஸ்தாஶ்ரமத்தை ப்ராபித்தருளி ஸர்வஶாஸ்த்ரங்களையும் அப்யஸித்து, திருப்புட்குழியிலே யாதவப்ரகாசனிடத்திலே இளையாழ்வார் வாசிக்கிறாரென்று கேட்டுப் பேர ஆசையோடே அங்கே வந்து தாமும் வேதாந்தம் வாசிக்கத் தொடங்கினார்.

யாதவப்ரகாசனும், (க) ஸத்யம்ஜ்ஞாநமநந்தம்ப்ரஹ்ம” என்கிற ஶ்ருதிவாக்யத்துக்கு ‘கண்டத்வமுண்டத்வ பூர்ணஶ்ருங்கத்வங்கள் ஒரு கோவ்யக்தியிலே கடிக்கும்போதிறே ப்ரஹ்மத்துக்கு இந்த விஶேஷணம் கூடுவது’ என்று அபார்த்தப்ரதிபாதநம்பண்ண, இளையாழ்வார் அத்தை நிஷேதித்து ‘ஸத்யஶப்தத்தாலே க்ஷணிக வ்யாவ்ருத்தியையும், ஜ்ஞாநஶப்தத்தாலே அசித்வ்யாவ்ருத்தியையும், அநந்த

(க) 𑌸𑌤𑍍𑌯𑌂𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌨𑌨𑍍𑌤𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮



ஶப்தத்தாலே †பரிச்சிந்நவ்யாவ்ருத்தியையும் பண்ணி, சேதநாசேதநவிலக்ஷணமாய் நித்யமாயிருக்கும் ப்ரஹ்மம்’ என்ன, அவனும் ஹூங்காரம் பண்ணினான்.

பின்பு ஒருநாள், இளையாழ்வார், யாதவப்ரகாசனுக்கு அப்பஞ்ஜநத்தொழில் செய்யாநிற்க, அவ்வளவிலே (க) “தஸ்யயதாகப்யாஸம் புண்டரீக மேவமக்ஷிணீ” என்கிற ஶ்ருதிக்கு அவன் அநுசிதார்த்தஞ்சொல்ல, அதுகேட்டுஇவர்க்கு ஶோகமுண்டாய் அந்தஶோகாஶ்ரு அவன் தொடையிலே விழ, அது நெருப்புப்பட்டாற்போலே அவன் தொடையைச் சுட, அவனும் பதறி இவர்முகத்தைப்பார்த்து ‘உமக்குத்துக்கமாவானென் ?’ என்ன, இவரும், ‘கம்பிபதீதிகபி:’’என்று ஸூர்யனாய் (உ) “ஆஸஉபவேஶநே” என்று உபவேஶநமாய், ஸூர்யாஶ்ரயணத்தை யுடைத்தான கமலம்போலே என்று இத்யாதி யோஜனையிருக்க, அயதார்த்தங்கேட்டவாறே து:கமாயிற்று’ என்ன, யாதவப்ரகாசனும் அதுகேட்டுக்குபிதனாய் ‘நான்சொன்னபடிகேட்கில் வாசித்திரும்; இல்லாவிடில் விட்டுப்போம்’ என்ன; இவரும் அப்படியே *சிந்தைகலங்கித் தவிர்ந்திருக்க,

அவனும் ஏகாந்தத்திலே தன்னுடையஶிஷ்யர்களில் அநுகூலரை அழைத்து ‘நீங்கள் நான்சொன்ன அர்த்தத்தை ஸம்மதித்திருக்க இளையாழ்வான் ஒருவனுமே எதிர்த்தட்டாக வாதியா நின்றான்; இவனாலே நம்முடைய அத்வைதரீதி சிறுக்கும்; இவன்முடியும் விரகு என்?’ என்று கேட்க, அவர்களும் பலபடி படும்வகை சொல்ல, அவனும் ‘அவ்வோவகைகளுக்குப் பழிபாவங்களுண்டாம்; அவைவராமல் நினைத்தபடி கூடுகைக்கு மணிகர்ணிகையிலே ம்ருதியுண்டாக்குகையே என்னகவாயில் உள்ளது’ என்ன, அழகிதென்று ஸர்வரும் ஐகமத்யம்பண்ணிக்கொண்டு, துர்யோதநன் தர்மபுத்ரர் விஷயத்திலே ஜதுக்ருஹத்திலே விஶஸநம் எண்ணினாப்போலே அந்தரங்கித்து, இளையாழ்வாரை அழைத்து ‘நீரில்லாவிடில் எங்களுக்கு ஒருசாயலாயிருக்கிறது, கோபியாமல் க்ரந்தத்தை அவிச்சிந்நமாக நடத்தும்’ என்று நன்மையுரைத்து உள்ளிட்டுக்கொண்டு, ஒருநாள் கங்காயாத்

(க) 𑌤𑌸𑍍𑌯𑌯𑌥𑌾𑌕𑌪𑍍𑌯𑌾𑌸𑌂 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌮𑍇𑌵𑌮𑌕𑍍𑌷𑌿𑌣𑍀

(உ) 𑌆𑌸𑌉𑌪𑌵𑍇𑌶𑌨𑍇

† ‘சேதநவ்யாவ்ருத்தியையும்’ என்று பாடாந்தரம்.

ரையை உத்யோகித்துப் புறப்பட்டுப்போம்போது, நின்றநின்றவிடங்களிலே இளையாழ்வாரும் கோவிந்தபட்டரும் கூட்டரவுபடாதபடி பண்ணிக்கொண்டு ஹோத்ரகோடிமணிதஶிஷ்யர்கள் ஶுஶ்ரூஷிக்க வழி செல்லாநிற்க, விந்த்யப்ரதேசத்திலே ஒரு பள்ளக்கரையிலே ஜலஸ்பர்ஶார்த்தமாக இளையாழ்வாரும் கோவிந்தபட்டரும் கூடிநின்றவாறே, கோவிந்தபட்டரும் விஜநமான ஸமயம் அறிந்து இவர்களுடைய கங்கா யாத்ரா நிமித்தத்தை இளையாழ்வாருக்கு ஸூசிப்பித்து அகன்றுபோகச் சொல்லித் தாம் ஒருவரே போந்தார்.

இளையாழ்வாரும் வ்யாகுலப்பட்டு அவ்வழியைவிட்டுக் குறுக்கறுத்துப்போய் ஒருமாத்தடியிலே நின்று பார்க்க, அவ்விடம் *வெம்பியெரிகானகமாய் நிர்ஜலப்ரதேஶமுமாய் ஶுஷ்ககண்டகாவ்ருதமாய் "பொருந்தார்கைவேல் நுதிபோல் பரல்பாய மெல்லடிக்கள் குருதி சோர, விரும்பாதகான்விரும்பி வெயிலுறைப்ப வெம்பசிநோய்கூர" என்கிறபடியே *ஊன்று வெம்பரற்களையுடைத்தாய்த் தீக்ஷ்ண தாபகர ரவிகிரணங்களையுடைத்தான (க) "விந்த்யாடவீஷ்வZதோயாஸு" என்று சொல்லுகிற விந்த்யாடவியாயிருக்க, சிறந்த அக்காட்டிலே தனியே நின்று *ஆவாரார் துணையென்று *பக்கம்நோக்கி "வழி திகைத்தலமருகின்றேன்" என்னும்படி திக்விப்ரமம்பிறந்து * மதியெல்லா முள்கலங்கி அடியிடத் திமிர்த்துக்கொண்டு திகைத்துநிற்க, ஸர்வேஶ்வரனும் (உ) "நாஹமாத்மாநமாஶாஸே மத்பக்தைஸ் ஸாதுபிர்விநா" என்றிருக்குமவனுகையாலே (ந) "ஸதாரஸ்ஸர்வ ஸுலப:" என்கிறபடியே *வாளும் வில்லுங் கொண்டு *இடர்கெடப் பத்நீஸஹிதனாய் ஒருவில்லியாய் வந்து இவர் முன்னே தோன்ற, இவரும் அவர்களைக் கண்டு கலக்கந்தீர்ந்து உள்ளந்தேறி நின்று 'நீங்கள் எங்கு நின்றும் வந்திகோள்? எங்கேறப் போகிறிகோள்?' என்று கேட்க, அவர்களும் 'உத்தரதேசத்தில் ஸித்தாஶ்ரமத்தினின்றும் வருகிறோம்; ஸத்யவ்ரதக்ஷேத்ரமேறப் போகிறோம்' என்ன இவரும் 'நானும் உங்களுடனே புண்யகோடியேற வருவானாக நினைத்திராநின்றேன்' என்ன, 'நல்லது, வாரும்' என்று அவர்கள் முன்னடியிட, இவரும் அவர்கள்பின்னே செல்ல, அவர்களும் ஸ்வாதீநமாக வழி நடத்த, விந்த்யம்பிற்காலித்து ஸந்த்யாகாலமானவளவிலே, காலோசித கர்மாநுஷ்டாநங்களையுஞ் செய்து அவர்களுடனே ஓரிடத்தே, உபவஸித்திருக்க *வல்லிரவாய் முன்னடிதோன்றாமல் காடாந்தகார பூயிஷ்டமாய் *நள்ளிரவானவாறே *கண்புதையமூடி ஒருராஜவ்ருக்ஷத்தடியிலே யிருந்தார்கள்; அப்போது வ்யாதபத்நியும், நல்ல தண்ணீர்மடுக்க ஆசைப்பட, வ்யாதபுருஷனும் 'விடிவோரை ஸமீபத்தில் பாநார்ஹமான கிணற்றிலே மதுரநிர்மலஶீதளகந்தயுத பாநீயம் காட்டுகிறேன்' என்ன இளையாழ்வாரும் அதுகேட்டு 'ஐயோ! பரமோபகாரிகளான இவர்களை லப்தமநோரதராக்குகைக்கு இது நமக்கு அநபிஜ்ஞதேஶமாய்விட்டதே!' என்று நிர்விண்ணராயிருக்க, *கனவிருளகன்று *கீழ்வானம்வெள்ளென்றவாறே *கொழுமலரணவிக் கூர்ந்தது குணதிசை மாருதம் வீச, *அரியென்ற பேராவங்கேட்டு எழுந்திருந்து சடக்கெனக் காலிககர்மத்தைச்செய்து, வழிநடத்துமவர்களைத்தேடிக் காணமல் ஸர்வதோதிக்கமாக நோக்கிக் கூப்பிட்டு நாலடி தோன்றினவழியே நடந்துவர, *கதிரவன் குணதிசைச் சிகரம்வந்தணைய ஜநபதங்கள் ஸ்பஷ்டங்களாகத் தோற்றக் கண்டு'நேற்று நின்ற நிலைக்கு இப்படியும் †ஒரு நல்விடிவு காணப்பெற்றதே!' என்று போர ஆஶ்சர்யயுக்தராக, அங்கே ஒரு தோப்பும் கிணறும் நாலிரண்டுபேருமாய் நிற்கக் கண்டு, இவரும் 'இது எத்தேசம்? எவ்வூர்? என்று அவர்களைக் கேட்க, அவர்களும் 'இதென்ன ப்ராஹ்மணா! புண்யகோடிவிமாநம் முன்னேநிற்கத் தெரியாதோ?' என்ன இவரும் அதுகேட்டு ஸந்துஷ்டராய், ராவண வதம்கேட்ட பிராட்டியைப்போலேயும், (க) "த்ருஷ்டாஸீதா" என்ற வார்த்தையைக்கேட்ட பெருமாளைப் போலேயும் மதுவநத்திற் புகுந்த திருவடியைப்போலேயும் தத்க்ஷணத்திலே கர்த்தவ்யதாமூடராய், அவர்களைப் பிராட்டியும் பெருமாளுமாக நினைத்து, க்ருஷ்ணாவதார ஸௌலப்யத்தை நினைத்து "எத்திறம்!" என்ற ஆழ்வாரைப்போலே மோஹித்துக்கிடந்தார்.

---

(க) விந்த்யாடவீஷ்வதோயாஸு
(உ) நாஹமாத்மாநமாஶாஸே மத்பக்தைஸ் ஸாதுபிர்விநா
(ந) ஸதாரஸ் ஸர்வஸுலப:

(க) த்ருஷ்டா ஸீதா
† 'ஒருவெளிநாடு' என்றுபாடாந்தரம்.

பின்பு (க) "ஸ்வைராஸ்வாஸிதஸ்வயம்" என்னும்படியே தன்னிலே வ்யாமோஹம் தெளிந்தவாறே (உ) "ஹேக்ருஷ்ண ஹேயாதவ ஹேஸகே" என்னும்படியே கூடத்திரிந்த அர்ஜுநனை ப்ரமிப்பித்தாற்போலே என்னையும் *நீர்மையால் நெஞ்சம் வஞ்சித்துப் புகுந்து, *உருக்காட்டாதே ஒளிப்பதே!' என்று பலவகை சொல்லிப் புலம்பித் தம்மிலேயுள்ளந்தேறி, ஆநந்த நிர்பரராய்ப் பெரிய ராஜமார்க்கத்தாலே சென்று வையமாளிகையேறி "தென்னத்தியூரர் கழலிணைக் கீழ்ப்பூண்ட அன்பாளன்" என்னும்படி * திருப் பொலிந்த சேவடிகளை ஸேவித்து எழுவது தொழுவதாய் ஆநந்தாஸ்ருக்கள் பனிப்பப் புளகீக்ருதகாத்ரராய் ஆநந்தித்து, அவன் அந்தர்த்தாநம் பண்ணினதின் கருத்தறிந்து அச்சாலைக்கிணற்றிலே பேரருளாளர் திருவாராதநத்துக்கு உதவத் திருமஞ்சநங் கொண்டுவந்து ஸமர்ப்பித்துப் போராநின்றார்.

அங்கே யாதவப்ரகாசனும் திரளுமாக இவர்கள் வருமளவும் நிற்க, அவ்வளவிலே கோவிந்தபட்டர் வர 'வந்தீரோ? இளையாழ்வார் எங்கே?' என்று கேட்க, 'அவரை நான் கண்டிலேன்' என்ன, அவனும் தன் ஸமீபவர்த்திகளைப் பார்க்கவிட, அவர்களும் தேடிப் பார்த்துக் காணாமையாலே 'ஐயோ! காட்டிலே என்ன தீங்கு வந்ததோ!' என்று ஸர்வரும் து:காகுலராய் முன்னே நடந்து ப்ரயாணகதியிலே போய்க் கங்காதீரத்தையடைந்து கங்கையிலே மாகஸ்நாநம் பண்ணி நிற்க, ஒருநாள் கோவிந்தபட்டர், அகமர்ஷண ஸ்நாநம் பண்ணுகிற போதிலே ஒரு லிங்கம் கையில் வந்துசேர, விஸ்மிதராய் இதென்னென்று யாதவப்ரகாசனுக்குக் காட்ட, போரப்ரீதனாய் நீர் தெய்வஜ்ஞராகையாலே கங்காஸ்நாந ஃபலம் கைசேர்ந்தாற்போலே கங்காதரனே கைபுகுந்தான்' என்று யாதவப்ரகாசனும் இவரிடத்தே விசேஷப்ரதிபத்தியுக்தனாக, எல்லாரும் லிங்கம் கைசேர்ந்ததுவே நிரூபகமாக இவர்க்கு 'உள்ளங்கைகொணர்ந்த நாயனார்' என்று பேரிட்டு அழைக்கத் தொடங்கினார்கள். யாதவப்ரகாசனும் கங்காஸ்நாநம் பண்ணி மீண்டு ஜகந்நாதம் அஹோபிலம் வழியாக வர, உள்ளங்கைகொணர்ந்த

(க) ஸ்வைராஸ்வாஸிதஸ்வயம்

(உ) ஹேக்ருஷ்ண ஹேயாதவ ஹேஸகே



நாயனாரும் 'இந்தலிங்கத்தை ஒரு உசிதஸ்தலத்திலே ப்ரதிஷ்டிப்பித்து வருகிறேன்' என்ன, யாதவப்ரகாசனும், அப்படியே செய்யும்' என்று இவரை மார்க்கமத்யே அனுப்பிவிட்டுப் பெருமாள் கோயிலேறப் போந்தான்.

பின்பு உள்ளங்கை கொணர்ந்த நாயனாரும் தம்ஜந்மபூமியான மழலைமங்கலத்திலே சென்று அங்குள்ள அசேஷவித்வந்மஹாஜநங்களையும் திரட்டி ஸ்வகரஸ்தலிங்கத்தை அங்கே ப்ரதிஷ்டிபித்துத் தத்பக்தராயிருக்கிறவளவிலே, காளஹஸ்திநாதன் இவர் இருப்புக்குவிரும்பி 'நீர் நம் பக்கல் வந்திருக்கவேணும்' என்று நாயனாருக்கு ஸ்வப்நங் காட்டித்தன்ஸ்தாநத்தார் ஸ்வப்நத்திலும் 'உள்ளங்கை கொணர்ந்த நாயனாரை அழைத்துக்கொண்டு வாருங்கோள்' என்று ப்ரேரிக்க, அப்படியே அனைத்துக் கோத்திலுள்ளாரும் மழலைமங்கலத்திலே வந்து இவரைப் பலவகை பஹுமாநம் பண்ணி அழைத்துக்கொண்டுபோய் ஸ்தாநநிர்வாஹத்துக்கு வேண்டின இலச்சினை மோதிரமுங்கொடுத்து இவரைத் தங்களுக்கு முக்யராக்க, இவரும் தத்பக்தியுக்தராய் அங்கே யிருந்தார்.

அநந்தரம் யாதவப்ரகாசனும் பெருமாள் கோயிலிலேவந்து இளையாழ்வாரைக்கண்டு ஆஸ்சர்யப்பட்டு மிகவும் சந்தோஷித்து, விந்த்ய ப்ரதேசத்திலே உம்மைக் காணாமையாலே அத்யதாஸங்கைபண்ணிக் கனக்க நிர்வேதப்பட்டிருந்தோம்; இவ்வளவு காணப்பெற்றதே!' என்ன, இவரும் வழிதப்பிக் காணாமல் அகன்றுபோய் விலிவ்யாஜமாக போந்த வ்ருத்தாந்தத்தை ஸவிஸ்தாரமாகச் சொல்ல, அவனுங் கேட்டு 'இவர்நடை லோகாதீதமா யிருந்தது' என்று நினைத்து ஸுப்ரீதனாய் ஸ்வகோஷ்டியிலே கூட்டிக்கொண்டு க்ரந்தத்தை நடத்தா நிற்க,

அவ்வளவிலே, இரண்டு ஸ்ரீ வைஷ்ணவர்கள் பேரருளாளர் ஸந்நிதியினின்றும் கோயிலுக்கு எழுந்தருளி நம்பெருமாளைத் திருவடி தொழுது ஆளவந்தார் திருவடிகளிலே ஸேவித்துநிற்க, ஆளவந்தாரும் பெருமாள்கோயில் விசேஷங் கேட்டருளும்போது ப்ராஸங்கிகமாக "யாதவப்ரகாசனென்பானொரு ஏகதண்டி ஸந்யாஸிபக்கல் ஸ்ரீ பெரும்பூதூர் இளையாழ்வாரென்றொருவர் வேதாந்தம் வாசியாநிற்க,

(க) "ஸத்யஞ்ஜ்ஞாநமநந்தம்ப்ரஹ்ம" என்கிற ச்ருதி வர, அவன் அதுக்கு வ்யாவ்ருத்தி தோன்ற அர்த்தஞ்சொல்ல, இளையாழ்வாரும் குணயோகம் சொல்லலாயிருக்க வ்யாவ்ருத்தி சொல்லல் சேராதென்ன, அவனும் ஹுங்காரம்பண்ணினான்; பின்னையும் ஒருநாள் இளையாழ்வார் அவனுக்கு அப்யஞ்ஜநமிடும்போது (உ) "தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ" என்கிறதற்கு அநுசிதார்த்தஞ் சொல்லக் கேட்டு க்லேசிக்கும்போது சோகாச்ரு அவன் தொடையிலே விழ அது நெருப்புப்பொறிபட்டாற்போல் வேக, அவனும் பதறி இவர் முகத்தைப் பார்த்து க்லேசஹேதுவேதென்ன, இவரும் ஸூர்யனைக் கண்டு அப்போதலர்ந்த கமலம்போலவிருக்கும் பரமபுருஷன் திருக்கண்களென்று இங்ஙனே யோஜனை யிருக்க அபார்த்தங் கேட்டவாறே க்லேசமாயிற்று என்றார்" என்ற இந்தவ்ருத்தாந்தங்களை ஸவிஸ்தாரமாக விண்ணப்பஞ்செய்ய ஆளவந்தாரும் கேட்டருளி (ங) "அஸந்த ஏவாத்ர ஹி ஸம்பவந்தி, ஹஸந்தி காயாமிவ ஹம்ஸவாஹா: - அத்ராவஸந்தோபதி ஸம்பவந்தி தத்ரைவஸாபஸ் ஸரஸீருஹாணாம்" என்கிறபடியே இந்தளத்திலே தாமரை பூத்தாற் போலே இவ்விபூதியிலே இப்படியும் ஒருமஹாநுபாவனுண்டாகப் பெற்றதே!' என்று போரப்ரீதராய், அப்பொழுதே அவரைக் காணவேணுமென்னும் பேராசையோடே முதலிகளும் தாமுமாகப் புறப்பட்டு நம்பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்து அவாநுமதிகொண்டு எழுந்தருளி, பயணகதியிலே திருக்கோவலூர் வழியாக வந்து ஆழ்வார்கள் நாயனாரையுந் திருவடிதொழுது (ச) "பூர்ணாமபிஸர்வாஸாம்ச்ரேஷ்டாபாபஹராஹிஸா - நாம்நாகாஞ்சீதிவிச்யாதாபுரீபுண்ய விவர்தநீ" என்று சொல்லப்படுகிற மாஹாத்ம்யத்தை யுடைத்தான பெருமாள் கோயிலேற வெழுந்தருள † (திருக்கச்சிநம்பியும் 'ஸ்வாசார்யரான ஆளவந்தார் எழுந்தருளினார்' என்று கேட்டு மிகவும் ஸந்தோஷத்துடனே எதிர்கொள்ள வெழுந்தருள,) அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்களும் வரந்தரும் பெருமாளரையரும் ஸ்ரீசடகோபனும் தீர்த்தப்ரஸாதங்களுங் கொண்டு அதிஸம்ப்ரமத்துடனே எதிர்கொள்ள ஆளவந்தாரும் மிகவும் ஸந்துஷ்டராய் ஸாஷ்டாங்கப்ரணாமம்பண்ணித் தீர்த்த ப்ரஸாதங்களை ஸ்வீகரித்தருள, திருக்கச்சிநம்பியும் மிகவும் உகப்போடே திருவடிகளிலே அடைவுகெட விழுந்து ஸேவிக்க, ஆளவந்தாரும் அதிப்ரீதியுடனே அவரை முடிபிடித்தெடுத்து 'ஸ்ரீ கஜேந்த்ரதாஸரே! பேரருளாளர்க்கு அந்தரங்கமான திருவாலவட்ட கைங்கர்யம் அவிச்சிந்நமாக நடந்துவருகிறதோ?' என்ன, அவரும் வாய்புதைத்து 'தேவரீருடைய க்ருபையாலே பேரருளாளர் கண்டருளுகிறார்' என்று விண்ணப்பஞ்செய்ய, பின்பு நம்பியையுங் கூட்டிக்கொண்டு "உலகேத்து மாழியானத்தியூரான்" என்கிற அர்த்திதார்த்தபரிதாநதீக்ஷிதரான பேரருளாளரை ஸேவிப்பதாகப் புகுந்து ப்ரதமம் பேரருளாளன் பெருந்தேவியாரைத் திருவடி தொழுது ப்ரதக்ஷிணமாக எழுந்தருளாநிற்க, (க) "உதக்பச்சிமபாகஸ்தம்வல்மீகம்மஹதோகிரே:-பூஜநீயஸ்சதத்ராஸ்தே சேஷ:பணப்ருதாம்வர:" என்று சொல்லுகிற திருப்புற்றின் ஸமீபத்திலே திருவநந்தாழ்வானையும் அதுக்குக் கிழக்காகக் கரியமாணிக்கத்தாழ்வாரையும் ஸேவித்து ஆளவந்தாரும் முதலிகளும் எழுந்தருளியிருக்கிறவளவிலே, யாதவப்ரகாசனும் திரளுமாகப் பேரருளாளரை ஸேவித்து ப்ரதக்ஷிணம்பண்ணிக்கொண்டு வாராநிற்க, ஆளவந்தாரும் 'இவர்களிலே இளையாழ்வார் ஆர்?' என்று நம்பியைக் கேட்டருள, அவரும் 'சிவந்து நெடுகி வலியராய் (உ) "ஆயதாச்ச ஸுவ்ருத்தாச்ச பாஹவ:" என்கிறபடியே ஆஜாநுபாஹுவாய் நடுவே வருகிறவர்' என்று விண்ணப்பஞ்செய்ய, ஆளவந்தாரும் ஸந்தோஷத்தாலே ப்ரஸந்ந மதுரகம்பீரநயநங்க

(க) 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌨𑌨𑍍𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮

(உ) 𑌤𑌸𑍍𑌯 𑌯𑌥𑌾 𑌕𑌪𑍍𑌯𑌾𑌸𑌂 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌮𑍇𑌵𑌮𑌕𑍍𑌷𑌿𑌣𑍀

(ங) 𑌅𑌸𑌨𑍍𑌤 𑌏𑌵𑌾𑌤𑍍𑌰 𑌹𑌿 𑌸𑌂𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌹𑌸𑌨𑍍𑌤𑌿 𑌕𑌾𑌯𑌾𑌮𑌿𑌵 𑌹𑌂𑌸𑌵𑌾𑌹𑌾𑌃 । 𑌅𑌤𑍍𑌰𑍈𑌵 𑌸𑌨𑍍𑌤𑍋𑌽𑌪𑌿 𑌸𑌂𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌤𑌤𑍍𑌰𑍈𑌵 𑌸𑌰𑍍𑌵𑌾 𑌸𑌰𑌸𑍀𑌰𑍁𑌹𑌾𑌣𑌾𑌮𑍍 ॥

(ச) 𑌪𑍂𑌰𑍍𑌣𑌾𑌽𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑌾𑌂 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌾 𑌪𑌾𑌪𑌹𑌰𑌾 𑌹𑌿 𑌸𑌾 । 𑌨𑌾𑌮𑍍𑌨𑌾 𑌕𑌾𑌞𑍍𑌚𑍀𑌤𑌿 𑌵𑌿𑌖𑍍𑌯𑌾𑌤𑌾 𑌪𑍁𑌰𑍀 𑌪𑍁𑌣𑍍𑌯𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌨𑍀 ॥

(க) 𑌉𑌦𑌕𑍍𑌪𑌶𑍍𑌚𑌿𑌮𑌭𑌾𑌗𑌸𑍍𑌥𑌂 𑌵𑌲𑍍𑌮𑍀𑌕𑌂 𑌮𑌹𑌤𑍋 𑌗𑌿𑌰𑍇𑌃 । 𑌪𑍂𑌜𑌨𑍀𑌯𑌸𑍍𑌤𑌤𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑍇 𑌶𑍇𑌷𑌃 𑌫𑌣𑌭𑍃𑌤𑌾𑌂 𑌵𑌰𑌃 ॥

(உ) 𑌆𑌯𑌤𑌾𑌶𑍍𑌚 𑌸𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌶𑍍𑌚 𑌬𑌾𑌹𑌵𑌃

† குண்டலிதக்ரந்தம் சிலப்ரதிகளில் இல்லை.

ளாலே பூயோபூயஃ செவ்வரியோட அவரைப் பார்த்தருளி '*ஆம் முதல்வன் இவன்' என்று விசேஷகடாக்ஷம்பண்ணி யருளி, பெருமாளைநோக்கி, (க) "யஸ்யப்ரஸாதகலயாபதிரஸ்ஸ்ரருணோதி பங்குஃப்ரதாவதிஜவேகசவக்திமூகஃ - அந்தஃப்ரபஸ்யதிஸு தம்லபதேசவந்த்யா தந்தேவமேவவரதம்ஸ்ரணங்கதோzஸ்மி" என்றும், "தாம்வேண்டும், காமமே காட்டுங்கடிது" என்றும் சொல்லுகிறபடியே அவ்வவருடைய இஷ்டகாமங்களைத் தந்தருளுகிறவராகையாலே, அடியேனுக்கும் இளையாழ்வாராகிற மஹாநுபாவர் நம்தர்ஸநப்ரவர்த்தகராம்படி விசேஷகடாக்ஷஞ் செய்தருளவேணுமென்று தேவரீரைச் சரணம் புகுந்தேன்' என்று விண்ணப்பஞ்செய்து, பின்பு ஹஸ்திகிரியின் மேலே எழுந்தருளிப் பேரருளாளரையும் ஸேவித்துத் தீர்த்தப்ரஸாதமும் ஸ்வீகரித்தருளித் திருக்கச்சிநம்பியையும் நிறுத்தி, அப்போது இவர்க்கு ஒரு நல்வார்த்தைசொல்ல அவஸரம்காணுமையாலே மீண்டு, முதலிகளும் தாமுமாகக் கோயிலுக்கு எழுந்தருளினர்.

அநந்தரம் யாதவப்ரகாசனும் தம்பக்கல் ஸ்ரோதாக்களுடன் வேதாந்த வ்யாக்யாநம் பண்ணிக்கொண்டிருக்கச்செய்தே, அந்த ராஜ்யத்தில் ராஜாவின் பெண்பிள்ளையை ப்ரஹ்மரக்ஷஸ்ஸு பிடிக்க, இவ்விடங்களிலே 'இத்தைப் பரிஹரிக்கத்தக்க மந்த்ரவாதிகளுண்டோ?' என்று ஆராய, 'யாதவப்ரகாசன் போர மந்த்ரவாதியாயிருக்கும்' என்று சிலர் சொல்லக் கேட்டு ராஜாவும் 'அவனுக்கு இச்செய்தியை அறிவியுங்கோள்' என்று ஆள்போகவிட, ராஜமனுஷ்யர் வந்து இவனுடன் 'ராஜாவின் பெண்பிள்ளையை ப்ரஹ்மரக்ஷஸ்ஸு பிடித்ததென்று ராஜா உமக்கு அறிவிக்கச்சொன்னார்' என்றுசொல்ல, இவனும் 'யாதவப்ரகாசன் உன்னைப் போகச்சொன்னனென்று ப்ரஹ்மரக்ஷஸ்ஸுக்குச் சொல்லுங்கோள்' என்று வந்தவர்களுடன் சொல்லிப் போகவிட, அவர்களும் போய் 'யாதவப்ரகாசன் உன்னைப் போகச் சொன்னன்' என்று சொன்னவாறே 'அவன் தன்னை அங்கு நின்றும் போகச்சொன்னேனென்று சொல்லுங்கோள்' என்று அந்தப்ரஹ்மரக்ஷஸ்ஸு சொல்ல, ராஜமநுஷ்யர் இச்செய்தியை யாதவப்ரகாசனுக்கு

---

(க) யஸ்யப்ரஸாதகலயாபதிரஸ்ஸ்ருணோதி பங்குஃப்ரதாவதிஜவேநவக்தி மூகஃ। அந்தஃப்ரபஸ்யதிஸுதம் லபதேசவந்த்யா தந்தேவமேவவரதம் ஸரணம் கதோzஸ்மி ॥



அறிவிக்க, அவனும் மிகவும் குபிதனாய்த் தானும் திரளுமாகப்போய் ராஜகோஷ்டியிலே 'மஹாமந்த்ரத்தை ஜபித்துக்கொண்டு, ப்ரஹ்மரக்ஷஸ்ஸின் அருகில் நின்று முஷ்டிபிடிக்க, அதுவும் முடக்கினகாலை நீட்டி 'அடா! யாதவப்ரகாசா! நீ ஜபிக்கிறமந்த்ரம் நான் அறியேனோ? என்று அந்தமந்த்ரத்தையுஞ் சொல்லி 'நான் இந்த மந்த்ரத்துக்கும் உனக்கும் போவேனோ? நீ உன்ஜந்மமும் அறியாய்; என்ஜந்மமும் அறியாய்' என்ன, யாதவப்ரகாசனும் 'ஆகில்' நீ பிராநுமாய் ஸர்வஜ்ஞனுமாய் இருந்தாய்; என்னுடைய ஜந்மம் எது? உன்னுடைய ஜந்மம் எது?' என்றுகேட்க, அதுவும் 'உன்னுடைய ஜந்மம் மதுராந்தகத்து ஏரிகரையிலே இருப்பதொருபுற்றிலே ஒரு உடும்பா யிருப்புதி; கோயில் ஸ்ரீவைஷ்ணவர்கள் திருமலைக்கு எழுந்தருளும்போது அங்கே நீராடி அமுதுசெய்கிறவிடத்திலே சிந்தின ப்ரஸாதத்தையும் தீர்த்தத்தையும் ஸ்வீகரித்தாய்; அத்தாலே உனக்கு இந்த வித்வஜ்ஜந்மம் உண்டாய்த்து; நான் ப்ராஹ்மணவர்ணத்திலேபிறந்து யாகம்பண்ண அதிலே மந்த்ரலோபக்ரியாலோபங்கள் பிறந்து, அத்தாலே ப்ரஹ்மரக்ஷஸ்ஸானேன்,' என்றுசொல்ல, 'ஆகில், நீ 'யாருக்குப் போவுதி?' என்ன, ரக்ஷஸ்ஸும் 'உன் பக்கலிலே வாசிக்கிறவர்களிலே யொருவர் நித்யஸூரிகளில் தலைவராய் இருப்பர்காண்' என்ன, இவனும் 'அவரார்?' என்றுகேட்க, அதுவும் இவரென்று இளையாழ்வாரைக்காட்டி அவரைத் தண்டனிட்டு 'இவர்போகச் சொன்னாகில் போகிறேன்' என்ன, 'ஆகில், இளையாழ்வீர்! நீர் இத்தைப் போகச்சொல்லும்' என்று அவன் சொல்ல, இவரும் 'நீ இவளை விட்டுப்போ' என்ன, அதுவும் 'உம்முடைய திருவடித்தாமரைகளை என்தலைமேலே வைத்தாலொழியப் போகேன்' என்ன, இவரும் உகந்து அப்படியே செய்தருள, அதுவும் ஸந்துஷ்டமாய்ச் சிரித்துக் கும்பிட்டு எழுந்திருந்து 'போகிறேன்' என்ன, இளையாழ்வாரும் 'ஆகில், நீ போகிறதற்கு அடையாளங்காட்டிப்போ' என்ன, அதுவும் 'இவ்வரசிலே நான் இருப்பேன்; இப்போது இவ்வரசை முறித்துக்கொண்டு போகிறேன்' என்று சொல்லி அவ்வரசை முறித்துக்கொண்டு போய்த்து. யாதவ ப்ரகாசனும் இளையாழ்வாரை மிகவும் ஸ்லாகித்து மீண்டு தன்னுடைய மடமே வந்து புகுந்தான்.

அநந்தரம், ஆளவந்தார் கோயிலிலே ஒருநாள் வ்யாக்யாநஸமயத்திலே "இலிங்கத்திட்ட புராணத்தீரும்" என்கிற பாட்டு ப்ரஸ்துதமாக, அப்போது 'நமக்குப்பின்பு இத்தர்ஸநம்நிர்வஹிப்பாரொருவரையுங் காணப்பெற்றிலோமே!' என்கிற விசாரத்திலே இளையாழ்வார் பக்கல் திருவுள்ளமாய் 'இப்போது இளையாழ்வாரை யாதவப்ரகாசனோடு உறவறுத்து, நம்பக்கல்சேர்க்கும் விரகு உண்டோ?' என்று அருளிச்செய்து, பின்னையும்பேரருளாளரைக்குறித்து 'நம் ப்ரபந்தியை ஸபலமாக்கியருளவேணும்' என்று மிகவும் ப்ரார்த்தித்தருளினார்.

பின்பு யாதவப்ரகாசனும் மீளவும் ஒருநாள் க்ரந்தம் நடத்தா நிற்கச்செய்தே, (க) "ஸர்வங்கல்விதம்ப்ரஹ்ம" (உ) 'நேஹநாநாஸ்திகிஞ்சந' இத்யாதி வாக்யங்களை அத்வைதபரமாக யோஜித்து ஜீவப்ரஹ்மங்களுடைய ஐக்யம் ப்ரதிபாதிக்க, இவரும் அத்தைநிராகரித்து அவ்வாக்யங்களை விஶிஷ்டாத்வைத பரமாக யோஜித்து அர்த்தஞ்சொல்ல, அவனும் அதிகுபிதனாய் 'இன்று தொடங்கி என்னிடம் வாசிக்கவேண்டாம்; உம்முடைய புத்திக்குத் தகுதியானவிடத்தே போய் க்ரந்தங்கேளும்' என்று போகச்சொன்னான்.

இவரும் அதிப்ரீதியோடே மீண்டு தம் திருமாளிகையிலே வந்து திருத்தாயாருக்கு இச்செய்தியைச்சொல்ல, அவரும் 'வாரீர் பிள்ளாய்! இதுவரைக்கும் நீர் படித்தது போதும்; திருக்கச்சிநம்பி பேரருளாளருக்கு அந்தரங்கராயிருக்கிறார்; நீர் அவரை ஸேவித்து அவர் அருளிச்செய்வதைச் செய்துகொண்டிரும்' என்றுசொல்ல, அப்படியே இளையாழ்வாரும் திருக்கச்சிநம்பியை ஸேவித்து க்ருதார்த்தராய் (௩) "க்ரியதாமிதிமாம்வத" என்றாப்போலே அடியேன்செய்யுங் கைங்கர்யத்தை நியமித்தருளவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, நம்பியும் 'பேரருளாளருக்குச் சாலைக்கிணற்றுத் தண்ணீர் உகப்பாயிருக்கும்; திருவாராதநகாலத்துக்கு உதவும்படி முன்புபோலேப்ரதிதிநம் ஒரு குடம் திருமஞ்சனங்கொண்டுவந்து ஸமர்ப்பியும்' என்று அருளிச்செய்ய, இளையாழ்வாரும் அப்படியே தப்பாமல் அந்தக் கைங்கர்யஞ் செய்துகொண்டிராநிற்க;

---

(க) ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம (உ) நேஹ நாநாஸ்தி கிஞ்சந (௩) க்ரியதாமிதி மாம் வத



அவ்வளவிலே ஆளவந்தார் திருமேனியிலே நோவுசாத்தி யெழுந்தருளியிருக்கச் செய்தே, திருவரங்கப்பெருமாளரையரைப் புருஷகாரமாகக்கொண்டு திருக்கோட்டியூர் நம்பியும் பெரியநம்பியும் ஆளவந்தார் ஸ்ரீபாதத்திலே தண்டனிட்டு 'அடியோங்களுக்குத் தஞ்சமாயிருப்பதொரு அர்த்தம் ப்ரஸாதித்தருளவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, ஆளவந்தாரும் முதலிகளிருவரையும் திருவுள்ளம்பற்றி 'உங்களுக்குத் தஞ்சமாயிருப்பதொரு அர்த்தம் இது:—கோயிலாழ்வாரே உங்களுக்கு உயிர்நிலை; உங்களுக்குத் தஞ்சமென்று புத்திபண்ணிப்போருங்கோள்' என்றும், பெரியபெருமாள் திருவடிகளின் கீழே வீணையுங் கையுமாய் ஸேவித்திருக்கும் திருப்பாணாழ்வார் விக்ரஹத்தைப் பாதாதிகேசாந்தமாக ஸேவித்துக்கொண்டு போருங்கோள்' என்றும் திருவுள்ளமாக, திருவரங்கப்பெருமாளரையர் முதலான முதலிகள் மூவரும் அப்படியே திருவுள்ளம்பற்றி யிருக்கிறவளவிலே, ஆளவந்தாரும், திருவரங்கப்பெருமாளரையர் முதலான முதலிகள் மூவரையுங் குறித்து, இதற்குப்ரமாணமாகத் திருவேங்கடமுடையானுயிர்நிலை யறிந்து போரும் குறும்பறுத்த நம்பியையும், பேரருளாளப் பெருமாளுயிர்நிலையறிந்து போரும் திருக்கச்சிநம்பியையும், பெரிய பெருமாளுயிர்நிலையறிந்து போரும் திருப்பாணாழ்வாரையும், திருப்பாணாழ்வாருயிர்நிலையறிந்துபோரும் திருவரங்கப் பெருமாளரையரையுங்காட்டியருளி, ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையரைப் பார்த்தருளி 'நீர் பெரிய பெருமாளுயிர்நிலையறிந்து ஸேவித்துப்போருகிற விக்ரஹமே அடியேனுக்கு உபாயோபேயமென்று புத்திபண்ணிப் போருவன்' என்று அருளிச்செய்ய, திருவரங்கப்பெருமாளரையரும் ஆளவந்தார் ஸ்ரீபாதத்திலே தண்டன்ஸமர்ப்பித்து 'தேவரீர் நித்யவிபூதியிலே சென்று பரமபதநாதனை ஸேவித்து 'இமையாதகண்ணராய்க் கொண்டுபோரத் திருவுள்ளம்பற்றி யருளிற்றோ?' என்று விண்ணப்பஞ் செய்ய, ஆளவந்தாரும் அவரைக் குறித்து 'நீர் பரமபதத்துக்கு உகந்து அத்யவஸித்திரும்' என்று அருளிச்செய்து, பின்னையும் ஆளவந்தார் இம்முதலிகள் மூவரையும் திருவுள்ளம்பற்றி 'ஒருவன் ப்ரபந்நனானால், பகவததீநமான ஆத்மயாத்ரையிலும் கர்மாதீநமான தேஹயாத்ரையிலும் அந்வயமுண்டென்று இருந்தானானால் ஆத்மஸமர்ப்பணங்குலைந்து நாஸ்திகனாய்விடும்: ஆகையாலே, த்ரிவிதகரணங்

களாலும் உபயயாத்ரையிலும் அந்வயம் இல்லை: நாராயணனுக்கு நைரந்தர்ய வேஷம், தம்பக்கல் பேற்றுக்கு 'நமஃ'என்னுதவர்களை ''வானவர் நாட்டையும் நீ கண்டுகொள்'' என்பது ஒரு ஔதார்ய விசேஷமுண்டு. 'நாங்களுக்கு நைரந்தர்யவேஷம்' ''நாராயணனே நமக்கே பறைதருவான்'' என்கிறபடியே நிர்ப்பரங்களாயிருக்கை'என்றிராதே, தம்பேற்றுக்கு த்வரிக்கையும் ஸ்வரூபஹாநி ; எம்பெருமானை ரக்ஷகனென்றிருக்கையும் ஸ்வரூபஹாநி ; எம்பெருமான் ரக்ஷ்யனென்றிருக்கையும் ஸ்வரூபஹாநி ; இப்படியிருந்தானாகில் அநர்ஹார்ஹசேஷத்வத்துக்கும், ஸ்வஸ்வாமிஸாவஸம்பந்தத்துக்கும் சேராது, என்று அருளிச்செய்ய, மீளவும் இவர்கள், ஸ்ரீபாதத்திலே தண்டனிட்டு, 'அடியோங்களுக்குப் பற்றும் உபாயம் எது?' என்று கேட்க, ஆளவந்தாரும், நீங்கள் அடியேனை உபாயோபேயமென்று புத்திபண்ணிப் போருங்கோளென்கைஅடியேனுக்குஸ்வரூபஹாநிஃ ''எம்பெருமானருள்தொழுவார் எப்பொழுதும் என்மனத்தேயிருக்கின்றாரே'' என்கிறவதுவே உங்களுக்கு உபாயோபேயமென்று புத்திபண்ணிப் போருங்கோள்' என்று அருளிச்செய்ய, முதலிகளும் திருவுள்ளத்திலே முசித்திருக்க, ஆளவந்தாரும் இவர்களைக்கண்டு 'நீங்கள் முசிக்கவேண்டா : உங்களுக்குத் திருமந்த்ரார்த்தம் போகமண்டபம் ; சரமஸ்லோகார்த்தம் புஷ்பமண்டபம் ; மந்த்ரரத்நார்த்தம் த்யாகமண்டபம் ; இதற்கு ப்ரமாதாக்கள் திருப்பாணாழ்வார்முதலானார்கள்' என்று அருளிச் செய்தார். இத்தைத் திருவரங்கப்பெருமாளரையர் திருவுள்ளம்பற்றி'தேவரீர் அவதாரம் தீர்த்தம்ப்ரஸாதித்துப்போமளவில் க்ரிமிகீடாதிகளுக்கு ஓரழிவுவந்தால் சேதமில்லை' என்று அருளிச்செய்ய, ஆளவந்தாரும் அவ்வார்த்தையைக்கேட்டுப் பராக்கடித்து ப்ரத்யுத்தரமருளிச் செய்யாமலிருக்க, இவ்வார்த்தையை முதலிகள் இருவரும் திருவுள்ளம்பற்றி, 'ஆளவந்தார் வியோகத்தில் நாம் ப்ராணத்யாகம்பண்ணக்கடவோம்' என்று நிஸ்சயித்திருக்கிறவளவிலே,

பெரியபெருமாள் திருவோலக்கத்திலே இவ்விசேஷம்பிறக்க பெரியபெருமாளும் திருவரங்கப்பெருமாளரையர் திருக்கோட்டியூர் நம்பி முதலாக அருளப்பாடிட்டு 'ஆளவந்தார்வியோகத்திலேநீங்கள் அவிவேகம்பண்ணினீர்களாகில் நம்மாணை'என்று ஆஜ்ஞாபித்துத் திருவரங்கப் பெருமாளரையர் திருக்கையிலே அவர்களைக் காட்டிக் கொடுத்தருள,



அவரும் முதலிகளிருவரையும் கையைப் பிடித்துக்கொண்டு ஆளவந்தார் ஸ்ரீபாதத்திலே சென்று இவ் விசேஷத்தை விண்ணப்பஞ்செய்ய, அவரும் இதைக் கேட்டு நம் பேற்றுக்கு ஸஹியாதவர்கள் பெரியபெருமாள் இரண்டாற்றுக்கும் நடுவே திருவாராதநங்கண்டருள ஸஹியாதவர்கள்' என்று அருளிச்செய்து 'நம்முடைய வியோகத்தில் அவிவேகம் பண்ணினீர்களாகில் உய்யக்கொண்டார் மணக்கால் நம்பி முதலான பெரிய பெருமாளுகந்த முதலிகளுடைய திருவுள்ளத்தை மறுத்தவர்களாவுதிகோள்' என்று தம்முடைய திவ்யாஜ்ஞையிட, இவர்களும் திருவுள்ளத்திலே நொந்திருக்கிறவளவிலே, ஆளவந்தாரும் 'பகவத்பாகவதவிஷயங்களிலே தாமிடாதே பாகவதவிஷயத்திலே பகவந்நோக்கானவனைப் பகவானைக் குருபாரம்பாரியாகத் திருவடிவிளக்குமாபோலே பாகவதவிஷயத்திலும் தன்ஸத்தை மாண்டு ஆசார்ய விக்ரஹத்தை அநுஸந்தித்துத் தீர்த்தங்கொண்டு போருகையும், அவர்களுக்குத் தீர்த்தங்கொடுக்குமிடத்தில் அர்த்தகாம பாவசரன்றிக்கே தாங்களும் நேரே ஆசார்யனை நோக்கி குருபரம்பராபூர்வகமாக த்வயத்தை அநுஸந்தித்துச் கொடுக்கையும் இருவர்க்கும் உபாதேயம்; ஜ்ஞாநாதிகவிஷயமுமாய் ஸமூஹமுமாய்ச் சென்றவளவிலே, இருவரும் அர்த்தகாமபாவசராய் ப்ராக்ருதஸரீரத்திலே நோக்காய் ஸமூஹத்திற்சென்ற முதலிகளையிகழ்ந்து திருவுள்ளம் கன்றுமாகில், ஆசார்யனே யாகிலும் இவர்களுக்கு அத்தீர்த்தம் உபாதேயமன்று' என்று அருளிச்செய்ய, இம் முதலிகளும் அவ்வார்த்தையைத் திருவுளம்பற்றியிருக்கிறவளவிலே, ஆளவந்தாரும் முதலிகளைப் பார்த்து'உங்களுக்குச்சரமார்த்தம்பெரியபெருமாள்திருவடிகளிலேஒரு கருமுகைமுகிழ்வெடிக்கவைக்கையும், ஆசார்ய விஷயத்தில் ப்ரதமதசைமத்யமதசைகளைச் சரமதசையாக அநுஸந்தித்துப் போருகையும் உத்தாரகப்ரதிபத்திஎன்றுஅருளிச்செய்து, திருவரங்கப்பெருமாளரையரைத்தண்டனிட்டுத்திருக்கோட்டியூர்நம்பியையும் பெரியநம்பியையும் அவர் கையிலே காட்டிக்கொடுக்க, திருவரங்கப்பெருமாளரையரும் அவர்களைக் கைக்கொண்டு 'நீங்கள் ஆசார்ய விஸ்லேஷத்தில் அவிவேகம் பண்ணினீர்களாகில், உங்களுக்கு ஒரு தேசவிசேஷமின்றிக்கே நித்யஸம்ஸாரிகள் திரளிலும் புகுரப்பெறாதே இழப்புதிகோள்' என்று அருளிச்செய்ய ஆளவந்தாரும் இதைக்கேட்டுத்திருவுள்ளமுகந்து 'உங்களுக்குத் திருவரங்கப்பெருமாளரையருடைய விக்கிரஹமே உபாயோ

பேயமென்று புத்திபண்ணி போருங்கோள்' என்று அருளிச்செய்ய, அவர்களும் அப்படியே புத்திபண்ணியிருந்தவளவிலே, ஆளவந்தார் திருமேனியில் நோவாறி ஆரோக்யமுண்டாய் நீராடி பெரியபெருமாளுக்கும் உத்ஸவமாய்ப்பெரியதிருமஞ்சனங் கண்டருளி உடுத்து முடித்துச் சாத்துப்படிசாத்தி அங்குள்ள ஸ்ரீரங்கமாமறையோர் ஸேவிக்க அமுதுசெய்தருளித்திருத்திரை நீக்கியிருக்கிறவளவிலே,

ஆளவந்தார் திருவோலக்கத்தேற வெழுந்தருளி க்ருதாஞ்ஜலிபுடராய் ஸேவித்துநிற்க, பெரியபெருமாளும் நினைவறிந்து திருவரங்கப்பெருமாளரையரை அருள்பாடிட்டருள, அவரும் ஸேவிக்குமடைவொழியச் சூழ்விசும்பணிமுகில் ஸேவிக்க, திருவோலக்கமடைய 'இதென்!' என்று விஸ்மயப்பட, பெரிய பெருமாள் திரு நெற்றிமாலை நழுவிவிழ, நம்பியார் எடுத்துப்ப்ரஸாதிக்கிறோமென்று இருக்கிறவளவிலே திருவரங்கப்பெருமாளரையர் சடக்கென எடுத்து ஆளவந்தாருக்கு ப்ரஸாதித்தருள, ஆளவந்தாரும் திருவுள்ளமுகந்து நிற்க, அரையரும் உம்முடைய நினைவு ஸித்தித்ததே!' என்ன, பெருமாளும் தீர்த்தம் ப்ரஸாதம் ஸ்ரீஶடகோபன் ப்ரஸாதித்து விடை கொடுத்தருள, ஆளவந்தாரும் மடத்தேறச்சென்று திருவரங்கப்பெருமாளரையர் திருக்கோட்டியூர்நம்பி பெரியநம்பி முதலான முதலிகளெல்லாரையும் தீர்த்தங்கொண்டு அமுதுசெய்யப்பண்ணித் தண்டனிட்டு 'ஸர்வாபராதங்களையும் பொறுத்தருளவேணும்' என்று க்ஷமைகொண்டு எழுந்திராமல் நிற்க, திருவரங்கப்பெருமாளரையரும் 'உமக்கு ஒரு அபசாரம் உண்டோ?' என்று முடிபிடித்தெடுக்க, எழுந்திருந்து பின்பு அமுது செய்து இவர்களுக்குப் பூர்வம்போலே நல்வார்த்தையருளிச் செய்து கொண்டிருக்க,

அவ்வளவிலே ஆளவந்தார் திருமேனியிலே நோவுசாத்தினரென்றுகேட்டு இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் பேரருளாளர் ஸந்நிதியில் நின்றும் கோயிலேறச்சென்று ஆளவந்தார் திருவடிகளிலே ஸேவித்திருக்க, ஆளவந்தாரும் பெருமாள்கோயில் விஶேஷம்கேட்டு 'இளையாழ்வார் செய்கிறதென்?' என்று கேட்டருள அவர்களும் 'இப்போது இளையாழ்வார் யாதவப்ரகாசனிடத்திலே சீற்றம் பிறந்து அவனைத் துறந்து பேரருளாளர் பக்கல்ப்ரவணராய் நில்லாநின்றார்' என்று விண்ணப்பஞ்செய்ய, அத்தை ஆளவந்தாரும் கேட்டருளி உகந்து 'பேரருளாளர் நம்முடைய ப்ரபத்தியை ஸபலமாக்கியருளினார்' என்று பெரிய ப்ரீதியோடே *பேரருளாளன் பெருமையைப் பேச வல்லவராய்க் கொண்டு ஸ்தோத்ரத்தை விண்ணப்பஞ்செய்து ஸ்வாபிமாநாந்தர்ப்பூதரான பெரியநம்பிதிருக்கையிலே கொடுத்து அவரைப்பார்த்து 'இளையாழ்வார் இப்போது யாதவப்ரகாசனிடத்தே சேராதே அவனைவிட்டுத் தேவப்பெருமாள் பக்கலிலே ப்ரவணராயிராநின்றாரென்று கேட்டோம்; இக்காலத்தில் நீர் அங்கேறப்போய் அவரை நம்மோடே சேர்க்கவேணும், என்று நியமித்தருள அவரும் அப்படியே சடக்கெனப் புறப்பட்டுப் பெருமாள்கோயிலுக்கு எழுந்தருளினார்.



அநந்தரம் ஆளவந்தார் பின்னையும் நோவுசாத்தி மிகவுந் தளர்ந்து கண் வளர்ந்தருள, அருகிலிருந்த முதலிகளும் 'பெரிய பெருமாள் திருவுள்ளம் ஏதோ!' என்று தங்களிலே சிந்தித்திருக்கிறவளவிலே, பேரருளாளப்பெருமாளுடைய அயன்கண்ட வைகாசித் திருநாளில் அவப்ருதத்தினன்று ஆளவந்தாரும் நீராடிப் பெரியபெருமாளைத் திருவடி தொழச்சென்று உத்தமஸந்தி அமுதுசெய்து திருத்திரை நீக்கினவளவிலே தண்டன் ஸமர்ப்பித்துப் பாதாதி கேஶாந்தமாகவும் கேஶாதி பாதாந்தமாகவும் பெரிய பெருமாளை ஸேவித்துத் திருவடிக்கீழ்த் திருப்பாணாழ்வாரையும் அநுபவித்து, நம்பியார் ஸ்ரீஶடகோபன் தீர்த்தம் ப்ரஸாதம் ப்ரஸாதிக்கப்பெற்று திருப்பதியாரும் திருத்தளிகைப்ரஸாதம் ப்ரஸாதித்து விடைகொடுத்தருள, ஆளவந்தாரும் ஸ்ரீபாதத்து முதலிகளுடன் மடமே சென்று மீண்டு முதலிகளைத் தீர்த்தங்கொண்டு அமுதுசெய்தருளப்பண்ணி முஹூர்த்தமிட்டு, வைகாசிமாஸம் ஆறுந்தேதி ஶ்ரவணநக்ஷத்ரத்தினன்று அபிஜிந்முஹூர்த்தத்திலே முதலிகள் ஶேஷமும் அங்கீகரித்து ஆழ்வார்களைச் சரணம்புகுந்து ஆசார்யர்கள் முதலிகள் ஸ்தாநத்தார் முதலாக எல்லாரையும் அழைப்பித்து க்ஷமைகொண்டு வேண்டிக்கொள்ள, அவர்களும் 'பெரியபெருமாளுக்கு ஒரு அபராத முண்டாகிலன்றோ உமக்கு அபராதமுண்டாவது?' என்ன, திருவரங்கப்பெருமாளரையர் முதலான முதலிகளை அங்குள்ள முதலிகள் திருக்கையிலே காட்டிக்கொடுத்தருளி, ஸ்தாநத்தாரைப் பார்த்து 'பெரிய பெருமாளுடைய திருவாராதநம் திருமந்த்ரபுஷ்பம் காலாகாலத்திலே நடத்திக் கொண்டுபோருங்கோள்; ஆசார்யர்கள் முதலிகள் தேசாந்தரிகள் முத

லானுரை வரவணைத்துக்கொண்டு 'போருங்கோள்' என்று காட்டிக் கொடுத்தருள, அவர்களும் 'அப்படியே ஆகிறது' என்று அங்கீகரித்து, 'இது புதுமையாயிருந்தது!' என்று எல்லாரும் விடைகொடுத்துப் போக, அநந்தரம் மணக்கால்நம்பியை த்யானித்துக்கொண்டு பத்மாஸநத்திலே யோகமாய் எழுந்தருளியிருக்க அவர் திருவடிகளைத் தம்முடைய நெஞ்சிலும் கண்ணிலும் திருமுடியிலும் ஒற்றிக்கொண்டு அவர் திருவடிகளைத் தம்முன்னே வைத்துக்கொண்டு ப்ரஹ்மவல்லி ப்ருகுவல்லி புருஷஸூக்தம் அர்ச்சிராதி சூழ்விசும்பணிமுகில் முதலாக முதலிகள் ஸேவிக்க, திருச்சங்குபணிமாற, ஸகலவாத்யங்களும் முழங்க, ஆளவந்தார் ப்ரஹ்மரந்த்ரத்தாலே திருநாட்டுக்கு எழுந்தருளினார்.

## யமுனைத்துறைவரைத் திருப்பள்ளிபடுத்த ப்ரகாரம்

திருவரங்கப்பெருமாளரையர் முதலான எல்லாரும் வேரற்ற மரம்போலே கோஷித்துக்கொண்டு விழுந்து ஶோகிக்க, அங்குள்ளார் இவர்களைத் தேற்றி ஆளவந்தார் குமாரரான பிள்ளைக்கரசு நம்பியைக் குறித்து 'இனி முன்பு நடங்கும் க்ரமத்தைச் செய்தருளவேணும்' என்ன, தாஸிகள் வந்து திருவாசல் திருவலகிட்டுத் திருநீர்பரிமாறி ஸ்தலசுத்தி பண்ணித் திருக்காவணமிட்டுக் கோடித்து, தர்ப்பமாலைகட்டிச் செங்கழுநீர் மாலைகட்டி, பலபட்டுக்களாலும் ஶுப்ரசாமரங்களாலும் குச்சுக்கட்டி யலங்கரித்து; திருக்காவணத்தின் நாலுவாசலிலும் கதளித்தாறுநாற்றி, இளங்கமுகுகரும்புநாட்டி, பலபலங்கள்நாற்றி, நாலுவாசலிலும் கொடியாடைகட்டி, சித்ரபத்ரங்களைவைத்து, பூர்வ தக்ஷிண பஶ்சிம உத்தர த்வாரங்களிலே பலாஶ அஶ்வத்த கதிர உதும்பர தோரணங்கள் நாற்றி யலங்கரித்து, திருக்காவணத்தில் த்ரோணவ்ரீஹி சொரிந்து பரப்பி, நடுவே பூர்ணகும்பம்வைத்து, நாலுகோணங்களிலும் பூர்ணகும்பங்களை வைத்து கேஶவாதித் வாதஶநாமோச்சாரணம் பண்ணிக்கொண்டு, த்வாதஶகலசங்களை ப்ராக் ஆதியாக ஸ்தாபித்து, கலசங்களுக்குக் குஶதூர்வா தர்ப்ப விஷ்ணுக்ராந்தி முதலான புஷ்பங்களையிட்டு, குருபரம்பரா பூர்வகமாக த்வயாநுஸந்தாநத்துடன் கும்பார்ச்சனை பண்ணி, த்வாதஶநாமத்தாலே கலசஸ்தாபநம் பண்ணுவித்து, பின்பு பஞ்சாம்ருதஸ்நாநம் பண்ணுவித்து, ஈசாநபாகத்தில் ஸங்கர்ஷணகும்பமொழிந்த நாலு



கும்பங்களையுங்கொண்டு ஸ்ரீபுருஷஸூக்தத்தாலே திருமஞ்ஜநம் பண்ணுவித்து, முதலிகள் தீர்த்தங்கொண்டு, சுருளமுதுதிருத்தி வேண்டிக்கொண்டு, அவர்களை வலம் வந்து, வாசல்முன்னில் கோமயக்ருத † ஸ்தலத்தின்மேலே த்ரோணவ்ரீஹிபரப்பி, உலூகலமுஸலங்களை மந்த்ரபூதஸ்நாநம்பண்ணுவித்து, நவவஸ்த்ரவேஷ்டநம்பண்ணி, அவ்வுலூகலத்தை ஸ்தண்டிலோபரிக்ருத வ்ரீஹியின்மேலே வைத்து, அதிலே ஹரித்ராநிக்ஷேபணம்பண்ணி, ஶுத்தவஸ்த்ரஶுக்லமாலாலங்க்ருதைகளாய் சக்ரமுத்ராமுத்ரிதைகளாய் வைஷ்ணவிகளான தாஸிகள் த்ரிவிக்ரமன் திருவீதியை வலம்வந்து திருவாசலில் ஸ்ரீவைஷ்ணவஸமூஹத்துக்குத் தண்டனிட்டு, ஸ்ரீவைஷ்ணவாநுஜ்ஞைகொண்டு நடுவேவந்து நவவஸ்த்ரவேஷ்டிதமேருதைவத்யமான அம்முஸலத்தைக் கைக்கொண்டு த்வாதஶநாமோச்சாரணம்பண்ணித் திருச்சூர்ணமிடிக்க, திருவரங்கப்பெருமாளரையர் முதலானார் ஸ்தண்டிலமத்யஸ்தமாய் நவகண்ட ப்ருதிவ்யாகாரமாக உல்லேகநம்பண்ணி வ்ரீஹ்யுபரிஸ்தாபிதமாய் பூமிதைவத்யமான உல்லேகநத்தில் அஷ்டதிக்குக்களிலும் திவ்யசூர்ண திவ்யதைல திவ்யாநுலேபந திவ்யமால்ய திவ்யலாஜ திவ்யதுக்த திவ்யததி திவ்யசுத்தஜலபூர்ணங்களாய் தர்ப்ப பவித்ராஶ்வத்த பத்ரபவித்ரிதங்களான கலசங்களை த்வயாநுஸந்தாநத்துடன் ஸ்தாபித்து, பரமாகாஶதைவத்யமான நவசூர்ப்பத்திலே திவ்யநக்ஷத்ரதைவத்யமான நிஸ்துஷநவலாஜத்தை நிறைத்துப் பூர்வதிக்கிலே வைத்து, ஸ்ரீவைஷ்ணவர்களைத் தீர்த்தங்கொண்ட ஸ்ரீபாத தீர்த்தம் நிறைந்த கும்பத்தை மேற்கேவைத்து, ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸமர்ப்பணீயமான த்ரவ்யக்கிழியை வடக்கே வைத்து, பெருமாள் சாத்திக்களைந்துவாவிட்டருளின திருமாலை திருப்பரியட்டப்ரஸாதங்களையும் பொற்றளிகையிலே தென்னருகே வைத்து, ஆளவந்தாரைத் தண்டனிட்டு விமலசரமவிக்ரஹத்தை நெஞ்சுள்ளும் கண்ணுள்ளும் தேக்கிக்கொண்டு சூழவெழுந்தருளியிருந்து, திருப்பல்லாண்டுகண்ணிநுண்சிறுத்தாம்பு சூழ்விசும்பணிமுகில் இவைகளைத் திருவரங்கப்பெருமாளரையர் இசையுடன் இயலாக அநுஸந்தித்து, திவ்யந்ருத்தகீத வாத்யத்துடன் திருவீதியிலே திருவிருத்தத்தை இயலாக அநுஸந்தித்துக்கொண்டு வலம்வந்து மடத்துவாசலிலே, இயல்சாத்தி, திவ்யதைல

† 'ஸ்தண்டிலத்தின்மேலே' என்று ப்ரதிபேதம்.

திவ்யசூர்ணங்கள் சாத்தி நீராட்டி, பெருமாள்சாத்திக்களைந்து வரவிட்டருளின திவ்யாநுலேபந திவ்யமால்ய திவ்யபீதாம்பரங்களையும் ஆளவந்தாருக்குச் சாத்தி அலங்கரித்து, ஆளவந்தார் திருமேனியில் சாத்திக்களைந்ததாய்த் தத்ப்ரஸாதமாய் ஶேஷித்த எண்ணெய்ப்ரஸாதம் ஸ்ரீசூர்ணப்ரஸாதங்களெல்லாம் திருவரங்கப்பெருமாளரையர் முதலானோரெல்லாரும் ப்ரஸாதப்பட்டு, அப்போதையிலிருப்பை நெஞ்சிலே ஶுபாஶ்ரயமாகத் தேக்கிக்கொண்டு, ஸ்ரீபாதத்திலே விழுந்து திருவடிகளைத் திருக்கண்களிலும் திருமார்பிலும் திருமுடியிலும் தரித்து, அவர்ப்ரபத்தியை யநுஸந்தித்துத் திருமிடறுதழுதழுப்பத் திருமேனிகள்வாடத் திருமுத்துதிர்த்துத் திருமூக்கு வெப்படிக்க ஆசார்ய விஶ்லேஷாஸஹிஷ்ணுக்களாய் ஆர்த்தராய்ப் பரவசராய்க் கொண்டு சோகிக்க, அங்குள்ள முதலிகள் வந்து இவர்கள் திருக்கண்களைத் துடைத்து ஆஶ்வஸிப்பித்துத் தேற்ற, தேறிநின்று *மென்மையிலே மெள்ள நடையிட்டுவந்து பீடயாநத்திலே ஆளவந்தாரை யேறியருளப்பண்ணி அநுஸந்தாநத்துடன் ஸ்ரீபாதம் தாங்கிக்கொண்டு, திருச்சங்கு பணிமாற ந்ருத்தகீத வாத்யங்கள் எங்கும் முழங்க, வேதபாராயணம்பண்ண அருளிச்செயல் இயல் நடக்க, நடைபாவாடையிட்டுக் கரும்பும் குடமும் ஏந்திப் பொரியும் புஷ்ப புஞ்சமும் எங்குஞ் சிதற, திருப்பதியில் ஸுமங்கலிகள் மங்கள தீபமேந்தி முன்னேசெல்ல, இருபக்கமும் சாமரமிரட்ட, வெள்ளை வட்டமிட, 'தர்ஶநத்திலே ஆளவந்தார் திருநாட்டுக்கு எழுந்தருளினார்' என்று திருச்சின்னம் பணிமாற, திருவீதிகள்தோறும் வலம் வந்து திருக்கரம்பன்துறையிலே யெழுந்தருள்வித்துக்கொண்டுபோய், ஒழிந்த ஸங்கர்ஷணகும்பபூர்ணஜலங்கொண்டு அநுஸந்தாநத்துடன் திவ்யஸ்தலஶுத்திபண்ணி யதிஸம்ஸ்காரவித்யுக்தமான படிகளடங்கச் செய்து கநித்துப் பள்ளிபடுத்துகிறவளவிலே,—

அங்கே பெரியநம்பி பயணகதியிலேபோய்ப் பெருமாள்கோயிலுக்கு எழுந்தருளி இச்செய்தியைத் திருக்கச்சிநம்பிக்கு அருளிச்செய்து, அவர் புருஷகாரமாகப் பேரருளாளர் ஸந்நிதிக்குச் சென்று அவர்முன்பே ஸ்தோத்ரத்தை அநுஸந்தித்துத் தீர்த்தப்ரஸாதமும் ஸ்வீகரித்து ஸந்நிதியினின்றும் புறப்பட்டு, இளையாழ்வார் திருமஞ்சநங் கொண்டுவருகிற சாலைக்கிணற்று வழியிலே ஆளவந்தார்ஸ்தோத்ரத்தை அநுஸந்தித்துக் கொண்டிருக்க, (க) "ப்ரஹ்மாஶிவஶ்ஶதமகஃபரமஸ்வராடித் யேதேபியஸ்யமஹிமார்ணவவிப்ருஷஸ்தே" என்கிற ஶ்லோகத்தை இளையாழ்வாரும் கேட்டருளி 'இது அருளிச்செய்தார் ஆர்?' என்று பெரியநம்பியைக் கேட்க, 'ஆளவந்தார் திவ்ய ஸூக்தி' என்று பெரியநம்பி அருளிச்செய்ய, இவரும் 'அவரை அடியேன் ஸேவிக்கவேணும்' என்ன, நம்பியும் 'ஆகில், நீர் நம்மோடே சேரவாரீர்' என்று அருளிச்செய்ய, இவரும் திருமஞ்சநத்தைப் பெருமாள் திருமுன்பே ஸமர்ப்பித்துப் பெருமாளை ஸேவித்து விடைகொண்டு, திருக்கச்சிநம்பியையும் ஸேவித்து அவர்க்கு இச்செய்தியை விண்ணப்பஞ்செய்து பெரியநம்பியுடனே புறப்பட்டுக் கோயிலுக்கு ஆஸந்நமாக எழுந்தருளி வாராநிற்க, திருக்கரம்பன்துறையிலே பெரிய திரளைக்கண்டு 'இத்திரள் ஏது?' என்று எதிரேவருகிறவர்களைக் கேட்க, அவர்களும் 'ஆளவந்தார் திருநாட்டுக்கு எழுந்தருளினார்' என்ன; இத்தைக்கேட்டு இவரும் ஏங்கி மோஹித்து விழுந்து ஶோகார்ணவ நிமக்நராய்க் கிடந்து துடிக்க, அவ்வளவிலே இளையாழ்வாரும் (உ) "பஹுதா விலலாப ஹ" என்னுமாபோலே பலவகையாகப் புலம்பி அஸ்தமிதாந்யபாவராய் நிவர்த்தநோந்முகராய்க் * கண்பனி சோர நிற்க, பெரியநம்பியும் வாளேறுகாணத் தேளேறு மாயுமாபோலே தம்முடைய வ்யஸநத்தை மறந்து (ங) "ஶ்ரேயாம்ஸி பஹுவிக்நாநி பவந்தி மஹதாமபி" என்கிறபடியே ஶ்ரேயஸ்ஸுக்களுக்கு அநேக விக்நங்கள் பெரியோர்களுக்கும் உண்டாம்; ஆகையாலே, நீர் சோகிக்க வேண்டா, என்று இளையாழ்வாரைத் தேற்றி அவரைக் கையைப் பிடித்துக்கொண்டுபோய் ஆளவந்தாருடைய விமலசரமவிக்ரஹத்தை ஸேவிக்கப்பண்ண, இளையாழ்வாரும் அவரைத் தண்டனிட்டு 'இது ஒரு அலப்யலாபமிருந்தபடி யென்!' என்று விஸ்மிதராய் ஆபாதசூடமாக ஸேவிக்குமளவில் மூன்று திருவிரல்கள் முடங்கியிருக்க, இவரும்

*'மேன்மையிலே' என்று ப்ரதிபேதம்.

(க) ब्रह्माशिवशतमखः परमस्वराडित्येतेऽपि यस्य महिमार्णवविप्रुषस्ते

(உ) बहुधा विललाप ह

(ங) श्रेयांसि बहुविघ्नानि भवन्ति महतामपि

அதுகண்டு ‘முன்னும் இவர்க்கு இப்படியுண்டோ?’ என்று முதலிகளைக் கேட்க, அவர்களும் ‘முன்பு இல்லை’ இப்போது கண்டதித்தனை, என்ன, இளையாழ்வாரும் ‘இவர்திருவுள்ளத்தில் ஏதேனும் ஒரு கருத்து உண்டாகவேணும்’ என்று விசாரித்தருளி, முதலிகளைப் பார்த்து ‘முன்பு வ்யாக்யாநஸமயங்களிலே அபிமதஸல்லாபங்களைக் கேட்டிருந்தவர்கள் உண்டோ?’ என்ன, ஸ்ரீபாதத்துமுதலிகளெல்லாருங் கூடி ‘வேறொன்றுமறியோம்; வ்யாஸபராஶரிடத்திலே உபகாரஸ்ம்ருதியும், நம்மாழ்வார்பக்கல் ப்ரேமாதிஶயமும், வ்யாஸ ஸூத்ரத்திற்கு விஶிஷ்டாத்வைதபரமாக வ்யாக்யாநலாஞ்சையும் பலகாலும் அருளிச்செய்யக் கேட்டிருக்கையாயிருக்கும்’ என்ன, இவரும் அகவாயிலெண்ணமறிந்து ‘இஶ்ஶரீரம் த்ருடமாய், இவ்வாசார்யக்ருபையும் அடியேனிடத்தில் பரிபூர்ணமாய், ஸர்வேஶ்வரன் அடியேன் நினைத்தபடி கூட்டுவானாகில், இம்மூன்றிழவுகளையும் தீர்க்கக்கடவேன்’ என்ன, உடனே திருவிரல்கள் நிமிர, இத்தை அகிலரும் கண்டு ஆஶ்சர்யப்பட்டு ‘இவ்வாசார்யக்ருபையும் உம்மிடத்திலேயுண்டு; இவருடைய திவ்யஶக்தியும் உம்மிடத்திலே கூடும்; நீரே இத்தர்ஶநத்துக்கு நிர்வாஹகராவீர்’ என்று ஸர்வரும் இவரை மங்களாஶாஸநம் பண்ண, இளையாழ்வாரும் “கண்ணுள்நீங்கா என்னெஞ்சுள்ளும்நீங்காவே” என்கிறபடியே அவ்விக்ரஹத்தை ஸேவித்துக் கண்ணிலும் நெஞ்சிலுந் தேக்கிக்கொண்டு ‘நம்பெருமாள் நமக்குச் செய்தபடி என்!’ என்று போரக்லேஶித்து அவப்ருதஸ்நாநஞ்செய்தருளிப் பெரியநம்பியைத் தண்டன்ஸமர்ப்பித்து, நம்பெருமாளையும் திருவடிதொழாதே அவரைவெறுத்து மீண்டு பெருமாள்கோயிலேற எழுந்தருளினார். பின்பு ஆளவந்தாரை கநித்துத் திருப்பள்ளிபடுத்துச் செய்யவேண்டுங் க்ருத்யங்களெல்லாஞ் செய்தருளினார்கள்.

அநந்தரம், இளையாழ்வாரும் பயணகதியிலே பெருமாள்கோயிலுக்கு எழுந்தருளித் திருக்கச்சிநம்பி ஸ்ரீபாதத்திலே தண்டனிட்டு இச்செய்தியை விண்ணப்பஞ்செய்ய, அவரும் போரக்லேஶிக்க, இவரும் எண்ணினவாறு ஆகாமையாலே அத்யந்தம் அவஸந்நராய் க்லேஶிக்க, திருக்கச்சிநம்பியும் ‘பேரருளாளர் ஸர்வஜ்ஞரும் ஸர்வஶக்தருமன்றோ? உம்முடைய நினைவின்படியே தலைக்கட்டியருளுவர்; அஞ்சவேண்டா’ என்று தேற்றமிட்டு, பின்பு ஆளவந்தாருக்கு ஸ்ரீசூர்ணபரிபாலனஞ்சய்து பெருக்கத்திருவத்யயநம்நடத்தியருளினார்.



ஆளவந்தார் திருநக்ஷத்ரம் - ஆடியில் உத்தராடம்.

அவர்தனியன் - (௧) “ஸ்ரீராமமிஶ்ரஸச்சிஷ்யம் வந்தேதத்வார்த்தகோவிதம் - வாதாதவாப்த † ராஜ்யாத்யோ விரக்தோயாமுநோZபவத்,” “யத்பதாம் போருஹத்யாந வித்வஸ்தாஶேஷகல்மஷ:-வஸ்துதாமுபயாதோZஹம் யாமுநேயம்நமாமிதம்”, (௨) “ஸிர்ஹாநநாம்ஶபவமீஶ்வரயோகிஸிந்து முக்தாமணிம் மஹிதநாதமுநீந்த்ரபௌத்ரம் - ப்ராஜ்ஞாவிஶேஷஜலதிம்ப்ரதிவாதிதூல ஜஞ்ஜாநிலம்ஹ்ருதயசிந்தயயாமுநார்யம்”.

இளையாழ்வாரும் தைர்யாவலம்பியாய்ப் பேரருளாளரைஸேவித்துப் பூர்வம்போலே திருமஞ்ஜநகைங்கர்யம் செய்துகொண்டிருந்தார்.

பின்பு நம்பிபக்கல் இளையாழ்வாருக்கு ப்ரேமம் முதிர்ந்துவர, நம்பிக்கும் இவர்பக்கல் க்ருபை மிகுந்துவர, நம்பியுடைய ப்ரபாவமெல்லா மறிந்து அவர் ஸ்ரீபாதத்திலே ஆஶ்ரயிக்கவேணும்’ என்று சென்று தண்டன்ஸமர்ப்பித்து ‘இவ்வாத்மாவைத் தேவரீர் உஜ்ஜீவிப்பித்தருளவேணும்’ என்ன, நம்பியும் வாரீர் இளையாழ்வீர்! பேரருளாளர் * பொருளல்லாதவென்னைப் பொருளாக்கி, அடிமைகொண்டது கண்டு நீர் விரும்பினீர்; (௩) “கிமப்யத்ராபி ஜாயந்தே யோகிநஸ்ஸர்வயோநிஷு - ப்ரத்யக்ஷிதாத்மநாதாநாம் நைஷாம்சிந்த்யங்குலாதிகம்” என்கிறபடியே ஆத்மகுணத்துக்குச் சேர்ந்திருந்துள்ள பரம வைதிக நிஷ்டையையுடையராய் ஆஶ்ரயிக்க நினைத்தீர்; ஆகிலும் வர்ணாஶ்ர

---

(௧) 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌮𑌿𑌶𑍍𑌰𑌸𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌯𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌗𑍋𑌵𑌿𑌦𑌮𑍍 । 𑌵𑌾𑌦𑌾𑌦𑌵𑌾𑌪𑍍𑌤𑌰𑌾𑌜𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑍋 𑌵𑌿𑌰𑌕𑍍𑌤𑍋 𑌯𑌾𑌮𑍁𑌨𑍋𑌽𑌭𑌵𑌤𑍍 । 𑌯𑌤𑍍𑌪𑌦𑌾𑌮𑍍𑌭𑍋𑌰𑍁𑌹𑌧𑍍𑌯𑌾𑌨 𑌵𑌿𑌧𑍍𑌵𑌸𑍍𑌤𑌾𑌶𑍇𑌷𑌕𑌲𑍍𑌮𑌷𑌃 । 𑌵𑌸𑍍𑌤𑍁𑌤𑌾𑌮𑍁𑌪𑌯𑌾𑌤𑍋𑌽𑌹𑌂 𑌯𑌾𑌮𑍁𑌨𑍇𑌯𑌂 𑌨𑌮𑌾𑌮𑌿 𑌤𑌮𑍍 ॥

(௨) 𑌸𑌿𑌂𑌹𑌾𑌨𑌨𑌾𑌂𑌶𑌭𑌵𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌯𑍋𑌗𑌿𑌸𑌿𑌨𑍍𑌧𑍁 𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌮𑌣𑌿𑌂 𑌮𑌹𑌿𑌤𑌨𑌾𑌥𑌮𑍁𑌨𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌪𑍌𑌤𑍍𑌰𑌮𑍍 । 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌵𑌿𑌶𑍇𑌷𑌜𑌲𑌧𑌿𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑌾𑌦𑌿𑌤𑍂𑌲𑌝𑌞𑍍𑌝𑌾𑌨𑌿𑌲𑌂 𑌹𑍃𑌦𑌯 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯 𑌯𑌾𑌮𑍁𑌨𑌾𑌰𑍍𑌯𑌮𑍍 ॥

(௩) 𑌕𑌿𑌮𑌪𑍍𑌯𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 𑌯𑍋𑌗𑌿𑌨𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌯𑍋𑌨𑌿𑌷𑍁 । 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌥𑌾𑌨𑌾𑌂 𑌨𑍈𑌷𑌾𑌂 𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌂 𑌕𑍁𑌲𑌾𑌦𑌿𑌕𑌮𑍍

† ‘ராஜ்யஸ்து விரக்தோயோZபவந்முநி:’ என்று ப்ரதிபேதம்.

மத்துக்கடுத்த வைதிகமரியாதைக்குப் போந்திராது' என்று விலக்கியருளினார்.

அதின் மற்றைநாள், இளையாழ்வாருக்குத் திருக்கச்சிநம்பியினிடத்தில் ப்ரஸாதப்ரதிபத்திபிறந்து, ததக்வயபுத்யா நம்பியை 'அடியேன் குடிசையிலே அமுதுசெய்யவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, நம்பியும் ஸம்மதித்தருள, இளையாழ்வாரும் அதிப்ரீதியோடே தந்திருமாளிகையிலே எழுந்தருளி இச்செய்தியைத் தேவியாருடன் அருளிச்செய்து 'தளிகைக்குப் பாங்காகப்பண்ணி நன்றாக ஸவ்யஞ்ஜநாங்கம் செய்' என்று நியமித்தருளித் தாமும் நீராடி நித்யகர்மாநுஷ்டானங்களையும் செய்தருளித் திருமஞ்சநமும் சடக்கெனக்கொண்டு வந்து பேரருளாளர்க்கு ஸமர்ப்பித்துத் தம்முடைய க்ருஹார்ச்சனையான பேரருளாளரையும் அமுதுசெய்தருளப்பண்ணி, நம்பியையழைக்கத் தெற்குத்திருவீதியாலே நம்பிமடத்தை நோக்கி மேற்கே எழுந்தருளினார். அதற்குமுன்னே நம்பியும் மடத்தினின்றும் புறப்பட்டுப் பெருமாளையும் ஸேவித்து மற்றொருதிருவீதியாலே இளையாழ்வார் திருமாளிகையிலே எழுந்தருளி 'திருவாலவட்டகைங்கர்யத்துக்கு உதவப் போகவேணும்' என்று சடக்கென அமுதுசெய்து எழுந்தருளினார். அநந்தரம் இளையாழ்வார்தேவிகளும் அவர் அமுதுசெய்தருளின தளிகையைக் கோலாலேதள்ளி அவ்விடத்தைக்கோமயத்தாலே ஸ்தலஶுத்திபண்ணித்தெளித்துத் தாமும்நீராடிநிற்கிறவளவிலே, இளையாழ்வாரும் மடத்தே தேடிக்காணமல் மீண்டெழுந்தருளித் தேவிகள்நீராடினபடியைக் கண்டு 'இதென்?' என்று கேட்டருள, தேவிகளும் 'அந்த ஸ்ரீவைஷ்ணவர் எழுந்தருளி அமுதுசெய்து திருவாலவட்ட கைங்கர்யஞ் செய்யவேணுமென்று மீண்டு எழுந்தருளினார்; அவர் சாத்தாதவராகையாலே, அவர் அமுதுசெய்த இலைத்தளிகையைக் கோலாலேதள்ளிக் கோமயத்தாலே ஸ்தலஶுத்திபண்ணினேன்; அத்தாலே ஶரீரம் அலம்பவேண்டிற்று' என்ன, இவரும் அவளைப் பார்த்து நீராடினதற்கு மிகவும்கோபித்துத் தம்அபீஷ்டம் ஸித்தியாதபடியாலே போரக்லேஶித்து 'இனி நமக்குச் செய்யஅடுப்பதென்?' என்று "எண்ணுதனகளெண்ணும்" என்கிறபடியே தம்திருவுள்ளத்திலே விசாரித்தருளி நம்பிமடத்தேற எழுந்தருளி நம்பிபாடே சென்று, 'அடியேன் சிலநினைவுகள் நினைத்திருந்தேன்; அவை எவையென்று தேவரீர் பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்து' அவர் அருளிச்செய்ததைத் தேவரீர் அடியேனுக்கு அருளிச்செய்யவேணும்' என்று இளையாழ்வார் விண்ணப்பஞ்செய்ய, நம்பியும் அன்றுராத்ரி பெருமாளை அநுபவித்து ஏகாந்தமானவளவிலே, 'நம்பி! நம்முடன் சிலவார்த்தை சொல்லுவான்போலேயிருந்தாயே!' என்று பெருமாள் திருவுள்ளமாயருள, நம்பியும் பெருமாளுடனே 'இளையாழ்வார், சில நினைவுகள் நினைத்திருந்தேன், அவையெவ்வையென்று தேவரீரைக் கேட்டு வந்து சொல்லவேணுமென்று மிகவும் ஆதரவாயிராநின்றார்; அவற்றையருளிச்செய்யவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, பெருமாளும் 'ஸஹஜதாஸ்யத்தையுடையனாய்ச் சந்தாநுவர்த்தநம் பண்ணியிருப்பானொருத்தன் நாம் ஸாந்தீபனுடனே வித்யாப்யாஸம்பண்ணினாப்போலே பலவிடங்களிலே ஸகலஶாஸ்த்ரங்களையும் அலகலகாக அறிந்திருப்பானொருத்தன், நம்மைக்கேட்பிக்கிறானித்தனை. "பரதத்வம் நாமே, பேதமே தர்ஶநம், உபாயமும் ப்ரபத்தியே, அந்திமஸ்ம்ருதியும் வேண்டா, ஶரீராவஸாநத்திலே மோக்ஷம், பெரியநம்பி திருவடிகளிலே ஆஶ்ரயிப்பது" என்று இவ்வாறு வார்த்தையையும் பேரருளாளர் திருவுள்ளமாயருள, நம்பியும் இவற்றைக்கேட்டு வந்து விடிவோரை இவரையழைத்து 'இளையாழ்வீர்! பேரருளாளர் திருவுள்ளம்பற்றியருளின வார்த்தைகளைக் கேளீர்' என்று அவற்றையருளிச்செய்து 'இவையோ உமக்கு நினைவு?' என்ன, 'ஆம்' என்று இளையாழ்வார் போரப்ரீதராய் நம்பி ஸ்ரீபாதத்திலே தண்டன்ஸமர்ப்பிக்க, நம்பியும் 'இவர்நினைவும் பெருமாள்திருவுள்ளமும் ஒன்றாயிருந்தபடி என்!' என்று மிகவும் உகந்தருளினார்.

## இளையாழ்வார் பெரியநம்பிகளிடத்து ஆஶ்ரயித்த வைபவம்.

அக்காலத்திலே கோயிலிலே ஆளவந்தார் ஸ்ரீபாதத்துமுதலிகளெல்லாரும் திரளாகவிருந்து பெரியநம்பியுடனே 'இத்தர்ஶநத்துக்குக் கடவர் ஆர்?' என்ன, பெரியநம்பியும் முதலிகளைக்குறித்து 'ஆளவந்தார் முன்பு நினைவிட்டு விஶேஷகடாக்ஷம் பண்ணியருளினதும், திருவிரல்கள்நிமிர்ந்த ஏற்றமும் உங்கள் திருவுள்ளங்களிலே நிலையிடவில்லையோ? ஸர்வதா ஆளவந்தாரபிமாநம் பொய்யாகமாட்டாது' என்ன, முதலிகளெல்லோரும் கூடி ஸம்மதித்து "இன்னமும் தேவரீர் எழுந்தருளி இளையாழ்வாரை விஶேஷகடாக்ஷஞ் செய்தருளி நந்தர்ஶநப்ரவர்த்தகராம்படி திருத்தி அழைத்துக்கொண்டு வரவேணும்'

என்று பெரியநம்பிக்கு விண்ணப்பஞ்செய்ய, நம்பியும் அப்போதே குடும்ப ஸஹிதமாகப் புறப்பட்டு நம்பெருமாள் ஸந்நிதியிற் சென்று ஸேவித்து விண்ணப்பஞ்செய்து அவரநுமதிகொண்டு த்வரித்துப் புறப்பட்டுப் பெருமாள் கோயிலுக்கு எழுந்தருளா நிற்கச்செய்தே, ஸ்ரீமதுராந்தகத்திலே ஏரிகாத்த பெருமாள்கோயிலிலே அவஸரித்து எழுந்தருளி யிருந்தவளவிலே;

இளையாழ்வாரும் தமக்குப் பேரருளாளர் திருக்கச்சிநம்பிமுகேந நியமித்தருளினபடியே பெரியநம்பி ஸ்ரீபாதத்திலே ஆஶ்ரயிப்பதாகப் புறப்பட்டுத் திருக்கச்சிநம்பியையும் பேரருளாளப்பெருமாளையும் ஸேவித்து அவர்களநுமதிகொண்டு கோயிலுக்கு எழுந்தருளாநிற்க ஸ்ரீமதுராந்தகம் வழியாகையாலே இவரும் அங்கே ஏரிகாத்தபெருமாளை ஸேவிப்பதாக வெழுந்தருள, ஏரிகாத்தபெருமாள்கோயிலிலே பெரியநம்பி எழுந்தருளியிருக்க இளையாழ்வாரும் தூரத்திலே கண்டு அத்யாஶ்சர்யப்பட்டு 'எண்ணின பலம் எதிரேவந்துவாய்த்ததுபோல் நம்பி நமக்கெதிரே எழுந்தருளி க்ருபைசெய்ய வந்தபடி *கண்டாயே! நெஞ்சே!' என்று நிர்ப்பராநந்த பாஷ்பங்களையுடையராய்ப் பெரிய நம்பி திருவடிகளிலே ஹர்ஷஸம்ப்ரமத்துடனே தண்டன்ஸமர்ப்பித்து நிற்க, நம்பியும் தம்அபிலாஷை அதிஶீக்ரமாய் எதிரேவந்து ஸித்திக்கக் கண்டு ஆநந்தநிர்ப்பரராய் இளையாழ்வாரை வாரியெடுத்து அணைத்துக்கொள்ள, இளையாழ்வாரும் 'அடியேனுக்கு இப்போதே தேவரீர் ஸமாஶ்ரயணம் செய்தருளி ரக்ஷித்தருளவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, நம்பியும் '(க) "அஸ்திஹஸ்திகிரிர்நாமதத்ரஶைலவரோமஹாந்-விதாத்ராப்யர்ச்சிதோ விஷ்ணுஸ் தஸ்யஶைலஸ்யமூர்த்தநி-புண்யகோடிவிக்யாதம் விமாநம்புண்ய வர்த்தநம்" என்று சொல்லப்படுகிற ஹஸ்திகிரியிலே புண்யகோடிவிமாநமத்யத்திலே ப்ரஹ்மாதிஸகல சேதநராலும்ஸேவ்யமாநரான பேரருளாளர்ஸந்நிதியிலே செய்கிறோம்' என்று அருளிச்செய்ய, இளையாழ்வாரும் 'காலக்ஷேபம் பண்ணவொண்ணாமைக்கு ஆளவந்தார்பக்கல் கண்டது அமையாதோ? *மின்னின் நிலையில்லாத அடியேனுடைய இஶ்ஶரீரம் இருக்கிறபோதே க்ருபை

(க) 𑌅𑌸𑍍𑌤𑌿 𑌹𑌸𑍍𑌤𑌿𑌗𑌿𑌰𑌿𑌰𑍍𑌨𑌾𑌮 𑌤𑌤𑍍𑌰 𑌶𑍈𑌲𑌵𑌰𑍋 𑌮𑌹𑌾𑌨𑍍 ।
𑌵𑌿𑌧𑌾𑌤𑍍𑌰𑌾𑌽𑌭𑍍𑌯𑌰𑍍𑌚𑌿𑌤𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌤𑌸𑍍𑌯 𑌶𑍈𑌲𑌸𑍍𑌯 𑌮𑍂𑌰𑍍𑌧𑌨𑌿
𑌪𑍁𑌣𑍍𑌯𑌕𑍋𑌟𑌿𑌵𑌿𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌵𑌿𑌮𑌾𑌨𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌵𑌰𑍍𑌧𑌨𑌮𑍍 ।



பண்ணியருளவேணும்' என்று விண்ணப்பஞ்செய்து திருவடிகளிலே விழுந்துகிடக்க, பெரியநம்பியும் இவரை முடிபிடித்தெடுத்து 'இவருடைய ஆர்த்தியிருந்தபடியென்!' என்று மிகவும் உகந்த திருவுள்ளத்தராய் இளையாழ்வாரைக்கையைப்பிடித்து அழைத்துக்கொண்டுபோய் ஏரிகாத்தபெருமாள் கோயில்திருமகிழடியிலே எழுந்தருளியிருந்து (க) "மந்த்ரஸம்ஸ்காரஸித்யர்த்தம் மந்த்ரதீக்ஷாவிதௌததா-சக்ரஸ்யதாரணம்ப்ரோக்தம் மந்த்ரை: பஞ்சாயுதாநிவா" என்றும், (உ) "சக்ராதிதாரணம்பும்ஸாம் பரஸம்பந்தவேதநம் - பதிவ்ரதாநிமித்தம்ஹி வலயாதிவிபூஷணம்" என்றும் சொல்லுகிறபடியே திருவிலச்சினை ப்ரஸாதித்து, (ந) "நிவேஶ்யதக்ஷிணேஸ்வஸ்ய விநீதாஞ்ஜலிஸம்யுதம் - மூர்த்நிஹஸ்தம்விநிக்ஷிப்ய தக்ஷிணம்ஜ்ஞாநதக்ஷிணம் - ஸவ்யந்துஹ்ருதிவிந்யஸ்ய க்ருபயாவீக்ஷயேத்குரு:-ஸ்வாசார்யம்ஹ்ருதயேத்யாத்வா ஜப்த்வாகுருபரம்பராம் - ஏவம்ப்ரபத்யதேவேஶமாசார்ய: க்ருபயாஸ்வயம்- அத்யாபயேந்மந்த்ரரத்நம் ஸர்ஷிச்சந்தோதிதைவதம்" என்று சொல்லுகிற க்ரமத்திலே பெரியநம்பியும் ஸவிநயரான இளையாழ்வாரைத் தம்முடைய வலப்புறத்திலே வைத்துத் தம் திருக்கைகளாலே அவர் ஶிரஸ்ஸை ஸ்பர்ஶித்துக்கொண்டு ஸதாசார்யரான ஆளவந்தார் திருவடிகளை ஸ்மரித்துக்கொண்டு குருபரம்பரா பூர்வகமாக மந்த்ரரத்நமான த்வயத்தை ஸாங்கோபாங்கமாக இளையாழ்வாருடைய வலத்திருச்செவியிலே உபதேசித்தருளி, 'பெருமாள் காட்டுக்காக ஸ்ரீபரதாழ்வான் தலையிலே திருவடிநிலைகளை வைத்துக் காட்டுக்கு எழுந்த

(க) 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌦𑍀𑌕𑍍𑌷𑌾𑌵𑌿𑌧𑍌 𑌤𑌦𑌾 । 𑌚
𑌕𑍍𑌰𑌸𑍍𑌯 𑌧𑌾𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍈𑌃 𑌪𑌞𑍍𑌚𑌾𑌯𑍁𑌧𑌾𑌨𑌿 𑌵𑌾 ॥

(உ) 𑌚𑌕𑍍𑌰𑌾𑌦𑌿𑌧𑌾𑌰𑌣𑌂 𑌪𑍁𑌂𑌸𑌾𑌂 𑌪𑌰𑌸𑌮𑍍𑌬𑌨𑍍𑌧𑌵𑍇𑌦𑌨𑌮𑍍 ।
𑌪𑌤𑌿𑌵𑍍𑌰𑌤𑌾𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌂 𑌹𑌿 𑌵𑌲𑌯𑌾𑌦𑌿𑌵𑌿𑌭𑍂𑌷𑌣𑌮𑍍 ॥

(ந) 𑌨𑌿𑌵𑍇𑌶𑍍𑌯 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌸𑍍𑌵𑌸𑍍𑌯 𑌵𑌿𑌨𑍀𑌤𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍 ।
𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑌿 𑌹𑌸𑍍𑌤𑌂 𑌵𑌿𑌨𑌿𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌯 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌮𑍍 । 𑌸𑌵𑍍𑌯𑌂 𑌤𑍁
𑌹𑍃𑌦𑌿 𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌕𑍃𑌪𑌯𑌾 𑌵𑍀𑌕𑍍𑌷𑌯𑍇𑌦𑍍𑌗𑍁𑌰𑍁𑌃 । 𑌸𑍍𑌵𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌂 𑌹𑍃𑌦
𑌯𑍇 𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌾 𑌜𑌪𑍍𑌤𑍍𑌵𑌾 𑌗𑍁𑌰𑍁𑌪𑌰𑌮𑍍𑌪𑌰𑌾𑌮𑍍 ॥ 𑌏𑌵𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯 𑌦𑍇𑌵𑍇
𑌶𑌮𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌃 𑌕𑍃𑌪𑌯𑌾 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 । 𑌅𑌧𑍍𑌯𑌾𑌪𑌯𑍇𑌨𑍍𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌰𑌤𑍍𑌨𑌂 𑌸𑌰𑍍𑌷𑌿𑌚𑍍𑌛
𑌨𑍍𑌦𑍋𑌦𑌿𑌤𑌦𑍈𑌵𑌤𑌮𑍍 ॥

ருளினாப்போலே ஆளவந்தாரும் உமக்காகத் தம்முடைய திருவடித் தாமரைகளை என்தலைமேலே வைத்துத் திருநாட்டுக்கு எழுந்தருளினாரென்றிருங்கிடீர்' என்று இளையாழ்வாருக்கு அருளிச்செய்தருளினார். ஆளவந்தாருக்குக் கரணபூதரிறே பெரியநம்பி. இளையாழ்வார்க்கு நேரே ஆசார்யர் யமுனைத்துறைவரேயாம். ஆகையாலேயிறே, "எதிகட்கிறைவன் யமுனைத்துறைவனிணையடியாங்கதிபெற்றுடையவிராமாநுசன்" என்று பிள்ளையமுதனார் அருளிச் செய்ததும்.

இளையாழ்வாரும் 'ப்ரமாணம் எது? ப்ரமேயமெது? ப்ரமாதாக்கள் ஆர்?' என்று பெரியநம்பியைக்கேட்க அவரும் "மாதவன் பேர் சொல்லுவதே யோத்தின்சுருக்கு" என்கிறபடியே ப்ரமாணமும் த்வயமே; ப்ரமேயமும் இத்தால் ப்ரதிபாத்யனாய் ஸ்ரீஹஸ்திகிரியின் மேலே கைபுந்திருவாழியுமாய் நிற்கிற பெருமாளே; ப்ரமாதா நீர் தாம்; இந்தப்ரமாணத்தாலே ப்ரமேயத்தை அநுபவிக்கவாரும்' என்று அருளிச்செய்து, அதின்மற்றைநாள் புறப்பட்டு ஏரிகாத்தபெருமாளைத் திருவடிதொழுது '(க) "ஸாமோலோகரஞ்ஜந:" என்னுமாபோலே தேவரீர்திருநாமத்துக்குத்தகுதியாகஇத்தர்மநம்பிந்தடாகமாகாதபடி செய்தருளிற்றே!' என்று மங்களாஶாஸநம்பண்ணியருளிப் பெருமாள் கோயிலேற வெழுந்தருள, திருக்கச்சிநம்பியும் எதிரேவந்து பெரிய நம்பியை ஸேவிக்க, அவரையும் க்ருபைபண்ணி அவர் புருஷகாரமாக *உலகேத்து மாழியானத்தியூரானை பேரருளாளனையும் ஸேவித்து, நாதமுனிகள் உய்யக்கொண்டாருக்கு அருளிச்செய்தபடியை உய்யக்கொண்டார்நியோகத்தால் மணக்கால்நம்பி ஆளவந்தாருக்குப் பச்சையிட்டு உபதேசித்துக் கோயிலிலே கொண்டுபோய்ப் பெரியபெருமாளை ஸாக்ஷாத்கரிப்பித்து அநுபவிப்பித்தாப்போலே பெரியநம்பியும் ஆளவந்தார்நியோகாத் பலகால் தட்டி யுபதேசித்துப் பேரருளாளப் பெருமாளை ஸாக்ஷாத்கரிப்பித்து அநுபவிப்பித்தருளினார்.

அநந்தரம் இளையாழ்வார் திருமாளிகையிலே எழுந்தருளி, தம் திருமாளிகையிலே மேல்பாதியிலே பெரியநம்பி குடும்பஸஹிதமாக எழுந்தருளி யிருக்கத்தக்கதாக இடம் ஸமர்ப்பித்துத் தளிகைக்கு வேண்டும் பதார்த்தங்களும் ஸமர்ப்பிக்க, நம்பியும் ஆறுமாஸம் அங்கே எழுந்தருளியிருந்து இளையாழ்வாருக்கு த்ராவிடவேத ப்ரபந்தங்களை

(க) ஸாமோ லோகரஞ்ஜந:।



யும், தர்மநவிஷயரஹஸ்யவிஶேஷங்களையும் ப்ரஸாதிக்க, இளையாழ்வாரும் ப்ரீதியுடனே *செவிக்கினிய செஞ் சொல்கேட்டு க்ருதார்த்தராயிருக்குங்காலத்திலே, ஒருநாள் திருமஞ்சநமுறையிலே எண்ணெய்க்காப்புச் சாத்தவந்த ஸ்ரீவைஷ்ணவர் 'க்ஷுத்து நலியாநின்றது' என்றவாறே, இளையாழ்வாரும் தம்தேவிகளை யழைத்து 'ஸ்ரீ வைஷ்ணவர் விடாய்த் திருக்கிறார்; பர்யுஷிதாந்நம் இல்லையோ?' என்ன, தேவிகளும் 'அல்பமாகிலு மில்லை' என்ன, இவரும் தேவிகளை ஒருகார்யத்திலே ஏவிவிட்டு உள்ளே புகுந்து ஶோதித்தருளிப் பாத்ரத்திலே பழைப்ப்ரஸாதம் ஸம்ருத்தமாயிருக்கக் கண்டெடுத்துத் தேவியாரையழைத்து 'ஸ்ரீவைஷ்ணவர் இளைத்திருக்க இப்படிசெய்தாயே! *இடும்பையாலடர்ப்புண்டு இடுமினோதுற்றென்றிரந்தவர்க்கு இல்லையேயென்று நெடுஞ்சொலால் மறுத்த நீசையிறே நீ' என்று கநக்கக்கோபித்துவிட்டார். பின்னையும் ஒருநாள் கிணற்றின்கரையிலே இளையாழ்வார்தேவிகளுக்கும் பெரியநம்பிதேவிகளுக்கும் ஒருதோண்டிவ்யாஜமாகச் சண்டையானவளவிலே, இத்தைப் பெரியநம்பி கேட்டருளித் தம்முடைய தேவிகளை மிகவுங் கோபித்து இளையாழ்வாருக்கும் அறிவியாதே தேவிகளையழைத்துக் கொண்டு மீண்டு கோயிலுக்கு எழுந்தருளினார். இளையாழ்வாரும் அநுஷ்டாநம்பண்ணியெழுந்தருளிப் பெரியநம்பியை ஸேவிக்கப்பெறாமல் திருமாளிகையில் வர்த்திக்கிறவர்களை 'பெரியநம்பி எங்கே?' என்று கேட்டருள, 'மீண்டு கோயிலுக்கு எழுந்தருளினார்' என்று அவர்கள் விண்ணப்பஞ்செய்ய, இவரும் 'அதுவென்? அவர் அருளிச்செய்யாமல் எழுந்தருளுகைக்கு ஹேதுவென்?' என்ன, 'ஒருதோண்டியடியாக மதினியாருக்கும் மதினியாருக்கும் சண்டையானவாறே தம் தேவிகளைக்கோபித்து பாகவதாபசாரத்துக்கு இறாய்த்து அப்போதே கோயிலேற எழுந்தருளினார்' என்றார்கள்.

இளையாழ்வாரும் அச்செய்தியைக்கேட்டுத் திருவுள்ளங்கலங்கித் தேவிகளைப்பார்த்து அதிகுபிதராய் (க) "பாபாநாமாகரஸ்த்ரிய:" என்னும்படியை ஸ்பஷ்டமாக்கினாயே! முன்பே திருக்கச்சிநம்பிவிஷயமாகவும், ஸ்ரீவைஷ்ணவர்விஷயமாகவும் பாகவதாபசாரப்பட்டாய்; இப்போதும் பெரியநம்பி தேவிகளுடனே பிணங்கி அஸஹ்யாபசாரப்பட்

(க) பாபாநாமாகரா: ஸ்த்ரிய:

டாய்; இப்படி செய்கிற நீ இப்பொழுதே புறப்பட்டுப்போ' என்று ததநுபந்தியான தநங்களையுங் கொடுத்துப் பயணமாக்கிப் பிறந்தகமேபோக விட்டு, "இல்லறமல்லேல் துறவறம்" என்கிறபடியே 'அதிதிஸத்காரயோக்யையன்றிக்கே ப்ரதிகூலையாயிருக்கிற பார்யையை ஸவாஸநமாகத்யஜித்து ஸந்யஸிக்கக்கடவன்' என்கையாலே, இளையாழ்வாரும் 'நமக்கு இஸ்ஸம்ஸாரம் த்யாஜ்யம்' என்று அத்யவஸித்து (௧) "அநந்தஸரஸிஸ்நாத்வா விமாநச் † சாயயாऽந்விதே - விமுக்தஸ்ஸர்வபாபேப்யோ விஷ்ணுலோகம்ஸமச்சதி" என்னும்மாஹாத்ம்யமுடைய திருவநந்தஸரஸ்ஸுக்கு எழுந்தருளி (௨) "ஸம்யங்நாஸ்ஹவயேதீர்த்தே விமாஹ யஞ்கில்பிஷ: - நிரஸ்தேதரபோகாஸோ வாதம்ஸாரணங்கத:" என்கிறபடியே திருவநந்தஸரஸ்ஸிலே நீராடி, (௩) "யதோக்தகாரிணம்பிக்ஷும்பகவந்தம்வா குருத்வேநாங்கீக்ருத்ய ஸந்யாஸாஸ்ரமமாஸ்ரயிஷ்யாமி" என்கிறபடியே ஸந்யஸிக்க ஸங்கல்பித்துக்கொண்டு * தொழுதெழுதொண்டர்கள்தமக்குப்பிணியொழித்தமரர் பெருவிசும்பருளும் பேரருளாளர்ஸந்நிதியிலே எழுந்தருளி ஸேவித்து, "தாயேதந்தையென்றுந் தாரமேகிளைமக்களென்றும், நோயேபட்டொழிந்தேன்" என்கிறபடியே பகவத்பாகவதாசார்யாநுவர்த்தநத்துக்கு விலக்கடியான இஸ்ஸம்ஸாரஸம்பந்தம் வேண்டுவதில்லை; அடியேனுக்குத் தேவரீர் திருவடித்தாமரைகளின் ஸேவையே வேண்டுவது; ஆகையாலே, (௪) "த்ரிதண்டம்வைஷ்ணவம்லிங்கம் விப்ராணாம்முக்திஸாதநம் - நிர்வாணம்ஸர்வதர்மாணாம் இதிவேதாநுஸாஸநம்" என்று இப்படி சொல்லப்பட்ட த்ரிதண்டகாஷாயாதிகளைத் தேவரீர் அடியேனுக்குப்ப்ரஸாதித்தருளவேணும்' என்று இளையாழ்வார் பேரருளாளரை ஆசார்யத்வேந அங்கீகரித்து விண்ணப்பஞ்செய்ய, தேவப்பெருமாளும் திருவுள்ளமுகந்தருளி (௧) "த்ரிதண்டமுபவீதஞ்ச வாஸ: கௌபீநவேஷ்டநம் - ஸிக்யங்கவசமித்யேதத் பிப்ருயாத்யாவதாயுஷம்" என்கிறபடியே த்ரிதண்டகாஷாயாதிகளை நீருள்ளதனையுந் தரிக்கக்கடவீர்' என்று அர்ச்சகமுகேந நியமித்து ப்ரஸாதித்தருளி 'இராமாநுசமுநி' என்று திருநாமஞ்சாத்தியுகந்தருளி, 'நம்மிராமாநுசனை மடத்திலே வைத்துவாரும்' என்று திருக்கச்சி நம்பிக்கு அருளிச்செய்தருள, அவரும் அப்படியே உபலாளித்துக்கொண்டுபோய் மடத்திலே வைத்து எழுந்தருளினர்.

பின்பு ராமாநுசனும் ஆஸ்ரமதர்மங்களைக் குறைவற நடத்திக்கொண்டு 'நமக்கு ஆளவந்தார் விசேஷகடாக்ஷம்பண்ணினதற்கு ஈடாக விரோதிகளும் கழிந்து அநுகூல்யமும் கூடாநின்றதே; ஆளவந்தார் திருவுள்ளக்கருத்து நிறைவேறும்படி நமக்கு ஒரு ஸஹாயம் உண்டாகவேணும்' என்று விசாரமுண்டாய்த் ததநுரோதேந கோவிந்தபட்டரை நினைத்து 'அவன் நமக்குஹிதப்ரவர்த்தகன்; ஸர்வவிஷயவிரக்தன்; ஸாஸ்த்ரவைதக்த்யமுள்ளவன்: இனி அவனை நம்மோடே சேர்ப்பாருண்டாகில் நல்லது; இப்போது அவன் தேவதாந்தரபரனாயிராநின்றான்; அவ்வுள்ளங்கைகொணர்ந்தஇடத்தே சுருள்நாற்றமெழுப்பி (௨) "ஸர்வகந்தஸ்ஸர்வரஸ:" என்னுமவனுடைய ஸௌகந்த்யத்தைக் காட்டி மீட்கும் விரகர் ஆரோ?' என்று நினைவிட, 'விசேஷாத்மகுணங்களையுடையராய் வேதவேதாந்தவிதக்ரேஸராய் வகுளாபரணப்ரபந்தமுகுளாமோதிதசித்தராய் '* நிலதமூலதுக்காய் நின்ற திருவேங்கடத்தெம்பெருமானை அநவரதபாவனைபண்ணிப் * பிரியாவடிமை செய்யாநின்றுள்ள தேஸிகாக்ரேஸரரான பெரியதிருமலைநம்பிகடவர்' என்று நிஸ்சயித்து, ஒரு அநுகூலஸ்ரீவைஷ்ணவரை அவர் ஸந்நிதிக்குப்போகச் சொல்லி 'தேவரீருடையமருமகனை வட்டமணி கோவிந்தப்பட்டன் அடியேனுடன் ஸஹாத்யாயியாய் அநுகூலித்திருந்தவன், துர்வாஸநாதிஸயத்தாலே அங்கபரனாய்க் காளஹஸ்தியாகிற கடுங்காட்டிலே நில்லாநின்றான்; தேவரீர் அடியேனுக்காக அவனிடத்தே நிர்ஹேதுகக்ருபை பண்ணித் தேவரீர்திருவடிகளுக்கு

---

(௧) [illegible]

(௨) [illegible]

(௩) [illegible]

(௪) [illegible]

† 'சாயாஞ்சிதே' என்று ப்ரதிபேதம்.

(௧) [illegible]

(௨) [illegible]

அவனை ஆட்கொண்டருளவேணும்' என்று விண்ணப்பஞ்செய்துபோக விட்டருளினர்.

### கூரத்தாழ்வானும் முதலியாண்டானும் இளையாழ்வாரிடம் ஆஶ்ரயித்தல்.

அநந்தரம் இவர் இப்படி ஆஶ்ரமப்ராப்திபண்ணியருளின செய்தியைக்கந்தாடை முதலியாண்டானும், ஹாரீதகுலதிலகரான திருமறுமார்ப னென்கிற திருநாமத்தையுடைய கூரத்தாழ்வானும் கேட்டருளி, அதிப்ரீதியோடே பெருமாள்கோயிலுக்கு எழுந்தருளி ராமாநுசனைஸேவித்து 'அடியோங்களுக்குப் பஞ்சஸம்ஸ்காராதிகளை ப்ரஸாதித்தருளவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, ராமாநுஜனும் திருவுள்ளமுகந்தருளி அவர்கள் ப்ரார்த்தித்தபடியே செய்தருள, அவர்களும் பஞ்சஸம்ஸ்காராதிகளை லபித்து க்ருதார்த்தர்களாய் (க) "அதீத்யமந்த்ரமாசார்யம் பூஜயேச்சக்திதோத்விஜ: - ஆசார்யாதீநவ்ருத்திஸ்து யாவஜ்ஜீவம்ஸதாஶுசி:" என்கிறபடியே ஸ்வாசார்யரான ராமாநுஜனை ஒருகாலும் பிரியாமல் தத்கைங்கர்யைகரஸராய் ஸேவித்துக்கொண்டிருந்தார்கள்.

### யாதவப்ரகாஶன் இளையாழ்வாரை ஆஶ்ரயித்து உஜ்ஜீவித்தல்.

பின்பு யாதவப்ரகாசனுடையமாதாவுக்குப் பலகாலும் பேருளாளர் ஸேவையும் திருக்கச்சிநம்பிகளோடே ஸம்பாஷணமும் நடக்கையாலே அதுவேஹேதுவாக ஆவளுக்கும் நம்தர்ஶநத்திலே ஊற்றம்பிறந்து 'இத்தர்ஶநத்திலே நம்யாதவனும் இறங்கினுலோ!' என்றுநினைத்து வையமாளிகைப்படி ஏறுநிற்க, 'நல்லது நல்லது' என்று கிம்வதந்தியுண்டாக, அதுகேட்டு ஸந்தோஷத்துடனே யாதவப்ரகாசன்பக்கல்சென்று இச்செய்தியைச்சொல்லி 'நீயும் ராமாநுசனைப்போலே ஶிகாயஜ்ஞோபவீதபூர்வகமாக த்ரிதண்டத்தைத் தரியாய்'என்ன, யாதவப்ரகாசனும் ஸ்வமதாபிமாநத்தாலே அர்த்தஞ்சொல்லுகையொழிந்து பாரமார்த்திகதயா ஸ்வாபிமதார்த்தத்தில் அருசி தோன்றுநிற்கையாலும், இளையாழ்வார் அந்நாள்களிலே ப்ரதியோகித்வேந சொன்ன அர்த்தங்கள் நெஞ்சிலே புண்படுத்தாநிற்கையாலும், அவர் மாஹாத்ம்யங்களை ப்ரஹ்மராக்ஷஸ்ஸு சொல்லி

(உ) अधीत्य मन्त्रमाचार्यं पूजयेच्छक्तितो द्विजः । आचार्याधीनवृत्तिस्तु यावज्जीवं सदाशुचिः ॥



யிருக்கையாலும், அவருக்கு கங்காயாத்ரையிலே வ்யாதரூபேண வந்த ராமஸாக்ஷாத்கார ஸஹாயத்தாலும், மாத்ருவாக்யத்தாலும் ஸம்மதித்து, ஸ்வமாதாவுடனே 'த்ரிதண்டதாரணம்பண்ணுமிடத்தில் நான் ஶிகாயஜ்ஞோபவீதத்யாகம்பண்ணுகையாலே அதுக்கு ப்ராயஶ்சித்தமாக பூப்ரதக்ஷிணம் பண்ணவேண்டியிருந்தது; அதுவயோவ்ருத்தனை என்னுல் செய்யமுடியாது; இனி அஶக்தனை நான்செய்ய அடுப்பதென்?' என்றுசொல்லி முசித்துக்கிடக்க, அவ்விரவிலே பேருளாளர் அவன்ஸ்வப்நத்திலே யெழுந்தருளி 'நம்மிராமாநுசனை ஒருப்ரதக்ஷிணம்பண்ணி அவர்தர த்ரிதண்டகாஷாயாதிகளைத் தரித்து ஸந்யஸியாய்' என்ன, யாதவனும் அத்தை விஶ்வஸியாமல் திருக்கச்சிநம்பியுடனே 'நான் ஒருநினைவு நினைத்திராநின்றேன்; அத்தைப் பேருளாளர்க்கு விண்ணப்பஞ்செய்து அவர்திருவுள்ளமானபடியை எனக்கு அருளிச்செய்யவேணும்' என்ன, நம்பியும் அன்றிராத்ரி பெருமாளைஸேவித்து விடைகொள்ளுகிறவளவிலே 'யாதவப்ரகாசன் ஒருநினைவு நினைத்திருந்தேனென்றான்' என்று விண்ணப்பஞ்செய்ய, பேருளாளரும் 'அவன்தாயார் இராமாநுசனைப்போலே நீயும் த்ரிதண்டஸந்யாஸியாகாயென்றாள்: தான் பூப்ரதக்ஷிணம் பண்ணவேணுமென்று முசித்துக்கிடந்தான்; நாம் நம்மிராமாநுசனை ஒருப்ரதக்ஷிணம் பண்ணி ஸந்யஸியா யென்று சொன்னோம்; நாம் ஸ்வப்நமுகேந சொன்ன வார்த்தையை விஶ்வஸியாமல் உம்மைவிடுவித்துக்கேட்கிறுனித்தனை' என்று அருளிச்செய்ய, நம்பியும் இச்செய்தியை விடிவோறை யாதவப்ரகாசனுக்கு அருளிச்செய்ய, அவனும் விஶ்வஸித்து வந்து ராமாநுசன்திருவடிகளிலே தண்டன்ஸமர்ப்பித்து 'அடியேனுக்கு த்ரிதண்டதாரணம் பண்ணுவித்தருளவேணும்' என்ன, இவரும் அவனுடைய உசிதநிர்வேதத்தைக் கண்டு 'அதுசெய்யுமிடத்து ப்ராயஶ்சித்தாபேக்ஷை யுண்டு' என்ன, அவனும் பகவதுக்திப்ரகாரத்தை விண்ணப்பஞ்செய்து அவர்தம்மையே வலம்வந்து ஸவிநயனாய் நிற்க, அவ்வளவிலே ஆழ்வானும் ஆண்டானும் 'பகவதாநுகூல்யமும் இவருடைய நினைவும் ஒத்திருந்தபடியே!' என்று விஸ்மிதராய், (க) "த்வேஷாச்சைத்யாதய:" என்கிறபடியே தேவரீர்க்குப்பண்ணுகின்ற த்வேஷந்தானே இவருக்கு உஜ்ஜீவநஹேது வாய்த்து' என்று சொல்லி

(க) द्वेषाच्चैद्यादयः

ஆஶ்சர்யப்பட்டு (க) "அஸ்மாபிஸ்துல்யோ பவது" என்று விண்ணப்பஞ்செய்ய, ராமாநுசனும் போரவுகந்தருளி ஶாஸ்த்ரோக்தப்ரகாரேண ப்ராயஶ்சித்தபூர்வகமாகச் சௌளோபநயநாதிகளையும் பண்ணுவித்து த்ரிதண்டகாஷாயாதிகளையும் ப்ரஸாதித்து 'கோவிந்தஜீயர்' என்று திருநாமமும் ப்ரஸாதித்தருளி, இப்படி பஞ்சஸம்ஸ்காரயுக்தராக்கிக் குருபரம்பராபூர்வகமாக மந்த்ரரத்நார்த்தத்தையும் ப்ரஸாதித்தருளி 'ஶாஸ்த்ரங்களிலே இதரேதரவசநவையர்த்த்யம் வாராதபடி 'யதிதர்மஸமுச்சயம்' என்கிற ப்ரபந்தத்தைப் பண்ணும்' என்ன, கோவிந்தஜீயரும், (உ) "விதி꞉கர்த்ருதஸாலிங்கம் ப்ரயோகோமுக்யகர்மச - அஹோராத்ரக்ரியாZZசாரோ லிங்கதர்மோமதிஸ்திதி꞉ - ப்ராயஶ்சித்தாதிஸம்ஸ்கார இத்யேகாதஶபர்வக꞉" என்று ஏவம்ப்ரகாரேண ஸங்க்ரஹப்ரபந்தத்தைச்செய்து ஸந்நிதியிலேவைத்துத் தண்டன்ஸமர்ப்பிக்க, ராமாநுசனும் ஆத்யந்தமாகத் திருக்கண்சாத்தி ஸந்தோஷித்தருள, இவரும் ஆசார்யபரதந்த்ரராய்ச் சிலகாலம் எழுந்தருளியிருந்து, அசிரேண பரமபதத்தை ப்ராபித்தருளினார்.

அநந்தரம் ராமாநுசனும், கூரத்தாழ்வானுக்கும் முதலியாண்டானுக்கும் மீமாம்ஸாஶாஸ்த்ரயுக்மஶ்ரமம் பண்ணுவித்துக்கொண்டிராநிற்க, இவருடைய ஆஶ்ரமப்ராப்தி முதலான இச்செய்திகளைக் கோயிலிலே ஆளவந்தார் ஸ்ரீபாதத்து முதலிகளெல்லாரும் கேட்டுப் போரவுகந்து, தங்களிலே விசாரித்துக்கொண்டு நம்பெருமாள் ஸந்நிதியிலே சென்று 'இளையாழ்வாரைத் தேவரீர் ஸந்நிதியிலே நித்யவாஸம் பண்ணும்படி இங்கே அழைப்பித்துக்கொண்டருளவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, பெரியபெருமாளும் பேருளாளர்க்கு அப்போதே திருமுகம் போகவிட்டருள, பேருளாளரும் கேட்டருளி 'தந்தம் அபிமாநத்தைப் புறம்பே போகவிடிலன்றோ நாம் நம்பிராமாநுசனை விடுவது' என்று அருளிச்செய்துவிட, இச்செய்தியைக் கோயிலிலே பெரிய நம்பிமுதலான முதலிகளெல்லாருங் கேட்டு 'இனிச்செய்ய அடுப்பதென்?' என்று தங்களிலே விசாரித்தருளி 'தேவப்பெருமாள்

(க) 𑌅𑌸𑍍𑌮𑌾𑌭𑌿𑌸𑍍𑌤𑍁𑌲𑍍𑌯𑍋 𑌭𑌵𑌤𑍁

(உ) 𑌵𑌿𑌧𑌿𑌃 𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑌶𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌪𑍍𑌰𑌯𑍋𑌗𑍋 𑌮𑍁𑌖𑍍𑌯𑌕𑌰𑍍𑌮 𑌚 । 𑌅𑌹𑍋𑌰𑌾𑌤𑍍𑌰𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌚𑌾𑌰𑍋 𑌲𑌿𑌙𑍍𑌗𑌧𑌰𑍍𑌮𑍋 𑌮𑌤𑌿𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 ॥ 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌦𑌿𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰 𑌇𑌤𑍍𑌯𑍇𑌕𑌾𑌦𑌶𑌪𑌰𑍍𑌵𑌕𑌃 ।



பரமோதாரராயிருப்பர்; பாட்டுக்குப் போரநல்லராயிருப்பர்' என்று, ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையரைக் குறித்து '(க) "வேகவத்யுத்தரே தீரே க்ஷேத்ரே ஸத்யவ்ரதாக்யகே - அஸ்திகாஞ்சீதிவிக்யாதா புரீ புண்யவிவர்த்தநீ" என்று புண்யவர்த்தகமாகச் சொல்லப்பட்ட காஞ்சீமஹாநகரியிலே தேவரீர் எழுந்தருளிப் புண்யகோடிவிமாநமத்யஸ்தராய் அகிலர்க்கும் ஸர்வாபேக்ஷிதப்ரதராயிருக்கிற பேருளாளரைப் பாடியுகப்பித்து 'நமக்கு ராமாநுசனைத் தரவேணும்' என்று கேட்டுவாங்கி அழைத்துக்கொண்டு எழுந்தருளவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, அவரும் அப்பொழுதே புறப்பட்டு நம்பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்து பெருமாள் கோயிலைநோக்கி யெழுந்தருள, இவர் இப்படி எழுந்தருளுகிற செய்தியைக்கேட்டு ஸ்வஜநமான வரந்தரும்பெருமாளரையர் எதிரே வந்து தம்முடைய திருமாளிகைக்கு எழுந்தருளுவித்துக்கொண்டுபோய் ஸத்கரித்து அமுதுசெய்விக்க, இவரும் அதிப்ரீதரா யெழுந்தருளியிருக்க, அதின்மற்றைநாள் விடிவோரை பேருளாளர் வையமாளிகையிலே 'கச்சிக்குவாய்த்தான்' என்கிற திருமண்டபத்திலே யேறியருளி அணைத்துக்கொத்தி லுள்ள பரிகரமும் ஸேவித்திராநிற்கத் திருக்கச்சிநம்பியும் திருவாலவட்டம்பரிமாற அருகே ராமாநுசனும் அவரருளிச்செய்த வரதராஜாஷ்டகத்தை அநுஸந்தித்துக்கொண்டு ஸேவித்து நிற்கச்செய்தே, திருவரங்கப்பெருமாளரையர் எழுந்தருளின செய்தியைத் திருக்கச்சி நம்பி கேட்டருளி எதிர்கொண்டு அரையரை ஸேவிக்க, அவரும் க்ருபைபண்ணி அந்யோந்யம் குஶலப்ரஶ்நம்பண்ணிக் கொண்டிருக்கச் செய்தே, அரையரும் நம்பியுடனே 'பேருளாளரை ஸேவிக்கவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, நம்பியும் பெருமாளுடைய திருவோலக்கத்திலே அழைத்துக்கொண்டுபோக, அரையரும் வரதராஜனை ஸேவித்து (உ) "கதாபுநஶ்ஶங்கரதாங்ககல்பக த்வஜாரவிந்தாங்குஶவஜ்ரலாஞ்சநம் - த்ரிவிக்ரமத்வச்சரணாம்புஜத்வயம் மதீய

(க) 𑌵𑍇𑌗𑌵𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌤𑌰𑍇 𑌤𑍀𑌰𑍇 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍇 𑌸𑌤𑍍𑌯𑌵𑍍𑌰𑌤𑌾𑌖𑍍𑌯𑌕𑍇 । 𑌅𑌸𑍍𑌤𑌿 𑌕𑌾𑌞𑍍𑌚𑍀𑌤𑌿 𑌵𑌿𑌖𑍍𑌯𑌾𑌤𑌾 𑌪𑍁𑌰𑍀 𑌪𑍁𑌣𑍍𑌯𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌨𑍀 ॥

(உ) 𑌕𑌦𑌾 𑌪𑍁𑌨𑌶𑍍𑌶𑌙𑍍𑌖𑌰𑌥𑌾𑌙𑍍𑌗𑌕𑌲𑍍𑌪𑌕𑌧𑍍𑌵𑌜𑌾𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑌵𑌜𑍍𑌰𑌲𑌾𑌞𑍍𑌛𑌨𑌮𑍍 । 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌕𑍍𑌰𑌮 𑌤𑍍𑌵𑌚𑍍𑌚𑌰𑌣𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌦𑍍𑌵𑌯𑌂 𑌮𑌦𑍀𑌯𑌮𑍂𑌰𑍍𑌧𑌾𑌨𑌮𑌲𑌙𑍍𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥

மூர்த்தாநமலங்கரிஷ்யதி' என்று அநுஸந்தித்துக்கொண்டு தண்டன்
ஸமர்ப்பித்து நிற்க, பெருமாளும் தீர்த்தப்ரஸாதங்களையும் ஸ்ரீசட
கோபனையும் ப்ரஸாதித்தருள, இவரும் '*திருப்பொலிந்த சேவடி
என்சென்னியின்மேல் பொறித்தாய்' என்று ப்ரீதராய் நிற்கிறவள
விலே, பெருமாளும் இவரை அருளப்பாடிட்டருள, திருவரங்கப்பெரு
மாளரையரும் பக்திபுரஸ்ஸரமாக "என்னெஞ்சமேயான்" என்று
தொடங்கி "உலகேத்து மாழியா னத்தியூரான்" என்றும், "பிணிய
விழ்தாமரை மொட்டலர்த்தும் பேரருளாளர்" என்றும், "தொழு
தெழுதொண்டர்கள் தமக்குப், பிணியொழித் தமரர்பெருவிசும் பரு
ளும் பேரருளாளன்" என்றும் இப்படி ஆழ்வார்கள் திவ்யஸூக்தி
யான * பாலேய்தமிழான * பண்ணார் பாடலின் கவிகளைத் தேவகா
நத்திலே இயலும் இசையுமாக நாடகத்துடனே பாட, "தென்னு
வென்னுமென்னம்மான்" என்கிறபடியே பேரருளாளரும் போரவுகந்
தருளித் தாம் சாத்தியிருந்த திருமுத்தியின்தாழ்வடம் திருப்பரி
யட்டம் சத்ரசாமராதி மற்றுமுண்டான வரிசைகளெல்லாம் ப்ரஸாதித்
தருள, இவரும் 'நாயன் தே! அடியேனுக்கு இவையொன்றிலும்
அபேக்ஷையில்லை; தேவரீர் அர்த்திதார்த்தபரிதாநதீக்ஷித ராகையாலே
அடியேன் அர்த்தித்ததைத் தந்தருளவேணும்' என்று விண்ணப்பஞ்
செய்து பின்னையும் கநக்கப்பாடியருள, பெருமாளும் அத்தைக்கேட்
டருளி ப்ரீதராய் † (நாமும் நம்பெண்டுகளுமொழிய) நீர்வேண்டினத்
தைத் தருகிறோம்; அத்தைச் சொல்லிக்காணீர்' என்ன, அரையரும்
ராமாநுசனைக்காட்டி 'இவரை அடியேனுக்குத் தந்தருளவேணும்'
என்று விண்ணப்பஞ்செய்ய, பெருமாளும் 'அப்போதே அறியப்
பெற்றிலோமே! இவரையொழிய நீர்வேண்டினதெல்லாந் தருகிறோம்;
கேளீர்' என்று அருளிச்செய்ய, அரையரும் '(க) "ராமோத்விர்நாபி
பாஷதே" என்கிற தேவரீர் இரண்டுவார்த்தை யருளிச்செய்யலாமோ?'
என்று விண்ணப்பஞ்செய்ய, பேரருளாளரும் இன்னாப்புடனே 'தந்
தோம், கொண்டுபோகலாகாதோ!' என்று அருளிச்செய்ய, திருவரங்
கப்பெருமாளரையரும் உடையவரைக் கையைப்பற்றி 'வாரும்'
என்ன, உடையவரும் பேரருளாளர்க்குத் தண்டன் ஸமர்ப்பித்துத்
திருவரங்கப்பெருமாளரையருடனே கோயிலுக்கு எழுந்தருளப் புறப்

(க) ராமோ த்விர் நாபிபாஷதே ।

† குண்டலிதக்ரந்தம் பல ஸ்ரீகோசங்களில் இல்லை.



பட, பெருமாளும் இவர்க்கு விடைகொடுத்தருளினர்; பின்பு உடை
யவரும் கூரத்தாழ்வானையும் முதலியாண்டானையும் பார்த்தருளி
'மடமேபோய் நம்முடைய திருவாராதநமான பேரருளாளரையும் மற்று
முண்டான ஸம்பந்தங்களையும் கொண்டுவாருங்கோள்' என்று அருளிச்
செய்து மடமும்புகுராமல் எழுந்தருள, அவர்களும் அப்படியே எழுந்
தருளுவித்துக்கொண்டு கூடினவளவிலே, திருக்கச்சிநம்பியும் அவர்
களை வழிவிட்டு மீண்டெழுந்தருளினர்.

உடையவரும் (க) "யத்மத்வாநநேரயாதி நரகஞ்சாப்யதோக
திம்" என்று சொல்லுகிற பெருமையையுடைய ஸ்ரீரங்கதாமமாகிற *
திருவரங்கந்திருப்பதியைநோக்கிப் பயணகதியிலே யெழுந்தருளி வட
வாற்றிலேநீராடிக் கேசவாதி த்வாதசோர்த்வபுண்டரங்களைச் சாத்
திக்கொண்டு இருந்தவளவிலே, இவர் எழுந்தருளின செய்தியை
ஆளவந்தார் ஸ்ரீபாதத்துப் பெரியநம்பி முதலான முதலிகளும்
சீயர்களும் ஏகாங்கிகளும் ஸ்ரீவைஷ்ணவர்களும் கேட்டருளிப்
பெருமாளுக்கு விண்ணப்பஞ் செய்ய, பெருமாளும் ஸேனைமுத
லியாருக்கு அருள்பாடிட்டருளி 'நம்மிராமாநுசனை எதிர்கொண்டு
அழைத்துவாரும்' என்று திருவுள்ளமாய்ருள, அவர் பெரியநம்பியுள்
ளிட்ட முதலிகள் சீயர்கள் ஸ்ரீவைஷ்ணவர்களுடனே பெருமாள் பரி
கரமான அனைத்துக்கொத்திலவர்களும் ஸேவிக்க அகிலந்ருத்தகீதவாத்
யத்துடனே முக்தராய்ப் போருமவர்களை நித்யஸூரிகள் விரஜைக்கரை
யளவாக வந்து எதிர்கொள்ளுமாபோலே திருக்காவேரி வடவாற்றின்
கரையளவாக வந்து எதிர்கொள்ள, ராமாநுசனும் ஸேனை முதலியா
ரையும் பெரியநம்பிமுதலானாரையும் ஸேவித்து அவர்களைப் பின்
சென்று கொண்டுபோய் "கொடியணிநெடுமதிள் கோபுரங்குறுகினர்"
என்கிறபடியே * திட்கொடிமதிளையும் தாமோதரன் திருக்கோபுரத்
தையுங் கிட்டி ஸாஷ்டாங்கப்ரணாமம்பண்ணி, திருமாலைதந்த பெருமாள்
திருவீதி முன்னாகப்புகுந்து ப்ரதக்ஷிணமாக எழுந்தருளி த்ரிவிக்ரமன்
திருவீதியையும் ப்ரதக்ஷிணமாக எழுந்தருளிப் புகுந்து பெரியபலிபீடத்
தடியிலே சென்று தண்டன்ஸமர்ப்பித்து, ஸேவாக்ரமத்திலே ஆளரி
யையுந் திருவடிதொழுது, ஸ்ரீரங்கநாயகியாரையும் ஸேவித்து, ஸ்ரீ
சந்த்ரபுஷ்கரிணியிலே தீர்த்த ஸ்வீகாரம் பண்ணியருளி, திருக்கோபு

(க) யத்கத்வா ந நிவர்த்தந்தே நரகஞ்சாப்யதோகதிம் ।

ரத்து நாயனார்களையும் ஸேவித்துப் புகுந்து, * கடைத்தலை யிருந்து வாழுஞ் சோம்பரான நம்மாழ்வார் முதலான ஆழ்வார்களையும் ஸேவித்து, மற்றும் சுற்றிலுள்ள எம்பெருமான்களையும் ஸேவித்து, * அணியனார்செம்பொனாய அருவரையனைய கோயிலாகிற * அணியரங்கன்திருமுற்றத்தே புகுந்து தண்டன் ஸமர்ப்பித்து உள்ளேசென்று ப்ரதக்ஷிணமாக எழுந்தருளி ப்ரணவாகாரமான திவ்யவிமாநத்தையும் ஸேவித்து, ஸேனைமுதலியாரையுந் திருவடிதொழுது, அழகியமணவாளன் திருமண்டபத்தேற எழுந்தருளினவளவிலே, “வந்தவரெதிர்கொள்ள மாமணிமண்டபத்து” என்கிறபடியே முக்தனைப் போருமவனை ஸ்ரீவைகுண்டநாதன் எதிர்கொள்ளுமாபோலே நம்பெருமாள் திருக்கைத்தலத்திலே எழுந்தருளிப் புறப்பட்டு அழகிய மணவாளன் திருமண்டபத்தளவாக எழுந்தருளி எதிர்கொண்டு உள்ளே புகுந்தருள, உடையவரும் விழுவது எழுவது தொழுவதாய் ஸேவித்துத் திருப்பள்ளியறையிலே புகுந்து * அரங்கந்தன்னுள் பாம்பணைப் பள்ளிகொள்ளும் * கடல்விளங்கு கருமேனியம்மான்றன்னைக் கண்ணாரக்கண்டு உகந்து * மணத்தூணேபற்றிநின்று * வாயாரவாழ்த்தி ப்ரேமபரவசராய், அமலனாதிபிரானிற்படியே பாதாதி கேசாந்தமாக “கண்டகண்கள் மற்றொன்றினைக் காணாவே” என்னும்படி பெரிய பெருமாளை யநுபவித்து, திருப்பல்லாண்டையும் அநுஸந்தித்து, (௧) “நமோநமோவாங்மநஸாதிபூமயே நமோநமோவாங்மநஸைகபூமயே - நமோநமோऽனந்தமஹாவிபூதயே நமோநமோऽனந்ததயைகஸிந்தவே”, “நதர்மநிஷ்டோऽஸ்மிநசாத்மவேதீ நபக்திமாம்ஸ்த்வச் சரணாரவிந்தே - அகிஞ்சநோऽநந்யகதிஶ்ஶரண்யத்வத்பாதமூலம் ஶரணம்ப்ரபத்யே” என்று தம்பரமாசார்யரான ஆளவந்தார் திவ்யஸூக்தியை அநுஸந்தித்து ஸேவித்துநிற்க, பெரியபெருமாளும் ராமாநுசனை மிகவும் க்ருபைபண்ணியருளி தீர்த்தப்ரஸாதங்களும் ப்ரஸாதித்து “நின் செம்மாபாதபற்புத்தலைசேர்த்து” என்கிறபடியே * தேனைமலரும் *

(௧) 𑌨𑌮𑍋 𑌨𑌮𑍋 𑌵𑌾𑌙𑍍𑌮𑌨𑌸𑌾𑌤𑌿𑌭𑍂𑌮𑌯𑍇 𑌨𑌮𑍋 𑌨𑌮𑍋 𑌵𑌾𑌙𑍍𑌮𑌨𑌸𑍈𑌕𑌭𑍂𑌮𑌯𑍇 । 𑌨𑌮𑍋 𑌨𑌮𑍋𑌽𑌨𑌨𑍍𑌤𑌮𑌹𑌾𑌵𑌿𑌭𑍂𑌤𑌯𑍇 𑌨𑌮𑍋 𑌨𑌮𑍋𑌽𑌨𑌨𑍍𑌤𑌦𑌯𑍈𑌕𑌸𑌿𑌨𑍍𑌧𑌵𑍇 ॥ 𑌨 𑌧𑌰𑍍𑌮𑌨𑌿𑌷𑍍𑌠𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌨 𑌚𑌾𑌤𑍍𑌮𑌵𑍇𑌦𑍀 𑌨 𑌭𑌕𑍍𑌤𑌿𑌮𑌾𑌂𑌸𑍍𑌤𑍍𑌵𑌚𑍍𑌚𑌰𑌣𑌾𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑍇 । 𑌅𑌕𑌿𑌞𑍍𑌚𑌨𑍋𑌽𑌨𑌨𑍍𑌯𑌗𑌤𑌿𑌃 𑌶𑌰𑌣𑍍𑌯 𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑌾𑌦𑌮𑍂𑌲𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥



திருக்கமலபாதமான * துயரறுசுடரடிகளாலே இவருடைய உத்தமாங்கத்தை அலங்கரிக்க, இவரும் * தாளிணைக்கீழ் வாழ்ச்சியைப் பெற்று நிரதிஶயாநந்தநிர்ப்பரராய் ஸேவித்துக்கொண்டு நிற்க, பெரியபெருமாளும் உடையவரைத் * தம்தாமரைக்கண்களால் நோக்கி * சோதிவாய் திறந்து “பொங்கோதஞ்சூழ்ந்த புவனியும் விண்ணுலகும்” என்கிற உபயவிபூத்யைஶ்வர்யத்தையும் உமக்கும் உம்முடையார்க்குந் தந்தோம்; நம்முடைய வீட்டின் கார்யத்தையெல்லாம் ஆராய்ந்துநடத்தும்’ என்று † (திருவுள்ளமாயருளி உடையவரென்ற திருநாமமும்) ப்ரஸாதித்தருள, உடையவரும் தீர்த்தப்ரஸாதமும் * சூடிக்களைந்த * தண்டுழாய்விரைநாறு கண்ணித்திருமாலை ப்ரஸாதமும் * பொதுநின்ற பொன்னங்கழலான ஸ்ரீஶடகோபனும் “வானவர் நாட்டையும் நீ கண்டுகொள்” என்கிற உபயவிபூத்யைஶ்வர்யமும் கரதலாமலகமாக ப்ரஸாதிக்கப் பெற்று, பெரியநம்பி திருமுக மண்டலத்தைப் பார்த்தருளி ‘“பெரியார்காட்பட்டக்கால் பெறாதவியன் பெறுமாறு!” என்று தேவரீர் திருவடிகள் ஸம்பந்தத்தை யிட்டுப் பெருமாள் இப்படி அடியேனை வாழ்வித்தருளினார்’ என்று விண்ணப்பஞ்செய்ய, பெரியநம்பியும் ‘“கலியுங்கெடும் கண்டுகொண்மின்” என்று ஆழ்வார் அருளிச்செய்த பவிஷ்யதர்த்தம் ப்ரத்யக்ஷமாச்சுது’ என்று அருளிச்செய்து, பெருமாள் நியமித்தருளின கார்யம் செய்தருளலாகாதோ?’ என்ன, உடையவரும் பெரியதிருமண்டபத்தே எல்லாருடனும் எழுந்தருளியிருந்து கருவூலங்களையெல்லாம் ஆராய்ந்து அமுதுபடி சாத்துப்படி திருமாலை திருவிளக்குகளெல்லாம் ஆராய்ந்து நடத்தி, மற்றும் திருவாராதநத்துக்கு வேண்டினவையெல்லாங் குறைவறநடத்தி, கோயிலனைத்துக் கொத்திலவர்களுடையவும் ஏற்றத்தாழ்வுகளும் ஆராய்ந்து, திருமதிள்கள் முதலான விடங்களில் திருப்பணிகளும் நடத்தியருளி, * வண்டினமுரலுஞ் சோலை மயிலினமாலுஞ் சோலை கொண்டல்மீதணவுஞ் சோலை குயிலினங்கூவுஞ் சோலை * கடியார் பொழில்களில் திருச்சண்பகந் தொடக்கமான திருப்பூமரங்களும் திருநந்தவனங்களும் ஆராய்ந்தருளி, மற்றுமுண்டான திருவிளையாட்டுலீலைகளு மெல்லாம் ஆராய்ந்துகொண்டு போருகிறவளவிலே, அகளங்க நாட்டாழ்வானை ஶிஷ்யனாக்கிக் கோயிலுக்கு மேல்காவலாக வைத்தருளி “திங்களும் நாளும் விழாவறாத” என்கிறபடியே நித்யோத்ஸவ பக்ஷோத்

† குண்டலிதக்ரந்தம் சில பிரதிகளில் உள்ளது.

ஸவ மஹோத்ஸவம் ஸம்வத்ஸரோத்ஸவம் முதலான மஹோத்ஸவங் களெல்லாம் தாழ்வற நடத்திக்கொண்டு போருகிற காலத்திலே;

எம்பாரைத்திருத்திய விவரம்.

முன்பு திருமலைநம்பி ஸந்நிதிக்குப் போகவிட்டிருந்த ஸ்ரீவைஷ் ணவர் ஹர்ஷப்ரகர்ஷத்துடனே மீண்டெழுந்தருளி உடையவர் திரு வடிகளிலே ஸேவிக்க, இராமாநுசனும் அவருடைய முகவிகாஸத்தைக் கண்டு கார்யஸித்தியை நிஸ்சயித்து ப்ரீதியுடனே 'அந்த வ்ருத்தாந் தத்தை விவரமாகச் சொல்லும்' என்ன, ஸ்ரீவைஷ்ணவரும் "தேவ ரீர் விடைப்ரஸாதித்தருளினபின்பு திருமலைக்குப்போய்த் திருமலை நம்பியை ஸேவித்து, தேவரீர் நியமநப்படியே விண்ணப்பஞ்செய் தேன்; நம்பியும் கேட்டருளி 'இது நாமே செய்யக்கடவதா யிருக்க, நம்பி ராமாநுசனும் * எண்ணம்புகுந்து தித்திக்கு மமுதாகப் பெற் றதே!' என்று தேவரீராநுகூல்யத்துக்கு உகந்த திருவுள்ளத்தராய்த் தத்க்ஷணமே ஸ்ரீபாதத்து முதலிகளுடனே அடியேனையுங் கூட்டிக் கொண்டு காளஹஸ்தி குளக்கரையில் ஒரு மரத்தடியிலே எழுந்தருளி யிருக்க, உள்ளங்கை கொணர்ந்த நாயனாரும் அங்கே ருத்ராபிஷே கார்த்தமாகக் குடங்கொண்டு ருத்ரபரமான பாட்டுக்களையுங் கதறிக் கொண்டுவர, நம்பியும் †"கொன்றைச் சடையானைக் குளிரநீராட்டினு லென்னுனக்குண்டாம்பயன்" என்று அருளிச்செய்ய, நாயனாரும் இப்பா சுரங்கேட்டு நம்பியை ஸ்மயமாநமுகனாப் ஏறப்பாரா நின்றுகொண்டு போக, இவரும் * அவன் செய்யுஞ் சேமத்தை யெண்ணித் * தெளி வுற்ற சிந்தையராய் மீண்டு திருமலையிலே போய் வ்யாக்யாநித்துக் கொண்டு எழுந்தருளி யிருந்தார். பின்னையும் ஒரு நாள் முன்புபோ லே அக்குளக்கரையிலே வடவ்ருக்ஷச்சாயையிலே எழுந்தருளியிருக்க, அங்கே நாயனாரும் அபிஷேகஜலஹாரணார்த்தமாகக் குடமெடுத்துவரு மது கண்டு, நம்பியும் * அப்போதொரு சிந்தைசெய்து 'என்மனஞ் சூழ வருவானாய் * உறங்குவான்போல் யோகுசெய்வான் தானே * உணர்வைப் பெறவூர்ந்தவன் உறங்குகிறானோ' என்று, தம்முடைய ஆசார்யதிவ்யஸூக்தியிலே (க) 'ஸ்வாபாவிகாநவதிகாதிஶயேஶித்ருத் வம்" என்கிற ஶ்லோகத்தை ஒரு ஓலைப்புறத்திலே யெழுதி அவன் வருகிறவழியிலே போகவிடுத்திருக்க, அவனும் அவ்வழியில் வந்து அவ்வோலையைக் கண்டெடுத்து வாசித்துக்கொண்டு கடக்கப்போகட்டு

(க) ஸ்வாபாவிகாநவதிகாதிஶயேஶித்ருத்வம்

† 'கொன்றைச்சடைமுடியானைக் குளிரநீராட்டினால்' என்று காண்கிறபாடம் வெண்பாவின் லக்ஷணத்துக்குச் சேராது.



ஜலத்தை ஆஹரித்துக்கொண்டு மீண்டுபோகிறவன் ஜலத்தையும் இறக்கி முன்பெறிந்த ஏட்டைத் தேடி யெடுத்து மீண்டு குடமெடுத் துக் கொண்டு வருகிறவன், எங்களைக்கண்டு (க) "ஶோகஸ்ஶ்லோ கத்வமாகத:" என்று ஸ்ரீவால்மீகபகவாந் அர்த்தசிந்தனை பண்ணினாப் போலே இவனும் ஶ்லோகார்த்த பர்யாலோசனைபண்ணநின்றுகொண்டு கிட்டவந்து நின்று 'உங்கள்கையில் நழுவின பொருள் இதுவோ?' என்ன, நம்பியும், 'வேறே சிலர் பொருள் நழுவுமதொழிய எங்கள் பொருள் நழுவுமதல்ல' என்ன, அவனும் 'அது கிடக்கிடீர், நீங்கள் எல்லாரும் ஓரிடத்திலே நடக்கிறதென்?' என்ன, நம்பியும் 'மார்க்கம் கலக்கமற்றிருக்கையாலே' என்ன, அவனும் 'கேவல ருக்கு மார்க்கங்களுண்டோ?' என்ன, இவரும் '* பொருள்கை யுண் டாய்ச் செல்லுமவனுக்கு அடுப்பது இதுவன்றோ?' என்ன, அவனும் 'இப்போது நீங்கள் உற்றாரை விட வந்தீர்களோ?' என்ன இவரும் 'அதல்ல, கறவைகள் கொள்ள வந்தோம்' என்ன, அவனும், 'அனுஷ் டாதாக்களுக்கும் பஶுபாததூளி பவித்ரமன்றோ?' என்ன, இவ ரும் 'அது இடமறிந்து நேர்படில் நல்லது' என்ன, அவனும் 'குறுக்கு நெடுக்காகில் பேதமென்?' என்ன, இவரும் 'செவ்வையிருக்கத் திர்யக் காகையே பேதம்' என்ன, அவனும் 'இது புதுவார்த்தைக்கட்டுக் களோ?' என்ன, இவரும் 'பழையவார்த்தைக் கட்டுகளும் இப் படியே' என்ன, அவனும் 'இதிலே பூர்வவிசாரம் வேண்டாவோ?' என்ன, நம்பியும் 'பரத்வத்திலேகாண் விசாரமிருப்பது' என்ன, நாய னாரும் நிருத்தராய் நம்பியை ஏறப்பாராநின்றுகொண்டு யதாஸ்தா நமே போம்போது தலைதுலுக்கி அடைவுகேடு காணலாம்படி போனான்; நம்பியும் அதுகண்டு '(க) "ப்ரஸாதமஹமச்சித்தம்" என்னு மாபோலே நெஞ்சமுருகாநின்றதே! *அவரே யினியாவாரே' என்று அநுஸந்தித்து ஸாத்யகோடியிலேறிட்டு முதலிகளுடன் ஸல்லாபித் துக்கொண்டு திருமலையே மீண்டு எழுந்தருளினார்" என்றவாறே, உடையவரும் மிகவும் ஆநந்தித்துக் கூரத்தாழ்வானையும் முதலியாண் டானையும் இருந்த முதலிகளையும் பார்த்தருளி 'கேட்டீர்களோ, கோவிந்தனுக்கு ஆளவந்தார் திவ்யஸூக்தி நெஞ்சிலுற்று அதற்கு வாங்மாத்ரத்தாலே வைதண்டிகச்சாயையைக் காட்ட, அதற்கு நம்பி

(க) ஶோகஶ்ஶ்லோகத்வமாகத: (உ) ப்ரஸாதமஹமச்சித்தம்

யும் சாயாமாத்ரத்தாலே ஸதுத்தரங்களை வாக்சாதுர்யங்களாலே ரசிக்க, கோவிந்தனும் சாஸ்த்ரவிதக்தனாகையாலே நம்பியினுடைய ஸ்ரீஸூக்திவைசாரத்யக்ரமங்களிலே யீடுபட்டு நிருத்தரனானானிறே: எங்ஙனேயென்னில்;- (க) "கூடஸ்தோऽக்ஷர உச்யதே"-"அமரர்களாதி முதல்வன்," (உ) "தேஹீ ஸந்மார்க்கவர்த்தநः" - "நெறிவாசல்தானே யாய்நின்றான்," (ங) "கஸ்மிந்நாம்வேத்திதத்வதः" - "யானேநீயென்னுடைமையும்நீயே," (ச) "ஜ்ஞாநேநஹீநःபசுபிஸ்ஸமாநः - "என்னினைந்துபோக்குவரிப்போது," (ரு) "யேவாலலாடபலகேலஸதூர்த்வ புண்ட்ராः" - "தவளப்பொடி கொண்டுநீறிட்டிடுமின்," (சு) "ஊர்த்வ புண்ட்ரந்த்விஜாதீநாம்" - "நீறுசெவ்வேயிடக்காணில்," (எ) "வேத மூலப்ரமாணாத்" - "மிக்கவேதியர் வேதம்," (அ) "ஸதேவஸோம்யே தமக்ர ஆஸீத்", "தர்மேஸர்வம்ப்ரதிஷ்டிதம்," "அவித்யயாம்ருத்யும் தீர்த்வாவித்யயாऽம்ருதமச்நுதே", "ப்ரணவோதநுச்சரோஹ்யாத் மாப்ரஹ்மதல்லக்ஷ்யமுச்யதே - அப்ரமத்தேந † வேத்தவ்யம் சர வத்† தந்மயோபவேத்", "நாராயணாத்ப்ரஹ்மாஜாயதே, நாராயணாத் ருத்ரோஜாயதே" என்று இப்படிப்பட்ட ச்ருதிஸ்ம்ருதீதிஹாஸ புராணாதிகளிலே ப்ரதிபாதிக்கிற அர்த்தங்களையெல்லாம் தத்காலத்திலே மநஸ்ஸானது அவகாஹிக்க, கோவிந்தனும் நிருத்தரனாய் டோலாயமாநசித்தனாய்ப்போகையாலும், இவரும் அவனை ஸாத்யகோடியிலேயேறிட்டுத்திரும்பியருளுகையாலும், நம்பிக்கு அவனுடன்

(க) கூடஸ்தோऽக்ஷர உச்யதே (உ) தேஹீ ஸந்மார்க்கவர்த்தநः (ங) கஸ்மிந்நாம் வேதிதத்வதः (ச) ஜ்ஞாநேந ஹீநः பசுபிஸ்ஸமாநः (ரு) யேவா லலாடபலகே லஸதூர்த்வபுண்ட்ராः (சு) ஊர்த்வபுண்ட்ரம் த்விஜாதீநாம் (எ) வேதமூலப்ரமாணாத்

(அ) ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத், தர்மே ஸர்வம் ப்ரதிஷ்டிதம், அவித்யயா ம்ருத்யும் தீர்த்வா வித்யயாऽம்ருதமச்நுதே, ப்ரணவோ தநுச்சரோ ஹ்யாத்மா ப்ரஹ்ம தல்லக்ஷ்யமுச்யதே। அப்ரமத்தேந வேத்தவ்யம் சரவத்தந்மயோ பவேத்॥ நாராயணாத் ப்ரஹ்மா ஜாயதே, நாராயணாத் ருத்ரோ ஜாயதே।

† 'போத்தவ்யம்' என்றும், 'சரவத்தத்வயோ ம்வித்' என்றும் காண்கின்றது.



ஓடின் ஸாமர்த்ய மிருந்தபடி யென்!' என்று விஸ்மிதராய் ஸ்ரீவைஷ்ணவரை உபலாளித்தருளி, 'பின்னையென்?' என்று கேட்டருள,

அவரும் (க) "யம்யம்ஸ்ப்ருசதிபாணிப்யாம் யம்யம்பச்யதி சக்ஷுஷா - ஸ்தாவராண்யபிமுச்யந்தே கிம்புநர்ப்பாந்தவாஜநாः" என்கிறபடியே தேவரீருடைய உபயவிதஸம்பந்தம் பழுதுபோமோ? மூன்றும்கக்ஷியில் கார்யஸித்தியைக்கேட்டருளவேணும்' என்று விண்ணப்பஞ்செய்தார். எங்ஙனேயென்னில்:—"திருமலைநம்பியும், திருமலையில் * சிந்தாமணியைத்திருவடி தொழுதுபுறப்பட்டு, காளஹஸ்தியெல்லைநிலத்தோப்பிலே எழுந்தருளியிருந்து ஸ்ரீபாதத்துமுதலிகளுக்குத் திருவாய்மொழிவ்யாக்யாநம்ப்ரஸாதித்தருளாநிற்க, நாயனாரும் ஒரு பாதிரிமரமேறிப் புஷ்பாபசயம் பண்ணாநிற்க, அவ்வளவிலே "திண்ணன் வீடு" என்கிற திருவாய்மொழிக்கு அர்த்தம் அருளிச்செய்யாநிற்க, நாயனாரும் மூன்றுபாட்டளவும் பூப்பறிக்கைதவிர்ந்து கேட்டுக்கொண்டிருந்து நாலாம்பாட்டிலே "எம்பெருமானுக்கல்லால் பூவும் பூசனையுந் தகுமே"என்று வர, நாயனாரும் அம்மரத்தினின்றும் திடுக்கெனக்குதித்துக் கையிலிருந்த பூப்படலிகையையுஞ் சுழற்றியெறிந்து, தரித்திருந்த ருத்ராக்ஷத்தையும் அலங்கலழியவாங்கி வீசிப்போகட்டு, 'தகாது தகாது' என்று நம்பிதிருவடிகளிலே அடைவு கெட விழுந்துகிடந்து (உ) "அஜ்ஞஸ்சாசாரஹீநஸ்ச மலிநோ துஃகஸாகரே நிமக்நः" என்றும், "நீசனேன் நிறையொன்றுமிலேன்" என்றும் சொல்லுகிறபடியே தம்வர்த்தமாநத்தைச் சொல்லி அதிவிஷண்ணராகிறார். எங்ஙனேயென்னில்;—' உபயவிபூதிநிர்வாஹத்துக்கு முடிசூடினவனிருக்க விரிதலையாண்டியை விரும்பினேனே!' என்றும், 'புதுக்கணிப்புடைய புண்டரீகாக்ஷனிருக்கப் † பொறிபறக் குங்கண்ணனைப் பூசித்தேனே!' என்றும், '*கடல்மண்ணுண்ட கண்டனிருக்கக்,* கறைகொண்ட கண்டனைக்காமித்தேனே!' என்றும், '*கல்லெடுத்துக் கன்மாரிகாத்த கற்பகமிருக்கக் கையார்கபாலியைக் கண்டு வணங்கினேனே!' என்றும், '*திருவிருந்தமார்பனிருக்கத்* திருவில்லாத்தேவனைத் தொழுதேனே!' என்றும், '*பீதகவாடைப்பிரானிருக்

(க) யம் யம் ஸ்ப்ருசதி பாணிப்யாம் யம் யம் பச்யதி சக்ஷுஷா। ஸ்தாவராண்யபி முச்யந்தே கிம் புநர்பாந்தவா ஜநாः॥

(உ) அஜ்ஞஸ்சாசாரஹீநஸ்ச மலிநோ துஃகஸாகரே। நிமக்நः

† 'புகைக்கண்ணனை' என்று பாடாந்தரம்.

கப் புலியுரியுடையானைப் பின்தொடர்ந்தேனே!' என்றும், 'சதிரான கங்கையடியா னிருக்கச் சுடுகாடுகாவலனைச் சுற்றி வலம்வந்தேனே!' என்றும், 'பெருமலராகிற பெருந்துழாய்வந மிருக்கப் பெருங்கையாற் குடமெடுத்துப் பேய்ச்சுரைக்கு நீர்வார்த்தேனே!' என்றும், இப்படி பலவகையாகப் புலம்பி 'இவ்வாத்மாவை உஜ்ஜீவிப்பிக்கவேணும்' என்று தண்டனிட்டு எழுந்திராமலிருக்க, நம்பியும் முதலிகளை முகம் பார்த்து 'ஶாத்தியோக முண்டாயிருந்தது; ஆளவந்தார் க்ருபைபண்ணும்படிக்குக் குறையில்லை' என்று அருளிச்செய்து இவரையும் முடி பிடித்தெடுத்து உடம்பையும் தடவிப் பலபடியாக ஸாந்த்வவாதநம் பண்ணி (க) ''ஆபிபந்நிவசக்ஷுர்ப்யாம்'' என்கிறபடியே குளிரநோக்கி விஸ்ரம்பகதநம் நடவாநிற்க, இச்செய்தியை யடையக்கேட்டு தத்ஸ்தாநத்தாரனைவரும் வந்து நம்பியுடனே 'எங்கள் ஸ்தாநத்துக்குக் கடவரான இவரை நீங்கள் எங்ஙனே அம்மான்பொடியிட அடுக்கும்?' என்ன, நம்பியும் 'அம்மான்பொடிக்கு ஈடுபட்ட இவரையே கேட்டுக் கொள்ளுங்கோள்; எங்கள்வழி அந்யாத்ருஶம்; அசல்வழி வருகிறோமல்லோம்' என்ன, அவர்களும் நாயனாரை 'வாரும்' என்று கையைப் பிடிக்க, இவரும் கையை உதறி 'நம்கையைப் பிடிக்கக்கூடுமோ?' என்று கருவூலத்தின்திறவுகோல் இலச்சினைமோதிரம் முதலானவற்றையும் போகட்டு 'இனி உங்களுக்கும் நமக்கும் பணியில்லை' என்று கைதட்டி முகம்திருப்பிநிற்க, அவர்களும் நிராஶராய் நம்பியுடனே 'நாங்கள் இச்செய்திகளையெல்லாம் நேற்றே கேட்டோம்; நங்கள் பிரான் நம்வழி வருவா ரென்று உங்களுடனே சண்டைக்கு நிற்பதாக எண்ணியிருந்தோம்; காளஹஸ்தியுடையாரும் எங்கள்கனவிலே '(உ) ''பாஷண்டபௌத்தசார்வாகைஸ்த்ரயீ தர்மோவிலோபித:'' என்கிறபடியே வேதபாஹ்யரான பௌத்தாதிகளாலே வேதஶாஸ்த்ரங்கள் ப்ரமுஷிதங்களாகாநிற்க, (ங) ''த்ரிதண்டதாரிணாபூர்வம் விஷ்ணுநாரக்ஷிதாத்ரயீ'' என்று சொல்லுகிறபடியே நாஸ்திகநிரஸநார்த்தமாக த்ரிதண்டஸந்யாஸியான தத்தாத்ரேயரைப்போலே ஶேஷாஶந அநந்த வைநதேயர்கள் யமுனைத்துறைவர் இளையாழ்வார் கோவிந்தபட்டரா

(க) 𑌆𑌪𑌿𑌬𑌨𑍍𑌨𑌿𑌵𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌭𑍍𑌯𑌾𑌮𑍍

(உ) 𑌪𑌾𑌷𑌣𑍍𑌡𑌬𑍌𑌦𑍍𑌧𑌚𑌾𑌰𑍍𑌵𑌾𑌕𑍈𑌸𑍍𑌤𑍍𑌰𑌯𑍀𑌧𑌰𑍍𑌮𑍋𑌵𑌿𑌲𑍋𑌪𑌿𑌤𑌃।

(ங) 𑌤𑍍𑌰𑌿𑌦𑌣𑍍𑌡𑌧𑌾𑌰𑌿𑌣𑌾𑌪𑍂𑌰𑍍𑌵𑌂𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌨𑌾𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌤𑍍𑌰𑌯𑍀।



கவும், இவர்கள் சேர்த்திக்கு ஶங்கசக்ராம்ஶங்கள் முதலியாண்டான் கூரத்தாழ்வானாகவும், மற்றுமுள்ளவிஷ்ணு பார்ஷதங்களும் இப்படியே வந்து அவதரித்தார்கள்; இது நமக்கு ப்ரியமாகையாலே, கோவிந்தபட்டருக்கு முன்பு காஶிவாஸாபேக்ஷை யிருக்கையாலே அந்தப்புத்தியைத் தவிர்க்கைக்காக நாமே உள்ளங்கை கொணர்ந்த வ்யாஜமிட்டு அழைத்துவைத்துக்கொண்டதொழிய மற்றில்லை: ஆகையால், அவர்கள் ஸ்வேச்சாவிஹாரிகள்' என்று சொன்னார்' என்று சொல்லி மீண்டுபோக, நம்பியும், இவரைக் கூட்டிக்கொண்டு திருப்பதியேற எழுந்தருளித் தத்க்ஷணமே † உபநயநாதிகளையுஞ் செய்வித்து (க) ''ஸம்ஸ்காரா:பஞ்சகர்த்தவ்யா:'' என்று நெடுமாலருவியாகிய ஸ்வாமி புஷ்கரிணிக்கரையிலே பஞ்சஸம்ஸ்காரங்களையும் ப்ரஸாதித்தருளி, திருப்பல்லாண்டு முதலாக ஆழ்வார்களுடைய திவ்யப்ரபந்தங்களையும் ஓதுவித்து, அர்த்தபஞ்சகஜ்ஞாநத்தையு முண்டாக்கி விஶேஷித்து க்ருபைபண்ணியருளினார். இவரும் * ''தேவு மற்றறியாதே ஆசார்யபதைகநிஷ்டராய், (உ) ''அஹம்ஸர்வங்கரிஷ்யாமி'' என்றிருக்குமவரைப்போலே ஒழிவில்காலத்திற்படியே அவர்திருவடிகளிலே *சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் ஸர்வவித கைங்கர்யங்களும் செய்துகொண்டிராநின்றார்; இந்நாள் ஸேவித்திருந்து விடைகொண்டேன்'' என்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் அந்த ஸ்ரீவைஷ்ணவரை மிகவும் க்ருபைசெய்தருளினார்.

அநந்தரம் இராமாநுசனும் பெரியநம்பிதிருமாளிகைக்கு எழுந்தருளி அவர்திருவடிகளிலே தாளுந் தடக்கையுங் கூப்பித் தண்டன் ஸமர்ப்பித்து 'ஆளவந்தார் ஸ்ரீபாதத்திலே ஸேவியாத இழவுதீரத் தேவரீர் திருவடிகளிலே ஆஶ்ரயிக்கப்பெற்றேன்; தேவரீர்திருவுள்ளத்திலுண்டான அர்த்தவிஶேஷங்களை அடியேனுக்கு ப்ரஸாதித்தருளவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, நம்பியும் 'அப்படியே ஆகிறது' என்று (ங) ''அஹோ த்வயஸ்யமாஹாத்ம்ய மஹோவீர்ய மஹோபலம் - மந்த்ரரத்நம்ஶுபகரம் வேதஸாரம்ஸநாதநம் - ஸர்வ

(க) 𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌾𑌃 𑌪𑌞𑍍𑌚𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌾𑌃 (உ) 𑌅𑌹𑌂𑌸𑌰𑍍𑌵𑌂𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿

(ங) 𑌅𑌹𑍋 𑌦𑍍𑌵𑌯𑌸𑍍𑌯 𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌂𑌮𑌹𑍋𑌵𑍀𑌰𑍍𑌯𑌂𑌮𑌹𑍋𑌬𑌲𑌮𑍍। 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌰𑌤𑍍𑌨𑌂𑌶𑍁𑌭𑌕𑌰𑌂𑌵𑍇𑌦𑌸𑌾𑌰𑌂𑌸𑌨𑌾𑌤𑌨𑌮𑍍॥ 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑌕𑍍𑌷𑌯

† 'வபநாதிகளையும்' என்று ப்ரதிபேதம்.

பாபக்ஷயகரம் ஸர்வபுண்யவிவர்த்தநம் - ஸ்ரீகரம்லோகவஶ்யஞ்ச†ஸத்யம் ஸம்ஸாரதாரணம்" என்கிறபடியே பாபஹரமுமாய், புண்யவர்த்தகமுமாய், ஸம்ஸாரபந்தத்தையறுக்கவற்றாய், மிகவும் ஶ்லாகிக்கப்பட்டு வேதஸாரதமமாய், மாங்கள்யகரமாய் மந்த்ராத்நமாகிற த்வயார்த்தத்தை ஸவிஶேஷமாக ப்ரஸாதித்தருளி, 'இன்னமும் சில அர்த்தவிஶேஷங்களுண்டு; அவற்றை ஆளவந்தாருடைய அபிமாநாந்தர்ப்பூதரான திருக்கோட்டியூர்நம்பி ஸ்ரீபாதத்திலே சென்று கேளும்' என்று அருளிச்செய்தார்.

பெரியநம்பி ஸ்ரீபாதத்திலே ஆஶ்ரயித்த முதலிகள்:—இளையாழ்வார், மலைகுனியநின்றபெருமாள், பிள்ளை திருக்குலமுடையார், பட்டாரியரில்சடகோபதாஸர் என்று நாலுமுதலிகள்.

## இளையாழ்வார் திருக்கோட்டியூர் நம்பியினிடத்து விஶேஷார்த்தங் கேட்டல்.

இராமாநுசனும் அங்கேற எழுந்தருளித் திருக்கோட்டியூர் வாஸிகளான * மாற்றிலி சோறிட்டுத் தேசவார்த்தை படைக்குமவர்களை 'நம்பி திருமாளிகை எங்கே?' என்று கேட்டருள, அவர்களும் 'அப்பாலே தோன்றுகிற கூரை' என்று காட்ட, அவ்விடந்தொடங்கி நம்பி திருமாளிகையளவும் தண்டனிட்டுக்கொண்டு எழுந்தருள, அப்போது அவ்வூரில் * குற்றமின்றிக் குணம்பெருக்கிக் குருக்களுக்கு அநுகூலரான ஸத்துக்கள் நம்பிப்ரபாவம் அறிந்தார்கள். உடையவரும் நம்பி ஸ்ரீபாதத்திலே சென்று ஸாஷ்டாங்கப்ரணாமம் பண்ணி 'தேவரீர் அடியேனுக்கு ரஹஸ்யார்த்த விஶேஷங்களையெல்லாம் ப்ரஸாதித்தருளவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, அவரும் இவருடைய அத்யவஸாயபாஹுள்யத்தை அறியவேணுமென்று '* ஆருக்கென் சொல்லுகேன்?' என்று முகங்கொடாமல் எழுந்தருளியிருக்க, உடையவரும் மீண்டு கோயிலேற எழுந்தருளினர். பின்பு நம்பியும் கோயிலுக்குத் திருநாள்ஸேவிக்க எழுந்தருளித் தம்மூரே திரும்பி எழுந்தருளுகிறவரை நம்பெருமாள் அருளப்பாடிட்டுத் திருமாலை திருப்பரியட்டம் தீர்த்தம் சடகோபனும் ப்ரஸாதித்து 'நம்மிராமாநுசனுக்கு ரஹஸ்யார்த்தங்களை உபதேசியும்' என்று அர்ச்சகமுகேந நியமித்தருள, நம்பியும் '(க) "நாஸம்வத்ஸரவாஸினே ப்ரப்ரூயாத்" என்றும், (உ) "இதம்தேநாதபஸ்காய" என்று தொடங்கி (ங) "நசாஶுஶ்ரூஷவேவாச்யம்" என்றும் தேவரீர் நியமித்தருளிற்றே!' என்று விண்ணப்பஞ்செய்ய, பெருமாளும் 'அப்படியன்று; (ச) "ஶரீரம்வஸுவிஜ்ஞாநம்" என்றுதொடங்கிச் சொல்லப்பட்ட ஶிஷ்யலக்ஷணபூர்த்தியுள்ள உடையவருக்குச் சொல்லக்குறையில்லை' என்று அருளிச்செய்ய, நம்பியும் உடையவரைக் குறித்து 'ஊரேற வாரும்' என்று அருளிச்செய்து எழுந்தருள, இராமாநுசனும் திருக்கோட்டியூர் நம்பிஸந்நிதிக்குச்செல்ல, அவரும் 'இற்றைக்குப்போய்வாரும்' என்ன, இவரும் மீண்டு கோயிலேற எழுந்தருளினர். இப்படி பதினெட்டு பர்யாயம் எழுந்தருளி ஸ்ரீபாதத்திலே ஸேவித்து நின்றவளவிலும் நம்பியும் இவருடைய த்ருடாத்யவஸாயபரீக்ஷார்த்தமாக ஒன்றும் அருளிச்செய்யாமலிருக்க, இராமாநுசனும் பெரிய ஆர்த்தியோடே மீண்டு * இணைமலர்க்கண்ணீர் ததும்பக் கோயிலேற எழுந்தருளியிருந்தார். அவ்வளவிலே திருக்கோட்டியூர் நம்பிஶிஷ்யரான ஒரு ஸ்ரீவைஷ்ணவர் வந்து நம்பெருமாளை ஸேவித்து மீண்டு எழுந்தருளுகிறவர், உடையவர் ஸ்ரீபாதத்திலே ஸேவித்துநிற்க, அவருடனே தம்முடைய ஆர்த்தியெல்லாந் தோன்றும்படி "பூந்துழாய்முடியார்க்குத் * தகவல்ல; *பொன்னாழிக்கையாருக்குத்* தகவல்ல" என்று விண்ணப்பஞ்செய்து போகவிட்டருள, அந்த ஸ்ரீவைஷ்ணவரும் நம்பி திருவடிகளிலே சென்று தண்டனிட்டு அச்செய்தியை விண்ணப்பஞ்செய்ய, நம்பியும் 'இத்தனை ஆர்த்தி யுண்டாவதே!' என்று உகந்தருளி 'தண்டும் பவித்ரமுமாகத் தாம் ஒருவரே வருவது' என்று அவரையே மீண்டு இராமாநுசன்பக்கல் போகவிட்டருள, ஸ்ரீவைஷ்ணவரும் உடையவர் திருவடியேறச்சென்று தண்டனிட்டு நம்பியருளிச்செய்ததை விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் கேட்டருளி மிகவும் உகப்போடே அவரைத் தண்டனிட்டு, கூரத்தாழ்வானையும் முதலியாண்டானையுங் கூட்

ஸர்வபுண்யவிவர்த்தநம் । ஸ்ரீகரம் லோகவஶ்யஞ்ச ஸத்யம் ஸம்ஸாரதாரணம் ॥

† 'ஸத்யஸ்ஸம்ஸாரதாரகம்' என்றும் பாடம்.

(க) நாஸம்வத்ஸரவாஸினே ப்ரப்ரூயாத் (உ) இதம் தே நாதபஸ்காய (ங) நசாஶுஶ்ரூஷவே வாச்யம் (ச) ஶரீரம் வஸு விஜ்ஞாநம்

டிக்கொண்டு அதித்வரையோடே திருக்கோட்டியூரேறச்சென்று நம்பி திருவடிகளிலே தண்டன்ஸமர்ப்பித்து நிற்க, நம்பியும் உடையவரைப் பார்த்து 'உம்மை யொருவரையுமன்றோ வரச்சொன்னோம்; இவர்களைக்கொண்டு வருவானென்?' என்று கேட்டருள, உடையவரும் 'தேவரீர் தண்டும் பவித்ரமுமாகவன்றோ வரச்சொல்லி யருளிற்று; இவர்களைத் தண்டும் பவித்ரமுமென்றே கூட்டிக்கொண்டு வந்தேன்' என்று விண்ணப்பஞ்செய்ய, நம்பியும் 'தண்டு ஆர்? பவித்ரம் ஆர்?' என்று கேட்டருள, உடையவரும் முதலியாண்டானைக்காட்டி 'இவர் த்ரிதண்டம்,' கூரத்தாழ்வானைக்காட்டி 'இவர் பவித்ரம்' என்று அருளிச்செய்ய, நம்பியும் 'ஆகில், இவ்வர்த்தத்தை இவர்களுக்கொழிய மற்றொருவர்க்கும் சொல்லாதேகொள்ளும்' என்று நியமித்தருளித் தம் திருவடிகளைத் தொடுவித்துச் சூளுறவுகொண்டு பரமக்ருபையாலே (க) "ப்ரணவாத்யம்நமோமத்யம் நாராயணபதாந்திமம் - மந்த்ரமஷ்டாக்ஷரம்வித்யாத் ஸர்வஸித்திகரம் †ந்ருணாம் - முமுக்ஷூணாம்ஸதா ஜப்யம் புக்திமுக்திபலப்ரதம் - வைஷ்ணவாநாம்ஸதாஜப்யம்பக்திஜ்ஞாந ப்ரவர்த்தகம்" என்கிறபடியே எட்டுத்திருவக்ஷரமாய், பதத்ரயாத்மகமாய், ஜ்ஞாநபக்திவைராக்யஜநகமாகையாலே முமுக்ஷுக்களான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு *நாத்தழும்பெழ ஸதாநுஸந்தேயமாய் *நலந்தருஞ்சொல்லான பெரியதிருமந்த்ரார்த்தத்தை ப்ரஸாதித்தருளினார். இராமாநுசனும் க்ருதார்த்தராய் அதின்மற்றைநாள் அவ்வூரி லெம்பெருமானை தெற்காழ்வார் திருவோலக்கத்திலே அநேகம் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அப்பரமரஹஸ்யார்த்தத்தை அருளிச்செய்தருளினார்.

இச்செய்தியை நம்பி கேட்டருளி உடையவரை அழைத்து 'இந்தப்பரமரஹஸ்யார்த்தத்தை வேறொருவர்க்குஞ் சொல்லாதேகொள்ளும் என்றன்றோ நாம் உமக்குச் சொன்னோம்; அத்தை மறுத்து நீர் அநேகம் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குச் சொன்னீரென்று கேட்டோம்' என்று கேட்டருள, உடையவரும் 'உள்ளது, தேவரீர் திருவடிகளை முன்னிட்டுக்கொண்டு சொன்னேன்' என்று விண்ணப்பஞ்செய்ய, நம்

(க) 𑌪𑍍𑌰𑌣𑌵𑌾𑌦𑍍𑌯𑌂 𑌨𑌮𑍋𑌮𑌧𑍍𑌯𑌂 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌪𑌦𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌮𑍍 । 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌮𑌷𑍍𑌟𑌾𑌕𑍍𑌷𑌰𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌕𑌰𑌂 𑌨𑍃𑌣𑌾𑌮𑍍 ॥ 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍂𑌣𑌾𑌂 𑌸𑌦𑌾𑌜𑌪𑍍𑌯𑌂 𑌭𑍁𑌕𑍍𑌤𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌫𑌲𑌪𑍍𑌰𑌦𑌮𑍍 ॥ 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌾𑌨𑌾𑌂 𑌸𑌦𑌾𑌜𑌪𑍍𑌯𑌂 𑌭𑌕𑍍𑌤𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌕𑌮𑍍 ।

† 'ஸதா' என்றும் பாடம்.



பியும் 'ஒருவர்க்குஞ் சொல்லவேண்டா வென்று நியமித்தன்றோ சொன்னோம்; அத்தை மறுத்துச்சொன்னவுமக்கு பலம் எது?' என்றுகேட்டருள, உடையவரும் 'ஆசார்யநியமநத்தை மறுத்த எனக்கு நரகமே பலம்' என்று அருளிச்செய்ய, 'இத்தையறிந்திருந்தும் சொல்லுவானேன்?' என்றுகேட்டருள, இராமாநுசனும் 'அடியேன் ஒருவனேயன்றோ நரகம்புகுவது? தேவரீர்திருவடிகளை முன்னிட்டுக்கொண்டு சொல்லுகையாலே இவ்வாத்மகோடிகளெல்லாம் தேவரீர்திருவடிஸம்பந்தத்தாலே உஜ்ஜீவிப்பர்களென்று சொன்னேன்' என்று விண்ணப்பஞ்செய்ய, நம்பியும் 'இந்தப் பரஸம்ருத்தி நமக்குக் கூடிற்றில்லையே!' என்று, இவர் பரஸம்ருத்திக்குப்போர உகந்தருளி 'எம்பெருமானாரே! வாரும்' என்று எடுத்து அணைத்துக்கொண்டு 'அவரோ நீர்?' என்று அருளிச்செய்து, 'இதுவரையில்இத்தர்ஶநம் பரமவைதிகஸித்தாந்த மென்றிருந்தது; இன்றுமுதல் 'எம்பெருமானார்தர்ஶநம்' என்னுங்கோள்' என்று எல்லார்க்கும் அருளிச்செய்து, அந்த உகப்பின்மிகுதியாலே 'வாரீர் எம்பெருமானாரே! இன்னமொரு சரமரஹஸ்யார்த்தவிஶேஷஞ் சொல்லுவதாக இராநின்றோம்; இவ்வளவிலே நீர் த்ருப்தராயிராநின்றீர்; உம்முடைய அத்யவஸாயத்தைச் சொல்லிக்காணீர்' என்ன; எம்பெருமானாரும் 'தேவரீர் அருளிச்செய்த அர்த்தத்துக்கு மேலே ஓரர்த்தமுண்டென்றிருந்தேனாகில் அவிஶ்வாஸியாவேன்; கேளாதிருந்தேனாகில் அருளிச்செய்த அர்த்தம் நெஞ்சிற்பட்டதில்லையாம்' என்று விண்ணப்பஞ்செய்ய விரகறியாமல் ஶ்ரோதவ்யாஸாபேக்ஷனாய் வ்யாகுலாந்தஃகரணனாய் இராநின்றேன், என்று விண்ணப்பஞ்செய்ய, நம்பியும் 'இப்போது போய் ஏகாந்தமாக நீர்ஒருவருமே வாரும்' என்று அருளிச்செய்ய, இவரும் கோயிலேற எழுந்தருளினார்.

பின்பு, எம்பெருமானாரொருவருமே நம்பி ஸ்ரீபாதத்தேறச் சென்று தண்டன்ஸமர்ப்பித்து நிற்க, நம்பி இவர்திருக்கையைப் பிடித்துக்கொண்டுபோய் ஏகாந்தமாக மேல்தளத்திலே யேறிப் படிக்கதவை விழவிட்டு எழுந்தருளியிருந்து, ஒருவர்க்குஞ்சொல்லாதபடி தம்திருவடிகளைத்தொடுவித்துச் சூளுறவுகொண்டு தம்முடைய நிர்ஹேதுக க்ருபையாலே (க) "ஸர்வகுஹ்யதமம்பூயஃ ஶ்ருணுமேபரமம்வசஃ -

(க) 𑌸𑌰𑍍𑌵𑌗𑍁𑌹𑍍𑌯𑌤𑌮𑌂 𑌭𑍂𑌯𑌃 𑌶𑍃𑌣𑍁 𑌮𑍇 𑌪𑌰𑌮𑌂 𑌵𑌚𑌃 । 𑌇𑌷𑍍𑌟𑍋𑌽𑌸𑌿 𑌮𑍇 𑌦𑍃𑌢𑌮𑌿𑌤𑌿 𑌤𑌤𑍋 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌤𑍇 𑌹𑌿𑌤𑌮𑍍 ॥

இஷ்டோஸி மே த்ருடமிதி ததோ வக்ஷ்யாமி தே ஹிதம்'' என்று கீதாசார்யன் அருளிச்செய்தாப்போலே நம்பியும் ஸர்வகுஹ்யதமமாய்ப் பரமரஹஸ்யமான சரமஶ்லோகத்தையும் அருளிச்செய்து அத்தால் ப்ரதிபாதிக்கப்படுகிற இதரோபாயத்யாகபூர்வகமான ஸித்தோபாயவைலக்ஷண்யத்தையும் ப்ரஸாதித்து, 'இந்தப் பரமரஹஸ்யார்த்தத்தை (க) ''இதந்தே நாதபஸ்காய நாபக்தாய கதாசந - நசாஶுஶ்ரூஷவே வாச்யம் நசமாம் யோ஽ப்யஸூயதி'' என்று சொல்லுகிறபடியே பகவத்விமுகர் முதலான நாஸ்திகர் செவிப்படாதபடி பேணிக்கொண்டு போரும்' என்று நியமித்தருள, இவரும் 'அடியேன் அப்படிப்பட்டபேருக்குச் சொல்லக்கடவேனல்லேன்; பகவத்ப்ரவணரான கூரத்தாழ்வானொருவர்க்கும் சொல்லாதிருக்கவொண்ணாதே!' என்று விண்ணப்பஞ்செய்ய, நம்பியும் 'இவ்வர்த்தங்கேட்கைக்கு அதிகாரமுண்டேயாகிலும் (உ) ''ஸம்வத்ஸரந்தத்தர்த்தம்வா மாஸத்ரயமதாபிவா - பரீக்ஷ்யவிவிதோபாயை: க்ருபயாநிஸ்ப்ருஹோவதேத்'' என்கிறபடியே பஹுப்ரகாரத்தாலும் அவருடைய அத்யவஸாயத்தையறிந்து ஒருஸம்வத்ஸரம் ஶுஶ்ரூஷைகொண்டு சொல்லும்' என்று நியமித்தருள, எம்பெருமானாரும் * மாயனன்றோதிய வாக்கதனைக் கற்று யதார்த்தஜ்ஞானமுடையராய், அர்ஜுனன் ஷட்கத்ரயத்திலும் எடுப்புஞ் சாய்ப்புமாய்ப் போந்து இவ்வர்த்தங்கேட்டுத் தரித்தாப்போலன்றிக்கே ''மெய்ம்மைப்பெருவார்த்தை விட்டுசித்தர் கேட்டிருப்பர்'' என்கிறபடியே நிர்ப்பரராய், நிர்ப்பரத்வாநுஸந்தாநத்தாலே வந்தப்ரீத்யுத்ருக்தியாலுண்டான ராஜகுலமாஹாத்ம்யத்தோடே புறப்பட்டுக் கோயிலேற எழுந்தருளினர்.

அநந்தரம் கூரத்தாழ்வானும், எம்பெருமானார் ஸ்ரீபாதத்திலே தண்டனிட்டு நிற்க, அவரைப் பார்த்தருளி 'ஆளவந்தார் நம்மை விஶேஷகடாக்ஷம் பண்ணிப் பேரருளாளரை நோக்கி ப்ரபத்தி பண்ணி யருளினது ஸபலமாம்படி நம்பி நம்மை வாழ்வித்தருளினர்;

(க) [illegible]

(உ) [illegible]



கண்டீரோ?' என்று அருளிச்செய்து உடையவரும் ஆழ்வானைக் குறித்து 'உமக்குமுட்பட ஒருஸம்வத்ஸரம் ஶுஶ்ரூஷைகொண்டு அத்யவஸாயபாஹுள்யத்தை யறிந்துசொல்லென்று நியமித்தருளினர்' என்ன, ஆழ்வானும் 'ஒருஸம்வத்ஸரம் இஶ்ஶரீரத்திற்கு நிலையுண்டோ? இல்லையோ?' என்று வ்யாகுலாந்த:கரணராய் விசாரித்தருளிப்பெற்றாலல்லது தரியாத பேராசையாலே 'ஸம்வத்ஸர ஶுஶ்ரூஷாஸமம் - ஆசார்யன் திருமாளிகைவாசலிலே மாஸோபவாஸம்பண்ணுகை' என்று ஶாஸ்த்ரமுண்டாகையாலே அப்படிசெய்ய, உடையவரும் இரங்கி ப்ரஸாதித்தருளினர்.

முதலியாண்டானும் எம்பெருமானார் திருவடிகளிலே தண்டன் ஸமர்ப்பித்து 'அடியேனுக்கும் இவ்வர்த்தம் ப்ரஸாதித்தருளவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் 'ஆழ்வான் ஒருவர்க்குமே நம்பி ஸ்ரீபாதத்திலே விண்ணப்பஞ்செய்துகொண்டது; நீர் நம்பி ஸ்ரீபாதத்தேறப்போய்க் கேளும்' என்று அருளிச்செய்ய, முதலியாண்டானும் திருக்கோட்டியூரேற எழுந்தருளி நம்பி ஸ்ரீபாதத்திலே தண்டன்ஸமர்ப்பித்துக்கொண்டு ஆறுமாஸம் நின்றவிடத்திலும் அவர் முகங்கொடாமலிருக்க, பின்பு ஆண்டானும் நம்பி திருவடிகளிலே ஸேவித்து நிற்க, அவரும் 'ராமாநுஜபரிக்ருஹீதனைப்போலே யிருந்தாயீ! என்ன, 'அடியேன் தாஶரதி' என்ன, 'ஆகில், என்?' என்று கேட்டருள, இவரும் 'சரமரஹஸ்யார்த்தம் அடியேனுக்கும் ப்ரஸாதித்தருளவேணும்' என்றுவிண்ணப்பஞ்செய்ய, நம்பியும் '(க) ''வித்யாமதோ தநமதஸ் த்ருதீயோ஽பிஜநாந்மத: - ஏதே மதாவலிப்தாநா மேத ஏவ ஸதாந்தமா:'' என்கிற இம்மூன்று குறும்பும் போனால் எம்பெருமானார்தாமே க்ருபைபண்ணி ப்ரஸாதித்தருளுவர்; அஞ்சாதேபோம்' என்று தம்திருவடித்தாமரைகளாலே இவர் உத்தமாங்கத்தைப் பூஷிக்கும்படி ப்ரஸாதித்து விடைகொடுத்தருளினர். முதலியாண்டானும் மிகவும் ஶமதமாத்யாத்மகுணங்களையுடையராய்க் கோயிலுக்கு எழுந்தருளி, உடையவர் ஸ்ரீபாதத்தில் தண்டன்ஸமர்ப்பித்துத் தம்முடைய ஆர்த்தியெல்லாந்தோற்ற நம்பி அருளிச்செய்தபடியை விண்ணப்பஞ்செய்து ஸவிநயராய் நிற்க, உடையவரும் தம்ஸந்நிதிமுதலிகளைப்

(க) [illegible]

பார்த்தருளி 'ஆண்டான் நம்பிஸந்நிதியில் ஸ்வரூபஶிக்ஷைபெற்று வந்த வேஷமிருந்தபடி பாருங்கோள்' என்று அருளிச்செய்து, மிகவும் உகப்போடே ஆண்டானுக்கும் ஸர்வகுஹ்யதமமான சரமஶ்லோகார்த் த்தை உபதேசித்தருளி அதிஸந்துஷ்டராய் 'இப்போதன்றோ நமக் குத் தண்டும் பவித்ரமும் கைபுகுந்தது' என்று அருளிச்செய் தருளினர்.

இளையாழ்வார் திருமாலையாண்டானிடத்துத் திருவாய்மொழிகேட்டல்.

அநந்தரம் சிலநாளைக்குப் பின்பு, திருக்கோட்டியூர்நம்பி கோயி லுக்கு எழுந்தருளி நம்பெருமாளை ஸேவித்துப் புறப்பட்டுத் திரு மாலையாண்டானையும் அழைத்துக்கொண்டு எம்பெருமானார்மடமே யெழுந்தருளினவாறே உடையவரும் நம்பி ஸ்ரீபாதத்திலே ஸேவித்து நிற்க, அவரைக் கடாக்ஷித்து 'நீர் திருமாலையாண்டான்பக்கலிலே திரு வாய்மொழிக்கு அர்த்தம் கேளும்' என்று உடையவரை அவர் திருக் கையிலேகாட்டிக்கொடுத்தருளித் தாம்மீண்டு திருக்கோட்டியூரேற எழுந்தருளினர்.

திருமாலையாண்டானும் நம்பி அருளிச்செய்தபடியே திருவாய் மொழி தொடங்கி நடத்தாநிற்க, ஆளவந்தார் அருளிச்செய்தபடி ஆண்டான் நிர்வஹித்ததொழியப் பாட்டுக்கள்தோறும் சில அர்த்த விசேஷங்களை ப்ரதிபாதித்து உடையவர் அருளிச்செய்ய, 'இது ஆள வந்தார் அருளிச்செய்யக் கேட்டிலோம்' என்று அருளிச்செய்தருளி, "அறியாக்காலத்துள்ளே" என்கிறபாட்டுக்கு 'அறிவுநடையாடாத தசையிலே ஸம்பந்தஜ்ஞாநத்தைப் பிறப்பித்து, பிறந்த ஜ்ஞாநத்தை யழிக்கக்கடவதான தேஹஸம்பந்தத்தோடே பின்னையும் வைத்தாய் என்கிற இழவாலே அருளிச்செய்கிறார்' என்று திருமாலையாண்டான் அருளிச்செய்ய, உடையவரும் கேட்டருளி 'முன்னிற்பாட்டுக்களும் பின்னிற்பாட்டுக்களும் பெரியப்ரீதியோடே நடவாநிற்க, நடுவே அப்ரீதிதோற்றச் சொல்லுமது சேராது; ஆகையாலே, இங்ஙனேயா மித்தனை:— "அறியாமாமாயத்தடியேனை அறியாக்காலத்துள்ளே அடிமைக்கண் அன்புசெய்வித்து வைத்தாயால்" என்று அருளிச் செய்கிறார்' என்று இத்தையும் ஒரு உபகாரஸ்ம்ருதிபரமாக்கி அரு ளிச்செய்தவாறே, 'இது விஶ்வாமித்ர ஸ்ருஷ்டி, ஆளவந்தார் அரு ளிச்செய்யக் கேட்டிலோம்' என்று திருவாய்மொழிக்கு அர்த்தமருளிச்



செய்கை தவிர்ந்திருக்க, திருக்கோட்டியூர்நம்பி இத்தைக்கேட்டரு ளிக் கோயிலிலே திருமாலையாண்டான்பக்கலெழுந்தருளி 'திருவாய் மொழி நடக்கிறதோ?' என்று கேட்டருள, ஆண்டானும் 'அடியேன் ஆளவந்தார்பக்கல் கேட்ட அர்த்தமொழிய இவர் வேறே சிலஅர்த் தங்களை ஸ்வகல்பிதமாகச் சொல்லுகையாலே தவிர்ந்தேன்' என்ன, நம்பியும் 'அவர்சொன்ன அர்த்தமேது?' என்ன, ஆண்டானும் "'அறியாக்காலத்துள்ளே" என்கிற பாட்டுக்கு உபகாரஸ்ம்ருதியாக வேணு மென்கிறார்' என்ன, 'இவ்வர்த்தமும் ஆளவந்தார் அருளிச் செய்ய நாம் கேட்டிருக்கிறோம்' என்று நம்பி அருளிச்செய்து 'ஸாந் தீபநிபக்கலிலே க்ருஷ்ணன் வேதாத்யயநம் பண்ணினாப்போலே காணும், உம்முடையபக்கலிலே எம்பெருமானார் திருவாய்மொழி கேட்கிறதும்; ஆளவந்தார்திருவுள்ளத்திலுள்ள அர்த்தமொழிய இவர்க்கு வேறொன்றும் ப்ரகாசியாது; இவர்க்கு நீர் அஜ்ஞாதஜ்ஞா பநம் பண்ணுகிறோ மென்று இராதே கொள்ளும்' என்று அருளிச் செய்து, திருமாலையாண்டானையும் பெரியநம்பியையுங் கூட்டிக்கொண்டு எம்பெருமானார்மடமே யெழுந்தருள, உடையவரும் அதிப்ரீதியுடனே தாளுந் தடக்கையுங் கூப்பி இவர்கள் திருவடிகளிலே ஸேவித்துநிற்க, இவர்களும் 'திருவாய்மொழி விட்ட தறுவாய் தொடங்கி நீரே பல கால் அநுவர்த்தித்தாகிலும் ப்ரபந்தத்தைத் தலைக்கட்டும்' என்று ஆண்டானுக்கு அருளிச் செய்தார்கள். பின்னையுந் திருவாய் மொழிதொடங்கி நடவாநிற்கச்செய்தே, மீண்டும் ஒருஅர்த்தப்ரஸ் தாவத்திலே ஆண்டான் ப்ரதிபாதித்த அர்த்தங் கேட்டு 'ஆளவந்தார் இப்படி அருளிச்செய்யார்' என்று உடையவர் விண்ணப்பஞ்செய்ய, ஆண்டானும் 'நீர் ஆளவந்தாரைக் கண்ணிலும் காணாதிருக்க, 'இப்படி அருளிச்செய்யார்' என்கைக்கு நிதாநம் என்?' என்று கேட்டருள, உடையவரும் 'நான் ஆளவந்தாருக்கு ஏகலவ்யனன்றோ?' என்று விண்ணப்பஞ்செய்ய, ஆண்டானும் 'திருக்கோட்டியூர்நம்பி நமக்கு உரைத்தது ஒத்திருந்தது; இதுவும் ஒருதிருவவதாரம்; ஆளவந்தார் பக்கல் கேளாத அர்த்தமெல்லாம் இங்கே கேட்டோம்' என்று இவ ரைத் தண்டனிட்டருளினர்.

## இளையாழ்வார் திருவரங்கப்பெருமாளரையரிடத்தில் சரமோபாயத்தை யுணர்தல்.

பின்பு எம்பெருமானாரும் திருவாய்மொழி சாத்திப் போர ப்ரீதராயிருக்க, அவரைப்பார்த்துப் பெரியநம்பியும் 'ஆழ்வார்திருவரங்கப்பெருமாளரையர்பக்கலிலே இன்னமொரு அர்த்தவிசேஷ முண்டு; அத்தை அவர்பக்கலிலே கேளும்' என்று அருளிச்செய்தருள, உடையவரும் அது லபிக்கைக்காக அன்றுமுதல் ஆறுமாஸம் அரையருக்கு உகப்பாகப் பாலமுதுகாய்ச்சி ஸமர்ப்பித்தும் திருவத்யயநகாலங்களிலே அரையர்திருமேனிக்கு அநுரூபமாக மஞ்சட்காப்பு அரைத்து ஸமர்ப்பித்தும் அநுவர்த்தித்துப் போருங்காலத்திலே, ஒருநாள் மஞ்சட்காப்பரைத்து நீராடப்பண்ணுகிற காலத்தில் அவருடையதிருமேனிக்கு அநுரூபமல்லாதிருக்கிறபடியை அவர்திருமுகமண்டலவிகாரத்திலே கண்டு மஞ்சட்பாத்ரத்தைக் கடக்கவைத்து வேறே பாங்காக மஞ்சட்காப்பரைத்துச் சாத்திநீராடப்பண்ணியருள, திருவரங்கப்பெருமாளரையரும் அத்தைக்கண்டு மிகவுந் திருவுள்ளமுகந்தருளி உடையவரைக்குறித்து, 'என்னுடைய ஸர்வஸ்வத்தையுங் கொள்ளை கொள்ளவோ நீர் இப்படி செய்தது ?' என்று அருளிச்செய்து, 'வாரீர் எம்பெருமானாரே! உமக்கு ஒருசரமபுருஷார்த்தஞ் சொல்லுகிறோம்: கேளீர்' என்று '*தேவுமற்றறியாத ஸ்ரீமதுரகவிகளைப்போலே நீரும் (க) "குருரேவபரம்ப்ரஹ்ம குருரேவபரந்தநம் - குருரேவபர:காமோ குருரேவபராயணம் - குருரேவபராவித்யா குருரேவபராகதி: - யஸ்மாத்ததுபதேஷ்டாஸௌ தஸ்மாத்குருதரோகுரு:" என்று சொல்லுகிறபடியே, * தீமனங்கெடுத்தும் * மருவித்தொழும் மனமேதந்தும் * அறியாதனவறிவித்த ஆசார்யனே உபாயோபேயம்' என்று விஶ்வஸித்து, '(உ) "ஆசார்யஸ்ஸஹரிஸ்ஸாக்ஷாத் சரரூபீநஸம்ஶய:" என்றும், "பிதகவாடைப்பிரானார் பிரமகுருவாகிவந்து" என்றும் சொல்லுகிறபடியே உறங்கும்பெருமாள்தானே உலாவும்பெருமாளாய்வந்தார் என்றிரும்' என்று பஞ்சமோபாயநிஷ்டையான சரமபர்வார்த்தவிசேஷத்தை ப்ரஸாதித்தருளினார்.

(க) [illegible]

(உ) [illegible]



'பெரியநம்பி ஸ்ரீபாதத்திலே ஆஶ்ரயித்தபோதே ஸ்வரூபஸித்தியுண்டாயிருக்க, இவர் பலர்ஸ்ரீபாதத்திலும் உபதேஶங்கேட்கைக்கு அடியென்? அவர்கள் தாம் மேல்விழுந்து அர்த்தங்களை உபதேசிக்கைக்கு அடியென்?' என்னில்:—ஒருராஜா ஸ்வகுமாரார்த்தமாகப் பலமந்த்ரிகளிடத்தே நிதிகளைவைத்துத் தன்குமாரன் ப்ரபுத்தனானவாறே கொடுக்கச்சொல்லிப் போமாபோலே, ஆளவந்தாருப் இவர்களிடங்களிலே ஒவ்வொரு அர்த்தவிஶேஷத்தை உபதேசித்து வைக்கையாலே, ஆளவந்தார் ஸ்ரீபாதத்திலே ஸேவித்து அவ்வர்த்தங்களைப்பெறாத இழவுதீர, இவர்கள்பக்கல் அவ்வர்த்தங்களைப் பெற்று இழவுதீர்ந்தாரித்தனை; இனி, இவ்வாசார்யர்களுக்கு ஆளவந்தார் இளையாழ்வாரை '*ஆம்முதல்வன்' என்று கடாக்ஷித்து 'நாம் உங்களுக்குச்சொல்லும் பரமரஹஸ்யத்தை இளையாழ்வாருக்குச் சொல்லுங்கோள்' என்று நியமித்தருளுகையாலே 'ஶிஷ்யனாகிலுமாம், ஆசார்யனாகிலுமாம்; விலக்ஷணஸம்பந்தமே வேண்டுவது' என்று மேல்விழுந்து உபதேசித்தார்கள்: ஆகையாலே முன்புள்ள ஆசார்யர்கள் இவர்க்கு ஆசார்யர்களாய் வீறுபெற்றார்கள்; பின்புள்ளவர்கள் இவர்க்கு ஶிஷ்யர்களாய் ஸ்வரூபம்பெற்றார்கள்; ஒரு ஹாரத்தின் நடுவே மாணிக்கங் கிடந்து அந்தஹாரத்தை ஶோபிதமாக்குமாபோலே, *இடையே இராமாநுசமுனியாய் விளங்கினாரிறே.

உடையவர் கத்யத்ரயமும், நித்யத்திருவாராதநப்படியும் அருளிச்செய்து 'பரப்ரஹ்மம் ஸ்ரீமந்நாராயணனே' என்று அறுதியிட்டுத் தர்ஶநப்ரவர்த்தநம் பண்ணிக்கொண்டு போருகிற காலத்திலே, இவர் ஏழகம் மாதுகரம்பண்ணும்போது † ஸ்தாநத்தாரை நெருக்கிக்கொண்டு போருகையாலே அவர்களிலே ஒருவர் இவர் மாதுகர † (ப்பண்ணுகிறவிட)த்திலே விஷமிஶ்ராந்நத்தை ப்ரயோகிக்கும்படி ‡ (நியமித்து வைக்க, அந்த க்ருஹஸ்தரும்) ஸ்வஸ்த்ரீயை ப்ரேரிக்க, அவளும் 'கூடாது' என்ன, அவனும் நிர்ப்பந்திக்க, அவளும் விஷமிஶ்ராந்

† 'ஸ்தாநத்துறையை' என்று பாடாந்தரம்.

‡ குண்டலிதக்ரந்தங்கள் சிலபிரதிகளில் காணப்படுகின்றன.

நத்தைமறித்து ஸமர்ப்பித்து தண்டனிட்டுப்போக,இவரும் 'இதென்!'
என்று திகைத்து பாவமறிந்து ஸகராங்கத்தை ஸாகராமிநியான
திருக்காவேரியிலே கரைத்துவிட்டு உபவஸித்திருக்க,இச்செய்தியைத்
திருக்கோட்டியூர் நம்பி கேட்டருளிக் கோயிலுக்கு எழுந்தருளாநிற்கச்
செய்தே மத்யாஹ்நகாலத்திலே திருக்காவேரியிலே எழுந்தருளா
நிற்க, உடையவரும் முதலிகளுமாக எழுந்தருளி நம்பி ஸ்ரீபாதத்திலே
தண்டனிட்டுக்கொண்டு கிடக்க, நம்பியும் அவரை எழுந்திருக்கச்
சொல்லாமலிருக்க, கிடாம்பியாச்சானும் 'இதென்ன ஶிஷ்யாசார்யக்ர
மந்தான்? கருமுகைமாலையை வெய்யிலிலே போகடுவார்களோ?' என்று
பரிந்தெடுக்க, நம்பியும் 'உம்மைக்காணும் தேடுகிறோம்; திருமேனிக்
குப் பரிவர் நீர்தாம்; இன்றுமுதல் தளிகைக்குப்பண்ணி இவர்க்கு
ஏகமாதுகரமாக ப்ரஸாதியும்' என்று நியமித்தருள, கிடாம்பியாச்சா
னும் அப்படியே பண்ணி ஸாதித்துக்கொண்டு எழுந்தருளியிருந்
தார்.

அருளாளப்பெருமாளெம்பெருமானர் உடையவரை ஆஶ்ரயித்தல்.

பின்பு, யஜ்ஞமூர்த்தி யென்கிற மஹாவித்வானை ஒருப்ராஹ்ம
ணன் கங்காஸ்நாநத்துக்குப்போய் அங்கு ஸ்நாநம்பண்ணி அங்குள்ள
வித்வான்களைஜயித்து அங்கே மாயாவாதஸந்யாஸாஶ்ரமத்தையும்பரிக்
ரஹித்து வித்தையாலும் ஶிஷ்யஸம்பத்தாலும் மிகுந்தவனாயிராநிற்க,
அவனும் அங்கே உடையவருடைய வைபவத்தைக் கேட்டு 'நாம்
அங்கேறப்போய் அவருடனே தர்க்கிக்கவேணும்' என்று அநேக
ஶாஸ்த்ரங்களை யெழுதி க்ரந்தங்களையும் சுமைசுமையாகக் கட்டி எடுப்
பித்துக்கொண்டு தன்வித்யாகர்வமெல்லாம் தோற்றப் பெரியமதிப்பு
டனே அதித்வரையில் கோயிலேறவந்து உடையவரைப் பார்த்து
'என்னுடன் தர்க்கிக்கவேணும்' என்ன இருவம் 'அப்படியே செய்
கிறோம்; நீ தோற்றால் என்னசெய்கிறாய்?' என்ன, அவனும் 'நான்
தோற்றேனாகில் உம்முடைய பாதரக்ஷையைச்சுமந்து உம்முடைய
பேரையுமிட்டுக் கொண்டு உம்முடைய ஸித்தாந்தத்திலே புகுராக்கட
வேன்' என்ன, உடையவரும் 'நாம் தோற்றோமாகில் க்ரந்தஸந்யா
ஸம் பண்ணித் தோற்றோமென்கிறோமித்தனை' என்ன, அவனும் ஸம்
மதித்து இப்படி அந்யோந்யம் ப்ரதிஜ்ஞைபண்ணிக்கொண்டு பதி
னெட்டுநாள் அவதியுமிட்டு இருவரும் ஒருவருக்கொருவர் தோலாமல்
மத்தகஜங்கள் பொருமாபோலே தர்க்கிக்க, இப்படி பதினாறுநாள் ஒரு
வருக்கொருவர் தோலாமல் தர்க்கித்து அவனை ஜயிக்கப்போகாமல்



பதினேழாம்நாள் அவனுடைய யுக்தி ப்ரபலமாக, இவரும் அதுக்கு
மேல் ஒன்றுந் தோன்றாமல்நிற்க, அவ்வளவிலே அவனும் தன்வெற்றி
தோற்ற எழுந்திருந்து அறைக்குப் போக, இராமாநுசனும் வ்யா
குலாந்த:கரணராய் மடமே எழுந்தருளித்தம்திருவாராதநமானபேரரு
ளாளரையுந் திருவடிவிளக்கி அமுதுசெய்யப்பண்ணி, பெருமாளுடன்
வெறுத்து 'பெருமாளே! ஆழ்வார்தொடங்கி ஆளவந்தாரளவாக இத்
தனை காலம் ஓராண்வழியாய் ப்ரதிஷ்டிதமாய்வந்த இத்தர்ஶநம் அடி
யேனைத் தொற்றித்தோற்கக்கடவதோ! இந்நாள்வரையில் தேவரீர்
ஸ்வரூபரூபகுணவிபூதிகள் ஸத்ய மென்று ப்ரமாணத்தை நடத்திக்
கொண்டு போந்தீர்; இப்போது ஒரு ம்ருஷாவாதியைக் கொண்டு
வந்து என்னுடைய காலத்திலே எல்லா ப்ரமாணங்களையும் அழித்துப்
போகட்டு லீலைகொண்டாடத் திருவுள்ளமாகில் அப்படியே செய்
தருள' என்று விண்ணப்பஞ்செய்து தாமும் அமுதுசெய்யாமல் கண்
வளர்ந்தருள, பேரருளாளரும் அன்றுராத்ரி இவர் ஸ்வப்நத்திலே
எழுந்தருளி 'இளையாழ்வீர்! நீர்முசிப்பானேன்? உமக்கு ஸமர்த்தனு
யிருப்பானொரு ஶிஷ்யனை உண்டாக்கித்தந்தோங்காணும்; உம்முடைய
பரமாசார்யரான ஆளவந்தார் அருளிச்செய்த மாயாவாதகண்
டநத்தைச் சொல்லி அவனை ஜயியும்' என்று அருளிச்செய்தருள,
உடையவரும் விடிவோரை திருநாமோச்சாரணம் பண்ணியெழுந்
திருந்து திருக்கண்களை விழித்து 'இதொருஸ்வப்ந மிருந்தபடியென்!'
என்று மிகவும் திருவுள்ள முகந்து ஸ்வப்நத்தில் அருளிச்செய்த யுக்
தியைத் தம்திருவுள்ளத்திலே கொண்டு எழுந்தருளியிருந்து, ஸந்தோ
ஷத்துடனே நித்யகர்மாநுஷ்டாநஞ்செய்தருளித் தம்திருவாராதநமான
பேரருளாளரையும்ஸேவித்துப்புறப்பட்டுப்ரஸந்நகம்பீரமாய்க்கொண்டு
தர்க்ககோஷ்டியிலே எழுந்தருள, அவ்வளவிலே அந்த வித்வானும்
ஸாவஜ்ஞஞ்கையாலே, உடையவர் எழுந்தருளுகிற காம்பீர்யத்தையும்
ஸந்தோஷத்தையுங்கண்டு 'இவர் நேற்று இங்குநின்றும் எழுந்தரு
ளும்போது சோம்பிக்கொண்டுபோனார்; இப்போது மத்தகஜம்போ
லே இங்கே வாராநின்றார்; ஆகையாலே இது மாநுஷமன்று; அதிமா
நுஷ சேஷ்டிதமாயிராநின்றது' என்று நிஶ்சயித்து, சடக்கென
எழுந்திருந்து எதிரேசென்று உடையவர் திருவடிகளிலே ஸேவித்து
'தேவரீருக்குத் தோற்றேன்' என்று ஸ்ரீபாத ரக்ஷைகளை ஶிரஸாவ
ஹித்துக்கொண்டு 'அடியேனை இரங்கியருளவேணும்' என்ன, உடை

அநந்தரம் உடையவர், ஆழ்வானையும் ஆண்டானையும் அருளாளப் பெருமாளெம்பெருமானாரையும் க்ருபைபண்ணிக்கொண்டு, வித்வத் கோஷ்டியாக நடக்குங்காலத்திலே, ஆசார்யர்களெல்லாரும் வந்து உடையவர்திருவடிகளிலே ஆஶ்ரயித்ததைக் கேட்டு, அநந்தாழ்வானும், எச்சானும், தொண்டனூர் நம்பியும், மருதூர்நம்பியும் உடையவர் திருவடிகளிலே ஆஶ்ரயிக்கவேணுமென்று எழுந்தருள, அவர்களை அருளாளப்பெருமாளெம்பெருமானார் ஸ்ரீபாதத்திலே ஆஶ்ரயிப்பித்தருளினார். அப்போது அவரும் பீதராய், அவர்களைக்குறித்து 'குருவியின்கழுத்திலே பனங்காயைக் கட்டினாற்போலே உடையவர் செய்தார்; நீங்கள் எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென்றிருங்கோள்' என்று அருளிச்செய்தருளினார்.

பின்பு உடையவரும் * அமர்சுவையாயிரமான திருவாய்மொழிக்கு அர்த்தமருளிச்செய்துகொண்டு திவ்யகோஷ்டியாக எழுந்தருளியிருக்கிற வளவிலே "ஒழிவில்காலமெல்லா முடனாய் மன்னி" என்கிற திருவாய்மொழி நடவாநிற்க, "சிந்துபூமகிழுந் திருவேங்கடம்" என்கிறவிடத்திற்கு அர்த்தமருளிச்செய்கிறவர், முதலிகளைப்பார்த்தருளி 'புஷ்பமண்டபமான பெரிய திருமலையிலே திருவேங்கடமுடையானுக்கு உகப்பாகத் திருநந்தவநஞ்செய்து திருமாலை கட்டிச்சாத்துவார் ஆரேனும்உண்டோ?' என்று அருளிச்செய்ய, அவ்வளவிலே அநந்தாழ்வான் எழுந்திருந்து 'அடியேன் விடைகொள்ளுகிறேன்' என்று விண்ணப்பஞ்செய்து தண்டன் ஸமர்ப்பித்துத் திருமலைக்கு எழுந்தருளித் திருவேங்கடமுடையானையும் திருவடிதொழுது திருநந்தவனஞ்செய்து அத் திருநந்தவனத்திற்கு 'இராமாநுசன்' என்று திருநாமஞ்சாத்தித் திருமாலைகட்டித் திருவேங்கடமுடையானுக்கு ஸமர்ப்பித்துக்கொண்டு எழுந்தருளியிருக்க, அத்தை உடையவர் கேட்டு உகந்தருளி, திருவாய்மொழிப்ரபந்தார்த்தத்தைத்தீவ்ரமாக நடத்திச் சாத்தியருளினார்.

பின்பு உடையவரும் நம்பெருமாளை ஸேவித்து 'அடியேன் பேரருளாளனையும், திருவேங்கடமுடையானையுந் திருவடிதொழுது மீண்டு விடைகொள்ளுகிறேன்' என்று விண்ணப்பஞ்செய்ய, பெருமாளும் 'போய்க் கடுகவருவது' என்று திருவுள்ளமாயருள, உடையவரும் முதலிகளுடனே புறப்பட்டுத் திருக்கோவலூரில் ஆழ்வார்கள்நாயனாரையும் திருவடிதொழுது, பெருமாள்கோயிலேற எழுந்தருளித் திருக்



கச்சிநம்பிமடமே சென்று (க) "ஸ்ரீமத் காஞ்சீமுநிம்வந்தே கமலாபதிநந்தனம் - வரதாங்க்ரிஸதாஸங்கரஸாயநபராயணம்" என்று விண்ணப்பஞ்செய்துகொண்டு நம்பிதிருவடிகளிலே தண்டன் ஸமர்ப்பித்துநிற்க, அவரும் க்ருபைபண்ணியருள அவருடனே கூட எழுந்தருளி அவர் புருஷகாரமாக ஸ்ரீகோபுரராஜனையும் ஆனைகாத்தபெருமாளையும் ஸேவித்து, உள்ளே புகுந்து (உ) "மஹாவராஹந்தேவேஶம் த்ரஷ்டுகாமோரஸாதலாத் - நிர்யயௌயத்ரபகவாநநந்த:பந்நகேஶ்வர:- தீர்த்தே தஸ்மிந்மஹாபுண்யே ஸித்தஸங்கநிஷேவிதே-ஸமாஹ்ருதாநிதீர்த்தாநி ஸர்வாணி முநிபிஸ்ததா" என்று சொல்லப்பட்ட மாஹாத்ம்யத்தையுடைய திருவநந்தஸரஸ்ஸிலேநீராடி, கேஶவாதித்வாதஶ நாமங்களையுஞ் சாத்தியருளி *எறிதிரைவையம்முற்றும் ஏனத்துருவாயிடந்த ஞானப்பிரானையும் ஸேவித்து, ப்ரதக்ஷிணமாக எழுந்தருளி ஆழ்வார்களையும் ஸேவித்து, ஸ்ரீபலிபீடத்தையும் தண்டனிட்டு, ஜயவிஜயர்களையும் ஸேவித்து, ப்ரதக்ஷிணமாக எழுந்தருளித் திருவநந்தாழ்வானையும் ஸேவித்து, திருப்புற்றடியிலேயும் தண்டனிட்டு, அதற்குக் கிழக்காகத் தம்மை விஶேஷ கடாக்ஷஞ் செய்தருளின யமுனைத்துறைவர் திருமுற்றத்திலே (ங) "நமோநமோயாமுநாய யாமுநாயநமோநம:" என்று அநுஸந்தித்து தண்டன்ஸமர்ப்பித்து, கரியமாணிக்கத் தெம்பெருமானையுந் திருவடிதொழுது, ஸ்ரீ புண்ணியகோடிவிமானத்தையும் ஸேவித்து, † திருமடைப்பள்ளிநாச்சியாரையும் ஸேவித்து, உள்ளே புகுந்து பேரருளாளன் பெருந்தேவியாரையும் திருவடிதொழுது (ச) "ஆகாரத்ரயஸம்பந்நா மரவிந்தநிவாஸிநீம் - அஶேஷஜக தீஶித்ரீம்

(க) 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍 𑌕𑌾𑌞𑍍𑌚𑍀𑌮𑍁𑌨𑌿𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌕𑌮𑌲𑌾𑌪𑌤𑌿𑌨𑌨𑍍𑌦𑌨𑌮𑍍 । 𑌵𑌰𑌦𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌸𑌦𑌾𑌸𑌙𑍍𑌗𑌰𑌸𑌾𑌯𑌨𑌪𑌰𑌾𑌯𑌣𑌮𑍍 ॥

(உ) 𑌮𑌹𑌾𑌵𑌰𑌾𑌹𑌂 𑌦𑍇𑌵𑍇𑌶𑌂 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌕𑌾𑌮𑍋 𑌰𑌸𑌾𑌤𑌲𑌾𑌤𑍍 । 𑌨𑌿𑌰𑍍𑌯𑌯𑍌 𑌯𑌤𑍍𑌰 𑌭𑌗𑌵𑌾𑌨𑌨𑌨𑍍𑌤𑌃 𑌪𑌨𑍍𑌨𑌗𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 ॥ 𑌤𑍀𑌰𑍍𑌥𑍇 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌮𑌹𑌾𑌪𑍁𑌣𑍍𑌯𑍇 𑌸𑌿𑌦𑍍𑌧𑌸𑌙𑍍𑌘𑌨𑌿𑌷𑍇𑌵𑌿𑌤𑍇 । 𑌸𑌮𑌾𑌹𑍃𑌤𑌾𑌨𑌿 𑌤𑍀𑌰𑍍𑌥𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌮𑍁𑌨𑌿𑌭𑌿𑌸𑍍𑌤𑌦𑌾 ॥ (ங) 𑌨𑌮𑍋 𑌨𑌮𑍋 𑌯𑌾𑌮𑍁𑌨𑌾𑌯 𑌯𑌾𑌮𑍁𑌨𑌾𑌯 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃 । (ச) 𑌆𑌕𑌾𑌰𑌤𑍍𑌰𑌯𑌸𑌮𑍍𑌪𑌨𑍍𑌨𑌾𑌮𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑌨𑌿𑌵𑌾𑌸𑌿𑌨𑍀𑌮𑍍 । 𑌅𑌶𑍇𑌷𑌜𑌗𑌦𑍀𑌶𑌿𑌤𑍍𑌰𑍀𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌵𑌰𑌦𑌵𑌲𑍍𑌲𑌭𑌾𑌮𑍍 ॥

† 'திருமடைப்பள்ளியையும் ஸேவித்து' என்றும் பாடம் காண்கிறது.

வந்தேவரதவல்லபாம்'' என்று அநுஸந்தித்துத் தீர்த்தப்ரஸாதமும் ஸ்வீகரித்து, புறப்பட்டு ப்ரதக்ஷிணமாக எழுந்தருளித் திருவபிஷேக மண்டபத்திலே திருவாழியாழ்வானையும் பெரியதிருவடியையும் ஸேவித்து, சேண்தலத்து அமரர்தமையாளும் சேனைநாதன் கழல் வணங்கி எழுந்தருளி, (க) ''அஶேஷகிரிராஜாய ஸ்ரீஹஸ்திகிரயேநம:'' என்று தண்டன்ஸமர்ப்பித்து, வையமாளிகையிலேயேறி ஸேவாக்ரமத்திலே நம்பியை முன்னிட்டுக்கொண்டு உள்ளேபுகுந்து * உலகேத்துமாழியானத்தியூரானை பேரருளாளரையும் ஸேவித்துநின்று, திருப்பல்லாண்டையும் வரதராஜாஷ்டகத்தையும் அநுஸந்தித்துத் * தென்னத்தியூரர் கழலிணைக் கீழ்ப்பூண்ட அன்பாளராய் நிற்க, திருக்கச்சிநம்பியும் இவர்க்குத் தீர்த்தப்ரஸாதமும் *துயரறுசுடரடியான ஸ்ரீசடகோபனும் ப்ரஸாதிப்பித்தருள, ஸ்வீகரித்து க்ருதார்த்தராய்ப் புறப்பட்டுத் திருக்கச்சிநம்பியுடனே 'அடியேன் பெரியதிருமலைக்கு விடைகொள்ளுகிறேன்' என்று விண்ணப்பஞ்செய்ய, அவரும் '* சென்று வணங்குமினோ சேணுயர் வேங்கடத்தை' என்று அருளிச்செய்து விடைகொடுத்தருளினார்.

திருமலைநம்பியினிடத்து உடையவர் ஸ்ரீராமாயணங்கேட்டல்.

உடையவரும் அதிப்ரீதியோடே திருப்பதிக்கு எழுந்தருளுமளவிலே, மார்க்கமத்யத்திலே ''வழிதிகைத் தலமருகின்றேன்'' என்கிறபடியே வழிதப்பித் திகைத்துநிற்க, முதலிகளும் அங்கே ஒரு ஏற்றமிறைப்பானைக் கண்டு 'திருமலைக்கு வழி எங்ஙனே?' என்று கேட்டவளவில் அவனும் செவ்வையான வழியைக் காட்ட, உடையவரும் 'இதொரு அமாநவன்புருஷகாரமிருந்தபடி என்!' என்று அவனைத் தண்டனிட, முதலிகளும் இப்பரமாஸ்திகத்வத்தைக்கண்டு களித்து அவர்களும் தண்டனிட, இவரும் முன்நடந்துஎழுந்தருளித் திருமலையாழ்வாரையும் திருத்தாழ்வரையிலே எழுந்தருளியிருக்கிற ஸ்ரீபராங்குச பரகால ப்ரப்ருதிகளான ஆழ்வார்பதின்மரையும் ஸேவித்து திருப்பதியிலே எழுந்தருளியிருந்து விடலதேவனையும் ஶிஷ்யனாக்கிக் கொண்டு திருப்பதியிலே ஸ்வஶிஷ்யர்கள் முப்பதுதிருநாமங்களைக் குடியேற்றி! இளமண்டியத்தையும் கைப்பற்றுகவிடுவித்து அங்கே எழுந்தருளியிருக்க, இச்செய்தியை அநந்தாழ்வான் தொடக்கமான

(க) அஶேஷகிரிராஜாய ஸ்ரீஹஸ்திகிரயே நம:



ஸ்ரீவைஷ்ணவர்கள் கேட்டருளித் திருமலையினின்றும் இறங்கிவந்து எம்பெருமானாரை ஸேவித்து 'தேவரீர் அப்பனை ஸேவிக்க எழுந்தருளவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் 'ஆழ்வார்கள் திருமலைமிதியாமையாலே, நாமும் ஏறக்கடவோமல்லோம்; திருத்தாழ்வரையிலே எழுந்தருளியிருக்கிற ஆழ்வார்களை ஸேவித்திருக்கிறோம்' என்று அருளிச்செய்ய, அநந்தாழ்வானும் 'தேவரீர் ஏறாதபோது அடியோங்களும் ஏறோம்; மற்றுமுள்ளாரொருவரும் ஏறுவதில்லை' என்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் 'அப்படியே செய்கிறோம்' என்று ததநுகுணமாகத் திருமேனியை ஶோதித்துக்கொண்டு எழுந்தருளி அடிப்புளியாழ்வாரடியிலே திருமலையாழ்வாரை ஸேவித்து, (க) ''பாதேநாத்யாரோஹதி'' என்கிறபடியே ஸ்ரீவைகுண்டநாதநியோகாத் முக்தசேதநன் பாதபீடத்திலே அடியிட்டு ஏறுமாபோலே ப்ரபத்திபண்ணிக்கொண்டு திருவேங்கடமுடையான் அருள்பாடிடத் திருமலையேறி, * செப்பார் திண்வரையையும் * பன்மணிநீரோடு பொருதுருளுங் கானாற்றையும் * அன்னனைய பொற்குவடுகளையும் * வேய்கள் நின்று வெண்முத்தமே சொரியும் * கானமும் வானரமும் வேடும் உடைய வேங்கடத்தைக் கண்டு களித்துக்கொண்டு திருப்பரியட்டப்பாறையளவிலே எழுந்தருளாநிற்க, திருவேங்கடமுடையான் தீர்த்தப்ரஸாதங்கொண்டு பெரியதிருமலைநம்பி எதிரேஎழுந்தருளி ப்ரஸாதித்தருள, உடையவரும் நம்பிதிருவடிகளிலே ஸாஷ்டாங்கப்ரணாமம் பண்ணித் தீர்த்தப்ரஸாதமும் ஸ்வீகரித்தருளி 'தேவரீர் எழுந்தருளவேணுமோ? ஒரு சிறியார் இல்லையோ?' என்று விண்ணப்பஞ்செய்ய, நம்பியும் 'நாலு திருவீதியிலும் ஆராய்ந்து பார்த்தவிடத்தில் என்னிற்காட்டில் சிறியாரைக் கண்டிலேன்' என்ன, உடையவரும் முதலிகளும் இதைக்கேட்டருளி அத்யாஶ்சர்யப்பட்டுக் கல்வேலியளவிலே எழுந்தருளாநிற்க, ஜீயர்கள் ஏகாங்கிகள் ஸ்ரீவைஷ்ணவர்கள் திருமலையிலுள்ள ஸ்தாநத்தாரை ஸ்ரீபாதந்தாங்குவார் முதலான அனைத்துக்கொத்திலுள்ளவர்களும் வந்து எதிர்கொண்டு ஸத்கரிக்க, உடையவரும் முதலிகளுமாக எழுந்தருளி வைகுந்தன் திருவாசலிலே தண்டன்ஸமர்ப்பித்துத் திருக்கோனேரியிலே நீராடிக் கேஶவாதி த்வாதஶநாமங்களையுஞ் சாத்தியருளி நாலு வீதியையும் ப்ரதக்ஷிணமாக எழுந்தருளி, ''சிந்தாமணிகள் பகரல்லைப்

(க) பாதேநாத்யாரோஹதி

பகல்செய்'' என்கிறபடியே கஸித அநர்க்க ரத்ந த்யுதி ரஞ்ஜிதமான மாட கூட ப்ராஸாத தோரண கோபுர ப்ராகாரங்களையும் அநுபவித்து, அங்கே தம் கைங்கர்யமான இராமாநுசனென்கிற திருநந்தவநத்திலே எழுந்தருளித் திருக்கண்சாத்தி உகந்தருளி, அநந்தாழ்வானைப் பார்த்து அணைத்துக்கொண்டு '* வளர்த்ததனால் பயன்பெற்றேன்' என்று மிகவும் க்ருபைபண்ணியருளி, மற்றும் அங்கு உண்டான "தேனேய்பூம்பொழில்'' என்றும், "விரையார் - பொழில்'' என்றும், "கோற்றேன்பாய்ந்தொழுகுங் குளிர்சோலை'' என்றும் சொல்லுகிற * செண் * மொய்த்தசோலைகளையும், அச்சோலைக்கு அலங்காரமாகச் * செண்பகமாய் நிற்குந் திருவுடைய செண்பகம் செருந்தி திருமகிழ் பாடலம் சுரபுன்னை புன்னாகம் முதலான மதுஸ்ரவகுஸுமப்ரகர்ஷத்தையுடைய திருப்பூமரங்களினெழிலையும், செவ்வந்தி பிச்சி இருவாட்சி மல்லிகை முல்லை தொடக்கமான கொடிமலரழகையும், "மொய்ப்பூந்தடந்தாழ்வரே'' என்று சொல்லுகிறச் * செந்தீமலரும் * சேறார்சுனைகளில் மத் தப்ரமரநாதித மனோஹாரி செந்தாமரை ஸ்ரீயையும், * திருவேங்கடத் தெண்ணீர்ச்சுனைகளில் * மீனாய்ப் பிறக்கும் விதியுடையாரையும், * கோனேரிவாழுங் குருகு கொக்கு நாரை தாரா முதலான பக்ஷிஸங்கங்களையும், வ்ருக்ஷஶாகாரூடபிககூஜித காஹளீ நாதங்களையும், * கொண்டலதிரத் * தோகைவிரித்து நடமாடுகிற மயூரகேகாரவத்தையும், * வண்டினங்கள் தென்னாதெனாவென்று பண்பாடுகிற பாடலையும் கண்டு கேட்டு ஆநந்தித்து, * நிலங்கோட்டிடைக்கொண்ட ஞானப்பிரானையும் ஸேவித்து, * ஆவாவறச்சூழ்ந்தான் திருவாசலிலே தண்டனிட்டு, அத்தாணிப்புளியையும் ஸேவித்து, ஸ்ரீபலிபீடத்தடியிலே தண்டனிட்டு யமுனைத்துறைவரென்கிற திருப்பூமண்டபத்தையும் ஸேவித்து, ப்ரதக்ஷிணமாக எழுந்தருளி (௧) "தநுர்மாஸே ஸிதே பக்ஷே த்வாதஶ்யாமருணோதயே - ஆயாந்திஸர்வதீர்த்தாநி ஸ்வாமிபுஷ்கரிணீஜலே'' என்றுசொல்லப்படுகிறமாஹாத்ம்யத்தையுடைத்தானஸ்வாமிபுஷ்கரிணியிலே தீர்த்தஸ்வீகாரஞ்செய்து, செண்பகத்திருவாசலுக்குள்ளே புகுந்து தண்டன்ஸமர்ப்பித்து, திருமடைப்பள்ளி யாகசாலை திருமாமணிமண்டபத்தையும்ஸேவித்து, ஸேனைமுதலியாரையும்ஸேவித்து, * வேங்கடத்தரியையுந் திருவடிதொழுது, ஆநந்தநிலயமென்னுந் திவ்யவிமாநத்தையுங் கண்ணாலே பருகுவாரைப்போலே அநுபவித்து உள்ளேயெழுந்தருளி * அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்குங் குலசேகரன் படியைக் கடந்து உள்ளேபுகுந்து * திலதமுலகுக்காய்நின்ற * தண்ணார்வேங்கடவிண்ணோர்வெற்பனை * சண்ணம் புகுந்து தித்திக்குஞ் * செந்தாமரைக்கட் செங்கனிவாய் நாற்றோளமுதையும் செங்கமலக்கழலிற்படியும் "சீதக்கடல்'' என்கிற திருமொழிப்படியும் மணிநூபுராதி கிரீடாந்த ஸர்வதிவ்யாபரண திவ்யமால்யாம்பர திவ்யாங்கராக ஶோபிதமான அவ்வடிவழகைப் பாதாதிகேஶாந்தமாக அநுபவித்து, "அலர்மேல்மங்கையுறை மார்பா - புகலொன்றில்லா அடியேன் உன்னடிக்கீழ் அமர்ந்துபுகுந்தேன்'' என்று * அடிக்கீழமர்ந்து புகுந்து, * பூவார் கழல்களைக் கிட்டி க்ருதாஞ்ஜலிபுடராய் அநுபவித்து நிற்க, இவர்க்குத் தீர்த்தப்ரஸாதமும் ப்ரஸாதிக்க ஸ்வீகரித்து க்ருதார்த்தராயருளி 'இது பூலோக வைகுண்டமாயிருந்தது!' என்று ஆஶ்சர்யப்பட்டு, திருமஞ்சநமும் ஸேவித்தருளி, அழகப்பிரானுடைய ஸ்ரீபலித்திருநாளையும் ஸேவித்தருளி, '* விண்ணோர்வெற்பாகையாலே "நிகரில் அமரர் முனிக்கணங்கள்'' என்று அருளிச்செய்த நித்யஸூரிகளன்றோ இங்கு வர்த்திப்பார்? நாம் இங்கே வர்த்திக்கவொண்ணாது' என்று அப்போதே 'திருமலையினின்றும் இறங்கவேணும்' என்று உத்யோகிக்க, பெரியதிருமலைநம்பியும், திவ்ய தேசத்திலே மூன்றுநாள் இருக்கவேணுங்காணும்' என்று அருளிச்செய்தருள, உடையவரும் ஸம்மதித்து மூன்றுநாளும் அமுதுசெய்யாமல் * அப்பொழுதைக் கப்பொழுது என்னாராவமுதமான அப்பனை அநுபவித்து, அதுவே தாரகமாக எழுந்தருளியிருந்து, இப்படியே மூன்று நாள் சென்றவாறே நம்பியுடன் அப்பன்ஸந்நிதிக்குச் சென்று திருப்பல்லாண்டை அநுஸந்தித்து அஞ்சலித்துநிற்க, அப்பனும் மிகவும் உகப்புடனே இவர்க்குத் தீர்த்த ப்ரஸாதமும் ப்ரஸாதித்து, தம் * பூவார்கழல்களை ஶிரோபூஷணமாக்கி 'உமக்கும் உம்முடையார்க்கும் உபயவிபூத்யைஶ்வர்யமும் தந்தோமென்று நம் தெற்குவீட்டிலே சொன்னோமே' என்று திருப் * பவளச் சோதிவாய்திறந்து அருளிச்செய்தருள, உடையவரும் 'மஹாப்ரஸாதம்' என்று அங்கீகரித்து நிற்க, அப்பனும் விடைகொடுத்தருள, நம்பியுடன் புறப்பட்டு அப்பொழுதே இறங்கியருளி, திருப்பதியிலே பெரியதிருமலைநம்பிதிருமாளிகையேறச் சென்று அங்கே அமுதுசெய்து, அவர்ஸந்நிதியிலே

(௧) தநுர்மாஸே ஸிதே பக்ஷே த்வாதஶ்யாமருணோதயே ।
ஆயாந்தி ஸர்வதீர்த்தாநி ஸ்வாமிபுஷ்கரிணீஜலே ॥

இதிஹாஸஶ்ரேஷ்டமான ஸ்ரீராமாயணத்திற்கு அர்த்தங் கேட்டுக் கொண்டு ஒரு ஸம்வத்ஸரம் எழுந்தருளியிருக்குங் காலத்திலே;

## எம்பார் ப்ரபாவம்.

ஸ்ரீகோவிந்தப்பெருமாள் திருமலைநம்பி திருமாளிகையிலே ஸர்வவித கைங்கர்யங்களும் பண்ணிக்கொண்டிருக்கும்படியைக் கண்டு உடையவர் ப்ரீதராயிருக்கிறவளவிலே, ஒருநாள் நம்பிக்குத் திருப் படுக்கைபடுத்து முந்துறத்தாம் அதிலே கண்வளர்ந்துபார்க்க, இத்தை எம்பெருமானார் கண்டருளி 'இப்பரிமாற்றம் இருந்த பொல்லாங்கு என்?' என்று அத்தைப் பெரிய திருமலைநம்பிக்கு விண்ணப்பஞ் செய்ய, நம்பியும் அவரை யழைத்து 'கோவிந்தப்பெருமாளே! நீர் நமக்குப்படுத்த படுக்கையிலே படுத்துக்கொண்டீரென்று கேட்டோம்: இப்படி செய்யலாமோ? இதற்குப் பலம் என்? என்று கேட்டருள, ஸ்ரீகோவிந்தப் பெருமாளும் 'நமக்கு நரகமே பலம்' என்ன, நம்பியும் 'இத்தை அறிந்திருந்தும் செய்வானென்?' என்ன, இவரும் 'தேவரீர் திருமேனியில் ஒன்று உறுத்துதல் ஊர்தல் கடித்தல் செய்யாமல் கண் வளர்ந்தருளப்பெற்றால், அடியேனுக்கு நரகமே அமையும்' என்று விண்ணப்பஞ் செய்ய, இத்தை உடையவர் கேட்டருளி, 'ஈதொரு ப்ரதிபத்திவிஶேஷம் இருந்தபடி என்?' என்று உகந்தருளினார். ஒரு நாள் நம்பியுடைய திருநந்தவநத்தை நோக்கிக்கொண்டு உடையவர் எழுந்தருளாநிற்க, ஓரிடத்திலே கோவிந்தப்பெருமாள் ஒரு பாம்பின் வாயிலே கையிட்டு மீளவும் நீராடிக் கைங்கர்யத்திலேபோக, உடைய வரும் இதுகண்டு கோவிந்தப்பெருமாளே! என் செய்தீர்?' என்று கேட்க, அவரும் 'பாம்பு நாக்கை நீட்டிக்கொண்டு நோவுபடும்படியைக் கண்டு அதன் நாக்கிலே முள்ளிருக்க வாங்கினேன்' என்று விண்ணப் பஞ்செய்ய, உடையவரும் 'இவருடைய பூததயை இருந்தபடி என்?' என்று உகந்தருளினார்.

அநந்தரம் எம்பெருமானாரும் ஸ்ரீராமாயணம் சாத்தினவாறே பெரிய திருமலைநம்பி ஸ்ரீபாதத்திலே தண்டன் ஸமர்ப்பித்து 'அடியேன் *திருவரங்கப் பெருநகரை நோக்கி விடை கொள்ளுகிறேன்' என்று விண்ணப்பஞ் செய்ய, நம்பியும் 'இத்தனைதூரம் எழுந்தருளின உமக்கு நாம் ஒன்றும் தரப்பெற்றிலோமே!' என்ன, இவரும் 'அப்படி தந்தருளத் திருவுள்ளமுண்டாகில் "சார்ந்த இருவல்வினைகளும் சரித்து மாயப்பற்று அறுத்துத் தீர்ந்து தன்பால் மனம் வைக்கத் திருத்தி" என்கிறபடியே இவருடைய துர்வாஸனையைச் சேதித்து "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கும் அழுக்குடம்பும், இந் நின்ற நீர்மை இனி யாமுறாமை" என்னும்படி பண்ணியருளி, "உடன் கூடுவதென்று கொலோ!" என்றிருந்த அடியேன்நினைவைத் தலைக்கட் டியருளின தேவரீர் அடியேனுக்கு இந்தக் கோவிந்தப்பெருமாளைத் தந்தருளவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, பெரியதிருமலைநம்பி யும் அவரையழைத்து 'வாரீர் கோவிந்தப்பெருமாளே! எம்பெருமா னாரை நம்மைக்கண்டாற்போலே ஸேவித்திரும்' என்று உதகதாரா பூர்வகமாகக் கொடுத்தருளினார்.



உடையவர் அவரையும் கூட்டிக்கொண்டு நம்பிக்குத் தண்டன் ஸமர்ப்பித்துப் புறப்பட்டு *வண்டுவளங்கிளரும் நீர்சோலை வண்பூங் கடிகையிலே சென்று கடிகாசலமேறி *மிக்கார் வேதவிமலர் விழுங் கும் அக்காரக்கனியையுங் கண்டு ஸேவித்துக் களித்து, அங்கு நின் றும் புறப்பட்டுத் திருபுட்குழியிலே எழுந்தருளி க்ருத்ரபுஷ்கரிணி யிலே தீர்த்தம் ஸ்வீகரித்துப் பெரியவுடையாரையுந் திருவடிதொழுது சண்டப்ரசண்டர்களையும் சரணமடைந்து, உள்ளேபுகுந்து மரகதவல் லியாரையும் திருவநந்தாழ்வானையும் ஸேவித்து மற்றும் ஸேவாக்ரமம் தப்பாமல் ஸேவித்து ப்ரதக்ஷிணமாக எழுந்தருளிப் புகுந்து ஸேனை முதலியாரையுந் திருவடிதொழுது *பொன்முடியம் போரேற்றையெம் மானை *நாற்றடந்தோளதன்முடிவொன்றில்லாத தண்டுழாய்மாலயனை யும் ஸேவித்து நின்று, (க) "ஸௌவர்ணமகுடாநத்த துளஸீமால்ய ஶோபித - ஸமஸ்தஜகதாதார ஶங்கசக்ரகதாதர - தாமோதர ஹ்ருஷீ கேஶ த்ரயீமயஜநார்த்தந - தாநவாரேஜகந்நாத ஶார்ங்கபாணே நமோ ஸ்துதே" என்று அநுஸந்தித்துநிற்கத் தீர்த்தப்ரஸாதமும் ப்ரஸா திக்க ஸ்வீகரித்துத் தண்டனிட்டுப் புறப்பட்டுத் திருவெஃகா முத லிய அங்குள்ள திருப்பதிகளையும் ஸேவித்து மீண்டு திருக்கச்சிநம்பி ஸந்நிதியிலே எழுந்தருளினார்.

---

(க) 𑌸𑍌𑌵𑌰𑍍𑌣𑌮𑌕𑍁𑌟𑌾𑌨𑌦𑍍𑌧𑌤𑍁𑌲𑌸𑍀𑌮𑌾𑌲𑍍𑌯𑌶𑍋𑌭𑌿𑌤 । 𑌸𑌮𑌸𑍍𑌤𑌜𑌗𑌦𑌾𑌧𑌾𑌰𑌶𑌙𑍍𑌖𑌚𑌕𑍍𑌰𑌗𑌦𑌾𑌧𑌰 ॥ 𑌦𑌾𑌮𑍋𑌦𑌰𑌹𑍃𑌷𑍀𑌕𑍇𑌶 𑌤𑍍𑌰𑌯𑍀𑌮𑌯 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨 । 𑌦𑌾𑌨𑌵𑌾𑌰𑍇𑌜𑌗𑌨𑍍𑌨𑌾𑌥𑌶𑌾𑌰𑍍𑌙𑍍𑌗𑌪𑌾𑌣𑍇𑌨𑌮𑍋𑌸𑍍𑌤𑍁𑌤𑍇 ॥

"அவனைவிட்டகன்றுயிராற்றகில்லா" என்னுமாபோலே ஸ்ரீ கோவிந்தப்பெருமாள் திருமேனியில் வைவர்ண்யம் பிறந்து முகம் உறுவின இருப்பைக்கண்டு, உடையவரும் இவரகவாயில் எண்ணை மறிந்து 'கோவிந்தப்பெருமாளே! நம்பியை ஸேவித்து வாரும்' என்று இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்களைக்கூட்டியனுப்பித் திருக்கச்சிநம்பியுடனே பேரருளாளரை ஸேவித்திருந்தார். கோவிந்தப்பெருமாளும் திருப்பதியிலே எழுந்தருளி நம்பிதிருமாளிகைவாசலிலே தண்டன்ஸமர்ப்பித்து நிற்க, அங்குள்ளார் அவரைக்கண்டு உள்ளேசென்று பெரியதிருமலைநம்பிக்கு விண்ணப்பஞ்செய்ய, நம்பியும் திருவுள்ளங்கலங்கி 'பித்தனைப் போகச்சொல்லுங்கோள்' என்ன, தேவிகளும் 'இத்தனை தூரம் இளைத்துவந்தவரை அழைத்து ஸேவையும் ஸ்ரீபாததீர்த்தமும் தளிகைப்ரஸாதமும் ப்ரஸாதிக்கவேண்டாவோ?' என்று விண்ணப்பஞ்செய்ய, நம்பியும் 'விற்ற பசுவுக்குப் புல்லிடுவாருண்டோ?' என்று நைஷ்டுர்யத்தையே ப்ரகாஶிப்பித்து முகங்கொடாமல் தள்ளிவிட, கோவிந்தப் பெருமாளும் அங்கு நிராஶராய்த் திருவாசலிலேதண்டன் ஸமர்ப்பித்து ஸ்ரீவைஷ்ணவர்களுடனே மீண்டு பெருமாள்கோயிலேற எழுந்தருளி உடையவரை ஸேவித்துநிற்க, ஸ்ரீவைஷ்ணவர்கள் இந்த வ்ருத்தாந்தத்தை விண்ணப்பஞ்செய்யக் கேட்டருளி நம்பியுடையஸர்வஜ்ஞதையைஶ்லாகித்துக் கோவிந்தப்பெருமாளையும் பிற்காலியாதபடி தம்ஸௌலப்ய ஸௌஶீல்யாதி குணங்களாலே ஆழங்காற்படுத்திக்கொண்டு, திருக்கச்சிநம்பிக்குத் தண்டன்ஸமர்ப்பித்து விண்ணப்பஞ்செய்து புறப்பட்டுத் * திருவரங்கன்திருப்பதியை நோக்கி யெழுந்தருள, அங்குள்ள முதலிகளெல்லோரும் எதிர்கொள்ள எழுந்தருளி ஸேவாக்ரமத்திலே நம்பெருமாளை ஸேவித்துநிற்க, பெருமாளும்* சோதிவாய்திறந்து 'நம்வடக்குமலைக்குப்போய் வந்தீரோ?' என்று வினவியருளித் தீர்த்தப்ரஸாதமும் ஸ்ரீசடகோபனும் ப்ரஸாதிக்க, ஸ்வீகரித்துப் புறப்பட்டு மடமேயெழுந்தருளி, ஸ்வாபிமாநாந்தர்பூதரான முதலிகளையும் க்ருபைபண்ணிக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

ஸ்ரீகோவிந்தப்பெருமாளுக்கு எம்பெருமானார்கோஷ்டியில் அநுபவமும் அவர்விக்ரஹாநுபவமும் அவர் ஸல்லாபங்களும் அவர் திருவடிகளிலே கைங்கர்யங்களுமே காலக்ஷேபமாய், நித்ராலஸ்யங்களுமின்றிக்கே ப்ரத்யஹம் நடவாநிற்க, ஒருநாள் உடையவரும் முதலிகளும் பெரியதிருவோலக்கமாக எழுந்தருளியிருக்க, முதலிகளெல்லா



ரும் கோவிந்தப்பெருமாளுடைய ஜ்ஞாநபக்திவைராக்யங்களையும் ஸ்வாசார்யபதைகநிஷ்டையையும் சொல்லித் தலைதுலுக்கிக்கொண்டாட, ஸ்ரீகோவிந்தப்பெருமாள், தாமும் 'அது ஒக்கும் ஒக்கும்' என்று அவர்களைக் காட்டில் தம்மைத் தாமே மிகவும் ஶ்லாகித்துக் கொள்ள, உடையவரும் அதுகண்டு அவரைக்குறித்து 'எல்லாரும் உம்மை ஶ்லாகித்தால் நீர் நைச்யாநுஸந்தாநம் பண்ணவேண்டியிருக்க, அதுசெய்யாதே நீர்தாமே உம்மை ஸ்துதித்துக்கொள்ளாநின்றீர்; இப்படி செய்யுமது ஸ்வரூபத்திற்குச் சேருமோ?" என்று அருளிச்செய்ய, ஸ்ரீகோவிந்தப்பெருமாள் உடையவரைப் பார்த்து "ஐயோ! முதலிகள் அடியேனைக் கொண்டாடில், காளஹஸ்தியில் கையும் குடமும் கழுத்தில் இலந்தைக்கொட்டை வடமுமாய்க்கொண்டு எளிவரவுபட்டு நின்ற அந்நிலையைக் கொண்டாடுமத்தனையன்றோ அடியேனுக்கு உள்ளது? இப்படியான பின்பு "பீதகவாடைப்பிரானார் பிரமகுருவாகி வந்து" என்கிறபடியே தேவரீர் இவ்வாத்மாவை எடுக்கைக்காகவே ஒருதிருவவதாரம்பண்ணிச்செய்தருளின க்ருஷிபரம்பரைகளை அநுஸந்தித்தால், நம்முதலிகளெல்லாரையும் போலன்றிக்கே நித்யஸம்ஸாரிகளிலும் கடைகெட்டுக்கிடந்த அடியேன் காலதத்வமுள்ளதனையும் "எனக்கினியார் நிகர் நீணிலத்தே" என்றும், "இனியாவர் நிகரகல்வானத்தே" என்றும், "நெஞ்சமே நல்லை நல்லை" என்றும் சொல்லுகிறபடியே அடியேனையே ஶ்லாகித்துக் கொள்ள ப்ராப்தியுண்டு; ஆகையாலே, அடியோங்களெல்லாரும் தேவரீராலே இவ்வாத்மாவுக்கு உண்டான நன்மைகளை ஶ்லாகித்தால் தேவரீரைக் கொண்டாடிற்றாமித் தனையன்றோ?' என்று விண்ணப்பஞ்செய்ய, எம்பெருமானாரும் கோவிந்தப்பெருமாளை 'நல்லீர் நல்லீர்' என்று போர உகந்தருளி 'உம்முடைய குணங்கள் நமக்கும் உண்டாம்படி அழகிய நெஞ்சாலே நம்மை அணைத்துக்கொள்ளீர்' என்று வாரியெடுத்து அணைத்துக்கொண்டருளினார்.

ஒருநாள் ஸ்ரீகோவிந்தப்பெருமாள் † எம்பெருமானடியாள்வாசலிலே கால்யகர்மங்களையு மிழந்து நிற்கக் கண்டு ஒருஸ்ரீவைஷ்ணவர் உடையவர் கோஷ்டியிலே அத்தை வெளியிட, உடையவரும் 'கோவிந்தப்பெருமாளே! நீர் அங்கே நிற்பானென்?' என்ன, இவரும் 'தேவ

† 'எம்பெருமானாரடியாள்' என்று ப்ரதிபேதம்.

ரீர்தாலாட்டு மதுரமாய் இசையேறிச் * செவிக்கினிய செஞ்சொல்லா யிருக்க, தேவரீர்குணாநுபவமும் முன்னடிவலையக்கட்ட, போக்கடி யற்று நின்றேன்' என்று விண்ணப்பஞ்செய்ய, ஸ்ரீவைஷ்ணவரும் 'தாலாட்டு நடந்தது உள்ளது' என்ன, உடையவரும் 'இவர்ப்ரா வண்ய மிருந்தபடி என்!' என்று உகந்தருளினார்.

பின்பு இவர்க்கு இருளும் ஏகாந்தமு மின்றிக்கே, த்ரிவிதகரணத் தாலும் "இராமாநுசன்மிக்கசீலமல்லால் உள்ளாது என்னெஞ்சு" என்கிறபடியே இராமாநுசன்* மெய்யில்பிறங்கிய சீரும் அவர்குணா நுபவமுமே காலக்ஷேபமாகச் செல்லாநிற்க, ஸ்ரீகோவிந்தப்பெரு மாள்திருத்தாயார் வந்து 'கோவிந்தப்பெருமாளே! உம்முடைய தேவிகள் பக்வமானாள்' என்ன, இவரும் 'ஆகில், அம்மா! இருட் டும் தனியுமா யிருக்கும் அவகாசம் பார்த்து அவளை வரக்காட்டும்' என்ன, அவரும்பஹுநாள் அவகாசம்பார்த்து ஒருநாளும் அவகாசங் காணாதே உடையவருக்கு விண்ணப்பஞ்செய்ய, அவரும் இவரை அழைத்து 'கோவிந்தப்பெருமாளே! நம்மாணை; ஒரு ருது காலத்திலே நீர் போம்' என்று அருளிச்செய்து போகவிட்டருள, கோவிந்தப்பெரு மாளும் தேவிகளுக்கு இராமுற்ற அந்தர்யாமியை அநுபவிப்பித்துத் தத்குணசேஷ்டிதங்களைக் கீர்த்தித்தருளிப் போகவிட, இவர்திருத்தா யார் விடிவோரை வந்து 'இங்ஙன் செய்யலாமோ?' என்ன, இவரும் 'அந்தர்யாமி ப்ரகாசித்திருக்க அழிச்சாட்டங்கூடுமோ?' என்ன, இச் செய்தியை அருகிலிருந்தவர்கள் எம்பெருமானாருடனே விண்ணப்பம் செய்ய, இவரும் திருவடிகளிலே ஸேவித்துநின்றவளவிலே அவரும் 'இராமுற்ற என்செய்தீர்?' என்று மந்தஸ்மிதஞ்செய்து கேட்டருள, இவரும் 'அந்தர்யாமி ப்ரகாசிக்கையாலே இதுக்கு ஏகாந்தம் கண்டி லேன்' என்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் 'வாரீர் கோவிந்தப் பெருமாளே! உமக்கு விஷயாந்தரவிரக்தி இத்தனையுண்டாகில், (க) "அநாஶ்ரமீநஸந்திஷ்டேத்" என்கிற ஶாஸ்த்ரவசநம் நீர் அறியீ ரோ?' என்ன, இவரும் 'அடியேனுக்கு ஸந்யாஸாஶ்ரமம் ப்ரஸாதித் தருளவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் த்ரிதண்ட காஷாயாதிகளை ப்ரஸாதித்துத் தம்திருநாமத்தையே ப்ரஸாதித்தருள, இவரும் 'ஸ்ரீபாதச்சாயாபந்நனாயிருக்குமவனுக்குப் பொறுக்கும்படி

(க) 𑌅𑌨𑌾𑌶𑍍𑌰𑌮𑍀 𑌨 𑌤𑌿𑌷𑍍𑌠𑍇𑌤𑍍



ப்ரஸாதித்தருளவேணும்' என்று விண்ணப்பஞ் செய்து திருவடிகளி லே தண்டனிட்டுக் கிடக்க, உடையவரும் அத்திருநாமத்தை ப்ரத்யா ஹரித்து 'எம்பார்' என்று திருநாமஞ்சாத்தி முடிபிடித்தெடுத்து க்ருபைசெய்தருளினார்.

---

அநந்தரம் தேஶாந்தரத்தினின்றும் இரண்டுஸ்ரீவைஷ்ணவர்கள் கோயிலுக்கு எழுந்தருளித் திருவீதியிலே நின்றவர்கள் சிலரைப் பார்த்து 'எம்பெருமானார் மடம் எது?' என்றுகேட்க, அவர்களும்எந்த 'எம்பெருமானார்மடம்?' என்ன, புதுக்க எழுந்தருளின ஸ்ரீவைஷ் ணவர்கள் நெஞ்சுளைந்து 'நீங்கள் இரண்டிட்டுச் சொல்லுவானேன்? நம் தர்ஶநத்துக்கு இரண்டு எம்பெருமானாருண்டோ?' என்ன, அவர் களும் 'உண்டு; அருளாளப்பெருமாளெம்பெருமானாரும் எழுந்தருளி யிருக்கிறாராகையாலே, சொன்னோம்' என்ன, 'நாங்கள் அவரை அறி யோம்; உடையவர்மடத்தைக் கேட்டோம்' என்ன, 'ஆனால் இரா மாநுசன்மடம் ஈது' என்று அவர்கள் காட்ட, அந்த ஸ்ரீவைஷ்ணவர் களும் உடையவர்மடமே சென்று புக்கார்கள்.

அருளாளப்பெருமாளெம்பெருமானார் இப்ரஸங்கத்தை யாத்ருச் சிகமாகக் கேட்டு 'ஐயோ! நாம், உடையவரைப்பிரிந்து ஸ்தலாந்தரத்தி லே யிருக்கையாலன்றோ, லோகத்தார் நம்மை எம்பெருமானாருக்கு எதிர்த்தட்டாகச் சொன்னார்கள்; ஆகையாலே, நாம் அநர்த்தப்பட் டோம்' என்று மிகவும் வ்யாகுலப்பட்டு, அப்போதே தம்முடைய மடத்தை இடித்துப்போகட்டு வந்து உடையவர்திருவடிகளைக் கட்டிக் கொண்டு 'அநாதிகாலம் இவ்வாத்மா தேவரீர்திருவடிகளை அகன்று அநர்த்தப்பட்டுப்போந்தது போதாமல், இப்போதும் அகற்றிவிடத் திருவுள்ளமாய்விட்டதோ!' என்று மிகவும் க்லேஶிக்க, உடையவரும் 'இதற்குக் காரணமென்?' என்ன, அவரும் அங்குப்பிறந்த வ்ருத்தாந் தத்தை விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் அச்செய்திகளையடையக் கேட்டு 'ஆனால் இனி உமக்கு நாம்செய்ய அடுப்பது என்?' என்ன, அருளாளப்பெருமாளெம்பெருமானாரும் 'அடியேனை இன்றுதொடங்கி *நிழலுமடிதாறும்போலே "நின்றாளிணைக்கீழ்வாட்சி யான் சேரும் வகை யருளாய்" என்கிறபடியே தேவரீர்திருவடிகளின்கீழே வைத் துக்கொண்டு நித்யகைங்கர்யங்கொண்டருளவேணும்' என்று விண் ணப்பஞ்செய்ய, உடையவரும் 'ஆனால், இனி இங்கேவாரும்' என்று

அவரைத் தம்ஸந்நிதியிலே அரைக்ஷணமும்பிரியாமல் வைத்துக் துக்கொண்டு அகிலார்த்தங்களையும் ப்ரஸாதித்தருள, அவரும் க்ருதார்த்தராய் உடையவரையொழிய வேறொருதெய்வ மறியாதவராகையாலே, ஸகல வேதாந்த ஸாரார்த்தங்களையும் பெண்ணுக்கும்பேதைக்கும் ஸுக்ரஹமாகக் கற்று உஜ்ஜீவிக்கலாம்படி 'ஜ்ஞாநஸாரம்', ப்ரமேயஸாரம்' என்கிற திவ்யப்ரபந்தங்களையு மிட்டருளி, அதிலே ''ஸச்சிஷ்யனென்பானுக்கு ஸதாசார்யனே பரதேவதை, அவன்திருவடிகளிற் கைங்கர்யமே பரமப்ராப்யம், அவன்தான் பகவதவதாரவிசேஷம்'' என்னுமத்தையும் அருளிச்செய்தருளினார்.

அநந்தரம் கூரத்தாழ்வானையும், முதலியாண்டானையும், அருளாளப்பெருமாளெம்பெருமானாரையும், மற்றுமுள்ள முதலிகளையுங் கூட்டிக்கொண்டு எழுந்தருளியிருந்து '' இலிங்கத்திட்டபுராணத்தீரும் சமணரும் சாக்கியரும், வலிந்துவாதுசெய்வீர்களும்'' என்று அருளிச்செய்து '*இடங்கொள்சமயத்தையெல்லா மெடுத்துக்களைகைக்காகவும், (க) ''தத் த்வ மஸி'' இத்யாதி வாக்யஜந்யஜ்ஞாநமே மோக்ஷஸாதநம்' என்கிற மாயாவாதிகளையும், 'ஜ்ஞாநகர்மஸமுச்சயமே மோக்ஷஸாதநம்' என்கிற குத்ருஷ்டிகளையும் நிரஸித்து '†வேதநகர்மாங்ககமாய், வேதநத்யாநோபாஸநாதி ஶப்தவாச்யமாய், பக்திரூபாபந்நமான உபாஸநாத்மகஜ்ஞாநமே வேதாந்த ப்ரதிபாத்யமான மோக்ஷஸாதநம்' என்கைக்காகவும், நாம் வேதாந்தம் நடத்தவேணும்' என்று அருளிச்செய்ய, 'அப்படியே செய்தருள' என்று முதலிகள் விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் ஆழ்வானைப்பார்த்து 'நான் சொன்ன பாஷ்யவாக்யம் உம்முடைய திருவுள்ளத்திற்கு ஒத்திருந்தாலொழிய நீர் திருவெழுத்துச் சாத்தவேண்டா' என்று நியமித்தருள, ஆழ்வானும் அப்படியே திருவெழுத்துச் சாத்திவருமளவில், ஆத்மாவுக்கு ஶேஷத்வவிதூரமான ஜ்ஞாத்ருத்வம் ப்ரதிபாதித்து ஒருவாக்யம் அருளிச்செய்தருள, ஜீவாத்மாவுக்கு பகவச்சேஷத்வவிதூரமான ஜ்ஞாத்ருத்வத்தோடு தேஹாத்மாபிமாநத்தோடு ஒருவாசியில்லாமையாலே ஆழ்வானும் திருவெழுத்துச் சாத்தாமலிருக்க, உடையவரும் அத்தை நிரூ

(க) தகூவேலி

'† வேதநத்துக்குக் கர்மம் அங்கமாய்' என்றும், 'வேதமார்க்கமாய்' என்றும் பாடம் காண்கிறது.



பித்துப்பாராமல் 'எழுதும்' என்ன, இவரும் எழுதாதிருக்க, அதுகண்டு குபிதராய் 'ஆகில், நீரே பாஷ்யஞ் செய்யும்' என்று அருளிச்செய்கை தவிர்ந்து ஆழ்வானை உதைத்துப்போகவிட, முதலிகள் ஆழ்வானை 'ஆசார்யர் கோபித்துத் தள்ளிவிட்டாரே; இப்போது நீர் என்ன நினைத்திருக்கிறீர்?' என்று கேட்க, ஆழ்வானும் 'உடைமை உடையவன் இட்ட வழக்காயிருக்கும்; அடியேனுக்கு இதில் அந்வய மில்லை' என்றருளினார் பின்பு உடையவரும் வாக்யார்த்தத்தை நன்றாக ஆலோசித்துக்கொண்டு ஆழ்வானையழைத்து, கோபித்ததற்கு அநுதபித்து, பகவச்சேஷத்வத்தோடே கூடினஜ்ஞாத்ருத்வப்ரதிபாதகமான வாக்யம் அருளிச்செய்தருள, ஆழ்வானும் அதிஶீக்ரமாகத் திருவெழுத்துச்சாத்த, இப்படி ஸ்ரீபாஷ்யம், வேதாந்த தீபம், வேதாந்தஸாரம், வேதார்த்தஸங்க்ரஹம், கீதாபாஷ்யம் இவற்றை அருளிச்செய்து ஆளவந்தாருடைய ப்ரதமமான இழவைத் தீர்த்தருளினார்.

உடையவரை முதலிகளெல்லாரும் தண்டனிட்டு 'தேவரீர் இதரஸமய நிராகரணபூர்வகமாகத் தர்ஶநஸ்தாபநம் பண்ணியருளிற்று; இனி * தீதில்நன்னெறிகாட்டித் தேசமெங்குந் திரிந்து திக்விஜயம் பண்ணி அங்குள்ள திவ்ய தேஶங்களையும் ஸேவித்து எழுந்தருளவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் முதலிகளுமாக நம்பெருமாள் திருமுன்பே சென்று தண்டன் ஸமர்ப்பித்து இச்செய்தியை விண்ணப்பஞ்செய்ய, பெருமாளும் 'அப்படியே செய்யீர்' என்று திருவுள்ளமாக, அங்குநின்றும் புறப்பட்டருளி, சோழமண்டலத்திலே எழுந்தருளித் திருக்குடந்தை முதலான திருப்பதிகளையும் ஸேவித்து, அங்குண்டான இதரஸித்தாந்த வித்வான்களையும் தர்க்கித்து ஜயித்து, அங்குநின்றும் புறப்பட்டுத் தெற்கே எழுந்தருளி * வளரிளம்பொழில் சூழ்மாலிருஞ்சோலை முதலான திருப்பதிகளையும் ஸேவித்து பாண்டிமண்டலத்திலுண்டான பரவாதிகளையும் ஜயித்து, திருப்புல்லாணியையும் ஸேவித்து ஸேதுதர்ஶநம்பண்ணி, திருநகரியேறச் சென்று கண்ணிநுண்சிறுத்தாம்பை அநுஸந்தித்து நம்மாழ்வாரை ஸேவித்து நிற்க, ஆழ்வாரும் மிகவும் க்ருபைபண்ணியருளித் தம் தீர்த்தப்ரஸாதமும் திருமாலைப்ரஸாதமும் ஸ்ரீ ஶடகோபபதத்வயமான ஸ்ரீமதுரா

கவிகளையும் ப்ரஸாதிக்க, இராமாநுசனும் (க) "வகுளதவளமாலாவக்ஷஸம் † வேதபாஹ்ய ப்ரபலஸமயவாதச்சேதகம் பூஜநீயம்-விபுலகுருகநாதங்காரிஸூநுங்கவிம்ஸம்ஸரணமுபகதோZஹம் † சக்ர ஹஸ்தேபசக்ரம்" என்று அநுஸந்தித்துத் தண்டன்ஸமர்ப்பித்துப் புறப்பட்டுத் திருப்புளியாழ்வாரையும் பொலிந்துநின்றபிரானையும் திருவடிதொழுது புறப்பட்டு மற்றுஞ்சுற்றிலுமுண்டான திருப்பதிகளையும் ஸேவித்து, அங்குள்ள பாஹ்யகுத்ருஷ்டிகளையும் ஜயித்துப் புறப்பட்டு, திருக்குறுங்குடிக்கு எழுந்தருளிக் *கோலத்திருக்குறுங்குடிநம்பியை ஸேவித்துத் தீர்த்த ப்ரஸாதமும் ஸ்வீகரித்து நிற்கிறவளவிலே, நம்பியும் அர்ச்சகமுகேந 'நாம், ராமக்ருஷ்ணாத்யவதாரமுகேந * சன்மம்பலபல செய்துவந்து பிறந்து சேதநரைத்திருத்தப்பார்த்த விடத்தில், அவர்கள் ஆஸுரப்ரக்ருதிகளாய் ஒருவரும் நம்மைவந்து சேர்ந்தார்களில்லை; நீர் இத்தனைபேரையும் எங்ஙனே திருத்தினீர்?' என்று கேட்டருள, உடையவரும் 'தேவரீர் கேட்குங்க்ரமத்திலே கேட்டால், சொல்லுமடைவிலே சொல்லுகிறோம்' என்ன, நம்பியும் தம்திவ்யஸிம்ஹாஸனத்தினின்றும் இறங்கியருளி ரத்நகம்பளத்திலே இருந்து இவர்க்கு ஒரு திவ்யஸிம்ஹாஸநத்தை இட்டருள, அதிலே ஸ்வாசார்யரான பெரிய நம்பி எழுந்தருளியிருக்கிறாராகப் பாவித்துக்கொண்டு தாம் நிலத்திலேயிருந்து, நம்பி திருச்செவியிலே (உ) "ஸர்வேஷாமேவமந்த்ராணாம் மந்த்ரரத்நம்ஸுபாவஹம்- ஸக்ருத்ஸ்மரணமாத்ரேண ததாதி பரமம்பதம்-மந்த்ரரத்நத்வயம்ந்யாஸஃ ப்ரபத்திஶ்ஶரணாகதிஃ - லக்ஷ்மீ நாராயணாயேதி ஹிதம்ஸர்வபலப்ரதம்" என்கிற மாஹாத்ம்யத்தையுடைய

(க) வகுளதவளமாலாவக்ஷஸம்வேதபாஹ்யப்ரபலஸமயவாதச்சேதகம் பூஜநீயம் । விபுலகுருகநாதம் காரிஸூநும் கவிம்ஶம் ஶரணமுபகதோஹம் வக்ஷ ஹஸ்தேபசக்ரம் ॥

(உ) ஸர்வேஷாமேவமந்த்ராணாம் மந்த்ரரத்நம் ஶுபாவஹம் । ஸக்ருத்ஸ்மரணமாத்ரேண ததாதி பரமம் பதம் ॥ மந்த்ரரத்நம் த்வயம் ந்யாஸஃ ப்ரபத்திஶ்ஶரணாகதிஃ । லக்ஷ்மீநாராயணாயேதி ஹிதம் ஸர்வபலப்ரதம் ॥

† 'வேதாபாஹ்யாவரஸமயவிவாத' என்றும், 'சக்ரஹஸ்தாக்ரதஸ்ஸ்தம்' என்றும் பாடாந்தரங்கள்.



த்வயத்தை உபதேசிக்க, நம்பியும் போரவுகந்து 'இராமாநுசனையுடையோம்' என்று அருளிச்செய்ய, உடையவரும் அவருக்கு 'ஸ்ரீவைஷ்ணவநம்பி' என்று தாஸ்ய நாமம் ப்ரஸாதித்தருள, நம்பியும் இவரை ப்ரஹ்மரதமேற்றி உபலாளித்தருளினர். உடையவரும் நம்பியை ஸேவித்து நின்று (க) "அபசாராந்நிமாந்ஸர்வாந் க்ஷமஸ்வபுருஷோத்தம" என்று விண்ணப்பஞ்செய்து, அங்குநின்றும் புறப்பட்டுத் திருவண்பரிசாரத்தையும் திருவாட்டாற்றையும் திருவடிதொழுது, திருவனந்தபுரத்திலே எழுந்தருளிப் * படமுடையரவிற் பள்ளிபயின்ற பத்மநாபப்பெருமாளையும் த்வாரத்ரயத்தாலே பாதாதிகேஶாந்தமாக ஸேவித்தருளி, அங்குள்ள ப்ரதிவாதிகளையும் ஜயித்து ஸ்ரீராமாநுஜமடத்தையும் உண்டாக்கி, புறப்பட்டு மலையாளதேசத்திலுண்டான திருப்பதிகளையும் ஸேவித்து, அத்தேசத்தில் அந்யஸித்தாந்திகளையும் ஜயித்து, மேலைஸமுத்ரக்கரைவழியாக உத்தரதேசத்திலெழுந்தருளி * வடதிசைமதுரை சாளக்கிராமம் வைகுண்டஸ்தாநத்வாரவதி அயோத்தி உத்தரபதரிகாஶ்ரமம் நைமிஶாரண்யம் புஷ்கரம் என்று சொல்லப்பட்ட திவ்யதேசங்களையும், மற்றுமுண்டான திருவாய்ப்பாடி ஸ்ரீ கோவர்த்தநகிரி ஸ்ரீப்ருந்தாவநம் முதலான திருப்பதிகளெல்லாவற்றையும் ஸேவித்துக்கொண்டு, அவ்வவ்விடங்களிலுள்ள குத்ருஷ்டிவித்வான்களையும் ஜயித்து,

பட்டிமண்டபத்தைக்கிட்டி ஸரஸ்வதீபண்டாரத்தேற எழுந்தருளினவளவிலே, ஸரஸ்வதி தானேவாசல்திறந்துகொண்டுவந்து எதிரே புறப்பட்டு நின்று உடையவரைப்பார்த்து '(உ) "தஸ்யயதாகப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ" என்கிற ஶ்ருதிக்குப்பொருள்சொல்லிக்காணீர்' என்ன, இவரும் (ங) "கபிஸ்த்வாதித்யஃ கம்பிபதிகிரணைரித்யபிகபிர்பிபஸ்தீத்யாம் நாதஸ்ஸகபிரமுநாஸ்தம்யதிஹதத்-ப்ரதீம. கப்யாஸந்திவஸகரதேஜோவிகஸிதம் ஸுபத்மம்ஸ்ரீமத்த்வாதமணிபகவச்சக்ஷு

(க) அபசாராந்நிமாந்ஸர்வாந்க்ஷமஸ்வபுருஷோத்தம

(உ) தஸ்யயதாகப்யாஸம்புண்டரீகமேவமக்ஷிணீ

(ங) கபிஸ்த்வாதித்யஃ கம்பிபதிகிரணைரித்யபிகபிர்பிபஸ்தீத்யாம் நாதஸ்ஸகபிரமுநாஸ்தம்யதிஹதஃ । ப்ரதீமஃ கப்யாஸம் திவஸகரதேஜோவிகஸிதம் ஸுபத்மம் ஸ்ரீமத்த்வாதமணிபகவச்சக்ஷுர்த்வயமிதி ॥

ருபமா" என்று கம் என்று ஜலமாய், கிரணங்களாலே அத்தைப்பாநம்
பண்ணுகையாலே கபிஶப்தவாச்யனான ஆதித்யனாலே, (க) "அஸ
க்ஷேபணே" என்று விகாஸவாசகமாய், அலர்த்தப் பட்ட தாம
ரைப்பூப்போலேயிருக்கும் பரமபுருஷன் திருக்கண்கள்' என்று
கப்யாஸத்திற்குப் பொருள் அருளிச்செய்ய 'ஸரஸ்வதியும் கேட்டு
ஸந்துஷ்டையாய், இவரிட்டருளின ஸ்ரீபாஷ்யக்ரந்தத்தையும் ஶிர
ஸாவஹித்துத் தன்கையை நீட்டி உடையவர்திருக்கையைப் பிடித்
துக்கொண்டுபோய் 'இது ப்ரக்ஷிப்தமன்று, ஶுத்தமாயிருந்தது'
என்று அங்கீகரித்து, இவருக்கு 'ஸ்ரீபாஷ்யகாரர்' என்று திருநாமஞ்
சாத்தி ஹயக்ரீவரையும் எழுந்தருளுவித்துக்கொடுத்து மிகவும் ஶ்லா
கிக்க, ஸ்ரீபாஷ்யகாரரும், 'நம்மை இத்தனை ஆதரிக்கைக்கு அடி
என்?" என்று கேட்டருள, அவளும் 'முன்பு இங்குவந்த ஶங்கரனை
இஶ்ருதிக்கு அர்த்தங்கேட்டவளவில், அவனும் குரங்குப்ருஷ்டம்
போலே யிருக்குமென்று அபஹாஸ்யமான அர்த்தஞ் சொன்னான்;
நீர் என்கருத்தறிந்து பொருள்சொல்லுகையாலே நான் ஆதரித்தேன்'
என்றாள்; இத்தை அத்தேசத்திலுள்ள ப்ரதிபக்ஷஸித்தாந்திகள்
கேட்டுவந்து உடையவருடன் தர்க்கிக்க, அவர்களெல்லாரையும்
ஜயித்துத் தம்ஸித்தாந்தத்தை ஸ்தாபித்தபடியை அத்தேசத்தின் ராஜா
கேட்டு 'இதொரு ஆஶ்சர்ய மிருந்தபடி என்!' என்று வந்து உடைய
வர் ஸ்ரீபாதத்தில் ஆஶ்ரயிக்க, அவனையும் க்ருபைபண்ணி எழுந்த
ருளியிருக்குமளவிலே, அங்குள்ள அஸௌபாக்யருக்களான வித்வான்கள்
இவரை அபிசரிக்கத் தேட, உடையவரும் கேட்டருளி 'இத்தைக்
காணக்கடவோம்' என்று திருவுள்ளம்பற்றியிருக்க, அவ்வளவிலே வித்
வான்கள் பித்தேறித் தங்களைத் தாங்களே மோதிக்கொண்டு பேய்க
ளாய் ஓடித்திரிய, ராஜாவும் இத்தைக்கண்டு உடையவரைத் தண்ட
னிட்டு 'தேவரீர் இப்படி செய்தருளலாமோ?' என்று வேண்டிக்
கொண்டு அவர்களையும் ஸ்வஸ்தராம்படி பண்ணுவித்து அவருடைய
திருவடிகளிலே ஆஶ்ரயிப்பித்து, தன் ஸர்வபரிகரத்துடன் இருகாத
வழி ஸேவித்துக்கொண்டுவந்து வழிவிட்டு மீண்டுபோக,

உடையவரும் வாராணஸீவழியாக எழுந்தருளிக் கங்கையைக்
கிட்டி * கங்கைகங்கையென்ற வாசகத்தாலே * எழுமையுங்கூடி யீண்

(க) சுவஸ க்ஷேபணே ஶுதஜீவாதுஶஶ ஶஜ்ஞீ
வ்யூராஹூத் | யாநவாநூ விநிக்ஷிவஷேக்ஷயம் தநீஜாஜ்ஞா ||



டிய பாவமெல்லாம் * இறைப்பொழுதளவினிற் கழுவிடும் பெருமையை
யுடைய கங்கையில் "திருமால் கழலிணைக்கீழ் குளிந்து" என்கிற
படியே நீராடிக் † (காபாலிஸ்பர்ஶதோஷத்தையுங் கழித்துக்) ஶேஷ
வாதித்வாதஶோர்த்வபுண்ட்ரங்களையும் தரித்துக்கொண்டு, * கண்ட
மென்னுங்கடிநகரிலெம்பெருமானையும் கைதொழுது * கழலிணைபணிந்து
புறப்பட்டு, ஸ்ரீபுருஷோத்தமத்தேற எழுந்தருளி ஸ்ரீஜகந்நாதனை
யுந் திருவடிதொழுது அங்குள்ள ப்ரச்சந்நபௌத்த வித்வான்களையும்
ஜயித்து அங்கே ராமாநுஜமடமொன்று உண்டாக்கி, அங்கிலும் புறப்
பட்டு ஸ்ரீகூர்மத்தேற எழுந்தருளிக் கூர்மநாதனையும் ஸேவித்து, ஸிம்
ஹாத்ரியேற எழுந்தருளி ஸிம்ஹகிரியப்பனையும் ஸேவித்து, அவ்வி
டத்தில் அந்யஸமயங்களையும் தர்க்கித்து ஜயித்து, அங்கிலும் புறப்
பட்டு அஹோபிலத்தேறச்சென்று அஹோபிலநாஸிம்ஹனையும்
ஸேவித்து, புறப்பட்டு,

*தெழிகுரலருவித் திருவேங்கடமலையேறித் திருவேங்கடமுடை
யானையும்ஸேவித்துநிற்க, அவ்வளவிலே "தாழ்சடையும் நீண்முடியும்
ஒண்மழுவும் சக்கரமும், சூழரவும் பொன்னாணும் தோன்றுமால் -
சூழுந், திரண்டருவி பாயுந் திருமலைமே லெந்தைக், கிரண்டுருவு
மொன்றா யிசைந்து" என்று ஆழ்வார் அநுபவித்த ஹரிஹராகார
மொத்திருக்கையாலே ஶைவர் கண்டு 'எங்கள் நாயனார்' என்றுபிணங்கி
வர, உடையவரும் 'உங்கள் தம்பிரானுக்கு அஸாதாரண சிஹ்நமான
த்ரிஶூல டமருகத்தையும், எங்கள் பெருமாளுக்கு அஸாதாரணசிஹ்
நமான திருவாழி திருச்சங்காழ்வார்களையும் பண்ணித் திருவேங்கட
முடையான் திருமுன்பே வைப்போம்; அவர் எத்தையெடுத்துத் தரித்
துக்கொள்ளுகிறாரோ அத்தையிட்டு அவர்ஸ்வரூப நிரூபணம்
பண்ணக்கடவது' என்று, அவ்வாயுதங்களைப் பண்ணி அவர்ஸந்நிதி
யிலேவைத்து, கர்ப்பக்ருஹத்தில் ஒருத்தருமில்லாதபடி ஶோதித்துத்
திருகாப்பைச் சேர்த்துக்கொண்டு புறப்பட்டுவந்து ப்ராதஃகாலமான
வாறேதிருக்காப்பைநீக்கிஸேவிக்கிறவளவிலே * கூராராழிவெண்சங்கே
ந்தி த்ரிஶூலடமருகங்களைக் காற்கடைக் கொண்டிருக்கக்கண்டு, ஆநந்
தாஶ்ருக்கள் பனிப்பக் கொந்தளித்துக் குணலைக்கூத்தடித்துக்கொண்டு
ஶைவரை அடித்தோட்டி விட்டு "பொன்னை மாமணியை யணியார்ந்

† குண்டலிதக்ரந்தம் சிலப்ரதிகளில் இல்லை.

தந்தோர், மின்னை வேங்கடத்துச்சி யிற்கண்டு" என்கிறபடியே வர்ஷுக்வலாஹகம்போலே அகிலர்க்கும் அகிலதாபத்தையும் போக்கி அகிலாபேக்ஷிதப்ரதரான * திருவேங்கடத் தெந்தையைத் திருவடிதொழுது, அப்போதே திருமலையி லிறங்கித் திருத்தாழ்வரையில் ஆழ்வார்களையுந்திருவடி தொழுது புறப்பட்டு,

பெருமாள்கோயிலுக்கு எழுந்தருளிப் பேரருளாளரையும் ஸேவித்து, புறப்பட்டுத் திருவல்லிக்கேணி திருநீர்மலைமுதலான கிழக்கில் திருப்பதிகளையும் ஸேவித்து, மதுராந்தகத்தேற எழுந்தருளிஏரிகாத்த பெருமாளையும் ஸேவித்து, பெரிய நம்பிதம்மை க்ருபைபண்ணியருளின திருமகிழடியைத் தண்டனிட்டு, தொண்டைமண்டலத்திலுண்டான மாயாவாதிகளையும் ஜயித்து, திவயிந்திரபுரத்தில் தெய்வநாயகனையும் திருவடிவணங்கி, புறப்பட்டு வீரநாராயணபுரத்தேசென்று நாதமுனிமன்னனையும் ஸேவித்து, நாதமுனிகள் யோகத்திலேஎழுந்தருளியிருந்த இடத்தையும் ஸேவித்து, இப்படி பூப்ரதக்ஷிணம்பண்ணி மடங்கித் திருவணையாடி, திருவரங்கம் பெரியகோயிலிலே எழுந்தருளிப் பெரியபெருமாளை அமலனாதிபிரானிற்படியே திருவடிமுதல் திருமுடியளவாக * முடிவில்லதோரெழில்நீலமேனியையும் அநுபவித்து அஞ்ஜலித்துக்கொண்டு ஜயஸ்ரீயுடன்நிற்க, பெருமாளும் * பவளவாய் திறந்து 'உமக்கு ஒருகுறையும் இல்லையே?' என்ன, ஸ்ரீபாஷ்யகாரரும் "திருமாலுருவோடு அவன்சின்னமேபிதற்றாநிற்பது ஓர், திருமால்தலைக்கொண்ட நங்கட்கு எங்கேவரும் தீவினையே" என்கிறபடியே அங்கும் தேவரீரையே சிந்தித்து எங்குந்திரிந்துவந்த அடியேனுக்கும் ஒருகுறை உண்டோ?' என்று விண்ணப்பஞ்செய்ய, பெருமாளும் உகந்து தீர்த்தப்ரஸாதம் ப்ரஸாதிப்பிக்க ஸ்வீகரித்து, புறப்பட்டு மடமே யெழுந்தருளி * அணியரங்கன்திருமுற்றத் தடியார் தங்களின்பமிகுபெருங்குழுவு கண்டு உகந்து அவர்களை க்ருபைபண்ணிக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

## பட்டர் வைபவம்.

உடையவரும் இப்படி * ஊரும் நாடும் உலகமும் தம்மைப்போலேயாக்கி வாழ்ந்தருளுகிறகாலத்திலே இவரை ஆஶ்ரயித்த முதலிகளில் கூரத்தாழ்வான் ஸகலஶாஸ்த்ரவித்தமராய், ஆசார்யபதைகநிஷ்டராய், அபிகமநஉபாதாந இஜ்யா ஸ்வாத்யாய யோகங்களாகிற பஞ்சகால பராயணராய், விஹிதவிஷய விரக்தராயிருக்க, ஒருவர்ஷாகாலத்திலே மத்யாஹ்நகாலமளவாக வர்ஷம்வர்ஷிக்க, ஸங்கவகாலந்தவறி மத்யாஹ்நகாலமானவாறே உபாதாநகாலம்தவறி, அஹரஹஶ்ஶிஷ்டாக்ரமண்யஜநக்ருஹங்களில் உபாதாநம்பண்ணி வந்தே திருமேனியாத்ரை நடக்கவேண்டுகையாலும், அற்றைக்குத் திருமாளிகையிலே ஸஞ்சிதபதார்த்தம் ஒன்று மில்லாமையாலும் நீராடி எழுந்தருளித் திருவடிவிளக்கி ஒருபலத்தை அமுதுசெய்யப்பண்ணித் தீர்த்தஸ்வீகாரம்பண்ணியிருக்க, ஸாயங்காலமானவாறே தத்காலிககர்மத்தைச் செய்தருளி நம்பெருமாளை ஸேவித்துத் திருவாய்மொழியநுஸந்தாநமே தாரகமாகப் பட்டினியே கண்வளர்ந்தருள, அவ்வளவிலே நம்பெருமாள் பெரிய அவஸரம் அமுதுசெய்தருளித் திருச்சின்னம்பணிமாற, ஆண்டாள் காஹளநாதங்கேட்டு 'உம்முடைய பக்தர் பட்டினியேயிருக்க, நீர் என்ன குலாவிக்குலாவி அமுதுசெய்தருளுகிறீர்?' என்ன, அவ்வாக்யம் பெரியபெருமாள் திருச்செவியிலுறுத்தித் திண்ணையிலே நித்ரைபண்ணிக்கொண்டிருந்த உத்தமநம்பிகனவிலே பெருமாள் எழுந்தருளி 'நம்பீ! ஆழ்வான் இன்றைக்கு உபவஸித்திருக்கிறார்; நம் அக்காரவடிசில்தளிகையை உபயசத்ர சாமர ஸகலவாத்யஸஹிதமாக ஶிரஸாவஹித்துக் கொண்டு போய்க் கொடும்' என்று அருளிச்செய்ய, உத்தமநம்பியும் ஸ்வப்நந்தெளிந்து கண்களைவிழித்துப்பார்த்து த்வரித்தெழுந்திருந்து பெருமாளருளிச்செய்தபடியே தளிகையைத் தாமே ஶிரஸாவஹித்துக்கொண்டு அகிலவாத்யத்துடன் ஆழ்வான்திருமாளிகைவாசலிலே செல்ல, ஆழ்வானும் பதறியெழுந்திருந்து 'இதென்!' என்று திகைத்து எதிரேசெல்ல, நம்பியும் 'நம்பெருமாள் உமக்கு அக்காரவடிசில்தளிகை அனுப்பியருளினார், 'அங்கீகரியும்' என்ன, ஆழ்வானும் தளிகையை மஹாப்ரஸாதமென்று ஶிரஸாவஹித்துக் கொண்டு 'அடியேனுக்கு அடியிலே ஸர்வாபீஷ்டமும் தந்தருளினார்; இது க்ரயத்தளிகையாயிருக்கும்' என்று தமக்கும் ஆண்டாளுக்குமாக இரண்டுதிரளைகளை அங்கீகரித்து ஶேஷித்ததைப் போகவிட்டருளி, ஆண்டாளைப்பார்த்து 'நீ என்ன நினைத்தாய்?' என்ன, அவளும் 'அடியேன் ஒன்றும் நினைக்கவில்லை; பெருமாள் அவஸரம் அமுதுசெய்தருளித் திருச்சின்னம் பணிமாறினவாறே 'உம்முடைய பக்தர் இப்படி பட்டினியிருக்க, நீர் என்ன குலாவிக்குலாவி அமுதுசெய்கிறீரென்றே

னித்தனே' என்று விண்ணப்பஞ்செய்ய, 'நீ இப்படி சொல்லலாமோ?' என்று ஆண்டாளை வெறுத்து ப்ரஸாதத்தைத் தாமும் ஸ்வீகரித்து அவளுக்கும் ப்ரஸாதித்தருளினர். பட்டரும், சீராமப்பிள்ளையும் அவதரிக்கைக்கு ஹேது இத்திருவிளைகளிறே.

இப்படி நம்பெருமாளநுக்ரஹத்தாலே ஆழ்வானுக்கு ஒருகுமாரர் வைகாசியில் அநுராதத்தில் திருவவதரித்தருள, 'திருநாமஞ் சாத்துகை முதலான உஜ்ஜீவநாம்சத்துக்கு உடையவரே கடவர்' என்று ஆழ்வான் தமக்கு அதில் அந்வயமற்றிருக்க, ஸூத்யாசௌச நிவ்ருத்தியானவுடனே பத்துநாளுங்கடந்த இரண்டாநாள், எம்பெருமானார், ஆழ்வான்திருமாளிகையேற எழுந்தருளி எம்பாரைப் பார்த்து 'ஆழ்வான்குமாரரை எடுத்துக்கொண்டுவாரும்' என்ன, அவரும் உள்ளே ஆண்டாள்பக்கலிலே சென்று *குலக்கொழுந்தான குமாரரைத் தம்மார்பிலே அணைத்துக்கொண்டு, த்ருஷ்டிதோஷாதிகள் வாராதபடி *பந்தனைதீரக் குழந்தைக்கு ரக்ஷணார்த்தமாக த்வயாநுஸந்தாநத் துடனே மங்களாசாஸநம்பண்ணிக்கொண்டுவந்து, எம்பெருமானார் *தண்டாமரைக்கண்களாலே குளிரக்கடாக்ஷித்தருளும்படி திருக்கைத் தலத்தே பிடித்தருள, உடையவரும் ஹர்ஷப்ரகர்ஷத்துடனே ஆநந் தாச்ருக்கள்பனிப்பக் கடாக்ஷிக்குமளவில் சிசுவினுடைய பசுகுபசு கென்கிற தேஜோவிசேஷத்தையும் திருமுகவொளியையும் கண்டு 'எம்பாரே! த்வயம் பரிமளியாநின்றது; என்செய்தீர்?' என்ன, அவ ரும் 'சிசுவுக்குக் காப்பாக த்வயாநுஸந்தாநம்பண்ணிக்கொண்டு எடுத்து விடைகொண்டேன்' என்ன, உடையவரும் 'கர்த்தவ்யாம் சத்துக்கு முற்பட்டீரே!' என்று திருமேனிபேணுதலுக்கு உகந் தருளி 'இவருஜ்ஜீவநாம்சத்துக்கும் நீரே கடவீர்' என்று நியமித் தருளி, பசுங்குழந்தைக்குப் பஞ்சாயுதத்திருவாபரணமும் தம்திருக் கையாலேசாத்தியருளி, நாமகரணத்திலே எம்பார்திருக்கையாலே திருவிலச்சினையும் சாத்துவித்து, ஸ்ரீபராசரபகவான்திருநாமமாக 'ஸ்ரீபராசரபட்டர்' என்று திருநாமத்தையுஞ் சாத்தி ஆளவந்தாருடைய இரண்டாமிழவையும் தீர்த்தருளினர். (க) "புத்ரீக்ருதோ ரங்கதுரந்தரேண பராசர: கூரகுலப்ரதீப: - கோவிந்தசிஷ்யஸ்ஸதுயா

(க) புத்ரீக்ருதோ ரங்கதுரந்தரேண பராசர: கூரகுலப்ரதீப: । கோவிந்தசிஷ்யஸ்ஸது யாமுநார்ய மநோரதம் பூரிதவாந் த்விதீயம் ॥



முநார்ய மநோரதம்பூரிதவாந்த்விதீயம்" என்று இவ்வர்த்தம் லக்ஷ்மீ காவ்யத்திலே உத்தமநம்பியாலும் சொல்லப்பட்டதிறே.

அநந்தரம் எம்பார் திருத்தம்பியார் சிறியகோவிந்தப்பெருமா ளுக்கு ஒருகுமாரர் அவதரித்தருள, அத்தைக்கேட்டு உகந்து உடைய வர் 'ஆளவந்தார் க்ருஷி பலிக்கப்பெற்றதே!' என்று அவர் திருமா ளிகையேற எழுந்தருளி, அவர்குமாரரையும் க்ருபையாலே கடாக்ஷித் தருளி; அக்குமாரருக்கு 'ஸ்ரீ பராங்குசநம்பி' என்று நம்மாழ்வார் திருநாமஞ்சாத்தியருளி, ஆளவந்தாருடைய மூன்றாமிழவையும் தீர்த் தருளினர். (க) "கோவிந்தராஜாந்வயஜோ மநீஷீ பராங்குசோ யாமு நவைமநஸ்யம் - அபாசகாரப்ரஸபம்த்ருதீயம் விராஜதேவ்ருத்தமணி ப்ரதீப:" என்று இதுவும் லக்ஷ்மீகாவ்யத்திலே சொல்லப்பட்டதிறே.

பின்பு பெருமாள் மஞ்சள்நீர்குடிப்பித்துப் பட்டரைப் புத்ரஸ்வீ காரம் பண்ணியருளி திருமணத்தூணருகே தொட்டிலிட்டு நாச்சியார் சீராட்டிவளர்க்க வளர்ந்தருளுகிறவர், பெருமாள் அமுதுசெய்வதற்கு முன்னே தவழ்ந்துசென்று படைத்திருந்த தளிகையில் அள்ளி அமுதுசெய்யும்படியாயிறே வளர்ந்தருளினது.

பட்டர் ஐந்து திருநக்ஷத்ரத்திலே, 'நெடுமாற்கடிமை' அநுஸந் திக்கிற ஆழ்வானை 'ஐயா! சிறுமைபெருமையாகிற பரஸ்பர விருத்த தர்மத்வயமும் ஒரு வஸ்துவிலே கிடக்குமோ? ஆழ்வார் "சிறுமா மனிசர்" என்று இரண்டையும் சேர அருளிச்செய்வானென்?' என்று கேட்க, ஆழ்வானும் 'நல்லீர்! கேட்டபடி அழகிது; நீர் அநு பநீதராகையாலே, உமக்கு இப்போது சாஸ்த்ரங்கொண்டு இசை விக்கவொண்ணாது; ப்ரத்யக்ஷத்திலே உமக்குக் காட்டுகிறோம், கேளீர்! திருமேனிசிறுத்து ஜ்ஞாநம்பெருத்திருக்கிற சிறியாச்சான், அருளா ளப்பெருமாளெம்பெருமானார்போல்வாரைக் காணும் "சிறுமாமனிசர்" என்கிறது' என்று இசைவித்தருளிச்செய்தார்.

பட்டர் பின்னையும் ஒருநாள் திருவீதியிலே புழுதியளைந்துவிளை யாடாநிற்க, ஒருவன் 'ஸர்வஜ்ஞபட்டன் வந்தான்' என்று அதிஸம்ப்ர

(க) கோவிந்தராஜாந்வயஜோ மநீஷீ பராங்குசோ யாமுநவைமநஸ்யம் । அபாசகாரப்ரஸபம் த்ருதீயம் விராஜதே வ்ருத்தமணிப்ரதீப: ॥

மத்துடனே காளமூதிவர, இவரும் 'உடையவர் ஆழ்வான் ஆண்டான்
அருளாளப்பெருமாளெம்பெருமானார் எம்பார் முதலான பெரியோர்க
ளிருக்குமிடத்திலே இவனாடா ஸர்வஜ்ஞபட்டனென்று விருதூதி
வருகிறான்?' என்று இரண்டு திருக்கையாலும் புழுதியை அள்ளிக்
கொண்டு அவனைப் பார்த்து 'நீ ஸர்வஜ்ஞனன்றோ? இது எத்தனை?
சொல்' என்ன, அவன் அதுக்கு ஒன்றுஞ் சொல்லமாட்டாதே லஜ்
ஜித்து வாயடைத்து கவிழ்தலையிட்டுநிற்க, பட்டரும் அவனைப்
பார்த்து 'கெடுவாய்! இதொரு கைப்புழுதி யென்றுசொல்லி ஸர்வ
ஜ்ஞனென்று விருதூதித் திரியமாட்டாதே அஜ்ஞனாய் விட்டாயே!
இனி உன்னுடைய ஸர்வஜ்ஞனென்கிற விருதையும், ஸம்ப்ரமத்தையும்
போகடு' என்று 'காளத்தையும் பறியுங்கோள்' என்கிறமழலைச் சொல்
லைச் சொல்ல, அவன் கேட்டு 'இவர் ஆருடைய குமாரர்?' என்ன,
'ஆழ்வான் குமாரர்' என்று அங்குள்ளார் சொல்ல, கேட்டு அவனும்
"பறப்பதன்குட்டி தவழுமோ?" என்று ஆஸ்சர்யப்பட்டு, பட்ட
ரைத் தன் தண்டிகையிலே வைத்துக்கொண்டு ஆழ்வான் திருமாளிகை
வாசலிலே சென்றவாறே, பொன்னாச்சியார் கண்டு இவர் செய்த
* சிறுச்சேவகத்தைக் கேட்டு வாரியெடுத்துக்கொண்டு த்வயாநுஸந்
தாநத்தாலே ரக்ஷையிட்டு '*தம்பரமல்லன ஆண்மைகளைத் தனியே
நின்றுதான் செய்வரோ? எம்பெருமான்! உன்னைப்பெற்ற வயி
றுடையேன் இனி யான் என்செய்கேன்?' என்று முன்தானையாலே
இவரை முட்டாக்கிட்டு உள்ளேகொண்டு புகுந்து 'கண்ணெச்சி லுண்
டாக இவரைத் திருவீதியிலே போகவிடுவார்களோ?' என்று
வெறுத்து, ஆண்டாள் திருக்கையிலே கொடுத்து ஸ்ரீபாததீர்த்தத்
தைத் தெளித்து 'இவ்விபூதியில் இவர் நெடுநாள் தங்குமவரோ!'
என்று வயிறுபிடித்தருளினார்.

பட்டரை உபநீதராக்கினபின்பு வேதாத்யயநம் பண்ணுவிக்க, இவர்
மேதை யிருக்கும்படி:—ஒருநாள் சந்தையிட ஓதி, அதின்மற்றைநாள்
ஓதுகைக்கு எழுந்தருள, மறித்துச் சந்தையிடப் புக்கவாறே, ஓதுகிற
கடையில்நின்றும் போந்து விளையாடிக்கொண்டு எழுந்தருளியிருக்க,
'எல்லாரும் ஓதாநிற்க இவர் புறப்பட்டு வந்தார்' என்று ஆழ்வானும்
ஆண்டாளும் கேட்டு 'அப்பரே! எல்லாரும் ஓதாநிற்க, நீர் ஓதாமல்
வருவானேன்?' என்ன, இவரும் 'அவர்கள் ஓதினவிடத்தையே ஓதா



நின்றார்கள்' என்ன, 'ஆகில் நீர் நேற்றுச்சந்தையிட்ட ப்ரஸ்நத்தைச்
சொல்லிக் காணீர்' என்ன, சந்தையிட்டபடியே உச்சரித்துக் காட்டி
யருள, ஆழ்வானும் ஆண்டாளும் பயப்பட்டு 'இன்னம் சிறிதுநாள்
இவரை ஓதவிட வொண்ணாது' என்று தங்களிலே மந்த்ரித்திருந்தார்
கள்.

பின்பு ஆழ்வானும், எம்பாரும், பட்டருக்கு அர்த்தஶிக்ஷை
களும் தத்வஶிக்ஷைகளும் பண்ணிவைத்தார்கள்.

பெருமாள் ஒருகால் திருத்திரையை வளைத்துக்கொண்டு ஏகாந்த
மாக எழுந்தருளியிருக்க, பட்டர் திருவடிதொழப் புக, பெருமாள்
முனிந்து புறப்படவிடத் திருவுள்ளமாக, அவர் புறப்பட்டவளவிலே
'அவனை யழையுங்கோள்; நம்பட்டருக்கு அருளப்பாடு' என்ன, இவ
ரும் உள்ளேபுகுந்து தண்டனிட்டு நின்றவளவிலே, பெருமாளும்
'நாம் புறப்படவிட்டபோது என் நினைத்திருந்தாய்?' என்ன, 'பெரு
மாளும் நாச்சிமாருமாக நினைத்திருந்தேன்?' என்ன, 'முன்பு நம்மை
நினைத்திருந்தபடி எங்ஙனே?' என்று கேட்டருள, 'ஆழ்வானும் ஆண்
டாளுமாக நினைத்திருந்தேன்' என்று விண்ணப்பஞ்செய்ய, பெரு
மாளும் 'நம் ஆணை; நம்மை முன்புபோலே நினைத்திரும்' என்று திரு
வுள்ளமாயருளினார்.

ஆழ்வானும் பட்டருடைய விவாஹோசிதவய: பரிணாமத்தைக்
கண்டு, உடையவருடனே 'பிள்ளைக்கு விவாஹம் பண்ணிவைக்கும்படி
எங்ஙனே? நம் உறவுமுறையார் ப்ராக்ருதரா யிராநின்றார்கள்' என்று
விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் 'பெரியநம்பி திருமேனிஸம்பந்தி
களான ஸ்ரீவைஷ்ணவ ஸாந்தாநிகரிடத்திலே பட்டருக்குப் பெண்
கொணர்ந்தால், ஸ்வஸூத்ரஶாகைகளுக்கும் ப்ராஹ்மண்ய வைஷ்
ணத்வத்திற்கும் பெரியசாணமென்று தட்டாகாதிறே' என்ன, ஆழ்
வானும் ஸம்மதித்து ஆண்டாளுடன் ஆலோசித்து உடையவரை
முன்னிட்டுக்கொண்டு அவர்களிடத்தே பெண்கேட்க, அவர்களும்
பட்டருடைய ஆபிஜாத்யங் கண்டு கொடுக்கத் தேட, புதுஸம்பந்த
மென்று ஒருகால் இசையாதிருந்தார்கள். ஆண்டாள் ஒருநாள் ஆழ்
வானைப்பார்த்து 'பிள்ளைகள் பெருத்தார்கள்; ஒருகார்யஞ் செய்விக்க
வேண்டாவோ?' என்ன, ஆழ்வானும் 'ஈஸ்வரகுடும்பத்துக்கு என்
னைக் கரையச்சொல்லுகிறாயோ?' என்று அருளிச்செய்து, பெரிய

பெருமாளைத் திருவடிதொழுது மடங்குகிறபோது 'பிள்ளைகள் பெருத்தார்கள்; ஒருகார்யஞ் செய்விக்கவேண்டாவோ என்று சொல்லுகிறார்கள்' என்று விண்ணப்பஞ்செய்ய, பெருமாளும் திருவுள்ளம்பற்றி 'நீரோ அதற்குக் கடவீர்? நாமன்றோ? தகுதியாகச் செய்விக்கிறோம்; நீர் போம்' என்று திருவுள்ளமாயருளிப் பெண்கொடுக்கும்படி அவர்களுக்கு ஸ்வப்நங் காட்டியருள, மற்றைநாள் தாங்களே கொடுக்கிறோமென்று வந்துசொல்லி அக்கச்சியைப் பட்டருக்குத் தாரைவார்த்துக்கொடுத்துப் * பெருப்பெருத்த கண்ணாலஞ் செய்தருளினார்கள்.

———

உடையவர் ஸந்யஸித்தருளுகிறபோது 'ஶரீரஸம்பந்தியை விடவேண்டுகிறதோ?' என்ன, 'நம்முதலியாண்டானையொழிய ஸந்யஸித்தோம்' என்று அருளிச்செய்ய, 'இப்படி அருளிச்செய்யலாமோ?' என்று ஸ்ரீபாதத்து முதலிகள் கேட்க, இவரும் 'கையில் த்ரிதண்டத்தை விடிலன்றோ நம்முதலியாண்டானை விடுவது' என்று அருளினார்.

முதலியாண்டான் திருவாய்மொழியோதினபடி:—ஒருநாள் எம்பெருமானார் திருப்பள்ளிக்கட்டிலிலே ஏறியருளி ஒருபாட்டுச் சந்தையிட்டவாறே, முதலியாண்டான் பரவஶராயருள, இத்தைக்கண்ட எம்பெருமானாரும் '(க) "வேதவேத்யேபரேபும்ஸிஜாதேதஶரதாத்மஜே - வேத:ப்ராசேதஸாதாஸீத்ஸாக்ஷாத் ராமாயணாத்மநா" என்னுமாபோலே வேதங்களும் ஆழ்வார்முகேந திருவாய்மொழியாய் வந்து அவதரித்ததொன்றன்றோ?' என்று அருளிச்செய்தார்.

பெருமாள் பெரிய திருநாள்கண்டருளித் திருக்காவேரியிலே தீர்த்தம் ப்ரஸாதிக்க எழுந்தருளுகிறபோது, எம்பெருமானார் முதலியாண்டான் திருக்கைத்தலம்பற்றி எழுந்தருளி நீராடி மீண்டெழுந்தருளும்போது பிள்ளை யுறங்காவில்லிதாஸர் திருக்கைத்தலம் பற்றி எழுந்தருள, ஸேவித்திருந்த முதலிகள் 'இதுக்கு அடி என்?' என்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் 'ஜந்மம் உயர்ந்திருக்கச்செய்தே தாழநில்லாநின்றோமே என்கிற அபிமாநமுண்டே அல்லாதார்க்கு; அக்கோத்தையும் இல்லாதவரிறே இவர்' என்றருளினார்.

(க) 𑌵𑍇𑌦𑌵𑍇𑌦𑍍𑌯𑍇 𑌪𑌰𑍇 𑌪𑍁𑌂𑌸𑌿 𑌜𑌾𑌤𑍇 𑌦𑌶𑌰𑌥𑌾𑌤𑍍𑌮𑌜𑍇 ।
𑌵𑍇𑌦𑌃 𑌪𑍍𑌰𑌾𑌚𑍇𑌤𑌸𑌾𑌦𑌾𑌸𑍀𑌤𑍍 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑍍𑌰𑌾𑌮𑌾𑌯𑌣𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 ॥



பெரியநம்பிதிருமகளாரான அத்துழாய் புக்ககத்திலே வாழுங்காலத்திலே, ஒருநாள் 'தீர்த்தமாடத் துணைவரவேணும்' என்று மாமியாரை அபேக்ஷிக்க, அவளும் 'உன்சீதனவெள்ளாட்டியைக் கொண்டுபோ' என்று கடுத்துச் சொல்ல, நம்பிபக்கலிலே வந்து 'ஐயா! என்னை இப்படி சொன்னாள்' என்ன, நம்பியும் 'நாம் அறியோம்; உங்கள்சீயருக்குச் சொல்' என்ன, இவரும் அங்கேசென்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் அருகிலிருந்த முதலியாண்டானை 'உமக்கு இந்தாரும் சீதனவெள்ளாட்டி' என்று கொடுத்து 'போம்' என்ன, ஆண்டானும், கூடவெழுந்தருளி நீராடப்பண்ணுவித்துக்கொண்டு வந்து அவருடைய புக்ககத்திலே நின்று தாஸவ்ருத்திகளைச் செய்யத்தொடங்க, அவருடைய புக்ககத்தார் 'ஆண்டான்!இது என்?' என்ன, 'என்னை வரவிட்ட உடையவரைக் கேளுங்கோள்' ஆசார்யர்சொன்னது செய்யவேணுமே, என்ன, அவர்களும் நம்பி ஸ்ரீபாதத்தேறப் போய் 'நம்பீ! முதலியாண்டானை வரவிட்டு எங்களை இப்படி நசிப்பிக்கவேணுமோ?' என்ன, நம்பியும் 'நாம் அறிந்தோமோ? உடையவரைக் கேளுங்கோள்' என்ன; அவர்களும் அங்கே சென்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும், ஆண்டானை அத்துழாய்க்குச் சீதனவடிமையாகத் தந்தோம்; அவர் அங்குநிற்கை உங்களுக்கு அநிஷ்டமாகில் இங்கிருந்து அடிமை செய்கிறார்' என்று அழைப்பித்துக்கொண்டருளினார்.

பெரிய நம்பி மாறனேரிநம்பியை ப்ராஹ்மமேதத்தாலே ஸம்ஸ்கரித்துப் பள்ளிபடுத்தருள, இதுகேட்டு எம்பெருமானார் நம்பி ஸ்ரீபாதத்தேறச்சென்று தண்டன்ஸமர்ப்பித்து 'சீயா! ஸம்ஸாரம் சிலுகிடாதபடி அடியேன் ஒருவழியாலே வேலியிட்டுவர, தேவரீர் ஒருவழியாலே பிரித்தருளாநின்றதே!' என்று விண்ணப்பஞ்செய்ய, நம்பியும் 'வாரீர் உடையவரே! இக்ஷ்வாகுவம்ஶத்திலே அவதரித்து ஸாமாந்யதர்மத்தை வெளியிட்டருளின பெருமாளைக்காட்டில் நான் பெரியவனோ? பெரியவுடையாரைக்காட்டில் இவர் தண்ணியரோ? ஸாமாந்ய தர்மநிஷ்டரான தர்மபுத்ரரைக்காட்டில் நான் பெரியவனோ? ஸ்ரீவிதுரரைக்காட்டில் இவர் தண்ணியரோ? 'பயிலுஞ்சுடரொளி', 'நெடுமாற்கடிமை' கடலோசையோ?' என்று அருளிச்செய்ய, உடையவரும் உகந்து ஸம்மதித்திருக்கச்செய்தே, 'மாறனேரிநம்பி திருநாட்டுக்கு எழுந்தருளும்போது பெரிய பெருமாள் திருவடிகளே ஶரணமென்னுதல், ஆளவந்தார் திருவடிகளே ஶரணமென்னுதல் செய்யக்

கண்டிலோம்; இது என்?' என்று உடையவருடனே பெரியநம்பி அருளிச்செய்தருள, உடையவரும் 'அவர்க்கு அப்போது ஶ்லோகத்வயாநுஸந்தாநமாயிருந்ததாய்க் கொள்ளீர்' என்று விண்ணப்பஞ்செய்ய, நம்பியும் 'அது பெண்கண்டபிச்சன்வார்த்தை யன்றோ?' என்று அருளிச்செய்தருள, உடையவரும் 'பெண்ணினுடைய நித்யயோகத்தைத் திருவுள்ளம்பற்றுதொழிகிற தென்?' என்று விண்ணப்பஞ்செய்தார்.

உடையவர் ஒருநாள் ஊமையை யழைத்துக்கொண்டு உள்ளே எழுந்தருளிக் கதவை யடைத்து ஏகாந்தத்திலே ஸம்ஜ்ஞையாலே தம் திருவடிகளைத் தொட்டுக் காட்டியருள, அவனும் அதுவே தஞ்சமென்று புத்தி பண்ணியிருக்க, ஆழ்வான் இத்தைக் கதவின் புரையிலே கண்டு 'ஐயோ! கூரத்தாழ்வானுப் பிறந்து பரக்க ஶாஸ்த்ரங்களைக் கற்றுக்கெட்டேன்; ஒன்றும் அறியாத ஊமையாய்ப் பிறந்தால் அடியேனுக்கும் உடையவர் இரங்கியருளுவரே! என்றுமோஹித்தார்' என்று ப்ரஸித்தமிறே.

திருக்கோட்டியூர்நம்பி, திருக்கோட்டியூரிலே மேல் தளத்தின் மேலே படிக்கதவை விழவிட்டு த்யாநித்துக்கொண்டிருக்க, உடையவர் அங்கே எழுந்தருளி நம்பியைக் குறித்து 'த்யாநம் எது? மந்த்ரம் எது?' என்று கேட்டருள, நம்பியும் 'ஆளவந்தார் வடவாற்றிலே நீராடி யருளும்போது அகமர்ஷணம் பண்ணி முழுகியிருந்தால், அவர் திருமுதுகு வல்லான் கடாரம் கவிழ்த்தாப்போலேயிருக்கும்; அதுவே எனக்கு த்யானம்; 'யமுனைத் துறைவர்' என்கிற இதுவே மந்த்ரம் என்று அருளிச் செய்தருளினர்; ஆகையாலே, ஆசார்ய விக்ரஹமே ஸதாத்யேயமென்றும், தந்நாமமே ஸதாஜப்யமென்றும் உடையவருக்கு உபதேசித்தாராய்த்து.

(க) "பாலமூகஜடாந்தாஶ்ச பங்கவோ பதிராஸ்ததா - ஸதாசார்யேண ஸந்த்ருஷ்டா: ப்ராப்நுவந்தி பராங்கதிம்" என்கிறபடியே பெண்ணும் பேதையும் எல்லாரும் ஸம்ஸாராதுத்தீர்ணராம்படி ஸர்வரையும் இப்படி விஶேஷ கடாக்ஷஞ்செய்துகொண்டும், கூரத்தாழ்வான் முதலியாண்டான் அருளாளப் பெருமாளெம்பெருமானார் முதலான முதலிகளுக்கு ஸ்ரீபாஷ்யம் ப்ரஸாதியா நின்றுகொண்டும் ஸுகமே வாழ்ந்தருளுகிற காலத்திலே ராஜ்யம்பண்ணுகிற சோளராஜா துஶ்ஶைவனுகையாலே, வேதவிருத்தமானகள்ளப்பொய்ந்நூலாகிய சைவாகமத்தை த்ருடதரப்ராமாணமான மெய்ந்நூலென்று அத்யவஸித்துத் தானும் தன்புரோஹிதனுமாகக் கூடவிருந்து தன்னுடைய நாட்டிலுள்ள வித்வான்களையெல்லாம் திரட்டி (க) "ஶிவாத்பரதரம் நாஸ்தி" என்று ஓலைக்கு எழுத்திடச்சொல்லித் தண்டிக்க, சிலர் அவனுடைய ஆஜ்ஞைக்கு அஞ்சியும், சிலர் அர்த்தக்ஷேத்ராதிகளை ஆசைப்பட்டும் எழுத்திட்டார்கள். இத்தைக்கண்ட நாலூரான் 'இந்த ஆபாஸரிட்டத்தாலென்னப்ரயோஜநமுண்டு? இராமாநுசனும் கூரத்தாழ்வானும் இட்டாலன்றோ இட்டதாவது?' என்ன, சோளனும் அப்பொழுதே சில மநுஷ்யரைப் பார்த்து 'இராமாநுசனை அழைத்துக்கொண்டு வாருங்கோள்' என்று கோயிலுக்கு வரக்காட்ட, அந்த ராஜமநுஷ்யர் உடையவர்மடத்துவாசலிலே வந்து 'இராமநுசன் எங்கே?' என்று கேட்க, இச்செய்தியை உடையவருக்கு நீராடத் திருமஞ்சனம் முகந்துகொடுக்கிற கூரத்தாழ்வான் திருச்செவியிலே ஒரு ஸ்ரீவைஷ்ணவர் வந்து ரஹஸ்யமாக விண்ணப்பஞ்செய்ய, ஆழ்வானும் உடையவருடைய த்ரிதண்ட காஷாயாதிகளைத்தரித்துக்கொண்டு உடையவருக்கும் விண்ணப்பஞ்செய்யாதே ராஜமநுஷ்யருடன் போகத்தேட, அவ்விஶேஷங்கேட்டு ஆழ்வானுடனே பெரிய நம்பியும் புறப்பட்டெழுந்தருள, அவர்களை அழைத்துகொண்டு போனர்கள்.

அநந்தரம் உடையவரும் 'த்ரிதண்டகாஷாயாதிகளைத் தாருங்கோள்' என்ன, கூரத்தாழ்வான் தரித்துக்கொண்டு ராஜமநுஷ்யருடனே எழுந்தருளினர்' என்று முதலியாண்டன் விண்ணப்பஞ்செய்ய, 'ஆகில், அவருடைய வெள்ளையைத் தாருங்கோள்' என்று வாங்கித் தாம் சாத்திக்கொண்டு 'ஆழ்வானுக்கும் பெரியநம்பிக்கும் என்ன தீங்கு வரப்புகுகிறதோ?' என்று போரக்லேஶித்திருக்க, முதலியாண்டானுள்ளிட்ட முதலிகளெல்லாரும் 'தேவரீர் இங்கிருக்கவொண்ணாது' என்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் 'இனிச்

(க) பாலமூகஜடாந்தாஶ்ச பங்கவோ பதிராஸ்ததா। ஸதாசார்யேண ஸந்த்ருஷ்டா: ப்ராப்நுவந்தி பராங்கதிம்॥



(க) ஶிவாத் பரதரம் நாஸ்தி

"செய்ய அடுப்பதென்?" என்று வ்யாகுலாந்தஃகரணராய்ப் பெரிய பெருமாள் திருமுன்பே சென்று திருவடிகளிலே சரணம்புக்கு "வெறுப்பொடு சமணர் முண்டர் விதியில்சாக்கியர்கள் நின்பால் பொறுப்பரியனகள்பேசில்" என்று தொடங்கி "தலையையாங்கே, அறுப்பதே கருமங்கண்டாயரங்கமாநகருளானே" என்று ஆழ்வார் அருளிச்செய்தபடி இப்போது சடக்கென அவன்தலையை அறுக்கக்கூடாது; அவன் பரிகரவானாகையாலே முகாந்தரேண செய்துவாரா நின்றேன்' என்று விண்ணப்பஞ்செய்து முதலிகளும் தாமுமாக எழுந்தருளா நிற்க, பின்னையும் ராஜமநுஷ்யர் பின்தொடர, 'பின்னே ஆள் த்வரித்து வருகிறது' என்று முதலிகள் விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் வழியில் மணலையள்ளி "கொடுமைசெய்யுங் கூற்றமும் என் கோலாடி குறுகப்பெறா, தடவரைத்தோள் சக்கரபாணீ! சார்ங்கவிற்சேவகனே!" என்று இத்தையோதி அவர்கள் வருகிற வழியிலே ஒழுக்கிவாருங்கோள்' என்ன, முதலிகளும் அப்படியேசெய்ய, ராஜமநுஷ்யர் அந்த மணலைமிதித்து அப்பால் அடியிடப் போகாமல் 'போகிற பார்ப்பார் மந்த்ரவாதம்பண்ணிப்போனார்கள்' என்று மீண்டுபோக, உடையவரும் முதலிகளுமாக* அரங்கத்துறையும் இன்துணைவனே வழித்துணையாக எழுந்தருளினார்கள்.

ஒருமலையடியிலே திருமலைநல்லான்ஶிஷ்யர்களான சிலவேடமுதலிகள் புலம்பாவாநிற்க, அங்கே ஒரு ஸ்ரீவைஷ்ணவர் எம்பெருமானாரைத் தேடிக்கொண்டு எழுந்தருள, அவர்கள் இவரைத் திருநாமமே குறியாக 'நீர் எங்கிருந்து எழுந்தருளுகிறீர்?' என்றுகேட்க, 'கோயிலில்நின்றும் வருகிறோம்' என்ன, அவர்களும் எம்பெருமானார்க்கு ஒருதுறையு மில்லையே? பெரியபெருமாள் திருச்செல்வத்திற்கு ஒரு குறையு மில்லையே?' என்றுகேட்க, இவரும் 'என்ன பெரியபெருமாள்! என்ன திருச்செல்வம்! எம்பெருமானார் சோளன் வ்யாஜேந வெண்பரிதாநம் தரித்து எழுந்தருளினார்; இன்னவிடத்தே எழுந்தருளினாரென்று தெரியாது' என்று அருளிச்செய்ய, அவர்களும் அவ்வார்த்தைகேட்டு வ்யாகுலப்பட்டுப் புலம்பாவுகைதவிர்ந்து அன்று முதல் ஆறுநாள் பட்டினியே கிடக்க, ஆறாம்நாள் ராத்ரி அம்மலையடியிலே எம்பெருமானாரும் முதலிகளும் மழையிலே நனைந்து குளிரிலே யீடுபட்டு இவர்கள்புனத்தில் நெருப்பொளிகண்டு, உடையவரும்நம்மை அங்கேறக் கொண்டுபோங்கள்' என்று அருளிச்செய்ய, முதலிகளும்



அங்கேற எழுந்தருளுவித்துக் கொண்டுபோய் 'வழி எங்கே? பிள்ளைகாள்!' என்ன, அவர்களும் 'ப்ராஹ்மணர்குரலாயிருந்தது; பெருவிடாயோடே ஒருகுரலாயிராநின்றது' என்று ஓடிவந்து வேலியைப்பிரித்து 'இங்கே வாருங்கோள்' என்று அழைத்துக் கொண்டுபோய், சாத்துகைக்குத் திருப்பரியட்டங்களும் கொடுத்து, சாத்தியிருந்த திருப்பரியட்டங்களையும் உலரவிட்டுக் குளிர்போகக் காய்ச்சியொற்றி 'எங்குநின்றும் எழுந்தருளுகிறீர்கள்!'' என்றுகேட்க, இவர்களும் 'கோயிலில் நின்றும் வருகிறோம்' என்ன, 'எம்பெருமானார் செய்கிறதென்?' என்று கேட்க, முதலிகளும் 'நீங்கள் எம்பெருமானாரை அறிந்தபடி எங்ஙனே?' என்ன, 'நாங்கள் நல்லானடிமைகள்; அவர் எங்களுக்கு ஹிதம்ப்ரஸாதிக்கும்போது 'நமக்கெல்லாம் பரமாசார்யர் எம்பெருமானாராயிருக்கும்; ஆகையாலே, எம்பெருமானார் திருவடிகளே ஶரணமென்றிருங்கோள்' என்று அருளிச் செய்தார்' என்று விண்ணப்பஞ்செய்ய, முதலிகளும் 'ஆகில், இவரே உடையவர்' என்று காட்டியருள, அவர்களும் ஸ்ரீபாதத்தைக் கட்டிக்கொண்டு அழுது வ்யாகுலப்பட்டுத் திருவடிகளிலே விழுந்து ஸேவித்துத் தேனும் தினையுங் கொண்டுவந்து ஸமர்ப்பித்து 'இக் கதிரை வறுத்து இடித்துத் தேனிற்கலந்து அமுது செய்தருளவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, முதலிகளும் அப்படியே செய்து அமுதுசெய்தருளி அற்றைக்குக் கண்வளர்ந்தருளினார்கள்; மற்றைநாள் விடிவோரை வேடமுதலிகளில் ஒருவரையும் தம் ஸ்ரீபாதத்து முதலிகளில் ஒருவரையுமாகக் கோயிலுக்குப் போகவிட்டு, உடையவருடனே மற்ற நாற்பத்தஞ்சு திருநாமமும் எழுந்தருளினார்கள். அவ்வேடமுதலிகளும் இவர்களை மலைக்குமேலே அறுகாதவழி கொண்டுபோய் ஒருவேடமுதலியகத்தே விட, அவ்வேடமுதலி பகலெல்லாம் வேட்டைக்குப்போய் வந்து உண்ணப்புக்கவாறே 'ப்ராஹ்மணர்கள் பட்டினியே யிருக்க நாம் உண்ணலாகாது' என்று, 'அருகாக ஒருக்ராமத்திலே கட்டளைவாரியென்பானொரு ப்ராஹ்மணனகத்திலே இவர்களைக்கொண்டுபோய்விட்டு வேண்டுங்கட்டளைகளையும் பண்ணி, இப்போதே அமுது செய்யப்பண்ணுவியுங்கோளென்று சொல்லுங்கோள்' என்று ஆள்கொடுத்துப் போகவிட, அவர்களும் உடையவரையும் முதலிகளையுங் கூட்டிக்கொண்டுபோய் அவனகத்தே

விட்டு 'இவர்களை இப்போதே அமுதுசெய்யப் பண்ணுவியுங்கோள்' என்று சொல்லி, வேண்டுங் கட்டளைகளும் பண்ணுவித்து மீண்டு போனார்கள்.

அவ்வகமுடையானுடைய பத்நியும் தண்டன் சமர்ப்பித்து 'உங்களுக்கு அமுதுசெய்ய வேண்டாவோ?' என்று விண்ணப்பஞ்செய்ய, முதலிகளும் 'வேண்டா' என்று அருளிச் செய்தருள, அவளும் 'உங்களுக்கு ஸந்தேஹிக்க வேண்டா; அடியேனும் எம்பெருமானார் ஸ்ரீபாதத்தை உடையேன்' என்றாள்; முதலிகளும் 'நீ எம்பெருமானார் ஸ்ரீபாதத்தை ஆஶ்ரயித்தபடி எங்ஙனே?' என்று கேட்க, அவளும் 'நாங்கள் இவ்விடம் வர்ஷமின்றியே யிருந்தவாறே கோயிலிலே வந்திருந்தோம்; அங்கே என்னகமுடையாரும் நானும் ஒருமச்சுமேலே யிருக்கையாயிருக்கும்; அப்போது எம்பெருமானார் ஏழு திருமாளிகையிலே மாதுகரம்பண்ணி அமுது செய்தருளுவர்; அவர் திருவீதியிலே எழுந்தருளும்போது அகளங்க நாட்டாழ்வானுள்ளிட்ட முதலிகளெல்லாரும் அவர் திருவடிகளிலே ஸேவிப்பார்கள்; அவர் ஒருநாள் மாதுகரத்திற்கு அந்தத் திருமாளிகை யேற எழுந்தருள, அடியேனும் மச்சில் நின்றும் இறங்கிவந்து இடைகழியில் தகைந்து நின்றேன்; அவர் 'இது என்ன? பெண்ணே!' என்று கேட்டருள, 'நீர் மாதுகரம்பண்ணாநின்றீர்; உம்மை ராஜாக்களும் பட்டணத்து முதலிகளும் தண்டனிடாநின்றார்கள்; இதற்கு அடி என்?' என்றவாறே, உடையவரும் 'நாம் அவர்களுக்குப் பகவத் விஷயத்தில் சில நல்ல வார்த்தை சொல்லுகையாலே காண்' என்று அருளிச் செய்தருள, 'அந்த நல்வார்த்தையை அடியேனுக்கும் ப்ரஸாதித்தருளலாகாதோ?' என்றேன்; அப்போது ஹிதமருளிச்செய்து எழுந்தருளினார்; பின்பு எங்கள் நாட்டில் வர்ஷமுண்டாய் நாங்கள் எங்கள் நாடேறப் போகும்போது அவர் அருளிச் செய்த நல்வார்த்தையை மறந்தேன்; 'உடையவரை ஸேவிக்கப் பெற்றிலேனே!' என்ற இழவோடே நினைத்திருக்க அற்றைக்கும் அங்கேற எழுந்தருள அடியேனும் மச்சில் நின்றும் இறங்கிவந்து தண்டனிட்டு நின்று 'நாங்கள் எங்கள் நாடேறப்போகாநின்றோம்; தேவரீர் முன்பு அருளிச் செய்த நல்வார்த்தையை மறந்தேன்' என்ன, இப்போது உடையவரும் மீளவும் த்வயத்தை நெஞ்சிலே நிலைநிற்கும்படி குருபரம்பரா பூர்வகமாக உபதேசித்து மீண்டு



எழுந்தருளத்தேட, 'அடியேனுக்கு ஆத்மரக்ஷையாக ஏதேனுமொன்று தந்தருளவேணும்' என்று விண்ணப்பஞ் செய்தேன்; அப்போது சாத்தியிருந்த ஸ்ரீபாதுகைகளை ப்ரஸாதித்தருளினார்; அடியோங்களும் அன்றே போந்தோம்; பின்னை ஸேவிக்கப்பெற்றிலோம்' என்றவாறே, உடையவரும் தம் திருவுள்ளத்திலே விசாரித்தருளித் திருப்போனகஞ் சமைக்க அருளிச்செய்து 'இவள் செய்யுமது பார்த்திரும்' என்று ஒரு ஸ்ரீவைஷ்ணவரை வைக்க, அவரும் பார்த்திருக்க அவளும் அடைவாகச் சமைத்து முன்பு உடுத்த புடவையை அவிழ்த்து ஶுத்தமான புடவையை உடுத்து உள்ளே புகுந்து 'எம்பெருமானார் திருவடிகளே ஶரணம்' என்று உச்சரித்து அவர் ஸ்ரீபாதுகைகளை ஏறியருளப்பண்ணித் திருவடி விளக்கி அமுதுசெய்யப்பண்ணிப் புறப்பட்டு, முதலிகளுக்குத் தண்டன் ஸமர்ப்பித்து ஸ்ரீபாதம் விளக்கி 'அமுதுசெய்ய எழுந்தருள வேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, முன்பு பார்த்திருக்கச்சொன்ன ஸ்ரீவைஷ்ணவரை யழைத்து 'இவள் செய்தபடி என்?' என்று கேட்டருள, அவரும் 'இவள் திருப்போனகம் அடைவாகச் சமைத்து முன்பு உடுத்த புடவையையும் விடுத்து ஶுத்தமான புடவையையும் உடுத்துத் திருப்போனகத்தை எடுத்துக் கொண்டுபோய் உள்ளே புகுந்து கதவை யடைத்து த்யாநம்பண்ணியிருந்து அமுதுசெய்யப் பண்ணினாள்; அது கறுத்து நீண்டிருந்தது; எம்பெருமானா யிருந்ததில்லை' என்றவாறே, அவளை யழைத்து 'நீ உள்ளே செய்ததென்?' என்று கேட்டருள, அவளும் 'முன்பு அடியேனுக்குத் தஞ்சமாக ப்ரஸாதித்தருளின ஸ்ரீபாதுகைகளை திருவடி விளக்கி அமுது செய்தருளப் பண்ணியாய்த்து ப்ரஸாதஞ் சூடுவது; இப்போதும் அப்படியே செய்தேன்' என்று விண்ணப்பஞ்செய்ய, 'ஆகில், அவைதன்னை இங்கேகொண்டுவந்து காட்டு' என்ன, அவளும் கொண்டுவந்து காட்ட, அவை அங்குத்தைக்கு * எதித்தலைநாதன் இராமாநுசன் தன் இணையடிகளுக்கு ஒத்திருந்தது; அப்பொழுது 'ஆகில், இந்தக் கோஷ்டியிலே எம்பெருமானாருண்டோ? பார்த்துக் காணாய்' என்ன, அவளும் திருவிளக்கை யேற்றிக்கொண்டு வந்து அடைவே பார்த்து எம்பெருமானார் திருவடிகளைக் கண்டு திகைத்து நின்று 'இது எம்பெருமானார் திருவடிகளைப்போல இரா நின்றது; காஷாயமில்லாமையாலே தெரிகிறதில்லை' என்றவாறே, 'நான்

காண்' என்று அருளிச்செய்ய, அவளும் திருவடிகளைப் பிடித்துக் கொண்டு அழப்புக்கவாறே, கண்ணைத்துடைத்து எம்பெருமானார் 'அருளிச்செய்த வார்த்தை ஒத்திருந்த தில்லையாகில் முதலிகள் அமுது செய்யார்கள்; அத்தை என் செவியில் சொல்லிக்காணாய்' என்ன, அவளும் விண்ணப்பஞ்செய்ய, அந்தவார்த்தையும் ஒத்திருந்தது; 'ஆகில், (க) ''விதுராந்நாநிபுபுஜே ஶுசீநிகுணவந்திச'' என்கிற பாவநத்த போக்யத்வங்களை உடைத்தா யிருந்தது; இனி முதலிகள் அமுதுசெய்யக் குறையில்லை' என்று அருளி† (ச்செய்து, 'நமக்குமாத்திரம் கூடாது ; ஒரு பகவத் விக்ரஹம் அமுது செய்யவில்லை' என்ன, அவளும் 'ஆகில், பாலும் பழமும் சர்க்கரையும் கொண்டுவந்து ஸமர்ப்பிக்கிறேன்' என்று ஸமர்ப்பிக்க, இவரும் தம்முடைய எம்பெருமானுக்கு அமுதுசெய்யப் பண்ணித் தாமும் அமுது செய்தருள), முதலிகளும் அமுதுசெய்து கண்வளர்ந்தருள, அப்பெண்பிள்ளை, முதலிகள் தளிகைப்ரஸாதத்தையுங் கூட்டிக் கலந்து மச்சிலே யிருக்கிற தன் பர்த்தாவை எழுப்பி ப்ரஸாதமிட்டு ப்ரஸாதப்படப்பண்ணித் தான் ப்ரஸாதப் படாமலிருக்க, அவனும் 'இதென்?' என்றுகேட்க, அவளும் 'கோயிலில் நின்றும் எம்பெருமானாரும் முதலிகளும் எழுந்தருளி அமுதுசெய்ய மாட்டோமென்று கண்வளர்ந்தருளினார்கள்' என்ற வாறே, அவனும் 'நான் அதற்கு என்ன செய்யவேணும்?' என்ன, 'நீர் எம்பெருமானாரை ஆஶ்ரயிக்க வல்லீரோ?' என்ன, அவனும் இசைந்து ப்ரதயயம் பண்ணிக்கொடுக்க, அவளும் உகப்புடனே ப்ரஸாதப்பட்டு நித்திரை பண்ணினாள். மற்றைநாள் பொழுது விடிந்தவாறே எழுந்திருந்துவந்து உடையவர் திருவடிகளிலே தண்டன்ஸமர்ப்பித்து 'இற்றைக்கு எழுந்தருளியிருந்து இவரை க்ருபைசெய்தருளவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, எம்பெருமானாரும் அற்றைக்கு அங்கே அவஸரித்தருளி அவளுக்காக அவனுக்கு ஹ்ரீதாபதேஶம் பண்ணி விஶேஷ கடாக்ஷஞ்செய்தருளி அங்கே நாலைந்துநாள் எழுந்தருளியிருந்து, த்ரிதண்ட காஷாயாதிகளையும் ஸம்பாதித்துத் தம் திருவாராதகமானபேரருளாளர்ஸந்நிதியில் வைத்துத்தண்டன் ஸமர்ப்பித்து முன்புபோலே அவற்றைத்தரித்தருளினார்.

மற்றைநாள் மேற்கே வஹ்நிபுஷ்கரிணியாகிற க்ராமத் தேற எழுந்தருளி அங்கே சிறிதுகாலம் எழுந்தருளியிருந்து, அங்குநின்றும்

(க) விதுராந்நாநி பு‌பு‌ஜே ஶுசீநி குணவந்திச

† குண்டலிதக்ரந்தம் சிலப்ரதிகளில்இல்லை.



மிரிளாபுரி ஸாளக்ராமத் தேற எழுந்தருள, ஊரடைய ப்ரச்சந்ந விரோதிகளாகையாலே உடையவரை அநாதரித்திருக்க, உடையவரும் முதலியாண்டானையழைத்து 'இவ்வூரார் நீர்முகக்குந் துறையிலே நீர் உம்ஸ்ரீபாதத்தை நீட்டிக்கொண்டிரும்' என்று நியமித்தருள, ஆண்டானும் அப்படியே செய்தருள, அவ்வூரார் இவர்ஸ்ரீபாததீர்த்த வைபவத்தாலே நிவ்ருத்த அஹங்காரராய், மற்றைநாளே தெளிந்து வந்து உடையவர்திருவடிகளிலே ஆஶ்ரயிக்க, அத்தீர்த்தப்ரபாவத்தையிட்டு 'இன்றுமுதல் இவ்வூர் ஸ்ரீஸாளக்ராமம்' என்று அருளிச்செய்தார். அங்கே வடுகநம்பியை ஸ்வபாதச்சாயாபந்நாம்படி விஶேஷ கடாக்ஷஞ்செய்து அவர்க்குத் தர்ஶநார்த்தம் ப்ரஸாதித்துக்கொண்டு சிங்கர்கோயிலிலே சிறிதுநாள் எழுந்தருளியிருந்து விஷ்ணு வைஷ்ணவ த்வேஷியான சோளன் க்ரிமிகண்டனை நசிக்கும்படியாக அபிசாரம்பண்ணி அங்கு நின்றும் தொண்டனூரேற எழுந்தருளினார்.

அங்கே அத்தேசத்திற்கு அதிபதியான விடலதேவராயன்மகள் பிஶாசாவிஷ்டையாயிருக்க, அவனும் மந்த்ரவாதிகள்பலரையுங் கொண்டு தீர்க்கத் தேடினவிடத்திலும் தீராதபடியாலே து꞉கிதனாயிருக்க, தத்பத்நியும் நிர்வாணமாய் ஓடித்திரிகிற தன்பெண்ணைக் கண்டு மிகவும் வ்யாகுலப்பட்டிருக்குமளவிலே, தொண்டனூர்நம்பி உபாதாநார்த்தமாக ராஜக்ருஹத்தேற எழுந்தருளினவர், து꞉கிதையான ராஜபத்நியைக் கண்டு 'து꞉கஹேது என்?' என்று கேட்டருள, அவளும் தத்காரணத்தைச் சொல்ல, நம்பியும் கேட்டருளி 'நம் ஆசார்யர் எம்பெருமானார் எழுந்தருளினார்; அவர் கடாக்ஷித்தால் இப்பேய் காடேறிப்போம்' என்று ப்ரஹ்மரக்ஷஸ்ஸின் கதையை ஸவிஸ்தாரமாக அவளுக்கு அருளிச்செய்ய, அவளும் கேட்டு ஆஶ்சர்யப்பட்டுத் தன்பர்த்தாவுக்கு அறிவிக்க, அவனும் 'உடையவர் இப்பேயை விடுவிக்கில், அவரே நமக்குஆசார்யர்; அவர்திருவடிகளில் ஆஶ்ரயிக்கக்கடவேன்' என்ன, அவ்வளவிலே அவன் ஸ்வகுருக்களுக்கு விருந்திடத் தேட, இவளும் தன்பர்த்தாவைக்குறித்து 'நீர் அங்கஹீநரென்று அவர்கள் இங்கே வாரார்கள்; சொல்லாதேகொள்ளும்' என்ன, அவனும் 'அவர்கள் வாராதிருப்பார்களோ?' என்று இவள்வார்த்தையை அதிக்ரமித்துச் சொல்லிப்போகவிட, அவர்களும் முன்பு டில்லீஶ்வரனை துருஷ்கன் இவனை ஆக்ரமித்துப் பிடித்துக்

கொண்டுபோய்ப் பட்டார்ஹனன்றிக்கே போம்படி ஒருஅங்குலிச் சேதம் பண்ண, அத்தால் 'விடலதேவராயன்' என்று ப்ரஸித்தமாகை யாலே, ஸ்ரீநாங்கனகத்தே புஜிக்க வொண்ணாதென்று தவிர்ந்துவிட் டார்கள்; அதுகண்டு அவன் அவர்களிடத்தே அதிகுபிதனாய் அவர் களைத் திரஸ்கரித்திருக்குமளவிலே, அவனுடைய ஸ்த்ரீயும் அவனைக் குறித்து 'உடையவர்திருவடிகளில் ஆஶ்ரயித்து உஜ்ஜீவிக்க லாகாதோ? இவர்களால் என்னப்ரயோஜன முண்டு?' என்ன, அவனும் இசைந்து உடையவரை 'ஸ்வக்ருஹத்தேற எழுந்தருளவேணும்' என்று ப்ரார்த்திக்க, இராமாநுசனும் 'நாம் ராஜதானியை மிதிக்கக் கடவோமல்லோம்' என்று அருளிச்செய்ய, அவ்வளவிலே தொண்ட னூர்நம்பி முதலான முதலிகள் 'இவனை விஶேஷகடாக்ஷஞ் செய்தருளி னால் தர்ஶநத்துக்கு பஹூஉபகாரமுண்டு' என்று பஹூஶ: வேண் டிக்கொள்ள, உடையவரும் ஸம்மதித்து அவனகத்தேற எழுந்தரு ளினவளவிலே அவனும் அதிஸந்துஷ்டனாய்த் திருவடிகளிலே ஸாஷ் டாங்க ப்ரணாமம்பண்ணி ஸவிநயனாய் நிற்க, முதலிகளும் உடையவர் ஸ்ரீபாததீர்த்தத்தை அவன்புத்ரிக்கு ப்ரஸாதித்துத் தத்தீர்த்தத் தாலே ப்ரோக்ஷிக்க, அவளுடைய சித்தப்ரமம்போய்த் தெளிந்துவந்து சேலையும் உடுத்து உடையவரை ஸேவிக்க, இத்தை விடலதேவராயன் கண்டு அத்யாஶ்சர்யப்பட்டுத் தத்க்ஷணமே ஸ்ரீபாதத்திலே ஆஶ்ர யிக்க, அவனையும் இரங்கியருளித் திருவடிகளுக்கு அந்தரங்கனும்படி கடாக்ஷித்தருளினார்.

இப்படி அவனையும் ஸ்வவைபவத்தாலே ஶிஷ்யனாக்கிக்கொண்டு அவனுக்கு விஷ்ணுவர்த்தநராய னென்று திருநாமம்ப்ரஸாதித்தருளி அதிஸந்துஷ்டராய் நிற்க, அவ்வளவிலே 'எங்கள்ஶிஷ்யனை நீர் இங் ஙனே மயக்கி ஶிஷ்யனாக்கிக் கொள்ளும்போது எங்களை ஜயித்தன்றோ செய்யலாவது?' என்று பன்னீராயிரம் க்ஷபணர் ஏககாலத்திலே வந்து தர்க்கிக்கத் தொடங்க, உடையவரும் 'மின்னலுக்கு அஞ்சு மவர்கள் இடியின்கையி லகப்பட்டாற்போலவும், தேளுக்கு அஞ்சி பாம்பின்வாயி லகப்பட்டார் போலவுமாச்சுதே; இனி என்செய் யக்கடவோம்?' † (என்று விசாரக்ராந்தராயிருக்க, தொண்டனூர் நம்பிமுதலான முதலிகளெல்லாரும் 'தேவரீருடையப்ரபாவத்தை

† குண்டலிதக்ரந்தம் சிலப்ரதிகளில் இல்லை.



எல்லாரும் அறிந்து உஜ்ஜீவிக்கும்படி வெளியிடவேணும்' என்று விண் ணப்பஞ்செய்ய உடையவரும்) 'இனி நம்மை வெளியிடாதிருக்க வொண்ணாது' என்றுபார்த்து, ஒருதிருமண்டபத்திலே திருத்திரை யை வளைத்துக்கொண்டு உள்ளே எழுந்தருளியிருந்து ஸஹஸ்ரபணா மண்டலமுடைய திருவநந்தாழ்வானாய் ஒவ்வொருத்தர்க்கு அநேகப்ரகார மாக ப்ரத்யுத்தர மருளிச்செய்து அவர்களை வாய்மூடுவித்து ஜயிக்க, அவர்களிலே சிலர் அதிவிஸ்மிதராய்வந்து திருவடிகளிலே ஆஶ்ரயிக் கத் தேட, அவர்களை அடிமைகொண்டு ஸ்ரீவைஷ்ணவர்களாம்படி பண்ணி விஶேஷகடாக்ஷஞ்செய்தருளித் தம் திவ்யஶக்தியை ப்ரகடிப் பிக்க, இத்தைக்கண்டு போய்ச் சிலர் ராஜ்யாதிபனான விஷ்ணுவர்த்தந ராயனுக்குச்சொல்ல, அத்தைக்கேட்டு விஷ்ணுவர்த்தநனும் உடைய வர்திருவடிகளிலே அதிப்ரவணனாயிராநிற்க, அங்குத்தையில் எம் பெருமானைத் தொண்டனூர்நம்பி அபிமாநித்திருக்கையாலே அவ ருக்கு 'நம்பிதம்பிரான்' என்று திருநாமஞ்சாத்தி உகந்தருளிச் சிங்கர் கோயிலிலே எழுந்தருளி வேதாந்தவ்யாக்யாநஞ்செய்துகொண்டு இருக் குங்காலத்திலே,

திருக்கையில் திருமண்மாண்டு 'சாத்துகைக்குத் திருமண் பெற் றிலோமே!' என்று சிந்தித்துக்கொண்டு கண்வளர்ந்தருள, அன்று ராத்ரி திருநாராயணப் பெருமாளும் 'அணித்தாக யதுகிரியிலே உம் முடைய வரவு பார்த்துக்கொண்டு நில்லாநின்றோம்; உம் திருவுள்ளம் போன்ற திருமணும் இங்கே உண்டு; சடக்கெனப் புறப்பட்டுவாரீர், என்று ஸ்வப்நங்காட்டியருள, உடையவர் விடிவோரை ப்ரீதரா யெழுந் திருந்து இத்தை முதலிகளுக்கு அருளிச்செய்து விஷ்ணுவர்த்தநராய னையும் அழைப்பித்துத் தாம் ஸ்வப்நங் கண்டபடியை அருளிச்செய்ய, அவனும் கேட்டு ப்ரஸந்நனாய் ஸம்மதித்துக் காடுவெட்டுவித்துக் கொண்டு உடையவர்பின்னே ஸேவித்துக்கொண்டு செல்ல, பஹு தாந்யஸம்வத்ஸரம் தைமாஸத்திலே எம்பெருமானாரும் செம்பொன் யதுகிரி யேறி வேதபுஷ்கரிணிக்கரையிலே எழுந்தருளி (க) "பரிதாந ஶிலாந் த்ருஷ்ட்வா ப்ரணமந்தி த்விஜோத்தமா:" என்கிறபடியே பரி

(க) ஶிலாநந்த்ருஷ்ட்வா ப்ரணமந்தி த்விஜாதய: ।

தாகஶிலையையும் ஸேவித்து அங்கே நீராடி (க) "வேதபுஷ்கரிணீதீரே
விஶாலேசஶிலாதலே - பரிதாநம்ஸஜக்ராஹ காஷாயம் பரமம்புமாந்"
என்கிற தத்தாத்ரேயரைப்போலே தாமும் மீளவும் காஷாயந் தரித்
தருளி, முன்னேநடந்து திருநாராயணப்பெருமாள் எழுந்தருளியிருக்
கிற இடத்தைத் தேடிக் காணமல் 'பகவத்ப்ரபாவத்துக்குக் குறை
வாக என்செய்தோம்!' என்று திருவுள்ளங்கலங்கி அயர்ந்து கண்வளர்ந்
தருள, அவ்வளவிலே திருநாராயணப்பெருமாள் இவர் கனவிலே
எழுந்தருளி 'கல்யாணஸரஸ்ஸின் தென்மேலைமூலையில் செண்பகச்
சோலைக்குஅருகே திருமகிழுக்குத்தென்பார்ஶ்வத்திலே வளர்ந்த
திருத்துழாயின் கீழே பெரியபுற்றுக்குள்ளே இராநின்றோம்; திரு
மணும் அந்தக்கல்யாணஸரஸ்ஸுக்கு வடமேலை மூலையிலே (உ)
"ஶ்வேதத்வீபாத்ஸமேதேந ஶுத்தம்ருத்ஸ்ரவ்யமாஹ்ருதம் - யாத
வாத்ரௌவிநிக்ஷிப்தம் அக்ஷயந்தந்மமாஜ்ஞயா" என்கிறபடியே பெரிய
திருவடியாலே ஶ்வேதத்வீபத்தினின்றுங்கொணர்ந்து யதுகிரியிலே
நிக்ஷேபிக்கப்பட்டு மத்ப்ரபாவத்தாலே அக்ஷயமாக சேமிப்பித்திரா
நின்றது; நீர் க்லேஶிப்பானேன்? நாம் உமக்கு அடையாளமாக இவ்
விடந்தொடங்கி நாம் இருக்கும் புற்றளவாக முறித்திட்ட திருத்
துழாய்க்கொழுந்தே குறியாக வாரீர்' என்று ப்ரத்யக்ஷஸமாநாகாரமாக
ஸ்வப்நமுகேந அருளிச்செய்ய, உடையவரும் உகந்து உணர்ந்து எழுந்
திருந்து முறித்திட்ட திருத்துழாய்க்கொழுந்தே குறியாகக் கல்யாண
ஸரஸ்ஸின்கரையிலே எழுந்தருளித் திருமுகப்படியே சம்பகவநமத்
பத்தில் கப்புங்கவருமாய்ப்பணைத்துக் கொழுந்துவிட்ட திருத்துழாய்
மாத்தைக்கண்டு களித்து ஆநந்தத்துடனே பலகாலும் தண்டனிட்டு
அத்திருத்துழாய் மாத்தின் மண்காப்பு நீக்கினவளவிலே (ங) "கம
பியதுகிரிஸ்தங்காந்திஸிந்துந்ததர்ஶ" என்கிறபடியே புற்றினுள்ளே

---

(க) வேதபுஷ்கரிணீதீரே விஶாலேஶிலாதலே । பரி
தாநம்ஸஜக்ராஹ காஷாயம் பரமம்புமாந் ॥
(உ) ஶ்வேதத்வீபாத்ஸமேதேந ஶுத்தம்ருத்ஸ்ரவ்யமாஹ்ருதம் । யாத
வாத்ரௌ விநிக்ஷிப்தம் அக்ஷயம் தந்மமாஜ்ஞயா ॥
(ங) கமநீயதமாம்ஶ்ரியம் யதுகிரிஸ்தங்காந்திஸிந்துந்ததர்ஶ



பொற்கோயில் தோன்றியபின்பு மற்றங்கினிதமர்ந்த மாயவனுடைய
நீலஶிகாமணி தோன்ற, சகவர்ஷம் ஆயிரத்திற்குமேல் பன்னிரண்டு
சென்ற வர்த்தமாநபஹுதாந்ய வர்ஷம் தைமாஸம் ஶுக்லபக்ஷ
சதுர்த்தஶியும் வியாழக்கிழமையுங் கூடின புனர்பூசநக்ஷத்ரத்திலே
திருநாராயணனுருவங் கண்டு நலம்மிகுத்துக் கொந்தளித்து எல்லா
ரும் குணலைக்கூத்தடித்து மங்களஶங்க ம்ருதங்க படஹாத்யகிலவாத்ய
ஜயஶப்தகோஷம்பண்ணி, ராஜாவையும் அழைத்துக் காட்டியருளிப்
பாலாலே திருமஞ்சநம்பண்ணி "பகற்கண்டேன் நாரணனைக்கண்
டேன்கனவில், மிகக்கண்டேன் மீண்டவனைமெய்யே-மிகக்கண்டேன்"
என்கிறபடியே திருநாராயணப்பெருமாளைத் திருவடிமுதல் திருமுடி
யளவும் * கண்ணாரக்கண்டு அநுபவித்துத் தம்திருக்கையாலே மூன்று
நாள் திருவாராதநஞ்செய்தருளி, "மாறனடிபணிந்து உய்ந்தவன்"
என்று பரமாசார்யரான ஸ்ரீபராங்குசர் தமக்குத் தாம் அத்யந்தாபிமத
ஶிஷ்யராகையாலும், * தமிழ்மறைகளாயிரமும் ஈன்ற முதற்றாய்
சடகோபன் மொய்ம்பால்வளர்த்த இதத்தாய் இராமாநுசனாகையா
லும், பித்ருதநத்தைப் புத்ரன் விநியோகங்கொள்ளுமாபோலே ஐஶ்
வர்ய கைவல்யங்களாகிற க்ஷுத்ரபுருஷார்த்தங்களை இகழ்ந்து காற்
கடைக்கொண்டு 'திருநாராயணன்தானே உபாயோபேயம்' என்று
நிஷ்கர்ஷிக்கிற ஒரு நாயகத்திருவாய்மொழியைத் திருநாரணனுக்கு
ஸமர்ப்பித்தருளினர்.

பின்பு கல்யாணஸரஸ்ஸின் வடமேலைமூலையிலே தம் த்ரிதண்டத்
தாலேகிற, பாலாறுபோலே பொங்கிக் கிளம்புகிற திருமண்குவை
களைக் கண்டு மண்டுகிற ஆநந்தாதிஶயேந அத்திருமண்கொண்டு பன்
னிரண்டு திருநாமஞ் சாத்தியருளி த்ரிதண்டமண்டிதகரபுண்டரீகராய்
விளங்கியருளி, காடுவெட்டி ஊருங்கோயிலும் சமைப்பித்துத் திரு
நாராயணப்பெருமாளுக்கு ஸ்ரீபாஞ்சராத்ரஸாத்வத ஸம்ஹிதையாலே
ப்ரோக்ஷணாதிகளை ஸ்ரீரங்கராஜபட்டர் திருக்கையாலே செய்வித்
தருளி 'திருநாரணற்கு நித்யோத்ஸவ பக்ஷோத்ஸவ மாஸோத்ஸவ
ஸம்வத்ஸரோத்ஸவங்களெல்லாம் மஹோத்ஸவமாக நடத்துகைக்கு
உத்ஸவபேரம் இல்லையே!' என்று மிகவும் வ்யாகுலிதசித்தராய்க் கண்
வளர்ந்தருள, அப்போது இவர் ஸ்வப்நத்திலே திருநாராயணப் பெரு
மாள் எழுந்தருளி 'நம் உத்ஸவபேரமான ராமப்ரியர் இப்போது டில்லி

யேற எழுந்தருளித் துருஷ்கராஜக்ருஹத்திலே லீலைகொண்டாடி எழுந்தருளியிருக்கிறார்; அங்கேறப்போய் எழுந்தருளுவித்துக்கொண்டு வாரீர்' என்று திருவுள்ளமாயருள, உடையவரும் ப்ராதஃகாலமான வாறே எழுந்திருந்து ஸ்வப்நத்தை முதலிகளுடன் ஆலோசித்துக் கொண்டு பயணகதியிலே த்வரித்து டில்லியேற எழுந்தருளினவாறே, டில்லிபுரீந்த்ரனான ராஜாவும் இவரைக்கண்டு ப்ரத்யுத்தாந ப்ரணதி பூர்வகமாக பஹுவுபசாரஞ்செய்து 'எழுந்தருளினகார்யம் அருளிச் செய்யவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் '*எங்கள் குலதெய்வமான ராமப்ரியர் இங்கே எழுந்தருளியிருக்கிறார்; அவரைத் தரவேணும்' என்று அபேக்ஷிக்க, ராஜாவும் 'அப்படியே செய்கிறோம்' என்று 'கொள்ளைகொண்டு சிறைவைத்த எம்பெருமான்கள் சிறைச் சாலையை ஸோதித்துக்கொள்ளீர்' என்று அப்பணையிட்டுவிட, இவரும் அங்கேற எழுந்தருளி ஸோதித்து 'திருநாரணர்வடிவுக்கு ஒத்திராமையாலே இத்தேவர்கள் ஒருவருமன்று' என்று ராமப்ரியரை அவர்களில் காணாமையாலே முசித்துக்கிடக்க, அன்றிரவில் ராமப்ரியர் இவர் ஸ்வப்நத்திலே எழுந்தருளி 'நீர் முசிப்பானேன்? நாம் அவன்மகளாலே பூஜைகொண்டு அவள் ஸஜ்ஜாக்ருஹத்திலே இராநின்றோம்; நம்மைக் கொண்டுபோம்படியாக அங்கே வாரீர்' என்று அருளிச்செய்ப, உடையவரும் இச்செய்தியை ராஜாவுக்கு அறிவிக்க, அவனும் 'இப்படி உம்முடையபக்கல் வ்யாமுக்தராகிறவர் தாமே வரக்கடவர்' என்ன, இவரும் 'அவரைக்கண்டு திருவடிதொழலாகாதோ?' என்ன, 'அப்படியேயாகிறது' என்று இவரை அவனும் தன்மகள்ஸஜ்ஜாக்ருஹத்தேற எழுந்தருளுவித்துக்கொண்டுபோக, அங்கே ராமப்ரியரும் உடையவரைக்கண்டு, ஆஸ்ரிதவாத்ஸல்யந் தோற்ற, இட்ட சட்டையும், கட்டின சிறுச்சதங்கையும், இட்ட கஸ்தூரித்திருநாமமும், முடித்த * மைவண்ணநறுங்குஞ்சியும், * தன் முகத்துச் சுட்டி தூங்கத் தூங்க * நெறித்த குழலுமாய், ஸஜ்ஜையிலும் குதித்து "தன்னிய லோசை சலன்சலனென்றிட" என்கிறபடியே செம்பொற்சதங்கைகள் சலசலவென்று ஒலிக்க அகிலரும் காணும்படி வந்து உடையவர்திருமடியிலே யிருக்க, உடையவரும் ஆநந்தாஸ்ருக்கள் பனிப்ப ஆநந்தைகார்ணவாந்தர் நிமக்நராய்ப் புளகிதநிகிலாங்கராய் மார்பும் தோளும் பூரித்து 'என்னுடைய செல்வப்



பிள்ளையோ!' என்று எடுத்து அணைத்துக்கொண்டருளினார். அன்று முதல் ராமப்ரியர்க்கு 'செல்வப்பிள்ளை' என்று திருநாமமாய்த்து. இதைக்கண்ட ராஜாவும் அத்யாஸ்சர்யயுக்தனாய் அவர்திருவடிகளிலே விழுந்து ஸேவித்து அநேகவிதமாக ஸத்கரித்து பஹுவுபசாரஸஹிதமாக ஸம்பத்குமாரரை யதிஸார்வபௌமர்க்கு எழுந்தருளுவித்துக் கொடுத்தனுப்பினான்.

உடையவரும் அங்குநின்றும் புறப்பட்டு இவரை எழுந்தருளுவித்துக்கொண்டு த்வரித்துப் பயணகதியிலே யாதவாத்ரிக்கு எழுந்தருளி ஸர்வரும் யதிராஜகுமாரரென்னும்படி விஸேஷித்துப் புத்ரவாத்ஸல்யம் பண்ணி அபிமாநித்தருளி ப்ரோக்ஷணப்ரதிஷ்டாபுரஸ்ஸரமாகத் திருநாரணருடனே சேர்த்துத் திருநாராயணப்பெருமாளுடைய திவ்யோத்ஸவகர்த்தாவாக்கி, நித்ய பக்ஷ மாஸ அயந ஸம்வத்ஸரோத்ஸவாதி மஹோத்ஸவத்திருநாள்களும் நடத்தியருளித் தீர்த்தப்ரஸாதமும் பெற்று, யதிராஜமடமும் கட்டி வைத்து, ஐம்பத்திருவர்கட்கு அன்பான ஊழிய கைங்கர்யத்தையும் கல்பித்தருளி, ஐம்பத்திருவர் ஸ்ரீவைஷ்ணவர்களென்று ஸமுதாயத்திருநாமமும் ப்ரத்யேகமாகத் தாஸ்யநாமமும் ப்ரஸாதித்து, அங்கே அவர்களை ப்ரதிஷ்டிப்பித்துக் குறைவறத் திருவாராதநமும் நடத்திக்கொண்டிருக்க, ஒருநாள் வரையிலே ஸ்ரீபாஷ்யகாரர் தம்முடைய ஸ்ரீபாதத்திலுள்ள ஆசார்யர்களுடனேயும், சீயர்களுடனேயும், ஐம்பத்திருவர்களுடனேயும், சாற்றின சாற்றித முதலிகளுடனேயும், கொற்றியம்மைமார்களுடனேயும், திருமேனிக்காவல் திருவேணைக்காருடனேயும் பெருங்கூட்டத் திருவோலக்கமாக இராமாநுசனில் எழுந்தருளியிருந்து 'திருநாராயணபுரம்' என்று அந்நகரத்துக்குத் திருநாமஞ்சாத்தியருளி 'இத்திருநாராயணபுரத்திலே நித்யவாஸம் பண்ணுமவர்களுக்குப் பெரியோர்க்கும் நமக்கும் உண்டான பரமபதமும் ஆசார்ய கைங்கர்யமும் உண்டாம்' என்று அருளிச்செய்தருளினார்.

இத்திருமலை, க்ருதயுகத்திலே ஸநத்குமாரர் ஸத்யலோகத்தில் நின்றும் ஆநந்தமய திவ்யவிமாநத்தோடே எழுந்தருளுவித்துக் கொண்டுவந்து திருநாராயணனை இங்கே ப்ரதிஷ்டிப்பிக்கையாலே 'நாராயணாத்ரி' என்றும், த்ரேதாயுகத்திலே தத்தாத்ரேயர் நாலு வேதபுருஷர்களையும் ஸிஷ்யராக்கிக் கொண்டுவந்து வேதபுஷ்கரிணிக்

கரையிலே ஸதா வேதாத்யயந நிரதராயிருக்கையாலே ‘வேதாத்ரி’ என்றும், த்வாபரயுகத்திலே நம்பிமூத்தபிரானாலும் ஸ்ரீக்ருஷ்ணனாலும் ஆராதிக்கப்படுகையாலே ‘யாதவாத்ரி’ என்றும், (௧) “யுகே கலௌ து ஸம்ப்ராப்தே யதிராஜேநபூஜநாத் - யதிஶைலஇதிப்ரோக்தம் நாமதேயாந்தரங்கிரே:” என்கிறபடியே கலியுகத்திலே எம்பெருமானார் எழுந்தருளி ஜீர்ணோத்தாரணம்பண்ணி அபிமானிக்கையாலே ‘யதிஶைலம்’ என்றும் ப்ரஸித்தமாய்த்து.

அநந்தரம் பத்மகிரியிலே சென்று பௌத்தஸமயங்களை வென்று “என்றும் என்பிள்ளைக்குத் தீமைகள்செய்வார்க ளங்ஙனமாவர்களே” என்னும்படி அவர்களைக் கற்காணந்தன்னில் அரைப்பித்து நிஶ்ஶேஷமாக நிரஸித்து நிஷ்கண்டகமாக்கியருளி, ஸ்ரீபாஷ்யமும் வ்யாக்யானித்துக்கொண்டு திருநாராயணப்பெருமாள் திருவடிகளிலே பன்னிரண்டுஸம்வத்ஸரம் வாழ்ந்தருளுகிற காலத்திலே, ஒரு ஸ்ரீவைஷ்ணவர் கோயிலில்நின்றும் எழுந்தருளி உடையவர் திருவடிகளிலே ஸேவித்திருக்க, இவரும் ‘பெரியபெருமாளும் பெருந்திருச்செல்வமும் செய்கிறபடி என்?’ என்று கேட்டருள, ‘அவரும் ‘தேவரீர் இல்லாத குறையொன்றொழிய மற்றொருதுறையு மில்லை’ என்ன, இவரும் ‘சோழன்பக்கல் எழுந்தருளின ஆழ்வானும் பெரியநம்பியும் செய்தபடி என்?’ என்று கேட்டருள, ஸ்ரீவைஷ்ணவரும் “கோயிலில்நின்றும் கூரத்தாழ்வானையும் பெரியநம்பியையும் ராஜமநுஷ்யர் அழைத்துக் கொண்டுபோய்ச் சோழன்முன்னேவிட, அவனும் இவர்களைப்பார்த்து (௨) “ஶிவாத்பரதரம்நாஸ்தி” என்று ஓலைக்கு எழுத்திடச் சொல்ல, கூரத்தாழ்வானும் ஶ்ருதி ஸ்ம்ருதீதிஹாஸ புராணாதிகளாலே பஹுப்ரகாரமாக ‘ஸ்ரீமந்நாராயணனே ஸர்வஸ்மாத்பரன், ஜகத்காரணபூதன் த்யேயனானவனும் அவனே, ஸர்க்கஸ்திதி ஸம்ஹாரகர்த்தாவும் அவனே, ப்ரஹ்மருத்ராதிகள் அவனுக்குப் புத்ரபௌத்ராதிகளாய் அவன்

(௧) யுகே கலௌ து ஸம்ப்ராப்தே யதிராஜேந பூஜநாத் । யதிஶைல இதி ப்ரோக்தம் நாமதேயாந்தரம் கிரே: ॥

(௨) ஶிவாத்பரதரம் நாஸ்தி



நியமநத்திலே இருக்குமவர்கள்; அவ்வளவுமன்றியே (௧) “ஏக:ப்ராஸீஸரத்பாதமந்ய: ப்ராக்ஷாளயந்முதா-அபரோऽதீதரந்மூர்த்நா கோऽதிகஸ்தேஷு மந்யதாம்” என்று திருவடிகளை நீட்டினவன் ஒருவன், கமண்டலூதகத்தாலே பக்திபுரஸ்ஸரமாகத் திருவடிகளை விளக்கினவன் ஒருவன், தத்தீர்த்தத்தை ப்ரீதியோடே ஶிரஸாவஹித்தவன் ஒருவன்; இவர்களில் பெரியவன் ஆரென்று நீயே விசாரித்துக்காணாய்’ என்ன, அவனும் இசையாதிருக்க, இவரும் ‘இம்மாத்ரமேயோ? (௨) “யச்சௌசநிஸ்ஸ்ருதஸரித்ப்ரவரோதகேந தீர்த்தேநமூர்த்நிவித்ருதேந ஶிவஶ்ஶிவோऽபூத்” என்று த்ரிவிக்ரமபாதஜலஸங்கத்தாலே கபாலித்வம் போய் ஶிவத்வமுண்டானவனிறே இவன்’ என்று அருளிச்செய்ய, சோழனும் அதுகேட்டு அதிக்ருத்தனாய் ‘நீர் பெரியவித்வானாகையாலே உமக்கு வேண்டினபடியெல்லாம் சொல்லவல்லீர்; அங்ஙனன்று; நான் சொன்னபடியே (௩) “ஶிவாத் பரதரம் நாஸ்தி” என்று ஓலைக்கு எழுத்திடும்’ என்று ஓலையைக்கையிலேகொடுத்துக் கநக்கநிர்ப்பந்திக்க, கூரத்தாழ்வானும் தம்முடைய த்ருடாத்யவஸாயமாம்படியே (௪) “ஶிவாத்பரதரம்நாஸ்தி த்ரோணமஸ்தி தத:பரம்” என்று ஓலைக்கு எழுத்திட்டருளினார். சோழனும் இவர் இப்படி பரிஹஸித்து ஓலைக்கு ஒப்பமிட்டபடி கண்டு அத்யந்தகோபாக்ராந்தசித்தனாய் (†ப் பெரியநம்பியை அழைத்து ‘நீர்எழுத்திடும்’ என்ன, அவரும் ‘ஸ்ரீமந்நாராயணனே பரன்’ என்று பஹுமுகமாக அருளிச்செய்ய,) ஆழ்வானையும் நம்பியையும் நேத்ரோத்பாடநம்பண்ணச் சொல்ல, †(அவ்வளவிலே கூரத்தாழ்வானும் சோழனைக்குறித்து ‘நீ மஹாவீரஶைவனாகையால் உன்னைப்பார்த்த கண்கள் எனக்கு ஆகாது’ என்று தம்முடைய திவ்யநகங்களாலே கீறிக் கண்ணை வாங்கிப்போகட,) பின்பு

(௧) ஏக: ப்ராஸீஸரத்பாதமந்ய: ப்ராக்ஷாளயந்முதா । அபரோऽதீதரந்மூர்த்நா கோऽதிகஸ்தேஷு மந்யதாம் ॥

(௨) யச்சௌசநிஸ்ஸ்ருதஸரித்ப்ரவரோதகேந தீர்த்தேந மூர்த்நி வித்ருதேந ஶிவஶ்ஶிவோऽபூத் ॥ (௩) ஶிவாத்பரதரம் நாஸ்தி ॥

(௪) ஶிவாத்பரதரம் நாஸ்தி த்ரோணமஸ்தி தத: பரம் ॥

† குண்டலிதக்ரந்தம் சிலப்ரதிகளில் இல்லை.

ராஜமநுஷ்யர்களும்) † (பெரியநம்பியைப்) பிடித்துக்கொண்டுபோய் அவன்சொன்னப்போலே செய்து படைவீட்டில்நின்றும் புறப்பட விட, † (ஆழ்வானும் 'தர்ஸநத்துக்குத் தர்ஸநங்கொடுக்கப்பெற்றோமே!' என்று ப்ரீதராயிருக்க,) பெரியநம்பியும் † (வ்ருத்தராகையாலே அவ்)வேதனை பொறுக்கமாட்டாமல் அங்கே ஒருகொல்லைத்தலைமாட்டிலே ஆழ்வான்மடியிலே திருமுடியும் அத்துழாய்மடியிலே திருவடிகளுமாய் இளைத்துக் கண்வளர்ந்தருள, நம்பியை ஆபத்தசையிலே ஆழ்வானும் அத்துழாயும் 'அங்குநின்றும் கோயிலேறப்போனாலோ?' என்ன, நம்பியும் 'நாம் அங்கேபோய் ப்ராக்ருதியைவிடில், ஸ்ரீவைஷ்ணவர்கள் நம்பிக்கு முட்படத் திருவடிசாரும்போது கோயிலேறப் போகவேண்டிற்றில்லையோ? என்று ஸங்கிப்பர்கள்' என்று அருளிச்செய்து† (அடியிலே ஆசார்யன்க்ருபை பண்ணினத்துக்குப் பரமபதம் ஸித்தமென்று) ஆளவந்தார்திருவடிகளை த்யாநித்துக்கொண்டு அங்கே திருநாட்டுக்கு எழுந்தருளினார். ஆகையால், ப்ரபந்நனுக்கு அந்திம தேஸநியதியில்லை யென்றபடி. † (பின்பு அங்கே அநாதப்ரேதஸம்ஸ்காரம் பண்ணிக்கொண்டு திரிவார் சிலர் வந்து, 'இவர்க்கும் அப்படி பண்ணக்கடவோம்' என்று தாங்கள் ஸம்ஸ்காரஞ்செய்வதாக உத்யோகிக்க, ஆழ்வானும் அத்யவஸாயங்குலையாமல் 'வாருங்கோள், மாணிகாள்! ஈஸ்வரனும் ஈஸ்வரவிபூதியும் வைஷ்ணவனுக்குக் கிஞ்சித்கரிக்கவிருக்க, வைஷ்ணவனுமாய் அறவையுமாயிருப்பானை நீங்கள் எங்கே தேடுவுதிகோள்?' என்று அவர்களை உபேக்ஷித்துவிட்டார்.) பின்பு சில ஸ்ரீவைஷ்ணவர்கள், பெரியநம்பியை அங்கே ஸம்ஸ்கரித்துப் பள்ளிபடுத்து ஆழ்வானை ஒருகட்டணத்திலே எழுந்தருளுவித்துக்கொண்டு ராத்ரியிலே ஒருவருங்காணாமல் கோயிலிலே வந்து புகுந்தார்கள். கூரத்தாழ்வானும் 'பெரியநம்பியைப்போலே அடியேனுக்கும் இஸ்ஸரீரம் போய்த்தில்லையே!' என்றுகொண்டு "முறையோ?' அறவணைமேற்பள்ளிகொண்ட முகில்வண்ணனே!" என்று போர க்லேஸித்தருளினார்" என்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் * கேட்பார் செவி சுடுவார்த்தை கேட்டு '*ஐயோ! கண்ணபிரான்! அறையோ!' என்று கோஷித்துக்கொண்டு வேரற்றமரம்போலே விழுந்துகிடந்து துடித்துத் திருமிடறு தழுதழுப்ப அத்யந்தம் அவஸந்நராய்த் திரு

† குண்டலிதக்ரந்தங்கள் சிலபிரதிகளில் இல்லை.



முத்துதிர்த்துக் * கண்ணநீர் கைகளாலிறைத்து க்லேஸிக்கும்படி கண்டு அருகிருந்த முதலிகள் தேற்ற, தேறி 'ஆழ்வானைலும் திருமேனியுடன் இருக்கப்பெற்றோமே!' என்று அருளிச்செய்து, பெரியநம்பிக்கு ஸ்ரீசூர்ணபரிபாலநஞ் செய்து பெருக்கத் திருவத்யயநம் நடத்தியருளி, 'ஆழ்வானுக்குத் திருக்கண் போச்சுதே!' என்று வ்யாகுலஹ்ருதயராய், மாறொன்றில்லா மாருதிச்சிறியாண்டானை, 'ஆழ்வானையும் ஆராய்ந்து அங்குள்ள விஸேஷங்களையும் அறிந்துவாரும்' என்று கோயிலுக்குப் போகவிட்டு பூர்வம்போலே வ்யாக்யாநித்துக் கொண்டு எழுந்தருளியிருந்தார்.

## உடையவரின் ஆசார்யர்களுடைய திருநக்ஷத்ரமும் தனியன்களும்.

---

பெரியநம்பி திருநக்ஷத்ரம், மார்கழியில் கேட்டை.

அவர்தனியன் - (க) "கமலாபதிகல்யாண குணாம்ருதநிஷேவயா- பூர்ண காமாயஸததம்பூர்ணாயமஹதேநம:", "ஆசார்யாத்யாமுநேயாத ததிமதநிரூமாக்தார்த்தஜாதம்ப்ரபத்திஞ் சோபாதிக்ஷத்ர ஹஸ்யாந்யபிய தியதயேகிஞ்சதத்ரக்ஷணார்த்தம் - சோளேந்த்ரம்ப்ராப்யசோக்த்வாஸ தஸிபரபுமாந் ஸ்ரீபதிர்ஹேதிபீடாம் ஸாரீராம்தத்க்ருதாஞ்சாப்யஸஹ தமநவைதம்மஹாபூர்ணமார்யம்."

திருக்கோட்டியூர் நம்பியை அந்திமதஸையில் 'தேவரீர் திருவுள்ளத்திலே நினைத்திருக்கிற நினைவு என்?' என்று ஸ்ரீபாதத்து முதலிகள் கேட்க, 'நம்பியும் சக்ரவர்த்தித்திருமகன் திருவுள்ளத்தை ஒருபக்ஷி புண்படுத்திற்று' என்று சொல்லி நிர்ப்பாராய், ஆளவந்தார் திருவடிகளை த்யாநித்துக்கொண்டு திருநாட்டுக்குளெழுந்தருளினார்.

---

(க) कमलापतिकल्याणगुणामृतनिषेवया । पूर्णकामाय सततं पूर्णाय महते नमः ॥ आचार्याद्यामुनेयादधिगतनिगमान्तार्थजातं प्रपत्तिं सोपादिक्षद्रहस्यान्यपि यतिपतये किंच तद्रक्षणार्थम् । चोळेन्द्रं प्राप्य चोक्त्वा सदसि परपुमान् श्रीपतिर्हेतिपीडां शारीरां तत्कृतां चाप्यसहत मनवैतं महापूर्णमार्यम् ॥

அதாவது - 'ஶரண்யபரித்ராணமும் போராதென்றிருக்குமவனிருக்க, நமக்கு இனி வேறொரு நினைவுண்டோ?' என்று கருத்து. இது கண்டு ஸ்ரீபாதத்துமுதலிகள் ப்ராயேண து:கித்துத் தேறி, தெற்காழ்வாரைக்கொண்டு நம்பிக்குத் தீர்த்தங்கொண்டாடித் திருவத்யயநமும் நடத்தியருளினார்கள்.

திருக்கோட்டியூர் நம்பி திருநக்ஷத்ரம், வைகாசியில் ரோஹிணி.

அவர் தனியன் - (க) "ஶமதமகுணபூர்ணம்யாமுநார்யப்ரஸாதாத் அதிகத பரமார்த்தம் ஜ்ஞாநபக்த்யாதிஸிந்தும்-யதிபதிநதபாதம் ஶ்லோகதத்வார்த்த நிஷ்டம் ஶ்ரிததுரிதஹரம் † ஸ்ரீகோஷ்டிபூர்ணம்நமாமி," "‡ ஸ்ரீவல்லபபதாம் போஜபக்த்யம்ருதஸாகரம் - ஸ்ரீமத்கோஷ்டீபுரீபூர்ணம் தேஶிகேந்த்ரம் பஜாமஹே."

திருமாலையாண்டான் திருநக்ஷத்ரம், மாசியில் மகம்.

அவர் தனியன் - (உ) "ராமாநுஜமுநீந்த்ராய த்ராமிடீஸம்ஹிதார்த்ததம் - மாலாதரகுரும்வந்தே வாவதூகம்விபஶ்சிதம்."

திருவரங்கப் பெருமாளரையர் திருநக்ஷத்ரம், வைகாசியில் கேட்டை.

அவர் தனியன் - (ங) "அத்யாபயத்யதீந்த்ராய பராங்குஶஸஹஸ்ரிகாம் - தந்நாதவம்ஶ்யம்வந்தேऽஹம் ஸ்ரீரங்காதிபதேஶிகம்."

பெரிய திருமலைநம்பி திருநக்ஷத்ரம், சித்திரையில் ஸ்வாதி.

---

(க) ஶமதமகுணபூர்ணம் யாமுநார்ய ப்ரஸாதாத் அதிகதபரமார்த்தம் ஜ்ஞாநபக்த்யாதிஸிந்தும்। யதிபதிநதபாதம் ஶ்லோகதத்வார்த்தநிஷ்டம் ஶ்ரிததுரிதஹரம் ஶ்ரீகோஷ்டிபூர்ணம் நமாமி ॥ ஶ்ரீவல்லபபதாம்போஜபக்த்யம்ருதஸாகரம் । ஶ்ரீமத்கோஷ்டீபுரீபூர்ணம் தேஶிகேந்த்ரம் பஜாமஹே ॥

(உ) ராமாநுஜமுநீந்த்ராய த்ராமிடீஸம்ஹிதார்த்ததம் । மாலாதரகுரும் வந்தே வாவதூகம் விபஶ்சிதம் ॥

(ங) அத்யாபயத்யதீந்த்ராய பராங்குஶஸஹஸ்ரிகாம் । தந்நாதவம்ஶ்யம் வந்தேऽஹம் ஶ்ரீரங்காதிபதேஶிகம் ॥

† 'தம்கோஷ்டிபூர்ணம்' என்றும் பாடாந்தரம்.

‡ 'யாமுநார்யபதாம்போஜ' என்றும் பாடாந்தரம்.



அவர் தனியன் - (க) "பிதாமஹஸ்யாபிபிதாமஹாயப்ராசேதஸாதேஶபலப்ரதாய - ஸ்ரீபாஷ்யகாரோத்தம தேஶிகாய ஸ்ரீஶைலபூர்ணாயநமோநமஸ்தாத்."

திருக்கச்சிநம்பி திருநக்ஷத்ரம், மாசியில் ம்ருகஶீர்ஷம்.

அவர் தனியன் - (உ) "கருணாகரபாதாப்ஜஶரண்யமஹாத்மநே-ஸ்ரீமத்கஜேந்த்ரதாஸாய காஞ்சீபூர்ணாயதேநம:."

அநந்தரம், மாறொன்றில்லாமாருதிச்சிறியாண்டான் த்வரித்துப் பயணகதியிலே கோயிலிலே சென்று கூரத்தாழ்வானை ஸேவித்துநிற்க ஆழ்வானும் சிறியாண்டானைக் கண்டு உடையவரை ஸேவித்தாற்போல ஸந்துஷ்டராய் 'உடையவர் செய்தருளுகிறபடி யென்?' என்று வினவியருள, இங்குத்தை விஶேஷமெல்லாம் ஸவிஸ்தரமாக விவரித்துச் சொல்லக் கேட்டு ஆநந்தித்திராநிற்க, ஆண்டானும் 'உடையவர் ஆசார்யவிஶ்லேஷாஸஹிஷ்ணுவாய் 'தேவரீருக்குத் திருக்கண்போச்சுதே!' என்று மிகவும் ஆர்த்தராய் அடியேனை ஆராய்ந்துவா என்று விட்டருளினார்' என்ன, ஆழ்வானும் '*உலகங்கட்கெல்லாம் ஓர் உயிரான தாம் ஸுகமேயிருக்கப்பெறில், இவ்விபத்து அடியேன் கண்ணழிவுமாத்ரமே கொண்டு போகப்பெற்றதே! என்று ஹ்ருஷ்டராயிருக்கிறோமென்று விண்ணப்பஞ்செய்யும்' என்றுவிட, அவ்வளவிலே சோழனுக்குக் கழுத்திலே புண்ணாகிப் புழுத்துப் புரண்டானென்று கேட்டு, கங்கைகொண்ட சோழபுரத்தேற ஆண்டானும்சென்று அச் * செவிக்கினியசெஞ்சொல்லை நிஶ்சயித்துக்கொண்டு எழுந்தருள வழியில் ஸந்தித்த அம்மங்கியம்மாளையுங் கூட்டிக்கொண்டு த்வரித்து எழுந்தருளி, ஒருநாள் உடையவர் ஸ்ரீபாதத்து முதலிகளுடன் அநுஷ்டாநார்த்தமாகத் திருக்கல்யாணிக்கரையிலே எழுந்தருளியிருக்கச் செய்தே, கோயிலில்நின்றும் எழுந்தருளின மாறொன்றில்லாமாருதிச் சிறியாண்டானும் அம்மங்கியம்மாளும் உடையவர் திருவடிகளைத் தங்

---

(க) பிதாமஹஸ்யாபி பிதாமஹாய ப்ராசேதஸாதேஶ பலப்ரதாய । ஶ்ரீபாஷ்யகாரோத்தமதேஶிகாய ஶ்ரீஶைலபூர்ணாய நமோ நமஸ்தாத் ॥

(உ) கருணாகரபாதாப்ஜஶரணாய மஹாத்மநே । ஶ்ரீமத்கஜேந்த்ரதாஸாய காஞ்சீபூர்ணாய தே நம: ॥

கள் ஆநந்தாஸ்ருக்களாலே நனைத்துத் தண்டன் ஸமர்ப்பித்து 'ஆழ்வானுக்கும் பெரிய நம்பிக்கும் அபராதம்பண்ணின சோழன், கழுத்திலே புண்ணுப் புழுத்துப் புரண்டுபோனான்' என்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் கர்ணாம்ருதமான கட்டுரையைக் கேட்டு மார்புந் தோளும் பூரித்து ஸந்தோஷாதிஶயத்துடனே இவர்களை வாரியெடுத்து அணைத்துக்கொண்டு ஆநந்தாஸ்ருக்கள்கொண்டு அவர்களை வழியவார்த்து 'இவ்வளவு தூரம் இவ்விஶேஷங்கொண்டு எழுந்தருளின இவர்களுக்குச் சிறக்கக் கனக்கக் கொடுக்கலாவது த்வயமல்லது இல்லை' என்று நிஶ்சயித்து, மீளவும் த்வயத்தையே அவர்களுக்குப் பரிசிலாக இரங்கியருளி, தம்ஸந்நிதியில் முதலிகளைப்பார்த்து 'இது கல்யாணஸம்ஸ்ஸா என்னுமது அந்வர்த்தமாகக் கண்டோம்' என்ன, முதலிகளும் 'அப்படியேயாம்' என்று அத்தைக் கொண்டாட, அவர்களையுங் கூட்டிக்கொண்டு ப்ரஹ்லாதவரதரான அழகியசிங்கர் திருமலையேறி அவரைத் திருவடிவணங்கி 'பகவத் பாகவத விஷயமென்றால் அஸஹமானனாய்ப் போந்த ஹிரண்யனை முன்பு நிரஸித்தருளினாப்போலே' இப்போது பரதத்வமான தேவரீரை 'இல்லை' என்று, ஸாதுநாமுபமாபூதரான ப்ரஹ்லாதாழ்வானுக்கு ஒப்பான கூரத்தாழ்வானுக்கும் பெரியநம்பிக்கும் அபராதம் பண்ணின இவனையும் க்ருமிகண்டனாக்கி நஶிப்பித்தருளிற்றே!' என்று விண்ணப்பஞ்செய்து தீர்த்தப்ரஸாதஸ்வீகாரம் பெற்று விடைகொண்டு, அப்போதே புறப்பட்டு உடையவரும் முதலிகளுமாகப் பெரியப்ரீதியோடே திருநாராயணப்பெருமாள் திருமுன்பேசென்று திருவடிதொழுது திருப்பல்லாண்டை அநுஸந்தித்து மங்களாஶாஸநம்பண்ணி, "நமோநாராயணாய" என்று க்ருதாஞ்ஜலிபுடராய்த் திருவடிகளை நோக்கிநின்று 'இனி அடியேன் கோயிலேறப் போய்வருகிறேன்' என்று விண்ணப்பஞ்செய்ய, திருநாராயணனும் நெடும்போது வாய்விடமாட்டாதே நிற்க, உடையவரும், நீர் உள்ளதனையும் இங்கேயிருமென்று கோயிலிலே நியமித்தருளிற்றே!' என்ன, 'ஆகில் அப்படியே செய்யும்' என்று அர்ச்சகமுகேந திருவுள்ளமாயருள,

எம்பெருமானாரும் புறப்பட்டருளி ஐம்பத்திருவரைப் பார்த்து 'திருநாரணனையும் செல்வப்பிள்ளையையும் மங்களாஶாஸநத்துடனே ஸதாதர்ஶநம் பண்ணிக்கொண்டு காலேகாலே திருப்பணி திருவாராதந



மும் நடத்திக்கொண்டு ஸேவித்திருங்கோள்' என்று நியமித்தருள, ஐம்பத்திருவரும் ஸ்ரீபாதத்திலேவிழுந்து ஸேவித்து'தேவரீர் திருவடிகளைப் பிரியில் தரிக்கமாட்டோம்' என்று ஆர்த்தராய்த் தலையிறக்கிட்டு நிற்க, உடையவரும் * அப்போதொரு சிந்தைசெய்து தம்விக்ரஹத்திற்குப் படியெடுத்தாப்போலே விளங்குகிற தம்முடைய அர்ச்சாரூப விக்ரஹத்தை அவதரிப்பித்து அதிலே தம் திவ்யஶக்தியையும் ப்ரதிஷ்டிப்பித்து, ஐம்பத்திருவரை அழைத்து 'நாம் உங்களுக்காக இங்கே இராநின்றோம்' என்று ஸ்வதிவ்யஶக்தி பரிபூர்ணமான அவ்விக்ரஹத்தை அவர்களுக்குத் திருவாராதநமாக இரங்கியருளி, அவர்களைக் குறித்து 'செல்வப்பிள்ளை கிணற்றின் கரையில் பிள்ளையாயிருக்கும்; பேணிக்கொண்டு போருங்கோள்' என்று நியமித்தருளி, அவர்கள் கையிலே செல்வப்பிள்ளையை அடைக்கலமாகக் காட்டிக் கொடுத்தருளி, 'திருவிளக்கு திருமாலை அமுதுபடி சாத்துப்படி முதலான உபசாரங்களெல்லாம் நன்றாகப் பேணிச்செய்துகொண்டு, த்ரோகபுத்தியாலே ஒருகாலும் தீங்கு நினையாதே அந்யோந்யம்ஸஹ்ருதயராய், ஊழிய கைங்கர்யங்களையும் மறவாதே பக்திபுரஸ்ஸரமாகப் பண்ணிப் போருங்கோள்' என்று தம் திருவடிகளைத் தொடுவித்துக்கொண்டு நியமித்தருளி, செல்வப்பிள்ளையைப் பிரியமாட்டாமல் திருவடிகளை முகந்து விழுவது எழுவது தொழுவதாய்த் திருவுள்ள முருகித் திருக்கண்கள் துளிக்கத் திவ்ய விமாநத்தையும் திருப்பதியையும் திருச்சோலையிலெழில்களையும் திருமண் குவைகளையும் புரிந்து புரிந்து பார்த்துப் பார்த்து அஞ்சலித்து மங்களாஶாஸநம் பண்ணிக்கொண்டு புத்ர வாத்ஸல்யம் பின்னே தள்ள, நம்பெருமாள் அருள்முன்னே நடத்த, ஒரு நடையிலே ஒன்பது நடைநடந்து கோயிலேற எழுந்தருளினார்.

அநந்தரம், பயண கதியிலே எழுந்தருளிப் புகுந்து திருமுகத்துறையிலே நீராடிக்கேஶவாதித்வாதஶோர்த்வபுண்ட்ரதராயெழுந்தருள, அங்குள்ளாரெல்லாரும் எதிர்கொண்டுஸேவிக்க, அவர்களையும் க்ருபை பண்ணி யெழுந்தருளிப் புகுந்து ஸேவாக்ரமந் தப்பாமல் ஸேவித்து அழகிய மணவாளன் திருமண்டபத்திலே சென்று தண்டன் ஸமர்ப்பித்து *உரைகோயிலுள்ளே புகுந்து பெரிய பெருமாளையும் நம்பெருமாளையும் திருவடி தொழுது, *மனமுருகி மலர்க்கண்கள்

துளிக்கக் கண்ணாலே பருகி ஸாயாஸ வாழ்த்தி நிற்க, பெருமாளும் * திருப்பவளச் செவ்வாய் திறந்து உடையவரை நோக்கி 'நெடுநாள் தேசாந்தரத்திற் சென்று போர மெலிந்தீரே!' என்று வினவியருள, எம்பெருமானாரும் 'பெரிய பெருமாளைக் குறித்து '*அகமகிழும் தொண்டர்வாழ அன்பொடு தென்திசை நோக்கித் தேவரீர் பள்ளி கொண்டருளுகையாலே, வன்பெருவானகத்திற் சொல்லும் படியே உபய விபூதியிலுள்ளார்க்கும் என்ன க்லேஶ முண்டு?' என்று விண்ணப்பஞ்செய்ய, பெருமாளும் உகந்து தீர்த்தம் திருமாலை திருப்பரியட்டம் தளிகை ப்ரஸாதங்களும் ப்ரஸாதிக்க,ஸ்வீகரித்து க்ருதார்த்தராய் நிற்க, பெருமாளும் 'மடமே போம்' என்று விடைகொடுத்தருள, இவரும் புறப்பட்டுத் திவ்யோத்ஸவங் கொண்டாடுந் திருமண்டபங்கள் திருக்கோபுரங்கள் திருமதிள்கள் தொடக்கமான திவ்யநகர ஸ்ரீயை யெல்லாம் சுற்றி ஸேவித்து,

முதலிகளும் தாமுமாக ஆழ்வான் திருமாளிகையேற எழுந்தருள, ஆழ்வானும் எதிரே யெழுந்தருளி உடையவர் திருவடிகளிலே விழுந்து ஸேவித்து உகப்பின் மிகுதியாலே திருவடிகளைப் பூண்டுகொண்டு கிடக்க, உடையவரும் ஆழ்வானை வாரி யெடுத்து அணைத்துக்கொண்டு க்லேஶாதிஶயேந ஶோகாஶ்ருவானது தாராவர்ஷமாக வர்ஷிக்க, நெடும்போது ஒரு வார்த்தையும் அருளிச்செய்ய மாட்டாதே விம்மல் பொருமலாய் து:கார்ணவமக்நராய்த் தழுதழுத்த திருமிடற்றொலியுடன்: 'ஆழ்வான்! இத்தர்ஶநத்துக்காக த்ருஷ்டிபூதரான உமக்கு இப்படி கண் போவதே!' என்ன, ஆழ்வானும் 'ஒரு ஸ்ரீவைஷ்ணவர் திருநாமம் கோணிற்றென்றாகிலும் நினைத்திரேனோ' என்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் 'அது உமக்கு உண்டோ? அடியேன் துஷ்கர்மமன்றோ உமக்கு இப்படி வருகைக்கு அடி' என்று திருவுள்ளம் புண்பட்டு து:காப ஸோதநம் பண்ணியருள, ஆழ்வானும் தேறி நிற்க, மற்றுமுண்டான ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்துடன்கூட மடமே எழுந்தருளி யிருந்தார்.

பின்பு, அந் நாட்டிலுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாரும் உடையவர் ஸ்ரீபாதத்தேறச் சென்று தண்டன் ஸமர்ப்பித்து 'பெரியநம்பியவர் திருநாட்டுக்கு எழுந்தருளினரே! ஆழ்வானுக்கும் திருக் கண்மலர் போயிற்றே!' என்று து:காபநோதநம் பண்ணி 'தேவரீரை யாகிலும்



ஸேவிக்கப் பெற்றோமே!' என்று சொல்லி எல்லாரும் ப்ரீதராயிருக்கிற காலத்திலே, திருச்சித்திரகூடம் அழிந்ததென்று சிலர் வந்து உடையவர்க்கு விண்ணப்பஞ்செய்ய, அதுகேட்டுத் து:காகுலராய் ஶோகித்துத் திருமுத்து உதிர்த்தருளி 'அங்குத்தையில் உத்ஸவ பேரம் திருப்பதிக்கு எழுந்தருளினர்' என்று கேட்டருளி, அந்த இழவெல்லாம் ஆறும்படி திருப்பதிக்கு எழுந்தருளி ஸ்ரீகோவிந்தராஜனை மூல பேரஸஹிதமாகத் திருப்ரதிஷ்டையும் பண்ணிவைத்து "தென்தில்லைச் சித்திரகூடத் தென்செல்வனை, மின்னி மழைதவழும் வேங்கடத் தென்வித்தகனை" என்றதுவே* பொய்மொழியொன்றில்லாத மெய்ம் மொழியாக இப்படி பலிப்பதே!' என்று அருளிச்செய்து இழவு தீர்ந்தருளி திருமலையேறித் திருவேங்கடமாமுகிலையும் திருவடி தொழுது அப்போதே மீண்டு திருமலையிறங்கித் திருத்தாழ்வாரையில் ஆழ்வார்களையும் ஸேவித்துப் புறப்பட்டு, பெருமாள் கோயிலேற எழுந்தருளிப் பேரருளாளரையுந் திருவடி தொழுது, மீண்டு பயணகதியிலே கோயிலுக்கு எழுந்தருளிப் புகுந்து நம்பெருமாளை ஸேவித்துத் தம்மடமே எழுந்தருளி ஸ்வாபிமாநாந்தர்ப்பூதர்க்குத் தென்றலும் சிறுதுளியும் போலே தர்ஶநதாத்பர்யார்த்தம் அருளிச்செய்யாநின்று கொண்டு ஸுகமே எழுந்தருளி யிருந்தார்.

அதின் மற்றைநாள், உடையவர் ஆழ்வானையழைத்து 'பேரருளாளர் அர்த்திதார்த்தபரிதாந தீக்ஷிதரா யிருப்பர்; நீர் அவரை 'கண் தந்தருளவேணும்' என்று ஒரு ஸ்தோத்ரம் விண்ணப்பஞ்செய்யும்,' என்று அருளிச்செய்ய, ஆழ்வானும் 'அடியேனுக்கு இக்கண் வேண்டா' என்று விண்ணப்பஞ்செய்ய, எம்பெருமானாரும் 'அப்படியன்று: சொல்லவேணும்' என்று பலநாளும் நிர்ப்பந்தித்து அருளிச்செய்தருள ஆழ்வானும் கண்ணழியாமல் வரதராஜஸ்தவத்தை அருளிச்செய்ய உபக்ரமித்து (க) "ஸ்வஸ்தி ஹஸ்திகிரி மஸ்தஶேகரஸ் ஸந்தநோது மயிஸந்ததம்ஹரி: - நிஸ்ஸமாப்யதிகமப்யதத்தயம் தேவமௌபநிஷதீ ஸரஸ்வதீ", என்று சொல்லி (உ) "நீலமேகநிபமஞ்ஜநபுஞ்ஜ ஶ்யாம குந்தலமநந்த ஶயந்த்வாம் - அப்ஜபாணிபதமம்புஜ

---

(க) 𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿 𑌹𑌸𑍍𑌤𑌿𑌗𑌿𑌰𑌿𑌮𑌸𑍍𑌤𑌶𑍇𑌖𑌰𑌸𑍍𑌸𑌂𑌤𑌨𑍋𑌤𑍁 𑌮𑌯𑌿𑌸𑌂𑌤𑌤𑌂 𑌹𑌰𑌿𑌃 । 𑌨𑌿𑌸𑍍𑌸𑌮𑌾𑌭𑍍𑌯𑌧𑌿𑌕𑌮𑌭𑍍𑌯𑌧𑌤𑍍𑌤 𑌯𑌂 𑌦𑍇𑌵𑌮𑍌𑌪𑌨𑌿𑌷𑌦𑍀 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀 ॥ (உ) 𑌨𑍀𑌲𑌮𑍇𑌘𑌨𑌿𑌭𑌮𑌞𑍍𑌜𑌨𑌪𑍁𑌞𑍍𑌜𑌶𑍍𑌯𑌾𑌮𑌕𑍁𑌨𑍍𑌤𑌲𑌮𑌨𑌨𑍍𑌤

நேத்ரம் நேத்ராஸாத்குரு கரீஶஸதா மே" என்ற இஶ்லோகத்தாலே 'ஸதா தர்ஶநம்பண்ண யோக்யமான அப்ராக்ருத திவ்யநேத்ரம் அடியேனுக்குத் தந்தருளவேணும்' என்று விஜ்ஞாபிக்க, அன்றிரவே ஆழ்வானுக்குப் பேரருளாளரும் 'தந்தோம்' என்று ஸ்வப்நமுகேந அருளிச்செய்ய, ஆழ்வானும் ப்ரத்யூஷகாலத்திலே பெரியப்ரீதியோடே எழுந்திருந்து அநுஷ்டாநத்தைச் செய்து வரதராஜஸ்தவத்தை நிறைவேற அருளிச்செய்து, உடையவர் ஸந்நிதிக்குச் சென்று தண்டனிட்டு 'தேவரீர்நியமநப்படியே வரதராஜஸ்தவத்தை விண்ணப்பஞ் செய்தேன்' என்று வரதராஜஸ்தவத்தை முற்ற விண்ணப்பஞ்செய்துகாட்ட, உடையவரும்கேட்டு உகந்தருளினவளவிலே, ஆழ்வானும் '*பிணியொழித்து அமரர்பெருவிசும்பருளும் பேரருளாளனுகையாலே அடியேன்கேட்டபடியே(க) "வைகுண்டேது பரேலோகே நித்யத்வேநவ்யவஸ்திதம் - பஶ்யந்திசஸதா தேவம் நேத்ரைர்ஜ்ஞாநேசாமரா:" என்று சொல்லப்படுகிற ஸ்ரீவைகுண்டநாதனை ஸதா தர்ஶநம் பண்ணுகிற அப்ராக்ருததிவ்யசக்ஷுஸ்ஸை ப்ரஸாதித்தருளினர்' என்ன, உடையவரும் 'அங்ஙனன்று: அங்கேறப் போவோம் வாரும்' என்று ஆழ்வானைக் கையைப் பிடித்துக்கொண்டு பெருமாள்கோயிலேற எழுந்தருளி, ஆழ்வான் அருளிச்செய்த வரதராஜஸ்தவத்தைப் பேரருளாளர்ஸந்நிதியிலே விண்ணப்பஞ்செய்து தலைக்கட்டுகிறபோது உடையவர் கார்யாந்தரத்தில்தாழ்க்க, ஸ்தவம் திருச்செவிசாத்திப் பேரருளாளரும் ப்ரஸந்நராய் உடையவர் வருவதற்குமுன்னே 'ஆழ்வான்! உமக்கு அபேக்ஷிதமென்?' என்று கேட்டருள, ஆழ்வானும் உடையவர் திருவுள்ளம்பற்றினதை வேண்டிக்கொள்ளாதே 'நான்பெற்றபேறு நாலூரானும் பெறவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, 'அப்படியே பெறக்கடவன்' என்று பெருமாளும் திருவாய்மலர்ந்தருளினவளவிலே, உடையவர்கேட்டுப் பதறி ஓடிவந்து திருவுள்ளம் உளைந்து பெருமாளைக்குறித்து 'ஸர்வஜ்ஞான

---

[illegible]

(க) 𑌵𑍈𑌕𑍁𑌣𑍍𑌠𑍇 𑌤𑍁 𑌪𑌰𑍇 𑌲𑍋𑌕𑍇 𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 । 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌚 𑌸𑌦𑌾 𑌦𑍇𑌵𑌂 𑌨𑍇𑌤𑍍𑌰𑍈𑌰𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌚𑌾𑌮𑌰𑌾𑌃 ॥



தேவரீர் இப்போது என்னினைவைத் தலைக்கட்டிற்றிலீரே! ஆழ்வான்! நீ ஸ்வதந்த்ரனாய் என்னினைவைத் தலைக்கட்டாதே அதிலங்கித்து, நான் வருவதற்குமுன்னே இப்படி செய்தாயே! என்று இருவரையும் வெறுத்து 'இனியென்!' என்று திகைத்து நிற்க, பேரருளாளப்பெருமாளும் 'நம்மையும் உம்மையும் காணுமிடத்துக் கட்கண்ணாலே காணக்கடவர்' என்று வரப்ரதாநம்பண்ணியருள, ஆழ்வானும் பெருமாளைத் தம் கட்கண்ணாலே கண்டு ஸேவித்துச் சாத்தின திவ்யாபரண திவ்யவிக்ரஹாவயவாதிகளை இவையிவையென்று குறித்துக்காட்டியருளி உடையவர்விக்ரஹத்தையும் ஸேவித்துக்காட்டியருள, இவரும் க்ருதார்த்தராய் ஆழ்வானுடன் மீண்டு கோயிலேற வெழுந்தருளிப் பூர்வம்போலே வ்யாக்யாநித்துக்கொண்டிருக்கச் செய்தே:—

நாச்சியார் திருமொழிவ்யாக்யாநத்தில் "நாறுநறும்பொழில்"என்கிறபாட்டு ப்ரஸ்துதமாக, 'ஆண்டாள்ப்ரார்த்தனையை நாம் தலைக்கட்டவேணும்' என்று அப்போதே புறப்பட்டுத் திருமாலிருஞ்சோலைமலைக்கு எழுந்தருளி' கோதை ப்ரார்த்தித்தபடியே, நூறுதடா நிறைந்த வெண்ணெயும், நூறுதடாநிறைந்த அக்காரவடிசிலும் பரிவுடனே *மாலிருஞ்சோலைநம்பிக்கு அமுதுசெய்வித்தருளி ஸ்ரீவில்லிபுத்தூரேற வெழுந்தருளி வடபெருங்கோயிலுடையானையும் ஸேவித்து நாச்சியார்திருமாளிகைக்கு எழுந்தருளி *ஆழ்வார் திருமகளாரை அடிவணங்கிநிற்க, கோதையும் குலமுனிவனைக் குறித்துத்தம் ப்ரார்த்தனையைத் தலைக்கட்டினதற்கு மிகவும்உகந்து 'நம்கோயிலண்ணர்' என்று அர்ச்சகமுகேந திருநாமம்ப்ரஸாதித்துத் தீர்த்தப்ரஸாதங்களும் ப்ரஸாதித்து விடைகொடுத்தருள, அங்கிலும் புறப்பட்டுத் திருநகரிக்கு எழுந்தருளி ஆழ்வாரையும் ஸேவித்துத் தீர்த்தப்ரஸாதமும்பெற்று, மீண்டு பயணகதியிலே கோயிலுக்கெழுந்தருளி ஸ்ரீபாதத்துமுதலிகளுக்குத் தர்ஶநார்த்தம் ப்ரஸாதித்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

இப்படி எழுந்தருளியிருக்கிற ஸ்ரீபாஷ்யகாரருடைய ஸ்ரீபாதத்திலே ஆஶ்ரயித்த முதலிகளுடைய திருமுடியடைவு எங்ஙனேயென்னில்:—கூரத்தாழ்வான், மாடபூசியாழ்வான், சேட்டலூர்ச்சிறியாழ்வான், அநந்தாழ்வான், நடாதூராழ்வான், எங்களாழ்வான், அரண

புரத்தாழ்வான், அகளங்கநாட்டாழ்வான், நெய்புண்டாழ்வான், உக்க
லாழ்வான், கோமடத்தாழ்வான், வேதாந்தியாழ்வான், நடுவிலாழ்
வான்,பிள்ளையாழ்வான், மிளகாழ்வான், காராஞ்சியாழ்வான், ஈயுண்ணி
யாழ்வான், கோயிலாழ்வான், திருக்கோவலூராழ்வான், திருமோகூ
ராழ்வான், முதலியாண்டான், பெரியாண்டான், சிறியாண்டான், அம்
மங்கியாண்டான், மாருதிப்பெரியாண்டான், மாறொன்றில்லாமாருதிச்
சிறியாண்டான், சோமாசியாண்டான், கந்தாடையாண்டான், ஈஸ்வ
ராண்டான், ஈயுண்ணியாண்டான், பிள்ளையாண்டான், குறிஞ்சியூர்ச்
சிறியாண்டான், ஆளவந்தாராண்டான், சீயாண்டான், கிடாம்பியாச்
சான், சிறியாச்சான், கணியனூர்ச்சிறியாச்சான், கொங்கிலாச்சான்,
ஈச்சம்பாடியாச்சான், என்னாச்சான், ஐயப்பிள்ளையாச்சான், தூய
பிள்ளையாச்சான், ஆச்சியாச்சான்; அருளாளப்பெருமாளெம்பெருமா
னார்; தொண்டனூர்நம்பி, மருதூர்நம்பி, † மழுவூர்நம்பி, சொட்டை
நம்பி, குரவைநம்பி, திருக்குறுங்குடிநம்பி, வங்கிப்புரத்துநம்பி, முடும்
பைநம்பி, ஸ்ரீபராங்குசநம்பி, ஸ்ரீவில்லிபுத்தூர்நம்பி, வடுகநம்பி, திருக்
குருகூர்நம்பி, கொமாண்டூர்ப்பிள்ளைநம்பி, ஸ்ரீபராசரபட்டர், ஸ்ரீபராங்
குசபட்டர், வரந்தரும்பெரியபெருமாள்பட்டர், அழகியமணவாளபட்
டர், ஸ்ரீவேதவ்யாஸபட்டர், சிறுப்பள்ளிதேவராஜபட்டர், கோவிந்த
பட்டர், திருவரங்கபட்டர், நம்பியாரில் ஸ்ரீரங்கராஜபட்டர், உள்
ளூரில் பெரியபெருமாள் பட்டர், சட்டம்பள்ளிச்சீயர், ஈச்சம்பாடி
சீயர், ஸ்ரீகுலசேகரசீயர், திருவெள்ளறைச்சீயர், ஆட்கொண்டவில்லி
சீயர், திருமழிசைச்சீயர், திருவாய்மொழிச்சீயர், திருநாராயணபுரச்
சீயர், ஸ்ரீஸாளக்ராமச்சீயர், கோவிந்தசீயர், திருமாலிருஞ்சோலைச்
சீயர், திருப்புட்குழிச்சீயர், திருக்குடந்தைச்சீயர், திருமுட்டஞ்சீயர்,
திருநின்றவூர்ச்சீயர்; திருநாராயணபுரத்தரையர், பெருமாள்கோயில்
பெருமாளரையர், ராஜநாராயணப்பெரும ளரையர், திருவரங்க
மாளிகை யரையர், திருவாய்மொழியரையர், பிள்ளைதிருநறையூரரை
யர், திருக்குறுங்குடியரையர், திருநகரியரையர், திருக்கண்ண
புரத்தரையர், திருமாலிருஞ்சோலையரையர், திருவநந்தபுரத்
தரையர், ராஜமஹேந்த்ரப்பெருமாளரையர், பிள்ளைவிழுப்புத்தூ
ரரையர், திருவேங்கடத்தரையர்; ஆட்கொண்டவம்மாள், அம்மங்கியம்

† 'மழூர்' என்று பாடாந்தரம்.



மாள், முடும்பையம்மாள், பருத்திக்கொல்லையம்மாள், உக்கலம்மாள்,
சொட்டையம்மாள்; ஆசூரிப்பெருமாள், கிடாம்பிப்பெருமாள், அம்மங்
கிப்பெருமாள், முனிப்பெருமாள், பட்டினப்பெருமாள்; திருமலை
நல்லான், எம்பார், காராஞ்சிஸோமயாஜியார், பெரியகோயில்வள்ளலார்,
அலங்காரவேங்கடவர்; திருக்குருகைப்பிரான்பிள்ளான், ஆர்க்காட்டுப்
பிள்ளான், இராமநுசப்பிள்ளான், திருநகரிப்பிள்ளான்; கோமடத்
தையன்; வைத்தமாநிதிச்சிறியப்பன், பெரியப்பன்; அணியரங்கத்த
முதனார், திருவரங்கத்தமுதனார்; கொமாண்டூரிளையவல்லி, கருந்தேவர்,
ஐம்பத்திருவர், எம்பெருமானார்செல்வப்பிள்ளை; சாற்றுதமுதலிகள்:—
ஸ்ரீகுலசேகரப்பெருமாள், பட்டர்பிரான்தாஸர், பகைவில்லிதாஸர்,
ஸ்ரீவில்லிபுத்தூர்தாஸர், ஸ்ரீநாராயணதாஸர், ஸ்ரீகோவர்த்தநதாஸர்,
திருவழுதிவளநாடுதாஸர், ஸ்ரீராமாநுஜதாஸர், பிள்ளையுறங்காவில்லி
தாஸர், வண்டர், சுண்டர், இராமாநுசவேளைக்காரர்; நத்தத்துமுதலி
கள் மூவர்திருநாமம்-திருவரங்கதாஸர், திருமாலிருஞ்சோலைதாஸர்.
வானமாமலைதாஸர்; கொங்கில்முதலிகள் மூவர்திருநாமம்-அழகியமண
வாளதாஸர், திருவேங்கடதாஸர், பேரருளாளதாஸர்; மழலைக்கூர்நத்
தத்தில் முதலிகள் மூவர்திருநாமம் - யதிவரசூடாமணிதாஸர், யதி
ராஜதாஸர், இளையாழ்வார்தாஸர்; பாண்டியநாட்டுமுதலிகள் மூவர்
திருநாமம் - மகிழலங்காரதாஸர், ஸ்ரீசடகோபதாஸர், பிள்ளைதிருவாய்
மொழிதாஸர்; ஸ்தாநத்தாரில் - லோகநாதப்ரஹ்மராயர், வீரஸுந்
தரப்ரஹ்மராயர், ஜகந்நாதப்ரஹ்மராயர், வீரராகவப்ரஹ்மராயர், பிள்
ளையுறங்கைபுடையார், திருமஞ்சனமெடுக்கும் தூயமுனிவேழம், ஸ்ரீ
பண்டாரங்காவல் திருவரங்கத்துமாளிகையார், ஆண்டவர், அரியவர்;
அம்மைமார்கள்:—திருவநந்தபுரத்தம்மை, திருவாட்டாற்றம்மை திரு
வண்பரிசாரத்தம்மை, மன்னனார்கோவில்போரேற்றம்மை, திருநறை
யூரம்மை, திருக்கண்ணபுரத்தம்மை, திருப்பதிஸ்ரீகார்யஞ் செய்யு
மம்மை, ஆண்டாளம்மை, நாயகத்தேவியார், துய்யபெருந்தேவியார்,
பெரியபெருந்தேவியார், சிறியபெருந்தேவியார், ஸ்ரீபெரும்பூதூர்
திருவரங்கம், திருக்குடந்தை துய்யவாயிரம், கொங்கில்பிராட்டியார்,
அத்துழாய்ம்மை, அம்மங்கியம்மை, கூரத்தாண்டாள், தேவகிப்பிராட்
டியார், யதிராஜவல்லியார், பங்கயச்செல்வியார், பொன்னாச்சியார்,
இன்னிளவஞ்சியார், சூடிக்கொடுத்தாள், திருப்பாவைபாடினாள்.

எம்பெருமானார் திருவடிகளிலே ஆஶ்ரயித்த முதலிகளான எழுபத்துநாலாசார்யர்களாரென்னில்:—ஆளவந்தார் குமாரர் சொட்டைநம்பி, அவர் குமாரர் என்னாச்சான், அவர்குமாரர் பிள்ளையப்பன் (௧), பெரியநம்பிகுமாரர் புண்டரீகர் (௨), திருக்கோட்டியூர் நம்பிகுமாரர் தெற்காழ்வான் (௩), திருமாலை யாண்டான்குமாரர் சுந்தரத்தோளுடையார் (௪), பெரியதிருமலைநம்பிகுமாரர் ராமாநுஜனும் பிள்ளை திருமலைநம்பியும் (௫), கூரத்தாழ்வான்குமாரர் பட்டரும் சீராமப்பிள்ளையும் (௬), முதலியாண்டான் அவர்குமாரர்கந்தாடையாண்டான் (௭), நடுவிலாழ்வான் (௮), கோமடத்தாழ்வான் (௯), திருக்கோவலூராழ்வான் (௧௦), திருமோகூராழ்வான், பிள்ளைப்பிள்ளையாழ்வான், நடாதூராழ்வான், எங்களாழ்வான், அநந்தாழ்வான், (௧௫), மிளகாழ்வான், நெய்யுண்டாழ்வான், சேட்டலூர்ச்சிறியாழ்வான், வேதாந்தியாழ்வான், கோயிலாழ்வான்(௨௦),உக்கலாழ்வான், அரணபுரத்தாழ்வான், எம்பார், கிடாம்பியாச்சான், கணியனூர்ச்சிறியாச்சான் (௨௫), ஈச்சம்பாடியாச்சான், கொங்கிலாச்சான், ஈச்சம்பாடிசீயர், திருமலைநல்லான், சட்டம்பள்ளிச்சீயர் (௩௦), திருவெள்ளறைச்சீயர், ஆட்கொண்டவில்லிசீயர், திருநகரிப்பிள்ளான், காராஞ்சிஸோமயாஜியார், அலங்காரவேங்கடவர் (௩௫), நம்பிகருந்தேவர், சிறுப்பள்ளிதேவராஜபட்டர், பிள்ளையுறந்தையுடையார், திருக்குருகைப்பிரான்பிள்ளான், பெரியகோயில்வள்ளலார் (௪௦), திருக்கண்ணபுரத்தரையர், ஆசூரிப்பெருமாள், முனிப்பெருமாள், அம்மங்கிப்பெருமாள், மாருதிப்பெரியாண்டான் (௪௫), மாறொன்றில்லாமாருதிச்சிறியாண்டான், ஸோமாசியாண்டான், சீயராண்டான். ஈஶ்வராண்டான், ஈயுண்ணிப்பிள்ளையாண்டான் (௫௦), பெரியாண்டான், சிறியாண்டான், குறிஞ்சியூர்ச்சிறியாண்டான், அம்மங்கியாண்டான், ஆளவந்தாராண்டான் (௫௫), அருளாளப்பெருமாளெம்பெருமானார், தொண்டனூர்நம்பி, மருதூர்நம்பி, மழூவூர் நம்பி, திருக்குறுங்குடிநம்பி (௬௦), குரவைநம்பி, முடும்பைநம்பி, வடுகநம்பி, வங்கிப்புரத்துநம்பி, ஸ்ரீபராங்குசநம்பி (௬௫), அம்மங்கியம்மாள், பருத்திக்கொல்லையம்மாள், உக்கலம்மாள், சொட்டையம்மாள், முடும்பையம்மாள் (௭௦), கொமாண்டூர்ப்பிள்ளை, கொமாண்டூரிளையவல்லி, கிடாம்பிப்பெருமாள், ஆர்க்காட்டுப்பிள்ளான் (௭௪).



(௧) "ஸம்ஸேவிதஸ்ஸம்யமிஸப்தஶத்யா பீடைஶ்சதுஸ்ஸப்ததி பிஸ்ஸமேதை: - அந்யைரநந்தைரபிவிஷ்ணுபக்தை ராஸ்தேZதிரங்கம் யதிஸார்வபௌம:" என்கிறபடியே எழுநூறு உத்தமாஶ்ரமிகளாலும், எழுபத்துநாலு ஸிம்ஹாஸநஸ்தரான ஆசார்யபுருஷர்களாலும், அஸங்க்யாதரான சாற்றினசாற்றாத முதலிகளாலும், † (பன்னீராயிரம் ஏகாங்கிகளாலும்,) முந்நூறுகொற்றியம்மைமார்களாலும், எண்ணிறந்த ராஜாக்களாலும் இப்படி அகிலராலும் ஸேவ்யமாநராய் இவ்வைஶ்வர்யத்துடனே (௨) "ஸ்ரீரங்கநாதோஜயது ஸ்ரீரங்க ஸ்ரீஶ்ச வர்த்ததாம்" என்று நம்பெருமாளை மங்களாஶாஸநம் பண்ணிக்கொண்டு ஸேவித்திருந்தார்.

இப்படியிருக்கிற உடையவர்திருவடிகளிலே நித்யகைங்கர்யம் பண்ணும் முதலிகள்:—கூரத்தாழ்வானும், முதலியாண்டானும், நடாதூராழ்வானும், பட்டவர்க்கமும் ஸ்ரீபாஷ்யத்திற்கு உசாத்துணையாயிருப்பர்கள்; அருளாளப்பெருமாளெம்பெருமானார் திருவாராதநம் செய்தருளுவர்; கிடாம்பிப்பெருமாளும், கிடாம்பியாச்சானும் திருமடைப்பள்ளிக்குக் கடவராயிருப்பர்கள்; வடுகநம்பி எண்ணெய்க்காப்புச்சாத்தியருளுவர்; கோமடத்துச்சிறியாழ்வான் கலசப்பானையையும், ஸ்ரீபாதரக்ஷையையும் எடுப்பர்; பிள்ளையுறங்காவில்லிதாஸர் கருவூலம் நோக்குவர்; அம்மங்கி பாலமுதுகாய்ச்சுவர்; உக்கலாழ்வான் ப்ரஸாதகல மெடுப்பர்; உக்கலம்மாள் திருவாலவட்டம்பரிமாறுவர்; மாருதிப்பெரியாண்டான் திருக்கைச்செம்புபிடிப்பர்; மாறொன்றில்லாமாருதிச்சிறியாண்டான் மடத்திற்கு அமுதுபடி, கறியமுது, நெய்யமுது முதலானவை நடத்திப்போருவர்; தூயமுனிவேழம் திருமஞ்சனமெடுப்பர்; திருவரங்கமாளிகையார் ஸ்ரீபண்டாரம் நோக்குவர்; வண்டரும் சுண்டரும் கைக்காயிரம்பொன்னுக்கு ராஜஸேவைபண்ணி மடத்திற்குத் திருக்கைவழக்காக்கியருள்வர்கள்; இராமாநுசவேளைக்காரர் திரு

---

(௧ 𑌸𑌂𑌸𑌵𑌿𑌤𑌸𑍍𑌸𑌂𑌯𑌮𑌿𑌸𑌪𑍍𑌤𑌶𑌤𑍍𑌯𑌾 𑌪𑍀𑌠𑍈𑌶𑍍𑌚𑌤𑍁𑌸𑍍𑌸𑌪𑍍𑌤𑌤𑌿𑌭𑌿𑌸𑍍𑌸𑌮𑍇𑌤𑍈𑌃। 𑌅𑌨𑍍𑌯𑍈𑌰𑌨𑌨𑍍𑌤𑍈𑌰𑌪𑌿 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌭𑌕𑍍𑌤𑍈𑌰𑌾𑌸𑍍𑌤𑍇𑌽𑌧𑌿𑌰𑌙𑍍𑌗𑌂 𑌯𑌤𑌿𑌸𑌾𑌰𑍍𑌵𑌭𑍌𑌮𑌃 ॥ (௨) 𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑌨𑌾𑌥𑍋𑌜𑌯𑌤𑍁 𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑌶𑍍𑌰𑍀𑌶𑍍𑌚𑌵𑌰𑍍𑌧𑌤𑌾𑌮𑍍 ॥

† குண்டலிதக்ரந்தம் சிலப்ரதிகளில் இல்லை.

மேனிக்காவலாய்ப் போருவர்; அகளங்கநாட்டாழ்வான் ப்ரதிபக்ஷநிரஸநம் பண்ணிப்போருவர்.

---

## வடுகநம்பி வைபவம்.

இவர்களில் வடுகநம்பி, 'எம்பெருமானார் திருவடிகளை உபாயோபேயம்' என்று விஸ்வஸித்து அவர் திருவடிநிலைகளையே திருவாராதநம்பண்ணிப்போருவர் இப்படியிருக்கிற வடுகநம்பி, ஒருபயணகதியிலே உடையவர் திருவாராதநத்தையும், தம்முடைய திருவாராதநத்தையும் சேரவெழுந்தருளப்பண்ணிக்கொண்டுவர, உடையவர் கண்டு 'வடுகா! இது என்செய்தாய்?' என்ன, இவரும் 'உங்கள்தேவரில் எங்கள்தேவருக்கு வந்தகுறை என்?' என்று விண்ணப்பஞ்செய்தார். வடுகநம்பி உடையவருடன் பெருமாளை ஸேவிக்கப்போனாலும் உடையவர்விக்ரஹத்தையே ஸேவித்துக்கொண்டு போருவர். ஒருநாள் எம்பெருமானார் இத்தைக்கண்டு 'பெரியபெருமாளுடைய திருக்கண்ணழகைப்பாராய்' என்ன, இவரும் பெருமாள்திருக்கண்ணழகையும் உடையவர்திருக்கண்ணழகையும் பார்த்து '*என்னமுதினைக் கண்டகண்கள் மற்றொன்றினைக்காணாவே' என்ன, உடையவரும் 'இதொன்றிருந்தபடி என்!' என்று உகந்து, வடுகநம்பியைப் பூர்ணகடாக்ஷஞ்செய்தருளினார். வடுகநம்பி எம்பெருமானார் அமுதுசெய்தருளித்தளிகைப்ரஸாதம் ப்ரஸாதித்தால், இரண்டு திருக்கைகளாலும் ஏற்றுக்கொண்டு ப்ரஸாதஸ்வீகாரம்பண்ணித் தம் திருமுடியிலே திருக்கைகளைத் தடவிக்கொண்டு போருவர்; இத்தை ஒருநாள் உடையவர் கண்டு கனக்கக்கோபித்து 'வடுகா! கையைக்கழுவிக்கொள்' என்ன, கழுவிக்கொண்டு, மற்றைநாள் நம்பெருமாள் அமுதுசெய்தருளுகிற காலத்தில் உடையவருடன் சென்றவளவிலே, உடையவரும் தமக்கு ப்ரஸாதித்த பெருமாள்ப்ரஸாதத்தைத் தாமும் ஸ்வீகரித்தருளி 'வடுகா! இதோ' என்று இவருக்கும் ப்ரஸாதிக்க, இவரும் இரண்டு திருக்கைகளாலும் ஏற்றுக்கொண்டு ப்ரஸாதப்பட்டு, ஸ்ரீவைஷ்ணவர் திருக்கைவிளக்கப்ரஸாதிக்கத்திருக்கை விளக்கிக்கொண்டார். உடையவர், இதுகண்டு 'இதென்செய்தாய்? வடுகா!' என்ன, 'நேற்று அருளிச்செய்தபடி செய்தேன்' என்றார். உடையவரும் இதுகேட்டு 'உமக்குத் தோற்றோம்' என்று அருளினார். வடுகநம்பி ஒருநாள் உடைய



வர்க்குப் பாங்காகப் பாலமுது காய்ச்சாநிற்க, பெருமாள் பெரிய திருநாளில் உடுத்து முடித்துப் பூண்டு புறப்பட்டருள, உடையவரும் பெருமாளை ஸேவிக்கப் புறப்பட்டு 'வடுகா! பெருமாளை ஸேவிக்க வா' என்ன, நம்பியும் 'உம்முடைய பெருமாளை ஸேவிக்கவந்தால், என்னுடையபெருமாளுக்குக் காயாநிற்கிற பாலமுது பொங்கிப்போம்; வரக்கூடாது' என்று அருளினார். வடுகநம்பியகத்தே பூர்வஸம்பந்திகளாயிருப்பார் சிலர் வந்து தங்கிப்போக, அகத்தையெல்லாம் சுற்றி ஸோதித்துத் தத்ஸ்ப்ருஷ்டபாண்டங்களையுமுடைத்துப்போகட்டுப் பூசி 'இதற்குப்ராயஸ்சித்தம்என்?' என்று விசாரித்து, முதலியாண்டான்புழைக்கடையில் கழித்துக்கிடந்த பாண்டங்களைக் கொண்டுபோய் விநியோகங் கொண்டார். ஆகையால், ஆசார்யஸம்பந்தமுடையார் செல்லைக்குட்பட்டதில் அபாவநத்வபுத்தியின்றியே ஸுபாவநத்வபுத்தி முற்றினபடி. வடுகநம்பி, உடையவர் ஸ்ரீபாததீர்த்த மல்லது மற்றொருவர் ஸ்ரீபாததீர்த்தங்கொள்ளார்; தீர்த்தநியதியும் இவர்க்கேயுள்ள தொன்றிறே. இப்படி தீர்த்தநியதியையுடையராய், அவர் ஸ்ரீபாததீர்த்தத்தை ஸ்ரீஸாளக்ராமத்திலே தாம்சேர்த்த தநமாகச் சேமித்துவைத்துப் பேணிக்கொண்டு உடையவர் திருவடிநிலைகளையே திருவாராதநமாகவுடையராய் அவைதன்னையே அங்கே ப்ரதிஷ்டிப்பித்து நோக்கிக்கொண்டுபோந்து, தம்சரமதசையிலும் தமக்கு அந்தரங்கரான சரமாதிகாரிகளுக்கும் தஞ்சமாகக் காட்டிக்கொடுத்து 'சேர்த்ததநமிது; வருந்தியும் பேணிக்கொண்டுபோருங்கோள்' என்று அடைக்கலங்காட்டிக் கொடுத்தருளினார்.

---

## அநந்தாழ்வான் வைபவம்.

அநந்தரம் அநந்தாழ்வான் இராமாநுசப்புத்தேரி கட்டிவைக்கும்போது மண்சுமவாநிற்க, பிள்ளைகளிலே யொருவர் சென்று கூடையை வாங்கப்புக, 'நான் அத்தைவிடில் இளைப்பன்; நீ இத்தைத்தொடில் இளைப்புதி' என்று அருளிச்செய்ய, 'இளைப்பாகாது' என்று பிள்ளை பின்னையுங் கூடையை வாங்கப்புக, 'ஆகில், நான் ஜீவிக்கிற ஜீவநத்தை வாங்கவேணுமோ? நீயும் வேணுமாகில் ஒருகூடையை வாங்கிக்கொண்டு சுமக்கமாட்டாயோ?' என்று அருளினார். பின்னையும் ஒருநாள் கர்ப்பவதியான தம்தேவிகள்மேலே மண்சுமத்தாநிற்க, இது

கண்டு திருவேங்கடமுடையான் ஒருபிள்ளையாய் எதிரேவந்து வாங்கிக்கொண்டுபோக, தேவிகள் கடுகவருமது கண்டு 'இதுவென்? கடுக வருகிறாய்' என்ன, அவளும் 'ஒருபிள்ளை எதிரேவந்து கூடையை வாங்கிக்கொண்டுபோகிறான்' என்றுசொல்ல, கேட்டு, உடனேசென்று கண்டு, 'கைங்கர்யவிக்நகாரீ! நீ கூடையைத் தொடாதேகொள்' என்று கொட்டெடுத்து அடிக்கப்புக, திருவேங்கடச்செல்வன் ஓடிச்சென்று கோயிலிலே புகுந்தானென்பர்கள். அநந்தாழ்வான், திருநந்தவநத்திலே திருப்படித்தாமமெடாநிற்க, திருக்கையிலே போகி ஸந்தஷ்டமாக, பின்னையும்போய்நீராடிக் கைங்கர்யத்திலே போர, ஸ்ரீபாதத்துக்குப் பரிவராயிருப்பார் 'விஷந்தீர்க்கப்பார்க்கவேண்டாவோ?' என்ன, 'வேண்டா, என்று அத்தை நிவர்த்திப்பித்தருளினார். பின்பு கோயிலேற வெழுந்தருளினவாறே, திருவேங்கடமுடையான் திருவாய் மலர்ந்து 'விஷந்தீர்க்க வேண்டாவென்று என்ன நினைத்துச் சொன்னீர்?' என்று கேட்டருள, இவரும் கடியுண்ட பாம்பு வலிதாகில் திருக்கோனேரியிலே தீர்த்தமாடித் திருவேங்கட முடையானை ஸேவிக்கிறேன்; கடித்தபாம்பு வலிதாகில் விரஜையிலே தீர்த்தமாடி ஸ்ரீவைகுண்டநாதனை ஸேவிக்கிறேனென்றிருந்தேன் என்று விண்ணப்பஞ் செய்தார். அநந்தாழ்வான் கோஸலராஜ்யத்திற்கு எழுந்தருளுகிறபோது, கட்டுத்திருப்போனகம் கட்டிக்கொண்டுபோய் அமுதுசெய்யப் புக்கவாறே, பட்டையடங்கலும் சிற்றெறும்பாய்க் கிடக்க, அத்தைக்கண்டு துணுக்கென்று தம் முதலிகளைப்பார்த்து '"எம்பெருமான் பொன்மலைமேலேதேனுமாவேனே" என்னுமவர்களிலே சிலராய்த்து இவர்கள்; இப்படியே கொண்டுபோய்த் திருமலையிலே வைத்து வாருங்கோள்' என்று அருளிச்செய்தார். அநந்தாழ்வான், யமுனைத்துறைவனிலே திருமாலைகட்டாநிற்க, திருவேங்கடமுடையான் அருள்பாடிடப் பேசாதேயிருந்து திருமாலை சேர்த்துக்கொண்டு உள்ளே புக்கவாறே, திருவேங்கடமுடையானும் 'நாம் அழைக்க, அநந்தாழ்வான்! நீர் வாராதிருந்தது என்?' என்று திருவுள்ளமாக, இவரும் 'கருமுகைமொட்டு வெடியாநிற்க எனக்குத் தேவரீரைக்கொண்டு கார்யமென்?' என்றார்; திருவேங்கடமுடையானும் 'ஆகில், நாம் உம்மை இங்குநின்றும் போகச்சொன்னோமாகில், நீர் செய்வதென்?' என்று திருவுள்ளமாக, இவரும் '"பரன்சென்றுசேர்



திருவேங்கடம்" என்கிறபடியே தேவரீரன்றோ வந்தேறிகள்; இவ்விடம் தேவரீரை ஆஶ்ரயித்தவர்களதன்றோ? தேவரீர் ஒரு கிழமை முற்பட்டிரித்தனை; இருவரும் திருமலையாழ்வாரை ஆஶ்ரயித்தோமித்தனையன்றோ?' என்று விண்ணப்பஞ்செய்தார்.

---

## கூரத்தாழ்வான் வைபவம்.

இப்படிப்பட்ட ஶிஷ்யஸம்பத்துடனே உடையவர் வாழ்ந்தருளுங்காலத்திலே, ஆழ்வான் எம்பெருமானாருக்கு விண்ணப்பஞ்செய்யாதே நம்பெருமாள் ஸந்நிதியிலே சென்று ஸேவித்துநிற்க, பெருமாளும் 'ஆழ்வான்! நீ ஒன்று சொல்லுவான்போலேயிருந்தாய்!' என்று திருவுள்ளமாயருள, இவரும் ஒருஶ்லோகத்தை விண்ணப்பஞ்செய்து உபந்யஸிக்க, பெருமாளும் 'உமக்கு வேண்டினதெல்லாந் தருகிறோம்; வேண்டிக்கொள்ளும்' என்று உகப்பின்மிகுதியாலே திருவாய் மலர்ந்தருளிச்செய்ய, ஆழ்வானும் 'நாயந்தே! அடியேனுக்குப் பண்டே எல்லாந்தந்தருளிற்றே' என்ன, பெருமாளும் 'அப்படியன்று: இப்போதும் வேண்டிக்கொள்ளும்; நம்பெண்டுகளாணை! நம்மிராமாநுசனாணையே! தருகிறோம்' என்று திருவுள்ளமாக, ஆழ்வானும் 'த்வதநுபவவிரோதியானஇச்ஶரீரத்தைவிடுவித்து த்வதநுபவத்தைத் தந்தருளவேணும்' என்று அபேக்ஷிக்க, பெருமாளும் 'அத்தையொழியச் சொல்லும்' என்ன, இவரும் '"தாம்வேண்டுங் காமமே காட்டும் கடிது" என்கிறபடியே அடியேன் அபேக்ஷித்ததையே ப்ரஸாதிக்கவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, 'ஆகில், உமக்கும் உம்முடைய ஸம்பந்தமுடையார்க்கும் பரமபதந் தந்தோம்' என்று அருளிச்செய்தருளி, திருப்பரியட்டமும் தளிகைப்ரஸாதமும் * பூந்தண்மாலைத் தண்டுழாயும் திருக்கைச்சிறப்பும் ப்ரஸாதித்து விடைகொடுத்தருளினார். ஆழ்வான் அர்ச்சிராதிமார்க்கத்திற்கு ப்ரதமாலங்காரம்போலேயிருக்கப் புறப்பட்டுத் தந்திருமாளிகையிலும் புகுராதே, ஆழ்வார் திருமாளிகையிலே புறவீடுவிட்டு எழுந்தருளியிருந்தார். உடையவரும் இத்தைக்கேட்டு, உடுத்த காஷாயத்தை வாங்கி ஆகாசத்தேற எறிந்து ஏற்றுக்கொள்ள, ஸ்ரீபாதத்துமுதலிகள் 'இதுவென்? ஜீயா!' என்றுகேட்க, உடையவரும் 'நமக்கு ஆழ்வான் ஸம்பந்தமுண்டே, பரமபதம் பெறலாமன்றோ?' என்று அருளிச்செய்தார். ஆகையாலே,

ஸதாசார்யஸம்பந்தத்தோடு ஸச்சிஷ்ய ஸம்பந்தத்தோடு வாசியில்லையிறே. உடையவரும், சோகாவிஷ்டராய், ஸ்ரீபாதத்து முதலிகளெல்லோரையுங் கூட்டிக்கொண்டு ஆழ்வானிருந்தவிடத்தேறச் சென்று 'ஆழ்வான்! நீர் இப்படி செய்தருளலாமோ?' என்ன, ஆழ்வானும் பேசாதேயிருந்தார். உடையவரும் 'ஆழ்வான்! உமக்கு முற்பட வேண்டும் அபிப்ராயம் என்? பேசாதிருக்கிறதென்? என்றுகேட்டருள, ஆழ்வானும் 'பரமபதத்தில் நடக்கும் அடைவுகேட்டுக்கு அஞ்சி' என்ன, உடையவரும் 'அதுசொல்லிக் காணீர்' என்ன, ஆழ்வானும் ''முடியுடைவானவர் முறைமுறை யெதிர்கொள்ள'' என்று முற்பட்டவர்கள் நித்யஸூரிகளுடன் பிற்பட்டவர்களை எதிர்கொள்ள வருவர்கள்; அது, அடியேன் பிற்படில் அடைவுகேடாம்' என்ன, உடையவர் அதுகேட்டு '(க) ''நஶாஸ்த்ரம்நைவசக்ரம:'' என்று அடைவுகெட்டிருக்கும் போகவிபூதியிலே நீர் அடைவு தேடுவதே! இதொருமோஷத்வம் இருந்தபடியே!' என்று போரவித்தராய்த் திருமுத்துகிர்த்து இவர்க்கு ஓடுகிற நினைவையறிந்து இவர் செவியிலே த்வயத்தை அருளிச்செய்ய, முதலிகளும் 'இப்போதாக இது வென்?' என்ன, 'நீங்கள் அறியீர்களோ? ராஜகுமாரனுக்குக் கர்ப்பூரநிகரமில்லாதபோது நாக்கு வறளுமாபோலே, இவர்க்கு த்வயமில்லாதபோது நாக்கு வறளும்' என்று அருளிச்செய்து, ஆழ்வானையணைத்துக்கொண்டு விம்மல்பொருமலாய்த் திருவுள்ள முடைகுலைப்பட்டு 'ஆழ்வான்! என்னுயிர்நிலையான உம்மையிழந்து எங்ஙனே தரிப்பேன்? என்னையும் உடன்கொண்டுபோகத் திருவுள்ளம்பெற்றிலீர்; நம்மை விட்டுப்போக உமக்கு ருசிப்பதே! பரமபதநிலயன் பக்கல்ஸங்கம் பும்ஸாந்த்ருஷ்டிசித்தாபஹாரியான பெருமாள்பக்கல் ஸங்கத்தையறுத்து உம்மை முந்துறப்பண்ணுவதே! பரமபதநாதனும் அங்குள்ள நித்யமுக்தரும் என்னபாக்யம் பண்ணினார்களோ? இங்கு உறங்குகிற பெருமாளும் இங்கு உள்ள நாங்களும் என்னபாபம் பண்ணினோமோ? உம்திருவுள்ளங் கலங்கச்சொல்லி என்ன ப்ரயோஜநமுண்டு? உம்பேற்றுக்கு நாம் விலக்கடியாகலாமோ? ஸுகமே நித்யவிபூதியேற எழுந்தருளீர்' என்று ஆழ்வான் திருமுதுகைத்தடவி அஞ்சலித்து விடைகொடுத்தருள, ஆழ்வானும் உடையவர் திருவடிகளிலே வேரற்றமரம்

(க) 𑌨𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂𑌨𑍈𑌵𑌚𑌕𑍍𑌰𑌮𑌃 ॥



போலே விழுந்துகிடக்க, உடையவரும் இரண்டு திருக்கைகளாலும் வாரியெடுக்க, எழுந்திருந்து உடையவர் திருவடிகளைத் தம்திருக்கண்களிலும் திருமார்பிலும் ஒற்றிக்கொண்டு ஸ்வஶிரோபூஷணமாக்கிக்கொண்டு தீர்த்தங்கொள்ள, உடையவரும் திருக்கைகளாலே ப்ரஸாதிக்க, ப்ரஸாதப்பட்டு (க) ''யோநித்யமச்யுதபதாம்புஜயுக்மருக்மவ்யாமோஹதஸ்ததிதராணித்ருணாயமேநே - அஸ்மத்குரோர்பகவதோஸ்யதயைகஸிந்தோ ராமாநுஜஸ்யசரணௌஶரணம் ப்ரபத்யே'' என்று அநுஸந்தித்துக்கொண்டு க்ருதாஞ்ஜலிபுடராய் 'இனி மடமேயெழுந்தருளவேணும்' என்று விண்ணப்பஞ்செய்து வடவாற்றங்கரையளவாக உடையவர் பின்னே செல்ல, 'ஆழ்வான்! இனி நில்லும்' என்ன, தண்டன் ஸமர்ப்பித்து மீண்டு ஆழ்வார் திருமாளிகைக்கு அருகிலிட்ட திருக்காவணத்தின் நடுவே எழுந்தருளியிருந்து ஆண்டாளைப் பார்த்து 'என் நினைத்திருக்கிறாய்?' என்ன, ஆண்டாளும் 'தேவரீர் திருவுள்ளத்தைப் பின் செல்லுகையொழிய அடியேனுக்கு வேறொரு நினைவுண்டோ?' என்று திருவடிகளிலே தண்டனிட்டு அஞ்சலித்து நிற்க, ஆழ்வானும் பட்டரையும் சீராமப்பிள்ளையையும் அழைத்தருளி 'பெருமாளும் நாச்சியாரும் எழுந்தருளியிருக்க, உங்களுக்கு ஒரு தாழ்வு இல்லை; நம்பெருமாள் பெற்று வளர்த்தாரென்ற அதுவே தஞ்சமென்றிராதே, எம்பெருமானார் திருவடிகளிலே தஞ்சமென்றிருங்கோள்; ஆண்டாள் சொன்னபடியே வர்த்தியுங்கோள்; பாகவத விஷயத்திலே த்ரிவித கரணங்களாலும் அபராதம் பண்ணாதே அவர்களை அநுவர்த்தித்துக்கொண்டு போருங்கோள்' என்று அருளிச்செய்து தம் திருவடிகளிலே விழுந்துகிடக்கிற பட்டரையும் சீராமப்பிள்ளையையும் எடுத்துத் திருக்கையாலே கண்ணீரைத் துடைத்து 'நீங்கள் ப்ராக்ருதஸம்பந்தத்தை நினைத்துக் க்லேசித்தீர்களாகில், உடையவர் திருவடிகளில் ஸம்பந்தத்தைத் தூஷித்தவர்களாவுதிகோள்; ஆத்ம ஸம்பந்தத்தை நினைத்து க்லேசித்தீர்களாகில் நம்முடைய * ஒழிக்க வொழியாத உறவை அறிந்திலீர்களாவுதிகோள்' என்று அவர்களைத் தேற்றி, கோயிலுக்கு நேரே

(க) 𑌯𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌚𑍍𑌯𑍁𑌤𑌪𑌦𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌯𑍁𑌗𑍍𑌮𑌰𑍁𑌕𑍍𑌮 𑌵𑍍𑌯𑌾𑌮𑍋𑌹𑌤𑌸𑍍𑌤𑌦𑌿𑌤𑌰𑌾𑌣𑌿 𑌤𑍃𑌣𑌾𑌯 𑌮𑍇𑌨𑍇 । 𑌅𑌸𑍍𑌮𑌦𑍍𑌗𑍁𑌰𑍋𑌰𑍍𑌭𑌗𑌵𑌤𑍋𑌽𑌸𑍍𑌯 𑌦𑌯𑌾𑌕𑌸𑌿𑌨𑍍𑌧𑍋𑌃 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌸𑍍𑌯 𑌚𑌰𑌣𑍌 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥

பிள்ளைப்பிள்ளையாழ்வான் மடியிலே திருமுடியையும், ஆண்டாள் மடியிலே திருவடிகளையும் வைத்துக்கொண்டு உடையவர் திருவடிகளை த்யானித்துக்கொண்டு அன்றே திருநாட்டுக்கு எழுந்தருளினர்.

உடையவரும் இதுகேட்டு அங்கேற எழுந்தருளி ஆழ்வான் குமாரரான பட்டரைப் பார்த்து 'க்லேஶியாதே' என்று அருளிச்செய்து 'ஆழ்வானுக்குச் சரம கைங்கர்யத்தைச் செய்யும்' என்ன, பட்டரும் பெருமாள் பரிகரத்தையும், அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்களையுங் கூட்டிக்கொண்டு (க) "ஸர்வகர்மணிஸம்ஸக்தே காயத்ர்யா வைஷ்ணவேநச - நாராயணாநுவாகேந ஸ்நாபயேத்ப்ரஸாதத:" என்கிறபடியே ஆழ்வானை நீராடப் பண்ணிக் கேஶவாதியான திருநாமங்களைச் சாத்தி அலங்கரித்து ஸ்ரீசூர்ண பரிபாலநம்பண்ணி எழுந்தருளுவித்துக்கொண்டுபோய், (உ) "கேஶவார்ப்பிதஸர்வாங்கம் ஶரீரம்மங்களாவஹம் - நவ்ருதா தாஹயேத்விப்ரோப்ரஹ்மமேத விதிம் விநா" என்றும், (ங) "ப்ரஹ்மமேதவ்ரதம் ப்ரோக்தம் முநிபிர்ப்ரஹ்மதத்பரை: - மஹாபாகவதாநாம்ஹி கர்த்தவ்யமித முத்தமம்" என்றும் '*கேசவன் தமரான முமுக்ஷுக்கள் திருமேனிவிட்டால் அத்திருமேனியை ப்ரஹ்மமேதஸம்ஸ்காரமொழிய வேறொன்றால் ஸம்ஸ்கரிக்க வொண்ணாது' என்கையாலே, மஹாபாகவதோத்தமரான கூரத்தாழ்வானைப் பட்டர் ப்ரஹ்மமேதவிதிப்படி ஸம்ஸ்கரித்துப் பள்ளிபடுத்தருளிப் பன்னிரண்டு நாளும் செய்யுங் க்ருத்யங்களை ஶாஸ்த்ரோக்த ப்ரகாரமாகச் செய்தருளி, உடையவரையும் முதலிகளையும் எழுந்தருளுவித்துக்கொண்டுபோய் (ச) "நாத:பரதரந்தீர்த்தம் வைஷ்ணவாங்க்ரியுஜலாச்சுபம்- தேஷாம்பாதோதகம்புண்யங்கங்காமபிபுநாதிஹி" என்னும் வைபவமுடைய பாகவத ஸ்ரீபாததீர்த்தத்தையும் ஸ்வீகரித்தருளி, (க) "ஶூபாதெளத்விஜவர்யைஶ்ச ஸர்வஸம்பச்சுபாவஹம்-ஸகஸ்ரஶாகாத்யயநம் காரயேத்வைதிகோத்தம: - அஶூபாந்தே விஶேஷேண த்ராமிடப்ரஹ்மஸம்ஹிதா அத்யேதவ்யா த்விஜவரைராமேளசாகவிநாஶிநீ" என்றும், (உ) "வ்ருத்தாவாதௌ க்ஷயே சாந்தே த்ராமிடப்ரஹ்மஸம்ஹிதா - அத்யேதவ்யாத் விஜஶ்ரேஷ்டைராத்யாதீதஸஹஸ்ரகீ" என்றும் ப்ரஹ்மாண்ட புராணத்திலே சொல்லுகிறபடியே திருவாய்மொழி ப்ரபந்தத்தை அநுஸந்தித்து, அநந்தரம் புஷ்பாஞ்ஜலிபண்ணிச் சாத்தியருளி, (ங) "யதா துஷ்யதி தேவேஶோ மஹாபாகவதார்ச்சநாத் - ததாநதுஷ்யதே விஷ்ணுர் விதி வத்ஸ்வார்ச்சநாதபி" என்று சொல்லுகையாலே ஸ்ரீவைஷ்ணவர்களையும் அமுது செய்யப்பண்ணி ஸத்கரித்தருளினர்.

கூரத்தாழ்வான் திருநக்ஷத்ரம், தையில் ஹஸ்தம்.

அவர் தனியன்- (ச) "ஸ்ரீவத்ஸசிஹ்நமிஶ்ரேப்யோ நமஉக்திமதீமஹே - யதுக்தயஸ்த்ரயீகண்டே யாந்திமங்களஸூத்ரதாம்," (ரு) "ஸ்ரீமத்கூரகுலாதீஶம் ஸ்ரீவத்ஸாங்கமுபாஸ்மஹே- அக்ர்யம்யதீந்த்ரஶிஷ்யாணாம் ஆத்யம் வேதாந்த வேதிநாம்".

---

(க) ஸர்வகர்மணி ஸம்ஸக்தே காயத்ர்யா வைஷ்ணவேந ச । நாராயணாநுவாகேந ஸ்நாபயேத் ப்ரஸாதத: ॥

(உ) கேஶவார்பித ஸர்வாங்கம் ஶரீரம் மங்களாவஹம் । ந வ்ருதா தாஹயேத் விப்ரோ ப்ரஹ்மமேத விதிம் விநா ॥

(ங) ப்ரஹ்மமேத வ்ரதம் ப்ரோக்தம் முநிபிர் ப்ரஹ்மதத்பரை: । மஹாபாகவதாநாம் ஹி கர்த்தவ்யமிதமுத்தமம் ॥

(ச) நாத: பரதரம் தீர்த்தம் வைஷ்ணவாங்க்ரிஜலாச்சுபம் । தேஷாம் பாதோதகம் புண்யம் கங்காமபி புநாதி ஹி ॥

(க) ஶூபாதௌ த்விஜவர்யைஶ்ச ஸர்வஸம்பச்சுபாவஹம் । ஸகஸ்ரஶாகாத்யயநம் காரயேத் வைதிகோத்தம: ॥ அஶூபாந்தே விஶேஷேண த்ராமிடப்ரஹ்மஸம்ஹிதா । அத்யேதவ்யா த்விஜவரைராமேளசாகவிநாஶிநீ ॥

(உ) வ்ருத்தாவாதௌ க்ஷயே சாந்தே த்ராமிடப்ரஹ்மஸம்ஹிதா । அத்யேதவ்யா த்விஜஶ்ரேஷ்டை ராத்யாதீதஸஹஸ்ரகீ ॥

(ங) யதா துஷ்யதி தேவேஶோ மஹாபாகவதார்ச்சநாத் । ததா ந துஷ்யதே விஷ்ணுர் விதிவத்ஸ்வார்ச்சநாதபி ॥

(ச) ஸ்ரீவத்ஸசிஹ்நமிஶ்ரேப்யோ நம உக்திமதீமஹே । யதுக்தயஸ்த்ரயீகண்டே யாந்தி மங்களஸூத்ரதாம் ॥

(ரு) ஸ்ரீமத்கூரகுலாதீஶம் ஸ்ரீவத்ஸாங்கமுபாஸ்மஹே । அக்ர்யம் யதீந்த்ரஶிஷ்யாணாம் ஆத்யம் வேதாந்தவேதிநாம் ॥

அதின்மற்றைநாள், உடையவர் பட்டரை அழைத்துக்கொண்டு நம்பெருமாளை ஸேவிக்க வெழுந்தருளி அழகிய மணவாளன் திருமண்டபத்திலே தண்டன் ஸமர்ப்பித்துப் பட்டரைக் கையைப் பிடித்துக் கொண்டுபோய்ப் பெரியபெருமாள் திருவடிகளிலே காட்டிக்கொடுக்க, பெருமாளும் மீளவும் மஞ்சள் நீர் குடித்துப் பட்டரை விஶேஷித்துப் புத்ரஸ்வீகாரம் பண்ணியருளி அர்ச்சகமுகேந திருவாய் மலர்ந்து "ஆழ்வானை யிழந்தோமே!' என்று வ்யாகுலப்படாதே, நம்மை ஆழ்வானாக நினைத்திரும்' என்று அருளிச்செய்தருள, இத்தைக் கண்டு உடையவரும் ஸந்தோஷித்துப் பெருமாளைக் குறித்து 'தேவரீர் இவர்க்கு ஆயுஸ்ஸை ப்ரஸாதித்தருளும்; அடியேன் வித்யைகளை அப்யஸிப்பிக்கிறேன்' என்று விண்ணப்பஞ்செய்ய, பெருமாளும் வாய் திறவாதே தீர்த்தப்ரஸாதமும் ப்ரஸாதித்து விடைகொடுத்தருள, உடையவரும் பட்டரை யழைத்துக்கொண்டு மீண்டு தம்படமேயெழுந்தருளி, எம்பாரைப் பார்த்து 'இவரை நம்தர்ஶநப்ரவர்த்தகராம்படி ஶாஸ்த்ராப்யாஸம் பண்ணுவியும்' என்று அவர் கையிலே காட்டிக்கொடுத்து முதலிகளுக்கு பகவத்விஷயம் அருளிச்செய்யா நின்றுகொண்டு எழுந்தருளியிருந்தார்.

இப்படி யிருக்கிற உடையவர்ப்ரபாவத்தைப் பெரியபெருமாளும், திருவேங்கடமுடையானும், பேரருளாளரும், திருநாராயணப் பெருமாளும், அழகரும், திருக்குறுங்குடி நம்பியும், நம்மாழ்வாரும், ஸ்ரீமந்நாதமுனிகளும், ஆளவந்தாரும், பெரிய நம்பியும், திருக்கோட்டியூர் நம்பியும், திருமலை நம்பியும், திருமலையாண்டானும், ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையரும், மற்றும் ஸ்ரீபாதத்து முதலிகளும், ப்ரஹ்மராக்ஷஸ்ஸும், ஊமையும் வெளியிட்டார்கள்.

பெரியபெருமாள் வெளியிட்டபடி எங்ஙனே என்னில்:—*திருப்பவளச் செவ்வாய் திறந்து 'உபயவிபூத்யைஶ்வர்யத்தையும் உமக்கும் உம்முடையார்க்குந் தந்தோம்' என்று அருளிச் செய்கையாலும்;

அப்பன் வெளியிட்டபடி எங்ஙனேயென்னில்:—'உமக்கும் உம்முடையார்க்கும் உபயவிபூத்யைஶ்வர்யத்தையும் தந்தோமென்று நம் தெற்கு வீட்டிலே சொன்னோமே' என்று திருப்பவளவாய் திறந்து அருளிச் செய்கையாலும்; உடையவர் திருமலைக்கு எழுந்தருளும் போது ததிவிக்ரயம்பண்ணுமவளான தும்பையூர்க்கொண்டி யென்பா



ளொரு கோபாங்கனை வந்து க்ரயத்ரவ்யார்த்தமாக உடையவரையும் முதலிகளையும் ஸேவித்து நிற்க, உடையவர் அவளுக்குத் தளிகை ப்ரஸாதம் ப்ரஸாதிக்கச் சொல்லிக் கிடாம்பியாச்சானை நியமித்தருள, அவரும் அப்படியே செய்தருள, அவர் ப்ரஸாதித்த ஸ்ரீபாததீர்த்த தளிகை ப்ரஸாதங்களாலே ஸம்யக்ஜ்ஞாநோதயமுண்டாய் 'அடியேனுக்குத் ததிமூல்யம் தரவேண்டா; மோக்ஷம் தரவேணும்' என்று ப்ரார்த்திக்க, உடையவர் 'அதற்குத் திருவேங்கடமுடையான் கடவர்' என்ன, அவளும் 'அதற்குத் தேவரீர் ஒருசிறுமுறி தரவேணும்' என்ன உடையவரும் உகந்து தரப்பெற்றுத் திருமலையேறி த்வரித்து வரக்கண்டு திருவேங்கடவர் எதிரே சென்று அச்சிறுமுறியை வாங்கி வாசித்துக்கொண்டு திருநாடு தந்தருளுகையாலும்;

பேரருளாளர் வெளியிட்டபடி எங்ஙனேயென்னில்:—அருளாளப் பெருமாளெம்பெருமானாருடனே தர்க்கித்தபோது உத்தரஞ் சொல்லமாட்டாமல் பேரருளாளர்க்கு விண்ணப்பஞ்செய்ய, அப்போது 'இன்னபடி உத்தரஞ் சொல்லும்' என்று *செங்கனி வாய் முறுவல் தோன்ற அருளிச் செய்கையாலும்; யாதவப்ரகாசனுக்கு ஸ்வப்நமுகேந 'நம்இராமாநுஜனை ஒரு ப்ரதக்ஷிணம் பண்ணி த்ரிதண்டி ஸந்யாஸியாவாய்' என்று அருளிச் செய்கையாலும்;

திருநாராயணப் பெருமாள் வெளியிட்டபடி எங்ஙனேயென்னில்:—தொண்டனூரிலே ஸ்வப்நங்காட்டியருளி அழைத்துக்கொண்டு போய் அவருக்கு ப்ரஸந்நராயருளுகையாலும், 'என்னுடைய செல்வப்பிள்ளையன்றோ!' என்று எடுத்தணைக்கும்படி யதிராஜகுமாரரான ஸௌஶீல்யத்தாலும்;

அழகர் வெளியிட்டபடி எங்ஙனேயென்னில் :—ஒருநாள் திருவோலக்கத்திலே 'நம் இராமாநுசனடியார்க்கு அருள்பாடு' என்று திருவுள்ளமாயருள, 'நாயன் தே!' என்று ஆசார்யர்களெல்லாரும் எழுந்தருளித் திருவடிகளிலே ஸேவித்து நிற்க, பெரியநம்பிவழியிற் சிலர் வாராமலிருக்க, அழகரும் 'அதுவென்? நீங்கள் நாம் அழைக்க வாராதிருப்பானென்?' என்று கேட்டருள, அவர்களும் "இராமாநுசனடியார்க்கு அருள்பாடு' என்று தேவரீர் திருவுள்ளமாயருளுகையாலே, அவர் எங்களுக்கு ஶிஷ்யரென்று வாராதிருந்தோம்' என்று விண்ணப்பஞ்செய்ய, அழகரும் 'தஶரதவஸுதேவாதிகள் நம்மைப் புத்ரப்ராதி

பத்தி பண்ணினுப்போலே யிருந்தது, நீங்கள் இராமாநுசனை ஶிஷ்ய ப்ரதிபத்தி பண்ணினது' என்றும்: பின்பு ஒருநாள் கிடாம்பியாச்சானை அருளப்பாடிட்டு 'ஒன்று சொல்லாய்' என்று திருவுள்ளமாயருள, 'அவரும் (க) "அபராதஸஹஸ்ரபாஜநம்" என்று தொடங்கி (உ) "அகதிம்" என்று சொல்ல, அழகரும் 'நம் இராமாநுசனையுடையனுயிருந்து 'அகதிம்' என்று சொல்லப் பெறுய்' என்றும் திருவுள்ளமா யருளுகையாலும்;

திருக்குறுங்குடிநம்பி வெளியிட்டபடி எங்ஙனே யென்னில்:— உடையவரும் முதலிகளும் நம்பியை ஸேவிக்க எழுந்தருளினவளவிலே திருக்குறுங்குடி நம்பியும் திருவோலக்கமாக எழுந்தருளியிருந்து உடையவரை அருளப்பாடிட்டு '(ங) "பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி தவ சார்ஜுந" என்கிறபடியே இத்தனை ஜந்மம் பிறந்தோமென்று தெரியாது: அஜ்ஜந்மங்களிலே ஒருவரும் நமக்கு அகப்படாமல், (ச) "ஆஸுரீம் யோநிமாபந்நா மூடா ஜந்மநி ஜந்மநி - மாமப்ராப்யைவ கௌந்தேய ததோ யாந்த்யதமாங்கதிம்" என்கிறபடியே ஆஸுரப்ரக்ருதிகளாய்ப் பிறந்து பிறந்த ஜந்மங்கள்தோறும் மூடராய் நம்மை வந்து கிட்டாதே அதமமான கதியை யடைந்தார்கள்; இவ்வாத்மாக்களெல்லாரும் உமக்கு அகப்பட்ட விரகை நமக்குச் சொல்லவேணும்' என்று திருவுள்ளமாக, உடையவரும் 'தேவரீர் கேட்குங் க்ரமத்திலே கேட்கில் சொல்லுகிறேன்' என்ன, நம்பியும் திவ்யஸிம்ஹாஸநத்தினின்றும் இறங்கியருளி நிலத்திலே ஒரு ரத்நகம்பளத்திலே எழுந்தருளியிருந்து இவருக்கு ஒரு திவ்யஸிம்ஹாஸநத்தை இட்டு 'இனிச் சொல்லும்' என்ன, உடையவரும் அவ்வாஸநத்திலே பெரிய நம்பி ஆளவந்தார் எழுந்தருளி யிருக்கிறுர்களாக பாவித்துக்கொண்டு அவர் திருச்செவியிலே ஹிதத்தை விண்ணப்பஞ்செய்ய, அன்று தொடங்கி நம்பியும் 'நம் இராமாநுசனுடையோம்' என்று அருளிச்செய்கையாலும்;

(க) அபராதஸஹஸ்ரபாஜநம் ॥ (உ) அகதிம் ॥ (ங) பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி தவ சார்ஜுந ॥

(ச) ஆஸுரீம் யோநிமாபந்நா மூடா ஜந்மநி ஜந்மநி । மாமப்ராப்யைவ கௌந்தேய ததோ யாந்த்யதமாங்கதிம் ॥



நம்மாழ்வார் வெளியிட்டபடி எங்ஙனே யென்னில்:—லோகத்தைத் திருத்துவதாக எம்பெருமானோடே மார்தட்டி "நின்கண் வேட்கை யெழுவிப்பனே" என்றவர்தாமே "ஏபாவம் பரமே!" என்று க்லேஶித்து அகலிடத்தை யாராய்ந்து அது திருத்தலாவதே!" 'ஈஶ்வரன் அவதரித்துத் திருத்த வொண்ணுத லோகத்தை நாமோ திருத்தக்கடவோம்?' என்று கைவாங்கி, "யானுமென்னெஞ்சு மிசைந்தொழிந்தோம்" என்று தாமும் தம்திருவுள்ளமுமேயாய், த்ரிகாலஜ்ஞராகையாலே "கலியுங் கெடும் கண்டுகொண்மின்" என்று உடையவர் திருவவதாரத்தைக் குறித்து அருளிச்செய்கையாலும்;

ஸ்ரீமந்நாதமுனிகள் வெளியிட்டபடி எங்ஙனே யென்னில்:— "குளப்படியிலே தேங்கினல் குருவி குடித்துப்போம். வீரநாராயணபுரத்தேரியிலே தேங்கினல் நாடு விளையும்' என்று அருளிச்செய்தது, உடையவர் திருவவதாரத்தைக் குறித்து' என்னுமிடம், எம்பார் 'பெரிய பெருமாளாகிற பெருங்கடலிலே ஆழ்வாராகிற காளமேகம் படிந்து, தத்கல்யாணகுணம்ருதஜலத்தைப் பருகிவந்து, நாதமுனிகளாகிற மஹாமேருவிலே வர்ஷித்து, உய்யக்கொண்டார் மணக்கால்நம்பியாகிற அருவிகளாலே யிறங்கி, ஆளவந்தாராகிற பேராற்றிலே கூடி, † (பெரியநம்பியாகிற வாய்க்காலாலே புறப்பட்டு), எம்பெருமானாராகிற பெரிய ஏரியிலே வந்து தேங்கி, நம் ஆசார்யர்களாகிற மதகுகளாலே புறப்பட்டு, இஸ்ஸம்ஸாரமாகிற கழனிக்கு ஏறிப் பாய்கிறது' என்று அருளிச்செய்த விடத்தில் ஒத்திருக்கையாலும்;

ஆளவந்தார் வெளியிட்டபடி எங்ஙனேயென்னில்:—'இம்மஹாநுபாவன் இத் தர்ஶநத்திலே புகுந்தானாகிலோ!' என்றும், 'இவன் முதல்வன் ஆம்' என்றும் அருளிச் செய்கையாலும்; சரமதஶையில் † (சரமவிக்ரஹஸேவையிலே குஞ்சிதஸ்வாங்குளித்ரயபோசநத்தாலும்;)

பெரியநம்பி வெளியிட்டபடி எங்ஙனே யென்னில்:— அத்துழாயும் தாமுமாக எழுந்தருளியிருக்கச்செய்தே, உடையவரும் முதலிகளுமாக எழுந்தருள, பெரியநம்பி யெழுந்திருந்து தண்டனிட, 'இதுவென்! உடையவர் உமக்கு ஶிஷ்யரன்றோ? இப்படி செய்யலாமோ?'

† குண்டலிதக்ரந்தங்கள் சிலபிரதிகளில் இல்லை.

என்று அத்துழாய் விண்ணப்பஞ்செய்ய, நம்பியும் 'அத் தாளுக்குத் தக்க தலைகாண் இது' என்றும்; ஒருநாள் உடையவரும் முதலிகளுமாக நீராடி எழுந்தருளும்போது பெரியநம்பி எதிரே கண்டு தாளுந் தடக்கையுங் கூப்பித் தண்டனிட, உடையவரும் அஞ்சலித்து க்ருபை செய்து எழுந்தருள, இத்தை முதலிகள் கண்டு 'இதுவென்? ஜீயா!' என்ன, உடையவரும் 'இப்போது அவரிஷ்டம் அநுவர்த்திக்கையன்றோ நமக்கு உள்ளது?' என்ன, முதலிகளும் பெரியநம்பி ஸந்நிதியில் சென்று 'உடையவரை நீர் ஸாஷ்டாங்கப்ரணாமம் பண்ணுகைக்கு அடியென்?' என்று கேட்க, நம்பியும் 'ஆளவந்தாரும் முதலிகளுமென்று இருந்தேன்' என்ன, அவர்களும் 'அதுக்கு நிதானமென்?' என்ன, நம்பியும் 'ஆளவந்தாருக்குப் பின்பு அகிலார்த்தஸ்திதிபூர்த்தியுள்ளது இவர்க்கேயாகையாலே, ஸதாசார்யஸந்நிதியோடு ஸச்சிஷ்யஸந்நிதியோடு வாசியில்லாதமையாலே ஸேவித்தேன்' என்று அருளிச்செய்து, தம் குமாரர் புண்டரீகாக்ஷரையும் உடையவர் திருவடிகளிலே ஆஸ்ரயிப்பிக்கையாலும்;

திருக்கோட்டியூர்நம்பி வெளியிட்டபடி எங்ஙனே யென்னில்:— தாம் திருமந்த்ரார்த்தம் ப்ரஸாதிக்கும்போது 'ஆருக்கும் சொல்லாதே கொள்ளும்' என்று ஆஜ்ஞாபித்தருளிச்செய்ய, இவரும் அதைத் தெற்காழ்வார் திருவோலக்கத்திலே தூளிதாநமாக ஸர்வர்க்கும் அருளிச்செய்ய, நம்பியும் அத்தைக்கேட்டுக் குபிதராய் உடையவரை யழைத்து 'ஆசார்யாஜ்ஞாதிலங்கநத்துக்கு பலம் எது?' என்ன, உடையவரும் 'நரகமே பலம்' என்ன, நம்பியும் 'ஆகில் அறிந்திருந்தும் செய்வானென்?' என்ன, இவரும் 'அடியேனொருவனுமன்றோ நரகம்புகுவது; தேவரீர் ஸம்பந்தத்தாலே இவ்வாத்மாக்களெல்லாம் உஜ்ஜீவிக்குமென்றுசொன்னேன்' என்றுவிண்ணப்பஞ்செய்ய, நம்பியும் பேர ப்ரீதராய் 'எம்பெருமானாரே! வாரும்' என்றுஎடுத்து அணைத்துக்கொண்டு 'இத்தப்பாஸம்ருத்தி நமக்கு இல்லையாய்விட்டதே! அவரோ நீர்!' என்று அருளிச்செய்து 'இன்றுமுதல் எம்பெருமானார் தர்ஸநமென்னுங்கோள்' என்று சொல்லி, தம் குமாரர் தெற்காழ்வாரையும் அவர் திருவடிகளிலே ஆஸ்ரயிப்பிக்கையாலும்;

திருமலைநம்பி வெளியிட்டபடி எங்ஙனே யென்னில்:—உடையவர் திருமலைக்கு எழுந்தருளும்போது திருப்பரியட்டப்பாறையள



வாக எதிரே சென்று தீர்த்தப்ரஸாதம் ப்ரஸாதிக்க, உடையவரும் ஸ்வீகரித்தருளி, நம்பியைப்பார்த்து 'தேவரீர் எழுந்தருளவேணுமோ? வேறே சிறியார்களில்லையோ?' என்ன, நம்பியும் 'நாலுதிருவீதியிலும் ஆராய்ந்தவிடத்தில் என்னிலும் சிறியாரைக் கண்டிலேன்' என்கையாலும்; எம்பாரை உடையவருக்கு உதக பூர்வகமாகக் கொடுக்கையாலும்; தம் குமாரர் இராமநுசனையும், பிள்ளை திருமலை நம்பியையும் அவர் திருவடிகளிலே ஆஸ்ரயிப்பிக்கையாலும்;

திருமாலையாண்டான் வெளியிட்டபடி எங்ஙனே யென்னில்:— அவர்தம் பக்கல் திருவாய்மொழிக்கு அர்த்தங்கேளா நிற்க, "அறியாக் காலத்துள்ளே" என்கிற பாட்டுக்கு இவர் உபகாரஸ்ம்ருதிபரமாக விஸேஷார்த்தம் அருளிச்செய்ய, ஆண்டானும் 'இது விஸ்வாமித்ர ஸ்ருஷ்டி' என்று அருளிச்செய்கை தவிர்ந்திருக்க, பின்பு திருக்கோட்டியூர்நம்பி எழுந்தருளி ஆண்டானை யழைத்து 'ஸாந்தீபநிபக்கலிலே க்ருஷ்ணன் அத்யயநம் பண்ணினாப்போலேகாணும், இவர் உம்முடைய பக்கல் திருவாய்மொழி கேட்கிறது; இவ்விரண்டர்த்தமும் ஆளவந்தார் அருளிச்செய்தார்காணும்' என்ன, உடையவரும் பின்னையும் ஒரு அர்த்தப்ரஸ்தாவத்திலே 'ஆளவந்தார் இப்படி அருளிச்செய்யார்' என்ன, ஆண்டானும் 'நீர் ஆளவந்தாரைக் கண்ணாலும் காணாதிருக்க, இப்படி யருளிச்செய்யாரென்கைக்கு ஹேதுவென்?' என்ன, இவரும் 'நான் ஆளவந்தாருக்கு ஏகலவ்யனன்றோ?' என்ன, ஆண்டான் தண்டனிட்டு 'இதுவும் ஒரு திருவவதாரமோ?' என்று அருளிச்செய்து, தம் குமாரர் சுந்தரத்தோளுடையானை உவடயவர் திருவடிகளிலே ஆஸ்ரயிப்பிக்கையாலும்;

திருவரங்கப் பெருமாளரையர் வெளியிட்டபடி எங்ஙனே யென்னில்:—தம்பக்கல் உடையவர் ஆறுமாஸம் ஸேவித்திருந்து பாங்காக மஞ்சட்காப்பு அரைத்துச்சாத்தி நீராடப் பண்ணுவித்தருள திருவரங்கப்பெருமாளரையரும் ப்ரீதராய் 'என்னுடைய ஸர்வஸ்வத்தையும் கொள்ளைகொள்ளவோ நீர் இப்படி செய்தது?' என்று அருளிச்செய்து பஞ்சமோபாயநிஷ்டையை அருளிச்செய்து, தம்குமாரர் திருவாய்மொழியரையரையும் உடையவர் திருவடிகளிலே ஆஸ்ரயிப்பிக்கையாலும்;

வடுகநம்பி, ஆசார்யபதமென்று தனியே ஒருபதமுண்டு; அதுவுள்ளது எம்பெருமானார்க்கேயாகையாலே, எல்லார்க்கும் எம்பெருமானார் திருவடிகளொழிய வேறு உபாயோபேயமில்லை; அவர் திருவடிகளே தஞ்சமென்றிருங்கோள்' என்று அருளிச்செய்தருளுவர்.

கணியனூர்ச்சிறியாச்சான், ஸசேலஸ்நாநபூர்வகமாக ஆர்த்தியோடே உபஸந்நராய்த்திவ்யாஜ்ஞையிட்டு 'எம்பெருமானார் திருவடிகளொழிய வேறு தஞ்சமில்லை' என்றருளினார்; †(எங்ஙனேயென்னில், —''ஸத்யம் ஸத்யம்புநஸ் ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு: ஸஏவஸர்வலோகாநாமுத்தர்த்தா நாத்ர ஸம்ஶய:'' என்று இவர் தாமே பெரிய பெருமாள் திருவோலக்கத்திலே ஸ்ரீஶடகோபனைத் தம்திருமுடியிலே நிறுத்திக்கொண்டு அருளிச்செய்தருளினார்.)

அருளாளப் பெருமாளெம்பெருமானார், தம்திருவடிகளிலே ஆஶ்ரயித்த எச்சான் அநந்தாழ்வான் தொண்டனூர்நம்பி மருதூர்நம்பி இவர்களுக்கு ஹிதோபதேஶஞ்செய்து 'உடையவர் குருவியின்கழுத்திலே ‡ பனங்காயைக் கட்டினாற்போலே செய்தருளினார்: நீங்கள் எம்பெருமானார் திருவடிகளை தஞ்சமென் றிருங்கோள்' என்று அருளிச்செய்தருளினார்.

பிள்ளைப்பிள்ளையாழ்வான் ஆழ்வான் திருவடிகளிலே ஆஶ்ரயித்தவளவில், ஆழ்வான் 'ஆசார்யதக்ஷிணையாக த்ரிவிதகரணங்களையும் பரிஹரித்துக்கொண்டு பாகவதர்களிடத்தே ஆநுகூல்யைகரஸராய்ப் போரும்' என்று அருளிச்செய்ய; அவரும் 'இது பரிஹரித்து முடியாது' என்று பயப்பட்டு முசித்துக்கிடக்க, ஆழ்வான் அவரையழைத்து, 'எதிரியைக்குத்தினால் எதிரி கூடக்குத்தும்; ராஜதண்டமும் வரும்; ஆகையாலே, காயிகாபராதம் செய்யக்கூடாது; (க) ''யதீச்சவஶீகர்த்தும் ஜகதேகநகர்மணா-பாபவாதஸஹேய்ப்யோ காஸ்சரந்தீர்நிவாரய'' என்கிறபடியே பாபவாதஞ் சொல்லுகிற வாக்கு ஒன்றையும் பரிஹரித்துக் கொள்ளும்' என்று அருளிச்செய்து, 'இனி மநஸ்ஸாலே நினைத்தீராகில் அநுதபித்து, 'இது எம்பெருமான்திருவுள்ளத்தே படாதபடி எம்பெருமானார்திருவடிகளே தஞ்சமென் றிரும்' என்று அருளிச் செய்தருளினார்.

மிளகாழ்வான், முதலியாண்டானை 'என்னோடே தர்க்கிக்க வாரும்' என்ன, முதலியாண்டானும் 'நீர் தோற்றீராகில் செய்வதென்?'

(க) யதீஶ்வஶிவஶீகதாஞ்ஜமஹெகெந கடுணா । வராவ வாஜவஸெஷ்ஹெமாஸுரஶீ நிவாரயா ॥

† குண்டலிதக்ரந்தம் பலப்ரதிகளிற் காணப்படவில்லை.

‡ 'திண்டுக்கல்லை' என்று பலப்ரதிகளில் காண்கிறது



என்ன, மிளகாழ்வானும் 'நான் தோற்றேனாகில் உம்மை என்தோளிலே சுமந்துகொண்டு போகிறேன்' என்ன, அநந்தரம் உபயரும் தர்க்கிக்க, மிளகாழ்வான் தோற்று முதலியாண்டானை ஸ்ரீபாதந்தாங்கிக்கொண்டு சுற்றிடம் போய் 'இனி அடியேனை இரங்கியருளவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, ஆண்டானும் உடையவர் திருவடிகளிலே காட்டிக்கொடுத்து ஆஶ்ரயிப்பித்தருளி 'எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென்றிரும்' என்று அருளிச்செய்தருளினார்.

எம்பார், பட்டரைப்பார்த்து 'நம்பெருமாள் நம்மைப் புத்ரஸ்வீகாரம் பண்ணியருளினார்; நாம் ஆழ்வானுடையபிள்ளை; அகிலஶாஸ்த்ரங்களையும் அதிகரித்தோம்' என்கிற மேன்மையைநினைத்து இறுமாந்திராதே, எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென் றிரும்' என்று அருளிச்செய்தருளினார்.

பட்டர், நஞ்சீயரைப்பார்த்து ''வேதாந்தியென்கிற பேரையுடையோம்; நம்முடையபக்கல் ஆஶ்ரயித்தோம்: நமக்கு பஹுத்ரவ்யத்தை ஆசார்யதக்ஷிணையாகத் தந்தோம்' என்று இறுமாந்திராதே, எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென்றிரும்' என்று அருளிச்செய்தருளினார்.

நஞ்சீயர், நம்பிள்ளையைப் பார்த்து ''லோகாசார்ய ரென்கிற பேரையுடையோம்; திருவாய்மொழிக்கு பொருள்சொல்ல வல்லோம்' என்று இறுமாந்திராதே 'எம்பெருமானார்திருவடிகளே தஞ்சமென் றிரும்' என்று அருளிச்செய்தருளினார்.

நம்பிள்ளை, † சிவக்கரைப்பிள்ளையைத் திருக்கையைப் பிடித்துக்கொண்டு எழுந்தருளாநிற்க, ஒருஸ்ரீவைஷ்ணவர் நம்பிள்ளை திருமாளிகைத்திருவிடை கழியிலே கண்வளராநிற்க, சிவக்கரைப்பிள்ளை அவரை 'காலை முடக்கும்' என்ன, நம்பிள்ளையும் '*மயர்வறமதிநலமருளப்பெற்ற ஆழ்வார் ''திருத்தாள்'' என்று அருளிச்செய்ய, நீரோ காலென்பீர்?' என்று அவர்கையை விட்டருள, அவரும் சிவக்கரையிலே போயிருந்து, பின்பு ஶோகார்த்தராய் இரண்டாற்றுக்கு நடுவே நின்று கவணிலே கல்லைவைத்து வீசினாற்போலே தள்ளிவிட்டருளிற்றே; இனி அடியேனுக்குக் கதியென்?' என்று பிள்ளைக்கு விண்ணப்பஞ்செய்துவரக் காட்டியருள, நம்பிள்ளையும் 'உமக்கு ஒரு

† 'சிவிக்கரை' என்றும் சிலப்ரதிகளிற் காண்கிறது.

குறையுமில்லை; எம்பெருமானார் திருவடிகளை தஞ்சமென்றிருப்பது' என்று அருளிச்செய்து போகவிட்டு அழைத்து க்ருபைசெய்தருளினார்.

திருக்குருகைப்பிரான் பிள்ளான், சிறுப்புத்தூரிலே எழுந்தருளியிருக்கச்செய்தே, சோமாசியாண்டான் பிள்ளான் ஸ்ரீபாதத்திலே மூன்றுஉரு ஸ்ரீபாஷ்யம் வாசித்தருளி மீண்டு எழுந்தருளும்போது, சோமாசியாண்டான் அநுவர்த்தித்து 'அடியேனிருக்கிற தேசம் இது வாயிருந்தது; அடியேனுக்குத்தஞ்சமாயிருப்பதொன்று அருளிச்செய்ய வேணும்' என்ன, பிள்ளானும் ஆண்டானைக்குறித்து 'நீர் பாட்டப்ரபாகரமீமாம்ஸை இவை இத்தனைக்கும்பொருள் சொல்லவல்ல கர்த்தா; ஸ்ரீபாஷ்யத்துக்கு ப்ரவர்த்தகர், என்று மேன்மை பாராட்டித் திரியாதே, எம்பெருமானார் திருவடிகளே சரணமென்றிரும்' என்று அருளினார்.

கோமடத்துப்பிள்ளான், தம் ஸ்ரீபாதத்தில் ‡ காக்கைப்பாடியாச்சான்பிள்ளை மூன்றுஉரு ஸ்ரீபாஷ்யம்வாசித்து அத்தால் மிகவும் மேன்மையையுடையரா யிருக்குமது கண்டு, இவர்க்கு இம்முகத்தாலே அபசாரம் வருமென்று அஞ்சி 'எம்பெருமானார் திருவடிகளை தஞ்சமென்றிரும், என்று அருளிச் செய்தருளினார்.

எங்களாழ்வான், காக்கைப்பாடியாச்சான்பிள்ளையைப் பார்த்து 'உம்மைப் பெருமாள் முனிந்தருளினபோது என்நினைத்திருந்தீர் ?' என்று கேட்டருள, அவரும் 'எம்பெருமானார் திருவடிகளை தஞ்சமென் றிருந்தேன்' என்று விண்ணப்பஞ் செய்தார்.

நடாதூரம்மாள் ஸ்ரீபாதத்திலே பத்துப் பன்னிரண்டு திருநாமம் ஸ்ரீபாஷ்யம் வாசிக்கிறபோது, அம்மாள், அவர்களுக்கு ஸ்ரீபாஷ்யத்தை உபந்யஸித்துக்காட்டியருள, அவர்களும் 'பக்தி குரூபாயமாக இருந்தது' என்ன, பின்பு அவரும் ப்ரபத்யுபாயத்தை அருளிச்செய்து காட்டியருள, 'பக்தியிலும் ப்ரபத்திதான் அரிதாயிருந்தது' என்று அவர்கள் விண்ணப்பஞ் செய்ய, 'ஆகில், எம்பெருமானார் திருவடிகளே தஞ்ச மென்று விஶ்வஸித்து உஜ்ஜீவியுங்கோள்' என்றருளினார்.

‡ 'காக்கையாடியாச்சான்பிள்ளை' என்று ப்ரதிபேதம்.



நடுவிலாழ்வான், திருநாராயணபுரத்திலே யிருந்து ஸ்ரீபாஷ்யம் வாசிப்பிக்கிற காலத்திலே, வங்கிப்புரத்தாய்ச்சி சொட்டையம்மாளுள்ளிட்டார் ஸ்ரீபாஷ்யத்தைக் கேட்டு, 'இது அரிதாயிருந்தது' என்ன, 'ஆகில்' இது அருளிச்செய்தருளின எம்பெருமானார் திருவடிகளை தஞ்ச மென்றிருங்கோள்' என்றருளினார்.

ஸ்ரீவேதவ்யாஸபட்டர், திருநாராயணபுரத்திலே எம்பெருமானார் திருமுன்பே கோஷ்டிபண்ணி ஸ்ரீபாஷ்யத்தை உபந்யஸிக்க, 'இது கங்காப்ரவாஹமா யிருந்தது; எங்களால் அவகாஹிக்கப் போகாது என்று ஐம்பத்திருவர் விண்ணப்பஞ் செய்ய, பட்டரும் 'ஆகில், உங்கள் * குலதெய்வமான எம்பெருமானார்திருவடிகளை தஞ்சமென்று உஜ்ஜீவியுங்கோள்' என்றருளினார்.

நடுவில்திருவீதிப்பிள்ளை, வெள்ளைக்குளத்து ஆனைகாத்தசிங்கர் முன்பேகோஷ்டிபண்ணி ஸ்ரீபாஷ்யம் உபந்யஸிக்க, தம்ஶிஷ்யரான இளையவழகியார் எழுந்திருந்து 'இது கங்காப்ரவாஹமாயிருந்தது; என்னால் அவகாஹிக்கப் போகாது' என்று விண்ணப்பஞ்செய்ய, 'ஆகில், எம்பெருமானார்திருவடிகளே ஶரணமென்றிரும்' என்று அருளிச்செய்தருளினார்.

வடுகநம்பி, 'எம்பெருமானார் திருவடிகளே ஶரணம், நம்பெருமாள் திருவடிகளே ஶரணம்' என்று இரண்டையும் சேர அநுஸந்திக்கும் ஆழ்வானையும், ஆண்டானையும் 'இருகரையர்' என்பர். வடுகநம்பி எம்பெருமானார்திருவடிகளே ஶரண மென்னுமாபோலேயும், பட்டர் அழகியமணவாளப்பெருமாள் திருவடிகளே ஶரணமென்னுமாபோலேயும், அநந்தாழ்வான் திருவேங்கடமுடையான் திருவடிகளே ஶரண மென்னுமாபோலேயும், திருக்கச்சிநம்பி பேரருளாளர்திருவடிகளே ஶரண மென்னுமா போலேயும், எம்பெருமானார் செல்வப்பிள்ளை திருவடிகளே ஶரண மென்னுமா போலேயும் ஒருவர்க்கும் இசைந்திராது.

ப்ரஹ்மரக்ஷஸ்ஸு வெளியிட்டபடி எங்ஙனேயென்னில்:-யாதவப்ரகாசனுக்கு உடையவரைக்காட்டி, 'இவர் நித்யஸூரிகளில் தலைவர்' என்று சொல்லுகையாலே;

ஊமை வெளியிட்டபடி எங்ஙனேயென்னில்:—''பெருமாள் கோயிலிலே பாகவதஜந்மத்தில் பிறந்தானொருபிள்ளை ஐந்தாறுவயஸ்

ஸளவாக ஊமையாயிருந்து, பின்பு இரண்டுஸம்வத்ஸரம் காணு திருந்து, பின்பு எல்லாருங்காணவந்து வார்த்தைசொல்ல வல்லனாக, இவ்வாஶ்சர்யத்தைக் கண்டு எல்லாரும் திரளாகவிருந்து ஊமையைப் பார்த்து 'நீ இத்தனைநாளும் எங்கேறப்போனாய்?' என்று கேட்க, அவனும் 'நான் க்ஷீராப்திக்குப் போனேன்' என்ன, இவர்களும் 'அங்கு விஶேஷமென்?' என்றுகேட்க, 'ஸ்ரீஸேநாபதியாழ்வான் உடையவராய் வந்து அவதரித்தருளினா ரென்று ஒருவிஶேஷம்' என்ற வநந்தரம் அவனைக் கண்டதில்லை" என்று ஸ்ரீபகவத்ஸேநாபதி ஜீயர் அருளிச்செய்கையாலே;

இப்படி இவர்ப்ரபாவத்தை எல்லாரும் ப்ரகாஶிப்பித்தார்கள்.

ஸ்ரீமந்நாதமுநிகள் தொடக்கமான ஆசார்யர்களிற்காட்டில் இவருக்கு ப்ராதாந்யங்கொள்ளும்படி எங்ஙனேயென்னில்:—பகவதவதாரங்களெல்லாம் ஒத்திருக்கச்செய்தே ஸ்ரீராமக்ருஷ்ணாத்யவதாரங்களுக்கு ப்ராதாந்ய முண்டானாப்போலேயும், திவ்யதேஶங்களெல்லாம் ஒத்திருக்கச்செய்தேகோயில்திருமலை பெருமாள்கோயில் திருநாராயணபுரங்களுக்கு ப்ராதாந்ய முண்டானாப்போலேயும், ரிஷிகளெல்லாரிலும் வைத்துக்கொண்டு வ்யாஸ பராஶர ஶுகஶௌநக நாரதாதிகளுக்கு ப்ராதாந்ய முண்டானாப்போலேயும், ஆழ்வார்களெல்லாரும் ஒத்திருக்க நம்மாழ்வாருக்கு ப்ராதாந்யமுண்டானாப்போலேயும், ஆசார்யர்களெல்லாரிலும் வைத்துக்கொண்டு உடையவருக்கு ப்ராதாந்யங்கொள்ளத் தட்டில்லையிறே.

ஸ்ரீராமாவதாரத்திற்கு ப்ராதாந்யமெத்தாலேயென்னில்:—பெருமாள் அபயப்ரதாநம் அருளிச்செய்தும், குஹப்பெருமாளுடன் *சீரணிந்த தோழமைகொண்டும், பெரியஉடையாரை ப்ரஹ்மமேதத்தாலே ஸம்ஸ்கரித்துப்பள்ளிபடுத்தும், ஸ்ரீ ஶபரி கையாலே ஸம்யக்போஜநஞ் செய்தும், திருவடியுடன் "உண்பன்நானென்ற ஒண்பொருள்" என்னும்படி ஸஹபோஜநம்பண்ணியும் போருகையாலே; ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்துக்கு ப்ராதாந்யம் எத்தாலேயென்னில்:-கீதோபநிஷத்தை வெளியிட்டுச் சரமஶ்லோகம் அருளிச்செய்கையாலும், பீஷ்ம த்ரோணாதிகளுடைய க்ருஹங்களை விட்டு ஸ்ரீவிதுரர்திருமாளிகையிலே (க) "ஶுசீநிகுணவந்திச" என்கிற பாவநத்வ போக்யத்வங்

(க) ஶுசீநிகுணவந்தி ச ॥



களையுடைத்தா யிருந்ததென்று அமுதுசெய்து (க) "த்விஷதந்நம் நபோக்தவ்யம்" என்று முறைகூறுகிற சோற்றை நிராகரித்து இது தன்னையே ஶத்ருகோஷ்டியிலும் ப்ரஸித்த மாக்குகையாலும்.

கோயிலுக்கு ப்ராதாந்யம் எத்தாலேயென்னில்:—திருப்பாணாழ்வாரோடு கலந்து பரிமாறுகையாலே; திருமலைக்கு ப்ராதாந்யம் எத்தாலேயென்னில்:—குறும்பறுத்த நம்பிக்கும் தொண்டைமான்சக்ரவர்த்திக்கும் வார்த்தை யருளிச்செய்து கலந்து பரிமாறுகையாலே; பெருமாள்கோயிலுக்கு ப்ராதாந்யம் எத்தாலே யென்னில்:—திருக்கச்சிநம்பியோடு ஸ்மிதபூர்வகமாக ஸம்பாஷணம்பண்ணி மிகவுங் கலந்து பரிமாறுகையாலே; திருநாராயணபுரத்திற்கு ப்ராதாந்யம் எத்தாலே என்னில்:—ஶுசரிதநபன் பக்கல் ஆதராதிஶயத்தாலே தந்நிவேதிதாந்நத்தை ஸம்யக்போஜநம்பண்ணி அவனை வாழ்விக்கையாலும், யதிராஜ புத்ரரான ஸௌஶீல்யத்தாலும்.

வேதவ்யாஸபகவானுக்கு ப்ரதாந்யம்:—வேதங்களை விஸ்தரிப்பித்து, அதில் கர்ம காண்டத்தை விட்டு ப்ரஹ்மபாகத்திலே புருஷஸூக்த சாந்தோக்ய வாஜஸநேய தைத்ரீயக ஶ்வேதாஶ்வதர மஹோபநிஷதாதிகளிலும், தது பப்ரும்ஹணங்களான புராணேதிஹாஸாதிகளிலும், (உ) "ஸத்யம் ஸத்யம்" என்று தொடங்கி (ந) "நதைவம் கேஶவாத்பரம்" என்று ஸத்ய புரஸ்ஸரமாக பரதத்வ நிர்ணயம் பண்ணுகையாலே; ஸ்ரீபராஶரப்ரஹ்மரிஷிக்கு ப்ராதாந்யம்:—(ச) "புராணேஷுசவைஷ்ணவம்" என்னும்படியான ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலே சிதசிதீஶ்வர தத்வங்களை விஶதமாகப்ரதிபாதித்த உதாரன்' என்று ஆளவந்தார் நமஸ்கரித்தருளுகையாலே; ஸ்ரீஶுக ப்ரஹ்ம ரிஷிக்கு ப்ராதாந்யம்:—பரிக்ஷித்து ராஜாவுக்கு ஸ்ரீபாகவதத்திலே தத்வ நிர்ணயத்தைப் பண்ணி (ரு) "ஶுகோமுக்த:" என்னும் படியான வைபவத்தை யுடையராகையாலே; ஸ்ரீஶௌநகபகவானுக்கு ப்ராதாந்யம்:—ஸ்ரீவிஷ்ணு தர்மத்திலே பலவிடங்களிலும் தத்வநிர்ணயம் பண்ணுகையாலே; ஸ்ரீநாரத பகவானுக்கு ப்ராதாந்யம்.—

(க) த்விஷதந்நம் நபோக்தவ்யம் ॥ (உ) ஸத்யம் ஸத்யம் ॥ (ந) நதைவம் கேஶவாத்பரம் ॥ (ச) புராணேஷு ச வைஷ்ணவம் ॥ (ரு) ஶுகோ முக்த: ॥

(ரு) "புஜயுகமபிசிஹ்நைரங்கிதம் யஸ்ய விஷ்ணோ:பரமபுருஷநாம்நாம் கீர்த்தநம் யஸ்யவாசி—ருஜுதரமபிபுண்ட்ரம்மஸ்தகே யஸ்ய கண்டே ஸரஸிஜமணிமாலா யஸ்யதஸ்யாஸ்மிதாஸ:" என்று இப்படிப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் தாஸனென்று சொல்லுகையாலும், பெரியாழ்வாரும் "நேசமுடைநாரதனார்" என்னும்படியான வைபவத்தாலும்.

ஆழ்வார்களில் நம்மாழ்வாருக்கு ப்ராதாந்யம் எத்தாலே யென்னில்:—ஸஹஸ்ரஶாகையான நாலுவேதத்தினுடைய பொருள்களையும் நாலு ப்ரபந்த முகத்தாலே ஸர்வாதிகாரமாக்குகையாலும், நாதமுநிகளுக்கு ப்ரஸந்நராய் அருளிச் செயல் நாலாயிரத்தையும் ப்ரஸாதித்து மற்றுமுண்டான தர்ஶநதாத்பர்யங்களையெல்லாம் அருளிச்செய்து தர்ஶநத்தைநிலைநிறுத்துகையாலும், †("பயிலுஞ்சுடரொளி', நெடுமாற்கடிமை.' முதலான இடங்களில் வர்ணாத்யுத்கர்ஷங்களை நிராகரித்து வேதப்ரமாணமுக்ய தாத்பர்யமான ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணம் எல்லாருக்குந் தெரியும்படி அருளிச் செய்கையாலும்).

உடையவர், கீழ்ச்சொன்னவர்களைப் போலன்றிக்கே பெருமாள் அருளிச்செய்த அபயப்ரதாநத்தை விஶதமாக்குகையாலும், கீதாசார்யன் அருளிச்செய்த சரமஶ்லோகார்த்தத்தை ப்ரகாஶிப்பிக்கையாலும், ரிஷிப்ரோக்தமான ப்ரமாணங்களுக்கு அர்த்தமருளிச்செய்கையாலும், மற்றையாழ்வார்கள் அருளிச்செய்த திவ்ய ப்ரபந்தங்களை அங்கோபாங்கமாகவுடைய திருவாய்மொழி ப்ரபந்தத்தை அர்த்தவத்தாக விஶதமாக ப்ரகாஶிப்பிக்கையாலும், நாதமுனிகள் அருளிச்செய்த திவ்ய ப்ரபந்தங்களையும் ஆளவந்தார் அருளிச்செய்த திவ்ய ப்ரபந்தங்களையுங் கொண்டு ஸூத்ர வாக்யங்களை ஒருங்க விட்டும், ஸ்ரீபாஷ்யம் கத்யத்ரயம் முதலான ப்ரபந்தங்களை அருளிச்செய்தும், நிகிலகுமதிஸமயங்களையும் நிராகரித்து, ஸ்வமதஸ்தாபநம் பண்ணி 'எம்பெருமானார்தர்ஶநம்' என்னும்படி பண்ணுகையாலும்,

(ரு) புஜயுகமபிசிஹ்நைரங்கிதம் யஸ்ய விஷ்ணோ: பரமபுருஷநாம்நாம் கீர்த்தநம் யஸ்ய வாசி । ருஜுதரமபிபுண்ட்ரம் மஸ்தகே யஸ்ய கண்டே ஸரஸிஜமணிமாலா யஸ்ய தஸ்யாஸ்மி தாஸ: ॥

† குண்டலித க்ரந்தம் சில ஸ்ரீகோசங்களிற்காணப்படுகிறது.



இவர் எல்லாரிலும் ப்ரதாநரிறே. இனி, ஶிஷ்யர்களான கூரத்தாழ்வான் முதலியாண்டான் தொடக்கமானவர்களில் ப்ரதாநரென்னுமிடம் சொல்ல வேண்டாவிறே. ஆக, ப்ராதாந்யம் சொல்லிற்றாய்த்து.

(க)"ஆசார்யவாந்புருஷோவேத"என்றும், (உ) "பாபிஷ்ட:க்ஷத்ரபந்துஶ்ச புண்டரீகஶ்சபுண்யக்ருத் - ஆசார்யவத்தயாமுக்தௌ தஸ்மாதாசார்யவாந்பவேத்" என்றும், (ங) ஆசார்யஸ்ஸஹரிஸ்ஸாக்ஷாச் சரரூபீ நஸம்ஶய:" என்றும், (ச) "ஆசிநோதிஹிஶாஸ்த்ரார்த்தா நாசாரேஸ்தா பயத்யபி - ஸ்வயமாசரதேயஸ்து ஆசார்யஸ்ஸோऽபிதீயதே" என்றும், (ரு) "குஶப்தஸ்த்வந்தகாரஸ்ஸ்யாத் ருஶப்தஸ்தந்நிரோதக: - அந்தகாரநிரோதி த்வாத் குருரித்யபிதீயதே" என்றும், (சா) "குருரேவபரம்ப்ரஹ்ம குருரேவபராகதி:- குருரேவபராவித்யா குருரேவ பரந்தநம்-குருரேவபர:காமோ குருரேவ பராயணம் - யஸ்மாத்ததுபதேஷ்டாऽஸௌ தஸ்மாத்குருதரோகுரு:" என்றும், "பீதகவாடைப் பிரானார் பிரம குருவாகி வந்து" என்றும், "தேனார் கமலத் திருமாமகள் கொழுநன் - தானே குருவாகி" என்றும், ஈஶ்வரன் தானாகச் சொல்லப்பட்ட ஆசார்யனே, ஶிஷ்யனுக்கு (எ) "தஸ்யவைகுண்டதுக்தாப்தி த்வாரகாஸ்ஸர்வஏவஸ:" என்று திருநாடும்

(க) ஆசார்யவாந் புருஷோ வேத ॥ (உ) பாபிஷ்ட: க்ஷத்ரபந்துஶ்ச புண்டரீகஶ்ச புண்யக்ருத் । ஆசார்யவத்தயா முக்தௌ தஸ்மாதாசார்யவாந் பவேத் ॥

(ங) ஆசார்யஸ்ஸ ஹரிஸ்ஸாக்ஷாச்சரரூபீ ந ஸம்ஶய: ॥

(ச) ஆசிநோதி ஹி ஶாஸ்த்ரார்த்தாநாசாரே ஸ்தாபயத்யபி । ஸ்வயமாசரதே யஸ்து ஆசார்யஸ்ஸோऽபிதீயதே ॥

(ரு) குஶப்தஸ்த்வந்தகாரஸ்ஸ்யாத் ருஶப்தஸ்தந்நிரோதக: । அந்தகாரநிரோதித்வாத் குருரித்யபிதீயதே ॥

(சா) குருரேவ பரம் ப்ரஹ்ம குருரேவ பரா கதி: । குருரேவ பரா வித்யா குருரேவ பரம் தநம் ॥ குருரேவ பர: காமோ குருரேவ பராயணம் । யஸ்மாத்ததுபதேஷ்டாऽஸௌ தஸ்மாத்குருதரோ குரு: ॥ (எ) தஸ்ய வைகுண்டதுக்தாப்தி த்வாரகாஸ்ஸர்வ ஏவ ஸ: ॥

திருப்பாற்கடல்முதல் நூற்றெட்டுத்திருப்பதிகளும் "அன்னையாய் அத்தனாய்" என்னும்படியான ஸர்வவித உத்தாரக பந்துவும் மாடும் மனையும் தேடும் பொருளும் பூமியும் எல்லாம் ஆகக்கடவன்.

ஆழ்வான், ஆண்டான், அருளாளப் பெருமாளெம்பெருமானார், எம்பார், ஸ்ரீபராஶரபட்டர் முதலானோர் தந்தம் ஶிஷ்யர்களுக்கு 'எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென்றிருங்கோள்' என்கைக்கு ஹேது என்னென்னில்.—ஸ்வாசார்ய ப்ரீதிநிபந்தநமாகவும், 'மாறனடிபணிந்துய்ந்தவன்" என்று சொல்லுகையாலும்; ஆழ்வார்க்கும் உடையவர்க்கும் நடுவுள்ள ஆசார்யர்கள் நம்மாழ்வாருக்குக் கரணபூதராகையாலே இவர்க்கு நேரே ஆசார்யர் திருக்குருகூர்நம்பியாகையாலும், அவர் "கலியுங்கெடும்" என்று இவரவதாரத்தைக் குறித்து அருளிச்செய்கையாலே ஆழ்வாராலே ப்ரவர்த்திதமான தர்ஶநத்தை நிலைநிறுத்தி அவர் வைபவத்தை (க) "குரும்ப்ரகாஶயேத்தீமாந்" என்று ப்ரகாஶிப்பிக்கையாலும், ஆழ்வார்க்கு நேரே ஶிஷ்யர் உடையவராகக்கடவர். பெரியநம்பி முதலான பூர்வாசார்யர்கள் இவருக்கு ஆசார்யர்களாய் வீறுபெற்றார்கள்; ஆழ்வான் முதலானோர்கள் இவர்க்கு ஶிஷ்யராய்ப் பேறுபெற்றார்கள்; ஆகையாலே, ஸர்வாசார்யத்வ பூர்த்தியுள்ளது உடையவர்க்கேயாகையாலே, அருளிச்செய்தருளினார்களிறே.

ஆளவந்தாரும் இவ்வர்த்தத்தை அநுஷ்டித்துக் காட்டியருளினார்; எங்ஙனேயென்னில்:—மணக்கால்நம்பி உய்யக்கொண்டார் இவர்கள் உகப்பைப் பின்சென்று, (உ) "பிதாமஹம் நாதமுநிம் விலோக்ய ப்ரஸீத" என்றும், (ங) "நாதாயநாதமுநயேऽத்ரபரத்ரசாபி நித்யம்" என்றும், 'இங்கும் அங்கும் ஆசார்யன் திருவடிகளே ஶரணம், ஆசார்யவிஷயத்தில் க்ருதஜ்ஞதையாவதாத்மஸமர்ப்பணம்' என்று அருளினார். ஆகையாலே, ஸ்வரூபோஜ்ஜீவநத்திற்கு ஆசார்யனே தஞ்சமென்று பற்றுதலொழிய வேறே இவ்வாத்மாவுக்கு உஜ்ஜீவிக்க விரகில்லையிறே. இவ்வர்த்தத்தை அநுஷ்டித்தார் ஆரென்னில்:— ஸ்ரீமதுரகவிப்ரப்ருதி ஸஜ்ஜநங்களிறே.

---

(க) 𑌗𑍁𑌰𑍁𑌂 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌯𑍇𑌦𑍍𑌧𑍀𑌮𑌾𑌨𑍍

(உ) 𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌂 𑌨𑌾𑌥𑌮𑍁𑌨𑌿𑌂 𑌵𑌿𑌲𑍋𑌕𑍍𑌯 𑌪𑍍𑌰𑌸𑍀𑌦

(ங) 𑌨𑌾𑌥𑌾𑌯 𑌨𑌾𑌥𑌮𑍁𑌨𑌯𑍇𑌽𑌤𑍍𑌰 𑌪𑌰𑌤𑍍𑌰 𑌚𑌾𑌪𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂



உடையவர் புழுவன்வ்யாஜேந மேல்நாட்டுக்கு எழுந்தருளின போது, உபந்யஸித்த கட்டளையைக் கேட்டு ஆசார்யர்களெல்லாரும் ஆஶ்சர்யப்பட, உடையவரும் 'என்பரமாசார்யரான ஆளவந்தார் வார்த்தைகொண்டு சொன்னேன் இது; ஆளவந்தார் கோஷ்டியிலே ஒருநாளாகிலும் ஸேவிக்கப்பெற்றேனாகில் பரமபதத்திற்கும் இங்கும் சுருளும்படியும் கட்டிவிட்டேனோ?' என்று அருளிச்செய்தாரிறே.

உடையவர், அபயப்ரதாநம் அருளிச்செய்யாநிற்க, பிள்ளையுறங்காவில்லிதாஸர் கோஷ்டியினின்றும் எழுந்துநிற்க, 'இதுவென்? பிள்ளாய்!' என்று உடையவர் கேட்டருள, '(க) "பரித்யக்தாமயாலங்கா மித்ராணிச தநாநிச - பவத்கதம்மேராஜ்யஞ்ச ஜீவிதஞ்சஸுகாநிச" என்றும், (உ) "த்யக்த்வாபுத்ராம்ஶ்சதாராம்ஶ்ச ராகவம்ஶரணங்கதঃ" என்றும் பகவத்ஸமாஶ்ரயணத்திற்கு விலக்கடியானவைகளையடையவிட்டு 'பெருமாள் திருவடிகளேதஞ்சம்' என்றுவந்து (ங) "கஸ்தஏவவ்யதிஷ்டத" என்று, நிலத்திலே கால்பாவாதே ககநஸ்தனாய் நிராலம்பநனாய்நின்ற ஸ்ரீவிபீஷணாழ்வானையு மகப்பட (ச) "வத்யதாம்" என்று கல்லும் தடியுங்கொண்ட ராமகோஷ்டிக்குப் பஶுபத்நயாதிகளோடு கூடின அடியேன் ஆளாகப்புகுகிறேனோ?' என்றார். உடையவரும் 'கேளாய் பிள்ளாய்! அஞ்சாதேகொள்ளும்; நான் பெற்றேனாகில் நீர் பெறுகிறீர்! பெரியநம்பி பெற்றாராகில் அடியேன் பெறுகிறேன்; ஆளவந்தார் பெற்றாராகில் பெரியநம்பி பெறுகிறார்; மற்றும் மேலுள்ளார் பெற்றார்களாகில் இவர்களும் பெறுகிறார்கள்; நம்சடகோபர் "அவாவற்று வீடுபெற்ற" என்று தம் வாக்காலே அருளிச்செய்கையாலே அவர்பெற்றது ஸித்தம். ஆனபின்பு நமக்கும்ஸித்தமென்றிரும்: எல்லார்க்கும் நாச்சியார் புருஷகாரமுண்டாம் போது அச்சம் வேண்டா; ஆகையிறே நித்யயோகம்; ஆனபின்பு நித்யஸம்ஸாரிகளும் எம்பெருமானும் ஒரு சங்கிலித்துவக்கிலேகாணுமிருப்பது; ஆகையால், நம்முடைய ஒழுக்குக்கூட்டம் நம்மைவிட்

---

(க) 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌾 𑌮𑌯𑌾 𑌲𑌙𑍍𑌕𑌾 𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌚 𑌧𑌨𑌾𑌨𑌿 𑌚 । 𑌭𑌵𑌦𑍍𑌗𑌤𑌂 𑌮𑍇 𑌰𑌾𑌜𑍍𑌯𑌞𑍍𑌜𑍀𑌵𑌿𑌤𑌞𑍍𑌚 𑌸𑍁𑌖𑌾𑌨𑌿 𑌚 ॥

(உ) 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌂𑌶𑍍𑌚 𑌦𑌾𑌰𑌾𑌂𑌶𑍍𑌚 𑌰𑌾𑌘𑌵𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌗𑌤𑌃।

(ங) 𑌖𑌸𑍍𑌥 𑌏𑌵 𑌵𑍍𑌯𑌤𑌿𑌷𑍍𑌠𑌤 (ச) 𑌵𑌧𑍍𑌯𑌤𑌾𑌂

டகலா தென்றிரீர். கமுகு உண்ணில் வாழையும் உண்ணு மென்றிரும். ஸ்ரீவிபீஷணாழ்வானோடு வந்த நால்வரையும் அருளப்பாடிட்ட போது தனித்து அருளப்பாடிட்டதில்லையே; தகையென்றபோதும் தனித்துத் தகை யென்றதில்லையே; ஆனபின்பு நான் பெற்றேனாகில் நீர் பெறுகிறீர்; அஞ்சாதே ஸுகமேயிரும்' என்று அருளிச்செய்தருளினார். "ஏத்தியிருப்பாரை வெல்லுமே மற்றவரைச், சார்த்தியிருப்பார்தவம்;" ஏத்தியிருந்தார் - ஸ்ரீபரதாழ்வான், அவரைச் சார்த்தியிருந்தார் - ஸ்ரீஸத்ருக்நாழ்வான்; ஏத்தியிருந்தார் - நம்மாழ்வார், அவரைச் சார்த்தியிருந்தார் - ஸ்ரீமதுரகவிகள்; ஏத்தியிருந்தார் - பெரியாழ்வார், அவரைச் சார்த்தியிருந்தார் - நாச்சியார்.

'† இனி, எம்பெருமானாரைப் பற்றுமவ்வளவே ஸ்வரூபமாகில், திவ்யதேசங்களைக் கைவிட்டானாகாதோ?' என்னில்,—கைவிட்டானாகான்; அது எங்ஙனேயென்னில்:—"இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் மாலிருஞ்சோலை யென்னும், பொருப்பிடம் மாயனுக்கென்பர் நல்லோர் அவை தன்னொடும்வந், திருப்பிடம் மாய னிராமாநுசன் மனத்து" என்கையாலே எம்பெருமானார் திருவடிகளைத் தொழவே திவ்யதேசங்களெல்லாம் திருவடிதொழுதானாகக்கடவன்; உடையவரை ஆராதித்து அமுதுசெய்யப்பண்ணவே, எல்லாத் திவ்யதேசங்களிலெம்பெருமான்களையும் ஆராதித்து அமுதுசெய்யப் பண்ணினானாகக்கடவன்.

"'நின்றவண்கீர்த்தியும்" என்கிற பாட்டிலும், "பேறொன்று மற்றில்லை" என்கிற பாட்டிலும் 'கர்மமும் உபாயமன்று' ஜ்ஞாநமும் உபாயமன்று, பக்தியும் உபாயமன்று, ப்ரபத்தியும் உபாயமன்று, எம்பெருமானார் திருவடிகளே உபாயோபேயம்' என்கையாலே, எம்பெருமானாரைப் பற்றுகையே ப்ரபத்தி, ராமாநுஜனென்கிற சதுராக்ஷரியே திருமந்த்ரம், அவர் திருவடிகளிலே பண்ணும் கைங்கர்யமே பரமபுருஷார்த்தம்; இதுவே நிஸ்சிதார்த்தமான என் ஸித்தாந்தம்' என்று நடாதூரம்மாள் அருளிச்செய்தருளுவர்.

கூரத்தாழ்வான் 'நாராயண ராமாநுஜ என்கிற திருமந்த்ரங்களுக்கு வாசி பந்தமோக்ஷங்களிரண்டுக்கும் பொதுவாகையும்

† 'இனி, ஸ்வாசார்யபரமாசார்யர்களைப் பற்றுமவ்வளவே' என்றும் பாடம்.



மோக்ஷைகஹேதுவாகையும்' ஆகிற இது தோன்ற, (க) "ராமாநுஜேத்யேஷா சதுரா சதுரக்ஷரீ" என்றாரிறே.

"கையிற்கனி" என்கிறபாட்டிலே 'ஈஸ்வரனைக் கரதலாமலகமாகக்காட்டித் தந்தாலும்' உன்விக்ரஹஸௌந்தர்யாநுபவமே பரமப்ராப்யம்' என்றும், "இராமாநுசனைத்தொழும் பெரியோர், எழுந்திரைத்தாடுமிட மடியேனுக்கிருப்பிடம்" என்று 'இராமாநுசனைத் தொழும் பெரியோர் நித்யவாஸம் பண்ணுமிடமே அடியேனுக்கு ப்ராப்யபூமி' என்றும், "உன்தொண்டர்கட்கே, அன்புற்றிருக்கும்படி யென்னை யாக்கி அங்காட்படுத்தே" என்று 'இராமாநுசனே! உன்னடியார்திறத்தில் ஊற்றம்மாறாத பக்தியை யுண்டாக்கி அவர்களுக்கே என்னையாட்படுத்தாய்' என்றும் உடையவர் திருமுகமண்டலத்தைப் பார்த்து விண்ணப்பஞ் செய்ய, இசைந்து எழுந்தருளியிருந்தாரிறே. 'இதுவே இவ்வர்த்தநிர்ணயத்திற்கு த்ருடதர முக்யப்ரமாண மென்று நமக்கெல்லார்க்கும் புத்திபண்ணக் குறையில்லை; எங்ஙனேயென்னில்:—"அங்கயல்பாய் வயல்" என்கிற பாட்டிற்படியே ஸர்வஸ்மாத்பரனாய் ஸர்வநியந்தாவான எம்பெருமானையும் நாச்சியாரையும் புருஷகாரமாகக் கொண்டு, எம்பெருமானார் திருவடிகளைப் பெறவேணு மென்று ப்ரபந்தத்தைத் தலைக்கட்டியருளினாரிறே அமுதனாரும்.

† இங்ஙனன்றிக்கே, (உ) "வேதாந்தாந்ஸங்க்ராத்யைஃ குமதிப்ரஸ்தார்த்தாந்ஹி நீதாம்ஸ்சஸ்வஸ் ஸ்வார்த்தேதாத்பர்யயுக்தாங்கலயிதுமபிச ஸ்ரீஸடார்யாத்யபக்தைஃ - ப்ரோக்தாந்திவ்யப்ரபந்தாந்ஸ்ரணவரண யோகாத்மகாந் ப்ரஸ்புடார்த்தாந் க்ருத்வோத்தர்த்தும்பவா

(க) ராமாநுஜேத்யேஷா சதுரா சதுரக்ஷரீ (உ) வேதாந்தாந்ஸங்க்ராத்யைஃ குமதிப்ரஸ்ருதாந்நீதாந்ஸ்வஸ்ஸ்வார்த்தேதாத்பர்யயுக்தாந் கலயிதுமபிச ஸ்ரீஸடார்யாத்யபக்தைஃ। ப்ரோக்தாந்திவ்யப்ரபந்தாந் ஸ்ரணவரணயோகாத்மகாந் ப்ரஸ்புடார்த்தாந் க்ருத்வோத்தர்த்தும் பவாப்தேர்ஜனதாமபிதயாஸ்ரீ...ஹிதயாத்ரி ॥

† இந்தப்பாரா அநேகம் ப்ரதிகளில் காண்கிறது.

ப்ரேதாகிலஜநமபூத்யோமஹாபூததாம்நி'' என்றும், (க) ''வேதாந்தா நாமஸீம்நாங்குருதரகஹநார்த்தைக வாக்யத்வபூர்வம் வ்யாக்யாதருத் வாச்சஶேஷங்குருபரவஹநாதீஶிதுஸ்ஸைந்யநாதம் - ஸாதுத்ராணத் ததக்யப்ரமதநகாரணச்சாபிதத்பஞ்சஹேதீ நாசார்யத்வஸ்யபூர்த்யா ய முருதாக்ருபம் ஸ்ரீபதிஞ்சாஹூராரர்யா:'' என்றும், (உ) ''ஶ்ருத்யர்த் தாந்ப்ராப்யதத்வேநசவாதமுகாதாஜ்ஞயாதஸ்யஸர்வம் ஸங்கந்தயக்த் வா த்ரிதண்டாஞ்சிதமஹிதகரோரங்கதாம்நயாஸ்தபஶ்சாத் - ஆர்யை ஸ்ஸாகஞ்சலக்ஷ்மீரமணக்ருதபதாந்திவ்யதேஶாந்தராயாம் ஸேவம்ஸே வம்ப்ரகல்ப்யாதசமஹிதஸமாராதநம்தத்ரதத்ர'' என்றும், (௩) ''யா தோயஶ்ஶாரதாயாஸ்ஸவிதமததயாஸத்க்ருதஸ்வப்ரபந்தோ பாஹ்யாந் வேதாத்குத்ருஷ்டீநபிகபடபடூந்வாதஹேதாநிர்ஜிகாய - ப்ராதக்ஷிண்யே நகச்சந் புவமகிலஜநம் வைஷ்ணவாக்ர்யஞ்சகுர்வந் ந்யாஸாக்யந்தேவகு ஹ்யம்பரமஹிதமபித்ராக்ப்ரகாஶஞ்சக்ருத்வா'' என்றும், (ச) ''ரங்கே வேதாந்தபாஷ்யம் வ்யததநுதசததஃ கீடகண்டஸ்யஹேதோர் கத்வா

(க) [illegible]

(உ) [illegible]

(௩) [illegible]

(ச) [illegible]



யோஹேஹாஸலாக்யம் ஜபதமலேயாதவாத்ரௌதிரேவஸ்ய - பஶ் சாதாகத்ய ரங்கங்குருவரமுகதோவைதிகாக்ர்யம்விஶிஷ்டா த்வைதம் ஸித்தாந்தமஸ்மிந்ஜகதிபஹுமுகம்விஸ் த்ருதங்காரயித்வா'' என்றும், (க) '' அத்யாப்யாஸ்தேயதுக்ஷ்மாப்ருதிமஹிதஜயஶ்சாக்ஷுஷீம்ஸ்வீய மூர்த்திங் குர்வாணஸ்தம்யதீந்த்ரங்குருகுலந்ருபதிம்தௌமிராமாநு ஜார்யம்'' என்றும், (உ) ''கீதாபாஷ்யம் பூஷ்யவேதாந்தபாஷ்யம் ஸாரந்தீபங்கிஞ்சகத்யத்ரயஞ்ச-வேதார்த்தாநாம்ஸங்க்ரஹம்நித்யயாகம் ப்ராஹைதாந்யஸ்தம்யதீந்த்ரம்பஜேஹம்'' என்றும்,(௩) ''ஹஸ்த்யத்ரீ ஶப்ரஸாதாததிகதநிகமாந்தார்த்த கோ யோஹிஜித்வா பாஹ்யாந்வே தாத்குத்ருஷ்டீநபிநிகிலஜநம்வைஷ்ணவாக்ர்யஞ்சக்ருத்வா - ரங்கே வேதாந்தபாஷ்யம்வ்யதநுதமஹம்தௌமிராமாநுஜார்யம் ஸ்ரீரங்காத் யாலயேஷுப்ரகடகுணகணம் ஸ்ரீபதிம்ஸேவமாநம்'' என்றும் இப்படி பெரியபெருமாள் முதலானார் பஹுமுகமாகப் பேசி வெளியிட்டார் கள். இப்படி ஸத்துக்களாலே ப்ராக்உக்தவைபவம் ஸங்க்ரஹேண உக்த மாய்த்து.

ஏவம்விதவைபவயுக்தரான இந்த எம்பெருமானாரைத் தத்பாகி நேய ஸூநுவாய்த் தந்நாமத்தையுடையராய்த் தந்நாமகுணஹர்ஷித ரான கந்தாடையாண்டான் கனக்க அநுவர்த்தித்து '(ச) ''பரித்ரா

[illegible]

(க) [illegible]

(உ) [illegible]

(௩) [illegible]

(ச) [illegible]

ஞாய'' இத்யாதிப்படியே தேவரீர் (க) "புண்யாம்போஜவிகாஸாய பாபத்வாந்தக்ஷயாயச - ஸ்ரீமாநாவிரபூத்பூமௌ ராமாநுஜதிவாகர:" என்னும்படி அவதரித்தருளின ஸ்ரீபெரும்பூதூரிலே ஸர்வகாலத்திலும் ஸர்வஜேதநர்க்கும் ஸேவ்யமாம்படி தேவரீருடைய அர்ச்சாவிக்ரஹத்தை எறியருளப்பண்ணவேணும், என்று விண்ணப்பஞ்செய்ய, ஸ்வாமியும் 'அப்படியேசெய்யும்' என்று அநுமதிபண்ணியருள, அப்போதே ஆண்டானும் அநுகூலனை சில்பியை அழைப்பித்து (உ) "புண்ட்ரைர் த்வாதஶபிர்யுதம் விலஸிதம் தண்டைஸ்த்ரிபிர்மண்டிதம் காஷாயேண ஶிகோபவீதருசிரந்தோர்மூலசக்ராம்புஜம் - ஆஸீநஞ்ஜலஜாஸநேச துளஸீபத்மாக்ஷமாலாஞ்சிதம் யுக்தஞ்சாஞ்ஜலிமுத்ரயா ரவிநிபம் ஸ்ரீபாஷ்யகாரம்பஜே" என்கிற பரார்த்யமான வார்த்தகவிக்ரஹாகாரத்தை ஸேவிக்கப்பண்ண, அவனும் "ஆதியஞ்சோதியுருவையங்குவைத்திங்குப்பிறந்த" என்கிறபடியே அர்ச்சாவிக்ரஹமாக எழுந்தருளப்பண்ணி ஸந்நிதியிலே கொண்டுவந்துவைக்க, திருக்கண்சாத்தி யுகந்தருளி, அந்த விக்ரஹத்திலே தம்முடைய ஸர்வ ஶக்தியும் ப்ரகாஶிக்கும்படி கடாக்ஷிங்கம் பண்ணி 'இவ்விக்ரஹத்தைப் புஷ்ப மாஸத்தில் குரு புஷ்யத்திலே ப்ரதிஷ்டிப்பியும்' என்று திருமுகமெழுதித் திருக் குறித்து அனுப்பியருள, ஆண்டானும் அப்படியே திருவடிகளிலே ஸேவித்து அந்த விக்ரஹத்தை எழுந்தருளுவித்துக் கொண்டுவந்து மூல விக்ரஹத்தையும் எறியருளப் பண்ணுவித்துக் திருமுகப்படியே திருப்ரதிஷ்டையுஞ் செய்வித்தருளினர்.

இங்கே ப்ரதிஷ்டிப்பிக்கிற அற்றைத்திவஸத்திலே திருமேனியிலே மிகவுந் தளர்ச்சியாய்ப் பலஹாநியுண்டாக, இராமாநுசனும் இதேதென்று பராமர்சித்து 'ஆண்டானுக்கு எழுதிக்கொடுத்த திவஸம் எது?' என்று கேட்டருள, அந்தத் திவஸம் அன்றுதானாயிருக்கக்கண்டு விஸ்மயப்பட்டு 'ஶீக்ரம் வருவது' என்று ஆண்டானுக்குத்

(க) 𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌮𑍍𑌭𑍋𑌜𑌵𑌿𑌕𑌾𑌸𑌾𑌯 𑌪𑌾𑌪𑌧𑍍𑌵𑌾𑌨𑍍𑌤𑌕𑍍𑌷𑌯𑌾𑌯 𑌚 । ஶ்ரீ𑌮𑌾𑌨𑌾𑌵𑌿𑌰𑌭𑍂𑌦𑍍𑌭𑍂𑌮𑍌 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌦𑌿𑌵𑌾𑌕𑌰𑌃 ॥

(உ) 𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑍈𑌰𑍍𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌭𑌿𑌰𑍍𑌯𑍁𑌤𑌂 𑌵𑌿𑌲𑌸𑌿𑌤𑌂 𑌦𑌣𑍍𑌡𑍈𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌰𑍍𑌮𑌣𑍍𑌡𑌿𑌤𑌂 𑌕𑌾𑌷𑌾𑌯𑍇𑌣 𑌶𑌿𑌖𑍋𑌪𑌵𑍀𑌤𑌰𑍁𑌚𑌿𑌰𑌂 𑌦𑍋𑌰𑍍𑌮𑍂𑌲𑌚𑌕𑍍𑌰𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌮𑍍 । 𑌆𑌸𑍀𑌨𑌂 𑌜𑌲𑌜𑌾𑌸𑌨𑍇𑌶𑌤𑍁𑌲𑌸𑍀𑌪𑌦𑍍𑌮𑌾𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾𑌞𑍍𑌚𑌿𑌤𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌚𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌮𑍁𑌦𑍍𑌰𑌯𑌾 𑌰𑌵𑌿𑌨𑌿𑌭𑌂 ஶ்ரீ𑌭𑌾𑌷𑍍𑌯𑌕𑌾𑌰𑌂 𑌭𑌜𑍇 ॥



திருமுகம் போகவிட்டருள, அவரும் திருமுகத்தை ஶிரஸா வஹித்து அப்படியே மீண்டெழுந்தருளித் திருவடிகளை ஸேவித்துக்கொண்டிருந்தார்.

† அநந்தரம் அங்குத்தைக்கு அத்யந்தம் அந்தரங்கரான ஆண்டான் முதலான முதலிகளெல்லாரும் பழுத்திருக்கிற தேமாவைக் கிளித்திரள்கள் காத்துக்கொண் டிருக்குமாபோலே, தத்துல்யரான இவர்களும் விமலசரமவிக்ரஹத்தை "கைபிற்கனி" இத்யாதிப்படியே *மெய்யிற் பிறங்கியசீரைப் பழுக்க ஸேவித்துக்கொண்டு, "அடையார்கமலத்து அலர்மகள்கேள்வன் கையாழியென்னும், படையோடு நாந்தகமும் படர்தண்டு மொண்சார்ங்கவில்லும், புடையார் புரிசங்கமும் இந்தப் பூதலங் காப்பதற்கென்று, இடையே யிராமாநுச முனியாயின விந்நிலத்தே" என்றும், (க) "ஶேஷோவாஸைந்யநாதோவா ஸ்ரீபதிர்வேதி ஸாத்விகை: - விதர்க்யாயமஹாப்ராஜ்ஞைர்யதிராஜாய" என்றும், (உ) "தத்ரோதஞ்சதிமண்டபே யதிவர: கக்ஷ்பாந்தரஸ்தேவஸந் பூர்வம்ராவணகம்ஸமுக்யதநுஜாந்ராமாநுஜாப்யாம்ஹதாந்-மத்வா ஶங்கர யாதவாதிமுகதோபூயோऽவதீர்ணம்புவம் தத்பங்காயக்ருதோத்யமஸ் ததுசிதாம் ராமாநுஜாக்யாம்வஹந்" என்றும் (ங) "வ்யாஸோவாபகவாந்பராஶரமுநிஸ் ஸ்ரீஶௌநகோவாऽதவா ஸாக்ஷாந்நாரதஏவவாஶடரிபுர்வாகீஶ்வரோவாஸ்வயம்-லோகேஶ :பரு

(க) 𑌶𑍇𑌷𑍋 𑌵𑌾 𑌸𑍈𑌨𑍍𑌯𑌨𑌾𑌥𑍋 𑌵𑌾 ஶ்ரீ𑌪𑌤𑌿𑌰𑍍𑌵𑍇𑌤𑌿 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑍈𑌃 । 𑌵𑌿𑌤𑌰𑍍𑌕𑍍𑌯𑌾𑌯 𑌮𑌹𑌾𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑍈𑌰𑍍𑌯𑌤𑌿𑌰𑌾𑌜𑌾𑌯 ॥

(உ) 𑌤𑌤𑍍𑌰𑍋𑌦𑌞𑍍𑌚𑌤𑌿 𑌮𑌣𑍍𑌡𑌪𑍇 𑌯𑌤𑌿𑌵𑌰𑌃 𑌕𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑌸𑍍𑌥𑍇 𑌵𑌸𑌨𑍍 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌰𑌾𑌵𑌣𑌕𑌂𑌸𑌮𑍁𑌖𑍍𑌯𑌦𑌨𑍁𑌜𑌾𑌨𑍍 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌹𑌤𑌾𑌨𑍍 । 𑌮𑌤𑍍𑌵𑌾 𑌶𑌙𑍍𑌕𑌰𑌯𑌾𑌦𑌵𑌾𑌦𑌿𑌮𑍁𑌖𑌤𑍋 𑌭𑍂𑌯𑍋𑌽𑌵𑌤𑍀𑌰𑍍𑌣𑌾𑌨𑍍 𑌭𑍁𑌵𑌂 𑌤𑌦𑍍𑌭𑌙𑍍𑌗𑌾𑌯 𑌕𑍃𑌤𑍋𑌦𑍍𑌯𑌮𑌸𑍍𑌤𑌦𑍁𑌚𑌿𑌤𑌾𑌂 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌖𑍍𑌯𑌾𑌂 𑌵𑌹𑌨𑍍 ॥

(ங) 𑌵𑍍𑌯𑌾𑌸𑍋 𑌵𑌾 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍𑌪𑌰𑌾𑌶𑌰𑌮𑍁𑌨𑌿𑌃 ஶ்ரீ𑌶𑍌𑌨𑌕𑍋 𑌵𑌾𑌽𑌥𑌵𑌾 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌨𑌾𑌰𑌦 𑌏𑌵 𑌵𑌾 𑌶𑌠𑌰𑌿𑌪𑍁𑌰𑍍𑌵𑌾𑌗𑍀𑌶𑍍𑌵𑌰𑍋 𑌵𑌾 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 । 𑌲𑍋𑌕𑍇𑌶𑌃 𑌪𑌰𑌮𑍇𑌷𑍍𑌠𑌿𑌤𑌃 𑌫𑌣𑌿𑌪𑌤𑌿𑌃 𑌶𑍇𑌷𑍋𑌜𑌗𑌦𑍍𑌵𑍇𑌷𑌿𑌣𑍀 𑌶𑌙𑍍𑌕𑍍𑌯𑌾𑌵𑍍𑌯𑌾𑌤𑌨𑍍𑌵𑌜𑌨𑌤𑌾𑌂 𑌹𑌿𑌤𑌾𑌯 𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑍂𑌤𑍋 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌰𑍍𑌯𑍋 𑌮𑍁𑌨𑌿𑌃 ॥

† இத்தப்பாரா அநேகம் பிரதிகளில் காணப்படுகிறது.

ஷோத்தம:பணிபதிஶ்ஶேஷீஜகச்சேஷிணீத்யாக்யாதும் ஜகதாம்ஹிதாயஸமபூத் ராமாநுஜார்யோமுநி:'' என்றும்சொல்லுகிறபடியே அநேக அவதாரவிசேஷமென்று ஆதரித்துக் கொண்டிருந்தார்கள்.

இத்தால், ஏவம்விதமாஹாத்ம்ய யுக்தரான இவருடைய வைபவமும், (க) "சரிதம் ரகுநாதஸ்ய ஶதகோடிப் ப்ரவிஸ்தரம்" என்கிற சக்ரவர்த்தித் திருமகன் வைபவம்போலே அவாங்மநஸகோசரமிறே. ஸாகரத்தைக் கைநீச்சாலே கடந்து அக்கரையேறினாலும், உததியைச் சிறங்கித்தாலும் உடையவர் வைபவம் அடையச் சொல்லப் போகாதிறே. யதாமதி யதாஶ்ருதமாகச் சொன்னதித்தனை. பஹுஶ்ருதராய்ப் புத்திபாஹுள்யமுடைய பெரியோர்கள் விஶதமாகக் கண்டு கொள்ளக்கடவரிறே.

† இப்படி அவதார விசேஷமான இவருக்கு (உ) "ஶரச்சதம் வ்யதீயாய ஸவிம்ஶமதிகம்ப்ரபோ:'' என்கிறபடியே நூற்றிருபத்தஞ்சிலே நூற்றிருபது திருநக்ஷத்ரம் பூர்ணமாய்த்து.

"வையமன்னிவீற்றிருந்து விண்ணுமாள்வர் மண்ணூடே" என்னும்படியான இவர், தம்முடைய அவதார ரஹஸ்யஜ்ஞாநத்தாலும், தம்முடைய விக்ரஹஸேவையாலும், தத்ப்ரதக்ஷிணநமஸ்காராதிகளாலும், சதுரக்ஷரியாய்ச் சதுரமான தம்முடைய திருநாம வைபவத்தாலும், ஸ்வதிவ்யமங்களவிக்ரஹத்யாநத்தாலும் தந்நிஷ்டையாலும்! தத்கைங்கர்யைகபரதையாலும், பாஷ்யாம்ருத ப்ரதாநாதிகளாலும், மந்த்ரரத்ந ப்ரதாநாதிகளாலும், ததர்த்தப்ரதிபாதகத்தாலும், ஸ்வபாதுகாப்ரதாநத்தாலும், ஸ்வபாததீர்த்தஸ்வீகாரத்தாலும், ஶுபாவநமான ப்ரஸாதஸ்வீகாரத்தாலும், பாதஸ்பர்ஶபவித்ரதையாலும், ஸஞ்சாரபூதமான பாதஸஞ்சரணத்தாலும், ஸ்வபாவந கரஸ்பர்ஶத்தாலும், அப்படியேயான கடாக்ஷவிசேஷத்தாலும், பஞ்சஸம்ஸ்காராதிகளாலுண்

(க) 𑌚𑌰𑌿𑌤𑌂 𑌰𑌘𑍁𑌨𑌾𑌥𑌸𑍍𑌯 𑌶𑌤𑌕𑍋𑌟𑌿𑌪𑍍𑌰𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌮𑍍

(உ) 𑌶𑌰𑌚𑍍𑌛𑌤𑌂 𑌵𑍍𑌯𑌤𑍀𑌯𑌾𑌯 𑌸𑌵𑌿𑌂𑌶𑌮𑌧𑌿𑌕𑌂 𑌪𑍍𑌰𑌭𑍋𑌃

† இந்தப்பாரா தொடங்கி உ௭௪-ஆம் பக்கத்து முதலில் வருகிற 'உடையவரும்' என்பது வரையிலுமுள்ள க்ரந்தங்கட்குப் பதிலாக, சில ப்ரதிகளில் 'ஒருநாள் உடையவர் திருவுள்ளத்தில் ஆர்த்தியோடே விசாரித்தருளி நம்பெருமாளைத் திருவடி தொழுது விண்ணப்பஞ் செய்தபடி.' என்று பாடங் காண்கிறது.



டான ஸம்பந்த விசேஷத்தாலும், (க) "புநந்திபுவநம்யஸ்ய பாதாஶ்ரிதபதாஶ்ரிதா: - கடாக்ஷாதிபிரேவாத்ர" என்ற ஸ்வகீயஸம்பந்தத்தாலும், (உ) "பாலமூகஜடாந்தாஶ்ச பங்கவோபதிராஸ்ததா-ஸதாசார்யேண ஸந்த்ருஷ்டா:ப்ராப்நுவந்திபராங்கதிம்" என்றும் (ங) "ஸாக்ஷாந்நாராயணோதேவ: க்ருத்வாமர்த்யமயீந்தநும்-மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாச் சாஸ்த்ரபாணிநா" என்றும் (ச) "அந்வயாதபிசைகஸ்ய ஸம்யங்ந்யஸ்தாத்ம கோஹரௌ - ஸர்வேவைப்ரமுச்யேரந் பூர்வேZ பரேததா" என்றும், (ரு) "பஶுர்மநுஷ்ய:பக்ஷீவா யேசவைஷ்ணவஸம்ஶ்ரயா: தேநைவதே ப்ரயாஸ்யந்தித் விஷ்ணோ: பரமம்பதம்". என்றும் சொல்லுகிறபடியே ஏதேனுமாயுள்ளதொரு ஸ்வஸம்பந்த விசேஷத்தாலும், ஜ்ஞாத்ரஜ்ஞாத்ருவிபாகமற ஜகத்தையெல்லாம் உஜ்ஜீவிப்பித்தும், இனிமேலும் ஸ்வஸம்பந்திகளாயுள்ளவர்களை "ஆரியர்காள் கூறும்" என்று நியமித்தும் இப்படி அவதாரகார்யம் தலைக்கட்டினவாறே;

அங்கே * அபர்வறும் அமரர்களோடேகூடி அடிமைசெய்யத் திருவுள்ளமாய்,—* சேணுயர்வானத்திருக்குந்தேவபிரானை, * அயர்வறுமமர்களதிபதியாய், 'பாம்பணைமேலாற்கு—பலபலவேயாபரணம்' என்னும்படி * பன்மணிப் பூணாரத்தையுமுடையனாய், "உடையார்ந்தவாடையன்" இத்யாதிப்படியே * நடையாவுடைத்திருநாரணனாய், * அரவினணையம்மானாய், * எழில்மலர்மாதருந்தானும் இன்பம்பயக்க இனிதுடன் வீற்றிருந்து அமர்ந்து * கூந்தல்மலர்மங்கைக்கும் மண்மடந்

(க) 𑌪𑍁𑌨𑌨𑍍𑌤𑌿 𑌭𑍁𑌵𑌨𑌂 𑌯𑌸𑍍𑌯 𑌪𑌾𑌦𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌪𑌦𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃 । 𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑍇𑌵𑌾𑌤𑍍𑌰 ॥

(உ) 𑌬𑌾𑌲𑌮𑍂𑌕𑌜𑌡𑌾𑌨𑍍𑌧𑌾𑌶𑍍𑌚 𑌪𑌙𑍍𑌗𑌵𑍋 𑌬𑌧𑌿𑌰𑌾𑌸𑍍𑌤𑌥𑌾 । 𑌸𑌦𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑍇𑌣 𑌸𑌨𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌃 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍁𑌵𑌨𑍍𑌤𑌿 𑌪𑌰𑌾𑌂 𑌗𑌤𑌿𑌮𑍍 ॥

(ங) 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑍋 𑌦𑍇𑌵𑌃 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌮𑌯𑍀𑌂 𑌤𑌨𑍁𑌮𑍍 । 𑌮𑌗𑍍𑌨𑌾𑌨𑍁𑌦𑍍𑌧𑌰𑌤𑍇 𑌲𑍋𑌕𑌾𑌨𑍍 𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌾𑌚𑍍𑌛𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌪𑌾𑌣𑌿𑌨𑌾 ॥

(ச) 𑌅𑌨𑍍𑌵𑌯𑌾𑌦𑌪𑌿 𑌚𑍈𑌕𑌸𑍍𑌯 𑌸𑌮𑍍𑌯𑌙𑍍𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑍋 𑌹𑌰𑍌 । 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌵𑍈 𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑍇𑌰𑌨𑍍 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇𑌽𑌪𑌰𑍇 𑌤𑌥𑌾 ॥

(ரு) 𑌪𑌶𑍁𑌰𑍍𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌃 𑌪𑌕𑍍𑌷𑍀 𑌵𑌾 𑌯𑍇 𑌚 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌾𑌃 । 𑌤𑍇𑌨𑍈𑌵 𑌤𑍇 𑌪𑍍𑌰𑌯𑌾𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌪𑌦𑌮𑍍 ॥

தைக்குங் கேள்வனாய் *எழுலகுந்தனிக்கோல்செல்ல, இப்படி "ஒண்டொடியாள் திருமகளும்நீயும்" என்னும்படி தத்தேகபோகமாயுள்ளபோக விபூதியில் அம்மிதுநச்சேர்த்தியாயெழுந்தருளியிருக்கிற அவ்விருப்பிலே *தேவிமாராவார் திருமகள் பூமி ஏவ மற்று அமரர் ஆட்செய்ய, *கருளப்புட்கொடிச் சக்கரப்படை வானநாட வெங்கார்முகில்வண்ணனாய்*வைகுந்தங்கோயில்கொண்டெழுந்தருளியிருக்கிற ஸ்ரீவைகுண்டநாதனுக்கு, '*சென்றால் *ஊரும்நிவாஸதாஸபேதங்கொண்டு * வழுவிலா அடிமைசெய்யவேண்டும்' என்று அபிவ்ருத்தமநோரதத்தையுடையராய், அதுசெய்யுமிடத்து '*முகப்பேகூவிப்பணிகொள்ளவேணும்; *செம்மாபாதபற்பைத்தலைசேர்க்கவேணும்; *ஈறில் இன்பத்திருவெள்ளத்திலே முழுகவேணும்; *தாமரைக்கண்களாலே குளிரநோக்கவேணும்' என்றாப்போலே சில பரிமாற்றங்களை ஆசைப்பட்டு, "வானோர் சோதி மணிவண்ணா! மதுசூதா! நீ அருளாய் உன், தேனே மலரும் திருப்பாதஞ் சேருமாறு வினையேனே" என்றும், "இமையோர்கள்குழாம் தொழுவதுஞ் சூழ்வதுஞ் செய் தொல்லைமாலைக் கண்ணாரக்கண்டு, கழிவதோர் காதலுற்றார்க்கு முண்டோ கண்கள் துஞ்சுதலே" என்றும் சொல்லுகிறபடியே கண்ணழிவற்ற ப்ராப்யத்வரையையுடையராய், அத்தை * ஆராதகாதலையுடைய ஆழ்வார் அர்த்தித்தபடியே இவரும் அத்தை அடியொற்றிக்கொண்டு, —(க) "ஸ்ரீமதி வைகுண்டே திவ்யலோகே" என்று தொடங்கி (உ) "ஆத்மாநுரூபயா ஸ்ரீயா ஸஹாஸீநம்" என்றும், (௩) "ப்ரத்யக்ரோந்மீலிதஸரஸிஜஸத்ருஶநயநயுகளம்" என்று தொடங்கி (௪) "தத்க்ஷணோந்மீலிதபுண்டரீகஸத்ருஶ சரணயுகளம்" என்னுமளவும் *இணைப்பாதங்களின் இடையிலுண்டானவற்றின் வடிவழகுகளையும், அநந்தரம் அதிமநோஹர கிரீட மகுட நூபுராந்தமாக *முடிச்சோதி தொடங்கி* அடிச்சோதியளவும் சாத்தின திருவணிகலங்களின் அழகையும், (௫) "ஸ்ரீமத்யா வைஜயந்த்யா வநமாலயா விராஜிதம்" என்று கீழில் திருவாபரணஶோபைக்குப் ப்ரபைபோலவும் அதின் காந்திபூரம் நிறம்பெற வெள்ளமிட்டாற்போலவும் இருக்கிற *மங்கலநல்வந மாலையையும், கீழில் ஆபரணத்தோபாதியாயிருக்கிற "அணியாராழியுஞ்சங்கமும்" என்னும்படியான ஶங்க சக்ர கதா அஸி ஶார்ங்காதிகளாயுள்ள *அமர்கொள் ஆழி சங்கு வாள் வில் தண்டாதி பல்படைகளையும், (க) "ஸ்ரீமதிவிஷ்வக்ஸேநே" என்று தொடங்கி (உ) "பகவத்பரிசர்யைகபோகைர்நித்யஸித்தைரநந்தைః" என்னுமளவும் * அமரர்கோன் அர்ச்சிக்கின்ற அங்ககப்பணிசெய்வர் விண்ணோர்களையும், அதற்குமேலே (௩) "திவ்யாமலகோமலாவலோகநேந விஶ்வமாஹ்லாதயந்தம்" என்றுதொடங்கி * வானுடமருங்குளிர்விழிகளாலே குளிரநோக்கும்படியையும், *பன்னிலாமுத்தந்தவழ்கதிர்முறுவல்செய்து * சோதிவாய்திறந்து திவ்யலீலாம்ருதங்களாலே அகிலஜநங்களையும் ஆநந்திப்பித்துத் தளிர்ப்பிக்கும்படியையும், (௪) "பகவந்தம் நாராயணம் த்யாநயோகேந த்ருஷ்ட்வா" என்று ப்ராப்ய பக்தியோகரீதியாலே * பகற்கண்டேன் நாரணனைக்கண்டேனென்று காணும்படியையும், (௫) "நித்யதாஸ்யஞ்சயதாவத்ஸ்திதம் அநுஸந்தாய" என்று "அடியேனடைந்தேன் முதல் முன்னமே" என்கிற ஸ்வாபாவிக ஸம்பந்தத்தை அநுஸந்திக்கும்படியையும், (௬) "கதாऽஹம்பகவந்தம்நாராயணம்......ஸாக்ஷாத்கரவாணி சக்ஷுஷா" என்று "மாண்குறள்கோலப்பிரான் மலர்த்தாமரைப்பாதங்கள் - காண்பது எஞ்ஞான்றுகொலோ" என்றும், "பைகொள்பாம்பேறியுறை பரனே! உன்னை, மெய்கொள்ளக் காணவிரும்பும் என்கண்களே" என்றும் சக்ஷுஸ்ஸுக்களாலே ப்ரத்யக்ஷஸாக்ஷாத்காரம் பண்ணும்படியையும், (௭) "கதாவா பகவத்பாதாம்புஜத்வயம்ஶிரஸா ஸங்க்ரஹீஷ்யாமி" என்று "திருவல்லவாழ் நகருள் நின்றபிரானடிநீறு அடியோங் கொண்டு சூடுவது - என்றுகொலோ" என்றும், "உலகு

(க) 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑌿 𑌵𑍈𑌕𑍁𑌣𑍍𑌠𑍇 𑌦𑌿𑌵𑍍𑌯𑌲𑍋𑌕𑍇 ।

(உ) 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑍁𑌰𑍂𑌪𑌯𑌾 𑌶𑍍𑌰𑌿𑌯𑌾 𑌸𑌹𑌾𑌸𑍀𑌨𑌮𑍍 ।

(௩) 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑍍𑌰𑍋𑌨𑍍𑌮𑍀𑌲𑌿𑌤𑌸𑌰𑌸𑌿𑌜𑌸𑌦𑍃𑌶𑌨𑌯𑌨𑌯𑍁𑌗𑌲𑌮𑍍 ।

(௪) 𑌤𑌤𑍍𑌕𑍍𑌷𑌣𑍋𑌨𑍍𑌮𑍀𑌲𑌿𑌤𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌸𑌦𑍃𑌶𑌚𑌰𑌣𑌯𑍁𑌗𑌲𑌮𑍍 ।

(௫) 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌯𑌾 𑌵𑍈𑌜𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑌾 𑌵𑌨𑌮𑌾𑌲𑌯𑌾 𑌵𑌿𑌰𑌾𑌜𑌿𑌤𑌮𑍍 ।



(க) 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑌿 𑌵𑌿𑌷𑍍𑌵𑌕𑍍𑌸𑍇𑌨𑍇 (உ) 𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑌰𑌿𑌚𑌰𑍍𑌯𑍈𑌕𑌭𑍋𑌗𑍈𑌰𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑌿𑌦𑍍𑌧𑍈𑌰𑌨𑌨𑍍𑌤𑍈𑌃 । (௩) 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌮𑌲𑌕𑍋𑌮𑌲𑌾𑌵𑌲𑍋𑌕𑌨𑍇𑌨 𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑌾𑌹𑍍𑌲𑌾𑌦𑌯𑌨𑍍𑌤𑌮𑍍 । (௪) 𑌭𑌗𑌵𑌨𑍍𑌤𑌂 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌂 𑌧𑍍𑌯𑌾𑌨𑌯𑍋𑌗𑍇𑌨 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 । (௫) 𑌨𑌿𑌤𑍍𑌯𑌦𑌾𑌸𑍍𑌯𑌞𑍍𑌚 𑌯𑌥𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑌨𑍁𑌸𑌨𑍍𑌧𑌾𑌯 । (௬) 𑌕𑌦𑌾𑌽𑌹𑌂 𑌭𑌗𑌵𑌨𑍍𑌤𑌂 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌂...... 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌕𑌰𑌵𑌾𑌣𑌿 𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌾 । (௭) 𑌕𑌦𑌾 𑌵𑌾 𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑌾𑌦𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌦𑍍𑌵𑌯𑌂 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌹𑍀𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 ।

படைத்துண்ட வெங்கை அறைகழற்சுடர்ப்பூந்தாமரை சூடுதற்கு அவா'' என்றும் சொல்லுகிறபடியே பாதாரவிந்தங்களை ஶிரோபூஷணமாகத் தரிக்கும்படியையும், (க) ''கதாஹம் பகவத்பாதாம் புஜத்வயபரிசர்யாஶயா'' என்று தொடங்கி (உ) ''தத்பாதாம்புஜத்வயம்ப்ரவேக்ஷ்யாமி'' என்னுமளவாகப் *பாதமடைவதன்பாசத்தாலேமற்ற வன் பாசங்கள் முற்ற விடும்படியையும், *திருவடிக்கீழ்க் குற்றேவல் செய்யும்படியையும், (ங) ''கதாமாம்பகவாந் அதிஶீதலயாஸ்வகீயயாத் ருஶாவலோக்ய'' என்று தொடங்கி மேல் எல்லாவற்றாலும் பக்கம் நோக்கறியாதே * அமலங்களாக விழிக்கும்படியையும், * நுகப்பே கூவிப் பணிகொள்ளும்படியையும் அநுஸந்தித்துத் *திருவடிக்கீழ்க் குற்றேவல்செய்யப் பெரியகாதலை யுடையராய், அத்தாலே ''அடியேனடைந்தேன்'' என்னும்படி மாநஸமாகக்கிட்டி,—(ச) ''தூராதேவ'' என்று தொடங்கி அப்பேரோலக்கத்தைத் தூரக்கண்டு ஸேவிக்கும்படியையும், * அணைவதரவணைமேற் பூம்பாவை யாகம்புணருமவனை * இமையோர்கள் குழாம் தொழுவதுஞ் சூழ்வதுஞ் செய் தொல்லைமாலைக் கண்ணாலே காணும்படியையும், ''உற்றேன் உகந்து பணிசெய்து உனபாதம், பெற்றேன் ஈதே இன்னம்வேண்டுவது எந்தாய்'' என்று மீளவும் பஹுமநோரதங்களைப் பண்ணாநின்றுகொண்டு *வாசலில் வானவர் அநுமதியுடனே உள்ளேபுகும்படியையும் மநோரதித்து, '' அடைந்தேன் உன்திருவடியே '' என்று அவனைக்கிட்டி, (ரு) ''நாராயணாயநம:'' என்று *வழுவிலாவடிமையை அர்த்தித்துத் தத்ஸித்திக்கு ''அடியேனுடையாவி யடைக்கலமே'' என்று ஆத்மாவை நிவேதிக்க, அவனும் குளிர்விழிகளாலே கரையழியும்படி கடாக்ஷிக்க, '*எது ஏது என்பணி ?' என்னாது எல்லாவடிமைகளுஞ் செய்ய ஒருப்பட்டு ''கைகளாரத்தொழுது தொழுது'' ''இரங்கி நீர்தொழுது'' என்னும்படி ப்ரஹ்வாஞ்ஜலிபுடராய் அநுபவியாநின்றுகொண்டு,—அத்யந்தம் ப்ரீதியுக்தனுப்ப்ரீதிப்ரகர்ஷத்தாலே*கோவை

(க) கதாஹம் பகவத்பாதாம்புஜத்வய பரிசர்யாஶயா। (உ) தத்பாதாம்புஜத்வயம் ப்ரவேக்ஷ்யாமி। (ங) கதாமாம் பகவாந் அதிஶீதலயா ஸ்வகீயயா த்ருஶாவலோக்ய। (ச) தூராதேவ (ரு) நாராயணாய நம:।



வாய் துடிப்ப மழைக்கண்ணுடன் நிற்கும்படியையும், (க) '' ததோ பகவதா'' என்று தொடங்கி (உ) ''அம்ருத ஸாகராந்தர்நிமக்நஸர்வாவயவஸ்ஸுகமாஸீத'' என்று மீளவும் *தாமரைக்கண்களாலே அவலோகநதாநம் பண்ணும்படியையும் அபேக்ஷிக்க, *சோதிச்செவ்வாய்முகுளம் அவலோகியா அலராநிருந்தது: இப்போது ஸவிலாஸஸ்மிதத்தாலே அலர்ந்து (ங) '' ஆநயைநம்'' என்று ஆளிட்டழையாதே தானே வாவென்று அழைத்து, ''துயரறுசுடரடி'' என்றும் ''பாதபங்கயமே தலைக்கணியாய்'' என்றும் சொல்லும்படியான *கமலமன்ன குரைகழல்களை ''தலைசேர்த்து'', ''தன்தாளிணைக்கீழ்ச் சேர்த்து'' என்னும்படியே பாதோபதாநம்போலே சேர்த்தருளவேணும்;*மாயன் கோலமலரடிக்கீழ்ச் சுழிபட்டோடுஞ் சுடர்ச்சோதி வெள்ளமான அமுதவெள்ளத்து *இன்பத்திரு வெள்ளத்திலே ''சூழ்ந்ததனிற் பெரிய என்அவா'' என்னும்படி அவகாஹித்து, இங்கே ஶோகாபிகர்ஶிதமான காத்ரங்களாலே தாபத்ரயங்கள் போலன்றிக்கே, அங்கே நிரதிஶயஸுகத்தை அநுபவிக்கவேணும்' என்று ஸ்ரீ வைகுண்டகத்யத்திலே அர்த்தியா நின்றுகொண்டு ; பரமபக்தி தலையெடுத்துப் பெரிய அபிநிவேஶத்துடனே பெரியபெருமாள் ஸந்நிதியிலே எழுந்தருளிப் பெரியபிராட்டியாரைப் புருஷகாரமாக முன்னிட்டுக்கொண்டு பெரியகத்யமான ஶரணாகதிகத்யத்தைப் பெரிய ஆற்றாமையோடே திருவுள்ளத்திலேபடும்படி விண்ணப்பஞ் செய்து ஶரணம்புக்கு; அநந்தரம் ஸ்ரீரங்ககத்யத்தையும் விண்ணப்பஞ்செய்து அத்தலையிலுண்டான ஸர்வ ஶக்தித்வாதி கல்யாண குணங்களையும் தம்முடைய அஜ்ஞாநஶக்தி முதலான அஸத்குணங்களையும் ஆவிஷ்கரித்து, ஆகிஞ்சந்யத்தையும் அறிவியாநின்றுகொண்டு ஶரணம்புக்கு அத்யார்த்தராய் நிற்க, பெரியபெருமாளும் இவரபிப்ராயமறிந்து 'உமக்கு வேண்டுவதென்?' என்று வினவியருள,

உடையவரும் 'ஸம்ஸாரத்தில் அருசிபிறந்து வய:பரிணாம காலாதிக்ரமணம் பிறந்தது' என்று விண்ணப்பஞ்செய்ய பெருமாளும் 'காலத்துக்கு நாமன்றோ கடவோம்? இன்னம் சிறிது காலம் உம்மைக்கொண்டு இவ்வுலகந் திருத்தப் பார்த்தோம்; அறப் பதறினீரோ!'

(க) ததோ பகவதா। (உ) அம்ருதஸாகராந்தர்நிமக்ந ஸர்வாவயவஸ்ஸுகமாஸீத। (ங) ஆநயைநம்।

என்று திருவுள்ளம் உடைகுலைப்பட்டு 'இனி உமக்குச் செய்யவேண்டுவது என்?' என்று கேட்டருள, அதுக்கு உடையவரும் 'அடியேனைக் *காலக்கழிவு செய்யாமல் *உன்பொன்னடிசேர்த்து ஒல்லை வேறேபோக எஞ்ஞான்றும் விடாதொழியவேணும்' என்ன, பெரியபெருமாளும் உகந்து (க) "சதுர்த்தேஸஹஸம்பூர்ணே" என்று *நாட்கடலாகத் தம்பிக்கு இட்டதாகாமல் (உ) "ஸப்தாஹம் ஜீவிதாவதி" என்கிறபடியே (௩) "கர்மபாஶப்ரக்ருதி:" என்ற இவர்க்கு 'இற்றைக்கு ஏழாநாள் அப்படியே செய்கிறோம்' என்ன, உடையவரும் '*நம்முடைய வாழ்வு வாய்க்கின்றவா!' என்று ஹர்ஷப்ரகர்ஷத்துடன் 'என்னுடைய ஸம்பந்தஸம்பந்திகளெல்லாரும் நான் பெற்ற லோகம் பெறவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, பெருமாளும் 'அப்படியே பெறக்கடவர்கள்' என்று திருவாய்மலர்ந்தருளி, உடையவர்க்குத் தீர்த்தம் திருமாலை திருப்பரியட்டம் *பூவார்கழல் ப்ரஸாதம் ப்ரஸாதித்தருளி விடைகொடுத்தருள, இவரும் 'மஹாப்ரஸாதம்!' என்று ஸார்வபௌமரான ராஜாக்கள் பக்கல் நின்றும் நாடுபெற்றவர்கள் பெரிய ப்ரீதியோடே ராஜபவநத்தில் நின்றும் புறப்படுமாபோலே *பொங்கோதஞ்சூழ்ந்த புவனியும்விண்ணுலகும் அங்காதுஞ்சோராமே ஆள்கின்ற எம்பெருமான் செங்கோலுடையதிருவரங்கச்செல்வனான ஸ்ரீரங்கராஜர்பக்கல்நின்றும் திருநாடாகிற மஹாராஜ்யத்தைப்பெற்று அந்தராஜகுலமாஹாத்ம்யத்தாலேவந்த ப்ரீத்யுத்ருதிதோன்ற ஸ்ரீரங்கராஜதாநியிலும் புறப்பட்டு மடமே யெழுந்தருளி அனைத்துக்கொத்திலுண்டானவர்களையும்சித்தமகிழ்ச்சியுடன் அனுப்பியருளி, ஶிஷ்யவர்க்கங்களாயுள்ளவரெல்லார்க்கும் ஒருகாலும் அருளிச்செய்யாத 'அர்த்த விசேஷங்களையெல்லாம் மூன்றுநாளாக ப்ரஸாதித்தருளி 'இவ்வர்த்தங்களையெல்லாம் நீங்களும் விஶ்வஸித்து உங்களைப்பற்றினார்க்கும் பரம்பரையாய் உபதேஶித்துப் போருங்கோள்' என்று அருளிச்செய்ய, முதலிகளெல்லாரும் அதிஶங்கைபண்ணி 'இது என்?' என்று விண்ணப்பஞ்செய்ய, 'இனி ஒளிக்கவொண்ணாது' என்று திருவுள்ளம் பற்றி 'இற்றைக்கு நாலாநாள் பெரியபெருமாள் திருவடிகள் ஏறப் போகநினையாநின்றோம்' என்று அருளிச்செய்தருள, இத்தைக்கேட்டு

(க) சதுர்த்தேஸஹஸம்பூர்ணே। (உ) ஸப்தாஹம் ஜீவிதாவதி। (௩) கர்மபாஶப்ரக்ருதி:।



முதலிகளெல்லாரும் கடல்கலங்கினாப்போலே கலங்கி 'உடையவர் வியோகத்திலே ஆத்மத்யாகம் பண்ணக்கடவோம்' என்று தேறியிருந்தமையைத் திருவுள்ளம்பற்றியருளி, உடையவரும் 'வாரீர்கோள் முதலிகாள்! நம்முடைய வியோகத்தில் ஆத்மத்யாகம்பண்ணினாருண்டாகில், பெரியநம்பி ஆளவந்தார் ஸ்ரீபாதமே! நம்மோடு அவர்களுக்கு ஸம்பந்தமில்லையாய் நித்ய ஸூரிகளோலக்கத்திலும் புகுரப்பெறாதே, நம் சடகோபர் திருவுள்ளத்தையும் மறுத்தவர்களாய் அத:பதிக்கக்கடவீர்கள்' என்று † அருளிச்செய்து அவர்களைத் தேற்றித் தரிக்கப்பண்ணினார்.

அநந்தரம் (க) "அத்யைவாஹங்கமிஷ்யாமி லக்ஷ்மணேநகதாங்கதிம்" என்கிறபடி தாமும் ஆழ்வான்வழியே பின்சென்று (உ) "இத்தம்ராப்தே ஸபதிபரமவ்யோம ஶிஷ்டாக்ரகண்யேகூராதீஶேநிஜமஶிகரவ்யாக்ரியாலம்படத்வம் - ஶிஷ்யஸ்தோமாங்ஶ்ருதிகுரு முகேராங்கிகாரயேணஸாகம்விந்யஸ்யோச்சை: பரமகமதாரோடுமைச்சத்யதீந்த்ர:" (௩) "காஸாராதிமதிவ்யஸூரிக்ருதிஸத் ஸோபாநபத்தாம்த்வய ஸ்ரீமந்த்ரோபயபார்ஶ்வதண்டகடிதாம் ஸ்ரீபாஷ்யகீலஸ்திராம் - நிஶ்ரேணிம் நிகிலோஜநஶ்சபரமவ்யோமஸ்தலீப்ராபிகாம் ஸ்வஸ்வாசார்யநிரூபிதார்

(க) அத்யைவாஹங்கமிஷ்யாமி லக்ஷ்மணேந கதாங்கதிம்। (உ) இத்தம் ப்ராப்தே ஸபதி பரமவ்யோம ஶிஷ்டாக்ரகண்யே கூராதீஶே நிஜமஶிகரவ்யாக்ரியாலம்படத்வம்। ஶிஷ்யஸ்தோமாந் ஶ்ருதிகுருமுகேராங்கிகாரயேண ஸாகம் விந்யஸ்யோச்சை: பரமகமதாரோடுமைச்சத்யதீந்த்ர:॥

(௩) காஸாராதிமதிவ்யஸூரிக்ருதிஸத்ஸோபாநபத்தாம்த்வய ஸ்ரீமந்த்ரோபயபார்ஶ்வதண்டகடிதாம் ஸ்ரீபாஷ்யகீலஸ்திராம்। நிஶ்ரேணிம் நிகிலோஜநஶ்ச பரமவ்யோமஸ்தலீப்ராபிகாம் ஸ்வஸ்வாசார்யநிரூபிதாம் ஸுவஶத: ப்ராப்யாயியோஜேஷ்டதா॥

† இவ்விடந்தொடங்கி 'அநந்தரம் ஸமூஹத்திலுண்டான ஸ்ரீ வைஷ்ணவர்களைப் பார்த்துப் பின்னையும்' என்று வருகிற வரையிலுமுள்ள க்ரந்தங்கட்குப் பதிலாக 'அருளிச்செய்ய, பின்னையும் அவர்கள் போரவிஷண்ணராய் 'இனி அடியோங்களுக்குச் செய்ய அடுப்பதென்?' என்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் 'பட்டினி புகுதல், பட்டினிவிடுதல்செய்யு மத்தனையோ!' என்று சில ப்ரதிகளின் பாடம்.

த்தவமுத: ப்ராப்யாதிரோஹத்ஸதா'', (க) ''இத்யாஸாஸ்யஸரஸ் ஸடாந்தகமுக ஸ்ரீதிவ்யஸூர்யாக்ருதீ ராசார்யஸ்யசதத் ப்ரபந்த நிவஹைஸ்ஸார்த்தம்ப்ரதிஷ்டாப்யச- ஸ்ரீரங்காதிமதாமஸு ஸ்வயமபூச் ச்ரீ திவ்யஸூரிவ்ரஜைஸ் ஸாகம் தத்பரமம்பதம்ஜிகமிஷுஸ் ஸ்ரீமாந் ஸராமாநுஜ:'' என்கிறபடியே இங்குச் செய்யவேண்டுங் கார்யங்களெல் லாஞ் செய்து தலைக்கட்டி க்ருதக்ருத்யராய் நாலாநாள் அங்கே திருநா டேற வெழுந்தருளத் திருவுள்ளமாயிருக்க,

அவ்வளவிலே பெரியபெருமாளைத் திருவாராதநம் பண்ணிப் போரும் ஸ்ரீரங்கராஜபட்டர் பெரியபெருமாள் பட்டர் முதலானோர் பெரியபெருமாள் *உடுத்துக்களைந்த பீதகவாடை *சூடிக்களைந்த திவ் யமால்யப்படி. சாத்துப்படிகள் அவர்ப்ரஸாதம் தொடக்கமான ப்ரஸாத விஶேஷங்களையும் போரத் தளிகையிலே எடுப்பித்துக்கொண்டு ஸர்வ வாத்யகோஷத்துடன், கொண்டுவந்து ப்ரஸாதித்தவற்றை ஶிரஸாத ரித்து ஸேவித்து ஸ்வீகரித்த அநந்தரம் அவர்களுக்கு உகப்பான பாஞ்சராத்ர ஸம்ஹிதைகளில் ஜ்ஞாந காண்டங்களை அநுஸந்தித்து ஸேவித்துக்கொண்டிருந்து ஏவம்விதமான தூர்யகோஷத்தைக்கேட்டு ஹ்ருஷ்டராய் வைகுண்ட நிர்யாணநிரதராய். அதுக்கு ப்ரயாணபாதே யமானத்வயத்தை ஆவ்ருத்தி பண்ணுகிற்கிறவர் தடஸ்தரைக் கடா க்ஷித்தருளித் தாம்ரஸ்தமான கூடஸ்த ஸ்ரீஸூக்தியையும் ஸ்ரீபாஷ்யத் தையும் க்ஷேமமானநிக்ஷேபமாக ஸ்தாபிக்கும்படி ஆஜ்ஞாபித்து, ஸ்ரீபாஷ்யத்தை வர்த்தித்து நடத்திக்கொண்டு போரும்படி நடாது ராழ்வானைக் கடாக்ஷித்து, அவர்க்கு (உ) ''ஸத்குர்வதாஸம் ஸதிஶிஷ்ய வர்க்கா நநந்யலப்யைரதிகைஶ்சஸித்தை: - ஸ்ரீபாஷ்யஸிம்ஹாஸநமாத் மீயம் யஸ்மைசதத்தம்யதிஶேகரேண'' என்னும்படி ஸ்ரீபாஷ்ய ஸிம்

(க) 𑌇𑌤𑍍𑌯𑌾𑌶𑌾𑌸𑍍𑌯 𑌸𑌰𑌸𑍍𑌸𑌠𑌾𑌨𑍍𑌤𑌕𑌮𑍁𑌖𑌶𑍍𑌰𑍀𑌦𑌿𑌵𑍍𑌯𑌸𑍂𑌰𑍍𑌯𑌾𑌕𑍃𑌤𑍀𑌰𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌚 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌬𑌨𑍍𑌧𑌨𑌿𑌵𑌹𑍈𑌸𑍍𑌸𑌾𑌰𑍍𑌧𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌪𑍍𑌯 𑌚 । 𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑌾𑌦𑌿𑌮𑌹𑌾𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑌸𑍁 𑌸𑍍𑌵𑌯𑌮𑌭𑍂𑌚𑍍𑌛𑍍𑌰𑍀𑌦𑌿𑌵𑍍𑌯𑌸𑍂𑌰𑌿𑌵𑍍𑌰𑌜𑍈𑌸𑍍𑌸𑌾𑌕𑌂 𑌤𑌤𑍍𑌪𑌰𑌮𑌂 𑌪𑌦𑌂 𑌜𑌿𑌗𑌮𑌿𑌷𑍁𑌸𑍍 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 𑌸 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌃 ॥

(உ) 𑌸𑌦𑍍𑌗𑍁𑌰𑍍𑌵𑌤𑌾𑌸𑌂𑌸𑌦𑌿𑌶𑌿𑌷𑍍𑌯𑌵𑌰𑍍𑌗𑌾𑌨𑌨𑌨𑍍𑌯𑌲𑌭𑍍𑌯𑍈𑌰𑌧𑌿𑌕𑍈𑌶𑍍𑌚𑌸𑌿𑌦𑍍𑌧𑍈𑌃 । 𑌶𑍍𑌰𑍀𑌭𑌾𑌷𑍍𑌯𑌸𑌿𑌂𑌹𑌾𑌸𑌨𑌮𑌾𑌤𑍍𑌮𑍀𑌯𑌂 𑌯𑌸𑍍𑌮𑍈 𑌚 𑌦𑌤𑍍𑌤𑌂 𑌯𑌤𑌿𑌶𑍇𑌖𑌰𑍇𑌣 ॥



ஹாஸநத்தை ப்ரஸாதித்து, அநந்தரம் முந்தறப்ரஸாதித்த வேதாந்தா சார்ய பதத்திற்குமேல் (க) ''கிந்துப்ரபத்திபலதாரிதவிஷ்ணுமாய மத் வம்ஶ்யராஜகுல'' என்னும்படியான ராஜகுலமாஹாத்ம்யத்தை யுடைய ராகையாலே ப்ரபத்யர்த்தப்ரதிபாதகமாய் ப்ரமாணசரமமான ஸ்ரீஸூக் திஸிம்ஹாஸனத்தையும் அந்தப்பெரியபரிஷத்திலே பெரியபட்டர்க்கு இட்டருளி, கந்தாடை யாண்டானைக் கடாக்ஷித்து ப்ரமாத்ருசரமமான தம்முடைய சரமவிக்ரஹ கைங்கர்யத்தைக் கல்பித்தருளி, திருக்குரு கைப்பிரான் பிள்ளான் முதலான முதலிகளைப் பார்த்து பட்டர்க்கு இஷ்டமாயிருங்கோள்' என்று அருளிச்செய்து, கோயிலனைத்துக்கொத் தையும் அழைப்பித்து அபராதக்ஷாபணம் பண்ணிக்கொண்டு வேண் டிக்கொள்ள, அவர்களும் 'தேவரீருக்கு ஒரு அபராதமுண்டோ? *உலகங்கட்கெல்லாம் ஓருயிரான தேவரீரை' இழந்து எங்ஙனே தரிப் போம்?' என்று * கண்பனிசோரநிற்க, உடையவரும் '*அன்பொடு தென்திசைநோக்கிப் பள்ளிகொள்ளும் அணியரங்கனிருக்க, உங்க ளுக்கு ஒரு தாழ்வில்லை; பெரியபெருமாள் ஸ்ரீகார்யம் ஆராயுமிடத்துப் பட்டரை முன்னிட்டு ஆராய்ந்துபோருங்கோள்; நம்பெருமாள் கைங் கர்யத்தைக் குறைவற நடத்திக்கொண்டு ஸ்ரீவைஷ்ணவர்களையும் வர வணைத்துக்கொண்டு போருங்கோள்' என்று கல்பித்தருளி, அவர் களைப் பட்டர் திருக்கையிலேகாட்டிக்கொடுத்தருளி, பட்டரைப்பார்த் தருளி 'உமக்குத்* தந்தையும்தாயுமாவாராய் ப்ரமேயசரமமான பெரிய பெருமாள் திருவாராதநத்தைப் பெருக்க நடத்திக்கொண்டு, நம்மு டைய தர்ஶநத்தையும் நன்றாய்ப்பராமர்ஶித்து நடத்திக்கொண்டு போரும் என்று நியமித்தருளினார்.

அநந்தரம் ஸமூஹத்திலுண்டான ஸ்ரீவைஷ்ணவர்களைப் பார்த் துப் பின்னையும் அவர்களுக்கு அருளிச்செய்தபடி:—'ஒருவன் ப்ரபந் நனால் அவனுடைய ஆத்மயாத்ரை ஈஶ்வராதீநமாகையாலே அதுக் குக் கரைய வேண்டா; கரைந்தானாகில் ஆத்மஸமர்ப்பணம் பொய்யா யித்தனை. இனி இவனுடைய தேஹயாத்ரை கர்மாதீநமாகையாலே, அதுக்குக் கரையவேண்டா; கரைந்தானாகில், நாஸ்திகனுமித்தனை. ஆகையாலே, உபயயாத்ரையிலும் இவனுக்கு அந்வயமில்லை' என்று

(க) 𑌕𑌿𑌨𑍍𑌤𑍁 𑌪𑍍𑌰𑌪𑌤𑍍𑌤𑌿𑌬𑌲𑌧𑌾𑌰𑌿𑌤𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌮𑌾𑌯𑌮𑌤𑍍𑌵𑌂𑌶𑍍𑌯𑌰𑌾𑌜𑌕𑍁𑌲 ।

அருளிச்செய்ய, முதலிகளும் 'ஆகில், எங்களுக்கு இருக்கும் நாளைக்குக் காலக்ஷேபமிருக்கும்படி எங்ஙனே?' என்ன, உடையவரும், 'உபாயாம்ஸத்தில் அந்வயியாதே ப்ராப்யமான பகவத்பாகவத கைங்கர்யத்திலே அந்வயியுங்கோள். ப்ரபந்நாதிகாரிக்கு முன்னடிபார்த்து வர்த்திக்கவேண்டுவன-மூன்று விஷயமுண்டு; அவையாவன-அநுகூலரென்றும், ப்ரதிகூலரென்றும், அநுபயரென்றும்; அநுகூலராவார்-ஸ்ரீவைஷ்ணவர்கள்; ப்ரதிகூலராவார்-பகவத் த்வேஷிகள்; அநுபயராவார் - ஸம்ஸாரிகள். இதில், அநுகூலரைக் கண்டால் சந்தந குஸுமதாம்பூலாதிகளைக் கண்டாற்போலவும், நிலாத் தென்றல்களைக் கண்டாற்போலவும், அபிமதவிஷயத்தைக் கண்டாற்போலவும் உகந்துபோரக்கடவன்; ப்ரதிகூலரைக்கண்டால் ஸர்ப்பாக்நிகளைக் கண்டாற்போலே வெருவி வர்த்திக்கக் கடவன்; அநுபயரைக் கண்டால் காஷ்ட லோஷ்டாதிகளைக் கண்டாற்போலே த்ருணீகரித்து வர்த்திக்கக்கடவன். அவர்கள் அநுகூலித்தார்களாகில் ஆத்மஜ்ஞாநத்தை உபதேசிக்கவும்; அநுகூலியார்களாகில் ஐயோ! என்று க்ருபைபண்ணிப்போரவும். இப்படி செய்ய வொட்டாதொழிகிறது, அர்த்தகாமப்ராவண்யம். அர்த்தகாமமடியாக ஸ்ரீவைஷ்ணவர்களை அநாதரிக்குமாகில், ஸார்வபௌமனை ராஜபுத்ரனை ராஜஸந்நிதியிலே பரிபவித்தால் ராஜா வெறுத்திருக்குமாபோலே எம்பெருமான் திருவுள்ளம் வெறுக்கும். அர்த்தகாமமடியாக ப்ரதிகூலரை ஆதரிக்குமாகில், ஸார்வபௌமனை ராஜாவின் மஹிஷீக்ஷுத்ர ஜந்துக்கள் பக்கல் மடிப்பிச்சைபுக்கால் ராஜாவுக்கு அவத்யமாகையாலே ராஜா வெறுக்குமாபோலே எம்பெருமான் இவனை வெறுத்திருக்கும்; அர்த்தகாமமடியாக அநுபயரை ஆதரிக்குமாகில், ரத்நத்திற்கும் பலகறைக்கும் வாசியறியாதாப்போலே பிறந்தஜ்ஞாநம் கார்யகரமாய்த் தில்லையென்று எம்பெருமான் இவனை அநாதரிக்கும்' என்று அருளிச் செய்தருளினர்.

பின்பு எம்பெருமானார் நம்பெருமாள் ஸந்நிதிக்குப் பட்டரைக் கூட்டிக்கொண்டு எழுந்தருளிப் பெருமாளை ஸேவித்து, பட்டருக்கு முன்னாகத் தீர்த்த ப்ரஸாதங்களை ப்ரஸாதிப்பித்து, பின்பு தாமும் தீர்த்தப்ரஸாதம் பெற்று, முதலிகளைக் குறித்து 'முன்னுக்குத் தர்ஸநப்ரவர்த்தகராவார் இவர்' என்று பட்டரைக் காட்டியருளி, 'வாரீர் பட்டரே! மேல்நாட்டிலே வேதாந்தி யென்று ஒரு பெரிய வித்வான்



இருக்கிறானென்று கேட்டோம். நீர் அங்கேறப் போய் அவனை நம் தர்ஸநப்ரவர்த்தகனும்படி திருத்தும்' என்று அருளிச்செய்து, பட்டரையுங் கூட்டிக்கொண்டு மடமே யெழுந்தருளி, ஸ்ரீபாதத்து முதலிகளெல்லாரையும் அழைத்து 'நம்முடைய விஸ்லேஷத்தில் அவிவேகம் பண்ணினீர்களாகில் நம்மாணை' என்று ஆஜ்ஞாபித்து, எல்லார் கையாலும் தம் திருவடிகளைத் தொடுவித்துச் சூளுறவு கொண்டு, முதலிகளைத் தீர்த்தங்கொண்டு அமுது செய்யப்பண்ணி, பிள்ளைப் பிள்ளையாழ்வான் உக்கலாழ்வான் கோமடத்தாழ்வான் சேட்டலூர்ச்சிறியாழ்வான் வேதாந்தியாழ்வான் முதலானவர்களைக் கந்தாடையாண்டான் திருக்கையிலே காட்டிக்கொடுத்தருளியும், எச்சான் அநந்தாழ்வான் தொண்டனூர்நம்பி மருதூர் நம்பி முதலானவர்களை அருளாளப்பெருமாளெம்பெருமானார் திருக் கையிலே காட்டிக்கொடுத்தருளியும், பட்டர் கணியனூர்ச் சிறியாச்சான் சட்டம் பள்ளிச்சீயர் பெரியாண்டான் சிறியாண்டான் முதலானவர்களை எம்பார் திருக்கையிலே காட்டிக் கொடுத்தருளியும், கிடாம்பியாச்சான் கிடாம்பிப் பெருமாள் எங்களாழ்வான் நடாதூராழ்வான் முதலானவர்களைத் திருக்குருகைப்பிரான்பிள்ளான் திருக்கையிலே காட்டிக்கொடுத்தருளியும், மாருதிப்பெரியாண்டான் மாறொன்றில்லாமாருதிச்சிறியாண்டான் அரணபுரதாழ்வான் ஆசூரிப்பெருமாள் முனிப் பெருமாள் அம்மங்கிப் பெருமாள் முதலானவர்களை நடுவிலாழ்வான் திருக்கையிலே காட்டிக்கொடுத்தருளியும், இன்னும் இருந்தவர்களை இருந்தவர்கள்கையிலே காட்டிக்கொடுத்தருளியும்;

பின்பு பட்டரைப் பார்த்தருளி 'கூரத்தில்ஆழ்வானையும் கந்தாடை ஆண்டானையும்போலே, கூரகுல திலகரான நீரும் வாதூலகுல திலகரான கந்தாடையாண்டானும் நம்மடியாகவுண்டான ஸௌப்ராத்ரத்தையுடையராய், (க) "மச்சித்தாமத்கதப்ராணா: போதயந்த:பரஸ்பரம்" என்னும்படியாயிருங்கோள்' என்று அருளிச்செய்து, ஸ்ரீவைஷ்ணவர்களைப்பார்த்து' (உ)"படித்வாபாஷ்யந்தத்ப்ரவசநமுகக் தௌஸ்டரீபோர்கிரிஸ்ரத்தாவாஸ:ப்ரபுபரிசிதஸ்தாநநிவஹே-ப்ரபோ:

(க) मच्चित्ता मद्गतप्राणाः बोधयन्तः परस्परम्।

(உ) पठित्वा भाष्यं [illegible]

கைங்கர்யம்வாப்ரபதநமநோரத்தமநகம் ப்ரபந்நாநாம்வாமேபவதுபரிசர்யாபரிசய꞉-குடீங்க்ருத்வாதஸ்மிந்யதிகிரிதடேநித்யவஸதிஷ் ஷடர்த்தாம்ஶ்ரீமஸ்யப்ரபந்நவிதேஸாதகதம꞉'' என்று இருக்கும்நாள் பண்ணலாங்கைங்கர்யம் ஆறு உண்டு; அவையாவன-ஸ்ரீபாஷ்யத்தை வாசித்தும் வாசிப்பித்தும் போருகை; அதற்கு யோக்யதையில்லாவிடில், அருளிச்செயலை ஓதியும் ஓதுவித்தும் போருகை; அதற்கும் யோக்யதையில்லாவிடில், உகந்தருளின நிலங்களிலே அமுதுபடி சாத்துப்படி முதலானவற்றையுண்டாக்கி நடத்திக்கொண்டுபோருகை; அதற்கும் யோக்யதையில்லையாகில்,† திருநாராயணபுரத்திலே ஒருகுடில் கட்டிக்கொண்டிருக்கை; அதற்கும் யோக்யதையில்லையாகில், த்வயத்தை அர்த்தாநுஸந்தாநம் பண்ணிப் போருகை; அதற்கும் யோக்யதையில்லையாகில், என்னுடையவனென்று அபிமாநிப்பான் யாவனொரு பரமபாகவதன், அவனுடைய அபிமாநத்திலே ஒதுங்கிப்போருகை' என்றும், இவற்றின் ப்ரியப்ரியதர ப்ரியதமங்கள் இன்னதென்றும், ''ப்ராப்திப்ரதிபந்தகமான பகவத் பாகவத ஆசார்யவிஷயங்களில் அபசாரத்தை வருந்தியும் பரிஹரித்துப் போருங்கோள்' என்றும் இவை முதலானவைகளாயுள்ள அநேக ஹிதங்களை ப்ரஸாதித்து அவற்றை உபஸம்ஹரித்தருளினர்.

‡''அநந்தரம் ஸகலமங்களவாத்யங்களும் ஆரவாரிக்க, அநேகதிவ்யப்ரபந்தாநுஸந்தாநத்வநி எங்கும் பூரிதமாக, அலங்காரத்திருமஞ்ஜநங்

---

[illegible]

†'ஶ்லோகத்தில் ஆறுவதாகச் சொல்லியிருக்கிற விஷயத்தை இங்கே நான்காவதாகச் சொல்லியிருப்பது ''பாடக்ரமாபேக்ஷயா அர்த்தக்ரமஸ்ய பலீயஸ்த்வம் [-பதங்களிருக்கின்ற முறைமையைவிட அர்த்தங்கொள்ளும்முறை சிறந்தது]'' என்ற நியாயம்பற்றி; திவ்யதேஶங்களில் கைங்கர்யஞ் செய்ய வலிமையில்லாதவனுக்கு அதில் ஓரிடத்தில் நித்யவாஸஞ்செய்கையை விதிப்பதே முறைமையாதலால்' என்று பெரியோர் கூறுவர்.

‡ இந்தப் பாராவுள்ள இடத்தில் சிலப்ரதிகளில் 'கோயிலுக்கு நேரே எம்பார்மடியிலே திருமுடியும் வடுகநம்பி திருமுடியிலே திருவடிகளுமாகக் கண் வளர்ந்தருளி, ஸ்ரீபாதத்து முதலிகள் ப்ருஹ்மவல்லி ப்ருகுவல்லி சூழ்விசும்டணி முகில் முதலானவற்றை ஸேவித்தருள, ஶிரஃகபாலம் பேதித்து ப்ருஹ்மரந்த்ரத்தாலே உடையவர் திருநாட்டுக்கு எழுந்தருள,' என்று பாடம்.



கண்டருளித் திருவொற்றாடைசாத்தித் திருப்பரியட்டஞ்சாத்தி, ஶாஸ்த்ரஸமநபூர்வகமாக நித்யாநுஷ்டாநங்கள் நடத்தியருளுகையில் அஶக்திபாராமல் அர்க்யத்தையும் உத்திஷ்டமாநராய்நின்றே செய்தருளித் தச்சேஷத்தையுந் தலைக்கட்டியருளி, திருத்வாதஶநாமங்களையுந் தரித்தருளி, திருமணிவடம் திருப்பவித்ரம் திருமாலைப்ரஸாதம் பரியட்டப்ரஸாதங்கள் முதலானவற்றையுஞ் சாத்தியருளி, தீர்த்தங்களும் ஸ்வீகரித்து, குருபரம்பராபூர்வகமாக ரஹஸ்யத்ரயத்தையும் ஸார்த்தமாக அநுஸந்தித்து, பெரியபெருமாள் திருவடிகளை உத்தேஶித்துத் தண்டன் ஸமர்ப்பித்து, முதலிகளையும் அநுவர்த்தித்து அநுமதி கொண்டு ஆளவந்தார் திவ்யமங்களவிக்ரஹத்தை த்யாநித்துக்கொண்டு பத்மாஸநஸ்தராய் எழுந்தருளியிருந்து பரவாஸுதேவரிடத்திலே பரமபக்திநடந்து செல்ல, அநந்தரம் யோகத்தில் பரமயோகியான தம்மைப் பரமயோகிகம்யவிஷயமான தத்விஷயத்திலே விநியோகித்து, பின்பு (க) ''பத்மநேத்ரேந்யமீலயத்'' என்கிறபடியே திருக்கண்களைச் செம்பிளித்தருளிப்பரவஶக்ராத்ரராய், எம்பார் திருமடியிலே திருமுடியும் வடுகநம்பிதிருமடியிலே திருவடிகளுமாகக் கண்வளர்ந்தருளி, (உ) ''மாகஶுத்ததஶம்யாந்து மத்யாஹ்நேமந்தவாஸரே - யோகிராஜஸ் ஸ்வபோகீஶபாவம்ஸ்வேபேஶம்ப்பமாத்'' என்னும்படியான திவஸத்திலே தம்முடைய பூர்வாவதாரமான * ஆயிரஞ்சுடர்வாய் அரவணையோடே நம்பிமூத்தபிரானைப்போலே எம்பெருமானாரான இவரும் கூடியருளினர். இவ்வ்ருத்தாந்தத்தைப் பின்னும்:— ''பின்பு மன்பருடன்களித்த சீர்பெரும்பூதூரெதிராசன், இன்ப முடனு மிசைந்தொருநூற் றிருப தாண்டிங் கிருந்ததற்பின், அன்பராழ்வாரணண்டானற் குமரர்க்கடியார்முடிபுனைந்து, மன்பதையை வாழ்வித்தாங் கமருமெனவாழ்வித்தருளா,'' ''ஆராமஞ்சூழரங்கர்தமை யலர்மாமகளையடியிறைஞ்சித், தாரீர்சரணந்தனையென்னத் தந்தோமெனலுமெதிராசன், பாரோர்பரவும்பாகவதர் பிரிவால் பரிவில்படர்கூரச், சீரார்திருநாடடைந்திருந்த சீடனுடனே சேர்ந்தனனால்.'' இப்படி சொல்லப்படு

---

(க) [illegible] (உ) [illegible]

மதான வைபவத்தையுடைய இவரும் (க) "யதாபாதோதரஸ் த்வசா நிர்முக்த꞉" என்றும், (உ) "யாவஜ்ஜிஹாமிகாத்ராணிஜீர்ணாந் த்வசமிவோரக꞉" என்றும் சொல்லுகிறபடியே (௩) "ஜீர்ணமிவவஸ்த்ரம் ஸுகேநேமாம்ப்ரக்ருதிம் ஸ்தூலஸூக்ஷ்மரூபாம் விஸ்ருஜ்ய" என்று ஸுகமாகவே திருமேனியை உபேக்ஷையோடே விட,

அநந்தரம் கந்தாடையாண்டான் அருளாளப்பெருமாளெம்பெருமானார் எம்பார் வடுகநம்பி முதலான முதலிகளெல்லாரும் கோஷித்துக்கொண்டு வேரற்றமரம்போலே விழுந்து கிடந்து துடித்து, திருமிடறு தழுதழுப்பத் திருமூக்குவெப்படிக்க அவஶராய்க் கிடந்து * இட்ட கால் இட்ட கைகளாய்ச் * சிந்தித்துத் திகைத்து, * இணைமலர்க்கண்ணீர்ததும்பத் தாராவர்ஷமாகத் திருமுத்துதிர்த்து ப்ரலாபித்து, 'இவர் அவதாரத்தில் "தீர் லப்தா" என்றும், இவர் அந்திமதசையில் 'தர்மோ நஷ்ட꞉ என்றும் இப்படி வருவதே!' என்று ஆஶ்சர்யப்பட்டு விஷண்ணராயிருக்க, அவ்வளவிலே பெருமாளும் 'நம்முடையவரை யிழந்தோமே!' என்று திருவுள்ளம்நொந்து 'நமக்குச் செவ்வாய்வக்ரமாய்த்து' என்று சருளமுதும் அமுதுசெய்யாமல் நாச்சிமாருடனே புறப்பட்டருள, அவ்வளவில் பராங்குசன் பரகாலன் முதலான ஆழ்வார்கள் பதின்மர்களும் ஸேவித்துச்செல்ல, ஆயிரக்கால் திருமண்டபத்திலே எழுந்தருளியிருந்து, திருமுத்தின்பணி காளாஞ்சி திருவெண்சாமரம் திருவாலவட்டம் திருவெண்கொற்றக்குடை வெண்முத்தின்கலசம் திருமேற்கட்டு முத்துத்தாமம் தொடக்கமானவையும், * உடுத்துக்களைந்த பீதகவாடை, * சூடிக்களைந்த தொடுத்த துழாய்மலர், * எண்ணெய் சுண்ணம் எல்லாம் பொற்றளிகையிலே கொண்டுபோம்படி உத்தமநம்பிக்கு விடைகொடுத்தருள, நம்பியும் அப்படியே தரித்துக்கொண்டு பெருமாள்பரிகரம் அனைத்துக்கொத்தோடும் ஸகல வாத்யத்துடனே மடத்துவாசலிலே செல்ல, அதுகண்டு முதலிகளெல்லாரும் தேறிநின்று 'இனிச்செய்யவேண்டுங் க்ருத்யத்தைச் செய்யவேணும்' என்று எம்பெருமானாருடைய விமலசரமவிக்ரஹத்தைத்

(க) யதா பாதோதரஸ் த்வசா நிர்முக்த꞉। (உ) யாவஜ்ஜிஹாமி காத்ராணி ஜீர்ணாந் த்வசமிவோரக꞉। (௩) ஜீர்ணமிவ வஸ்த்ரம் ஸுகேநேமாம் ப்ரக்ருதிம் ஸ்தூலஸூக்ஷ்மரூபாம் விஸ்ருஜ்ய।



தூய்தாக நீராடப் பண்ணிவைத்து அலங்கரித்துக் கேஶவாதித்வாதஶோர்த்வபுண்ட்ரங்களையுஞ்சாத்தி, பெருமாள் சாத்திக்களைந்து வரவிட்டருளின * பெருமானரையிற் பீதகவண்ணவாடைகொண்டு திருமுடியிலே சாத்தி, அவன்மார்வணிந்த வநமாலையும் சாத்தி அலங்கரித்து, உடையவர் திருவடிகளைத் தங்கள் கண்ணிலும் மார்பிலும் நெஞ்சிலும் ஒற்றிக்கொண்டு, ஆசார்யவிஶ்லேஷாஸஹிஷ்ணுக்களாய், '* ஐயோ! கண்ணபிரான்! அறையோ! * முறையோ! அரவணைமேற் பள்ளிகொண்ட முகில்வண்ணனே!' என்று கையெடுத்துப் போரப் பெருமிடறுசெய்து கூப்பிட்டு மூர்ச்சித்துக்கிடக்க, அருகிருந்த முதலிகள் வந்து எடுத்துத் தேற்ற, தேறிநின்று உடையவர்க்குச்சாத்திக்களைந்து தச்சேஷமாயிருந்துள்ள * எண்ணெய் சுண்ணம் திருமண் ஸ்ரீசூர்ணங்களை எல்லாரும் ப்ரஸாதப்பட்டுத் தீர்த்தங்கொண்டு, திருக்குருகைப்பிரான் பிள்ளான் திருக்கையாலே ஆளவந்தார்க்குப்போலே உடையவர்க்கு ப்ரஹ்மமேதத்தாலே ஸம்ஸ்கரித்து, பீடயாநமான திவ்யவிமாநத்திலே ஏறியருளப்பண்ணி, ஸகல வாத்யங்களும் முழங்க, பெருமாள் பரிகரமுடைய சத்ர சாமர தாலவ்ருந்தாதிகளைத் தரித்து ஸேவிக்க, அவ்வளவிலே ஆட்கொண்ட வில்லிசீயர் யதிவரசீயர் உள்ளிட்ட எழுநூறு சீயர்களும் ப்ரஹ்மவல்லி ப்ருகுவல்லி நாராயணாநுவாகம் முதலான உபநிஷத்துக்களை ஓத, பட்டர் கந்தாடையாண்டான் நடாதூராழ்வானுள்ளிட்ட முதலிகளுந் தத்தத்பரிசர்யாஸாதநங்களை தரித்துக்கொண்டு பரிவுடன் பரிவ்ருதராய் ஸேவித்துக்கொண்டுவர, மற்றுமுண்டான உபவீததாரிகளான ஸ்ரீவைஷ்ணவர்கள் ஒன்பதினாயிரம்பேரும் தத்பாவரான ஸ்ரீவைஷ்ணவர்கள் பன்னீராயிரம்பேரும் அருளிச்செயல் மூவாயிரமும் முன்னடி பின்னடியாக ஸேவிக்க, திருவரங்கப்பெருமாளரையர் பரிகரமான திருவாய்மொழியரையர் ஆப்பான் திருவழுந்தூரரையர் திருநறையூரரையர் அழகிய மணவாளரரையர்முதலான எழுநூறு திருவாய்மொழி விண்ணப்பஞ்செய்யுந்தம்பிரான்மார் பண்ணிசைதாளத்துடன் திருவாய்மொழிபாட, திருவரங்கத்தமுதனார் †பொய்யில் வள்ளலார் தொடக்கமானவர்கள் உடையவர் நூற்றந்தாதி ஸேவிக்க, எம்பார் பிள்ளான் உள்ளிட்டவர்கள் தததிகப்ரீதிஹேதுவான ஸ்தோத்ரகத்யங்களை ஸேவிக்க, வடுகநம்பியும்

† 'பெரியகோயில்வள்ளலார்' என்று அநேகப்ரதிகளிற் பாடம்.

ராமாநுஜதாஸரான கோமடத்துச்சிறியாழ்வானும் உடையவர் ப்ரபத்தியை அநுஸந்தித்துக்கொண்டு வர, திருவீதியெங்குங் கோடித்துப் பொரியும் புஷ்பமும் சிதற, நடைபாவாடையிட்டு, கரும்பும் குடமும் வந்த, திருப்பதியில் ஸுமங்கலிகள் மங்களதீபமேந்தி முன்னே செல்ல இருபக்கமும் சாமரமிரட்டிக்க, வெள்ளைவட்டமிட, 'தர்ஶநத்தில் எம்பெருமானார் திருநாட்டுக்கு எழுந்தருளினார்' என்று ஒற்றைத்திருச்சின்னம் பணிமாற' திருவீதிகள்தோறும் எழுந்தருளுவித்துக்கொண்டு போய், ‡(பெரியபெருமாளும் அந்தத் திருமேனியில் அபிமத விஷயத்தில் அழுக்கு உகக்குமாபோலே அதிசபலராய் "மங்கவொட்டு" என்னும்படி இவர் விக்ரஹத்தை ஆகரித்துப் புறம்பே கொண்டுபோகவொட்டாமல், அந்தஃபுர மஹிஷிகளைத் தத்பரிஸரத்திலே ஆராமத்திலே அடக்கி வைக்குமாபோலேயும், நிதியை உள்ளே இட்டு வைக்குமாபோலேயும், லக்ஷ்மீதுல்யராம்படியான லக்ஷணங்களையுடையராய் விலக்ஷணமான நிதிபோலே "இராமாநுசன் என்தன்மாநிதி," "இராமாநுசன் என்தன்சேமவைப்பு" என்னும்படியான இவர் திருமேனியையும் ஆழ்வார்திருமேனியை ஆவரணத்துக்குள்ளே பள்ளிபடுத்தாற்போலே ஆவரணத்துள்ளில் உட்கோப்பிலே அந்தரங்கமாக, கௌந்தேயனான அர்ஜுநனைப்போலே அந்தரங்கரான கந்தாடையாண்டான் திருமுடிகாத்துநோக்க,) ததநுகுணமாக யதிசம்ஸ்காரவிதியடங்கச்செய்து நிதித்துப்பள்ளிபடுத்தருளினார்கள்.

‡(இப்படி நிதியை நிக்ஷேபித்தவநந்தரம் பெருமாளும் நாச்சிமாருடனேகூடத் திருமஞ்சனங்கண்டருளித் திருமுத்துநிர்த்துத் திருமுகங்கன்றிச் சுருளமுதும் அமுது செய்யாமல் அலப்புப்படவிடத் திருவுள்ளமாய், கந்தாடையாண்டான் பட்டர் முதலானாரைப் பார்த்து 'நம்முடைய அவப்ருதோத்ஸவங் கொண்டாடுமாபோலே நம் உடையவர்க்கும் அவப்ருதோத்ஸவங் கொண்டாடுங்கோள்' என்று திருவுள்ளம்பற்றிச் சேர்த்தியிலே ஏறியருளி உடையவர்க்கு அக்காரவடிசில் தளிகை அனுப்பியருளினார்.)

§ அநந்தரம் கந்தாடையாண்டான் தொடக்கமான அனைவரும் புத்ரஶிஷ்யர் செய்யுங் காரியங்களையெல்லாஞ் செய்துகொண்டு அவப்ருதஸ்நாநமாக எல்லாரும் நீராடியருளித் தத்விஶ்லேஷாஸஹராய்ப் பரிதபித்துக்கொண்டிருக்க, பின்பு ஆண்டான் நம்பெருமாளநுமதியுடனே எம்பெருமானாரை எல்லாரும் ஸேவித்து உஜ்ஜீவிக்கும்படி மீளவும் அவ்விடத்திலே ஆவிர்ப்பவித்தாப்போலேயிருக்க அர்ச்சாவதாரமாக ஏறியருளப்பண்ணி ப்ரதிஷ்டிப்பித்தருளினார். (க) "ஸ்வாவதாரஸ்தலேZர்ச்சாZபூத் ஸ்ரீரங்கேசயதீஶ்வர: - யஸ்முதேதங்குணாவாஸம் ராமாநுஜகுரும்பஜே" என்றார்கள்.

†அநந்தரம் ஶாஸ்த்ரார்த்தமான கைங்கர்யங்களையும் ஆப்தரான தாங்கள் ஸமாப்தமாகநடத்தி, பட்டரும் கந்தாடையாண்டானும் மிகவும் ஸௌப்ராத்ரத்தையுடையராய், உடையவர்காலத்தில் அர்த்தவிஶேஷங்களையும் ஒருவர்க்கொருவர் உசாவிக்கொண்டு, ராமக்ருஷ்ணாதிகளுடையபுநர் வஸ்வாதி திருநக்ஷத்ரங்களோபாதியும் ஆழ்வார்களுடைய ஶ்ரவணாதி திருநக்ஷத்ரங்களோபாதியும் இவருடைய சித்திரையில் திருவாதிரையையும் மற்றும் மாஸந்தோறும் வருவதான அந்தத்திருநக்ஷத்ரத்தையும் மஹோத்ஸவமாக நடத்திக்கொண்டு, வாசாமகோசரமான தத்வைபவங்களையும் ப்ரகாஶிப்பித்துக்கொண்டு, கிடாம்பியாச்சான் தொடக்கமானவரோடே பாடாற்றிக்கொண்டிருந்தார்கள்.

அநந்தரம் திருவேங்கடநாட்டினின்றும் அநந்தாழ்வான், ஸ்ரீகுஹதாஸர்முதலான முதலிகளையுங் கூட்டிக்கொண்டு அநந்தாம்ஶமான இவர் அவதாரஸமாதியை ஆராய்ந்தறியும்படி எழுந்தருளி, திருக்காவேரியருகே பரந்திருக்கிற தத்ஸூசகங்களைக் கண்டு எழுந்தருளினபடியறிந்து ஶோகாவிஷ்டராய், அநந்தரம் பட்டரையும் ஆண்டானையும் கண்டு ஆஶ்வஸித்து உடனே ஊரேறமீண்டு எழுந்தருளினார்.

அநந்தரம் அப்படியே கீழைத்திக்கில் சோழவளநாட்டுத் திருக்கண்ணபுரம் முதலான திருப்பதிகளில் எச்சான் முதலானவர்களும், தெற்குத்திக்கானபாண்டிநாட்டுத் திருக்கோட்டியூர்நம்பிகுமாரரான யாமுநாசார்யர் சொக்கத்தேவர் திருமாலையாண்டான்குமாரரான சுந்த

‡ குண்டலித க்ரந்தங்கள் சிலப் பிரதிகளில் இல்லை.

§ இந்தப்பாரா உள்ளவிடத்தில் 'அநந்தரம் பெருமாள் அவப்ருதங் கொண்டாடுமாபோலே தீர்த்தங்கொண்டாடிப் பத்துப் பன்னிரண்டுநாளும் செய்ய வேண்டுங் க்ருத்யங்களெல்லாஞ்செய்து பெருக்கத்திருவத்யயநமும் நடத்தியருளினார்கள்,' என்று காண்கிறது.

(க) ஸ்வாவதாரஸ்தலேZர்ச்சாZபூத் ஶ்ரீரங்கேஶயதீஶ்வர: । யஸ்முதேதங்குணாவாஸம் ராமாநுஜகுரும்பஜே ॥

† இதுமுதல் மூன்று பாராக்கள் சிலப்ரதிகளில் இல்லை.

ரத்தோருடையார்முதலானவர்களும், மேல்நாட்டிலும் சோமாசியாண்டான் மருதூர்நம்பி தொண்டனூர்நம்பிமுதலானோரும், மற்றும் அங்கே எம்பெருமானாராலே திருத்தப்பட்ட திருநாராயணபுரம் முதலான ஸ்தலங்களில் ஸ்ரீவைஷ்ணவர்களும் மற்றுமுண்டான தேஶாந்தரஸ்தரெல்லாரும் திரண்டு பெருங்கூட்டமாகக் கோயிலிலே வந்து எம்பெருமானாருடைய விஶ்லேஷத்தாலே மிகவும் க்லேஶித்து, அநந்தரம் பட்டரை ஸேவித்துத் தங்கள் வ்யஸநமெல்லாம் தீர்ந்து பட்டரை இஷ்டதேவதையான எம்பெருமானாரைப்போலே கண்டு, தந்தாமுக்கு வேண்டும் இஷ்டார்த்தங்களையுங் கேட்டுக்கொண்டு, தல்லாபத்தாலே (உ) "ஸ்ரீபராஶரபட்டார்ய சரணௌ ஸம்ஶ்ரயேமஹி-யத்வக்த்ராங்கேஶகோஷ்ட்யாம் ப்ராஹ்மீப்ரந்ருத்யதி," (ங) "ப்ரமாணநகநிர்ப்பிண்ணவாதிமத்தேபமஸ்தக:-ராஜதேநிகமாரண்யே ஸ்ரீபராஶரகேஸரீ", (ச) "ஸ்ரீபராஶரபட்டார்யம்பூயோபூயோநமாம்யஹம் - யதாத்மநாஸ்வயம்ரங்கீ பேஜேகூரேஶபுத்ரதாம்" இத்யேவமாதிஸூக்திகளையும் தத்விஷயத்திலே அநுஸந்தித்துக்கொண்டு தததநுஜ்ஞையோடே தந்தாமூர்களிலே சேர்ந்தார்கள்.

ஸம்ஸாரஸ்தித்யருசிநிவேதநமும், தததநுகுணமான பகவதுக்தாந்திமதிந நிஶ்சயமும், சரமகாலத்தளவும் ஸ்வாபிமாநாந்தர்ப்பூதரானவர்களுக்கு உபகாராநுகுணமாக வ்ருத்திவிஶேஷோபதேஶமும், பரிஹரணீயவ்ருத்தி விஶேஷோபதேஶமும், சரமகாலத்தில் ஸ்வாபிமதசரமாதிகாரிஸ்பர்ஶ விஶேஷமும், திருமுடியைப்பற்றிப் பூர்வாசார்யர்கள் விளங்கத் திருவடிகளைப்பற்றி அபராசார்யர்கள் விளங்கப் பூர்வாபராசார்யரூப ஹார நாயகரத்நமான உடையவர்க்கே யுள்ள தொன்றிறே.

இத்தால் ஸ்ரீராமக்ருஷ்ணசரிதங்கள்போலே ஸ்ரீராமாநுஜார்ய சரிதமும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸதாநுஸந்தேயமென்றதாய்த்து.

---

(உ) 𑌶𑍍𑌰𑍀𑌪𑌰𑌾𑌶𑌰𑌭𑌟𑍍𑌟𑌾𑌰𑍍𑌯𑌚𑌰𑌣𑍌 𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑍇𑌹𑌿 । 𑌯𑌦𑍍𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾𑌙𑍍𑌕𑍇𑌶𑌕𑍋𑌷𑍍𑌟𑍍𑌯𑌾𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍀 𑌪𑍍𑌰𑌨𑍃𑌤𑍍𑌯𑌤𑌿 ॥

(ங) 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌨𑌖𑌨𑌿𑌰𑍍𑌭𑌿𑌨𑍍𑌨𑌵𑌾𑌦𑌿𑌮𑌤𑍍𑌤𑍇𑌭𑌮𑌸𑍍𑌤𑌕𑌃 । 𑌰𑌾𑌜𑌤𑍇 𑌨𑌿𑌗𑌮𑌾𑌰𑌣𑍍𑌯𑍇 𑌶𑍍𑌰𑍀𑌪𑌰𑌾𑌶𑌰𑌕𑍇𑌸𑌰𑍀 ॥

(ச) 𑌶𑍍𑌰𑍀𑌪𑌰𑌾𑌶𑌰𑌭𑌟𑍍𑌟𑌾𑌰𑍍𑌯𑌂 𑌭𑍂𑌯𑍋𑌭𑍂𑌯𑍋𑌨𑌮𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 । 𑌯𑌦𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌸𑍍𑌵𑌯𑌂𑌰𑌙𑍍𑌗𑍀 𑌭𑍇𑌜𑍇𑌕𑍂𑌰𑍇𑌶𑌪𑍁𑌤𑍍𑌰𑌤𑌾𑌮𑍍 ॥



எம்பெருமானார் திருநக்ஷத்ரம், சித்திரையில் திருவாதிரை.

இவர் தனியன் - ப்ரஸித்தமிறே, (க) "யோநித்யமச்யுத" இத்யாதி.

---

உடையவர் ஸ்ரீபாதத்துமுதலிகளின் தனியன் முதலியன.

ப்ராப்யதேஶத்திலும் ஆசார்யஶேஷத்வம் முறைதவறவொண்ணாதென்னுந் த்வரையும், சரமதஶையிலும் ப்ராணப்ரயாண பாதேயமாக ஸ்வாசார்யன் தானே த்வயத்தை விடாய்கெட உபதேசிக்கப்பெற்ற தன்னேற்றமும், பாகவதாபிமாநபிஸ்தலத்திலும் ததீயாபிமாநஸ்தலமே சரமதேஶமாகப்பெற்ற தன்னேற்றமும், சரமாதிகாரபாக விஶேஷமும், ஆழ்வான்பக்கலிலே அநுஷ்டாந ஶேஷமாகக் கண்டதிறே.

முதலியாண்டான் திருநக்ஷத்ரம், சித்திரையில் புநர்வஸு,

அவர் தனியன் - (உ) "பாதுகேயதிராஜஸ்ய கதயந்தியதாக்யயா - தஸ்யதாஶரதே:பாதௌ ஶிரஸாதாரயாம்யஹம்", (ங) "அஜஹத் பாகிநேயத்வம் பாதுகாத்வந்த்ரிதண்டதாம் - ஸம்ப்ராப்தோயதிராஜஸ்ய குணைஸ்தத்ப்ரீதிஹேதுபி: - ஸ்ரீவைஷ்ணவாநாந்தாஸத்வம் ஸ்வாமித்வம்ப்ரபுதாம்ஸ்வயம் - வாதூல குலதௌரேயம் - வந்தே தாஶரதிம் குரும்."

திருக்குருகைப்பிரான்பிள்ளான் தனியன் - (ச) "ய:பர்யாப்தகல:க்யாதோயதிராஜாப்திசந்த்ரமா: - குஶலந்திஶதாம்மேஸௌ குரு

---

(க) 𑌯𑍋𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌚𑍍𑌯𑍁𑌤

(உ) 𑌪𑌾𑌦𑍁𑌕𑍇𑌯𑌤𑌿𑌰𑌾𑌜𑌸𑍍𑌯 𑌕𑌥𑌯𑌨𑍍𑌤𑌿𑌯𑌦𑌾𑌖𑍍𑌯𑌯𑌾 । 𑌤𑌸𑍍𑌯𑌦𑌾𑌶𑌰𑌥𑍇𑌃𑌪𑌾𑌦𑍌 𑌶𑌿𑌰𑌸𑌾𑌧𑌾𑌰𑌯𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥

(ங) 𑌅𑌜𑌹𑌦𑍍𑌭𑌾𑌗𑌿𑌨𑍇𑌯𑌤𑍍𑌵𑌂𑌪𑌾𑌦𑍁𑌕𑌾𑌤𑍍𑌵𑌂𑌤𑍍𑌰𑌿𑌦𑌣𑍍𑌡𑌤𑌾𑌮𑍍 । 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍋𑌯𑌤𑌿𑌰𑌾𑌜𑌸𑍍𑌯 𑌗𑍁𑌣𑍈𑌸𑍍𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌹𑍇𑌤𑍁𑌭𑌿𑌃 ॥ 𑌶𑍍𑌰𑍀𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌾𑌨𑌾𑌂𑌦𑌾𑌸𑌤𑍍𑌵𑌂𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌵𑌂𑌪𑍍𑌰𑌭𑍁𑌤𑌾𑌂𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 । 𑌵𑌾𑌧𑍂𑌲𑌕𑍁𑌲𑌧𑍌𑌰𑍇𑌯𑌂𑌵𑌨𑍍𑌦𑍇𑌦𑌾𑌶𑌰𑌥𑌿𑌂𑌗𑍁𑌰𑍁𑌮𑍍 ॥

(ச) 𑌯𑌃𑌪𑌰𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌕𑌲𑌃𑌖𑍍𑌯𑌾𑌤𑍋𑌯𑌤𑌿𑌰𑌾𑌜𑌾𑌬𑍍𑌧𑌿𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌾𑌃 । 𑌕𑍁𑌶𑌲𑌂𑌦𑌿𑌶𑌤𑌾𑌂𑌮𑍇𑌽𑌸𑍌𑌕𑍁𑌰𑍁𑌕𑍇𑌶𑌗𑍁𑌰𑍁𑌦𑍇𑌶𑌿𑌕𑌃 ॥

கேஶ்வரதேஶிக:," (க) "விக்யாதோயதிஸார்வபௌமஜலதேஶ்சந்த்ரோபமத்வேநய: ஶ்ரீபாஷ்யேசயதீஶ்வராஸ்ஸமதிகாத் ஸ்ரீவிஷ்ணுசித்தாஹ்வய: - வ்யாக்யாம்பாஷ்யக்ருதாஜ்ஞயோபநிஷதாம்யோத்ராமிடீநாம்வ்யதாத் பூர்வேந்தம் குருகேஶவம் குருவரம் காருண்யபூர்ணம் பஜே."

கிடாம்பியாச்சான் தனியன் - (உ) "ராமாநுஜபதாம்போஜ யுகளீ யஸ்யதீமத: - ப்ராப்யஞ்சப்ராபகம்வந்தே ப்ரணதார்த்திஹரங்குரும்," (௩) "ஆஸ்திகாக்ரேஸரம்வந்தே பரிவ்ராட்குருபாதகம் - யாசிதங் குருகேஶேந ப்ரணதார்த்திஹரங்குரும்", (௪) 'ஶ்ரீபாஷ்யந்தர்ஶயித்வாயதிபதிரசிதம்ஶாரதாயைநிவ்ருத்தோ நத்வா ஸ்ரீவேங்கடேஶம்பதி பரமபதந்தத்தவாங்கோபிகாயை - ஆக்யாம்வேதாந்தமார்கோதயந இதிததத்பாஷ்யகாரேணதத்தாம் மாத்ரேயா சார்யவிஷ்ணோரநுஜமநுதிநம்ஸாதரந்தந்நமாமி."

எங்களாழ்வான் தனியன் - (௫) "ஸ்ரீவிஷ்ணுசித்தபதபங்கஜஸம்ஶ்ரயாய சேதோமமஸ்ப்ருஹயதேகிமத:பரேண - நோசேந்மமாபியதிஶேகரபாரதீநாம்பாவ:கதம்பவிதுமர்ஹதிவாக்விதேய:."

---

(க) 𑌵𑌿𑌖𑍍𑌯𑌾𑌤𑍋 𑌯𑌤𑌿𑌸𑌾𑌰𑍍𑌵𑌭𑍌𑌮𑌜𑌲𑌧𑍇𑌶𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑍋𑌪𑌮𑌤𑍍𑌵𑍇𑌨 𑌯𑌃 । 𑌶𑍍𑌰𑍀𑌭𑌾𑌷𑍍𑌯𑍇 𑌚 𑌯𑌤𑍀𑌶𑍍𑌵𑌰𑌾𑌤𑍍 𑌸𑌮𑌧𑌿𑌗𑌾𑌤𑍍 𑌶𑍍𑌰𑍀𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌹𑍍𑌵𑌯𑌃 ॥ 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌂 𑌭𑌾𑌷𑍍𑌯𑌕𑍃𑌦𑌾𑌜𑍍𑌞𑌯𑍋𑌪𑌨𑌿𑌷𑌦𑌾𑌂 𑌯𑍋 𑌦𑍍𑌰𑌾𑌮𑌿𑌡𑍀𑌨𑌾𑌂 𑌵𑍍𑌯𑌧𑌾𑌤𑍍 𑌤𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌗𑍁𑌰𑍁𑌕𑍇𑌶𑌵𑌂 𑌗𑍁𑌰𑍁𑌵𑌰𑌂 𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌪𑍂𑌰𑍍𑌣𑌂 𑌭𑌜𑍇 ॥

(உ) 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌪𑌦𑌾𑌮𑍍𑌭𑍋𑌜𑌯𑍁𑌗𑌳𑍀 𑌯𑌸𑍍𑌯 𑌧𑍀𑌮𑌤𑌃 । 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌂 𑌚 𑌪𑍍𑌰𑌾𑌪𑌕𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌪𑍍𑌰𑌣𑌤𑌾𑌰𑍍𑌤𑌿𑌹𑌰𑌂 𑌗𑍁𑌰𑍁𑌮𑍍 ॥

(௩) 𑌆𑌸𑍍𑌤𑌿𑌕𑌾𑌗𑍍𑌰𑍇𑌸𑌰𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌪𑌰𑌿𑌵𑍍𑌰𑌾𑌡𑍍𑌗𑍁𑌰𑍁𑌪𑌾𑌦𑌕𑌮𑍍 । 𑌯𑌾𑌚𑌿𑌤𑌂 𑌗𑍁𑌰𑍁𑌕𑍇𑌶𑍇𑌨 𑌪𑍍𑌰𑌣𑌤𑌾𑌰𑍍𑌤𑌿𑌹𑌰𑌂 𑌗𑍁𑌰𑍁𑌮𑍍 ॥

(௪) 𑌶𑍍𑌰𑍀𑌭𑌾𑌷𑍍𑌯𑌂 𑌦𑌰𑍍𑌶𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌯𑌤𑌿𑌪𑌤𑌿𑌰𑌚𑌿𑌤𑌂 𑌶𑌾𑌰𑌦𑌾𑌯𑍈 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍋 𑌨𑌤𑍍𑌵𑌾 𑌶𑍍𑌰𑍀𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑍇𑌶𑌂 𑌪𑌤𑌿 𑌪𑌰𑌮𑌪𑌦𑌂 𑌤𑌤𑍍𑌤𑌵𑌾𑌨𑍍 𑌗𑍋𑌪𑌿𑌕𑌾𑌯𑍈 । 𑌆𑌖𑍍𑌯𑌾𑌂 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌮𑌾𑌰𑍍𑌗𑍋𑌦𑌯𑌨 𑌇𑌤𑌿 𑌤𑌤𑌤𑍍 𑌭𑌾𑌷𑍍𑌯𑌕𑌾𑌰𑍇𑌣 𑌦𑌤𑍍𑌤𑌾𑌂 𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌯𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑌨𑍁𑌜𑌮𑌨𑍁𑌦𑌿𑌨𑌂 𑌸𑌾𑌦𑌰𑌂 𑌸𑌨𑍍𑌨𑌮𑌾𑌮𑌿 ॥

(௫) 𑌶𑍍𑌰𑍀𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌚𑌿𑌤𑍍𑌤𑌪𑌦𑌪𑌙𑍍𑌕𑌜𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌾𑌯 𑌚𑍇𑌤𑍋 𑌮𑌮 𑌸𑍍𑌪𑍃𑌹𑌯𑌤𑍇 𑌕𑌿𑌮𑌤𑌃 𑌪𑌰𑍇𑌣 । 𑌨𑍋 𑌚𑍇𑌨𑍍𑌮𑌮𑌾𑌪𑌿 𑌯𑌤𑌿𑌶𑍇𑌖𑌰𑌭𑌾𑌰𑌤𑍀𑌨𑌾𑌂 𑌭𑌾𑌵𑌃 𑌕𑌥𑌂 𑌭𑌵𑌿𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌤𑌿 𑌵𑌾𑌗𑍍𑌵𑌿𑌧𑍇𑌯𑌃 ॥



நடாதூராழ்வான் தனியன் - (க) "யஸ்மிந்பதம்யதிவரஸ்யமுகாத்ப்ரணேதுந் நிஷ்க்ராமதேவநிததேநிகமாந்தபாஷ்யம் - தஸ்யைவதம்பகவத:ப்ரியபாகிநேயம் வந்தேகுரும்வரதவிஷ்ணுபதாபிதாநம்', (உ) "ஜ்ஞாநோத்தமோத்ததிரா கரணப்ரதுஷ்யத் ராமாநுஜார்ய கருணாபரிணாஹபாத்ரம் - வத்ஸாந்வவாயதிலகம்வஸதிங்குணாநாம் வந்தாமஹேவரதவிஷ்ணு குரும்வரேண்யம்."

சோமாசியாண்டான் தனியன் - (௩) "ஸௌமிலக்ஷ்மணயோகீந்த்ர பாதஸேவைகதாரகம் - ஸ்ரீராமக்ரதுநாதார்யம் ஸ்ரீபாஷ்யாம்ருத ஸாகரம்."

நடுவிலாழ்வான் தனியன் - (௪) "யேந † ப்ரோத்ஸகலதேநித்யங் கார்க்யவம்ஶமஹாம்புதி: - மங்மஹேதம்ஸதாஸித்தே மத்யமார்யகலா நிதிம்."

அருளாளப்பெருமாளெம்பெருமானார் தனியன் - (௫) "தயாபால நதேவாய ஜ்ஞாநஸாரப்ரதாயச - ப்ரமேயஸாரதாத்ரே நமோऽஸ்து ப்ரேமஶாலிநே", (௬) "யதிராஜதயா பாத்ரம் யதியந்த்ரவிபூஷணம் - தயாபாலமுநிம்வந்தே தேஶிகாக்ரேஸரம்ஸதா"

---

(க) 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌪𑌦𑌂 𑌯𑌤𑌿𑌵𑌰𑌸𑍍𑌯 𑌮𑍁𑌖𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌣𑍇𑌤𑍁𑌂 𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌾𑌮𑌤𑍇𑌵 𑌨𑌿𑌤𑌰𑌾𑌂 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤𑌭𑌾𑌷𑍍𑌯𑌮𑍍 । 𑌤𑌸𑍍𑌯𑍈𑌵 𑌤𑌂 𑌭𑌗𑌵𑌤𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌭𑌾𑌗𑌿𑌨𑍇𑌯𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌗𑍁𑌰𑍁𑌂 𑌵𑌰𑌦𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌪𑌦𑌾𑌭𑌿𑌧𑌾𑌨𑌮𑍍 ॥

(உ) 𑌜𑍍𑌞𑌾𑌨𑍋𑌨𑍍𑌨𑌤𑍇 𑌮𑌾𑌤𑍃𑌤𑌿𑌰𑌸𑍍𑌕𑌰𑌣𑌪𑍍𑌰𑌤𑍁𑌷𑍍𑌯𑌦𑍍 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌰𑍍𑌯𑌕𑌰𑍁𑌣𑌾𑌪𑌰𑌿𑌣𑌾𑌹𑌪𑌾𑌤𑍍𑌰𑌮𑍍 । 𑌵𑌤𑍍𑌸𑌾𑌨𑍍𑌵𑌵𑌾𑌯𑌤𑌿𑌲𑌕𑌂 𑌵𑌸𑌤𑌿𑌂 𑌗𑍁𑌣𑌾𑌨𑌾𑌂 𑌵𑌨𑍍𑌦𑌾𑌮𑌹𑍇 𑌵𑌰𑌦𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌗𑍁𑌰𑍁𑌂 𑌵𑌰𑍇𑌣𑍍𑌯𑌮𑍍 ॥

(௩) 𑌸𑍌𑌮𑌿𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌯𑍋𑌗𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌪𑌾𑌦𑌸𑍇𑌵𑍈𑌕𑌧𑌾𑌰𑌕𑌮𑍍 । 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌕𑍍𑌰𑌤𑍁𑌨𑌾𑌥𑌾𑌰𑍍𑌯𑌂 𑌶𑍍𑌰𑍀𑌭𑌾𑌷𑍍𑌯𑌾𑌮𑍃𑌤𑌸𑌾𑌗𑌰𑌮𑍍 ॥

(௪) 𑌯𑍇𑌨 𑌪𑍍𑌰𑍋𑌤𑍍𑌸𑌕𑌲𑌦𑍇𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌗𑌾𑌰𑍍𑌗𑍍𑌯𑌵𑌂𑌶𑌮𑌹𑌾𑌮𑍍𑌬𑍁𑌧𑌿𑌃 । 𑌮𑌨𑍍𑌮𑌹𑍇 𑌤𑌂 𑌸𑌦𑌾 𑌸𑌿𑌦𑍍𑌧𑍇 𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌰𑍍𑌯𑌕𑌲𑌾𑌨𑌿𑌧𑌿𑌮𑍍 ॥ (௫) 𑌦𑌯𑌾𑌪𑌾𑌲𑌨𑌦𑍇𑌵𑌾𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌾𑌰𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌚 । 𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑌸𑌾𑌰𑌦𑌾𑌤𑍍𑌰𑍇 𑌨𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 𑌪𑍍𑌰𑍇𑌮𑌶𑌾𑌲𑌿𑌨𑍇 ॥

(௬) 𑌯𑌤𑌿𑌰𑌾𑌜𑌦𑌯𑌾𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌯𑌤𑌿𑌵𑌙𑍍𑌕𑍍𑌤𑌿𑌵𑌿𑌭𑍂𑌷𑌣𑌮𑍍 । 𑌦𑌯𑌾𑌪𑌾𑌲𑌮𑍁𑌨𑌿𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌗𑍍𑌰𑍇𑌸𑌰𑌂 𑌸𑌦𑌾 ॥

† 'அநந்தாக்யமஹம்பஜே' என்றும் பாடம்.

அநந்தாழ்வான் திருநக்ஷத்ரம் - சித்திரையில் சித்திரை.

அவர் தனியன் - (க) "அகிலாத்மகுணவாஸம் அஜ்ஞாநதிமிராபஹம் - ஆஶ்ரிதாநாம்ஸுஶரணம் வந்தேऽநந்தார்ய தேஶிகம்" (உ) "ஸ்ரீமத்ராமாநுஜாசார்ய ஸ்ரீபாதாம்போருஹத்வயம் - ஸதுத்தமாங்கஸந்தார்யம்† அநந்தார்யகுரும்பஜே," (ங) "யதீந்த்ரபாதாம்புஜசஞ்சரீகம் ஸ்ரீமத்தயாபாலதயைகபாத்ரம்- ஸ்ரீவேங்கடேஶாங்க்ரியுகாந்தரங்கம் நமாம்யநந்தார்யமநந்தக்ருத்வ:"

எச்சான் தனியன்- (ச) "யேநவைஷ்ணவஶேஷத்வ பர்யந்தம்பரமாத்மந:-ஶேஷத்வமாத்மநோஜ்ஞேயம் யஜ்ஞேஶந்தமுபாஸ்மஹே."

வடுகநம்பி தனியன் -(ரு) "ராமாநுஜார்யசரண ப்ரவணம்பரதேவவத் - வடுபூர்ணமஹம்வந்தே பரஜ்ஞாநபயோநிதிம்."

எழுபத்துநான்கு ஆசார்யர்களுக்கும் ஸமுதாயத்தனியன் - (சா) "ராமாநுஜார்யாச்ச்ருதிமௌளிபாஷ்யம் அர்த்தம்ரஹஸ்யத்ரமிடஶ்ருதீநாம் - ஸம்ப்ராப்யதேநைவகுருக்ருதாம்ஸ்தாந் பஜேசதுஸ்ஸப்ததிபீடஸம்ஸ்தாந்."

---

(க) 𑌅𑌖𑌿𑌲𑌾𑌤𑍍𑌮𑌗𑍁𑌣𑌾𑌵𑌾𑌸𑌮𑍍 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌤𑌿𑌮𑌿𑌰𑌾𑌪𑌹𑌮𑍍 । 𑌆𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌨𑌾𑌂 𑌸𑍁𑌶𑌰𑌣𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇𑌽𑌨𑌨𑍍𑌤𑌾𑌰𑍍𑌯𑌦𑍇𑌶𑌿𑌕𑌮𑍍 ॥

(உ) 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌚𑌾𑌰𑍍𑌯 𑌶𑍍𑌰𑍀𑌪𑌾𑌦𑌾𑌮𑍍𑌭𑍋𑌰𑍁𑌹𑌦𑍍𑌵𑌯𑌮𑍍 । 𑌸𑌦𑍁𑌤𑍍𑌤𑌮𑌾𑌙𑍍𑌗𑌸𑌨𑍍𑌧𑌾𑌰𑍍𑌯𑌮𑌨𑌨𑍍𑌤𑌾𑌰𑍍𑌯𑌗𑍁𑌰𑍁𑌂 𑌭𑌜𑍇 ॥

(ங) 𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌪𑌾𑌦𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌚𑌞𑍍𑌚𑌰𑍀𑌕𑌂 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌦𑌯𑌾𑌪𑌾𑌲𑌦𑌯𑍈𑌕𑌪𑌾𑌤𑍍𑌰𑌮𑍍 । 𑌶𑍍𑌰𑍀𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑍇𑌶𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌯𑍁𑌗𑌾𑌨𑍍𑌤𑌰𑌙𑍍𑌗𑌂 𑌨𑌮𑌾𑌮𑍍𑌯𑌨𑌨𑍍𑌤𑌾𑌰𑍍𑌯𑌮𑌨𑌨𑍍𑌤𑌕𑍃𑌤𑍍𑌵𑌃 ॥

(ச) 𑌯𑍇𑌨𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌶𑍇𑌷𑌤𑍍𑌵𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌂𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃। 𑌶𑍇𑌷𑌤𑍍𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑍋𑌜𑍍𑌞𑍇𑌯𑌂𑌯𑌜𑍍𑌞𑍇𑌶𑌂𑌤𑌮𑍁𑌪𑌾𑌸𑍍𑌮𑌹𑍇 ॥

(ரு) 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌰𑍍𑌯𑌚𑌰𑌣𑌪𑍍𑌰𑌵𑌣𑌂𑌪𑌰𑌦𑍇𑌵𑌵𑌤𑍍 । 𑌵𑌟𑍁𑌪𑍂𑌰𑍍𑌣𑌮𑌹𑌂𑌵𑌨𑍍𑌦𑍇𑌪𑌰𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑌯𑍋𑌨𑌿𑌧𑌿𑌮𑍍 ॥

(சா) 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌰𑍍𑌯𑌾𑌚𑍍𑌛𑍍𑌰𑍁𑌤𑌿𑌮𑍌𑌳𑌿𑌭𑌾𑌷𑍍𑌯𑌮𑌰𑍍𑌥𑌂 𑌰𑌹𑌸𑍍𑌯𑌤𑍍𑌰𑌯𑌮𑌪𑍍𑌯𑌶𑍍𑌰𑍁𑌤𑍀𑌨𑌾𑌮𑍍 । 𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌤𑍇𑌨𑍈𑌵𑌗𑍁𑌰𑍁𑌕𑍃𑌤𑌾𑌂𑌸𑍍𑌤𑌾𑌨𑍍 𑌭𑌜𑍇𑌚𑌤𑍁𑌸𑍍𑌸𑌪𑍍𑌤𑌤𑌿𑌪𑍀𑌠𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑍍 ॥



மாருதிச் சிறியாண்டான், தம்முடைய அந்திமதசையிலே பணித்த வார்த்தை:— 'திருவேங்கடமுடையான் தன்ஸ்வரூபத்தை மறந்து என் ஸ்வரூபத்தை நினைத்தானாகில், பழைய நரகங்களொழிய வேறே எனக்கென்று சில நரகங்களை ஸ்ருஷ்டிக்கவேணுமிறே; அன்றிக்கே, என் ஸ்வரூபத்தை மறந்து தன் ஸ்வரூபத்தை உணர்ந்தானாகில், பழைய திருநாடு போராது; எனக்கென்று வேறே ஒரு திருநாடு ஸ்ருஷ்டிக்க வேணுமிறே': அதாவது ஸ்வக்ருததோஷஸ்மரணம் அநந்தது:கப்ரதாநமாகிறது; ஈஶ்வரவாத்ஸல்யஸ்மரணம் அநந்தாஶ்சர்யஸுகப்ரதாநமாகிறது வென்றபடி.

இவர் தனியன். (க) "ஜ்ஞாநாங்கூரகுலாதிபங்க்ரிமிளநாத்ப்ராப் தாபதம்ப்ரேஷித: ஸ்ரீராமாவரஜேநகோஸலபதிர்த்ருஷ்ட்வாததீயாம்ஸ்திதிம் - ஸம்ப்ராப்தஸ்த்வரயாபுராந்தகபுராத்கல்யாணவாபீதடேயோ ஸௌமாருதிரித்யஸௌ ஸதவயந்தஸ்மைநமஸ்குர்மஹே."

மருதூர்நம்பி தம்முடைய அந்திமதசையிற் பணித்தவார்த்தை:- 'மூன்று ஜந்மம் தம்திருவடிகளிலே அபராதம்பண்ணின ஶிஶுபாலன் திருவடிகளை யடைந்தான். அநந்த ஜந்மம் திருவடிகளிலே அபராதம் பண்ணின நான் இழந்திருக்கை வழக்கோ?' என்ன, சிங்கர் அன்றே திருவடிகளைத் தந்தருளினார்; அதாவது—இத்தலையில் அபராதமே அவன் அங்கீகாரத்திற்குப் பச்சை யென்று உணர்கை சரமஜ்ஞாநபரிபாக மென்றபடி.

பிள்ளையுறங்காவில்லிதாஸர் தம்முடைய அந்திமதசையிலே முதலிகளெல்லாரையும் அழைப்பித்துத் தீர்த்தங்கொண்டு க்ஷமை கொண்டு, பொன்னாச்சியாரைப் பார்த்து 'நம்முடைய விஶ்லேஷத்தில் நீ பிழைநினையாதே கொள்' என்று ஆணையிட்டு, உடையவர் திருவடிநிலைகளைத் தம்முடியிலே வைத்துக்கொண்டு திருநாட்டுக்கு எழுந்தருளினார். அநந்தரம் பொன்னாச்சியாரும் க்லேசியாமல்தரித்திருந்து திருவாசலைத்திருவலகிட்டுத் தெளிநீர் தெளித்துத் திருப்

---

(க) 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌙𑍍𑌕𑍂𑌰𑌕𑍁𑌲𑌾𑌧𑌿𑌪𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌮𑌿𑌲𑌨𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌾𑌪𑌦𑌂 𑌪𑍍𑌰𑍇𑌷𑌿𑌤𑌃 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌾𑌵𑌰𑌜𑍇𑌨𑌕𑍋𑌸𑌲𑌪𑌤𑌿𑌰𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌤𑌦𑍀𑌯𑌾𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌮𑍍 । 𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌰𑌯𑌾𑌪𑍁𑌰𑌾𑌨𑍍𑌤𑌕𑌪𑍁𑌰𑌾𑌤𑍍𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌵𑌾𑌪𑍀𑌤𑌟𑍇 𑌯𑍋𑌽𑌸𑍌𑌮𑌾𑌰𑍁𑌤𑌿𑌰𑌿𑌤𑍍𑌯𑌸𑍌𑌸𑌤𑌵𑌯𑌂𑌤𑌸𑍍𑌮𑍈𑌨𑌮𑌸𑍍𑌕𑍁𑌰𑍍𑌮𑌹𑍇 ॥

பிண்டியிட்டுத் திருக்காவணமிடுவித்து நிற்க, ஸ்ரீவைஷ்ணவர்கள் உடையவர் நீராடுந் துறையிலே திருமஞ்சனமெடுத்துக்கொண்டுவந்து த்வயாநுஸந்தாநத்துடனே நீராட்டித் திருநாமம் திருச்சூர்ணம் முதலாக ஸ்ரீவைஷ்ணவாலங்காரங்களெல்லாஞ் செய்து பெருமாள் சாத்திக் களைந்து வரவிட்டருளின திருமாலையும் திருப்பரியட்டமும் சாத்தி அலங்கரிக்க, தாமும் ஸர்வாபரண பூஷிதையாய்க் கஸ்தூரிம்ருகம் போலே உலாவிநின்று ஸ்ரீவைஷ்ணவர்களைத் தீர்த்தங்கொண்டு சுருளமுது திருத்தித் திருமாளிகையிலுள்ள த்ரவ்யங்களடங்கலும் ஸமர்ப்பிக்க, கரும்புகளுமெடுத்து நூற்றந்தாதி இயலாக அநுஸந்தித்துவரப் பின்பு திருச்சூர்ணமிடித்து எல்லாரும் * எண்ணெய் சுண்ணங் கொண்டாடி, பிள்ளையுறங்காவில்லிதாஸருடைய விமலசரம விக்ரஹத்தைத் திவ்ய விமாநத்திலே எழுந்தருளப் பண்ணி வைத்துக்கொண்டு ஏகாங்கிகளும் ஸ்ரீவைஷ்ணவர்களும் மற்றுமுள்ள முதலிகளும் மாறி மாறி ஸ்ரீபாதந்தாங்க, எழுந்தருளுகிற விமாநமும் தூரமறைந்தவளவிலே, பொன்னாச்சியாரும் சோகார்த்தையாய் "மாரிமாக்கடல்வளைவணர்க்கிளையவன் வரைபுரை திருமார்பில், தாரிணைசையில் போயின நெஞ்சமும் தாழ்ந்தது ஓர் துணை காணேன், ஊரும் துஞ்சிற்று உலகமும் துயின்றது ஒளியவன் விசும்பியங்கும், தேரும் போயிற்றுத் திசைகளும்மறைந்தன செய்வதொன்றறியேனே" என்று கையெடுத்துக் கூப்பிட்டு அழுதுகொண்டு விழுந்து பாகவதவிஸ்லேஷாஸஹிஷ்ணுவாய் மூர்ச்சித்துக்கிடந்து அப்போதே அங்கே திருநாட்டுக்கு எழுந்தருள, முதலிகளும் அங்கே அவருக்குத் திருச்சூர்ணமிடித்துப் பிள்ளையுறங்காவில்லிதாஸருடன் திருப்பள்ளிபடுத்தார்களென்பர்கள். இவருக்குத் ததீயவிஸ்லேஷத்தில் அப்போதே ஶரீரவிஸ்லேஷம் வரும்படியான ததீயப்ரேமசரமபாகம் முற்றிவளர்ந்தபடியிறே இது.

இவர் தனியன்-(க) "ஜாமாத்ருகதந்யஸ்தபாணிம் ப்ராணைர்கட்டஸமந்விதம்-ராமாநுஜஸ்பர்ஸவேதிம் ராத்தாந்தார்த்தப்ரகாசகம்-பாகிநேயத்வயயுதம் பாஷ்யகாரபரம்வஹம் - ரங்கேசமங்களகரம் தநுர்த்தாஸமஹம்பஜே."

---

(க) ஜாமாத்ருகதந்யஸ்தபாணிம் ப்ராணைர்கட்டஸமந்விதம் । ராமாநுஜஸ்பர்ஸவேதிம் ராத்தாந்தார்த்தப்ரகாசகம் ॥ பாகிநேயத்வயயுதம் பாஷ்யகாரபரம்வஹம் । ரங்கேசமங்களகரம் தநுர்த்தாஸமஹம்பஜே ॥



நம்பிதிருவழுதிவளநாடுதாஸர் திருநாட்டுக்கெழுந்தருளுகிற ஸமயத்திலே தம் ஸ்ரீபாதத்திலே ஸேவித்திருந்த ஒரு ஸ்ரீவைஷ்ணவர் அழ, அதற்குநம்பி 'கெடுவாய்! செத்துப்போகிற நான் போகாநின்றேன்; ஸ்ரீபராஶரபட்டர் வாசிக்கக் கேட்கவிருக்கிற நீயோ அழுகிறாய்!' என்று அருளிச்செய்தாரிறே; அதாவது - ஸதாசார்யவ்யாக்யாநவசநஸ்வாரஸ்யாஸக்தி அபவர்க்கபலப்ராப்தியிலும் அருசிபிறப்பிக்குமென்றபடி.

பிள்ளை திருவழுதிவளநாட்டரையர் தம் அந்திமதசையிலே க்லேஶிக்க, சுற்றிலுமிருந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் அந்யோந்யம் முகம்பார்த்திருக்க, அவரும் இவர்களுடைய அபிப்ராயத்தைத் தம்திருவுள்ளத்திலே கோலியருளி 'வாரீர்கோள் முதலிகாள்! ஸம்ஸாரிகளிழவுக்குப் போர நொந்தோங்காணுங்கோள்; அவர்களுக்கும் நமக்கும் அல்பமாய்த்து வாசியுள்ளது: எங்ஙனேயென்னில்:—நாம் இடுவது ஒருதண்டம், பண்ணுவது ஒருப்ரபத்தி, இழப்பது ஒரு ஹேயமான ஸம்ஸாரம், பெறுவது ஒருவிலக்ஷணமான பரமபதம்; இத்தையறியாதே அதிஃபதிக்கிறீர்களே! என்று க்லேஶமாய்த்துக்காணுங்கோள்' என்ன, முதலிகளும் க்ருதார்த்தரானார்கள்; அதாவது - பரதுஃகாஸஹிஷ்ணுத்வமும், பரஸம்ருத்யேகப்ரயோஜநத்வமும் ஸ்ரீவைஷ்ணவனுக்கு உண்டாகவேணுமென்று கருத்து.

---

## எம்பார் வைபவம்.

---

எம்பார், உடையவர் திருநாட்டுக்கு எழுந்தருளும்போது அவர் திருவடிகளைப் பிடித்துக்கொண்டு 'நாயன்தே! பெரியதிருமலைநம்பி, ஶக்திகையிலே ரஜதபுத்திபண்ணுவாரைப்போலே அபரமாத்மவிஷயே பரமாத்மபுத்திபண்ணி விடரீதஜ்ஞாநநிஷ்டனாய்க் காளஹஸ்தியாகிறகடுங்காட்டிலேயிருந்த என்னைப்* போதரேயென்றுசொல்லிப் புந்தியில்புகுந்து தன்பாலாதரம்பெருகும்படி திருத்தி*மாயப்பற்றறுத்து, அடியேனுடைய துர்வாஸநாச்சேதநத்தைப் பண்ணியருளி, *பொருளல்லாத என்னைப் பொருளாக்கி அடிமைகொண்டருளி, "தாயாய்த் தந்தையாய் மக்களாய் மற்றுமாய் முற்றுமாய்" என்கிறபடியே ஸர்வவிதபந்துவும் த்ருஷ்டாத்ருஷ்டங்களிரண்டும் தேவரீர் திருவடிக

ளென்றுகாட்டிக்கொடுத்தருளினார்; தேவரீரும்அப்படியே அடியேன் நம்பிதிருவடிகளை யகன்ற இழவெல்லாம் தீர ஸர்வவிதோத்தாரகபந்துவுமாய் நிற்க, தேவரீர்திருவடிகளை ப்ராப்யமும் ப்ராபகமு மென்று அத்யவஸித்திருந்த அடியேன் (க) ''நசஸீதா த்வயாஹீநா நசாஹமபி ராகவ-முஹூர்த்தமபிஜீவாவோ ஜலாந்மத்ஸ்யாவிவோத்த்ருதௌ'' என்கிறபடியே என்உயிர்நிலையான தேவரீர்திருவடிகளை அகன்று ஒரு க்ஷணமாத்ரமும் தரிக்கமாட்டேன்; தேஹி விட்டுப்போனால் தேஹம் நிற்குமோ? ''நிழலும்அடிதாறும்ஆனோம்'' என்கிறபடியே ஸ்ரீபாதச்சாயாபந்நனை அடியேன் எங்ஙனே தரித்திருப்பேன்?' என்று திருவடிகளிலே பேரார்த்தியோடே விழுந்து எழுந்திராமல் கிடக்க, உடையவரும் எம்பாரைக் குளிரநோக்கியருளி 'நாம் நம்பிதிருக்கையாலே உம்மை உதகபூர்வகமாகப் பரிக்ரஹித்தபின்பு நமக்கும் உம்மைப் பிரியக்கூடுமோ? நம்முடைய வைகுண்டநாதனும் அப்படியே செய்தருளுகிறான்; பதறாதேகொள்ளும்' என்று எம்பாரைவாரியெடுத்து அணைத்துக்கொண்டு, தம்*பொன்னங்கழற்றாமரைப்பூக்களாலே அவர்திருமுடியை அலங்கரித்தருளித் திருநாட்டுக்கு எழுந்தருள, எம்பாரும் தாயைப்பிரிந்த ஸ்தநந்தயப்ரஜையைப்போலே ஶிதிலாந்த:கரணராய்ப் பெரியஆர்த்தியோடே உடையவர் ப்ரஸாதித்தருளின அர்த்தவிஶேஷங்களைப் பட்டர் முதலான முதலிகளுக்கு ப்ரஸாதித்துக்கொண்டு எழுந்தருளியிரா நிற்க;

ஒருநாளாக உடையவர்திருவடிகளைத் திருவுள்ளத்தே*நினைந்து நைந்து உள்கரைந்துருகி, *தாய்நாடுகன்றேபோல் 'எப்போது காணப்பெறுவேன்?' என்று த்வரைவிஞ்சி, ஆசார்யவிஶ்லேஷம் பொறுக்கமாட்டாமல் ''அவனைவிட்டகன்று உயிராற்றகில்லா'' என்கிறபடியே உடையவரையகன்று இருக்கமாட்டாத ஆற்றாமை கரைபுரண்டு மிகவும்விஞ்சி, பெரியபெருமாள்ஸந்நிதியிற்சென்று 'நாயன்தே! அடியேன் உடையவர்திருவடிகளேறப்போக நினையாநின்றேன்; தேவரீர் விடை ப்ரஸாதித்தருளவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, பெருமாளும்'அப்படியேசெய்யும்'என்றுதிருவுள்ளம்பற்றியருளி,எம்பாருக்குத்

(க) நசஸீதா த்வயா ஹீநா நசாஹமபி ராகவ। முஹூர்த்தமபி ஜீவாவோ ஜலாந்மத்ஸ்யாவிவோத்த்ருதௌ ॥



தீர்த்தப்ரஸாதமும் ஸ்ரீசடகோபனும் இரங்கிப்ரஸாதித்தருள, இவரும் ''திருப்பொலிந்தசேவடி என்சென்னியின்மேற் பொறித்தாய்'' என்று அங்கீகரித்தருளி, அமலனாதிபிரானிற்படியே பாதாதிகேஶாந்தமாக அநுபவித்தருளி, ''என்னமுதினைக், கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே'' என்றுகொண்டு *அணியார்பொழில்சூழரங்கநகரப்பனைத் தம்*கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும் நீங்காதபடியாக நிறைத்துக்கொண்டு புறப்பட்டருளி உடையவர்மடத்தேற எழுந்தருளி, (க) ''யோநித்யம்'' என்றுதொடங்கி (உ) ''ராமாநுஜஸ்யசரணௌ ஶரணம்ப்ரபத்யே'' என்று அநுஸந்தித்துக்கொண்டு தண்டன்ஸமர்ப்பித்து, மடமேயெழுந்தருளித் தம் திருவாராதநமான அரங்கநகரப்பனைத்திருவடிவிளக்கிப் பட்டரையழைத்தருளி 'வாரீர் பட்டரே! நாம் ஆழ்வான்குமாரர்; அகிலஶாஸ்த்ரங்களையும் அதிகரித்தோம்; நம்பெருமாள் நம்மைப்புத்ரஸ்வீகாரம்பண்ணியருளினாரென்னும் மேன்மைகளை நினைத்து இறுமாந்திராதே, நம்மாணை! 'எம்பெருமானார்திருவடிகளே உபாயோபேயம்' என்று அத்யவஸித்திரும்' என்று அருளிச்செய்து, 'கணியனூர்ச்சிறியாச்சான் சட்டம்பள்ளிச்சீயர் ஈச்சம்பாடிச்சீயர்முதலானார்க்கும் மற்றுமுள்ளமுதலிகளுக்கும் உடையவர் ப்ரஸாதித்தருளின அர்த்தவிஶேஷங்களையும் ப்ரஸாதித்துக்கொண்டு தர்ஶநம் நிர்வஹித்து வாழ்ந்தருளவேணும்' என்று மங்களாஶாஸநம் செய்தருளி, அவர்களைப் பட்டர்திருக்கையிலே காட்டிக்கொடுத்தருளி, 'ஸர்வாபராதங்களையும் பொறுத்தருளவேணும்' என்று தண்டன் ஸமர்ப்பித்து, பட்டர்முதலான முதலிகளைத் தீர்த்தங்கொண்டு அமுதுசெய்யப்பண்ணி, *அரங்கத்துறையும் இன்துணைவனை வழித்துணையாக நினைத்துக்கொண்டு உடையவர் திருவடிகளை த்யாநித்துக்கொண்டு திருநாட்டுக்கு எழுந்தருளினார்.

பட்டரும் ஆசார்யவிஶ்லேஷம் பொறுக்கமாட்டாமல் மிகவும் ஶோகார்த்தராய் க்லேஶிக்க, அருகிருந்த முதலிகளும் 'வாரீர் பட்டரே! தேவரீர் இப்படி க்லேஶிக்கலாமோ?' என்று தேற்றமிட, பட்டரும் தம்மிலேதெளிந்துகொண்டிருக்கிறவளவிலே, பெருமாள் சாத்திக்களைந்த திருமாலை திருப்பரியட்டம் முதலானவற்றையுங் கொண்டு

(க) யோநித்யம் (உ) ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்யே ॥

அனைத்துக் கோத்திலவர்களும் வர, சிறிய கோவிந்தப்பெருமாள் திருக்கையாலே ப்ரஹ்மமேதவிதியடங்கச் செய்வித்து எம்பாருடைய விமலசரமவிக்ரஹத்தைப் பீடயாநத்திலே எழுந்தருளுவித்துக்கொண்டுபோய் யதிஸம்ஸ்காரவித்யுக்தப்ரகாரேண ஸம்ஸ்கரித்துக் கநித்துப் பள்ளிபடுத்து அவப்ருதங்கொண்டாடிப் பெருக்கத் திருவத்யயநமும் நடத்தியருளினார்.

ஆசார்யகைங்கர்யமே பரமப்ரயோஜநமாய்த் தன்னைப்பேணாமையும், ஆசார்யவிஷயத்தில் க்ரயவிக்ரயார்ஹராய் ஸ்வவ்யாபாரமற்றிருந்தபடியும், ஆசார்யன் திறத்தில் சாயாவத் பாரதந்த்ர்யமும், ஆசார்யனையகன்று தரியாத அநுஷ்டாநமும் இவர்க்கே உள்ள தொன்றிறே.

எம்பார் திருநக்ஷத்ரம் - தையில் புநர்பூசம்.

இவர் தனியன் - (க) "ராமாநுஜபதச்சாயா கோவிந்தாஹ்வாநபாயிநீ - ததாயத்தஸ்வரூபா ஸா ஜீயாந்மத்விச்ரமஸ்தலீ" "எம்பார்மலர்க்கணைகளைந்தானு மேவுமாதர்வழி, அம்பாவிடாரொன்றிலனொருகாலு மரிவையர்க்குத், தம்பாடொருகாலு மேகாந்தமில்லென்று தாமுரைத்த, எம்பாரடி சரணெம்பாரடிசரண மெங்களுக்கே"; (உ) "பட்டார்யயப்ரபத்திவ்ய பதிஸததுலந் த்ராவிடாம்நாயமௌலே ரர்த்தம் ஸ்ரீபாஷ்யமஸ்யாநபிசயதிவராந் தேஸதோ ரங்கராஹஸ்யாந் - யஸ்தேசாக்தோ ந்தேஸிகேந்த்ரோ யதிபதிசரணச்சாய நாமார்யவர்யஸ்தந் கோவிந்தார்யமஸ்மத்குலகுருமமிதஜ்ஞாநவைராக்யமீடே," (௩) "ஹ்ருதி நாராயணம்பஸ்யந் நாப்யட்சதாஹஸ்ஸதா - யஸ்ஸ்வதாரமதௌசாபி கோவிந்தந்தமுபாஸ்மஹே."

---

(க) [illegible]

(உ) [illegible]

(௩) [illegible]



ஆழ்வார்களுக்கும் உடையவருக்கும் தீர்த்ததிவஸம் † சொல்லாதொழிவானென்னென்னில்:— அத்யாபி அகிலாத்மோத்தாரணார்த்தமாக அர்ச்சாவிக்ரஹங்களை அங்கீகரித்து இங்கே எழுந்தருளியிருக்கிறார்களாகையாலே அன்றிக்கே, அவர்கள் இங்கினும் கால்வாங்கிப்போகில் ஆத்மகோடிகளுக்கு ஈடேற வழியில்லையிறே. இத்தை நினைத்திறே, நம்பூர்வாசார்யர்கள் தீர்த்தங் கொண்டாடித் திதிபரிபாலநம்பண்ணாதொழிகிறதும். (க) "ஆர்த்ராயாமுதிதோ மஹாபுரி மஹோதாஹஸ்த்யத்ரிமாத்தாச்ரமஸ் ஸ்ரீரங்கஸ்ரீயமேத்யசிஷ்யமஹிதோ வேதாந்த பாஷ்யம்வதந் - தீப்ரோ திக்விஜயம்விதாய ஸஹ தைர்சிப்யைர்த்விபஞ்சாசதைர்பாதி ஸ்ரீயதுபூதரே யதிவரஸ் ஸம்பத்குமாரம்பஜந்" என்று சித்திரையிற் செய்ய திருவாதிரையிலே ஸ்ரீபெரும்பூதூரிலே அகிலாத்மோத்தாரணார்த்தமாகவந்து அவதரித்து அகிலசாஸ்த்ரங்களையும் அப்யஸித்து, பெருமாள் கோயிலிலே பேரருளாளர் நியமநத்தாலே பெரிய நம்பியை ஆச்ரயித்துப் பஞ்சஸம்ஸ்காரங்களையும்பெற்று "மாற்பால் மனஞ்சுழிப்ப மங்கையர் தோள்கைவிட்டு" என்கிறபடியே ஸர்வஸங்கபரித்யாக பூர்வகமாகப் பேரருளாளர் ஸந்நிதியிலே ஆச்ரமப்ராப்தி பண்ணியருளி, ஸ்ரீரங்கைச்வர்யத்தைப் பெற்று, ஸ்ரீபாஷ்யமருளிச்செய்து திக்விஜயம்பண்ணித் திருவரங்கர் பரத்வத்தை நிலைநிறுத்தியருளி, புழுவன்வ்யாஜேந மேல்நாட்டுக்கு எழுந்தருளித் திருநாராயணற்கு அனைத்தழகுங் கண்டருளப்பண்ணிச் செல்வப்பிள்ளையைப் பெற்றெடுத்துவந்து ப்ரதிஷ்டிப்பித்தருளி ஐம்பத்திருவர்க்காக அர்ச்சாவதாரரூபவிக்ரஹத்தை அங்கீகரித்து, அதிலேதம்ஸர்வசக்தியையும் ப்ரதிஷ்டிப்பித்துக்கொண்டு அவர்களாலே ஸேவ்யமாநராய்ச் * செம்பொற்கழலடித் திருவருச்செல்வப்பிள்ளையை மங்களாசாஸநஞ்செய்துகொண்டு காலதத்வமுள்ளதனையும் இங்கே ஸுப்ரதிஷ்டிதராய் விளங்கா நின்றுகொண்டு வாழ்ந்தருளுகிறாராய்த்து, உடையவர்.

---

(க) [illegible]

'† சொல்லாதொழிவான்' என்பதற்கு - ஸ்ரீவைஷ்ணவர்கள் பரிபாலித்து ப்ராவித்தப்[illegible]த்தாயலிருப்பது என்று பொருள்.

# பட்டர் வைபவம்.

அநந்தரம் பட்டர் ஸ்ரீபாதத்துமுதலிகளுடனே பெருங்கூட்டத் திருவோலக்கமாக எழுந்தருளியிருந்து தர்ஶநம் நிர்வஹித்தருளுகிற காலத்திலே, ஒருதீர்த்தவாஸிப்ராஹ்மணன்வந்து பட்டரை ஸேவித்து அவருடைய வேதாந்தோபந்யாஸ சாதுர்யத்தையும் கோஷ்டியின் வைபவத்தையுங் கண்டு நின்று ‘பட்டரே! மேல்நாட்டில் வேதாந்தியென்று ஒரு பெரிய வித்வானிருக்கிறான்; அவனுடைய வித்தையும் கோஷ்டியும்போலே உமக்கு மிருந்தது’என்ன, பட்டரும் ப்ராஹ்மணன் சொன்ன வார்த்தையைக் கேட்டருளி ‘ஆமோ! அப்படியும் ஒருவித்வா னுண்டோ?’ என்ன, ‘உண்டு’ என்று சொல்லி அந்த ப்ராஹ்மணன் இங்கு நின்றும் புறப்பட்டு மேல்நாட்டுக்குப் போய் வேதாந்தி கோஷ்டியிலேசென்று ‘வேதாந்திகளே! உம்முடைய வித்யைக்கும் கோஷ்டிக்கும் ஸத்ருஶராய்ப் பட்டரென்பாரொருவர் இரண்டாற்றுக்கும் நடுவே எழுந்தருளியிருக்கிறார்’ என்ன, வேதாந்திகளும் ப்ராஹ்மணனைப்பார்த்து ‘ஆமோ! பட்டர் நமக்கு ஒத்த வித்வானோ?’என்ன, அவனும் ‘பட்டர் உம்மிலும்அதிகர்’என்ன, அவனும், அவருக்கு எந்தஶாஸ்த்ரம் போரும்?’ என்ன, ப்ராஹ்மணனும் ‘ஶப்த தர்க்க பூர்வோத்தரமீமாம்ஸை தொடக்கமான ஸகல ஶாஸ்த்ரங்களும் பட்டருக்குப் போரும்’ என்ன, வேதாந்தியும் இவன் சொன்னதைக்கேட்டு ‘இவ்விபூதியிலே நமக்கு ஒருவரும் எதிரில்லையென்று ஷட்தர்ஶநத்திற்கும் ஆஸநமிட்டு அதன்மேலே உயரவிருந்தோம்; பட்டர் நம்மிலும் அதிகரென்று ப்ராஹ்மணன் சொன்னானே!’ என்று அன்றுதொடங்கித் திடுக்கிட்டிருந்தான்.

அவ்வளவிலே அந்தப்ராஹ்மணன் அங்குநின்றும் புறப்பட்டுக் கோயிலுக்குவந்து பட்டர்ஸந்நிதியிலே வந்து ‘பட்டரே! உம்முடைய வைபவமெல்லாம் வேதாந்திக்குச் சொன்னேன்’ என்ன, பட்டரும் ப்ராஹ்மணனைக்குறித்து‘அவன் அதுக்கு என்னசொன்னான்?’ என்ன, அவனும் ‘பட்டருக்கு எந்தஶாஸ்த்ரம் போருமென்று கேட்டான்’ என்ன, பட்டரும் ‘ப்ராஹ்மணா! அதுக்கு நீ வேதாந்திகளுக்கு என்ன சொன்னாய்?’ என்ன, அவனும் ‘பட்டருக்கு ஶப்ததர்க்கங்களும் பூர்வோத்தரமீமாம்ஸைகளும் நன்றாகப்போருமென்று வேதாந்தியுடனே



சொன்னேன்’ என்ன, பட்டரும் அந்தப்ராஹ்மணனைக் குறித்து ‘தீர்த்தவாஸியாய்த் தேஶங்களெங்கும் நடையாடி எல்லாருடைய வித்யாமாஹாத்ம்யங்களெல்லாம் அறிந்து நாகரிகனாயிருக்கிற நீ, நமக்குப்போருமதெல்லாம் அறிந்து வேதாந்திக்குச் சொல்லாமல் கேவலம் வேதாந்தஶாஸ்த்ரங்களே போருமென்று தப்பச்சொன்னாயே !’ என்ன, ப்ராஹ்மணனும் பட்டரைக்குறித்து ‘இந்த லோகத்திலே நடையாடுகிற ஶாஸ்த்ரமொழிய உமக்கு மற்ற எதுபோருமென்று வேதாந்திக்குச் சொல்லுவது?’ என்ன, ‘திருநெடுந்தாண்டகம் போருமென்று வேதாந்திக்குச் சொல்லாதிருந்தாயே!’ என்று வெறுத்தருளிச்செய்துவிட, அவனும் பின்னையும் மேல்நாட்டுக்குப்போய் வேதாந்தியுடனே இச்செய்தியைச் சொல்ல, வேதாந்தியும் ‘திருநெடுந்தாண்டகமென்கிற ஶப்தத்திற்குத்தானே அர்த்தமாகிறதில்லை; அவர் எப்படிப்பட்ட வித்வானோ!’ என்று விஸ்மயப்பட்டிருக்கச்செய்கை, பட்டரும் ‘வேதாந்தியை நம்முடைய தர்ஶநத்திலே அந்தர்ப்பூதராம்படி திருத்துமென்று உடையவர்நியமித்தருளினது அவஶ்யம் கர்த்தவ்யம்’ என்று தம் திருவுள்ளத்திலே கொண்டு, பெருமாள்ஸந்நிதியிலேசென்று ஸேவித்துநின்று ‘நாயன்தே! மேல்நாட்டிலே வேதாந்தியென்று ஒரு பெரியவித்வா னிருக்கிறான்; அவனைத் திருத்தி நம் தர்ஶநப்ரவர்த்தகனாம்படி பண்ணவேண்டுமென்று அங்கேறவிடைகொள்வதாக இராநின்றேன்; தேவரீர் அவனை நன்றாகத்திருத்தி ஸ்ரீராமாநுஜஸித்தாந்தத்திற்கு நிர்வாஹகனாம்படி திருவுள்ளம்பற்றியருளவேணும்’ என்று பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்ய, பெருமாளும் அப்படியே யாகக்கடவன் ; த்வரித்துப் போய்வாரும்’ என்று திருவுள்ளமுகந்து தீர்த்தம் திருமாலை திருப்பரியட்டத்துடனே தம் குமாரரான வாசிதோன்ற அநேகம் திருவாபரணம் திருப்பரியட்டம் ந்ருத்தகீத்வாத்யங்களையும் தமக்கு உண்டான ஸகல பரிஜநபரிச்சதங்களையும் கூட்டி, ‘போம்’ என்று விடைகொடுத்தருள,

பட்டரும் புறப்பட்டு மேல்நாட்டிலே யெழுந்தருளிக் காவேரிக்கரையிலே சிறப்புத்தூரண்டையிலே நின்றருள, அநந்தாழ்வான் ‘ஆழ்வான்குமாரர் பட்டர் எழுந்தருளினார்’ என்றுகேட்டுச் சடக்கெனப் புறப்பட்டு எழுந்தருளித் திருக்காவேரிக்கரையிலே பட்டரைக்கண்டு ஸேவித்து ‘ஐயோ ! ஸௌகுமாரரான நீர், காடும் மலையுங் கடந்து இத்தனைதூரம் எழுந்தருளலாமோ?’ என்ன, பட்டரும் திருவடிகளிலே விழுந்து அநந்தாழ்வானை ஸேவித்து ‘உடையவர்

மேல்நாட்டிலேபோய் வேதாந்தியைத்திருத்தி நம்தர்ஶநப்ரவர்த்தகராம்படிபண்ணென்று நியமித்தருளினாரே; அப்படியே நம்பெருமாளும் விடைஸாதித்து அனுப்பியருளினார்' என்று விண்ணப்பஞ்செய்ய, அநந்தாழ்வானும் "*எங்கள் குடிக்கரசே! வாரும்' என்று பட்டரை எடுத்து அணைத்துக்கொண்டுபோய், (க) "யாதவாத்ரேர்ஜிஹ்மிஷா யேஷாங்கேஷாஞ்சவித்யதே- தேஷாந்தேஶே யமபடா: நகச்சந்தி கதாசந" என்று யதுஶைலயியாஸை யாவர் சிலர்க்கு உண்டாயிருக்கும், அவர்கள் வஸிக்குந்தேசத்தில் யமபடர் மறந்தும் புகுரார்களென்றும், (உ) "ஸஹஸ்ரஶிகரஸ்ஸோயம் ஸாக்ஷாச்சேஷாத்மகோகிரி: - வைகுண்டாதபியத்ராஹம் ரமயாஸஹிதோரமே" என்று ஸஹஸ்ரபணாமண்டலமுடைய திருவநந்தாழ்வானவதாரமான யதுகிரிஶிகரத்திலே ஸமஸ்த கல்யாண குணங்களும் குன்றிலிட்ட விளக்காய்ப்ரகாஶிக்கும்படி பரமபதத்தையும் திருப்பாற்கடலையும் உபேக்ஷித்து * அரவிந்தப்பாவையுந் தானுமாய் * அல்லிமலர்மகள் போகமயக்குக்களாய் நிற்க (ந) "வைகுண்டவாஸிநஸ்ஸர்வே ஶேஷஶேஷாஶநாதய:- திர்யக்ஸ்தாவரஜந்மாநிஶ்ரயந்தே யதுபூதரே" என்று * வைகுந்தநாட்டில்வாழும் ஸேனைமுதலியார் திருவநந்தாழ்வான் முதலான நித்யமுக்தரெல்லாருந்திருநாடு*புல்லெழுந்துபோம்படி குடிவாங்கிவந்துஇஸ்ஸௌஶீல்யஸௌலப்யாநுபவார்த்தமாகத் திர்யக்ஸ்தாவரஜந்மங்களைப் பரிக்ரஹித்து ஸுப்ரதிஷ்டிதராய் இங்கே வர்த்திக்கிறார்களென்றும் சொல்லும்படியான வைபவத்தையுடைய யாதவாத்ரியைக்கிட்டி, சேதநன் பாதபீடத்திலே ஏறும் பாவனைகொண்டு செம்பொன் யதுகிரியேறித் திருக்கல்யாணஸரஸ்ஸைக்கிட்டி, (ச) "காலேகாலேச ஸேவந்தாம் கல்யாணிதீர்த்தமத்புதம்- யத்ர தீர்த்தே நிமஜ்ஜந்தோ யதயஸ்ஸம்ஶிதவ்ரதா:-உந்மஜ்ஜந்திபவாம்போதி கல்லோலகலஹாந்தராத் புஷ்கரேநததாப்ரீதிர் நகங்காப்யாம் நயாமுநே-யதாகல்யாண தீர்த்தஸ்ய தீர்த்தேகல்யாணசேதஸாம் - தீர்த்தேதத்ராமலேஸ்நாத்வா முச்யந்தேஸர்வகில்பிஷை: - நாஸ்திகஶ்ச க்ருதக்நஶ்ச பரீவாதபரோபிச - பரப்ரஶம்ஸாநிஷ்டஶ்ச ஸ்வப்ரஶம்ஸா பராயண: - யஜ்ஞவிக்நகரஶ்சைவ வேதாந்தபரதூஷக: - பரதாராநுரக்தஶ்ச பாகபேதகரோபிச-பரத்ரவ்யாபஹாரீச பாஷண்டாகமதத்பர:-ஶூத்ராந்நபசகஶ்சைவ ஶ்வாதீநாமுபலாளக: - தர்மவிக்ரயஶீலஶ்ச ஶ்ராத்தபுக்ராமயாஜக:-தேவதாத்ரவ்யஹாரீச தர்ப்படம்பஶமந்வித:-கவாங்க்லேஶகரஶ்சாபி ப்ராஹ்மணாநாஞ்சநிந்தக:- விஷ்ணுபக்திவிகாதீச வ்ருஷலீபதிரேவச" என்று இப்படிப்பட்டிருக்கிறவர்களுடைய பாபங்களைப் போக்கவல்ல திருக்கல்யாணியிலே நீராடிக் கேஶவாதியான பன்னிரண்டு திருநாமஞ் சாத்தியருளி எழுந்தருள, அங்கிருந்த ஐம்பத்திருவர் முதலான அனைவரும் சடகோபன் முன்னிலையாக வந்து எதிர்கொள்ள, பட்டரும் ஸாஷ்டாங்கமாக ஸேவித்துத் திவ்யநகரிக்குள்ளே யெழுந்தருளிச் சதுரநகோபுரத்தை அஞ்சலித்து உள்ளே புகுந்து, ஸ்ரீபலிபீடத்தருகே * தாளுந் தடக்கையுங் கூப்பித்

(க) 𑌯𑌾𑌦𑌵𑌾𑌦𑍍𑌰𑍇𑌰𑍍𑌜𑌿𑌹𑍍𑌮𑌿𑌷𑌾 𑌯𑍇𑌷𑌾𑌂 𑌕𑍇𑌷𑌾𑌞𑍍𑌚𑌿𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ।
𑌤𑍇𑌷𑌾𑌂𑌦𑍇𑌶𑍇 𑌯𑌮𑌭𑌟𑌾𑌃 𑌨𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿𑌕𑌦𑌾𑌚𑌨 ।

(உ) 𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑌿𑌖𑌰𑌸𑍍𑌸𑍋𑌽𑌯𑌂 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌚𑍍𑌛𑍇𑌷𑌾𑌤𑍍𑌮𑌕𑍋 𑌗𑌿𑌰𑌿𑌃 ।
𑌵𑍈𑌕𑍁𑌣𑍍𑌠𑌾𑌦𑌪𑌿 𑌯𑌤𑍍𑌰𑌾𑌹𑌂 𑌰𑌮𑌯𑌾 𑌸𑌹𑌿𑌤𑍋 𑌰𑌮𑍇 ॥

(ந) 𑌵𑍈𑌕𑍁𑌣𑍍𑌠𑌵𑌾𑌸𑌿𑌨𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇 𑌶𑍇𑌷𑌶𑍇𑌷𑌾𑌶𑌨𑌾𑌦𑌯𑌃 ।
𑌤𑌿𑌰𑍍𑌯𑌕𑍍𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌜𑌨𑍍𑌮𑌾𑌨𑌿 𑌶𑍍𑌰𑌯𑌨𑍍𑌤𑍇 𑌯𑌦𑍁𑌭𑍂𑌧𑌰𑍇 ॥

(ச) 𑌕𑌾𑌲𑍇𑌕𑌾𑌲𑍇𑌚𑌸𑍇𑌵𑌨𑍍𑌤𑌾𑌂 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑍀 𑌤𑍀𑌰𑍍𑌥𑌮𑌦𑍍𑌭𑍁𑌤𑌮𑍍 ।
𑌯𑌤𑍍𑌰 𑌤𑍀𑌰𑍍𑌥𑍇 𑌨𑌿𑌮𑌜𑍍𑌜𑌨𑍍𑌤𑍋 𑌯𑌤𑌯𑌸𑍍𑌸𑌂𑌶𑌿𑌤𑌵𑍍𑌰𑌤𑌾𑌃 ॥ 𑌉𑌨𑍍𑌮𑌜𑍍𑌜𑌨𑍍𑌤𑌿 𑌭𑌵𑌾𑌮𑍍𑌭𑍋𑌧𑌿𑌕𑌲𑍍𑌲𑍋𑌲𑌕𑌲𑌹𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍 । 𑌪𑍁𑌷𑍍𑌕𑌰𑍇𑌣 𑌤𑌥𑌾 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌰𑍍𑌨 𑌗𑌙𑍍𑌗𑌾𑌯𑌾𑌂 𑌨 𑌯𑌾𑌮𑍁𑌨𑍇 ॥ 𑌯𑌥𑌾𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌤𑍀𑌰𑍍𑌥𑌸𑍍𑌯 𑌤𑍀𑌰𑍍𑌥𑍇𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌚𑍇𑌤𑌸𑌾𑌮𑍍 । 𑌤𑍀𑌰𑍍𑌥𑍇 𑌤𑌤𑍍𑌰𑌾𑌮𑌲𑍇 𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾 𑌮𑍁𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑍈𑌃 ॥ 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿𑌕𑌶𑍍𑌚 𑌕𑍃𑌤𑌘𑍍𑌨𑌶𑍍𑌚 𑌪𑌰𑍀𑌵𑌾𑌦𑌪𑌰𑍋𑌽𑌪𑌿 𑌚 । 𑌪𑌰𑌪𑍍𑌰𑌶𑌂𑌸𑌾𑌨𑌿𑌷𑍍𑌠𑌶𑍍𑌚 𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌶𑌂𑌸𑌾𑌪𑌰𑌾𑌯𑌣𑌃 ॥ 𑌯𑌜𑍍𑌞𑌵𑌿𑌘𑍍𑌨𑌕𑌰𑌶𑍍𑌚𑍈𑌵 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌪𑌰𑌦𑍂𑌷𑌕𑌃 । 𑌪𑌰𑌦𑌾𑌰𑌾𑌨𑍁𑌰𑌕𑍍𑌤𑌶𑍍𑌚 𑌪𑌾𑌕𑌭𑍇𑌦𑌕𑌰𑍋𑌽𑌪𑌿 𑌚 ॥ 𑌪𑌰𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌪𑌹𑌾𑌰𑍀 𑌚 𑌪𑌾𑌷𑌣𑍍𑌡𑌾𑌗𑌮𑌤𑌤𑍍𑌪𑌰𑌃 । 𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌨𑍍𑌨𑌪𑌚𑌕𑌶𑍍𑌚𑍈𑌵 𑌶𑍍𑌵𑌾𑌦𑍀𑌨𑌾𑌮𑍁𑌪𑌲𑌾𑌳𑌕𑌃 ॥ 𑌧𑌰𑍍𑌮𑌵𑌿𑌕𑍍𑌰𑌯𑌶𑍀𑌲𑌶𑍍𑌚 𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌭𑍁𑌗𑍍𑌗𑍍𑌰𑌾𑌮𑌯𑌾𑌜𑌕𑌃 । 𑌦𑍇𑌵𑌤𑌾𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌹𑌾𑌰𑍀 𑌚 𑌦𑌰𑍍𑌪𑌦𑌮𑍍𑌭𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 ॥ 𑌗𑌵𑌾𑌂 𑌕𑍍𑌲𑍇𑌶𑌕𑌰𑌶𑍍𑌚𑌾𑌪𑌿 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌨𑌿𑌨𑍍𑌦𑌕𑌃 । 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌭𑌕𑍍𑌤𑌿𑌵𑌿𑌘𑌾𑌤𑍀 𑌚 𑌵𑍃𑌷𑌲𑍀𑌪𑌤𑌿𑌰𑍇𑌵 𑌚 ॥

தண்டன்ஸமர்ப்பித்து, உடையவர்ஸந்நிதிக்குளெழுந்தருளி(க) "யோநித்யம்" என்று தொடங்கி (உ) "ராமாநுஜஸ்யசரணௌஸரணம்ப்ரபத்யே" என்று ஸேவித்து ராமாநுஜதிவாகரரையுந் திருவடிதொழுது வாழ்த்தித் தீர்த்தப்ரஸாதங்களும் பெற்று அவர் புருஷகாரமாக ப்ரதக்ஷிணமாக எழுந்தருளி (௩) "பஸ்சாதபிவிமாநஸ்ய ப்ராகாராந்தரமத்யத꞉ - ஸுதர்ஸநஞ்சலக்ஷ்மீஸ்ச வர்த்தேதே ஸர்வகாமதே" என்று சொல்லப்பட்ட திருவாழியாழ்வானையும் யதிகிரிநாச்சியாரையும் ஸேவித்து, ஆநந்த மயமான திவ்யவிமாநத்தையுந் தொழுது, உள்ளே யெழுந்தருளி ஸாஷ்டாங்கமாக ஸேவித்து, நம்மாழ்வாரையும் திருமங்கையாழ்வாரையும் ஸேவித்து, செல்வப்பிள்ளையையும் திருவடிதொழுது அவ்விக்ரஹ ஸௌந்தர்யத்திலே ஆழங்கால்பட்டுநிற்க, செல்வப்பிள்ளையும் உகந்து தீர்த்தம் திருமாலை சடகோபன் ப்ரஸாதித்தருளப் பெற்றுப் புறப்பட்டு, ஸேனை முதலியாரையுந் திருவடிதொழுது, சண்டப்ரசண்டர்களான த்வாரபாலகர்களநுமதிகொண்டு உள்ளே சென்று திருப்பல்லாண்டை அநுஸந்தித்துத் திருநாராயணப்பெருமாளைப் பாதாதிகேஸாந்தமாக ஸேவித்து அஞ்சலித்துநிற்க, திருநாராயணரும் மிகவும் உகப்போடே பட்டருக்குத் திருமாலை திருப்பரியட்டம் தீர்த்தம் சடகோபனும் ப்ரஸாதித்து விடைகொடுத்தருள, பட்டரும் அநந்தாழ்வானுடனே புறப்பட்டு எழுந்தருளி, வேதாந்திகளிருக்கிற ஊர் ஆஸந்நமானவாறே 'ஆழ்வான் குமாரர் பட்டர் வந்தார், அணியரங்கன் குமாரர் பட்டர் வந்தார், வேதாந்தாசார்ய பட்டர் வந்தார், வேதியர்கள் தனித்தலைவர் வந்தார், ஸ்ரீபராஸர பட்டர் வந்தார், பரவாதிமதஹஸ்தி பஞ்சாநநர் வந்தார்' என்று பல திருச்சின்னம் பணிமாறுகை முதலான தூர்யகோஷத்துடனே பெருந்திரளாக மஹாஸம்ப்ரமத்துடனே ஸர்வாபரணபூஷிதராய், சத்ரசாமரதாலவ்ருந்தாதிகள்ஸேவிக்க மணிப்பல்லக்கிலே எழுந்தருளாநிற்க, அவ்வளவிலே இரண்டு ப்ராஹ்மணர்கள் எதிரேவந்து பட்டரைப் பார்த்து 'நீர் ஆர்? அநேகம் ஸம்ப்ரமத்துடனே வந்தீர்; எங்கேற எழுந்தருளுகிறீர்?' என்றுகேட்க, பட்டரும் 'நாம் ஸ்ரீரங்கராஜபட்டர்; வேதாந்தி

(க) 𑌯𑍋𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 (உ) 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌸𑍍𑌯𑌚𑌰𑌣𑍌𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥ (௩) 𑌪𑌶𑍍𑌚𑌾𑌦𑌪𑌿𑌵𑌿𑌮𑌾𑌨𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌕𑌾𑌰𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑌧𑍍𑌯𑌤𑌃 । 𑌸𑍁𑌦𑌰𑍍𑌶𑌨𑌞𑍍𑌚𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌶𑍍𑌚 𑌵𑌰𑍍𑌤𑍇𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌮𑌦𑍇 ॥



களுடனே தர்க்கிக்கப் போகிறோம்;' என்ன, அந்தப்ராஹ்மணர்கள் சொன்னபடி:—'நீர் இப்படி ஸம்ப்ரமத்துடனே எழுந்தருளினால், வேதாந்திகளை உமக்குக் காணப்போகாது காணும்; அவர் க்ருஹத்துக்குள்ளே இருந்துவிடுவர்; அவருடையஸிஷ்யப்ரஸிஷ்யர்கள் தலைவாசலிலேயிருந்துவந்த வித்வான்களுடனே நாலாறுமாஸம்தர்க்கித்து அவர்களை உள்ளே புகுரவொட்டாதே புறம்பே தள்ளிவிடுவர்கள்' என்ன, பட்டரும் அந்தப்ராஹ்மணரைப் பார்த்து 'ஆகில் நாம் நேரேசென்று அவர்க்ருஹத்திலே புகுந்து வேதாந்திகளைக் காணும் விரகு என்?' என்று கேட்டருள, அவர்கள் சொன்னபடி:—'வேதாந்திகள் தநவானாகையாலே † அவாரியாக ப்ராஹ்மணருக்கு ஸத்ரபோஜநமிடுவர்; அந்த ஸத்ரபுக்ப்ராஹ்மணரோடேகலசி அவர்கள் வேஷத்தையுந்தரித்துக்கொண்டு உள்ளே சென்றால் புஜிக்க வருகிற ப்ராஹ்மணரை நிரீக்ஷித்திருப்பர்; அங்கே வேதாந்திகளைக் காணலாம்; ஆகையாலே உம்முடைய ஸம்ப்ரமங்களையெல்லாம் இங்கே நிறுத்தி நீரொருவருமே ஸத்ராஸிகளுடனே உள்ளே எழுந்தருளும்' என்றுசொல்லிப்போனார்கள்.

அநந்தரம் பட்டரும் 'இவர்கள் சொன்னது கார்யமாம்' என்று திருவுள்ளம்பற்றி, தம்முடைய அனைத்துப்பரிகரத்தையும் ஊருக்குத் தூரத்திலே நிறுத்தி, தாம் சாத்தியிருந்த ஸர்வாபரணங்களையும் களைந்துவைத்து ஒரு அரசிலைக் ‡ கல்லையைக் குத்தியிடுக்கிக்கொண்டு காவி வேஷ்டியும் தரித்து ஒருகமண்டலமும் கையில் தூக்கிக்கொண்டு அநந்தாழ்வானும் தாமுமாய் ஸத்ராஸிகளுடனேகூடிக் கார்ப்பண்யவேஷத்துடனே உள்ளே எழுந்தருள, வேதாந்திகளும் ப்ராஹ்மணர் புஜிக்கையைப் பார்த்துக்கொண்டு ஒருமண்டபத்திலே ஆறு ஆஸநமிட்டு அதன்மேலே பெரிய மதிப்புடனே இராநிற்க, ப்ராஹ்மணரெல்லாரும் ஸத்ரஸாலையிலே புகுர, பட்டர் அங்கே எழுந்தருளாமல் வேதாந்திகளை நோக்கி யெழுந்தருள, வேதாந்திகளும் 'பிள்ளாய் இங்கு என் வருகிறீர்?' என்ன பட்டரும் 'பிக்ஷைக்கு, வருகிறேன்' என்ன, 'எல்லாரும் புஜிக்கிறவிடத்திலே போகீர், பிக்ஷைக்கு' என்ன, பட்டரும் 'எனக்குச் சோற்றுப்பிக்ஷையன்று' என்ன, வேதாந்திகளும்

† அவாரியாக - தடையில்லாமல்: தேசவழக்குச் சொல்.

‡ கல்லையைக்குத்தியிடுக்கிக்கொண்டு - தொன்னையைத் தைத்துஎடுத்துக் கொண்டு.

'இவர் ஸந்ந்யாஸியானாலும் கிஞ்சித் வித்வானாகக்கூடும்' என்று விசாரித்து "காபிக்ஷா?" என்ன, பட்டரும் "தர்க்கபிக்ஷா" என்ன, வேதாந்திகள் இத்தைக்கேட்டுத் திடுக்கிட்டு 'முன்னே தீர்த்தவாஸிப் ப்ராஹ்மணன் வந்து நமக்குச் சொன்ன பட்டரல்லது நம்முன்னே வந்து கூசாமல் நின்று தர்க்கபிக்ஷை யென்று கேட்கவல்லவர் இந்த லோகத்தி லொருவருமில்லை; வேஷம் கார்ப்பண்யமாயிருந்ததேயாகிலும் இவர் பட்டராகவேணும் என்று நிஸ்சயித்து, 'நம்மைத் தர்க்கபிக்ஷைகேட்டீர்; நீர் பட்டரோ?' என்ன, இவரும் 'ஆம்'என்று கமண்டலம் கல்லை காவிவேஷ்டி இவற்றையெல்லாம் சுருட்டி யெறிந்து எழுந்தருளியிருந்து மஹாவேகமாக உபந்யஸிக்க, அவ்வளவிலே வேதாந்திகளும் பட்டர்வைபவங்கேட்டிருந்தும் 'இவர் வித்யாமாஹாத்ம்யங்காணவேணும்' என்று இவருடனே தர்க்கிக்க, இப்படி ஒருவர்க் கொருவர் மத்தவாரணம்பிணங்குமாபோலே தர்க்கிக்க, இங்ஙனே ஒன்பதுநாள் சென்றபின்பு பத்தாம் நாள் பட்டர் தர்க்கிக்கச் செய்தே மாயிஸித்தாந்தத்தை ஸத்தூவாகக்கண்டித்து விஸிஷ்டாத்வைதபரமாக உபந்யஸிக்க, இதைக்கண்ட வேதாந்திகள் எழுந்திருந்துநின்று நடுங்கி வேறொன்றுஞ் சொல்லாதே 'மநுஷ்யமாத்ரமே யென்றிருந்தேன்; நம்பெருமாளென்ன நீரென்ன பேதமில்லை; உறங்கும்பெருமாள் அவர், உலாவும் பெருமாள் நீர்; ஆனபின்பு வாய்திறந்து ஒருவார்த்தை சொல்லக் கூடாது'என்று அரைகுலையத் தலைகுலையவந்து பட்டர் திருவடிகளிலே அடைவு கெடவிழுந்து ஸேவித்து 'அடியேனை இரங்கியருளவேணும்' என்று மிகவும் அநுவர்த்திக்க, பட்டரும்,தாம் எழுந்தருளின கார்யம் அதிஸீக்ரமாகப் பலித்தவாறே, மிகவுந் திருவுள்ளமுகந்தருளிவேதாந்திகளை அங்கீகரித்தருளி, அவருக்கு (க) "அர்த்தபஞ்சகதத்வஜ்ஞா: பஞ்சஸம்ஸ்காரஸம்ஸ்க்ருதா:-ஆகாரத்ரயஸம்பந்நா மஹாபாகவதாஸ்ம்ருதா:" என்று சொல்லப்பட்ட தாபபுண்ட்ராதி பஞ்சஸம்ஸ்காரங்களையும் ப்ரஸாதித்து அர்த்தபஞ்சகஜ்ஞாநத்தையுமுண்டாக்கி, ஆகாரத்ரயஸம்பந்நரான மஹாபாகவதோத்தமராக்கி விஸேஷகடாக்ஷஞ்செய்தருளி, 'வேதாந்திகளே! நீர் ஸர்வஜ்ஞராயிருந்தீர்; ஆகையாலே,நாம உமக்குப் பாக்கச்சொல்லலாவதொன்றுமில்லை; விஸிஷ்டாத்வைதமே பொருள்; நீர் மாயாவாதரீதியை ஸவாஸ

(க) 𑌅𑌰𑍍𑌥𑌪𑌞𑍍𑌚𑌕𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌃𑌪𑌞𑍍𑌚𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑌾𑌃। 𑌆𑌕𑌾𑌰𑌤𑍍𑌰𑌯𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑌾𑌮𑌹𑌾𑌭𑌾𑌗𑌵𑌤𑌾𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌃॥



நமாக த்யஜித்து, ஸ்ரீயப்பதியைப்பற்றி ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்தத்தையே நிர்வஹித்துப்போரும்' என்று அருளிச்செய்து ஆழ்வார்கள் அருளிச்செயல் நாலாயிரமும் ஓதும்படி நியமித்தருளி, 'இனி நாம் நம்பெருமாளை ஸேவிக்கப்போகிறோம்' என்று உத்யோகித்துப் புறப்பட்டவளவிலே, ஊருக்குப் புறம்பே நிறுத்தின அனைத்துப் பரிகாரமும் ஊரிலே வந்து அவர்கள் மஹாஸம்ப்ரமத்துடனே பட்டரைச் சூழ்ந்து ஸேவித்துப் பூர்வம்போலே ஸர்வாபரணங்களாலும் பூஷித்து ஒப்பித்து மணிப்பல்லக்கிலே யேற்றி உபய சாமர தாலவ்ருந்தாதிகள் பரிமாற, ஸகலவாத்யங்களும் முழங்க, திருச்சின்னம்பணிமாறிப் புறப்படக்கண்டு, வேதாந்திகள் பட்டருடைய பெருமையையும் ஸம்பத்தையும் நன்றாகக் கண்குளிர நோக்கி 'இந்த ஸ்ரீமான் இத்தனை தூரம் காடும் மலையும் கஷ்டமுங் கடந்து எழுந்தருளி, நித்யஸம்ஸாரிகளிலுங் கடைகெட்டு ம்ருஷாவாதியா யிருந்த அடியேனுடைய துர்க்கதியே பற்றாசாக அங்கீகரித்தருளுவதே!' என்று மிகவும் வித்தராய்க் கண்ணுங் கண்ணீருமாய்க்கொண்டு பட்டர்திருவடிகளிலே விழுந்து க்லேஸித்து 'பெரியபெருமாள்தாமான தன்மையாய் ஸௌந்தர்யஸௌகுமார்யாதிகளையுடையராய் எழுந்தருளின தேவரீர், 'அநாதிகாலம் தப்பித்திரிந்து* அலம்புரிந்த நெடுந்தடக்கைக்கும் எட்டாதபடி கைகழிந்துபோன இவ்வாத்மா இன்னும் தப்பிப்போம்' என்று திருவுள்ளம்பற்றியருளி, இப்படி அதிகார்ப்பண்யமாயிருப்பதொரு வேஷத்தையும் தரித்துக்கொண்டு ஸந்ந்யாஸிகளுடனே கூட எழுந்தருளி, அதி துர்மாநியான அடியேனை அங்கீகரித்தருளின அந்த வேஷத்தை நினைத்தால் அடியேனுக்கு பொறுக்கப்போகிறதில்லை' என்று சொல்லி வாய்விட்டழுதுகொண்டு திருவடிகளிலே விழுந்துகிடக்க, பட்டரும் வேதாந்திகளை முடிபிடித்தெடுத்து நிறுத்தித் தேற்றி 'நீர் இங்கே ததீயாராதநைகபரராய் ஸுகமேயிரும்' என்று அருளிச்செய்து கோயிலை நோக்கிப் புறப்பட்டு எழுந்தருளாநிற்க, "மின்னுமாமுகில்மேவுதண்டிருவேங்கடம்" என்கிறபடியே அப்புதாசும்பியதுபூதரஸ்ருங்கநிலயனான நரஸிம்ஹதிவ்யவிமாநம் தூரத்திலே தோன்றக்கண்டு அஞ்ஜலித்துப் பின்னையும் திருநாராயணபுரம் வழியாக எழுந்தருளி, அநந்தாழ்வான் முன்னிலையாக நபகம் நாரஸிம்ஹம்† கிரிபரிப்ருடஸ்தாநம் ஸீதாரண்யம் ஜ்ஞாநாஸ்வத்தமாகிற பஞ்சபாகவதஸ்தலம் ஸ்வேதம்ருத் பரி

† 'ஹரிப்ரஹ்மமஹாஸ்தாநம்' என்று ப்ரதிபேதம்.

நாசிலே ஆகிற ஸப்த க்ஷேத்ரங்களையும், வேதபுஷ்கரிணி தர்ப்பதீர்த்தம் பலாஶதீர்த்தம் பத்மதீர்த்தம் யாதவ மஹாநதி வைகுண்டகங்கா தீர்த்தம் நாராயணதீர்த்தம் மைத்ரேயகுண்ட தீர்த்தங்களையும் ஸேவித்து அவகாஹித்து, இவற்றின் மத்யகதமான திருக்கல்யாணியிலே நீராடி, கேஶவாதித்வாதஶோர்த்வபுண்ட்ரதரராய், முன்புபோலே ஸேவாக்ரமந் தப்பாமல் ஸேவித்துத் தீர்த்தப்ரஸாதங்களும் பெற்றுப் புறப்பட்டுத் திருமலையிறங்கி எழுந்தருளி, சிறுப்புத்தூரிலே அநந்தாழ்வானை நிறுத்தி, பயணகதியிலேத்வரித்துக் கோயிலுக்கு எழுந்தருளி, திருக்காவேரியிலே நீராடியருளி த்வாதஶோர்த்வபுண்ட்ரதரராய், ஸகலபரிஜந பரிச்சதங்களோடே 'வேதாந்தசார்ய பட்டர் வந்தார், வேதாந்திகளைவென்ற விரகர் வந்தார்' என்று திருச்சின்னம் பணிமாற,* அணியரங்கன் திருமுற்றத்தடியார் எதிர்கொள்ள எழுந்தருளி, ஸேவாக்ரமந் தப்பாமல் ஸேவித்துக்கொண்டு உள்ளே புகுந்து *மாயோனை மணத்தூணைபற்றிநின்று வாயார வாழ்த்திநிற்க, பெருமாளும் பெரிய ப்ரீதியோடே திருமாலை திருப்பரியட்டம் தீர்த்தம் சடகோபனும் ப்ரஸாதித்துத் திருமாளிகையிலே போகவிட்டருள, பட்டரும் தம் திருமாளிகையிலே எழுந்தருளி, அங்கே ஆண்டானை ஸேவித்து ஸ்ரீபாதத்து முதலிகளுக்குத் தர்ஶநார்த்தம் நிர்வஹித்துக்கொண்டு எழுந்தருளி யிருந்தார்.

அநந்தரம், அங்கே கங்கோரையிலே வேதாந்திகள் * திருமாலடியார்களைப் பூசித்துக்கொண்டிருக்கும் நாளிலே, இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் இளைத்து வேதாந்திகள் திருமாளிகைக்கு எழுந்தருளி 'க்ஷுத்து நலியாநின்றது' என்று அமுதுசெய்யத் தேட, வேதாந்திகள் தேவிகளிருவரும் பார்த்து 'உங்கள் வேதாந்திகள் தீர்த்தமாடப்போனார்; இங்கு ஒன்றுமில்லை; நீங்கள் அங்கேற்ப் போங்கோள்' என்றுசொல்லி உதாஸீநம்பண்ணிவிட, அந்த ஸ்ரீவைஷ்ணவர்களும் வேதாந்திகள் பக்கல்சென்று இத்தை அறிவிக்க, அவரும் அதுகேட்டு அநுதபித்துத் தம் திருமாளிகையிலே எழுந்தருளித் தேவிகளிருவரையுஞ் சீறி அப்போதே புறப்பட்டுக் கோயிலுக்கு எழுந்தருளத் தேட, அங்குள்ளவர்கள் வேதாந்திகளைப் போகவொண்ணாதென்று தகைய, இவரும் தமக்கு நிரவதிகதநமுண்டாகையாலே அத்தை மூன்று அம்ஶமாகப் பிரித்து இரண்டு தேவிகளுக்கும் இரண்டு அம்ஶங் கொடுத்து



மற்றையம்ஶத்தை ஸ்வாசார்யருக்காக எடுப்பித்துக்கொண்டு அத்தேசத்தையும் ஸவாஸநயாக விட்டு, '''இல்லறமல்லேல் துறவறம்'' என்று அதிதிஸத்கார யோக்யையல்லாத பார்யையை த்யஜித்து ஸந்ந்யஸிக்கக்கடவன்' என்று ஶாஸ்த்ரம் சொல்லுகையாலே ஸர்வஸங்கபரித்யாக பூர்வகமாக அங்கே ஸந்யஸித்தருளிக் கோயிலை நோக்கி எழுந்தருளாநிற்கச் செய்தே திருக்காவேரிக் கரையிலுள்ள சிறுப்புத்தூரிலே அநந்தாழ்வானைக் கண்டு ஸேவித்துநிற்க, அநந்தாழ்வானும் 'வாரீர் வேதாந்திகளே! ஸுகுமாரரான நீர் இங்ஙனே செய்பலாமோ? வேர்த்தபோது நீராடிப் பசித்தபோது அமுதுசெய்து பட்டர் திருவடிகளை ஶரணமென்றிருந்தால், உம்மைப் பரமபதத்தினின்றும் தள்ளிவிடுவாருண்டோ? இனி யென்! திருமந்த்ரத்திலே பிறந்து த்வயத்திலே வளர்ந்து த்வயைகநிஷ்டராவீர்' என்று ஆஶீர்வதித்து, 'போம்' என்று விட்டார்; அதாவது - திருமந்த்ரம் ஆத்மஸ்வரூபயாதாத்ம்யப்ரகாசகமாகையாலே ஶேஷத்வ ஜ்ஞாநோத்பத்தியாகிற ஆபிஜாத்யமுண்டாய், த்வயத்திலும் ஸ்ரீமச்சப்தோக்தமான பெரிய பிராட்டியார் புருஷகாரத்தாலே வர்த்தமாநார்த்தத்திலே வர்த்தித்து, உத்தரவாக்யோக்தங்களைப் பற்றக் கைங்கர்யைகநிஷ்டராவீரென்று சொன்னபடி.

வேதாந்திகளும் பயணகதியிலேபோய்க் கோயிலிலே யெழுந்தருளிப் பட்டர் திருவடிகளிலே ஸேவித்து, தாம் கொண்டுவந்த தநத்தைத் தம்மதென்கிற அபிமாநத்தை விட்டுப் பட்டருக்கு இஷ்டவிநியோகார்ஹமாம்படி அவர் திருவடிகளிலே ஸமர்ப்பித்து நிர்மமராய் நிற்க, அவ்வளவிலே பட்டரும் மிகவும் உகந்தருளி 'நம்முடைய சீயர் வந்தார்' என்று வாரியெடுத்துக் கட்டிக்கொண்டருளி ஒரு க்ஷணமும் பிரியாமல் தம்முடைய ஸந்நிதியிலே வைத்துக்கொண்டு ஸகலார்த்தங்களையும் ப்ரஸாதித்தருள, சீயரும் பட்டரையல்லது மற்றொரு தெய்வம் அறியாதிருந்தார்.

பட்டரும் நம்முடைய சீயரென்று சொல்லி அணைத்துக்கொண்ட அன்று தொடங்கி வேதாந்திகளுக்கு 'நஞ்சீயர்' என்று திருநாமமுண்டாய்த்து.

நஞ்சீயர் பட்டரைப் பார்த்து 'பெருமாள் சந்த்ரபுஷ்கரிணிக்கரையிலே கண்வளர்ந்தருளுகிறதற்குத் திருவுள்ளக்கருத்து ஏன்?' என்று விண்ணப்பஞ்செய்ய, பட்டரும், '*நாராயணனே! மணிவண்ணா! நாக

ணையாய்!' என்றுகூப்பிட்டபின்பிறே அந்த மடுவின் கரையிலேஎழுந்தருளினது; இங்குக் கண் வளர்ந்தருளுகிறது நான்கூப்பிடுவதற்குமுன்னே என்னை எடுக்கைக்காக, நான் அகப்பட்ட பொய்கைக் கரையிலே ஏற்கவே வந்து கண்வளர்ந்தருளுகிறானித்தனை; நீர் இவ்வர்த்தம் கேட்டது, உம்முடைய வசத்தாலே யன்றுகாணும்; உம்மைக்கொண்டு நம் பெருமாள் என்னினைவை வெளியிட்டருளினார்' என்று அருளிச்செய்தார்; அதாவது - பகவதவதாரங்களடங்க ஸ்வார்த்தமாக என்றிறே ஜ்ஞாநாதிகர் அநுஸந்திப்பதென்றபடி.

நஞ்சீயர் பட்டரை ஸ்ரீபாதந் தாங்குவதாகத் தோளிலே தண்டை வைக்கப்புக' பட்டரும் 'உம்முடைய வேஷத்திற்கு இது விருத்தங்காணும்' என்று அருளிச்செய்ய, சீயரும் 'அங்குத்தையடிமைக்கு ஏகாந்தமென்று இவ்வேஷத்தைப் பரிக்ரஹம்பண்ணினேன்; அது தானே இதற்கு விரோதமாகில், பழைய வெள்ளையை யுடுக்கிறேன்' என்று விண்ணப்பஞ் செய்தார்; அதாவது-ஆசார்ய கைங்கர்யத்திற்கு அநுரூப மாகாத வர்ணாஶ்ரம தர்மமும் பரித்யாஜ்ய மென்றபடி.

பட்டர் குடும்பஸஹிதமாகக் கூரகுலோத்தமனிலே எழுந்தருளியிருக்கிறவளவிலே திருநந்தவநத்தில் அல்பம் உபஹதியுண்டாக, திருநந்தவநஞ் செய்கிற ஏகாங்கிகள் சில வார்த்தைகள் சொன்னார்களென்று நஞ்சீயர் கேட்டருளி, ஏகாங்கிகளை யழைத்து'நம் பெருமாள் திருக்குழற்கற்றை சிக்கு நாறுகிறதென்றோ நான் திருநந்தவநஞ் செய்கிறது? பட்டருடைய குடும்பத்திற்குஇஷ்டவிநியோகார்ஹமாகவேணுமென்று திருநந்தவநவ்யாஜேந கோலினேனித்தனையன்றோ!' என்று அவர்களைச் சீறி விட்டருளினார்; இத்தால், ஆசார்யபாதந்த்ரன் பகவத்கைங்கர்யம்பண்ணக் கோலுவதும் ஆசார்ய கைங்கர்யார்த்தமாக வித்தனை யென்று கருத்து.

அநந்தரம் பட்டர் திருவணையாட எழுந்தருளுகிறபோது, பகலெல்லாம் வழி நடந்தருளின ஆயாஸத்தாலே விட்டதொரு தூற்றடியிலே நஞ்சீயர் மடியிலே திருமுடியைவைத்துக் கண்வளர்ந்தருள, ஓரிரவெல்லாம் துடைமாறுதல் அசைத்தல் செய்யாதே இருந்தருளினார்; ஆகையாலே, ஆசார்யவிஷயத்திலே சைதந்யம் மூச்சற்றுப் படுக்கையாப் அடிமை செய்கை ஶிஷ்யஸ்வரூபஸித்தி யென்கிறது.



திருவணையாடி மீண்டு எழுந்தருளுகிறபோது ஸாயங்காலமானவாறே பாதிரியென்கிற க்ராமத்திலே போய் ஒரு வேடனகத்தே எழுந்தருளப்புக்கவாறே, அவனும் தானிருந்த ஆஸநத்தையும் வாங்கிப்போகட்டு இவர்க்கு ஒரு கட்டிலை அமைத்துக்கொடுக்க, அதின் மேலே எழுந்தருளியிருந்து 'இவன் நம்முடைய வைபவ மறிந்து செய்தா னல்லன்; க்யாதிபாநாய்ச் செய்தானல்லன்; நம்மால் உபக்ருதனாய்ச் செய்தா னல்லன்; தன்னுடைய க்ருஹத்திலே புகுந்தோமென்னும் அபிமாநமிறே இவன் இவ்வளவு செய்யவேண்டிற்று. ஈஶ்வரன் தன் அபிமாநத்திலே ஒதுங்கினாரை என்ன நினைத்திருக்கிறானோ?' என்று அநுஸந்தித்தருளி, பின்பு அந்தக்ருஹமுடையவனைக் குறித்து 'இங்கு விஶேஷம் ஏது?' என்று கேட்டருள, அவனும் 'நாயன்தே! நான் காட்டிலே வேட்டைக்குப் போனேன்; அங்கே ஒரு முசல் குட்டியைப் பிடித்தேன்; அதனுடைய தாயானது என் முன்னே வந்து வழியிலே எதிரே கும்பிட்டுக்கொண்டு கிடந்தது; அத்தைக்கண்டு எனக்குத்தயைபிறந்து அதின்குட்டியைவிட்டுப்போந்தேன்' என்றான். அத்தைக்கேட்டு இவரும் 'ஒரு சேதநனுக்கு இல்லாததொன்று,பரம சேதநனுக்கு உள்ளதொன்று! (க) "மாமேகம்ஶரணம்வ்ரஜ" என்று அம்முசலுக்கு உபதேஶித்தாருமில்லை; (உ) "அரிஃப்ராணாந்பரித்யஜ்ய ரக்ஷித வ்யஃக்ருதாத்மநா" என்று இவ்வேடனுக்கு உபதேஶித்தாருமில்லை; அவ்வ்யவதாநேந ஶரணாகதி பலிப்பதே! இதொரு ப்ரமாண ஸித்தி இருந்தபடியே!' என்று நஞ்சீயர்க்கு அருளிச்செய்து, கோயிலுக்கு எழுந்தருளிப் பூர்வம்போலே வ்யாக்யாநித்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

அக்காலத்திலே வீரஸுந்தரப்ரஹ்மராயன் பெருமாளுக்கு திருமதிள் கூட்டுவிக்கிற நேரிலே பிள்ளைப்பிள்ளையாழ்வான் திருமாளிகையகப்பட, 'அவர் திருமாளிகையையிடித்துத் திருமதிள்கட்டவேணும்' என்று வீரஸுந்தரன் சொல்ல, பட்டரும் 'உம் திருமதிளோ பெருமாளுக்கு ரக்ஷகம்? அவர்மங்களாஶாஸநமிறே ரக்ஷகம்; ஆகையாலே, முன்பு திருமங்கையாழ்வார் தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலை

(க) மாமேகம் ஶரணம் வ்ரஜ । (உ) அரிஃ ப்ராணாந் பரித்யஜ்ய ரக்ஷிதவ்யஃ க்ருதாத்மநா ॥

கட்டுகிற ஸ்தாநத்தைத் தப்ப ஒதுங்கத் திருமதிள் கட்டவில்லையோ? நீரும் இப்போதும் அப்படியே அவர்திருமாளிகையை விட்டு ஒதுங்கத் திருமதிள் கட்டிவையும்' என்று சொல்ல, வீரஸுந்தரனும் ஆசார்யபுத்ரரென்று அஞ்சாதே அவர் வார்த்தையை அதிக்ரமித்து ஆழ்வான்திருமாளிகையை இடித்துத் திருமதிள் கட்டிவைத்துப் பட்டரைத் தந்மூலமாகக் கோயிலிலேயிருக்கவுமொட்டாதே மிகவும் உபத்ரவிக்க, பட்டர் கோயிலினின்றும் புறப்பட்டுத் திருக்கோட்டியூருக்கு எழுந்தருளும்போது வழியிலே இளைத்தருளி 'நஞ்சீயர் இப்போது வருவதுங் காணேன்' என்ன, நஞ்சீயரும் 'சீயா! சீயா!' என்று அழைத்துக்கொண்டு கட்டுத்திருப்போனகமும் தண்ணீரமுதும் கொண்டு ஓடிவந்து சடக்கென அமுதுசெய்யப் பண்ணிவைத்து இளைப்பாற்றிவைக்க, பட்டரும் நஞ்சீயருக்கு அப்போதும் ஒரு விஶேஷகடாக்ஷஞ் செய்தருளினார்; ஆகையாலே, அநுவர்த்தந விஶேஷங்களாலே ஆசார்யாநுக்ரஹத்திற்குப் பாத்ரமாக வேணுமிறே.

அநந்தரம் திருக்கோட்டியூரிலே எழுந்தருளியிருந்து (க) "ஶுகி கண்ட த்வயஸஸாரஸஸ்நிக்த நீரோபகண்டாமாவிர்மோத ஸ்திமித ஶகுநாநூதிதப்ரஹ்மகோஷாம் - மார்க்கேமார்க்கேபதிகநிவஹைருஞ்ச்யமாநாபவர்க்காம் பஶ்யேயம் யந்தாம்புநரபிபுரீம் ஸ்ரீமதீம்ரங்க தாம்ந:" என்று சொல்லிக்கொண்டு, கோயிலையும் பெருமாளையும் விட்டுப் பிரிந்திருக்கையாலே மிகவும் க்லேஶப்பட்டு, '* என்றுகொலோ கண்குளிரக் காணுநாளே!' என்றுகொண்டு எழுந்தருளியிருக்கிற காலத்திலே; ஒரு ஸ்ரீவைஷ்ணவர் பட்டரைஸேவித்து 'அடியேனுக்குத்திருவிருத்தத்திற்கு அர்த்தம்ஒருரு ப்ரஸாதித்தருள வேணும்' என்று மிகவும் அநுவர்த்திக்க, பட்டரும் நஞ்சீயரைப் பார்த்து 'சீயா! எனக்குக் கோயிலையும் பெருமாளையும் விட்டுப்பிரிந்த க்லேஶாதிஶயத்தாலே செவிகள் சீப்பாயாநின்றது; ஆகையாலே, எனக்கு

(க) 𑌶𑍁𑌕𑍀𑌕𑌣𑍍𑌠𑌦𑍍𑌵𑌯𑌸𑌸𑌾𑌰𑌸𑌸𑍍𑌨𑌿𑌗𑍍𑌧𑌨𑍀𑌰𑍋𑌪𑌕𑌣𑍍𑌠𑌾𑌮𑌾𑌵𑌿
𑌰𑍍𑌮𑍋𑌦𑌸𑍍𑌤𑌿𑌮𑌿𑌤𑌶𑌕𑍁𑌨𑌾𑌨𑍂𑌦𑌿𑌤 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌘𑍋𑌷𑌾𑌮𑍍। 𑌮𑌾𑌰𑍍𑌗𑍇𑌮𑌾
𑌰𑍍𑌗𑍇 𑌪𑌥𑌿𑌕𑌨𑌿𑌵𑌹𑍈𑌰𑍁𑌜𑍍𑌝𑍍𑌯𑌮𑌾𑌨𑌾𑌪𑌵𑌰𑍍𑌗𑌾𑌂 𑌪𑌶𑍍𑌯𑍇𑌯𑌂 𑌤𑌾𑌂
𑌪𑍁𑌨𑌰𑌪𑌿𑌪𑍁𑌰𑍀𑌂 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍀𑌂𑌰𑌙𑍍𑌗𑌧𑌾𑌮𑍍𑌨𑌃 ॥



வாய்திறந்து வார்த்தை சொல்லப்போகிறதில்லை; நீர் திருவிருத்தத்திற்கு அர்த்தம் ஒருரு இந்த ஸ்ரீவைஷ்ணவருக்குச் சொல்லும்' என்று அவரைச் சீயர் ஸ்ரீபாதத்திலே காட்டிக்கொடுத்து இங்ஙனே நடந்துசெல்லுகிற நாளிலே, கடலைக் கலக்கினாற்போலே பட்டர்திருவுள்ளத்தைக் கலக்கி விரோதித்த வீரஸுந்தரன் மரித்துப்போக,

அவ்வளவிலே கோயிலிலே பட்டர்திருத்தாயார் ஆண்டாளை ஸேவித்திருந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் 'பட்டருடைய விரோதி போனான்' என்று தங்கள் திருப்பரியட்டங்களை முடிந்து ஆகாஶத்திலே யெறிந்து நின்றார். நின்ற திக்கிலே ஸந்தோஷித்துக் கூத்தாடி ஆண்டாளுக்கு அறிவிக்க, அதுகேட்டு ஆண்டாள் செய்தபடி:—திருமாளிகைக்குள்ளே புகுந்து திருக்காப்புச்சாத்திச் சிக்கெனத் தாளிட்டுக்கொண்டு வயிறுபிடித்து மிகவுங் க்லேஶித்து வாய்விட்டு உச்சைஸ்ஸ்வரமாக அழத்தொடங்கினாள்; அதுகேட்டு ஸந்தோஷாதிஶயத்தாலே * தடுகுட்டமாய்க் கும்பிடுநட்டமிட்டுக் * கூத்தாடுகிற முதலிகள் ஆண்டாளைக்குறித்து 'பட்டரை இங்கு இருக்கவுங்கூட வொட்டாமல் விரோதித்த பாபிஷ்டன் போனானென்று ஸந்தோஷியாதே க்லேஶிப்பானேன்? பட்டருடைய விரோதி போகவும், பட்டரும் முதலிகளும் இங்கே எழுந்தருளவும், நாமெல்லோரும் கூடிவாழவும், உமக்கு அஸஹ்யமாயிருந்ததோ?' என்ன, ஆண்டாளும் ஸ்ரீவைஷ்ணவர்களைக் குறித்து அருளிச்செய்தபடி:—'பிள்ளைகாள்! நீங்களொன்றும் அறிகிறிகோளில்லை; வீரஸுந்தரன் நேரே ஆழ்வானுடையஶிஷ்யனாயிருந்து ஆசார்யபுத்ரரான பட்டரைத் திண்டாட்டங்கண்டு அவர் திறத்திலே மஹாபராதத்தைத் தீரக்கழியப்பண்ணி 'அறியாமல்செய்தேன்; இத்தைப் பொறுத்தருளவேணும்' என்று பட்டர்திருவடிகளிலே தலைசாய்ப்பதுஞ் செய்யாதே, 'இப்படி செய்தோமே!' என்கிற அநுதாபமுமின்றியே செத்துப்போனான்; ஆகையாலே, அவன் ஶரீரம்விட்டபோதே யமபடர் கையிலே யகப்பட்டுக் கலங்க அடியுண்டு மலங்க விழிக்குமாகையாலே அத்ருஷ்டத்தை யிழந்தான்; சிலநாளைக்கு இருந்தாகிலும் த்ருஷ்டஸுகத்தை யநுபவிக்கிறானென்றிருந்தேன்; அதுவுங்கூட இழந்தானாகாதே? ஆழ்வான்திருவடிகளில் ஸம்பந்தமுடையது ஒருஆத்மா இப்படி தட்டுப்பட்டுப்போவதே! என்று இத்தை நினைத்து என்வயிறு எரிகிறபடி உங்களொருவர்க்கும்

தெரிகிறதில்லை' என்று ஆண்டாள் அருளிச்செய்தாள்; குற்றஞ்செய்தவர்கள் பக்கலிலு மகப்பட ஹிதபராய்த் தயார்த்ரசித்தராய்ப் போருவது, ஆழ்வான் ஸம்பந்தமுடையவர்களுக்கே உள்ளதொன்றிறே.

பிள்ளைப்பிள்ளையாழ்வான் இவ்விசேஷங்கேட்டுக் கோயிலிலும் திருக்கோட்டியூருக்கு எழுந்தருளி இத்தை அருளிச்செய்ய, பட்டரும் கேட்டு ஸந்துஷ்டராய் "நுங்கால்களென்தலைமேற் கெழுமீரோ நுமரோடே" என்கிறபடியே அவர்கழல்களை அடிக்கடி வணங்கி, அவருடனேகூடத் தத்க்ஷணமே கோஷ்டீபுரத்திலும் புறப்பட்டுக் கோயிலேற எழுந்தருளி, பண்டுபோல தர்ஶநார்த்தம் நிர்வஹித்துக் கொண்டிருந்தார்.

அம்மணியாழ்வான் இருநாழுகாதவழி நடந்து வந்து, பட்டர் ஸ்ரீபாதத்திலே தண்டன்ஸமர்ப்பித்து 'அடியேனுக்குத் தஞ்சமாயிருப்பதொரு அர்த்தம் ப்ரஸாதித்தருளவேணும்' என்று ப்ரார்த்திக்க, பட்டரும் நெடுமாற்கடிமைக்கு அர்த்தம் ப்ரஸாதித்தருளி, எம்பெருமானை அறிகையாவது - அவனை அரைவயிறு பட்டறிகை; ததீயரை அறிகையாவது-அவனை முழுக்க அறிகை' என்று அருளிச்செய்தருள, அவரும் 'பலபடி சொல்லி யென்? மறப்பன்; இவ்வளவேயமையும்' என்று அதுதன்னையே தாரகமாகப்பண்ணிக்கொண்டு எழுந்தருளினார்; (க) 'ந்யக்ரோதபீஜேவடவத் ப்ராணவேஶப்தஜாலவத்-ஸித்தேததீயஶேஷத்வே ஸர்வார்த்தாஸ்ஸம்பவந்திஹி" என்கையாலே, ஸச்சிஷ்யன் ஸதாசார்யன் அருளிச்செய்ததொரு சரமார்த்தத்தையே தஞ்சமென்று விஶ்வஸிக்கவேணு மென்றபடி.

வீரஶிகாமணிப் பல்லவராயன், பட்டரைக்குறித்து 'பட்டரே! ராஜகார்யஞ் செய்கையாலே அடியேனுக்குப் பகவத்விஷயவைபவங் கேட்க விரகில்லை; எனக்குத் தஞ்சமாயிருப்பதொரு அர்த்தம் ப்ரஸாதித்தருளவேணும்' என்று அபேக்ஷிக்க, பட்டரும் 'கடற்கரை வெளியை நினைத்திரும்' என்று அருளிச் செய்தருள, அது தெரியாமையாலே அவன் கையைப்பிசைந்துநிற்க, இவரும் 'கடற்கரை

(க) ந்யக்ரோதபீஜே வடவத் ப்ரணவே ஶப்தஜாலவத் ।
ஸித்தே ததீயஶேஷத்வே ஸர்வார்த்தாஸ்ஸம்ப்ரவந்திஹி ॥



யிலே ஒரு அம்ருதக்கடல்போலே பெருமாள் பெரியவானர ஸேனையோடே விட்டிருக்க, அக்கரையிலே பிணந்தின்னிப்பையல் ராவணன் இருக்க, எழுபதுகோடி மஹாகபிஸேனை உணர்ந்து பெருமாளைக் குறிக்கொண்டு நோக்கிக் கொண்டுபோர, அவர்கள் ப்ராக்ருதிமாந்களாகையாலே கண்ணுறங்கிக் காலோய்ந்து கைசோர்ந்தவளவிலே, தாமும் தம்திருத்தம்பியாருமாகத் திருவரையிற்கட்டிய கச்சும் சுருக்கியசீராவும் நாணியும் முதுகிலே அம்பறுத்தூணிகட்டிக் கையிலே தெறித்துப் பிடித்துப் பெருக்கின திருச்சாமும் தரித்த திருவில்லும் தாமுமாய், சில அண்டஜங்கள் முட்டையிட்டுத் தம் சிறகின்கீழே நோக்கியிட்டு வைக்குமாபோலே எழுபதுவெள்ளம் ப்லவங்க குலபதி மஹாஸேனையையும் நடையாடும் மதிள்கள்போலே ரக்ஷித்துக்கொண்டு ஓரிரவெல்லாம் சாரிகையாய்வந்த சக்ரவர்த்தித்திருமகனுடைய கையும் வில்லுமே தஞ்சமென்று ஸுகமாயிரும்' என்று அருளினார்; தர்ஶநரஹஸ்யமாவது - உறங்குகிறபோது நம்மை ரக்ஷிக்குமவன் உணர்ந்தால் நம்மை நோக்கு மென்றிருக்கச் சொல்லவேண்டாவிறே யென்றபடி.

ஒருநாள் த்ரிபுவநவீரதேவராயன், பட்டருடைய வைபவங்கண்டு 'பட்டரே! நீர் நம்பக்கல் ஒருநாள் வந்துபோகீர்' என்ன, பட்டரும் 'பெருமாள் அஞ்சலென்ற கை மறுத்தாலும், அவ்வாசலொழிய வேறொருபோக்கு உண்டோ?' என்று அருளினார்; அதாவது - (க) "ஏதத்வ்ரதம்மம" என்று ஸ்வாஶ்ரித ரக்ஷணைகதீக்ஷிதனான எம்பெருமானிருக்க, கதிபய க்ராமேஶ கஞ்சித் புருஷாதமன் வாசலிலே துவளக்கடவோமல்லோ மென்றபடி.

ஒருநாள் பட்டர், பெருமாளைத் திருக்கைத்தலத்திலே எழுந்தருளியிருக்கச்செய்தே திருவடிதொழப்புக, திருமுன் அடிக்கிற வேத்ரபாணிகள் பட்டரைப்பாராமல் சில பருஷோக்திகளைச் சொல்ல, ஸ்ரீபாதத்தில் ஸ்ரீவைஷ்ணவர் அவரோடே எதிருத்தரஞ்சொல்லப் புக, பட்டரும் 'வாரீர் பிள்ளாய்! கேளும்: பெருமாளுக்கு ஏகாந்தத்திலே என்குற்றம் விண்ணப்பஞ்செய்ய ஒருகாலம் பற்றாதாய், பெருமாளும் திருச்செவிசாத்தாமல்போந்த இத்தைப் பெருமாளுக்கு அந்தரங்க பரிகரமாயிருப்பாரொருவர் நம்தோஷத்தை ஏகாந்தத்திலே

(க) ஏதத்வ்ரதம் மம ॥

விண்ணப்பஞ்செய்ய, பெருமாளும் திருச்செவிசாத்தினது கண்டால், நம்மைப்பார்க்கில் அத்தை விலக்குகிற இத்தால் நீர்பெற்றபேறுஎன்?' என்று அருளினார்; இத்தால், பகவத் ஸந்நிதியில் ஏகாந்தத்தில் பரக்ருத ஸ்வதோஷக்யாபநம் தத்வாத்ஸல்யகார்யமாய்த் ததங்கீகாரஹேதுவுமாமென்று நினைக்கக்கடவனென்றபடி.

பட்டர் ஸ்ரீபாதத்தில் ஸம்பந்தமுடையராய் ஸோமயாஜியாயிருப்பாரொரு ஸ்ரீவைஷ்ணவர், பட்டரை 'அடியேனுக்குத் திருவாராதநக்ரமம் ப்ரஸாதித்தருளவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, பட்டரும் உடையவர் நித்யத்தை—ஒருயாமப்போது திருவாராதநம் பண்ணவேண்டுங் க்ரமத்தை ப்ரஸாதித்தருள, அவரும் அதுகொண்டு நெடுநாள் திருவாராதநம்பண்ணிப் போரச்செய்தே, ஒன்றிரண்டுநாள் பட்டர்திருவாராதநத்தை ஸேவித்திருக்க, அங்குத் தமக்கு அருளிச்செய்த க்ரமம் ஒன்றும் கண்டிலர். பட்டர் திருவாராதநஞ்செய்தபடி:— பட்டர் நீராடித் தூயதிருப்பரியட்டஞ் சாத்தியருளித் திருமண்காப்புச் சாத்தியருளி, உள்ளே அமுதுசெய்யத் தளிகையை அமர்த்தினவளவிலே தளிகைமுன்னே எழுந்தருளியிருந்து 'தெற்காழ்வாரை எழுந்தருளுவித்துக்கொண்டு வாருங்கோள்' என்ன, அவர்களும் அப்படியே எழுந்தருளுவித்துக்கொண்டுவந்து கைத்தலத்திலே பிடித்தவளவிலே, தமக்குப் படைத்த திருப்போனகத்தையும் சேர்த்த தண்ணீரமுதையும் அமுதுசெய்வித்தருளி ப்ரஸாதப்பட்டருளினார். அத்தைக்கண்டு ஸ்ரீவைஷ்ணவரும் பட்டரைத் தண்டனிட்டு ஸவிநயராய் 'ஒருவிண்ணப்பமுண்டு: சொல்லப் பயமாயிருக்கிறது' என்று சொல்ல, பட்டரும் 'அஞ்சாதே சொல்லும்' என்ன, அந்த ஸ்ரீவைஷ்ணவரும் 'திருவாராதநப்படியை அடியேனுக்கு இப்படி அருளிச்செய்தருளிற்று; தேவரீர் இப்படி செய்தருளுகிறது; இதற்குஅடி யென்?' என்று விண்ணப்பஞ்செய்ய, பட்டரும் 'ஸகல ஶாஸ்த்ரங்களையும் ஆராய்ந்து பார்த்தவிடத்து உமக்கு அப்படியொழியச் சொல்லுகைக்கு ஒருவார்த்தை கண்டிலேன்; என்னை நிரூபித்தவிடத்தில் இப்படியொழியச் செய்கைக்கு ஒருசொல் கண்டிலேன்' என்று அருளிச்செய்தருளினார்; இத்தால், ஹிதைஷியான ஆசார்யன் ஶிஷ்யனுக்கு ஜ்ஞாநபரிபாகாநுகுணமாகக் கொண்டிப்பசுவுக்குத் தடிகட்டி விடுவாரைப் போலே ஶப்தாதிவிஷயங்களிலே மண்டித்திரிகிற கரணங்களைப் பக



வத்விஷயப்ரவணமாம்படி திருத்துமென்னுமதுவும், ஆசார்யனுடைய யத்நமாய்ப் பகவத்விஷயைகபரமான அநுஷ்டாநவிஶேஷத்திற்குக் கருத்து அவிஶேஷஜ்ஞர்க்குத் தோற்றாதென்னுமதுவும் தோன்றாநின்றதிறே.

பட்டரை ஒருவன் 'தேவதாந்தரங்களை ஸ்ரீவைஷ்ணவர்கள் அநுவர்த்தியாதொழிவானென்?' என்ன, 'ப்ரமாணவிரோதமுண்டாகிலன்றோ ஸந்தேஹமுள்ளது; இங்கே ஸந்தேஹமில்லை' என்று அருளிச்செய்தார். அது எங்ஙனேயென்னில்:—'ஸத்வப்ரசுரரை ரஜஸ்தம꞉ப்ரசுரர் அநுவர்த்திக்குமது போக்கி ஸத்வப்ரசுரர் ரஜஸ்தம꞉ப்ரசுரரை அநுவர்த்திக்கக்கடவதோ?' என்று அருளிச்செய்தார்; ஆகையாலே, தேவதாந்தரங்கள் குணதோஷங்களிரண்டாலும் ஒருகாலும் அநுவர்த்தநீயரன்றென்றபடி.

'பட்டர் அறியில் ஸம்மதியார்' என்று, பட்டர் ஸ்ரீபாதத்தை வேறொரு ஸ்ரீவைஷ்ணவர் திருக்கையாலே விளக்குவித்து, ஆண்டாள் ஸ்வீகரிப்பள். இத்தை ஒரு ஸ்ரீவைஷ்ணவர் கண்டு 'நீர் தாயாராயிருந்து இப்படி செய்தருளலாமோ?' என்ன, ஆண்டாளும் 'அது என்? பிறர்திருவாராதநத்தின் தீர்த்தமே ஸ்வீகார்யமாய், தான் ஏறியருளப் பண்ணின விக்ரஹத்தின் தீர்த்தம் ஸ்வீகார்யமாகாதோ?' என்ன, அவரும் 'அதற்கு அடியென்?' என்று கேட்க, ஆண்டாளும் '*கணபுரம்கைதொழும்பிள்ளையைப் பிள்ளையென்றெண்ணப் பெறுவரே?' என்று அருளிச்செய்தாள். இத்தால், ஶிஷ்யபுத்ரர்களேயாகிலும், ஜ்ஞாநாதிகர் ததீயத்வேந அநுவர்த்தநீயரென்றபடி.

பட்டர், தம்ஸ்ரீபாதத்திலே ஸேவித்திருப்பார் ஒருஸ்ரீவைஷ்ணவரைப்பார்த்து 'நீர் அநந்தாழ்வான் ஸ்ரீபாதத்திலே சென்று ஸ்ரீவைஷ்ணவலக்ஷணமிருக்கும்படி எங்ஙனேயென்று கேட்டுவாரும்' என்று அருளிச்செய்ய, அவரும் அநந்தாழ்வான் ஸந்நிதிக்கு எழுந்தருள, அன்று அங்கே பல ஸ்ரீவைஷ்ணவர்கள் அமுது செய்தருள, இவரும் இடம் போதாமையாலே அவர்கள் அமுதுசெய்து எழுந்திருக்குமளவும் பேசாதிருக்க, பின்பு அநந்தாழ்வானும் இவரைக்கண்டு 'நெடும்போதுண்டே! அமுது செய்தருளப்பெற்றதில்லையே! இளைப்போடேயிருக்கிறதே!' என்று போர நொந்து சடக்கென அமுதுசெய்தருளப்

பண்ணி, தாமும் தேவிகளுமாக ஸேவித்திருந்த திருப்போனகத்தை அமுதுசெய்தருளி எழுந்தருளியிருந்து, ஸ்ரீவைஷ்ணவரைக் குறித்து 'எங்குநின்றும் எழுந்தருளிற்று?' என்று கேட்டருள, அவரும் 'பட்டர், தேவரீர் ஸ்ரீபாதத்திலேசென்று ஸ்ரீவைஷ்ணவலக்ஷணமிருக்கும் படி எங்ஙனே யென்று கேட்டுவரச்சொல்லி வரவிட்டருளினார்' என்று விண்ணப்பஞ்செய்ய, அநந்தாழ்வானும் 'ஆகில், † (கொக்குப்போலே யிருக்கும், கோழிபோலேயிருக்கும், உப்புப்போலேயிருக்கும்,) உம்மைப்போலே யிருக்கும்' என்று அருளினார்; இத்தால், தன் ஜ்ஞாநாநுஷ்டாநாபிமாநாநிமித்தமாக ஸ்ரீவைஷ்ணவர்கள் திரளிலே முற்பாட்டுக்கு ஆசைப்படாதே, பிற்பாட்டுக்கே ஆசைப்பட்டுத் ததீய சேஷத்வத்தைப்பேணுகை ஸ்ரீவைஷ்ணவலக்ஷண மென்று உத்தரமருளிச்செய்து விட்டாராய்த்து.

ஒருநாள் பட்டர் ஸ்ரீபாதத்திலே ஸேவித்திருப்பார்ஒரு ஸ்ரீவைஷ்ணவர் ஸஹவாஸ தோஷத்தாலே கலங்கி விஷயப்ராவண்யந் தலையெடுத்து, பட்டர் ஸந்நிதியிற் சென்று 'பட்டரே! உமக்கும் நமக்கும் பணியில்லை' என்று சொல்ல, பட்டரும் 'வாராய்பிள்ளாய்! அது உன் நினைவாலேயன்றோ; நீ விட்டாலும் நாம் விடுவோமோ?' என்று அருளிச்செய்தருள, அவனும் அகன்றுபோகத்தேட, இவரும் அவனைப் பலாத்கரித்துப்பிடித்து உபாயேந ஜ்ஞாநோபதேசமுகத்தாலே வருந்தித் திருத்தி ஸ்ரீபாதத்திற்கு அந்தரங்கராக்கிக்கொண்டருள, அவரும் மஹாவிரக்தராய் நிலையிலே நின்றருளினார். ஆகையாலே, அஜ்ஞாநந் தலையெடுத்து அகன்று போவாரையுமுட்பட விடாதே யத்நேந திருத்திச் சேர்த்துக் கொள்ளுகையே ஸதாசார்ய லக்ஷணமென்கிறது.

ஒருநாள், பட்டரும் ஸ்ரீவைஷ்ணவர்களுமாகப் பெருங்கூட்டத் திருவோலக்கமாக எழுந்தருளியிருந்து பகவத்கல்யாணகுணாநுஸந்தாநம் நடவாநிற்க, ஒரு ஸ்ரீவைஷ்ணவர் 'நாம் பண்ணின ஸுக்ருதமன்றோ இப்படி யிருக்கப்பெற்றது!' என்ன, அவ்வளவிலே சிறியாச்சான் எழுந்திருந்துநின்று 'நெடுங்காலம் பெருமாள் ரக்ஷகரென்று ஸிக்ஷித்துவைத்து, இப்போதாக ஒரு ஸுக்ருததேவருண்டாவதே!', என்று அருளினார்; இத்தால் உஜ்ஜிஜீவயிஷுவான ஈஸ்வரனிருக்க, ஆநுகூல்யங்களுக்கு ஸுக்ருதம் அடியென்கை ஸ்வரூபநாஸ மென்றபடி.

† குண்டலிதச்ரந்தம் அநேகப்ரதிகளில் இல்லை.



பட்டரோடே அமுதனார் வெறுத்தருளி 'தாம் ஆழ்வானுடைய வெற்றிலைச் செருக்கிலே பிறந்தவர், நான் ஆழ்வானுடைய ஜ்ஞாநச் செருக்கிலே பிறந்தவனன்றோ?' என்று சொல்லிவிட, அத்தைப் பட்டர் கேட்டருளி 'பாசுரம் அழகிது: ஆகிலும், இத்தைத் தாமே சொன்னாரே!' என்று அருளிச்செய்தார்; ஆகையாலே, ஆசார்யாபிமாநஜநித ஸ்வோத்கர்ஷரூப † ஸ்லாகாவசநம் ஸ்வரூபாநுசித மென்றபடி.

ஒருநாள் பெருமாள் புறப்பட்டருளி ஒரு 'திருமண்டபத்திலே எழுந்தருளியிருக்கச்செய்தே பட்டர் திருவாலவட்டம் ஸேவித்திரா நிற்க, ஸ்ரீபாதத்துமுதலிகள் 'ஸந்த்யாவந்தநத்திற்குக் காலம் தப்புகிறது' என்று விண்ணப்பஞ்செய்ய, பட்டரும் 'பகவத்கைங்கர்யநிரதருக்கு ஸந்த்யாவந்தநவைகல்யதோஷம் வாராது' என்று அருளிச்செய்தருளினார்; இதற்குக்கருத்து:— (க) "மத்கர்மகுர்வதாம்பும்ஸாம் கர்மலோபோபவேத்யதி - தத்கர்மதேப்ரகுர்வந்திதிஸ்ர: கோட்யோமஹர்ஷய:" என்ற திருமுகப் பாசுரமிருக்கையாலே, பகவத் கைங்கர்யத்தையிழந்து நித்யகர்மாநுஷ்டாநார்த்தமாகப் போகை ஸ்வரூபவிருத்தமென்றபடி.

ஒருகால் பட்டருடனே அநேக வித்வான்கள் திரண்டு வந்து தர்க்கிக்க, பட்டர் அவர்களெல்லாரையும் வாய்மூடுவித்து ஜயித்தருள, பின்னையும் அவர்கள் 'இவருடைய ஸர்வஜ்ஞதையைப் பரீக்ஷிப்போம்' என்று ஒரு குடத்திலே ஒரு பாம்பை யடக்கிக்கட்டி 'இக்குடத்திலே யிருக்கும் வஸ்து என்?' என்று கேட்க, பட்டரும் 'திருவெண்கொற்றக் குடை இருக்கிறது' என்ன, அவர்களும் சிரித்துக் குடத்துக்கட்டை அவிழ்த்துவிட்டவளவிலே போகி புறப்பட, அவர்களும் 'இதுகொற்றக் குடையோ' என்ன, பட்டரும் 'அன்றோ? "சென்றால் குடையாம்" என்றன்றோ ஆழ்வார் அருளிச்செய்தது' என்ன, அவர்களும் இவருடைய ஸர்வஜ்ஞதைக்கு விஸ்மயப்பட்டு க்ருதார்த்தராய்ப் போனார்கள்.

முன்பு உடையவர் காலத்திலே ஆசார்யர்களெல்லாரும், உடையவருக்கு மாநஸபுத்ரரான திருக்குருகைப்பிரான்பிள்ளானை அநுவர்த்

(க) மத்கர்ம குர்வதாம் பும்ஸாம் கர்மலோபோ பவேத்யதி।
தத்கர்ம தே ப்ரகுர்வந்தி த்ரிஸ்ர: கோட்யோ மஹர்ஷய: ॥

† 'ஸ்வவாக்ய்யவஹ்ருதவசநம்' என்று ப்ரதிபேதம்.

தித்து 'ஆழ்வார்க ளருளிச் செயல்களின் அருப்பொருள் தெரியும் படிக்குத் தேவரீர் வ்யாக்யாநஞ் செய்தருளும்படி உடையவரை வேண்டிக்கொள்ளவேணும்' என்று பிள்ளானுக்கு விண்ணப்பஞ்செய்ய, பிள்ளானும் உடையவர் பெருங்கூட்டத்திருவோலக்கமாக எழுந்தருளியிருக்கச்செய்தே ஸாஷ்டாங்கப்ரணாமம் பண்ணி ஸவிநயராய் இரப்புடனே 'ஒருவிண்ணப்பமுண்டு' என்றுசொல்ல,உடையவரும் 'என்?' என்று கேட்டருள, பிள்ளானும் 'தேவரீர் ஸ்ரீபாஷ்ய மருளிச்செய்து திக்விஜயம் பண்ணித் தர்ஸநத்தை நிலைநிறுத்தியருளிற்று; இனி திருவாய்மொழி முதலான ஆழ்வார்கள் திவ்யப்ரபந்தங்களுக்கும் வ்யாக்யாநம்செய்து ரக்ஷித்தருளவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் திருவுள்ளத்திலே, விசாரித்தருளி 'அப்படியாம்; நாம் அருளிச் செயல்களுக்கு வ்யாக்யாநம் பண்ணினால், மந்தமதிகளுக்கு இதற்கு இவ்வளவே அர்த்தமுள்ளதென்று தோற்றும்; ஆகில், அபசாரமாம்; ஆழ்வார்கள் பாசுரங்களுக்கு அவ்வவருடைய புத்திக்கு ஈடாகப்பஹுவாகச் சுரக்கும்; ஆகையாலே, நாம் அருளிச்செயல்களுக்கு வரம்பு கட்டினாப்போலேயாம்; நீர் ஒருபடி திருவாய்மொழிக்கு வ்யாக்யாநஞ் செய்யும் என்று நியமித்தருளினார். திருக்குருகைப்பிரான்பிள்ளானும் யதிராஜாநுமதிகொண்டு ஸ்ரீவிஷ்ணுபுராண ப்ரக்ரியையாலே திருவாய்மொழிக்கு மூன்றாற முன்னம் இனிதாக ஆறாயிரப்படி உரைத்தருளினார். பட்டரும் நஞ்சீயருக்குப் பிள்ளான்படி ஆறாயிரமும் நன்றாக ப்ரஸாதித்தருளினார்.

நஞ்சீயரும் அத்தை நன்றாக அதிகரித்து, பட்டரை அநேகமாக அநுவர்த்தித்து அவருடைய அநுமதிகொண்டு திருவாய்மொழிக்கு ஒன்பதினாயிரப்படியாக ஒருவ்யாக்யாநம் பண்ணாநிற்கச்செய்தே, பட்டருக்கு இருபத்தெட்டாந்திருநக்ஷத்ரத்திலே ஒருகைஸிகத்வாதஸியினன்று பெருமாள்ஸந்நிதியிலே நின்று கைஸிகபுராணம்வாசித்தருளாநிற்க, என்னையும்போலன்றியே ஒரு பதத்திலே நின்று பஹுமுகமாக பாவார்த்தங்களை அருளிச்செய்கிறபடிகளைக் கண்டு, பெருமாள் திருவுள்ளம்பற்றி யுகந்து இவருக்குத் தாம் சாத்தியிருந்த திருமாலை திருப்பரியட்டம் திருவாபரணம் முதலானவற்றையும் தாம் எழுந்தருளியிருக்கும் திவ்யஸிம்ஹாஸநத்தையும் பின்னையும் சிலவற்றையும் பரிசிலாக இரங்கியருளி, மார்பும் தோளும் பூரித்துத் திருமேனி



தெரியாமல் த்வரைவிஞ்சி மாறி 'இவர்க்கு மற்று எது கொடுப்போம்?' என்று, ஸந்தோஷாதிஸயத்தாலே 'பட்டரே! உமக்கு மேலைவீடுதந்தோம்' என்று திருவுள்ளமாக, இவரும் 'மஹாப்ரஸாதம்' என்று அங்கீகரித்தருள, திருவோலக்கமடையக் கடல்குழம்பினாப்போலே 'இப்படி திருவுள்ள மாவா னென்?' என்று கலங்கி வயிறு பிடிக்க, பட்டரும் ஹர்ஷப்ரகர்ஷத்துடனே பெருமாள் திருவடிகளிலே தண்டன்ஸமர்ப்பித்து க்ருதாஞ்ஜலிபுடராய் நின்றுகொண்டு 'நாயன்தே! தேவரீர் அர்ஜுநனைக் குறித்து(க) ''மோக்ஷயிஷ்யாமி'' என்று அருளிச் செய்தருளிற்றென்று கேட்பார்வார்த்தை கேட்டிருக்கையன்றிக்கே, தேவரீர்தாமே இப்படி திருவாய்மலர்ந்தருளப்பெற்ற இப்பேற்றுக்கு அடி-உடையவர் தேவரீர் திருவடிகளிலே காட்டிக்கொடுத்த உறவும், ஆழ்வாரோடு உண்டான குடல் துடக்கும், எம்பாருருளுமிறே' என்று விண்ணப்பஞ்செய்ய திருவோலக்கத்திலிருந்த ஸ்ரீரங்கமறையோர் பட்டரைப் பார்த்து 'பெருமாள் உகப்புத் தலைமண்டையிட்டு விசாரியாமல் ஒரு வார்த்தை அருளிச் செய்தருளினார்; நீர் இங்ஙனே உகந்து அங்கீகரிக்கிறதென்? உம்மைக்கொண்டு இவ் விபூதியைத் திருத்தவேணுமென்றன்றோ பெருமாள் திருவுள்ளம் பற்றியிருக்கிறது' என்ன, பட்டரும் 'ஆனால்-இவ்விபூதியும் இவ்விபூதியிலுள்ளாரும் பாக்யஹீநரானால், அடியேன் செய்வதென்? நாய்க்குடலுக்கு நறுநெய் தொங்குமோ? என்னை இவ்விபூதி பொறுக்குமோ? இன்னம் சிறிது நாள் இங்கே அடிமை கொண்டருளில், பரமபதத்திற்கும் இதுக்கும் சுருளும்படியுங் கட்டேனோ?' என்று பெருமாள் தம்மை விஸேஷகடாக்ஷஞ்செய்தருளின ராஜகுலமாஹாத்ம்யத்தாலுண்டானசெருக்குத் தலைமண்டையிட்டுஹ்ருஷ்டோக்தியைப் பண்ணி, 'நாயன்தே! ஆஸநபத்மத்திலே அழுத்தியிட்ட திருவடித்தாமரைகளும் அஞ்சலென்ற கையும் கவித்த முடியும் முறுவல் பூரித்த சிவந்த திருமுக மண்டலமும் திருநுதலில் கஸ்தூரித்திருநாமமும் பரமபதத்தில் கண்டிலேனாகில், ஒரு மூலையடியே முறித்துக்கொண்டு குதித்து மீண்டு வருவேன்' என்று விண்ணப்பஞ் செய்து, நம்பெருமாளையும் பெரிய பெருமாளையும் ஆபாதசூடம் அநுபவித்து, கோயிலாழ்வாரையும் ஆழ்வாரையும் கண்ணார ஸேவித்து நிற்க, பெருமாள் தம் வரிசைகளெல்லாவற்றுடன் ப்ரஹ்மரதம் பண்

(க) மோக்ஷயிஷ்யாமி ॥

ஹுவித்து, கோயில்அனைத்துக்கொத்தும் அகில ஸ்ரீவைஷ்ணவர்களும் எல்லா ஆசார்யர்களும் மற்றுமுள்ள விப்ரவர்க்கமும் சூழ்ந்து ஸேவித்துவர, அவர்திருமாளிகையிலே யெழுந்தருளி ஆண்டாளை ஸேவித்துநிற்க, அவரும் '*நலமந்தமில்லதோர்நாடு புகுவீர்' என்று ஆஶீர்வதிக்க, பட்டரும் '*அம்மா! அடியேன் வேண்டுவ தீதே' என்று உகந்தருளி,

திருப்பதியிலுள்ளவர்க ளடங்கத் திருமாளிகையிலே அமுது செய்தருளினபின்பு பெருங்கூட்டமாக எழுந்தருளியிருந்து, என்றையும்போலே திருநெடுந்தாண்டகத்திற்கு அர்த்தம் அருளிச்செய்யாநிற்கச்செய்தே "அலம்புரிந்த நெடுந்தடக்கை" என்கிற பாட்டுக்கு அர்த்தமருளிச் செய்கிறபோது, "அஞ்சிறைப்புள் தனிப்பாகன்" என்கிறவிடத்திலே "பறவையேறுபரம்புருடா நீயென்னைக்கைக்கொண்டபின், பிறவி யென்னுங் கடலும் வற்றிப் பெரும்பதமாகின்றதால்" என்று இத்தை இரட்டித்து அநுஸந்தித்தருளித் திருக்கண்களை மலாவிழித்துத் திருமேனியைச் சிலிர்ப்பித்துப் புன்முறுவல் செய்து திருமுடியிலே அஞ்சலிசெய்துகொண்டு அணையிலே சாய்ந்து நிற்கச்செய்தே ஶிர:கபாலம் வெடித்துத் திருநாட்டுக்கெழுந்தருள, முதலிகளும் உள்ளேசென்று 'பட்டர் இளைத்து எழுந்தருளியிருக்கிறார்' என்று ஆண்டாளுக்கு அறிவிக்க, ஆண்டாளும் சடக்கென எழுந்தருளிப் பட்டரை வாரியெடுத்து மார்பிலே அணைத்துக்கொண்டு, திருநாட்டுக்கு எழுந்தருளின விஸ்மயத்தைக் கண்டு, திருவுள்ளங் கலங்குதல் திருமுகங்கன்றுதல் * கண்ணீர்மல்குதல் செய்யாதே வண்டுகள் பூவின்பரிமளமறிந்து ஆக்ராணித்து க்ரஹிக்குமாபோலே, பட்டருடைய ஸௌகுமார்யமறிந்து நலக்காமல் இவர்ஹ்ருத்கமலத்தை அலர்த்தித் தான் * தெய்வவண்டான தன்மை தோன்ற° ஸ்ரீவைகுண்ட நாதன் இவரைக் கைக்கொண்டருளுவதே! பெருமாளுக்கும் நாச்சிமாருக்கும் பேரிழவும் பெருங்க்லேஶமும் பெருவயிற்றெரிச்சலுமாய்ச் செல்லா நிற்க, பரமபதநிலயனுக்கும் அங்குள்ள நாச்சிமாருக்கும் பெருவாழ்வும் பெருஞ்செல்வமும், பெருங்களிப்புமாய்ச் செல்லுகிறதே!' என்று புத்ர ஶோகக்லேஶஸ்பர்ஶமுமற்று, 'உடையவன் உடைமையைக் கைக்கொண்டால், நாம் வெறுக்கலாமோ?' என்று ஆண்டாள் இருக்க, கடல் கலங்கினாப்போலே கோயிலுள்ளா ரடங்க



ஶோகார்த்தராய்க் கிடந்து துடிக்க, வேதாந்திகளும் வேரற்றமரம்போலே கோஷித்துக்கொண்டு விழுந்து ஶோகார்த்தராய்ப் பஹுவாய் ப்ரலாபித்து *மழைக்கண்ணீர்மல்கி நிற்க, பெருமாளும் நாச்சிமாரும் திருமுத்தின்பணி காளாஞ்சி திருவெண்சாமரம் திருவாலவட்டம்திருவெண்கொற்றக்குடை வெண்முத்தின்கலசம் மேற்கட்டு முத்துத்தாமம் தொடக்கமான தம்முடைய ஸர்வபரிஜநபரிச்சதங்களடங்கக் கொடுத்துவிட்டு, 'நம்முடைய அவப்ருதோத்ஸவம் கொண்டாடுமாபோலே பட்டருக்கும் அவப்ருதோத்ஸவங்கொண்டாடுங்கோள்' என்று திருவுள்ளமாய், திருமுகங்கன்றித் திருமுத்துதிர்த்துப் பெருமாளும் நாச்சிமாருங்கூடத் திருமஞ்சநமாடியருளி, 'இப்போது நமக்குச் செவ்வாய் வக்ரமாய்த்து' என்று திருவுள்ளம் நொந்து, 'நாம் புத்ரனை யிழந்தோமே!' என்று சுருளமுதும் அமுதுசெய்யாமல் முசித்து எழுந்தருளியிருக்க,

வேதாந்தி முதலான முதலிகள் சீராமப்பிள்ளையைக்கொண்டு பட்டரை ப்ரஹ்மமேதத்தாலே ஸம்ஸ்கரித்துப் பள்ளிபடுத்து, அவப்ருதங்கொண்டாடி மீண்டுவரும்போது, நஞ்சீயர் முட்டாக்கிட்டு மூடிக்கொண்டு புழைக்கடை வழியாலே தம்மடமே யெழுந்தருள, ஸ்ரீபாதத்து முதலிகள் 'இதுக்கு அடியென்?' என்று விண்ணப்பஞ்செய்ய, நஞ்சீயரும் 'புதுக்க அறுத்த விதவை தெருவிலே வெளிப்பட வருமோ?' என்று அருளிச்செய்தருளினார்; அதாவது - ஸச்சிஷ்யன் ஸதாசார்யன்திறத்துப் பார்யாஸமனாயிருக்கை ஸ்வரூபஸித்தி யென்று கருத்து.

பின்பு ஆண்டாளும் முதலிகளும் திருமாளிகையிலே புக்கவளவிலே வெறிச்சான திருமாளிகையைக் கண்டு, பட்டர்திருத்தம்பியாரான சீராமப்பிள்ளை '*நல்லதோர்தாமரைப்பொய்கை நாண்மலர்மேற் பனிசோர, அல்லியும் தாதுமுதிர்ந்திட்டழகழிந்தா லொத்ததாலோ, இல்லம் வெறியோடிற்றாலோ!' என்று பாடிக்கொண்டு விழுந்து பெருமிடறுசெய்து ஆர்த்தராய்க்கூப்பிட்டு ஶோகிக்க, ஆண்டாளும் அவ்வார்த்தியைக் கண்டு 'இவர் ஆழ்வான்திருவயிற்றிலே பிறக்கத்தக்கவரல்லர்' என்று முசித்து முதலிகளைபபார்த்து அருளிச்செய்து, 'பிள்ளாய்! பட்டர் பெற்ற பேற்றுக்குப் பொறாமல் ஜ்ஞாதித்வங்கொண்டாடுகிறீரோ? நீர் இப்படி செய்கையில் நான் ஒருகைப்புடையிலே

யிருக்கிறேன்' என்ன, சீராமப்பிள்ளையும் ஶோகத்தைவிட்டுத் தனுக்கென எழுந்திருந்து ஆண்டாள் திருவடிகளிலே தண்டன்ஸமர்ப்பித்து, 'அபசாரப்பட்டேன்; பொருத்தருளவேணும்' என்று க்ஷமை கொண்டு, பட்டருக்குத் தீர்த்ததிருவத்யயநஞ் செய்தருளி நிறைவேற்றினபின்பு, பெருமாளைத் திருவடிதொழச் சென்றவளவிலே,

பெருமாள் சீராமப்பிள்ளையை அருளப்பாடிட்டருளி, 'பட்டரையிழந்தோம் நாம்; உமக்கு நாம் இருக்கிறோம்; முசியாதே கொள்ளும்' என்று பட்டருடைய வரிசைக்ளடங்கக் கொடுத்தருளிப் ப்ரஹ்மரதம் பண்ணுவித்துத் திருமாளிகையிலே போகவிட, சீராமப்பிள்ளையும் முசிப்பற்று ஹ்ருஷ்டராயிருந்து தர்ஶநம் நிர்வஹித்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

இத்தால், மஞ்சள்நீர் குடிப்பித்துப் பெற்றுவளர்த்தவரே தம் பெருவீடு கொடுக்கும்படியான தன்னேற்றமும், அர்த்தாநுஸந்தான வேளையிலே ஹார்த்தன் ஸாக்ஷாத்கரித்து வழிநடத்தும்படியான தன்னேற்றமும், பேறுஇழவு இரண்டுக்கும் பெருமாள் தாமாய் அதில் கலக்கமற்ற தன்னேற்றமும், ஆழ்வான்குடல்துடக்குடைய பட்டர்க்கே யுள்ளதொன்றிறே.

பட்டர்வைபவம் முற்றச்சொல்லி முடியாதிறே. யதாமதி யதாஶ்ருதமாகச் சொன்னதித்தனை.

பட்டர்திருநக்ஷத்ரம் - வைகாசியில் அநூராதம்.

அவர் தனியன் - (க) "ஸ்ரீபராஶரபட்டார்யஶ்ஸ்ரீரங்கேஶபுரோஹித: - ஸ்ரீவத்ஸாங்கஸுதஶ்ஸ்ரீமாந் ஶ்ரேயஸேமேஸ்து பூயஸே"

---

## நஞ்சீயர் நம்பிள்ளை வைபவங்கள்.

அநந்தரம் வேதாந்திகளான நஞ்சீயர் பட்டர்நல்லருள்கொண்டு திருவாய்மொழிக்கு ஒன்பதினாயிரமாக ஸ்ரீபாஷ்யப்ரக்ரியையாலே ஒரு வ்யாக்யாநம் அருளிச்செய்து முற்றப் பட்டோலைகொண்டு 'இத்தை ஒரு ஸம்புடத்திலே நன்றாக எழுதித் தரவல்லாருண்டோ?' என்று தம்

(க) 𑌶𑍍𑌰𑍀𑌪𑌰𑌾𑌶𑌰𑌭𑌟𑍍𑌟𑌾𑌰𑍍𑌯𑌃 𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑍇𑌶𑌪𑍁𑌰𑍋𑌹𑌿𑌤𑌃 । 𑌶𑍍𑌰𑍀𑌵𑌤𑍍𑌸𑌾𑌙𑍍𑌕𑌸𑍁𑌤𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑍇 𑌮𑍇𑌽𑌸𑍍𑌤𑍁 𑌭𑍂𑌯𑌸𑍇 ॥



ஸ்ரீபாதத்து முதலிகளைக் கேட்க, அவர்களும் 'தென்கரையினின்றும் நம்பூர் வரதராஜனென்பா ரொருவர் பலகாலும் இங்கேவருவர்; அவர் நன்றாக எழுதுவர்' என்று நஞ்சீயருக்கு விண்ணப்பஞ்செய்ய, சீயரும் வரதராஜரை யழைப்பித்து 'ஒருக்ரந்தமெழுதிக்காட்டிக் காணீர்' என்ன வரதராஜரும் எழுதிக்காட்ட, சீயரும் அத்தைத் திருக்கண் சாத்தியருளி 'எழுத்து முத்துப்போலே நன்றா யிருந்தது; ஆகிலும், இது திருவாய்மொழி வ்யாக்யாந மாகையாலே, ஒரு விலக்ஷணரைக் கொண்டு எழுதுவிக்கவேண்டுகையாலே, திருவிலச்சினை திருநாமமாத்ரமுண்டான இவரைக் கொண்டு எங்ஙனே எழுதுவிப்பது? விஶேஷஜ்ஞரைக்கொண்டே எழுதுவிக்கவேணுமிறே' என்றுஸந்தேஹிக்க, வரதராஜரும் சீயர் திருவுள்ளத்தை யறிந்து 'அடியேனையும் தேவரீர் திருவுள்ளத்துக்கு வரும்படியே *திருத்திப் பணிகொள்ளலாகாதோ?' என்ன, அவ்வளவிலே சீயரும் மிகவுந்திருவுள்ளமுகந்து அப்போதே வரதராஜரை அங்கீகரித்தருளி, (க) "பஞ்சாஸ்த்ராங்கா: பஞ்சஸம்ஸ்காரயுக்தா:பஞ்சார்த்தஜ்ஞா: பஞ்சமோபாயநிஷ்டா: - தேவர்ணாம்பஞ்சமாஶ்ஶாஶ்ரமாணாம் விஷ்ணோர்பக்தா: பஞ்சகாலப்ரபந்நா:" என்றஶ்லோகத்திற்சொன்ன ப்ரபந்நநிஷ்டையெல்லாம் பூர்ணமாம்படி விஶேஷகடாக்ஷஞ் செய்தருளி, பட்டோலையில் எழுதின ஒன்பதினாயிரத்தையும் முற்ற ஒருரு வரதராஜருக்கு அருளிச்செய்து காட்டியருளி, 'இப்படியேதப்பாமல் எழுதித் தாரும்' என்று பட்டோலையை வரதராஜர்கையிலே கொடுத்தருள, அவரும் அத்தை வாங்கிக்கொண்டு 'அடியேன் ஊரிலே போய் எழுதிக்கொண்டு வருகிறேன்' என்று விண்ணப்பஞ்செய்ய, சீயரும் அப்படியே செய்யும்' என்றுவிட, அநந்தரம் வரதராஜர் திருக்காவேரியிலே எழுந்தருளினவளவிலே சிற்றிடம் நீஞ்சிப்போக வேண்டுகையாலே பட்டோலையைத் திருமுடியிலே கட்டிக்கொண்டு நீஞ்சிப்போகச்செய்தே ஓரலை வந்து அடித்து க்ரந்தம் ஆற்றுக்குள்ளே விழுந்துபோக, வரதராஜரும் அக்கரையிலேயேறி 'பட்டோலை போய்விட்டதே! இனிநாம் என்செய்யக்கடவோம்?' என்று விசாரித்து, ஒரு அலேகத்தை யுண்டாக்கிக்

(க) 𑌪𑌞𑍍𑌚𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌙𑍍𑌕𑌾𑌃 𑌪𑌞𑍍𑌚𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌪𑌞𑍍𑌚𑌾𑌰𑍍𑌥𑌜𑍍𑌞𑌾𑌃 𑌪𑌞𑍍𑌚𑌮𑍋𑌪𑌾𑌯𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌃 । 𑌦𑍇𑌵𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌾𑌂 𑌪𑌞𑍍𑌚𑌮𑌾𑌶𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑍍𑌭𑌕𑍍𑌤𑌾𑌃 𑌪𑌞𑍍𑌚𑌕𑌾𑌲𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌾𑌃 ॥

கொண்டு நஞ்சீயர்ப்ரஸாதித்தருளின அர்த்தமொன்றுந் தப்பாமல் ஒன்பதினாயிரமும் நன்றாக எழுதியருளித் தாம் தமிழுக்கு மிகவும் உத்தமவிரகராகையாலே ஓரொருபாட்டுக்களிலே (க) "உக்தார்த்த விஶதீகார யுக்தார்த்தாந்தரபோதகம் - மதம்விவரணந்தத்ர மஹிதாநாம்மநீஷிணாம்" என்கிறபடியே உசிதமான ஸ்தலங்களுக்கு ப்ரஸந்ந கம்பீரபதங்களாலே அர்த்தவிஶேஷங்களும் எழுதிக்கொண்டு போய்ச் சீயர்திருக்கையிலேகொடுக்க, சீயரும் ஸ்ரீகோஶத்தை அவிழ்த்துப் பார்த்தவளவில், தாம் அருளிச்செய்த கட்டளையாயிருக்கச்செய்தேயும் ஶப்தங்களுக்கு மிகவும் அநுகுணமாகப் பலவிடங்களிலும் அநேகவிஶேஷார்த்தங்கள் எழுதியிருக்கையாலே அத்தைக் கண்டு மிகவுந்திருவுள்ளமுகந்தருளி வரதராஜரைப் பார்த்து 'இது மிகவும் நன்றாயிராநின்றது; இதென்?' என்று கேட்க, அவரும் பயப்பட்டு ஒன்றும் விண்ணப்பஞ்செய்யாதிருக்க, சீயரும் 'நீர் பயப்படவேண்டா; உண்மையைச் சொல்லும்' என்ன, வரதராஜரும் 'சீயா! திருக்காவேரி நீச்சாகையாலே பட்டோலையை அடியேன் தலையிலேகட்டிக்கொண்டு நீஞ்சப்புக்கவாறே, ஒரு அலை வந்து அடிக்கையாலே அது ஆற்றிலே விழுந்து அமிழ்ந்துபோயிற்று; இது தேவரீர் ஒருரு முற்ற பிரஸாதித்தருளின கட்டளையிலே எழுதினேன்' என்று விண்ணப்பஞ்செய்ய, நஞ்சீயரும் 'இவருடைய புத்திவிஶேஷமிருந்தபடி என்தான்! இவர் மஹா ஸமர்த்தராயிருந்தார்; நன்றாக எழுதினார்!' என்று மிகவுந் திருவுள்ளமுகந்தருளி, வரதராஜரை வாரியெடுத்து அணைத்துக்கொண்டு 'இவர் நம்முடையபிள்ளை; திருக்கலிகன்றிதாஸர்' என்று திருநாமஞ் சாத்தி, தம்முடைய ஸந்நிதியிலே அரைக்ஷணமும் பிரியாமல் வைத்துக்கொண்டு 'பிள்ளைக்கு ஸகலார்த்தங்களையும் கரதலாமலகமாம்படி ப்ரஸாதித்தருளினார். அவரும் 'சீயரையல்லது * தேவுமற்றறியேன்' என்று எழுந்தருளியிருந்தார். ஆகையாலே, சீயர் நம்முடைய பிள்ளை யென்று அருளிச்செய்த அன்றுதொடங்கி வரதராஜருக்கு 'நம்பிள்ளை' என்று திருநாமமுண்டாயிற்று.

---

(க) உக்தார்த்த விஶதீகார யுக்தார்த்தாந்தர போதகம் | மதம் விவரணம் தத்ர மஹிதாநாம் மநீஷிணாம் ||



நம்பிள்ளை நஞ்சீயரை 'இதரோபாயங்களுக்கு ப்ரமாணமும் பஹுளமாய் அநுஷ்டாதாக்களும் பலராயிருக்க, இதுக்கு ப்ரமாணமும் சுருங்கி அநுஷ்டாதாக்களும் சுருங்கி ருஷிச்சந்தோதிதைவதாதிகளும் அநுஸந்தேயங்களன்றியே யிருப்பானென்?' என்று கேட்க, சீயர் அருளிச்செய்தபடி:—'இருவர் கூடி ஓராற்றிலே இறங்கிப் போகாநின்றால், ஆற்றிலமிழ்ந்தவனை அமிழாதவன் கையைப் பிடித்துக் கரையேற்றுகைக்கு ஒரு ப்ரமாணாபேக்ஷை வேணுமோ? ப்ரமாணாபேக்ஷை யுண்டென்று நினைத்தீராகிலும் (க) "முமுக்ஷுர்வை ஶரணமஹம்ப்ரபத்யே;" (உ) "தஸ்மாந்ந்யாஸமேஷாந்தபஸாமதிரிக்தமாஹு:", (ங) "ந்யாஸஇத்யாஹுர்மநீஷிணோப்ரஹ்மாணம்", (ச) "நிக்ஷேபாபரபர்யாயோ ந்யாஸ: பஞ்சாங்கஸம்யுத: - ஸந்ந்யாஸஸ்த்யாக இத்யுக்தஶ்ஶரணாகதிரித்யபி" என்று இவமாதி ப்ரமாணங்கள் பலவற்றையும் அருளிச்செய்து, ப்ரமாணங்களில் குறையில்லை; † (நான் இவ்வர்த்தத்தில் ப்ரமாணந்தான் வேண்டுவதில்லை யென்றிருப்பன்; அதற்கு அடி:—ஒருகுள்ளனும் ஒருநெடியனுமாக ஆற்றிலே யிழிந்தால் குள்ளன் அமிழாநின்றால் நெடியவன் கையைப்பிடிக்கும்போது கரையிலே யிருந்து ஒருவன் சொல்லவேண்டுவதில்லையிறே; இவனுடைய தர்மிக்ராஹகப்ரமாணந்தானே அமையுமிறே. அவன் கையை 'அவன் பிடிக்கைக்கு ஒருவிதிவேணுமோ?' என்று அருளிச்செய்து) ‡ இனி அதிகாரி சுருக்கம் பார்க்கில், லோகத்தில் இருந்ததேகுடியாக ஸர்வரும் ஸம்ஸாரிகளாயிருக்க, அதில் நாலிரண்டு பேர் உத்தமாஶ்ரமிகளானால், ஸம்ஸாரிகளுக்கு ஒருஉத்கர்ஷமும்,

---

(க) முமுக்ஷுர்வை ஶரணமஹம் ப்ரபத்யே ||

(உ) தஸ்மாந்ந்யாஸமேஷாம் தபஸாமதிரிக்தமாஹு: ||

(ங) ந்யாஸ இத்யாஹுர்மநீஷிணோ ப்ரஹ்மாணம் ||

(ச) நிக்ஷேபாபரபர்யாயோ ந்யாஸ: பஞ்சாங்கஸம்யுத: | ஸந்ந்யாஸஸ்த்யாக இத்யுக்தஶ்ஶரணாகதிரித்யபி ||

† குண்டலிதக்ரந்தம் சிலப்ரதிகளில் இல்லை.

‡ 'இனி,...போகிறது?' என்றவிடத்து 'பின்பு "ப்ராஹ்மணோயஜேத" என்று ஜாதிநிபந்தனமாக ஶாஸ்த்ரங்கள் சொன்னாலும், க்வசித்கோணயஜிப்பார் அல்பமாயிறேயிருக்கிறது; ஆகையாலே, அதிகாரிகள் சுருங்கியிருக்குங் காணும்' என்றும் பாடம்.

ஸந்ந்யாஸிகளுக்கு ஒரு அபகர்ஷமுமுண்டோ? இனி (க) "ஜ்யோதிஷ்டோமே ந ஸ்வர்க்ககாமோ யஜேத" என்று ஸ்வர்க்காநுபவத்துக்கு ஸாதநத்தை ஶாஸ்த்ரம் விதியா நின்றால், ஒரூரிலே ஒருவனன்றோ யஜித்தானென்று கேட்கிறது; இதுக்கோ உமக்கு ஆள்பற்றப் போகிறது? (உ) "ருஷ்யாதீம்ஶ்ச கரந்யாஸம் அங்கந்யாஸஞ்ச வர்ஜயேத்" என்கையாலே, இதுக்கு ருஷ்யாத்யபேக்ஷையில்லை; இதில் 'அர்த்தத்துக்குக் கூட்டு வேண்டிவிறே, இதற்குங்கூட்டு வேண்டுவது; இதுவே எனக்குக் கருத்து' என்று திருவுள்ளமாக, பிள்ளையும் க்ருதார்த்தராயருளினார்.

நம்பிள்ளை, நஞ்சீயரைக்குறித்து 'ஒருவன் தனக்கு ஸ்ரீவைஷ்ணவத்வமுண்டென்று அறியலாவது எவ்வவஸ்தை பிறந்தால்?' என்ன, சீயரும் அர்ச்சாவதாரத்துக்குப்பரத்வமுண்டென்று அறிந்தவளவிலும் ஒரு ஸ்ரீவைஷ்ணவன் பக்கல் புத்ரதாராதிகள்பக்கலுள்ள ஸ்நேஹத்தளவாகிலும் ஸ்நேகம்பிறந்த வளவிலும், ஒரு ஸ்ரீவைஷ்ணவர் கடுத்து வார்த்தைபருளிச்செய்தால் தன் நெஞ்சில் சிவிட்குத்தட்டாதே போமளவுமாயிருந்தவளவிலும் ஸ்ரீவைஷ்ணவத்வமுண்டென்று அறியலாம்; ஆகையால், அர்ச்சாவதாரே பரத்வபுத்தியும், பாகவதப்ரேமமும், தத்கடினோக்தி போக்யதாபுத்தியுமுண்டானபோது ஸ்ரீவைஷ்ணவத்வம் ஸித்தமென்கிறது.

நம்பிள்ளை நஞ்சீயர் ஸ்ரீபாதத்திலே ஸ்ரீ பாஷ்யம் வாசித்தருளாநிற்கச்செய்தே 'திருப்போனகம் சமைந்தது' என்றவாறே, 'சொக்கத்தேவரைத் திருவாராதநம்பண்ணும்' என்று அருளிச்செய்ய, நம்பிள்ளையும் 'அடியேன் திருவாராதநக்ரமத்தை யறிந்தேனோ?' என்று விண்ணப்பஞ்செய்ய, சீயரும் 'நானோசால க்ரமம் அறிந்திருக்கிறேன்? த்வயத்தில் உத்தரவாக்யத்தை அநுஸந்தித்துத் திருவடிவிளக்கி அமுதுசெய்யப்பண்ணமாட்டீரோ?' என்று அருளிச்செய்தார். 'உகந்தருளின இடங்கள் பலவிடமாய்த் திருப்போனகம் படைப்பது ஒன்றிலேயாகில், அமுதுசெய்தருளப்பண்ணும்படி எங்ஙனே?' என்று பிள்ளை நஞ்சீயரைக் கேட்க, சீயரும் 'த்வயத்தில் பூர்வோத்தரகண்டங்களிரண்டுக்கும் நடுவே "ஸர்வமங்கள விக்ரஹாய" என்கிற விஶேஷணஸஹிதமாக உச்சரித்து அமுதுசெய்யப்பண்ணுவது' என்று அருளிச்செய்தார்! இத்தால், உபயகண்டமத்யே இத்தை உச்சரிக்க அருளிச்செய்தது கைங்கர்யவாசகசதுர்த்தியுடன் இச்சதுர்த்தி சேர்ந்திருக்கைக்காகவும், உபகாராயணபதஸித்தவிக்ரஹ ஸமர்ப்பகமாகைக்காகவும் அநந்யப்ரயோஜநத்வ த்யோதகார்த்தமாகவுமிறே; இத்தால் நம் பூர்வாசார்யர்கள் த்வயமொழிந்த மந்த்ரங்கொண்டு திருவடி விளக்கார்களென்று கருத்து.

நஞ்சீயரை நம்பிள்ளை 'அவதாரங்கள் ஏதுக்காக?' என்று கேட்க, சீயரும் 'ஓரோரவதாரங்களால் பண்ணின ஆனைத்தொழில்களெல்லாம் பாகவதாபசாரம் பண்ணினவனை அந்தப்பலத்தை அநுபவிப்பிக்கைக்காக' என்று அருளிச்செய்தார். பிள்ளையும் 'பாகவதாபசாரந்தான் ஏது?' என்று விண்ணப்பஞ்செய்ய, சீயரும் 'ஸ்ரீவைஷ்ணவர்களைக் கண்டக்கால் தங்களோபாதி ப்ராக்ருதிமான்களாக நினைத்திருக்கும் புல்விமை; எங்ஙனேயென்னில்:—ஸ்ரீவைஷ்ணவர்கள் "திருவுடைமன்னர்," "செழுமாமணிகள்," "நிலத்தேவர்," "பெருமக்கள்," "தெள்ளியார்," "பெருந்தவத்தர்," "உருவுடையார் இளையார்கள் நல்லார்," "வேதம்வல்லார்," "செப்தவேள்வியர்," "தக்கார் மிக்கார்," "வேதவிமலர்," "சிறுமாமனிசர்," "எம்பிரான்தனசின்னங்கள்", "பேராளன் பேரோதும்பெரியோர்" என்று இப்படி பலபடியாக மிகவும் விரும்பி, நம்குலநாதராய் * மயர்வற மதிநலமருளப்பெற்ற ஆழ்வார்கள் பஹுமதிபண்ணித் திருநாமங்கள்சாத்தி வாய்புலத்தியருளச் செய்கையாலே, ஸ்ரீவைஷ்ணவர்களைத் தங்களோடொத்த ப்ராக்ருதிமான்களென்று நினைத்திருக்கை நேரே பாகவதாபசாரமென்று அருளிச்செய்தார். ஆகையால், ஆழ்வார்களுமுட்பட "கடல்மல்லைத்தலசயனத்துறைவாரைக், கொண்டாடும் நெஞ்சுடையாரவரெங்கள்குலதெய்வமே" என்று பஹுமதிபண்ணி விரும்பும் ஸ்ரீவைஷ்ணவவிஷயத்தில் ஸ்வஸாம்யபுத்தியே அநர்த்தஹேதுவிறே.

நஞ்சீயர் நம்பிள்ளையைக்குறித்து, பகவதநுபவம் பண்ணுமவனுக்கு விஷயாநுபவத்தில் அந்வயமில்லை; இவ்வர்த்தத்தை ஆழ்வார்கள் பலவிடங்களிலும் அருளிச்செய்தார்களிறே: எங்ஙனேயென்னில்:— * வாசுதேவன் வலையுளகப்படுதல் - *மாதரார்கயற்கணென்னும் வலை

(க) ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க்ககாமோ யஜேத ॥
(உ) ருஷ்யாதீம்ஶ்ச கரந்யாஸம் அங்கந்யாஸஞ்ச வர்ஜயேத் ॥

யுட்படுதல் ; *மதுரக்கொழுஞ்சாறுகொண்ட சுந்தரத்தோளிலே யகப்படுதல் - * சாந்தேந்து மென்முலையார் தடந்தோளிலே யகப்படுதல்; *வானவர்க்கு வன்துணையான அரங்கத்துறையும் இன்துணைவனைத் துணையென்றிருத்தல் - * ஆவியே யமுதே யென நினைந்துருகி யவரவர்பணைமுலை துணையென்றிருத்தல் ; * அப்பொழுதைக்கப்பொழுது என்னாராவமுதத்தைப் பாநம்பண்ணுதல் - * பாவையர்வாயமுதத்தைப் பாநம்பண்ணுதல்; * நான்குவேதப்பயனைப்பேணுதல் - * மாதரார் வனமுலைப்பயனே பேணுதல் ; ஒன்றில் இதுவாதல், ஒன்றில் அதுவாதலென்று ஏவமாதிகளாலே பஹுமுகமாக அருளிச்செய்தார்களிறே. ஆகையாலே, "அன்னமென்னடையினார்கலவியை யருவருத்தஞ்சினாபேல்" என்றும், "முந்துறவுரைக் கேன் விரைக் குழல்மடவார்கலவியைவிடு" என்றும் ஸ்ரீபரகாலரான திருமங்கையாழ்வார் ப்ரதமம் விஷயருசியைக் காறியுமிழ்ந்தே பகவத்ஸமாஶ்ரயணம் பண்ணவேணுமென்று நிஷ்கர்ஷித்து அருளிச்செய்தருளுகையாலே 'க்ஷுத்ரவிஷயத்தைஸவாஸநமாகப்பரித்யஜித்தேப்ராப்த விஷயத்தைப் பற்றவேணும்' என்று அருளிச்செய்தார். பிள்ளையும் க்ருதார்த்தராய் நஞ்சீயரை அரைக்ஷணமும்*பிரியாவடிமைசெய்துகொண்டு வாழ்ந்தருளுங் காலத்திலே, நஞ்சீயர் நூறுரு திருவாய்மொழிக்கு அர்த்தம் நிர்வஹித்தருளுகையாலே, பிள்ளை சீயருக்கு ஶதாபிஷேகம் பண்ணியருளினாரென்று ப்ரஸித்தமிறே.

நஞ்சீயர்பக்கலிலும் நம்பிள்ளைபக்கலிலே ஸர்வார்த்தங்களும் வந்து குடிபுகுருகையாலே பிள்ளையும் தீபாதுத்பந்ந ப்ரதீபம்போலே தர்ஶநம் நிர்வஹிக்க, கண்டு சீயரும் க்ருதக்ருத்யராயிருக்குங் காலத்திலே, நம்பிள்ளை ஸ்ரீபாதத்திலே பெரியவாச்சான்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை, பின்பழகிய பெருமாள்சீயர், ஈயுண்ணிமாதவப் பெருமாள் முதலான அநேக ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஆஶ்ரயித்து க்ருதார்த்தரா யிருந்தார்கள்.

இவர்களிலே பின்பழகியபெருமாள்சீயர் ஊணுமுறக்கமுமின்றியே பிள்ளைதிருவடிகளிலே * வழுவிலாவடிமைசெய்துகொண்டு வாழ்ந்தருளுங்காலத்திலே, ஒருகால் திருமேனிபாங்கின்றியே கண்வளர்ந்தருளுகிறபோது, தமக்கு அந்தரங்கரான ஸ்ரீவைஷ்ணவர்களை அழைத்து 'அடியேன் இப்போது திருவடிசாராமல் இங்கே இன்னம்



சிறிதுநாளிருக்கும்படி பெருமாள்ஸந்நிதியிலே சென்று ஏழையேதலனும் ஆழியெழச்சங்கும் விண்ணப்பஞ்செய்து ப்ரபத்திபண்ணி வேண்டிக்கொள்ளுங்கோள்' என்ன, அவர்களும் அப்படியே செய்துநிற்க, சீயருக்குத் திருமேனி பண்டுபோலே பாங்காயிற்று.

இத்தைக் கேட்ட ஸ்ரீவைஷ்ணவர்கள், நம்பிள்ளைஸந்நிதியிலே சென்று தண்டன்ஸமர்ப்பித்து, 'ஜ்ஞாநவ்ருத்தருமாய் வயோவ்ருத்தருமாயிருக்கும் பின்பழகிய பெருமாள்சீயர் இப்படிச்செய்தார்; இது இவர்ஸ்வரூபத்துக்குச் சேருமோ?' என்று விண்ணப்பஞ்செய்ய, பிள்ளையும் 'அவருடைய அபிப்ராய மறிகிலோம்; ஸகலஶாஸ்த்ரங்களும் போருவது பிள்ளையெங்களாழ்வானுக்காய்த்து; அவர்பக்கல் சென்று கேளுங்கோள்' என்ன ஸ்ரீவைஷ்ணவர்களும் எங்களாழ்வானைக் கேட்க, அவரும் 'ஸ்ரீரங்கைஶ்வர்யத்தில் ஸங்கம்போலே காணும்' என்ன, பிள்ளையும் இத்தைக்கேட்டு 'அழகிது! திருநாராயணபுரத்தரையரைச் சென்று கேளுங்கோள்' என்ன, அவர்களும் அவரைக் கிட்டிக் கேட்டவிடத்தில், அவரும் 'இங்குத் துவக்கின கைங்கர்யம் தலைக்கட்டாமையாலே காணும்' என்ன, பிள்ளை இத்தையுங்கேட்டு 'ஆகிறது : அம்மங்கியம்மாளைக்கேளுங்கோள்' என்ன, அவரும் 'பிள்ளைகோஷ்டியி லிருந்து பகவத்விஷயங் கேட்கிறவர்களுக்கும் ஒருதேஶவிஶேஷம் ருசிக்குமோ?' என்ன, இத்தையும் பிள்ளை கேட்டு 'நல்லது!' என்று விட்டு 'அம்மங்கிப் பெரியமுதலியாரைக் கேளுங்கோள்' என்ன, அவரும் 'நம்பெருமாள் சிவந்ததிருமுகமண்டலமும் கஸ்தூரித்திருநாமமும் பரமபதத்திலே கண்டிலேனாகில் ஒருமூலையடியே முறித்துக்கொண்டு மீண்டுவருவேனென்றன்றோ பட்டர் அருளிச்செய்தது; அப்படியே இவரும் நம்பெருமாள் சிவந்த திருமுகமண்டலத்தையும் திருநுதலில்கஸ்தூரித்திருநாமத்தையும் விட்டுப்போகமாட்டாராகவேணும்' என்றார்; பிள்ளை, இவற்றையெல்லாம் திருவுள்ளம்பற்றியருளி, சீயர்திருமுக மண்டலத்தைப்பார்த்துச் சிரித்து 'இவை உம்முடையநினைவுக்கு ஒக்குமோ?' என்ன, 'இவை இத்தனையுமன்று' என்று விண்ணப்பஞ்செய்ய, 'ஆகில், உம்முடைய அபிப்ராயத்தை நாம் அறிந்தோம்' என்று பிள்ளை அருளிச்செய்ய, சீயர் 'தேவரீர் ஸர்வஜ்ஞராகையாலே, அறிந்தருளாததில்லை; அடியேனைக்கொண்டு வெளியிடத்திருவுள்ள

மாகில் விண்ணப்பஞ்செய்கிறேன்: திருமஞ்சனச்சாலைக்கு எழுந்தருளித் தேவரீர் திருமஞ்சநமுறைகளிலே திருமஞ்சனங்கொண்டருளித் தூயவுடையாடை திருவுத்தரீயஞ் சாத்தியருளி உலாவியருளும்போது குறுவேர்ப்போடே கூடின திருமுகமண்டலச்செவ்வியையும், அடியேன் சுற்றிச் சுழற்றிப்பரிமாறுகிற கைங்கர்யத்தையும் விட்டு அடியேனுக்குப் பரமபதத்துக்குப்போக இச்சையா யிருந்ததில்லை; பெருமுகோல்லாஸமும் இன்னம் சிறிதுகாலம் இங்கேயிருந்து பெறவேணுமென்று நினைத்துச் செய்தேன்' என்று விண்ணப்பஞ்செய்தார். இத்தைக்கேட்டருளிப் பிள்ளையும் முதலிகளும் 'இவ்வுடம்போடே இவ்வைஶ்வர்யம் கூடுவதே!' என்று மிகவுந் திருவுள்ள முகந்தருளினார்கள்.

ஒருநாள் நம்பிள்ளை பகவத்விஷயம் அருளிச்செய்து கோஷ்டி கலைந்தவளவிலே, பின்பழகியபெருமாள்சீயர் பிள்ளை திருவடிகளிலே தண்டன் ஸமர்ப்பித்து 'இவ்வாத்மாவுக்கு ஸ்வரூபோபாய புருஷார்த்தங்களிவையென்று அருளிச் செய்யவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, பிள்ளையும் 'இச்சை ஸ்வரூபம்; இரக்கமே உபாயம்; இனிமை உபேயம்'என்று அருளிச்செய்ய, 'அப்படியன்று அடியேன் நினைத்திருப்பது'என்று விண்ணப்பஞ்செய்ய, பிள்ளையும் 'ஆகில், உமக்கென்று சிலபிள்ளைக்கிணறுகளுண்டோ? நீர் எங்ஙனே நினைத்திருப்பது? அத்தைச் சொல்லிக்காணீர்' என்ன, 'தேவரீர்திருவடிகளே தஞ்சமென்று நினைத்திருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அடிமையாயிருக்கையே அடியேனுக்கு ஸ்வரூபம்; அவர்களுடைய அபிமானமே அடியேனுக்கு உபாயம்; அவர்களுடைய முகமலர்த்தியே அடியேனுக்கு உபேயமென்று நினைத்திருப்பன்' என்று விண்ணப்பஞ்செய்ய, சீயரையும் பிள்ளை போரப்ரியப்பட்டருளினார்.

ஒருகால் பிள்ளை பகவத்விஷயம் அருளிச்செய்து கோஷ்டி கலைந்து போகாநிற்கச்செய்தே, ஸ்ரீவைஷ்ணவனாயிருப்பானொரு ராஜா, வருகிற பெருந்திரளைக் கண்டு 'நம்பெருமாள் திருவோலக்கம் கலைந்ததோ? நம்பிள்ளை கோஷ்டி கலைந்ததோ?' என்று கேட்டானென்பர்கள். இப்படி மஹாஸம்ருத்தமான ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயோடே நம்பிள்ளை வாழ்ந்தருளுங்காலத்திலே, முதலியாண்டான் திருப்பேரனாராய், கந்தாடையாண்டான் குமாரரான கந்தாடைத்தோழப்பர், நம்



பிள்ளையுடைய பெருமதிப்பையும் வைபவத்தையுங் கண்டு அஸூயாளுவாய்ப் பொறுக்கமாட்டாமலிருக்குமவர், ஒருநாள் பெருமாள் ஸந்நிதியிலே பெருமாளை ஸேவித்துக்கொண்டிருக்கிறவளவிலே, பிள்ளையும் முதலிகளும் பெருந்திரளாகப் பெருமாளைஸேவிக்கவென்று கோயிலுக்குள்ளே யெழுந்தருள, தோழப்பர்பிள்ளையுடைய பெருமையைக் கண்டு பொறுக்கமாட்டாமற் சீறிப் பகவத்ஸந்நிதியிலே நம்பிள்ளையைப் பஹுவாகப் பருஷோக்திகளைச்சொல்லி அநேகமாக நிந்திக்க, பிள்ளையும்அத்தைக்கேட்டு நடுங்கிக்கொண்டு பெருமாளை ஸேவித்துப் புறப்பட்டெழுந்தருள, இச்செய்தியை ஜ்ஞாநாதிகையாயிருக்கிற தோழப்பர் தேவிகள் கேட்டுப் பெருக்கவ்யாகுலப்பட்டுத் திருமாளிகைக்குள் செய்கிற கைங்கர்யங்களையும் செய்யாமல் விட்டு வெறுத்து எழுந்தருளியிருக்க, அவ்வளவிலே தோழப்பரும் பெருமாளைஸேவித்துமீண்டு தம்திருமாளிகையிலே எழுந்தருள, தேவிகளும் முன்பு போலே எதிரேபுறப்பட்டுவந்து ப்ரீதியுடனே தமக்கு ஒருகைங்கர்யமும் பண்ணுமையாலே, தோழப்பர் தம்தேவியாரைப்பார்த்து 'உன்னை நாம் அங்கீகரித்த அன்று தொடங்கி இன்றளவாக நம்மைக் கண்டால் ஆசார்யப்ரதிபத்தி பண்ணிக்கொண்டுபோந்தாய்; இன்று உதாஸீநம் பண்ணியிருந்தாய்; இதற்கு அடி என்?' என்று கேட்டருள, தேவிகளும் தோழப்பரைக்குறித்து 'வாரீர்! ஆழ்வார்தம்முடைய திருவவதாரமென்னலாம்படி ஒரு அவதாரவிஶேஷமாய்ப்பெருமாளுக்குப்ராணபூதருமாயிருந்துள்ள நம்பிள்ளையைப் பெருமாள்ஸந்நிதியிலே கூசாமல் அநேகமாகப் பருஷோக்திகளைப்பண்ணித் தூஷித்து 'இப்படி செய்தோமே!' என்கிற அநுதாபமு மற்று உஜ்ஜீவிக்கவிருக்கிற உம்மோடு எனக்கு என்னஸம்பந்தமுண்டு? நீர் என்னை வெறுத்தீராகில், என்னுடைய மாதாபிதாக்கள் பெற்றுவளர்த்து உம்முடைய கையிலே காட்டித்தந்த இந்த ஶரீரத்தை உமக்குவேண்டினபடி செய்துகொள்ளும்; எங்களாசார்யர் என் ஆத்மாவை அடியிலே அங்கீகரித்தருளினவன்றே நான் உஜ்ஜீவித்தேன்; ஆனபின்பு (க) "பத்மகோடிஶதேநாபி நக்ஷமாமிகதாசந" என்று பாகவதநிந்தனை பண்ணினவர்களை ஒருகாலும் க்ஷமிப்பதில்லை யென்று பெருமாள் தாமே அருளிச்செய்த திருமுகப்பாசுர மறிந்தும் அறியாதவர்போலே யிருக்கிற

(க) பத்மகோடிஶதேநாபி நக்ஷமாமி கதாசந ॥

உம்மோடு எனக்குஸஹவாஸங்கூடாது; ஆகையாலே, நிலம்பிளந்தால் இழையிட வொண்ணாதாப்போலவும், கடலுடைந்தால் கட்ட வொண்ணாதாப்போலவும், மலைமுறிந்தால் தாங்கவொண்ணாதாப் போலவும் அநுதாபம் பிறவாத பாகவதாபசாரம் தீர்த்துக்கொள்ளக் கூடாதிறே; ஆனபின்பு நான் என்னிஷ்டத்திலேயிருந்து ஈடேறிப் போகிறேன், என்ன, தோழப்பரும் தேவிகள் சொன்ன வார்த்தைகளைக் கேட்டுச் சற்றுப்போது திகைத்து எழுந்தருளியிருந்து, பெரிய வித்வானானையாலும் திருவம்ஶப்ரபாவத்தாலும் அஸூயையால்வந்த திருவுள்ளத்தின் கலக்கந்தீர்ந்து தெளிந்துவந்து தேவிகளைப்பார்த்து நீ சொன்னதெல்லாம் ஒக்கும்; நாம் தப்புச்செய்தோம்; இனிமேல் செய்ய அடுக்குமதெது?' என்ன, தேவிகளும் 'ஆற்றிலே கெடுத்துக் குளத்திலே தேடாதே, கெடுத்த விடத்தே தேடிக்கொள்ளீர்' என்ன, தோழப்பரும் 'ஆவதென்?' என்ன, தேவிகளும் 'பரமதயாளுவான நம்பிள்ளை திருவடிகளிலே சென்று ஸேவித்து அபராதக்ஷாமணம் பண்ணிக்கொண்டு அவர் க்ருபை பண்ணியருள ஈடேறீர்' என்ன, தோழப்பரும் 'அவரைப் பெருமாளுடைய பெருந்திருவோலக்கத்திலே பரிபவித்து, இப்போது அவர்ஸந்நிதியிலே போய்நிற்கவென்றால் எனக்கு லஜ்ஜாபயங்கள் அநுவர்த்தியாநின்றது; நீ கூடவந்து க்ஷமிப்பிக்கவேணும்' என்ன, தேவிகளும் தோழப்பர்சொல்லும் வார்த்தையைக் கேட்டு 'அப்படியே செய்கிறேன்' என்று கடுக வெழுந்திருந்து அவரையுங் கூட்டிக்கொண்டு நம்பிள்ளை திருமாளிகைக்கு எழுந்தருளுவதாகப் புறப்பட்டவளவிலே,

நம்பிள்ளை செய்தபடி:—கோயிலிலும் எழுந்தருளினபின்பு முதலிகளெல்லாரையும் அனுப்பியருளி, பகலெல்லாம் அமுதுசெய்தருளாமல் தம்திருமாளிகைக்குள்ளேயெழுந்தருளியிருந்து ஸாயங்காலமானவாறே ஆவஶ்யககர்மத்தைச்செய்தருளி ஒற்றைத்திருப்பரியட்டத் துடனேமுட்டாக்கிட்டுக்கொண்டு தாம்ஒருவருமே எழுந்தருளிக் நந்தாடைத்தோழப்பர் திருமாளிகைவாசலிலே கைப்புடையிலேவந்து கண்வளர்ந்தருள, தோழப்பரும் தேவிகளுமாகத் திருவிளக்கையேற்றிக்கொண்டு பிள்ளை திருமாளிகைக்கு எழுந்தருளுவதாகத் திருமாளிகைவாசலிலே புறப்பட்டவளவிலே, திருவிளக்கொளியாலேகைப் புடையிலே ஒருவெள்ளைகிடக்கிறதைக் கண்டு, தோழப்பர் 'இங்கு ஆர்



கிடக்கிறார்?' என்று கேட்க, பிள்ளையும் 'அடியேன் திருக்கலிகன்றி தாஸன்' என்ன, அவ்வளவிலே, தோழப்பர் 'இதென்!' என்று திகைத்து, பிள்ளையைப் பார்த்து 'நாம் மஹாதேஜஸ்வீ; நம்மை நம்பெருமாள்திருவோலக்கத்திலே பரிபவிக்கலாவதென்? என்கிற கோபாபிப்ராயத்தாலே நம்முடைய வாசலிலே வந்து மௌர்க்யம்செய்வதாகக் கிடக்கிறீரோ?' என்ன, நம்பிள்ளையும் தோழப்பரைக்குறித்து 'அடியேன் அப்படிசெய்ய வரவில்லை' என்ன, 'ஆகில், இங்கு வந்து கிடப்பானென்?' என்று தோழப்பர் கேட்க, பிள்ளை அருளிச்செய்தபடி:—'பெரியபெருமாள் ஸந்நிதியிலே முதலியாண்டான் திருப்பேரனான தேவரீர் திருவுள்ளங்கலங்கும்படி வர்த்தித்த மஹாபாபியான அடியேனுக்குத் தேவரீர் திருமாளிகைவாசலல்லது புகுவாசல் மாண்டு வந்து கிடக்கிறேன்' என்ன,

இவரை அநுவர்த்திப்பதாகப்புறப்பட்டுவந்துநிற்கிற தோழப்பர் பிள்ளை கண்வளர்ந்தருளுகிற நைச்யத்தைக் கண்டு, அவருடைய நைச்ய வார்த்தைகளையும் கேட்டு 'இதொரு அதிகாரமிருந்தபடியென்!' என்று போரவித்தாய்ப் பிள்ளையை வாரியெடுத்து அணைத்துக்கொண்டு 'இத்தனைநாளும் சிறிதுபேருக்கு ஆசார்யனென்றிருந்தேன்; இப்போது லோகத்துக்கெல்லாம் நீரே ஆசார்யராகைக்கு ப்ராப்தரென்று அறிந்தேன்' என்று தோழப்பர் உகந்து 'லோகாசார்யர்' என்று பிள்ளைக்குத் திருநாமஞ்சாத்தியருளித் தம்முடைய திருமாளிகையிற்கொண்டு புக்குத் தாமும் தேவிகளுமாகப் பிள்ளையை அநேகமாக அநுவர்த்தித்து அவர் திருவுள்ளத்தை மிகவும் உகப்பித்து, தமக்குவேண்டும் அர்த்தவிஶேஷங்களெல்லாங் கேட்டுக்கொண்டு பிள்ளை திருவடிகளிலே ப்ரவணராய் க்ருதார்த்தராயருளினார்.

இப்படி நம்பிள்ளை மஹாவைபவமுடையராய் வாழ்ந்தருளுமதைக் கண்டு நஞ்சீயர்செய்ததுவாய்த்து ஸ்ரீமானாய் நூறுதிருநக்ஷத்ரம் எழுந்தருளியிருந்து அந்திமதஶையிலே திருமேனியிலே நோவுசாத்திக் கண்வளர்ந்தருள, சீயர்ஶிஷ்யரான குட்டிக்குறிபிள்ளையாழ்வார் சீயரைப் பார்த்து 'த்வயத்தை அநுஸந்தித்தா லாகாதோ?' என்ன, நஞ்சீயரான பெரியசீயர் அவரைக்குறித்து 'அதுஎன்? உனக்குவேண்டாதே எனக்கு இப்போதாக வேண்டுகிறதென்? நடையாடித்திரிவார்க்கு வேண்டாதே கிடக்கைப்பட்டார்க்கு வேண்டியோ த்வயமிருப்பது?

என்ன, அவரும் நிருத்தராய் லஜ்ஜிதரானாரிறே; இத்தால், ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு த்வயம் ஸதாநுஸந்தேயமென்றபடி.

இத்தைக் கேட்டுத் தெற்காழ்வார்பட்டர், சீயர் ஸ்ரீபாதத்திலே சென்று ஸேவித்து 'உமக்குச் செய்யவேண்டுவதென்?' என்று கேட்டருள, சீயரும் 'பெரியபெருமாள் ஸர்வஸ்வதாநம்பண்ண அநுபவிக்க வேண்டியிராநின்றது' என்று விண்ணப்பஞ்செய்ய, தெற்காழ்வார் பட்டரும் இத்தைத் திருமாலை தந்தபெருமாளுக்கு அறிவிக்க, அவரும் இத்தைப் பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்ய, பெருமாளும் புறப்பட்டருளி மடத்துவாசலிலே சென்று சேலையைக்களைந்து சீயரை அநுபவிப்பித்தருள, சீயரும் அநுபவித்து ஹ்ருஷ்டராய்ப்பிள்ளை தொடக்கமான முதலிகளைக்குறித்து 'பெருமாள் எனக்கு ஸர்வஸ்வ தாநம் பண்ணியருளினார்; நாம் உங்களுக்கு ஸர்வஸ்வதாநம் பண்ணுவதாக ஒருப்பட்டோம்; அபேக்ஷையுடையார் உடையபடியே அபேக்ஷித்துக்கொள்ளுங்கோள்' என்று அருளிச்செய்ய, பிள்ளையும் 'அடியேனுக்குத் தஞ்சமாயிருப்பதொரு வார்த்தை அருளிச்செய்யவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, சீயரும் 'மணக்கோலத்திலே முள்ளைத் தெளிப்பாரைப்போலே இப்போது தஞ்சமாகக் கேட்பது ஒருவார்த்தையுண்டோ?' என்று பிள்ளைக்கு அருளிச்செய்த வார்த்தை;—'ஆத்மவிநியோகம் ஈஶ்வரனென்றிராதே, ஈஶ்வரவிநியோகம் ஆத்மா என்றிரும்' என்று அருளிச்செய்ய, அதில் பிள்ளை திருவுள்ளம் ப்ரஸந்நமாகாமையாலே பேசாதே நிற்க, சீயரும் 'உம்முடைய நினைவு எது? சொல்லிக்காணீர்' என்ன, பிள்ளையும் 'ஒரு ஸ்ரீவைஷ்ணவர் பரமபதத்திற்கு எழுந்தருளினால் இங்குஇருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் என்ன நினைத்திருக்கக்கடவர்?' என்ன, சீயரும் 'அது அதிகாராநுகுணமாகவன்றோ இருப்பது? த்ருப்தனாகில் ஆர்த்தனாகிறான்; ஆர்த்தனாகில் த்ருப்தனாகிறான்' என்று அருளிச்செய்தருளி, பின்னையும் பிள்ளையைக்குறித்து 'ஜ்ஞாநகார்யத்தில் உமக்குக் கர்த்தவ்யமில்லை; பெருமாளுக்கு உகப்பாக முதலிகளையுங் கூட்டிக்கொண்டு தர்ஶநார்த்தம் நிர்வஹித்துப் போரீர்' என்று அருளிச்செய்து, 'வாரீர் பிள்ளாய்! பட்டர் அடியேனுக்கு ஹிதோபதேஶஞ் செய்து 'வேதாந்தி'யென்கிற பேரையுடையோம், நம்பக்கல் ஆஶ்ரயித்தோம், பஹுத்ரவ்யத்தை ஆசார்யதக்ஷிணையாகக் கொடுத்தோம்' என்று இறுமாந்திராதே எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென்றிரும்' என்று அருளிச்செய்தார்; நீரும் அப்படியே 'லோகாசார்ய'னென்கிற பேரை யுடையோம், அருளிச்செயல்நாலாயிரத்திற்கும் பொருள்சொல்லவல்லோம், ஸ்ரீபாஷ்யத்திற்கும் ப்ரவர்த்தகர்' என்று மேன்மையை நினைந்திராதே எம்பெருமானார்திருவடிகளே தஞ்சமென்றிரும்' என்று அருளிச்செய்து, பிள்ளைமுதலான முதலிகளை க்ஷமைகொண்டு தீர்த்தங்கொண்டு அமுது செய்தருளப்பண்ணி, கோயிலுக்குநேரேபகவத்ஸேநாபதிசீயர்மடியிலே திருமுடியும், பின்பழகியபெருமாள்சீயர்மடியிலே திருவடிகளுமாகக் கண்வளர்ந்தருளிப் பட்டர் திருவடிகளை த்யானித்துக்கொண்டு திருநாட்டுக்கு எழுந்தருளினார். பிள்ளையும், ஆசார்யவிஶ்லேஷத்தை ஸஹிக்கமாட்டாதே*மல்குநீர்க்கண்ணொடுமையலுற்றுக்லேஶித்தருள, முதலிகளும் 'தேவரீர் இங்ஙனே ஶோகிக்கக்கூடுமோ?' என்ன, பிள்ளையும் தம்மிலே தேறிநின்று, பெருமாள் சாத்திக்களைந்துவரவிட்டருளின திருமாலையையும் திருப்பரியட்டங்களையும் கொண்டு கோயிலனைத்துக் கொத்தும் வந்து ஸேவிக்க, யதிஸம்ஸ்காரவிதியால் ப்ரஹ்மமேதவிதியடங்கச்செய்து சீயரை அதிஸய்ப்ரமத்துடனே ஸம்ஸ்கரித்துக்கநித்துப் பள்ளிபடுத்தருளி, பின்புண்டான க்ருத்யங்களையெல்லாஞ் செய்து சீயருக்குச் சீர்மையுடன் திருவத்யயநமும நடத்தியருளினார்கள்.

அந்திமதஶையில் ஈஶ்வரன்தானே விஷயீகரித்தெழுந்தருளி ஸர்வஸ்வதாநம்பண்ணப்பெற்ற தன்னேற்றமும், நூறுரு திருவாய்மொழிக்கு அர்த்தமருளிச்செய்து நிர்வஹித்தருளி ஶதாபிஷேகம் பண்ணப்பெற்ற தன்னேற்றமும், ஆசார்யாநுவர்த்தநப்ரதிபந்தங்களான களத்ர புத்ர க்ஷேத்ர மித்ர தநதேஶ வாஸங்களை நோக நிவர்த்தித்து ஆசார்யன் எழுந்தருளியிருந்ததேஶமே பரமப்ராப்யமென்று எழுந்தருளிவந்து தம்ஸர்வஸ்வத்தையும் அத்தலைக்கே ஶேஷமாக்கித் தத்கைங்கர்யமே யாத்ரையாய் அதுவே ஸத்தாதாரகமாகப் பெற்ற தன்னேற்றமும் இவரொருவர்க்குமே யுள்ளதொன்றிறே.

நஞ்சீயர்திருநக்ஷத்ரம், பங்குனியில் உத்திரம்.

அவர்தனியன் - (க) நமோவேதாந்த வேத்யாய ஜகந்மங்கள ஹேதவே - யஸ்யவாகம்ருதாஸார பூரிதம்புவநத்ரயம்,'' ''யத்வசஸ்

---

(க) [illegible]

ஸகலம்ஶாஸ்த்ரம் யத்க்ரியாவைதிகோவிதி: - யத்கடாக்ஷாஜமத்ரக்ஷா தம்வந்தேமாதவம்முநிம்."

இதில் பெருமாள் இரங்கின ஸர்வஸ்வதாநம் - மறைவு அறத் திருமேனி காட்டுகை; நஞ்சீயர்பண்ணின ஸர்வஸ்வதாநம் - மறைவு அறச் சாமார்த்த விஶேஷங்களை வெளியிடுகை. ஆத்மவிநியோகம் ஈஶ்வரனென்றிராமைக்கு அடி, பலித்வாபிமாநித்வமில்லாமை; ஈஶ்வர விநியோகம் ஆத்மாவென்றிருக்கைக்கு அடி, பலியுமாய் அபிமாநியுமான ஶேஷிக்கு இஷ்டவிநியோகார்ஹனுகை. ஆர்த்தனுகில் த்ருப்தனுகையாவது - ததீயவிஶ்லேஷத்தில் ஶரீரவிஶ்லேஷம் பிறக்கும்படியான பாமார்த்தி விளையில் இப்போதே ஸம்ஶ்லேஷிக்கவன்றோ போகிறுமென்று த்ருப்தி பிறக்கை; த்ருப்தனுகில் ஆர்த்தனுகையாவது - ததீயரை விஶ்லேஷித்தும் ஶரீரவிஶ்லேஷம்பிறக்கும்படி அதிஶயித்த ஆர்த்தியின்றியே ஸ்வஶரீர விஶ்லேஷத்தளவும் பொறுக்கும்படியான ஆர்த்தி அநுவர்த்திக்க த்ருப்தியுண்டாய் 'இப்போது உசாத்துணை இழந்தோம்' என்னுமளவேயாகை யென்றபடி.

பிள்ளையும், இவ்வர்த்தத்தைக்கேட்டு அநுஷ்டாநபர்யந்தமாகக் கண்டருளினுர்; எங்ஙனே யென்னில்:—அம்மங்கியம்மாள் பரமபதத்திற்கு எழுந்தருளும்போது பிள்ளை அவர்திருமாளிகையேற எழுந்தருள, அம்மாள்தேவிகள் ப்ரஸந்நையாயிருக்கக் கண்டு, ஸ்ரீபாதத்து முதலிகள் 'இதத்கு அடிஎன்?' என்று பிள்ளையைக் கேட்க, பிள்ளையும் 'தேவிகள் விஷயத்தில் இதற்குமுன்பு அம்மாள் பண்ணின விரோதமுண்டாகிலிறே அவர்பேற்றுக்கு இவர்வெறுப்பது' என்று அருளினுர். தம்முடைய ஸ்ரீபாதத்துமுதலிகளில் ஒருவர் திருநாட்டுக்கு எழுந்தருள, தத்பார்யாபுத்ராதிகள் வந்து தம்ஸ்ரீபாதத்திலே விழுந்து அழ, 'இதற்கு அடி என்?' என்று முதலிகள் கேட்க, பிள்ளையும் 'பெறுகிற தேஶம் கொந்தளிக்கிறபடிகண்டால் இழக்குந் தேஶம் எப்பாடுபடக்கடவதோ?' என்று அருளினுர்; ஆகையால், ஸத்வஸ்துவை இழந்த தேஶம் கையெடுத்துக் கூப்பிடச் சொல்லவேண்டாவிறே யென்று கருத்து.

---

யத்தியாவெஷிகொவியிஃ। யத்தடாகேஷாஜமஹ்ரக்ஷா தம்வந்தேரயவம் ௭–ஙிழ ॥



நம்பிள்ளையும், ஸ்ரீபாதத்துமுதலிகளும் திருவெள்ளறைநாச்சியாரை ஸேவித்து மீண்டு கோயிலுக்கு எழுந்தருளாநிற்கச்செய்தே, திருக்காவேரி இருகரையும் ஒத்து அதிஶய்யமாய் நாவர்த்தஸஷாகுலமாய்த் * தடவரையதிரத் தரணிவிண்டிடியத் தலைப்பற்றிக் கரைமாஞ்சாடிக் கடலினைக்கலங்கக் கடுத்திழி கங்கைபோலே புங்காநுபுங்கமாக ப்ரவஹியாநிற்க, ஓடம்கிடையாதபடியாலே ஒருதாழியிலே எழுந்தருள, நட்டாற்றிலே சென்றவாறே, போதும் அஸ்தமித்து மழையு மிருட்டுமாய் அக்கரை இக்கரை முன்னடி தெரியாமே இக்விப்ரமம்பிறந்து தாழி அமிழத் தேட, இந்த அவஸ்தையில் 'நாலிரண்டு பேர் தாழியை விட்டால் கரையிலே யேறலாம்; ஒருவரும் விடாதிருக்கில் நம்பிள்ளைமுதலாக எல்லாரும் அமிழ்ந்து தட்டுப்பட்டுப்போகிறது' என்று தாழிக்காரன் கூப்பிட, அவ்வளவிலும் நட்டாறுகையாலும், பயாதிஶயத்தாலும் ஒருவரும் அதற்கு இசைந்து விட்டார்களில்லை; அவ்வளவிலே, ஒருஸாத்விகையான அம்மையார் தாழிவிடுகிறவனைப் பார்த்து 'நூறுபிராயம் புகுவாய்; * உலகங்கட்கெல்லாம் ஒருயிரான நம்பிள்ளையைப் பேணிக்கொண்டு கரையிலே விடு' என்று அவனை ஆஶீர்வதித்து அந்தகாரத்தையும் பாராமல் ஆற்றிலேவிழுந்தாள்; அவ்வளவுகொண்டு தாழி கரையிலேபோக, பிள்ளையும் அக்கரையேறி 'ஓர் ஆத்மா தட்டுப்பட்டுப்போச்சுதே!' என்று பலகாலும் அருளிச்செய்து வ்யாகுலித்தாரயிருக்கிறவளவிலே' அப்போது அம்மையார் நாலடிவிட்டுப்போனவளவிலே ஒருதிடர் ஸந்திக்க அதிலே தரித்து நின்று, இராக்குரலாகையாலும் கரை ஆஸந்நமாகையாலும் ஸ்வாசார்யரான நம்பிள்ளை வ்யாகுலப்பட்டு அருளிச்செய்கிற வார்த்தையைக் கேட்டு 'ஸ்வாமீ! தேவரீர் வ்யாகுலப்பட்டருளவேண்டா; அடியேன் இங்கே இருக்கிறேன்' என்று குரல்காட்ட, பிள்ளையும் 'திடர்கள் மரங்கள் ஸந்தித்ததாகக்கூடும்' என்று திருவுள்ளம்பற்றித் தாழிக்காரனையிட்டு அவளையும் அக்கரையிலே அழைப்பித்துக்கொள்ள, அவளும் வந்து பிள்ளை திருவடிகளிலே ஸேவித்து, ஆசார்யனையல்லது ரக்ஷகாந்தரம் அறியாதவளாகையாலே 'அடியாள் ஆற்றிலே ஒழுகிப் போகிறபோதும் தேவரீர் அங்கே ஒருதிடராய் வந்து ரக்ஷித்தருளிற்றே!' என்று கேட்க, பிள்ளையும் 'உம்முடைய விஶ்வாஸமிதுவானபின்பு அதுவும் அப்படியாகாதோ?' என்று அருளினுர்; இத்தால், ஸ்வஶரீர அர்த்தப்ராணன்களை அழியமாறியாகிலும் ஆசார்யனைப்

பேணவேணுமென்னும் நிஷ்டை யுண்டாகவே, ஈஶ்வரன் அவனைப் பேணி ரக்ஷிக்குமென்னுமது சொல்லவேண்டாவிறே.

அநந்தரம் பிள்ளையும் முதலிகளுமாகக் கோயிலிலே எழுந்தருளியிருந்து தர்ஶநம் நிர்வஹித்துக்கொண்டு வாழ்ந்தருளுகிற காலத்திலே, நம்பிள்ளை ஸ்ரீபாதத்திலே ஆஶ்ரயித் திருப்பாளொரு அம்மையாருக்குத் திருமாளிகைக்கு அருகே ஒரு கோல் துறைநிவேஶந முண்டாய் அதிலே குடியாயிருக்கும்; அவளுக்கு ஸப்ரஹ்மசாரியா யிருப்பாரொரு ஸ்ரீவைஷ்ணவர் 'பிள்ளை திருமாளிகை நெருக்கமாயிருக்கிறது; இந்த ஒருகோல்துறையை ஆசார்யருக்கு ஸமர்ப்பியும்' என்று அம்மையாருக்குப் பலகாலும் அருளிச் செய்ய, அவளும் 'கோயிலிலே ஒருகோல் துறை ஆருக்குக் கிடைக்கும்? நான் திருவடிசாருந்தனையும் கொடேன்' என்ன, ஸ்ரீவைஷ்ணவரும் இந்த விஶேஷத்தைப் பிள்ளைக்கு விண்ணப்பஞ்செய்ய, பிள்ளையும் 'அம்மையாரை அழைத்தருளி 'உனக்கு ஒருஶரீரத்திற்குச் சற்றிடமன்றோ வேண்டுவது? முதலிகள் எழுந்தருளியிருக்க நெருக்கமாயிருக்கிறது; உன் ஒருகோல் துறையையும் நமக்குத் தரவேணும்' என்ன, அம்மையாரும் 'அப்படியே செய்கிறேன்; தேவரீர் பரமபதத்திலே அடியேனுக்கு ஒரு கோல்துறை தந்தருளவேணும்' என்ன, 'அதற்கு ஸ்ரீவைகுண்டநாதனன்றோ கடவன்! அவனுக்கு விண்ணப்பஞ்செய்து கொண்டு தருகிறோம்' என்று அருளிச்செய்ய, அவளும் 'அடியேன் ஸாது; அதிலே பெண்பெண்டாட்டி; தருகிறோமென்ற வார்த்தையால் போராது; எழுதி எழுத்திட்டுத் தரவேணும்' என்ன பிள்ளையும் 'இப்படியுங்கேட்பதே!' என்று திருவுள்ளம்உகந்து 'இன்னவருஷம் இன்னமாஸம் இத்தனையாந்தேதி இந்த அம்மையாருக்குத் திருக்கலிகன்றிதாஸன் பரமபதத்திலே ஒருகோல்துறை எழுதிக் கொடுத்தேன்; அகிலலோகஸ்வாமியும் அஸ்மத்ஸ்வாமியுமான ஸ்ரீவைகுண்டநாதன் க்ரயஞ் செலுத்திக்கொடுத்தருளவேணும்' என்று ஶாஸந மெழுதித் தம்முடைய திருவெழுத்துச்சாத்திக் கொடுத்தருளினார். அம்மையாரும் திருமுகத்தை ஶிரஸாவஹித்து ப்ரீதியுடனே வாங்கிக்கொண்டு தீர்த்தப்ரஸாதங்களும் ஸ்வீகரித்து, அன்றும் மற்றைநாளும் பிள்ளையை ஸேவித்துக்கொண்டிருந்து, மூன்றாம்நாள் பரமபதத்திலே சென்றாள்; இத்தால், 'ஆசார்யன் இரங்கி ப்ரஸாதித்ததொன்றையே தஞ்சமென்று



இருக்கவேணும், உபய விபூதியும் ஆசார்யனிட்ட வழக்காயிருக்கும்' என்று தோன்றாநின்றதிறே.

மஹாபாஷ்யபட்டர் பிள்ளையை 'சைதந்யவஸ்துவாயிருக்கிற ஆத்மாவுக்கு ஶரீரவிஶ்லேஷம் பிறந்தால் பரமபதம் ஸித்தமென்று அறுதியிட்டிருக்கலாவது எவ்வர்த்தத்தாலே?' என்று கேட்க, 'ஸ்ரிய꞉பதியை உபாயோபேயமென்று அறுதியிட்டிருப்பது, நெடுங்காலம் இழந்துகிடந்த வஸ்துவைக் காட்டித்தந்த ஆசார்யன் பக்கலிலே கனக்க விஶ்வாஸமுண்டாயிருப்பது, அருளிச்செய்த ஸ்ரீபாஷ்யத்தின்படியே எம்பெருமானார் தர்ஶநமே ஸித்தாந்தமென்றிருப்பது, ஸ்ரீராமாயணத்தாலே பகவத்குணாநுஸந்தானம் பண்ணுவது, ஆழ்வார்களருளிச் செயல்களாலே போதுபோக்குவது; ஶரீர விஶ்லேஷம் பிறந்தால் ஸந்தேஹிக்க வேண்டா; *மீட்சியின்றி வைகுந்தமாநகர் மற்றது கையதுவே' என்று அருளினார்; ஆகையாலே, உபாயோபேயநிர்ணயமும், ஆசார்ய விஶ்வாஸமும், தர்ஶந விஶ்வாஸமும்; பகவத்கல்யாணகுணாநுபவ பாரவஶ்யமும் உண்டாகவே ப்ராப்யஸித்தி யுண்டாமென்று உத்தரமருளிச் செய்தாராய்த்து.

நம்பிள்ளை ஸ்ரீபாதத்திலே பாண்டியநாட்டினின்றும் சில ஸ்ரீவைஷ்ணவர்கள் வந்து கண்டு 'எங்களுக்குத் தஞ்சமாயிருப்பதொரு வார்த்தை அருளிச்செய்யவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, பிள்ளையும் 'கடற்கரைவெளியை நினைத்திருங்கோள்' என்று அருளினார். அவர்களும் 'மணற்குன்றையும், நாவல்காட்டையும் நினைத்திருக்கவோ?' என்று விண்ணப்பஞ்செய்ய, பிள்ளையும் * புன்முறுவல் செய்து அருளிச் செய்தபடி:—'சக்ரவர்த்தித்திருமகன் கடற்கரையிலே விட்டிருக்கச்செய்தே ஸ்ரீவாநரவீரர்கள் ராகவார்த்தே பராக்ராந்தாராய்த் தங்களையுபேக்ஷித்துப் பெருமாளையேநோக்கிக்கொண்டு கிடக்க, இவர்கள் கண்ணுறங்குந்தனையும் தான் உறங்கி, இவர்கள் கண்ணுறங்கினவாறே அம்பறாத்தூணியை முதுகிலேகட்டித் திருக்கையிலே பிடித்த ஶார்ங்கமும் திருச்சரமுமாய் இராமுற்றும் நோக்கின சக்ரவர்த்தித் திருமகனுடைய திருவடிகளே தஞ்சமென்றிருங்கோள்' என்றருளினார்; ஆகையாலே, ஸ்வரக்ஷண சிந்தையற்று நியதனாகவே ஸர்வரக்ஷகன் கைகொண்டு ரக்ஷிக்குமென்கிறது.

பிள்ளையை ஒருவன் 'எம்பெருமானையொழிந்த தேவதாந்தரங்களை பஜிக்கலாகாதென்கிற நீங்கள் நித்யநைமித்திகாதிகளிலே அக்நீந்த்ராதி தேவதைகளைப் பஜிப்பானென்? ஆலயங்களைப் பஜியாதொழிவானென்?' என்ன, பிள்ளையும் 'வாராய், அக்நிஹோத்ராக்நியை உபாஸித்தும் ஶ்மஶாநாக்நியை நிவர்த்திக்கும் போருகிறாப்போலே, இரண்டுக்கும் வாசி; எங்ஙனேயென்னில்:—நித்யாதிகளில் பகவத்ப்ரகாரபுத்யா பண்ணுகிற உபாஸநம் பகவதுபாஸநமேயாகவிஶேஷஶாஸ்த்ரம்விதிக்கையாலும், ஆலயப்ரதிஷ்டைகளில் பாராவாரதத்வவ்யத்யயம் பண்ணியிருக்கும் தாமஸ புருஷர்களாலே விருத்தாகமமந்த்ரதந்த்ரப்ரக்ரியையாலே ஸ்வதந்த்ரபுத்யா தேவதாந்தரங்கள் க்ருதப்ரதிஷ்டாகரங்களாகையாலும், இவ்விடத்திற்குப் பகவத்ப்ரகாரபுத்யாஉபாஸிக்க விதியில்லாமையாலும்; அதுவுமன்றியே, தேவதாந்தரவர்க்கந்தன்னில் தூரதோவர்ஜநீயத்வம் ருத்ரனுக்கு மிகவும் உண்டிறே; எங்ஙனேயென்னில்;—ஸத்வகுணைக்யந்த விரோதியான தமோகுணப்ரசுரனாகையாலே, நித்யாதிகளைப்போலே ஆலயங்களிலும் பகவத்ப்ரகாரபுத்யா உபாஸிக்கலாகாது; த்யாஜ்யதயாஜ்ஞாதவ்யங்களான பகவத்வ்யதிரிக்த விஷயங்கள் ஸ்வீகாரத்திற்கு உடலாகவும், உபாதேயதயா ஜ்ஞாதவ்யவான பகவத்விஷயம் த்யாகத்திற்கு உடலாகவும் கடவதோ?' என்று அருளிச்செய்தார்; ஆகையாலே, வேதாந்தவிஹித பகவத்ப்ரகாரபூத ஆலயஸ்த அந்ய தேவதா பஜநமும் அநர்த்தகரமென்கிறது.

நம்பிள்ளையை ஒருஸ்ரீவைஷ்ணவர் வந்து ஸேவித்து 'திருமேனி அற இளைத்திருந்தது' என்று விண்ணப்பஞ்செய்ய, பிள்ளையும் 'ஒன்று தேய்தல், ஒன்று வளருதலன்றோ?' என்று அருளினார்; இத்தால் ஜ்ஞாநபக்திவைராக்யங்கள் வளர * நினைந்து நைந்து உள்கரைந்துருகி ஶரீரம் தேயுமென்றபடி.

பிள்ளையை ஒருஸ்ரீவைஷ்ணவர் வந்து கண்டு 'ஆரோக்யமொன்றுமில்லையோ?' என்று கேட்க, பிள்ளையும் 'யுத்தம்பண்ணப்போகிறோமோ? பெருமாளை ஸேவித்திருக்கைக்கு வேண்டும் ஆரோக்யமுண்டு; ஒரு குறையுமில்லை' என்று அருளினார்; ஆகையாலே, ஸ்ரீவைஷ்ணவனுக்கு ஆரோக்யாபேக்ஷை வேண்டா வென்கிறது.

நம்பிள்ளை திருமேனிநோவுசாத்தியிருந்தமை கேட்டு, ஒரு ஸ்ரீவைஷ்ணவர் சென்று ஸ்ரீபாதத்திலே ஸேவித்துநோயைக்கண்டு



வெறுக்க, பிள்ளையும் அவரைக்குறித்து 'இஶ்ஶரீரத்தில்வந்தவ்யாதியை நல்விருந்து வந்ததாகக்காணும் நான் நினைத்திருப்பது' என்று அருளினார்; இத்தால், (க) "க்ருதக்ருத்யா: ப்ரதீக்ஷந்தே ம்ருத்யும்ப்ரியமிவாதிதிம்" என்கிற இதுவிறே திருவுள்ளக்கருத்து.

நம்பிள்ளை திருமேனியிலே நோவுசாத்தியெழுந்தருளியிருக்கச்செய்தே, பிள்ளையெங்களாழ்வாரும் அம்மங்கியம்மாளும் அறிவதாக எழுந்தருளி, எங்களாழ்வான் நியமநத்தாலே அம்மங்கியம்மாள் பிள்ளை பக்கல் பரிவாலே ஒருமந்த்ரத்தைத் திருக்கையிலேயிட்டுத் தொடப்புக, பிள்ளை திருமேனியை இறுய்த்தருள, அவர்களும் விஷண்ணராய் 'உம்முடைய விஷயமாக நீர் ப்ரவர்த்திக்கிலன்றோ ஸ்வரூபஹாநி? உம்முடையவிஷயமாக நாங்கள் ப்ரவர்த்தித்தால் உமக்கு ஸ்வரூபஹாநியில்லைகாணும்' என்று சிலவசநங்களைப்படிக்க, 'எனக்கும் போம்: சிலவசநங்களையன்றோ நீங்கள் விஶ்வஸித்திருக்கிறது? நானும் ஒரு வசநத்தைத் தஞ்சமென்றிருப்பன் காணுங்கோள்' என்ன, அவர்களும், 'அதுவென்? சொல்லிக்காணீர்' என்ன, பிள்ளையும் 'சீயர் தம் சாமதஶையிலே த்வயமொழிந்த மந்த்ரங்களோடு ஶிவபஞ்சாக்ஷரம் முதலான க்ஷுத்ரமந்த்ரங்களோடு ஒருவாசியில்லை யென்றருளினார்,' என்ன, அவர்களும் 'பிள்ளை! திருமந்த்ரம் செய்வதென்?' என்ன, பிள்ளையும் 'அதுதான் செய்வதென்? விவரண விவரணிபாவேந த்வயாந்தர்கதம்' என்ன, அவர்களும் 'ஆகில், த்வயத்தைக்கொண்டு செய்யக் குறை என்?' என்ன, இவரும் 'விடாய்த்தவன் *விலவறத் தண்ணீர்குடிக்குமாபோலே யிருப்பதொன்றிறே யிது; ஆகையாலே, ஸ்வவ்யாதிஶாந்த்யர்த்தமான ப்ரபதநமும் ஸ்வரூபஹாநி; பரவிஷய வ்யாதிஶாந்த்யர்த்த ப்ரபதநமும் ஸ்வரூபஹாநி; எங்ஙனே யென்னில்:—ஸ்வவிஷயமாக ப்ரவர்த்திக்கில் ஸ்வஸ்வரூபபாரதந்த்ர்ய தூஷணமாமித்தனை; பரவிஷயமாக ப்ரவர்த்திக்கில் பரஜ்ஞாநபரஶக்திகளுக்குத் தூஷணமாம்' என்று அருளினார்; ஆகையால், தொடக்குழையும்பூப்போலே மந்த்ராந்தர ஸ்பர்ஶம் பொறாத த்வயைகநிஷ்டாதிஶயமும், த்வயத்தை மற்றொன்றுக்கும் ஸாதநமாக்கிப் பிசக்கி முசிக்கப் பெறாமையும், ஸ்வபரவிஷயவ்யாதிஶாந்த்யர்த்த ப்ரபதநதோஷவிஶேஷமும் சொல்லப்பட்டதிறே.

---

(க) 𑌕𑍃𑌤𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌤𑍀𑌕𑍍𑌷𑌨𑍍𑌤𑍇 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑌿𑌵𑌾𑌤𑌿𑌥𑌿𑌮𑍍॥

அநந்தரம் பிள்ளைக்குத் திருமேனிவாட்டந் தீர்ந்து பண்டுபோலே ஆரோக்யமுண்டாய் ஸ்ரீபாதத்தில் முதலிகளுக்குத் தர்ஸநதாத்பர்யங்களை ப்ரஸாதித்துக்கொண்டு ஸுகமே எழுந்தருளியிருக்கும் நாளிலே, கூரத்தாழ்வானுடைய திருப்பேரனான நடுவில்திருவீதிப்பிள்ளை பட்டர், நம்பிள்ளையுடைய ஜ்ஞாநபக்திவைராக்யங்களையும், பாகவத ஸம்ருத்தியையும், லோகபரிக்ரஹத்தையும், ஶிஷ்யஸம்பத்தையும் கண்டு பொறுக்கமாட்டாமல் கடிகடியென்றுகொண்டு போருவாராயிருப்பர். அக்காலத்தில் அந்தப் பட்டர் ராஜாஸ்தாநத்திற்கு எழுந்தருளாநிற்க, வழியிலே பின்பழகியபெருமாள்சீயரைக் கண்டு ‘சீயா! நாம் ராஜகோஷ்டிக்குப் போகிறோம்; கூடவாரும்’ என்று அழைக்க, இவரும் ‘நம் பரமாசார்ய வம்ஶ்யரன்றோ?’ என்று பட்டருடனே ராஜாஸ்தாநத்தேற எழுந்தருள, ராஜாவும் பட்டரை எதிர்கொண்டு பஹுமாநம்பண்ணி ஆஸநத்திலே எழுந்தருளுவித்து ஸேவித்துக்கொண்டு பெரிய திருவோலக்கமாகவிருந்து, தான் பஹுஶ்ருதனைகையாலும் வ்யுத்பந்நனைகையாலும் பட்டருடைய வைதுஷ்யஶோதநார்த்தமாக ‘பட்டரே! (க)“ஆத்மாநம்மாநுஷம்மந்யே ராமந்தஶரதாத்மஜம்” என்று பரத்வந்தோன்றாமல் வர்த்திக்கிற பெருமாள் ஜடாயுவைக்குறித்து(உ) “மச்சலோகாநநுத்தமாந்” என்று மோக்ஷங்கொடுத்தபடி எங்ஙனே?’ என்றுகேட்க, பட்டரும் அதற்கு உத்தரமருளிச்செய்யச் சிறிதுவிசாரிக்கவேண்டியிருக்க, அவ்வளவிலே ராஜாவுக்கு வேறேபராக்காக பட்டரும் சீயரைப்பார்த்து ‘சீயா! பிள்ளை பெரியவுடையாருக்குப் பெருமாள் மோக்ஷங்கொடுத்தருளினதை எப்படி நிர்வஹிப்பர்?’ என்ன, சீயரும் (ந) “ஸத்யேநலோகாஞ்ஜயதி” என்ற ஶ்லோகங்கொண்டு நிர்வஹித்தருளுவர்’ என்ன, பட்டரும் ‘ஆமோ!’ என்று அத்தைத் திருவுள்ளத்திலே யோஜித்து ‘ஒக்கும்’ என்று எழுந்தருளியிருக்க, ராஜாவும் அபிமுகமாகத் திரும்பி ‘பட்டரே! நாம்கேட்டதற்கு உத்தரம் அருளிச்செய்தீரில்லையே!’ என்ன, பட்டரும் ‘நீர் பராக்கடித்திருக்க, நான்சொல்லலாவதொரு அர்த்தமுண்டோ? ஸமாஹிதமநா

(க) ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தஶரதாத்மஜம் ॥

(உ) மயா த்வம் ஸமநுஜ்ஞாதோ கச்ச லோகாநநுத்தமாந் ॥ (ந) ஸத்யேந லோகாந் ஜயதி ॥



வாய்க் கேளீர்’ என்று ‘(ச) “ஸத்யேநலோகாஞ்ஜயதி தீநாந்தாநேந ராகவ: - குருந்ஶுஶ்ருஷயாவீரோ தநுஷாயுதிஶாத்ரவாந்” என்கிற ஶ்லோகத்தைப் பட்டர் அருளிச்செய்ய, ராஜா கேட்டு ஸாதரம் ப்ரீதனாய் ‘தேவரீர் அருளிச்செய்தது ஒக்கும்’ என்று ஶிர:கம்பம்பண்ணி வணங்கி அடிக்கடிகொண்டாடி, அநர்க்கங்களான அநேக ஆபரணங்களும் அநேகவஸ்த்ரங்களும் பஹுதநங்களும் எல்லாவற்றையும் கொடுத்துப் பஹுமதித்து, தான் நிருத்தரனாய்ப் பட்டர்திருவடிகளிலேவிழுந்து ஸேவித்து ‘கோயிலேற எழுந்தருளும்’ என்று ஸத்கரித்து விட, பட்டரும், ராஜாகொடுத்த வஸ்த்ரபூஷணங்களையும் தநங்களையும் அங்கீகரித்து, அங்கிலும் புறப்பட்டுச் சீயர்திருக்கையைபிடித்துக்கொண்டு ‘சீயரே! என்னையும் இந்தத்தநத்தையும் பிள்ளை திருவடிகளிலே கொண்டுபோய்க் காட்டிக்கொடும்’ என்று போர ஆர்த்தியோடே அநுவர்த்தித்துச் சொல்ல, சீயரும் பட்டர் அருளிச்செய்தபடியே பிள்ளைகோஷ்டியிலே கொண்டுபோய்க் காட்டிக்கொடுக்க, பிள்ளையும் தம் பரமாசார்ய வம்ஶ்யரான நடுவில்திருவீதிப்பிள்ளையை ஸேவித்து மிகவும் ஆதரித்து ‘இது ஏது ஐயா?’ என்று கேட்டருள, பட்டரும் பிள்ளை திருமுகமண்டலத்தைப் பார்த்து ‘தேவரீருடைய திவ்யஸூக்தியில் பதினாயிரங்கோடியிலே ஒன்றுக்குப்பெற்ற தநம் இது; ஆகையாலே, அடியேனையும் இந்தத்ரவ்யங்களையும் அங்கீகரித்தருளவேணும்’ என்ன, பிள்ளையும் ‘ஆகிறது என்? கூரத்தாழ்வான்திருப்பேரனான நீர் இப்படிசெய்ய ப்ராப்தமன்றுகாணும்’ என்ன, பட்டரும் ‘நித்யஸம்ஸாரியான ராஜா தேவரீருடையதிவ்யஸூக்தியிலே சிந்தினசொல்லுக்குத் தோற்றுக் கொடுத்த கொடை இது; ஆனபின்பு, கூரத்தாழ்வான்குடல்துடக்கிற் பிறந்த அடியேன் அந்தப்ரபாவத்திற்குத் தகுதியாகத் தேவரீருக்கு ஸமர்ப்பிக்கலாவது ஒன்றுமில்லையேயாகிலும், அசலகத்தேயிருந்தும் இத்தனைநாள்தேவரீர் திருவடிகளை இழந்துகிடந்தயாத்ம மன்றிக்கே தேவரீர்வைபவத்தைக்கண்டு (ரு) “அஸூயாப்ரஸவபூ:” என்கிறபடியே அஸூயைபண்ணித் திரிந்த இவ்வாத்மாவைத் தேவரீருக்குஸமர்ப்பிக்கை யல்லது வேறே எனக்கு ஒருகைம்முதலில்லை! ஆகையாலே, அடியேனை அவஶ்யம் அங்கீகரித்தருளவேணும்’

(ச) ஸத்யேந லோகாந் ஜயதி தீநாந் தாநேந ராகவ: ।
குரூந் ஶுஶ்ரூஷயா வீரோ தநுஷா யுதி ஶாத்ரவாந் ॥

(ரு) அஸூயாப்ரஸவபூ: ॥

என்று கண்ணுங்கண்ணீருமாய்க்கொண்டு பிள்ளை திருவடிகளிலே ஸேவித்துக்கிடக்க, பிள்ளையும் பட்டரைவாரியெடுத்து அணைத்துக்கொண்டு விஶேஷகடாக்ஷஞ் செய்தருளி, தம்திருவுள்ளத்திலே தேங்கிக்கிடக்கிற அர்த்தவிஶேஷங்களெல்லாவற்றையும் ஒன்றுந்தப்பாமல் இவர்க்கு ப்ரஸாதித்தருள, பட்டரும் க்ருதார்த்தராய் ஒருக்ஷணமும்பிரியாமல் பிள்ளைஸந்நிதியிலே ஸதாபநுவம்பண்ணிக்கொண்டு ஸேவித்துக்கொண்டு ஸந்துஷ்டராய் எழுந்தருளியிருந்தார்.

அக்காலத்திலே பட்டருக்கு ஒருரு திருவாய்மொழிக்கு அர்த்தம் ப்ரஸாதித்தருள, பட்டரும் பிள்ளை அருளிச்செய்தது ஒன்றுந் தப்பாமல் பதறாமல் கேட்டுத்தரித்து இராமுற்ற எழுதித் தலைக்கட்டினவாறே பட்டர் தாம் எழுதின க்ரந்தங்களைப் பிள்ளைஸந்நிதியிலேகொண்டு போய் வைக்க, பிள்ளையும் 'இது என்?' என்றுகேட்க, பட்டரும் 'தேவரீர் இந்தஉரு திருவாய்மொழிக்கு நிர்வஹித்த கட்டளை' என்ன, பிள்ளையும் 'ஆமோ!' என்று க்ரந்தங்களை அவிழ்த்துப் பார்த்தவளவில் ஸபாதலக்ஷக்ரந்தமாய்மஹாபாரதஸங்க்யையாயிருக்க, அத்தைக்கண்டு பிள்ளை பெருக்கவ்யாகுலப்பட்டுப் பட்டரைப்பார்த்து 'நம்முடைய அநுமதியின்றிக்கே நாட்டுக்குப் பாட்டுரையாய்படி நீர் நினைத்தபடியே திருவாய்மொழியை வெளியிடுவானென்?'' என்ன, பட்டரும் 'தேவரீர் அருளிச்செய்த திவ்யஸூக்தியை எழுதினேன்? அதொழியக் கால் கொம்பு சுழி ஏற எழுதினது உண்டாகில் பார்த்தருளவேணும்' என்ன, பிள்ளை பட்டரைப் பார்த்து 'வாரீர்! திருவாய்மொழிநிமித்தமாக நாம் வாக்காலே சொன்னத்தை எழுதினீராகில், நம்முடைய சித்தஸ்தமானபொருளை எழுதப் பற்றீரோ?'' என்று வெறுத்து அருளிச்செய்து, 'உடையவர் காலத்திலே திருக்குருகைப்பிரான்பிள்ளான் திருவாய்மொழிக்கு ஸ்ரீவிஷ்ணுபுராணப்ரக்ரியையாலே ஆறாயிரமாக இடுகைக்கு உடையவரை அநுமதிகொள்ளப்பட்ட யத்நத்திற்கு மட்டுமுடிவில்லை; ஆனபின்பு, நம்முடைய காலத்திலே நம்மையுங்கேளாமல் லக்ஷத்திருபத்தையாயிரங் க்ரந்தமாக இப்படி பரக்க எழுதினால், ஒரு ஶிஷ்யாசார்ய க்ரமத்துக்கு அஸம்ப்ரதாயமாய்ப் போங்காணும்' என்று அருளிச்செய்து, அவர் கையிலும் க்ரந்தங்களை வாங்கிக்கொண்டு நீரைச்



சொரிந்து கறையானுக்குக் கொடுக்க, அவை அன்றே ம்ருத்தாய்ப் போய்த்து.

அநந்தரம், பிள்ளை தமக்குப்ரியஶிஷ்யராய்த் தம்பக்கலிலே அகிலார்த்தங்களையும் அலகலகாகக் கற்றிருக்கும் பெரியவாச்சான்பிள்ளையை 'திருவாய்மொழிக்கு ஒரு வ்யாக்யாநம் பண்ணும்' என்று நியமித்தருள, பெரியவாச்சான் பிள்ளையும் ஸ்ரீராமாயணஸங்க்யையிலே ஒருவ்யாக்யானஞ் செய்தருளினார்.

பின்னையும் நம்பிள்ளை ஒருதிருவாய்மொழிக்கு அர்த்தம் நிர்வஹிக்கிற கட்டளையை, அந்தரங்க ஶிஷ்யரான வடக்குத் திருவீதிப்பிள்ளை பகலெல்லாங் கேட்டுத்தரித்து ராத்திரியிலே எழுதித்தலைக்கட்டினவாறே, அத்தைப்பிள்ளை ஸந்நிதியிலே கொண்டுபோய் வைக்க, பிள்ளையும் 'இது என்?' என்று கேட்டருள, அவரும் 'தேவரீர் இந்தவுரு திருவாய்மொழி நிர்வஹித்த கட்டளை' என்று விண்ணப்பஞ் செய்ய, பிள்ளையும் ஸ்ரீகோஶத்தை அவிழ்த்துப்பார்த்தருள, அதிஸங்க்ஷேபமுமன்றிக்கே அதிவிஸ்தரமுமன்றிக்கே ஆனை கோலஞ் செய்து புறப்பட்டாப்போலே மிகவும் அழகாய் ஶ்ருதப்ரகாஶிகை கட்டளையிலே முப்பத்தாறாயிரமாயிருக்கையாலே, பிள்ளையும் அத்தைக்கண்டு போரப்ரீதராயருளி, வடக்குத்திருவீதிப்பிள்ளையைப் பார்த்து 'நன்றாக எழுதினீர்; ஆகிலும், நம்முடைய அநுமதியின்றிக்கே எழுதினீர்; ஆகையாலே, க்ரந்தங்களைத் தாரும்' என்று அவர் திருக்கையிலும் வாங்கிக்கட்டி உள்ளே வைத்தருளினார். இத்தைக்கண்டு ஈயுண்ணி மாதவப்பெருமாள், நெடுநாள் நம்பெருமாளை ப்ரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து வேண்டிக்கொள்ள, ஒருநாள் பெருமாள் அர்ச்சகமுகேந ஈயுண்ணிச்சிறியாழ்வானப்பிள்ளையை அருளப்பாடிட்டருளி 'என் காணும் நம்மைப் பஹுவாகஉபாஸியாநின்றீர்?' என்று கேட்டருள, ஈயுண்ணி மாதவப்பெருமாளும் 'ஸ்வாமீ! நம்பிள்ளை திருக்கையிலே திருவாய்மொழிக்கு ஈடு முப்பத்தாறாயிரமென்று ஒருவ்யாக்யான க்ரந்தம் இருக்கிறது; அத்தை அடியேனுக்கு அவர் இரங்கி ப்ரஸாதிக்கும்படி நியமித்தருளவேணும்' என்று ப்ரார்த்திக்க, பெருமாளும் 'அப்படியே செய்கிறோம்' என்று திருவுள்ளம் பற்றியிருக்கச்செய்தே, நம்பிள்ளையும் முதலிகளுமாகப் பெருமாளைத் திருவடி தொழச் சென்றவாறே

பெருமாள் பிள்ளையைக் குறித்து தீர்த்தம் திருமாலை திருப்பரியட்டம் சடகோபனும் ப்ரஸாதித்தருளி, அர்ச்சகமுகேந 'பிள்ளை! ஈடு முப்பத்தாறாயிரத்தை ஈயுண்ணிச் சிறியாழ்வானப்பிள்ளைக்கு ப்ரஸாதியும்' என்று திருவுள்ளமாக, பிள்ளையும் மஹாப்ரஸாத மென்று பெருமாள் அருளப்பாட்டை ஶிரஸாவஹித்துக்கொண்டு புறப்பட்டுத் தம் திருமாளிகையிலே எழுந்தருளி, தமக்கு அபிமதஶிஷ்யரான ஈயுண்ணி மாதவப் பெருமாளென்கிற சிறியாழ்வானப்பிள்ளைக்கு ஈடு முப்பத்தாறாயிரமுங் கொடுத்து வாழ்வித்தருளினர்.

பிள்ளைவைபவத்தை,

"இந்திரன்வார்த்தையு நான்முகன்வார்த்தையு மீசனுடன்
கந்தன்சொல்வார்த்தையுங் கற்பவரா ரிந்தக்காசினிக்கே
நந்தினமுத்தெறிநம்பூர்வரதர்தம்மாளிகையிற்
சிந்தினவார்த்தைகொண்டேசிலநாடுதிறைக்கொள்வரே"

என்று ஸ்ரீபாதத்து முதலிகள் அநுஸந்தித்தார்களிறே.

குருபரம்பராப்ரபாவம்

ஸம்பூர்ணம்.

---

வாழி பதின்மருட ணுண்டாள் மதுரகவி
வாழிய நாதன்முதலா மாமறையோர்—வாழி
யொருக்கோலரை நெருக்கியோட்டு மெதிராசன்
திருத்தாள் வணங்கினர் சீர்.

---

ஸ்ரீ

# குருபரம்பராவிவரணம்.

ஸ்ரியஃபதியாய் ஸ்ரீவைகுண்டநிகேதநனாய் நித்யமுக்தாநுபாவ்யனாய் நிரதிஶயாநந்தயுக்தனாயிருக்கிற ஸர்வேஶ்வரன், அந்த நித்யஸூரிகளோபாதி தன்னை அநுபவித்துநித்யகைங்கர்யரஸராய் வாழுகைக்கு ப்ராப்தியுண்டாயிருக்கச்செய்தேயும் அத்தையிழந்து (க) "அஸந்நேவஸபவதி" என்கிறபடியே அஸத்கல்பராய்ஸ்ஹாரமோக்ஷஶூந்யராய் (உ) "ஸம்யுக்தமேதம்க்ஷரமக்ஷரஞ்ச" என்கிறபடியே திலதைலவத்தாருவஹ்நிவத்துர்விவேசத்ரிகுணத்ரவ்யயாநாத்யசித்ஸம்பந்ததிரோஹிதஸ்வப்ரகாஶராய்க்கிடக்கிற ஸம்ஸாரிசேதநருடைய இழவை அநுஸந்தித்து, (௩) "ஸஏகாகீநரமேத" என்றும், (௪) "ப்ருஶம்பவதிதுஃகிதஃ" என்றும்சொல்லுகிறபடியே அத்யந்தவ்யாகுலசித்தனாய், இவர்கள்கரணகளேபரங்களையிழந்து (௫) "஛ிந்நபக்ஷஇவாண்டஜஃ" என்கிறபடியே இறகொடிந்தபக்ஷிபோலேகிடக்கிறதஶையிலே (௬) "நாமரூபேவ்யாகரவாணி" என்றும், "அந்நாள்நீதந்த ஆக்கையின்வழி" என்றும் சொல்லுகிறபடியே இவர்களுக்குக் கரணகளேபரங்களைக்கொடுத்து, அவற்றைக்கொண்டு வ்யாபரிக்கைக்குஈடான ஶக்திவிஶேஷங்களையுங்கொடுத்து, தேஹாத்மாபிமாநமும் அந்யஶேஷத்வமும் ஸ்வஸ்வாதந்த்ர்யமுமானபடுகுழியிலேவிழுந்து அநர்த்தப்படாதேதன்னை ஆஶ்ரயித்து உஜ்ஜீவிக்கைக்கு உடலாக (௭) "அபதோஷமபும்பவம்" என்கிறபடியே அபௌருஷேயமாய் அதஏவ புருஷஶேமுஷீதோஷமாலிந்யவிநிர்முக்தமாய் (௮) "வேதஶாஸ்

(க) അസന്നേവ സ ഭവതി ॥ (உ) സംയുക്തമേതത് ക്ഷരമക്ഷരം ച ॥ (௩) സ ഏകാകീ ന രമേത ॥
(௪) ഭൃശം ഭവതി ദുഃഖിതഃ ॥ (௫) ഛിന്നപക്ഷ ഇവാണ്ഡജഃ ॥
(௬) നാമരൂപേ വ്യാകരവാണി ॥ (௭) അപദോഷമപൌരുഷം ॥ (௮) വേദശാസ്ത്രാത് പരം നാസ്തി ॥

த்ராத்பரம்நாஸ்தி'' என்கிறபடியே தனக்குமேற்பட்டதொரு
ஶாஸ்த்ரமின்றிக்கேயிருப்பதாய் ஸ்வத:ப்ரமாணமான வேதத்தை
(௧) ''யோவைவேதாம்ஶ்சப்ரஹிணோதி'' என்றும் ''அருமறையை
வெளிப்படுத்தவம்மான்'' என்றும் சொல்லுகிறபடியே நாராயண
த்வப்ரயுக்தமான தன்உதாரத்தெறிப்பாலே தானேப்ரவர்த்திப்பித்த
விடத்திலும் ததர்த்தநிர்ணயந்தான் ஸர்வஶாகாப்ரத்யயந்யாயாதி
ஸாபேக்ஷமாயிருக்கையாலே, 'அல்பமதிகளுக்கு அர்த்தநிர்ணயம்
பண்ணுகை அரிது' என்றும், 'இம்முகத்தாலே இவர்கள் திருந்திக்
கரைமரஞ்சேருகை அரிது' என்றும். 'உபதேஶபரம்பரையாலே
இவர்களைத்திருத்தி உஜ்ஜீவிப்பிக்கை எளிது' என்றும் திருவுள்
ளம்பற்றி, (௨) '' ஆசார்யாணமஸாவஸாவித்யாபகவத்த:'' என்று
உபதேஶந்தான் பகவான்தான் அடியாக வந்ததாயிருக்குமதாகை
யாலே அதுக்காக ''முன்னைவண்ணம்பாலின்வண்ணம்'' என்றும்,
(௩) ''ஶஶிவர்ணம்'' என்றும், ''வல்லனெம்பிரான்விட்டுவே'' என்
றும் சொல்லுகிறபடியே ஒருமந்த்ரத்தை உபதேஶிக்குமிடத்தில் ததுப
தேஷ்டாவுக்கு வடிவாயிருந்துள்ள ஶுத்தஸ்வபாவவத்வ அகடிதகடனா
ஸாமர்த்யாதிகளையுடையனாய், (௪) ''பஹுதாவிஜாயதே'' என்றும்
''சென்மம்பலபலசெய்து'' என்றும் சொல்லுகிறபடியே பலவகைப்பட்
டிருந்துள்ள விபவங்களில் வைத்துக்கொண்டு (௫) ''மத்யேவிரிஞ்சிகிரி
ஶம் ப்ரதமாவதார:'' என்னும்படி ப்ரதமாவதாரமானமஹாவிஷ்ணு
வாய்க்கொண்டு, இவ்வண்டாந்தர்வர்த்தியான ஸர்வலோகத்துக்கும்
அவ்வருகாயிருந்துள்ள ஸ்ரீவிஷ்ணுலோகத்திலே (௬) 'ஜகதுபக்ரு
தயேஸோயமிச்சாவதார:'' என்கிறபடியே இந்தஜகத்தை வாழ்விப்ப
தாக(௭)''ஶ்ரோணாநக்ஷத்ரம் விஷ்ணுர்தேவதா'' என்னும்படி விஷ்ணு
தேவதாகமான திருவோணமென்கிற திருநக்ஷத்ரத்திலே ஸ்வேச்சை
யாலே ஸ்வயமேவ திருவவதரித்தருளி, உடனே ''இறையு மகலகில்

---

(௧) യോ വൈ വേദാംശ്ച പ്രഹിണോതി ॥ (௨) ആചാര്യാണാമസാവസാവിത്യാ ഭഗവത്തഃ ॥ (௩) ശശിവർണം ॥

(௪) ബഹുധാ വിജായതേ ॥ (௫) മദ്ധ്യേ വിരിഞ്ചിഗിരിശം പ്രഥമാവതാരഃ । (௬) ജഗദുപകൃതയേ സോऽയമിച്ഛാവതാരഃ ॥

(௭) ശ്രോണാ നക്ഷത്രം വിഷ്ണുർദേവതാ ॥



லேன்'' என்றிருக்கும் பெரியபிராட்டியாரையும் அந்த ஸ்ரீவிஷ்ணு
லோகத்திலேதானே (௧) ''பத்மேஸ்திதாம்'' என்றும், ''தேனமரும்
பூமேல்திரு'' என்றும், (௨) ''விஷ்ணுபத்நீ'' என்றும் சொல்லுகிற
படியே அப்போது அலர்ந்த தாமரைப்பூவிலே மஹாலக்ஷ்மியென்கிற
திருநாமத்தையுடையளான ஸ்வமஹிஷியாகத்தானே திருவவதரிப்பித்
தருளி, (௩) ''தாப:புண்ட்ரஸ்ததாநாம மந்த்ரோயாகஶ்சபஞ்சம:''
என்றுரஹஸ்யத்ரயோபதேஶந்தான் தாபோர்த்வபுண்ட்ரதாஸ்யநாம
பூர்வகமாகயிருக்கிற வோபாதி (௪) ''பரம்பராமுபதிஶேத் குரூணாம்
ப்ரதமோகுரு: - ஆத்மவித்யாவிஶுத்த்யர்த்தம் ஸ்வாசார்யாத்யாம்த்வி
ஜோத்தம:'' என்றும்,(௫)''ஸஹஸ்ரபுருஷம்வாபி ஶதபூருஷமேவவா-
த்ரிஸப்தபுருஷம்வாபி த்விஸப்ததஶபூருஷம்'' என்றும், (௬) ''ஆதா
உபதிஶேத்வேதேகிலருக்வாகஸம்ஜ்ஞகம் - அஸ்மத்குருப்ய இத்யாதி
வாக்யத்ரயமரித்தம'' என்றும் இத்யாதிகளில் குருபரம்பராஸங்க்ரஹ
மாயிருந்துள்ள ''அஸ்மத்குருப்யோநம:'' இத்யாதிவாக்யத்ரயோப
தேஶபூர்வகமாயிருக்குமாகையாலே (௭) ''ஸ்ரீவிஷ்ணுலோகேபகவாந்
விஷ்ணுர்நாராயணஸ்ஸ்வயம் - ப்ரோக்தவாந்மந்த்ரராஜாதீந்லக்ஷ்ம்யா
ஸதாபாதி பூர்வகம'' என்றும் (௮) 'விஷ்ணுமாதிகுரும்லக்ஷ்ம்யா:மந்
த்ராத்கப்ரதம்பஜே'' என்றுஞ்சொல்லுகிறபடியேஅவளுக்குத்தாபோர்

---

(௧) പദ്മേസ്ഥിതാം ॥ (௨) വിഷ്ണുപത്നീ ॥

(௩) താപഃ പുണ്ഡ്രസ്തഥാ നാമ മന്ത്രോ യാഗശ്ച പഞ്ചമഃ ॥

(௪) പരമ്പരാമുപദിശേദ്ഗുരൂണാം പ്രഥമോ ഗുരുഃ । ആത്മവിദ്യാവിശുദ്ധ്യർത്ഥം സ്വാചാര്യാദ്യാം ദ്വിജോത്തമഃ ॥

(௫) സഹസ്രപുരുഷം വാപി ശതപുരുഷമേവ വാ । ത്രിസപ്തപുരുഷം വാപി ദ്വിസപ്തദശപുരുഷം ॥

(௬) ആദാവുപദിശേദ്ദേവി ലഘ്വാകസംജ്ഞകം । അസ്മദ്ഗുരുഭ്യ ഇത്യാദിവാക്യത്രയമിദം ॥

(௭) ശ്രീവിഷ്ണുലോകേ ഭഗവാൻ വിഷ്ണുർനാരായണസ്സ്വയം । പ്രോക്തവാൻ മന്ത്രരാജാദീൻ ലക്ഷ്മ്യാസ്സാവാദിപൂർവകം ॥

(௮) വിഷ്ണുമാദിഗുരും ലക്ഷ്മ്യാഃ മന്ത്രാത്പ്രഥമം ഭജേ ॥

த்த்வபுண்ட்ரதாஸ்யநாமப்ரதாந பரஸ்ஸரமான இந்தவாக்யத்ரயோப தேஶபூர்வகமாக ஸ்வரூபோபாய புருஷார்த்தயாதாத்ம்யப்ரதிபாதக மான ரஹஸ்யத்ரயத்தைத் தானே நேராக உபதேஶித்தருளி, அப்படியே (க) ''ஸோபதிஷ்டவதீப்ரீத்யா தாபபுண்ட்ராதிபூர்வ கம் - விஷ்ணுலோகேऽவதீர்ணாய ப்ரியாயஸததம்ஹரேஃ - ஸேநேஶா யப்ரியா விஷ்ணோர் மூலமந்த்ரத்வயாதிகம்'' என்கிறபடியே அவளைக் கொண்டு அந்த விஷ்ணுலோகத்திலேதானே அவதீர்ணரான ஸேனை முதலியாருக்கு இந்த க்ரமத்திலே இந்த ரஹஸ்யத்ரயோபதேஶத் தைப் பண்ணுவித்து, பின்னையும் அப்படியே (உ) ''ஸேநேஶஸ்ஸ்வய மாகத்ய ப்ரீத்யா ஸ்ரீநகரீம்ஶுபாம் - ஶடகோபாயமுநயே திந்த்ருணீ மூலவாஸிநே - தாபாதிபூர்வகம்மந்த்ர த்வயஶ்லோகாந் பராந்க்ர மாத் - விஷ்ணுபத்ந்யாமஹாலக்ஷ்ம்யாஃநியோகாதுபதிஷ்டவாந்'' என் கிறபடியே இந்த க்ரமத்திலேதானே ஸேனைமுதலியாரைக் கொண்டு திருநகரியிலே திருப்புளியாழ்வாரடியிலே எழுந்தருளியிருக்கிற ஆழ் வாருக்கு ரஹஸ்யத்ரயோபதேஶத்தைப் பண்ணுவித்து, உடனே அவர்க்கு மயர்வறமதிநலமருளி, (ங) ''புநஶ்சநாதமுநயே பஞ்சஸம்ஸ் காரபூர்வகம் - பட்டநாதப்ரப்ருதிபிர் நிர்மிதைர்திவ்யயோகிபிஃ - திவ்யைர்விம்ஶதிஸங்க்யாகைஃ ப்ரபந்தைஸ்ஸஹதேஶிகஃ - ஸ்வோக் தத்ராவிடவேதாநாம் சதுர்ணாமுபதேஶக்ருத்'' என்கிறபடியே ஆழ்

(க) 𑌸𑍋𑌪𑌦𑌿𑌷𑍍𑌟𑌵𑌤𑍀 𑌪𑍍𑌰𑍀𑌤𑍍𑌯𑌾 𑌤𑌾𑌪𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌾𑌦𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌮𑍍। 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌲𑍋𑌕𑍇𑌽𑌵𑌤𑍀𑌰𑍍𑌣𑌾𑌯 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌯 𑌸𑌤𑌤𑌂 𑌹𑌰𑍇𑌃 𑌸𑍇𑌨𑍇𑌶𑌾𑌯 𑌪𑍍𑌰𑌿𑌯𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑍍𑌮𑍂𑌲𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌦𑍍𑌵𑌯𑌾𑌦𑌿𑌕𑌮𑍍॥

(உ) 𑌸𑍇𑌨𑍇𑌶𑌸𑍍𑌸𑍍𑌵𑌯𑌮𑌾𑌗𑌤𑍍𑌯 𑌪𑍍𑌰𑍀𑌤𑍍𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌨𑌗𑌰𑍀𑌂 𑌶𑍁𑌭𑌾𑌮𑍍। 𑌶𑌠𑌕𑍋𑌪𑌾𑌯 𑌮𑍁𑌨𑌯𑍇 𑌤𑌿𑌨𑍍𑌤𑍍𑌰𑌿𑌣𑍀𑌮𑍂𑌲𑌵𑌾𑌸𑌿𑌨𑍇॥ 𑌤𑌾𑌪𑌾𑌦𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌂 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌦𑍍𑌵𑌯𑌶𑍍𑌲𑍋𑌕𑌾𑌨𑍍 𑌵𑌰𑌾𑌨𑍍 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍। 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌪𑌤𑍍𑌨𑍍𑌯𑌾 𑌮𑌹𑌾𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾𑌃 𑌨𑌿𑌯𑍋𑌗𑌾𑌦𑍁𑌪𑌦𑌿𑌷𑍍𑌟𑌵𑌾𑌨𑍍॥

(ங) 𑌪𑍁𑌨𑌶𑍍𑌚 𑌨𑌾𑌥𑌮𑍁𑌨𑌯𑍇 𑌪𑌞𑍍𑌚𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌮𑍍। 𑌭𑌟𑍍𑌟𑌨𑌾𑌥𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌿𑌭𑌿𑌰𑍍𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌤𑍈𑌰𑍍𑌦𑌿𑌵𑍍𑌯𑌯𑍋𑌗𑌿𑌭𑌿𑌃॥ 𑌦𑌿𑌵𑍍𑌯𑍈𑌰𑍍𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌸𑌙𑍍𑌖𑍍𑌯𑌾𑌕𑍈𑌃 𑌪𑍍𑌰𑌬𑌨𑍍𑌧𑍈𑌸𑍍𑌸𑌹𑌦𑍇𑌶𑌿𑌕𑌃। 𑌸𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌦𑍍𑌰𑌾𑌵𑌿𑌡𑌵𑍇𑌦𑌾𑌨𑌾𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌣𑌾𑌮𑍁𑌪𑌦𑍇𑌶𑌕𑍃𑌤𑍍॥



வாரைக்கொண்டு அத்திருநகரியில் திருப்புளியாழ்வாரடியிலேதானே நாதமுநிகளுக்கு இந்தக்ரமத்திலே ரஹஸ்யத்ரயோபதேஶத்தைத் திவ்யப்ரபந்தோபதேஶஶிரஸ்கமாகப் பண்ணுவித்து, பின்னையும் அப்படியே அந்த நாதமுனிகளைக் கொண்டு உய்யக்கொண்டார் தொட க்கமானார்க்கும், உய்யக்கொண்டாரைக்கொண்டு மணக்கால்நம்பி தொடக்கமானார்க்கும், மணக்கால் நம்பியைக் கொண்டு ஆளவந்தார் தொடக்கமானார்க்கும், ஆளவந்தாரைக்கொண்டு பெரியநம்பிதொடக்க மானார்க்கும், பெரியநம்பியைக்கொண்டு உடையவர்க்கும் இந்தக்ரமத் திலே ரஹஸ்யத்ரயோபதேஶத்தைப் பண்ணுவித்து, பின்னையும் அப் படியே உடையவரைக் கொண்டு ஆழ்வான் ஆண்டான் முதலான எழு பத்துநாலு முதலிகளுக்கும் எம்பார் அருளாளப்பெருமா ளெம்பெரு மானார் தொடக்கமான எழுநூறு ஜீயர்களுக்கும் மற்றும் அநேக ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் இந்த க்ரமத்தப்பாமே ரஹஸ்யத்ரயோபதே ஶத்தைப் பண்ணுவித்து பின்னையும் அப்படியே உடையவர் தாம் தர்ஶநத்தை நிர்வஹித்துக்கொண்டு போராநிற்கிற காலத்திலே '(க) ''ப்ரீத்யாப்ருதக்ப்ருதக்ஶிஷ்யஃப்ரணமேதீஶ்வராவதி - ஸ்வார்யாத்யாந் யாவதாஜ்ஞாதம் ஶக்யந்தாவ தநுஸ்மரேத்'' என்றும், (உ) ''ப்ரத்ய ஹம் ப்ரணதைஶ்ஶிஷ்யைஃ ப்ரபாதே பத்மஸம்பவ - தத்யதாவிதிவந் நித்யம் ப்ரவக்தவ்யங்குரோஃகுலம்'' என்கிறபடியே இம்மூன்று வாக் யத்துடனே ''ஸ்ரீமதேராமாநுஜாய நமஃ'' என்கிற வாக்யந்தொடங்கி ''ஸ்ரீதராய நமஃ'' என்கிற வாக்யத்தளவான பத்து வாக்யத்தையுஞ் சேர்த்துப்†பதின்மூன்று வாக்யமாக்கி இத்தை மேலோரான நம்

(க) 𑌪𑍍𑌰𑍀𑌤𑍍𑌯𑌾 𑌪𑍃𑌥𑌕𑍍𑌪𑍃𑌥𑌕𑍍𑌶𑌿𑌷𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌣𑌮𑍇𑌦𑍀𑌶𑍍𑌵𑌰𑌾𑌵𑌧𑌿। 𑌸𑍍𑌵𑌾𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌾𑌨𑍍 𑌯𑌾𑌵𑌦𑌾𑌜𑍍𑌞𑌾𑌤𑌂 𑌶𑌕𑍍𑌯𑌂 𑌤𑌾𑌵𑌦𑌨𑍁𑌸𑍍𑌮𑌰𑍇𑌤𑍍॥

(உ) 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌹𑌂 𑌪𑍍𑌰𑌣𑌤𑍈𑌶𑍍𑌶𑌿𑌷𑍍𑌯𑍈𑌃 𑌪𑍍𑌰𑌭𑌾𑌤𑍇 𑌪𑌦𑍍𑌮𑌸𑌮𑍍𑌭𑌵। 𑌤𑌦𑍍𑌯𑌥𑌾 𑌵𑌿𑌧𑌿𑌵𑌨𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌗𑍁𑌰𑍋𑌃 𑌕𑍁𑌲𑌮𑍍॥

† பதின்மூன்று வாக்யங்களாவன:—(க) அஸ்மத்குருப்யோநம:, (உ) அஸ்மத்பரமகுருப்யோநம:, (ங) அஸ்மத்ஸர்வகுருப்யோநம:, (ச) ஸ்ரீமதேராமாநுஜாயநம:, (ரு) ஸ்ரீபராங்குஶதாஸாயநம:, (சு) ஸ்ரீமத்யாமுநமுநயேநம:, (எ) ஸ்ரீராமமிஶ்ராயநம:, (அ) ஸ்ரீபுண்டரீகாக்ஷாயநம:, (கூ) ஸ்ரீமந்நாதமுநயேநம:, (க0) ஸ்ரீமதேஶடகோபாயநம:, (கக) ஸ்ரீமதேவிஷ்வக்ஸேநாயநம:, (கஉ) ஶ்ரியைநம:, (கங) ஸ்ரீதராயநம:.

ஆசார்யர்கள் தந்தாமுக்கும் தஞ்சமாக அநுஸந்திப்பதும் தந்தாமை ஆச்ரயித்தார்க்கும் உபதேசிப்பதும் செய்யக் கடவர்கள்' என்று தாமே ஆழ்வானைக்கொண்டு நியமித்தருளி, இப்புடைகளிலே சேதநஸ்வரூபத்தைப் பல்லவிதமாக்கியும் புஷ்பிதமாக்கியும் பலபர்யந்தமாக்கியும் செய்ததுவாய்த்த செல்வனாய், * தௗக்கற்றமுதமாய், (க) "விஜ்வர:ப்ரமுமோதஹ" என்கிறபடியே உள்வெதுப்புத் தீர்ந்து நிர்வ்ருதனாயிருந்தான்.

(உ) "அந்வயாதபிசைகஸ்ய ஸம்யங்ந்யஸ்தாத்மநோஹரௌ-ஸர்வ ஏவ ப்ரமுச்யேரந்நரா: பூர்வேபரே ததா" என்றும், (ங) "அர்வாஞ்சோ யத்பதஸரஸிஜத்வந்த்வமாச்ரித்ய பூர்வே மூர்த்நாயஸ்யாந்வயமுபகதா தேசிகா முக்திமாபு:" என்றும் சொல்லுகிறபடியே முன்புள்ள முதலிகளுக்கும் பின்புள்ள முதலிகளுக்கும் ஒக்க உத்தாரகரான உடையவர், ஸர்வஜ்ஞராயிருக்கச் செய்தேயும் (ச) "ததாபிஸமயாசாரம் ஸ்தாபயந்ஸாம்ப்ரதாயிகம்" என்கிறபடியே தமக்கு ஸத்ஸம்ப்ரதாயபரிசுத்தி உண்டென்னுமிடந் தோற்ற அஸ்மத்குருப்ய இத்யாதி வாக்யத்ரயத்தையும் தாம் அநுஸந்திக்கும்போது, முந்தின வாக்யத்தில் குருபதப்ரதிபாத்யர் - பெரியநம்பி யென்றும், ஆதில் பஹுவசநப்ரதிபாத்யர் - திருக்கச்சி நம்பியும் பேரருளாளப் பெருமாளு மென்றும், இரண்டாம் வாக்யத்தில் பரமகுருபதப்ரதிபாத்யர் - ஆளவந்தாரென்றும், அதில் பஹுவசநப்ரதிபாத்யர் - தத்ஸப்ரஹ்மசாரிகளான பெரியோர்களென்றும், மூன்றாம் வாக்யத்தில் குருபதஸர்வசப்தபஹுவசந ப்ரதிபாத்யர் - மணக்கால் நம்பி தொடக்கமான மேலோரெல்லாரு மென்றும் கண்டுகொள்வது.

அப்படியே உடையவர்க்கு முன்புள்ள முதலிகளில் வைத்துக் கொண்டு பெரியநம்பி இவ்வாக்யத்ரயத்தை அநுஸந்திக்கும்போது, முந்தின வாக்யத்தில் குருபதப்ரதிபாத்யர் - ஆளவந்தா ரென்றும், இரண்டாம் வாக்யத்தில் பரமகுரு பதப்ரதிபாத்யர் - மணக்கால்நம்பி யென்றும், இரண்டிலும் பஹுவசநப்ரதிபாத்யர் - இவர்களுக்குக் குருபஸத்தியிலே ருசியை ஜநிப்பித்த ஸ்ரீவைஷ்ணவர்களும் அவர்களோடு ஸங்கதியையுண்டாக்கின ஈச்வரனு மென்றும், மூன்றாம் வாக்யத்தில் குருபத ஸர்வசப்தபஹுவசநப்ரதிபாத்யர் - உய்யக்கொண்டார் தொடங்கி ஸ்ரீய:பதியளவாயுள்ள அனைவருமென்றும் கண்டுகொள்வது.

அப்படியே ஆளவந்தார் இவ்வாக்யத்ரயத்தை அநுஸந்திக்கும்போது, குருபதப்ரதிபாத்யர் - மணக்கால்நம்பி யென்றும், த்விதீய வாக்யத்தில் பரம குருபதப்ரதிபாத்யர் - உய்யக்கொண்டா ரென்றும், இரண்டிலும் பஹுவசந ப்ரதிபாத்யர் - யதாஸம்பவம் இதில் ருசியைப் பிறப்பித்த ஸ்ரீவைஷ்ணவர்களும் ஈச்வரனு மென்றும், மூன்றாம்வாக்யத்தில் குருபதஸர்வசப்தபஹுவசந ப்ரதிபாத்யர் - ஸ்ரீமந்நாதமுநிகள் தொடங்கி ஸ்ரீதானளவாயுள்ள அனைவருமென்றும் கண்டு கொள்வது.

அப்படியே மணக்கால்நம்பி இவ்வாக்யத்ரயத்தை அநுஸந்திக்கும் போது, ப்ரதமத்விதீயவாக்யஸ்த குருபரமகுருபதப்ரதிபாத்யர் - உய்யக்கொண்டாரும் நாதமுநிகளுமென்றும், இரண்டிலும் பஹுவசந ப்ரதிபாத்யர் - யதாஸம்பவம் இத்தை இசைவித்த ஸ்ரீவைஷ்ணவர்களும் ஈச்வரனுமென்றும், த்ருதீயவாக்யஸ்தகுருபதஸர்வசப்தபஹுவசநப்ரதிபாத்யர் - ஆழ்வார்தொடக்கமான எல்லாரு மென்றும் கண்டுகொள்வது,

அப்படியே உய்யக்கொண்டார் இவ்வாக்யத்ரயத்தை அநுஸந்திக்கும்போது, ஆதிமத்யவாக்யகத குருபரமகுருபதப்ரதிபாத்யர் - நாதமுநிகளும் ஆழ்வாருமென்றும், இரண்டிலும் பஹுவசநப்ரதிபாத்யர் - யதாஸம்பவம் இதில் ப்ரேமத்தை ஜநிப்பித்த பெரியோர்களும் எம்பெருமானு மென்றும், த்ருதீயவாக்யகத குருபதஸர்வசப்தபஹுவசநப்ரதிபாத்யர் - ஸேனைமுதலியார் தொடக்கமான மேலோரனைவரு மென்றும் கண்டுகொள்வது.

---

(க) 𑌵𑌿𑌜𑍍𑌵𑌰𑌃 𑌪𑍍𑌰𑌮𑍁𑌮𑍋𑌦 𑌹 ॥

(உ) 𑌅𑌨𑍍𑌵𑌯𑌾𑌦𑌪𑌿 𑌚𑍈𑌕𑌸𑍍𑌯 𑌸𑌮𑍍𑌯𑌙𑍍𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑍋 𑌹𑌰𑍌 । 𑌸𑌰𑍍𑌵 𑌏𑌵 𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑍇𑌰𑌨𑍍𑌨𑌰𑌾𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇 𑌪𑌰𑍇 𑌤𑌥𑌾 ॥

(ங) 𑌅𑌰𑍍𑌵𑌾𑌞𑍍𑌚𑍋 𑌯𑌤𑍍𑌪𑌦𑌸𑌰𑌸𑌿𑌜𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇 𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑌾 𑌯𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌵𑌯𑌮𑍁𑌪𑌗𑌤𑌾 𑌦𑍇𑌶𑌿𑌕𑌾 𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌮𑌾𑌪𑍁𑌃 ॥

(ச) 𑌤𑌥𑌾𑌪𑌿 𑌸𑌮𑌯𑌾𑌚𑌾𑌰𑌂 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑌨𑍍 𑌸𑌾𑌮𑍍𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌿𑌕𑌮𑍍 ॥

அப்படியே நாதமுநிகள் இவ்வாக்யத்ரயத்தை அநுஸந்திக்கும்போது, ப்ரதமத்விதீயவாக்யகத குருபரமகுருபதப்ரதிபாத்யர் - ஆழ்வாரும் ஸேனைமுதலியாருமென்றும், இரண்டிலும் பஹுவசநப்ரதிபாத்யர் - தத்ஸம்பந்த கடகரான ஸ்ரீவைஷ்ணவர்களும் எம்பெருமானுமென்றும், த்ருதீய வாக்யகத குருபதஸர்வஶப்தபஹுவசந ப்ரதிபாத்யர் - பிராட்டியும் எம்பெருமானும் மற்றும் அங்குள்ளாரனைவருமென்றும் கண்டுகொள்வது.

இப்படியே ஆழ்வார் இவ்வாக்யத்ரயத்தை அநுஸந்திக்கும்போது, குருபரமகுரு பதப்ரதிபாத்யர் ஸேனைமுதலியாரும் பிராட்டியுமென்றும், இரண்டிலும் பஹுவசநப்ரதிபாத்யர் - இவ்விருவர்க்கும் உயிர்நிலையாயிருப்பார் சிலரென்றும், த்ருதீயவாக்யகதகுருபதஸர்வஶப்த பஹுவசநப்ரதிபாத்யர் - ஸர்வேஶ்வரனும் வ்யூஹமும் விபவமும் நித்யஸூரிகளுமென்றும் கண்டுகொள்வது.

இப்படியே ஸேனைமுதலியார் இவ்வாக்யத்ரயத்தை அநுஸந்திக்கும்போது, ப்ரதமத்விதீயவாக்ய கதகுருபரமகுருபதப்ரதிபாத்யர் - பிராட்டியும் விஷ்ண்வவதாரமான எம்பெருமானுமென்றும், இரண்டிலும் பஹுவசநப்ரதிபாத்யர் - அவளுக்கு ஸ்தநபாஹுத்ருஷ்டிஸ்தாநீயரானமற்றைப்பிராட்டிமாரும் அவன் அடிமைகொள்ளுகிற மற்றையவர்கள்தாங்களுமென்றும், த்ருதீயவாக்யகதகுருபதஸர்வஶப்தபஹுவசநப்ரதிபாத்யர்-இவ்வவதாரத்துக்கு நாற்றங்காலான க்ஷீரார்ணவநிகேதநனும் மற்றும் வ்யூஹாவதாரங்களும் ஶ்வேதத்வீபவாஸிகளுமென்றும் இப்புடைகளிலே இவற்றுக்குப்பொருள் சொல்லக்கடவது.

அப்படியே பிராட்டி இவ்வாக்யத்ரயத்தை அநுஸந்திக்கும்போது, ஆதிமத்யவாக்யகதகுருபரமகுருபதப்ரதிபாத்யர் - விஷ்ண்வவதாரமான எம்பெருமான்தானும் அவ்வவதாரகந்தமான வ்யூஹவாஸுதேவனுமென்றும், இரண்டிலும் பஹுவசநப்ரதிபாத்யர்-பெரியதிருவடி தொடக்கமானாரும் ஸங்கர்ஷணப்ரத்யும்ந அநிருத்தர்களுமென்றும், த்ருதீயவாக்யகதகுருபதஸர்வஶப்த பஹுவசநப்ரதிபாத்யர் * வானிளவரசுவைகுந்தக்குட்டனும் ஒடும்புள்ளேறிப்படியே இச்சேதநனுக்காக அவ்விபூதியிலே அவன்பரிக்ரஹிக்குஞ் சில அவதாரங்களும் நித்யஸித்தரும் என்றும் யதாஸம்பவம் இப்புடைகளிலே இவற்றுக்குப் பொருள் சொல்லக்கடவது.



ப்ரதமாவதாரமான விஷ்ண்வவதாரமும், அவ்வவதாரகந்தமான * பாற்கடலுள்பையத்துயின்ற பரமனும், நிதாநமான வைகுந்தநாட்டிலிருக்கும் பரவாஸுதேவனும் தர்மைக்யத்தாலே பேதமின்றிக்கே ஏகதத்வமாயிருந்தார்களேயாகிலும், பெரியபெருமாளுக்கும் பெருமாளுக்கும் தர்மைக்யமிருக்கச்செய்தே (க) "ஸஹபத்ந்யாவிஶாலாக்ஷ்யா நாராயணமுபாகமத்" என்று விக்ரஹபேதத்தாலே உபகந்தவ்ய உபகந்த்ருத்வங்களைச் சொன்னவோபாதி, இவ்விடத்திலும் விக்ரஹபேதத்தையிட்டு இம்மூவர்க்கும் இங்ஙன் குருத்வ பரமகுருத்வ ஸர்வகுருத்வங்களைச் சொல்லக் குறையில்லை.

உடையவருக்குப்பின்புள்ள முதலிகளில் வைத்துக்கொண்டு (உ) "ராமாநுஜபதச்சாயா" என்னும்படி அவர் திருவடிகளிலே ஆஶ்ரயித்து அவருக்கு * நிழலும் அடிதாறுமாய்க்கொண்டு குருபரம்பராநுப்ரவிஷ்டரான எம்பார் இவ்வாக்யத்ரயத்தை அநுஸந்திக்கும்போது, குருபரமகுருஸர்வகுருபதபஹுவசந ப்ரதிபாத்யர்-கோபஸீவர்ஜ்யத்தாலே பிள்ளானும் ஆழ்வானும் ஆண்டானும் அநந்தாழ்வானும் அவர்களுக்கு அபிமதராயிருந்துள்ள ஸ்ரீவைஷ்ணவர்களும் என்று இங்ஙனே விபஜித்துப் பொருள் சொல்லக்கடவது.

அப்படியே எம்பார்திருவடிகளிலே ஆஶ்ரயித்த பட்டர் இவ்வாக்யத்ரயத்தை அநுஸந்திக்கும்போது, குருபரமகுருஸர்வகுருபத பஹுவசநப்ரதிபாத்யர் - அடைவே எம்பாரும் பிள்ளானும் ஆழ்வானும் ஆண்டானும் அவர்களுக்கு அந்தரங்கராயிருந்துள்ள ஸ்ரீவைஷ்ணவர்களும் என்று பூர்வம்போலே இங்ஙனே விபஜித்துப் பொருள் சொல்லக்கடவது.

பின்னையும் அப்படியே பட்டர் திருவடிகளிலே ஆஶ்ரயித்த நஞ்சீயர் இவ்வாக்யத்ரயத்தை அநுஸந்திக்கும்போது, குருபரமகுருஸர்வகுருபதபஹுவசநப்ரதிபாத்யர் - பட்டரும் எம்பாரும் பிள்ளானும் ஆழ்வான் ஆண்டான் தொடக்கமானருமென்று பூர்வம்போலே யதாஸம்பவம் இங்ஙனே விபஜித்துப் பொருள் சொல்லக்கடவது.

---

(க) ஸஹபத்ந்யா விஶாலாக்ஷ்யா நாராயணமுபாகமத் ॥

(உ) ராமாநுஜபதச்சாயா ॥

பின்னையும் அப்படியே நஞ்சீயர் திருவடிகளிலே ஆஶ்ரயித்த நம்பிள்ளை இவ்வாக்யத்ரயத்தை அநுஸந்திக்கும்போது, குருபரமகுரு ஸர்வகுருபதபஹுவசநப்ரதிபாத்யர் - நஞ்சீயரும் பட்டரும் எம்பாரும் பிள்ளானும் அவர்களுக்கு ஸப்ரஹ்மசாரிகளாய்ப் பஹுமந்தவ்யரா யிருந்துள்ள * இராமாநுசனைத் தொழும் பெரியோர்களுமென்று இங்ஙனே விபஜித்துப் பொருள் சொல்லக்கடவது.

இக்குருபரம்பரைதான் ஆரோஹக்ரமத்திலே (க) "ஆபகவத்த:" என்று பகவானளவுஞ்சென்று அவர்களுக்குச் செல்லக்கடவதொன்று: இங்ஙனேயிருந்தாலும் அவரோஹக்ரமத்திலே வந்தால் "இராமாநுசன் தாள்பிடித்தார் பிடித்தாரைப் பற்றி" இத்யாதிப்படியே மேன்மேலே *கொழுந்து விட்டுப்படர்ந்து செல்லக்கடவதொன்றாகையாலே, நம்பிள்ளை திருவடிகளிலே ஆஶ்ரயித்த வடக்குத்திருவீதிப்பிள்ளையும் அவர் திருவடிகளிலே ஆஶ்ரயித்த பிள்ளை லோகாசார்யர் தொடக்கமானாரும் இவ்வாக்யத்ரயத்தை அநுஸந்திக்கும்போது, இவ்வாக்யத்ரயகத குருபரமகுரு ஸர்வகுருபதப்ரதிபாத்யர் - இன்னாரின்னாரென்னுமிடம் ஆசார்யர்களுடைய திருநாமங்களிலே கண்டுகொள்வது. அப்படியே பஹுவசநப்ரதிபாத்யர் - அவர்களுக்கு உயிர்நிலையாய்த் தந்தாமுக்குப் பஹுமந்தவ்யராய்க்கொண்டு, கொடியைக் கொள்கொம்பிலே துவக்கும் சுள்ளிக்கால்போலே தந்தாமை அவரவர்கள் திருவடிகளிலே சேர்க்கும் ஸ்ரீவைஷ்ணவர்களென்று கண்டுகொள்வது.

இனி, "ஸ்ரீமதேராமாநுஜாயநம:" இத்யாதி வாக்யஸமூகத்திலும் வைத்துக்கொண்டு "ஸ்ரீயைநம:", "ஸ்ரீதராயநம:" என்கிற வாக்யத்வயத்தில் (உ) "ஸ்ரீரிதி ப்ரதமம் நாம லக்ஷ்ம்யா:" என்றும், (ந) "ஸ்ரீரித்யேவ ச நாமதே" என்றும் சொல்லுகையாலே ஸ்ரீஶப்தம் பெரியபிராட்டியாருக்கு வாசகமாயிருக்கும்; மற்றை எட்டுவாக்யத்திலும் ஸ்ரீஶப்தம், (ச) "நஜ்ஞாநதுல்யம் தநமஸ்திகிஞ்சித்" என்றும்,

(க) ஆபகவத்த:॥ (உ) ஸ்ரீரிதி ப்ரதமம் நாம லக்ஷ்ம்யா:॥ (ந) ஸ்ரீரித்யேவ ச நாமதே॥ (ச) நஜ்ஞாநதுல்யம் தநமஸ்தி கிஞ்சித்॥



(க) "பகவத்பக்திரேவாத்ர ப்ரபந்நாநாம் மஹத்தநம்" என்றும் சொல்லுகையாலே ஜ்ஞாநபக்திகளாகிற மஹாஸம்பத்துக்கு வாசகமாயிருக்கும்.

இதில் சிலவாக்யங்களில் ஸ்ரீஶப்தம் ஸவிபக்திகமதுப்ப்ரத்யயோபேதமாயும், சிலவாக்யங்களில் லுப்தவிபக்திகமதுப்ப்ரத்யயோபேதமாயும், சிலவாக்யங்களில் மதுப்ப்ரத்யயரஹிதமாயும் இங்ஙன் வைரூப்யேண நிர்த்தேஶிக்கைக்கு நிபந்தநம் - சிலருடைய ஜ்ஞாநபக்திகள் விஶததமங்களாய், சிலருடைய ஜ்ஞாநபக்திகள் விஶததரங்களாய் சிலருடைய ஜ்ஞாநபக்திகள் விஶதங்களாயிருக்கையாலே; அது எங்ஙனேயென்னில்:—ரங்கயத்தாள் திருவடியைப் பற்றின ஸேனைமுதலியாருடையவும், அவ*ரடிக்கண்ணிசூடிய ஆழ்வாருடையவும், அவ*ரடி பணிந்துய்ந்த உடையவருடையவும் ஜ்ஞாநபக்திகள் விஶததமங்களாயிருக்கும். திருக்குருகூர்நம்பிக்கு அன்பரான நாதமுநிகளுடையவும், தத்விஷயீகாரபாத்ரபூதரான யமுனைத்துறைவருடையவும் ஜ்ஞாநபக்திகள் விஶததரங்களாயிருக்கும். சீலமிகுநாதமுநிசீருரைக்கும்ப்ரியஶிஷ்யரான உய்யக்கொண்டாருடையவும், தச்சிஷ்யரான மணக்கால்நம்பியுடையவும், தத்ப்ரியஶிஷ்யரான பெரியநம்பியுடையவும் ஜ்ஞாநபக்திகள் விஶதங்களாயிருக்கும்.

இவர்களுடைய ஜ்ஞாநபக்திகள் ஏகரூபமாயிராதே இங்ஙன் தாரதம்யபாவேந இருக்கைக்கு ஹேது என்னென்னில்:—ஸேனைமுதலியாருடையவும் நம்மாழ்வாருடையவும் ஜ்ஞாநபக்திகள்தாம் - ப்ரபத்திமார்க்கத்தை விஷ்வக்ஸேநஸம்ஹிதையிலே பரக்கத் தர்ஶிப்பிக்கைக்கும், ப்ரபத்தவ்யனான எம்பெருமான் படிகளை உள்ளபடி அனைவர்க்கும் அறிவிக்கைக்கும், அப்படியே (உ) "ப்ரியேணஸேநாபதிநாந்யவேதி தத் ததாநுஜாநந்தமுதாரவீக்ஷணை:" என்று மதிப்புடையார் சொல்லும்படிக்கும் அவனடியாகப்பிறந்தவையாயிருக்கையாலும்; திருவாய்மொழிமுகத்தாலே "தந்தனன் தனதாள் நிழலே," "கழல்களன்றி

(க) பகவத்பக்திரேவாத்ர ப்ரபந்நாநாம் மஹத்தநம்॥
(உ) ப்ரியேண ஸேநாபதிநா ந்யவேதி தத் ததாநுஜாநந்தமுதாரவீக்ஷணை:॥

மற்றோர்களைகணிலங் காண்மின்களே", "அடிக்கீழமர்ந்து புகுந்தேனே" என்று ப்ரபத்திமார்க்கத்தைப் பலபடியாலும் தம்முடைய உக்த்யநுஷ்டாநங்களாலே ஸ்பஷ்டமாக்குகைக்கும், "உயர்வற உயர்நலமுடையவன்," "மயர்வறமதிநலமருளினன்", "தேவர்க்குந்தேவாவோ" என்று ப்ரபத்தவ்யனுடையபடிகளைப் பத்தும்பத்தாக வெற்றியெடுக்கைக்கும், "உம்முயிர்வீடுடையான்", "யானேநீ யென்னுடைமையும் நீயே", "தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன்" என்று ப்ரபத்தாவின்படிகளைப் பலவகையாகத் தர்ஶிப்பிக்கைக்கும், "பேரமர் காதல்கடல்புரையவிளைவித்த", "கொண்டஎன்காதலுரைக்கிற்றோழி, மண்டிணிஞாலமு மேழ்கடலும் நீள்விசும்புங் கழியப்பெரிதால்", "சூழ்ந்ததனிற்பெரிய என்னவா" என்று பிராட்டிமார் பேச்சாலும் தம்பேச்சாலும் தம்முடைய ஆற்றாமையை அறிவிக்கைக்கும் உறுப்பாயிருக்கையாலும் விஶததமங்களா யிருக்கும். உடையவருடைய ஜ்ஞாநபக்திகள் - (க) "பவது மம பரஸ்மிந் ஶேமுஷீ பக்தி ரூபா" என்று தாமும் (உ) "அச்யுத பதாம்புஜ யுக்ம ருக்ம வ்யாமோஹத:" என்று ஆழ்வானும் அருளிச்செய்யலாம்படி அவனடியாகப்பிறந்தவையாய் ரத்யத்ரய ஸ்ரீபாஷ்யாதிமுகத்தாலே ஶரணாகதிபக்திஶாஸ்த்ரங்களை அடைவே வெளியிடுகைக்கும், "அவ்வெழில்மறையிற் சேராதவரைச்சிதைப்பது அப்போதொரு சிந்தை செய்தே" என்கிறபடியே தம்முடைய தாதாத்விகப்ரதிபையாலே ப்ரதிவாதி வாரணப்ரகடாடோபவிபாடநத்துக்கும், * நூறுதடாவில் வெண்ணெயையும் * நூறுதடாநிறைந்த அக்காரவடிசிலையும் நாச்சியார்மநோரதித்தபடியே பரமஸ்வாமியான அழகர்க்குத் தாம் அமுதுசெய்தருளப் பண்ணுகைக்கும், துருஷ்கன் படைவீட்டிலேசென்று அவன் மகள்மாளிகையிலேயிருந்த ராமப்ரியரை "வருக வருக வருக விங்கே" இத்யாதிப்படியே தாமே அழைத்தருளி அவர்தம் அருகே ஓடியோடிவந்தவாறே '*என் செல்வப்பிள்ளாய் வாராய்' என்று அவர்க்குத் திருநாமஞ்சாத்திக் தம் மார்பிலே அணைத்துக் கொள்ளுகைக்கும், புழுவன்பட்டவ்ருத்தாந்தத்தைத் திருக்கல்யாணிக்கரையிலே தம்ஸந்நிதியிலே சென்று மாறோன்

---

(க) 𑌭𑌵𑌤𑍁 𑌮𑌮 𑌪𑌰𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌶𑍇𑌮𑍁𑌷𑍀 𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑍂𑌪𑌾 ॥

(உ) 𑌅𑌚𑍍𑌯𑍁𑌤𑌪𑌦𑌾𑌮𑍍𑌬𑍁𑌜 𑌯𑍁𑌗𑍍𑌮𑌰𑍁𑌕𑍍𑌮 𑌵𑍍𑌯𑌾𑌮𑍋𑌹𑌤𑌃 ॥



றில்லாமாருதியாண்டான் விண்ணப்பஞ்செய்யக் கேட்டுப் பெரியப்ரீதியோடே *செங்கோலுடைய திருவரங்கச் செல்வனாரான பெரியபெருமாளை மங்களாஶாஸநம்பண்ணுவதாகக் கோவிக் கோயிலுக்கு எழுந்தருளும்போது தாமே ஐம்பத்திருவரைச் * செயல்நன்றாகத் திருத்தித் தத்விஷயத்திலே பரிவராயிருக்கும்படி நியமிக்கைக்கும், கரைகட்டாக் காவிரிபோலே கரைபுரண்டு ஆஶ்ரயத்தளவன்றிக்கேயிருக்கைக்கும் உடலாயிருக்கையாலே விஶததமங்களாயிருக்கும். ஸ்ரீமந்நாதமுநிகளுடையவும் ஆளவந்தாருடையவும் ஜ்ஞாநபக்திகள் - இங்ஙன் விஶ்ருங்கலமாய்க் கரைபுரண்டிராதே அளவுபட்டு அரையாறுபட்டுத் தந்தாமை ஆஶ்ரயித்தவரளவிலே தானே அடங்கி ஒன்றிரண்டு ப்ரபந்தங்களை இட்டருளுகைக்கு உடலாயிருக்கையாலே, விஶததரங்களாயிருக்கும். உய்யக்கொண்டாருடையவும் மணக்கால் நம்பியுடையவும் பெரியநம்பியுடையவும் ஜ்ஞாநபக்திகள் - கீழ்ச் சொன்னபடியிராதே சிறையாறுபட்டுப் பரிமிதங்களா யிருக்கையாலே, விஶதங்களாயிருக்கும்.

இப்பதின்மூன்றுவாக்யங்களிலும் முந்தினவாக்யங்கள்மூன்றும், வேதமாகிற ஶாஸ்த்ருஸிபரிக்ருஹீதங்களா யிருக்கும்; மற்றைவாக்யங்கள்பத்தும், ஆசார்யருசிபரிக்ருஹீதங்களா யிருக்கும்.

அபௌருஷேயமாயும் பௌருஷேயமாயு மிருக்கிற ரஹஸ்யத்ரயத்துக்கு ஏகாவயவித்வஞ்சொன்னவோபாதி, இப்படி அபௌருஷேயமாயும் பௌருஷேயமாயுமிருந்துள்ள இப்பதின்மூன்றுவாக்யத்துக்கும் ஏகாவயவித்வம் சொல்லத் தட்டில்லை. அப்படியே (க) "நமருஷிப்ய:" என்று அபௌருஷேய மானுப்போலே நமஶ்ஶப்தம் முன்னாக இவ்வாக்யத்ரயத்தையும் நிர்த்தேஶியாதே அஸ்மச்சப்தம்முன்னாக நிர்த்தேஶித்தது, (உ) "அகிலபுவந" என்கிற இடத்தில் மாங்களிகமான அகாரத்தைப்போலே மாங்களிகமான அகார உபக்ரமஸித்யர்த்தமாக. அப்படி முந்தினவாக்யத்தை அகாரோபக்ரமஸித்யர்த்தமாக அஸ்மச்சப்தத்தை முன்னிட்டு நிர்த்தேஶித்த வோபாதி, மற்றையிரண்டுவாக்யங்களையும் அஸ்மச்சப்தத்தைத்தானே முன்னிட்டுநிர்த்

---

(க) 𑌨𑌮𑌋𑌷𑌿𑌭𑍍𑌯𑌃 ॥ (உ) 𑌅𑌖𑌿𑌲𑌭𑍁𑌵𑌨 ॥

தேஶித்தது, (க) "ஶந்நோமித்ரஶ்ஶம்வருண:, ஶந்நோபவத்வர்யமா" என்னுமாபோலே.

த்ரயோதஶவாக்யாத்மகமான இக்குருபரம்பராரூபமந்த்ரந்தான், ஸ்ரீஸஹஸ்ரநாமமாலாமந்த்ரம்போலே அநேகநமஶ்ஶப்தஶரீரகமாய், த்வாரஶேஷிகளுக்கும் ப்ரதாநஶேஷிகளுக்கும் அடைவே ப்ரதிபாதகமாய், ப்ரதமமத்யமசரமாவதிரூபமான பர்வத்ரயப்ரகாஶகமாய், உபதேஷ்ட்ரு உபதேஶ உபதேஶ்ய ரூபமூன்றுவர்க்கத்துக்கும் ஸாம்ப்ரதாயிகத்வ ஸாத்குண்ய யோக்யதைகளுக்கும் ஸம்பாதகமாய், 'வக்தவ்யம் குருபரம்பரையும் த்வயமும்' என்கையாலே த்வயத்தோபாதி ஸதாநுஸந்தேயமாய், தன்னைமுன்னிட்டு ரஹஸ்யத்ரயத்தை அநுஸந்திப்பாரை "நாவகாரியஞ்சொல்லிலாதவர்" என்று * மயர்வறமதிநலமருளப்பெற்றவர் கொண்டாடும்படி பண்ணக்கடவதாய், "அஸ்மத்" என்று அகாராதியாக உபக்ராந்தமாய், அப்படியே ஸ்ரீநமஶ்ஶப்தங்களைப் பல விடங்களிலும் இடையிலேயுடைத்தாய், "ஸ்ரீதராய நம:" என்றுமாங்களிகமான நமஶ்ஶப்தத்தோடே நிகமிக்கப்பட்டதாயிருக்கையாலே, கார்த்ஸ்ந்யேந மங்களாத்மகமாயிருக்கும்.

குருபரம்பராவிவரணம் ஸம்பூர்ணம்.

---

(க) 𑌶𑌨𑍍𑌨𑍋𑌮𑌿𑌤𑍍𑌰𑌶𑍍𑌶𑌂𑌵𑌰𑍁𑌣𑌃, 𑌶𑌨𑍍𑌨𑍋𑌭𑌵𑌤𑍍𑌵𑌰𑍍𑌯𑌮𑌾 ॥

நோபில்பிரஸ், திருவல்லிக்கேணி, சென்னை.